மேற்றிசை அரசாங்கங்கள்

(WESTERN GOVERNMENTS)

(பட்டப்படிப்புக்குரியது)

ஆசிரியர்
திரு. ச. வெங்கடேசன், எம். ஏ.,
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி,
அரியலூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—285

மேற்றிசை அரசாங்கங்கள்

(WESTERN GOVERNMENTS)

(பட்டப்படிப்புக்குரியது)

ஆசிரியர்
திரு. ச. **வெங்கடேசன்,** எம்.ஏ.,
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி,
அரியலூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—January, 1972

T.N.T.B.S. (C.P.) No. 285

© TAMIL NADU TEXT BOOK SOCIETY

WESTERN GOVERNMENTS

C. VENKATESAN

Net Price Rs. 6-00

(No discount)

'Published by The Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University Level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Printed by
BHAGAT PRINTERS,
407, M. K. N. Road,
Alandur, Madras-16.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் விஞ்ஞானப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'மேற்றிசை அரசாங்கங்கள்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 285ஆவது வெளியீடாகும். இதுவரை 320 நூல்கள் வெளிவந்துள்ளன.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

தோற்றுவாய்

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் 'மேற்றிசை அரசாங்கங்கள்' என்னும் இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாரின் ஆணைப்படி எழுதப் பெற்றுள்ளது. பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, ஃபிரான்சு, சுவிட்சர்லாந்து ஆகிய ஆறு நாடுகளின் அரசாங்கங்கள் இதன்கண் விளக்கப்பட்டுள்ளன. கதிரவன் மறையாப் பேரரசு ஒன்றை நிறுவி, கடல்கடந்த நாடுகளிலெல்லாம் அரசியல் அறிவை வளர்த்த பெருமை பிரிட்டனையே சாரும். பிரிட்டிஷ் அரசியலமைப்பு, அரசியலமைப்புகளுக்கெல்லாம் தாய் என்று போற்றப்படும் பெருமையோடு திகழ்கிறது. விடுதலைப் போராட்டத்தின் விளைவாகத் தோன்றிய அமெரிக்க அரசியலமைப்பு, தற்கால அரசியலமைப்புகளுள் பெருமைக்கும் புகழுக்கும் உரிய ஆவணமாய் மதிக்கப்படுகிறது. கூட்டாட்சி அரசு முறையை முதன்முதலில் வகுத்த அமெரிக்க அரசியலமைப்பு, அந்நாட்டவரின் ஒப்பற்ற செல்வமாகப் போற்றப்படுகிறது. அரசியலில் ஒரு புதிய பாதை அமைத்த ரஷ்யாவைப் பொதுவுடைமை நாடுகள் தங்கள் வழி காட்டியாய் ஏற்கின்றன. சமதருமச் சமுதாயத்தைச் சமைக்கப் பாட்டாளிகளின் வல்லாட்சி ஒன்றை நிறுவியிருக்கும் ரஷ்ய அரசியலமைப்பு, அரசியலில் ஒன்றுக்கு மேற்பட்ட பாதைகள் உண்டு என்பதை அறிவுறுத்தும் வகையில் அமைகிறது. மக்க ளாட்சி என்பது மறைமுகமான ஆட்சியாக இருக்கவேண்டியது இன்றியமையாததன்று; அது நேரடியான ஆட்சியாகவும் இயங்க முடியும் என்பதற்கு நல்ல சான்றாக விளங்குவது சுவிஸ் அரசிய லமைப்பாகும். சின்னஞ்சிறு சுவிட்சர்லாந்தின் அரசியல் சாதனை களை வியந்து பாராட்டாதாரே இல்லை எனலாம். மன்னராட்சிக்கு மாறாக, மக்களாட்சியை மலரச் செய்து, உலக வரலாற்றில் ஒரு திசைத் திருப்பத்தைத் தோற்றுவித்த நாடு ஃபிரான்சாகும். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற பொன் மொழிகளை உலகெங்கிலும் எதிரொலிக்கச் செய்து, மனித உரிமை களுக்காகத் தியாகத்தீயில் தன்னை அழித்துக்கொண்ட ஃபிரான்சின் அரசியலமைப்பை நாம் அறிய முயல்வது, மக்களாட்சிக்குச் செலுத்தும் மரியாதையாகும். ஐம்பத்தைந்து கோடி மக்களைக்

கொண்டிருக்கும் இந்தியா பாருக்குள்ளே மிகப் பெரிய ஜனநாயகமாக விளங்குகிறது. பல அரசியலமைப்புகளின் கருத்துகளைத் தழுவி அமைந்திருக்கும் பாரதத்தின் அரசியலமைப்பு, அரசியல் மாணவர்கள் விரும்பிப் படிக்கும் ஆவணமாகும்.

பல ஆண்டுகளாகக் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழில் அரசியல் பாடத்தைக் கற்பித்துவரும் எனக்கு, இந்நூலை ஆக்கித் தமிழக மாணவச் செல்வங்களுக்கு அளிக்கக்கூடிய நற்பேறு கிட்டியது குறித்து நான் பெரிதும் மகிழ்கின்றேன். இவ்வரிய பணியை எனக்கு அருள்கூர்ந்து அளித்த தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாருக்கு என் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்கி, இந் நூலை என் முதற்காணிக்கையாகத் தமிழன்னையின் திருவடிகளில் படைக்கின்றேன்.

ச. வெங்கடேசன்

பொருளடக்கம்

			பக்கம்
I.	தோற்றுவாய்	...	1
1.	அரசியலமைப்பின் வகைகள்	...	2
2.	ஒற்றை ஆட்சி அரசுகள்	...	9
3.	கூட்டாட்சி அரசுகள்	...	13
4.	அதிகாரப் பிரிவினை	...	22
5.	வழக்காறுகளும் மரபுகளும்	...	30
6.	சட்டத்தின் ஆட்சி	...	37
7.	ஆட்சித்துறைச் சட்டம்	..	42
II.	பிரிட்டிஷ் அரசியலமைப்பு	...	47
1.	அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்	...	48
2.	அரசியார்	...	54
3.	கேபினட் அமைச்சரவை	...	64
4.	பிரபுக்கள் சபை	...	72
5.	பொதுமக்கள் சபை	...	81
6.	அவைத் தலைவர்	...	88
7.	சட்டமியற்றும் முறை	...	93
8.	குழு முறை	...	101
9.	அரசுபணித் துறை	...	107
10.	நீதிமன்றங்கள்	...	115
11.	அரசியல் கட்சிகள்	...	121
12.	செல்வாக்குக் குழுக்கள்	...	126

			பக்கம்
III.	**அமெரிக்க அரசியலமைப்பு**	...	133
1.	*அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்*	...	*134*
2.	*அரசியலமைப்புத் திருத்தங்கள்*	...	*141*
3.	*கூட்டாட்சி*	...	*147*
4.	*குடியரசு தலைவர்*	...	*154*
5.	*கேபினட் அமைச்சரவை*	...	*163*
6.	*காங்கிரஸ்*	...	*168*
7.	*சட்டமியற்றும் முறை*	...	*178*
8.	*அரசுபணித் துறை*	...	*184*
9.	*தலைமை நீதிமன்றம்*	..	*190*
10.	*அரசியல் கட்சிகள்*	...	*197*
11.	*செல்வாக்குக் குழுக்கள்*	...	*204*
IV.	**சோவியத்துக் குடியரசின் அரசியலமைப்பு**	...	209
1.	*அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்*	...	*210*
2.	*கேபினட் அமைச்சரவை*	...	*218*
3.	*சோவியத்துப் பாராளுமன்றம்*	...	*222*
4.	*பிரிசிடியம்*	...	*229*
5.	*நீதித்துறை*	...	*233*
6.	*பொதுவுடைமைக் கட்சி*	...	*239*
V.	**பிரெஞ்சு அரசியலமைப்பு**	...	245
1.	*அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்*	...	*246*
2.	*குடியரசு தலைவர்*	...	*253*
3.	*கேபினட் அமைச்சரவை*	...	*260*

			பக்கம்
4.	பாராளுமன்றம்	...	265
5.	சட்டமியற்றும் முறை	...	272
6.	நீதித்துறை	...	275
7.	அரசியல் கட்சிகள்	...	280
VI.	சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பு	...	285
1.	அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்	...	286
2.	கூட்டாட்சிக் குழு	...	293
3.	கூட்டாட்சிப் பாராளுமன்றம்	...	300
4.	சட்டமியற்றும் முறை	...	307
5.	கூட்டாட்சி நீதிமன்றம்	...	310
6.	நேர்முகக் குடியாட்சி நிறுவனங்கள்	...	315
7.	அரசியல் கட்சிகள்	...	324
8.	செல்வாக்குக் குழுக்கள்	...	329
VII.	இந்திய அரசியலமைப்பு	...	332
1.	அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்	...	333
2.	குடியரசு தலைவர்	...	352
3.	கேபினட் அமைச்சரவை	...	361
4.	பாராளுமன்றம்	...	365
5.	சட்டமியற்றும் முறை	...	375
6.	தலைமை நீதிமன்றம்	...	381
7.	அரசு பணிகள்	...	390
8.	அரசியல் கட்சிகள்	...	396
9.	செல்வாக்குக் குழுக்கள்	...	405
கலைச் சொற்கள்		...	410

I. தோற்றுவாய்

(Introduction)

1. அரசியலமைப்பின் வகைகள்
(Classification of Constitutions)

[அரசியலமைப்பு: பொருள் — எழுதப்பெற்ற, எழுதப்பெறாத அரசியலமைப்புகள்—நன்மை தீமைகள்—நெகிழும், நெகிழா அரசிய லமைப்புகள்—நன்மை தீமைகள்.]

அரசியலமைப்பு (Constitution): பொருள்

ஒரு நாட்டின் அரசாங்கத்தின் அதிகாரங்களையும் மக்களின் உரிமைகளையும் வரையறுக்கின்ற சட்டதிட்டங்கள், நெறி முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளின் தொகுப்பே அரசியலமைப்பாகும். ஆள்வோரின் அதிகாரங்களும் பொறுப்பு களும் எவை எவை, ஆளப்படுவோரின் உரிமைகளும் கடமை களும் எவை எவை, இவ்விருவருக்குமிடையே என்ன என்ன தொடர்புகள் நிலவ வேண்டும் என்பனவற்றை நிர்ணயிக்கின்ற கொள்கைகளின் தொகுப்பே அரசியலமைப்பு எனலாம். அரசாங் கத்தின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி அவைகளுக்கு எல்லை வகுப்பதும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உறுதி கூறி அவைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதும் தற்கால அரசியலமைப்பு களின் முக்கியமான நோக்கங்களாகும். இன்றைய உலகில் எல்லா அரசுகளுமே—அவை ஜனநாயக அரசுகளாக இருந்தாலும் சரி, சர்வாதிகார அரசுகளாக இருந்தாலும் சரி—அரசியலமைப்பு களால் ஒழுங்குபடுத்தப்படும் அரசுகளாகத்தான் திகழ்கின்றன. அரசானது தனிமனிதனின் விருப்பு வெறுப்புகளுக்கு, அப்பாற் பட்டு, முறையான அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந் தால்தான், நாட்டில் சட்டமும், ஒழுங்கும், நீதியும், நேர்மையும் காக்கப்படும் என்ற கொள்கையைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அரசியலமைப்புகளை (அ) எழுதப்பெற்ற அரசியலமைப்புகள், எழுதப் பெறாத அரசியலமைப்புகள் என்றும்; (ஆ) நெகிழும் அரசியலமைப்புகள், நெகிழாத அரசியலமைப்புகள் என்றும் பாகுபாடு செய்யலாம்.

எழுதப்பெற்ற, எழுதப்பெறாத அரசியலமைப்புகள் (Written and unwritten Constitutions)

அரசியல் நிறுவனங்களின் அடிப்படைக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஆவண வடிவில் திட்டவட்டமாக எழுதி வைத்தால், அவ்வகையான அரசியலமைப்புக்கு எழுதப்பெற்ற அரசியலமைப்பு என்று பெயர். அமெரிக்க அரசியலமைப்பை எழுதப்பெற்ற அரசியலமைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். அரசியல் நிறுவனங்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஆவண வடிவில் திட்டவட்டமாக எழுதி வைக்காமல் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் பின்பற்றினால், அவ்வகையான அரசியலமைப்புக்கு எழுதப்பெறாத அரசியலமைப்பு என்று பெயர். பிரிட்டிஷ் அரசியலமைப்பு மாத்திரமே எழுதப்பெறாத அரசியலமைப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எழுதப்பெற்ற அரசியலமைப்பானது வேண்டுமென்றே தோற்றுவிக்கப் படுகிறது; எழுதப்பெறாத அரசியலமைப்பானது காலப்போக்கில் படிப்படியாக வளர்கிறது. எழுதப்பெற்ற அரசியலமைப்பானது பொதுவாக அரசியல் நிர்ணய சபை போன்றதொரு சபையால் தீர்மானஞ் செய்யப்படுகிறது; எழுதப்பெறாத அரசியலமைப்போ பல்வேறு சமயங்களில் எழும் சிக்கல்களைத் தீர்க்க அவ்வப்பொழுது செய்துகொண்ட ஏற்பாடுகளின் தொகுப்பேயாகும்.

அரசியலமைப்புகளை எழுதிவைக்கும் வழக்கம் கிரேக்க உரோமானிய காலங்களிலேயே நடைமுறையில் இருந்த போதிலும், தற்கால வரலாற்றில் அரசியலமைப்புகளை ஏட்டில் எழுதுகின்ற வழக்கத்தை மேற்கொண்ட பெருமை, பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற அமெரிக்கக் குடியேற்ற நாடுகளையே சாரும். அமெரிக்காதான் எழுதப்பெற்ற அரசியலமைப்புகளுக்குத் தாயகம்; அமெரிக்க அரசியலமைப்புதான் (1789) எழுதப்பெற்ற அரசியலமைப்புகளுக்கெல்லாம் முன் மாதிரி. அமெரிக்காவைப் பின்பற்றி ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவை எழுதப்பெற்ற அரசியலமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டன; 1800-லிருந்து 1830-க்கு இடைப்பட்ட காலத்தில் மாத்திரம் ஐரோப்பாவில் முன்னூறுக்கு மேலான அரசியலமைப்புகள் எழுத்துருவம் பெற்றன.

நன்மை தீமைகள்

எழுதப்பெற்ற அரசியலமைப்பின் சிறப்பு அது தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அமைந்திருப்பதே. அது அக்கறையோடு ஆழ்ந்து ஆராய்ந்து வரையப் பெற்றிருப்பதால், அதில் நல்ல

அறிவுடைமையைக் காண்கிறேம். மேலும், எழுதப்பெற்ற அரசியலமைப்பினை எளிதாக மாற்ற முடியாதாகையினுல், அது நிலையானதாகவும், உறுதியானதாகவும் அமைகின்றது. ஆனுல் எழுதப்பெற்ற அரசியலமைப்பின் முக்கியக் குறைபாடு யாதெனின் அது நாட்டிலுள்ள சூழ்நிலைகள் மாறுவதற்கு ஏற்ப மாருமல் தோன்றிய உருவிலேயே நிலைத்து நின்றுவிடுகின்றது.

எழுதப்பெருத அரசியலமைப்பின் சிறப்பை அது மாறுபட்ட சூழ்நிலைக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்கின்ற பண்பினில் பார்க்கின்றேம். வரம்பில்லா முடியாட்சியாய்த் தோன்றிய பிரிட்டனின் ஆட்சிமுறை காலப்போக்கில் சிறந்த குடியாட்சியாய் மலர்ந்ததற்குக் காரணமாய் இருந்தது அந்நாட்டின் எழுதப் பெருத அரசியலமைப்பேயாகும். ஆனுல் அரசியலமைப்பு எழுதப் பெருமல் இருக்குமேயானுல் அதன் தனித்தன்மையும் பெருமையும் உணரப்படாமல் போகலாம். ஆட்சி முறையானது அடிக்கடி மாற்றப்பட்டு, அது ஓரளவுக்கேனும் நிரந்தரமாய் இருக்க வேண்டிய இயல்பினை இழந்துவிடும். மேலும், எழுதப்பெருத அரசியலமைப்பென்பது, வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்ற அடிப்படையில் மக்கள் எல்லோரும் அரசியல் அலுவல்களில் பங்கு பெறுகின்ற இக்காலத்தில், ஜனநாயக அரசுகளுக்கு ஏற்றதன்று. அரசியல் ஞானமும், அமைதியான போக்குமுடைய மக்களுக்கே எழுதப்பெருத அரசியலமைப்பு ஏற்றதாகும்.

அரசியலமைப்புகளை எழுதப் பெற்றவை, எழுதப் பெருதவை என வகைப்படுத்துவது தவருனதொரு பாகுபாடாகும். ஏனெனில் முற்றிலும் எழுதப்பெற்ற அல்லது முற்றிலும் எழுதப் பெருத அரசியலமைப்பே உலகில் இல்லை. எழுதப்பெற்ற அரசியலமைப்பில் எழுதப்பெருத வழக்காறுகளும் மரபுகளும் பின்பற்றப்படுவதையும், எழுதப்பெருத அரசியலமைப்பில் எழுதப்பெற்ற சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படுவதையும் நாம் அன்ருட அரசியல் நடைமுறையில் பார்க்கின்றேம். எழுதப்பெற்ற அரசியலமைப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அமெரிக்காவில் குடியரசு தலைவரின் தேர்தல், பாராளுமன்றச் செயல்முறை, நீதிப் புனராய்வு, அரசியல் கட்சிகள் போன்றவை பழக்க வழக்கங்களினுல்தான் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. எழுதப்பெருத அரசியலமைப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பிரிட்டனில் உரிமைப் பட்டயம், 1215 (Magna Carta); உரிமை விண்ணப்பம், 1628 (Petition of Right); உரிமைகள் மசோதா, 1689 (Bill of Rights); அரசுரிமை நிர்ணயச் சட்டம், 1701 (Act of Settlement); பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள், 1832, 1867, 1872,

1884, 1885 (Parliamentary Reform Acts); பாராளுமன்றச் சட்டங்கள், 1911, 1949 (Parliament Acts); அரசு அமைச்சர்கள் சட்டம், 1937 (Ministers of the Crown Act); ஆயுட்கால பிரபுக் கள் சட்டம், 1958 (Life Peeruges Act) போன்ற பல சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. எல்லா அரசியலமைப்புகளிலுமே எழுதப் பெற்ற கூறுகளும் எழுதப் பெருத கூறுகளும் கலந்தே காணப்படு கின்றன. பிரிட்டிஷ் அரசியலமைப்பில் எழுதப்பெற்ற பகுதி குறைவாகவும் எழுதப் பெருத பகுதி அதிகமாகவும், மற்ற அரசிய லமைப்புகளில் எழுதப்பெற்ற பகுதி அதிகமாகவும் எழுதப்பெருத பகுதிகள் குறைவாகவும் இருக்கக் காண்கின்ருேம். அரசிய லமைப்புகளை எழுதப்பெற்றவை, எழுதப்பெருதவை என நாம் பாகுபடுத்தும்பொழுது முற்றிலும் மாறுபட்ட இரு வேறு இனங் களைச் சார்ந்த அரசியலமைப்புகளைக் குறிப்பிடுவதாகக் கருதாமல், ஒரே இனத்தைச் சார்ந்தது ஆனுலும் வேறுபட்ட தரங்களுடைய அரசியலமைப்புகளைக் குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டும்.

நெகிழும், நெகிழா அரசியலமைப்புகள் (Flexible and Rigid Constitutions).

ஜேம்ஸ் பிரைஸ் (James Bryce) என்னும் ஆசிரியர் அரசிய லமைப்புகளை நெகிழும் தன்மையன என்றும், நெகிழாத் தன்மையன என்றும் பாகுபடுத்தும் முறையை வகுத்தார். ஒரு அரசியலமைப்பின் நெகிழும் தன்மை அல்லது நெகிழாத் தன்மை, அதைத் திருத்துகின்ற முறை எளிதானதா அல்லது கடினமானதா என்பதைப் பொறுத்திருக்கிறது. அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களையும் சாதாரணச் சட்டங்களையும் இயற்றுவதற்கு ஒரே மாதிரியான முறை பின்பற்றப்படுமானுல், அது நெகிழும் அரசிய லமைப்பாகக் கருதப்படுகின்றது. பிரிட்டனின் அரசியலமைப்பு நெகிழும் அரசியலமைப்புக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்; அங்கு அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களும் சாதாரணச் சட்டங் களும் பாராளுமன்றத்தாலேயே எந்தவிதமான வேறுபாடுமின்றி ஒரே முறையைப் பயன்படுத்தியே ஆக்கப்படுகின்றன. பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கக் கோரும் அரசியலமைப்புச் சட்டமாக இருந்தாலும் சரி, ஆதரவற்ற கைம்பெண்களின் வாழ்க் கைச் செலவுக்கு உதவித் தொகை அளிக்கக் கோரும் சாதாரணச் சட்டமாக இருந்தாலும் சரி,—இவைகளை அரசியலமைப்பைச் சார்ந்தவை, அரசியலமைப்பைச் சாராதவை என்று வேறு படுத்திக் காட்டாமல்—இரண்டையுமே ஒரே மாதிரியாகப் பாவித்து இயற்ற முடியுமாகையினுல், அது நெகிழும் அரசிய லமைப்பாகும். இம்முறைக்கு நேர் மாருக அரசியலமைப்புச் சட்டங்களையும் சாதாரணச் சட்டங்களையும் இயற்ற வெவ்வேருன

முறைகளைப் பின்பற்றினால் அது நெகிழாத அரசியலமைப்பாகக் கருதப்படுகின்றது. அமெரிக்க அரசியலமைப்பு நெகிழாத அரசியலமைப்புக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். இங்கு அரசியலமைப்புச் சட்டங்களை ஆக்க ஒரு முறையும், சாதாரணச் சட்டங்களை ஆக்க வேறொரு முறையும் மேற்கொள்ளப்படுகின்றன. சாதாரணச் சட்டங்களை அமெரிக்கக் காங்கிரஸ் அதன் உறுப்பினர்களின் சாதாரணப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இயற்ற முடியும்; அரசியலமைப்புச் சட்டங்களை இயற்ற, காங்கிரஸின் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலோடு, முக்கால்வாசி மாநிலங்களின் உடன்பாடும் தேவை. உலகில் இயங்கும் அரசியலமைப்புகளில் பெரும்பாலானவை நெகிழாத வகையைச் சார்ந்தவையே.

நெகிழாத அரசியலமைப்புகளில், அவைகளின் நெகிழாத் தன்மையின் தரம், அரசியலமைப்புக்கு அரசியலமைப்பு மாறுபடுவதைக் காண்கிறோம். முதலாவதாக, ரஷ்யா போன்ற நாடுகளில் பாராளுமன்றமே அரசியலமைப்பைத் திருத்த முடியுமென்றாலும், அவ்வகைத் திருத்தங்களுக்கு மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் இணக்கம் தேவை. அங்கே சட்டமன்றம் அரசியலமைப்பைத் திருத்தக் கூடிய அதிகாரம் வரையறை செய்யப்பட்டு, சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் அரசியலமைப்பானது மத்திய அரசு, மாநில அரசுகள் ஆகிய இரண்டிற்குமே பொதுவான உடைமையாகக் கருதப்படுவதால், திருத்தங்களுக்கு மத்திய அரசின் இசைவும் மாநில அரசுகளின் இசைவும் தேவை என விதிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் அரசியலமைப்பை நிர்ணயிக்கக்கூடிய உரிமை மக்களுடைய உரிமை என்ற கருத்து நிலவுவதால், வாக்காளர்களில் பெரும்பாலோரின் இணக்கத்தைத் தனித் தேர்தலொன்றில் பெற்ற பிறகே மாற்றங்களைக் கொண்டு வர முடியும். நான்காவதாக, சில லத்தீன் அமெரிக்கக் குடியரசுகளில் இருப்பதுபோல அரசியலமைப்புத் திருத்தங்களுக்கெனவே தனி நிறுவனங்கள் அமைக்கப்பட்டு அப்பொறுப்பு அவைகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. எனவே, அரசியலமைப்புகளின் நெகிழாத் தன்மை ஒரே அளவாக இருப்பதில்லை என்பதும், அத்தன்மை சிலவற்றில் அதிகமாகவும் சிலவற்றில் குறைவாகவும் காணப்படுகிறது என்பதும் இதனால் அறியப்படுகின்றது.

நன்மை தீமைகள்

நெகிழும் அரசியலமைப்பின் சிறப்பு அதன் எளிதில் வளைந்து கொடுக்கக் கூடிய தன்மையில் அமைந்திருக்கிறது. 'பழையன

கழிதலும் புதியன புகுதலும்' என்ற முதுமொழிக்கேற்ப, நெகிழும் அரசியலமைப்புகளில் விலக்க வேண்டியவைகளை எளிதில் விலக்கி, சேர்க்க வேண்டியவைகளை எளிதில் சேர்க்க வாய்ப்பு உண்டு. பிரைஸ் கூறுவதுபோல நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண அதை நீட்டவோ மடக்கவோ முடியும். அவ்வப்பொழுது ஏற்படும் புதிய தேவைகளுக்கேற்ப அரசியலமைப்பைத் திருத்தி அமைப்பதனால் புரட்சியை ஊக்குவிக்கும் சக்திகள் தோன்றாமல் போகும். பிரிட்டனின் வரலாற்றில் பிரெஞ்சுப் புரட்சிப் போன்ற பெரும் புரட்சி தோன்றாததற்குக் காரணம் அதன் அரசியலமைப்பின் நெகிழும் தன்மையே ஆகும். ஆனால், நெகிழும் அரசியலமைப்பின் குறைபாடு யாதெனின் அது அரசியலமைப்பின் நிரந்தரத் தன்மையை நிராகரித்து, அடிக்கடி அதை மாற்றுகின்ற முறையை ஒரு விளையாட்டுப் போல எளிதாக்கிவிடுகிறது. பழங்காலத்து பழக்க வழக்கங்களையும், நெடுங்காலமாக நிலவி வரும் நிறுவனங்களையும் நொடிப் பொழுதில் கலைத்துவிட வாய்ப்பளிக்கும் முறையை நாம் பாராட்ட முடியாது.

அரசியலமைப்பை ஆயிரங்காலத்துப் பயிராகப் பாவிக்கும் தன்மையில் நெகிழா அரசியலமைப்பின் சிறப்பைப் பார்க்கின்றோம். சாதாரணச் சட்டங்களைவிட அரசியலமைப்புச் சட்டங்கள் உயர்ந்தவை என்ற கருத்தை ஒப்புக்கொண்டு, அவற்றை இயற்றுவதற்குத் தனி நிறுவனங்களையும் தனி முறைகளையும் ஏற்படுத்தியிருப்பது நியாயமே. ஆனால், இவ்வகை அரசியலமைப்பின் குறைபாடு யாதெனின் இது வளரும் சமுதாயச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தானும் வளராமல் இருந்த இடத்திலேயே இருப்பதுதான். நாடுகள் முன்னேறி நகர நகர, அவைகளின் அரசியலமைப்புகளும் புதிய தேவைகளுக்கு ஏற்றவாறு மாறி மாறி அமைய வேண்டும்; அவ்வாறு மாறாமல் வளர்ச்சிகளைத் தடை செய்யும் கைக்கட்டு காற்கட்டாக அரசியலமைப்பு அமையுமானால், புரட்சிகள் மூலமாக தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள மக்கள் உந்தப்படுவார்கள்.

பிரைஸின் பாகுபாட்டுப்படி அரசியலமைப்புகளை நெகிழும் தன்மையன, நெகிழாத் தன்மையன எனப் பிரிப்பதுகூடச் சரியான பாகுபாடாகத் தோன்றவில்லை. ஏனெனில், பிரிட்டிஷ் அரசியலமைப்பை நெகிழும் தன்மையது என்று கூறும்பொழுது அது அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறது என்ற எண்ணமும், சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பை நெகிழாத் தன்மையது என்று கூறும்பொழுது அது எப்பொழுதோ ஒரு முறைதான் மாறுகிறது என்ற எண்ணமும் நமக்கு உண்டாகிறது. உண்மையில் பார்க்கப்

போனல் நெகிழும் அரசியலமைப்பான பிரிட்டிஷ் அரசியலமைப்பில் உண்டாகின்ற மாற்றங்களைவிட, நெகிழாத அரசியலமைப்பான சுவிஸ் அரசியலமைப்பில் உண்டாகின்ற மாற்றங்களே அதிகம். இது அரசியலமைப்பில் மாற்றங்கள் நிகழ்வதும் நிகழாதிருப்பதும் மக்களின் விருப்பத்தையும் ஆர்வத்தையும் பொறுத்திருக்கிறதே யொழிய, அரசியலமைப்பின் நெகிழும் இயல்பையோ நெகிழா இயல்பையோ சார்ந்திருக்கவில்லை என்ற உண்மையைக் குறிக்கிறது. மேலும், இவ்வகையான பாகுபாடு அரசியலமைப்பை மாற்றி அமைக்க அதை முறைப்படி திருத்தி அமைத்தாக வேண்டும் எனத் தவருக உணர்த்துகிறது. அப்படி முறைப்படி திருத்தாமலேயே பாராளுமன்றச் சட்டங்கள் மூலமாகவும், நீதித் தீர்ப்புகள் மூலமாகவும், வழக்காறுகள் மரபுகள் மூலமாகவும் அரசியலமைப்பினை, நேரடியாக இல்லா விட்டாலும், மறைமுகமாகவாவது மாற்றி அமைக்கலாம் என்பதற்கு அமெரிக்க அரசியலமைப்புச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

2. ஒற்றை ஆட்சி அரசுகள்
(Unitary States)

[ஒற்றை ஆட்சி: பொருள் — ஒற்றை ஆட்சி, கூட்டாட்சிகளுக் கிடையே உள்ள வேறுபாடு — ஒற்றை ஆட்சியின் குணங்களும் குறைகளும்.]

ஒற்றை ஆட்சி: பொருள்

ஒரு நாட்டின் ஆட்சி முழுவதும் மாநில அரசுகள் எதுவுமின்றி மைய அரசின்கீழ் அமையுமானால் அந் நாட்டை ஒற்றை ஆட்சி நாடு என அழைக்கிறோம். ஒற்றை ஆட்சி நாட்டில் அரசியலமைப் பானது மைய அரசு ஒன்றினை மாத்திரம் நிறுவி, அந்த அரசுக்கே அரசாங்க அதிகாரங்கள் அனைத்தையும் வழங்கும்; அரசியலமைப் பால் அங்கீகரிக்கப்படும் பெருமை மைய அரசுக்கு மாத்திரமே உண்டு. மைய அரசு தன்னுடைய அதிகாரங்களை வேறெந்த மாநில அரசோடும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. பிரிட்டன், பிரான்சு ஆகிய இரு நாடுகளையும் ஒற்றை ஆட்சி நாடு களுக்கு உதாரணங்களாகக் கூறலாம். கூட்டாட்சி நாடுகளில் அரசாங்க அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு, சில மைய அரசுக்கும் சில மாநில அரசுகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன; ஆனால், ஒற்றை ஆட்சி நாடுகளில் அதிகாரப் பங்கீடு என்ற பேச்சுக்கே இடமில்லை. பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஒற்றை ஆட்சி நாடுகளில் அரசாங் கத்துக்கென அனுமதிக்கப்படும் அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசுகளுக்கே உரியன.

ஒற்றை ஆட்சி நாடுகளில் அரசியலமைப்பு மைய அரசு ஒன்றையே நிறுவுகிறது என்பது உண்மையானாலும், இந்த மைய அரசானது, ஆட்சி நல்லாட்சியாக நடைபெற வேண்டும் என்ப தற்காக, நாட்டைப் பல வட்டாரங்களாகப் பிரித்து, வட்டாரங் களில் அரசியல் நிறுவனங்களை ஏற்படுத்தி, வட்டார அரசுகளுக்கு அதிகாரங்கள் அளிப்பதும் உண்மையே. இந்த வட்டார அரசு

களின் எல்லைகளை நிர்ணயிக்கின்ற உரிமையும், இவைகளில் எவ்வகை ஆட்சி நிறுவனங்கள் இயங்கவேண்டும் என்று தீர்மானிக்கின்ற உரிமையும், இவைகளின் அதிகாரங்களை வரையறை செய்கின்ற உரிமையும் மைய அரசுக்கே உண்டு. இவ்வகை அரசுகளை ஆக்குவதும் அழிப்பதும், இவற்றின் அதிகாரங்களைக் கூட்டுவதும் குறைப்பதும் மைய அரசே. பிரான்சில் இருக்கும் டிபார்ட்டுமென்டுகள் (Departments), அர்ரண்டைஸ்மன்டுகள் (Arrandisements), கம்யூன்கள் (Communes) ஆகிய மாவட்ட, வட்ட, சிறுவட்டப் பிரிவுகள் மைய அரசினால் நிறுவப்பட்டு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மேற்கண்ட கூற்றுக்குச் சான்றாகக் கூறலாம்.

ஒற்றை ஆட்சி, கூட்டாட்சிகளுக்கிடையே உள்ள வேறுபாடு

ஒற்றை ஆட்சியில் வட்டார அரசுகளைக் கூட்டாட்சியில் இருக்கும் மாநில அரசுகளோடு ஒப்பிடுவது முறையல்ல. கூட்டாட்சியிலிருக்கும் மாநில அரசுகளெல்லாம், மைய அரசு மாதிரியே, அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவை; இவற்றின் அதிகாரங்களெல்லாம், மைய அரசின் அதிகாரங்கள் மாதிரியே, அரசியலமைப்பால் அளிக்கப்பட்டவை. மைய அரசு, மாநில அரசுகள் ஆகிய இரண்டுமே அரசியலமைப்பிலிருந்து நேரடியாகப் பிறந்தவை; இரண்டும் சரி சமமானவை; இரண்டிற்குமிடையே உயர்வு தாழ்வு கிடையாது. ஆனால், ஒற்றை ஆட்சியிலிருக்கும் வட்டார அரசுகளோ அரசியலமைப்புக்குத் தெரியாத படைப்புகள்; மைய அரசினால் ஆக்கப்படும் அவ்வரசுகள் அதனாலேயே அழிக்கவும் படலாம்; அதிகாரங்களைக் கொடுக்கவோ மறுக்கவோ, கூட்டவோ குறைக்கவோ மைய அரசுக்கு முழு உரிமை உண்டு; இரண்டும் சமமானவை அல்ல; மைய அரசுதான் உயர்ந்தது, வட்டார அரசுகள் தாழ்ந்தவையே. கூட்டாட்சியில் மைய அரசும் மாநில அரசுகளும் இறைமையை (Sovereignty) தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ளுகின்றன; ஆனால், ஒற்றை ஆட்சியில் வட்டார அரசுகளுக்கு இறைமைப் பண்பு இல்லை.

ஒற்றை ஆட்சியின் குணங்களும் குறைகளும்

1. இனம், மொழி, சமயம் போன்ற துறைகளில் ஒத்திருக்கும் மக்களைக்கொண்ட சிறு நாடுகளுக்கு ஒற்றை ஆட்சி அரசாங்கமே உகந்தது. வேறுபாடற்ற மக்களைக் கொண்டிருப்பதனால் நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியான சட்டங்களை இயற்றி எதிர்ப்பின்றிச் செயல்படுத்துவது எளிதாக இருக்கும். 2. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறான சட்டம் என்று இல்லாமல்

நாடெங்கிலும் ஒரே மாதிரியான சட்டங்கள் என்று இருக்குமானல், ஆட்சி முறையில் உள்ள பல சிக்கல்கள் மறைந்து, அரசாங்கம் எளிதானதாகவும் வலுவானதாகவும் அமையும். 3. அரசின் அதிகாரங்கள் அனைத்தும் ஒரே அரசின் கரங்களில் குவிந்திருப்பதால், அரசாங்கம் தன் சக்திகளை ஒன்றுதிரட்டி ஒருமுகப்படுத்தித் தீர்க்க முடியாத சிக்கல்களையும் தீர்க்க முடியும். மாநில அரசுகளோடு கலந்து பேச வேண்டிய அவசியமில்லாததால் காலதாமதமும் தவிர்க்கப்படுகிறது. 4. ஒற்றை ஆட்சி அரசுகள் 'ஒரே நாடு, ஒரே தேசீயம்' என்ற கொள்கையை வளர்த்து, மக்களின் முழுமையான அரசப்பற்றைப் பெறுகின்றன. மாநில அரசுகள் இருக்குமானல், ஒவ்வொரு மாநிலத்திலிருக்கும் மக்கள் தங்கள் மாநில அரசையே சொந்த அரசாகவும், மைய அரசை மாற்றார் அரசாகவும் நினைக்க இடமுண்டு. ஆனல், ஒற்றை ஆட்சியில் மக்களின் கடப்பாடும் பற்றுறுதியும் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளுக்கிடையே சிதறுவதில்லை. 5. ஒற்றை ஆட்சி அரசியலமைப்புகள், கூட்டாட்சி அரசியலமைப்புகளைவிட, நெகிழும் தன்மை உடையன. ஒற்றை ஆட்சியில் அரசியலமைப்புகளைத் திருத்த மாநிலங்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லையாதலால், விரும்புகின்ற திருத்தங்களை விரைவிலேயே அங்கே கொண்டு வர முடியும். 6. ஒற்றை ஆட்சியில் இரு கட்டங்களில் சட்டத்துறை, ஆட்சித் துறை, நீதித் துறை போன்றவைகளைப் பராமரிக்க வேண்டியதில்லையாதலால், இது சிக்கனமான ஆட்சி முறையாகவும் தோன்றுகிறது. 7. அரசியலில் முதற்படியிலிருக்கும் முன்னேற்றமில்லா மக்களுக்குக் கூட்டாட்சித் தத்துவத்தைப் புரிந்துகொள்வதைவிட ஒற்றை ஆட்சியைப் புரிந்துகொள்வது எளிதாக இருக்கும் என நம்பப்படுவதால், புதிதாக சுதந்திரமடையும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஒற்றை ஆட்சி முறையே பொருத்தமாகும். 8. ஒற்றை ஆட்சி அரசியலமைப்பை ஆக்குகின்ற ஆசிரியர்களுக்கும் அரசியலமைப்பை எழுதுவது எளிதான செயலாக இருக்கும்; ஏனெனில், அதிகாரப் பங்கீடு என்ற சிக்கல் அவர்கள் சிந்தனையைக் குழப்பாது.

1. நாட்டின் மூலை முடுக்குகளிலிருக்கும் பகுதிகளின் தேவைகளை வெகு தூரத்திற்கு அப்பாலிருக்கும் தலைநகரிலுள்ள மைய அரசால் சரிவரப் புரிந்துகொண்டு தீர்த்து வைக்க முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய வினவே. 2. அப்படி அதனல் தீர்த்துவைக்க முடியுமென்றாலும் கூட, அது பெருஞ்சுமையாய் அமையும். பெருங் காரியங்களையே கவனிப்பதற்கு மைய அரசாங்கத்திற்கு நேரமில்லாத இக் காலத்தில், சிறு காரியங்களையும் கவனிக்க வேண்டிய கட்டாயமேற்பட்டால், அரசாங்கம் தன்

னுடைய பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற முடியாது. 3. இனத்தாலும், சமயத்தாலும், மொழியாலும் வேறுபடும் மக்களைக்கொண்ட இந்தியா போன்ற நாட்டிற்கு ஒற்றை ஆட்சி ஏற்றதன்று. வெவ்வேறு கூட்டத்தாருக்கு வெவ்வேறு மாநில அரசுகள் என்று இருந்தால்தான் அவரவர் தங்கள் பண்பாடு களையும் கலாச்சாரங்களையும் காப்பாற்றிக்கொள்ள வாய்ப் பிருக்கும். 4. எல்லா அதிகாரங்களும் மைய அரசின் கைகளில் குவிந்திருக்குமானல் அது அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கை வளர்க்கும் என லாஸ்க்கி (Laski) போன்ருேர் கருது கின்றனர். கூட்டாட்சியில் மாநில அரசுகள் இருக்கின்றன என்பதே மைய அரசின் எதேச்சாதிகாரப் போக்கிற்குத் தடையாக அமை கிறது. 5. பிரிட்டன் மாதிரி மைய அரசு வட்டார அரசுகளுக்கு நிறைய அதிகாரங்களையும் சுதந்திரத்தையும் வழங்கினுல்தான் ஒற்றை ஆட்சி பயனுள்ள முறையில் பணியாற்ற முடியும். பிரான்சு மாதிரி வட்டார அரசுகள் மைய அரசால் முழுக்க முழுக்கக் கட்டுப் படுத்தப்பட்ட நிலையில் இருந்தால், அது மக்களிடையே ஓரளவுக்கு அதிருப்தியை உண்டாக்கும். 6. ஒற்றையாட்சியாய் இருந்த நாடுகள் கூட்டாட்சியாய் மாறியதுண்டு. ஆனுல், கூட்டாட்சியா யிருந்த நாடுகள் ஒற்றையாட்சியாய் மாறியதாக நாம் கேள்விப் பட்டதில்லை. இது ஒற்றை ஆட்சியைவிடக் கூட்டாட்சியின் செல்வாக்கு அதிகம் என்பதைக் காட்டுகிறது.

3. கூட்டாட்சி அரசுகள்

(Federations)

[கூட்டாட்சி: பொருள்—கூட்டாட்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்—கூட்டாட்சியின் பண்புகள்—கூட்டாட்சியின் குணங்களும் குறைகளும்—கூட்டாட்சியின் எதிர்காலம்.]

கூட்டாட்சி: பொருள்

மைய அரசையும் மாநில அரசுகளையும் கொண்டு இயங்கும் நாடுகளின் கூட்டமைப்பையே கூட்டாட்சி என அழைக்கிறோம். இவ்விரு அரசுகளும் ஒன்றை மற்றொன்று சார்ந்திராமல், அதற்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் இயங்குகின்றன. மைய அரசுக்கெனச் சில பொறுப்புகளையும் உரிமைகளையும் வழங்கி, மாநில அரசுகளுக்கென வேறு சில பொறுப்புகளையும் உரிமைகளையும் வழங்கி, இவ்விரு அரசுகளும் அவற்றின் அதிகார எல்லைகளுக்குள் செயல்படுமாறு விளங்கும் அரசியலமைப்புதான் கூட்டாட்சி அரசியலமைப்பாகும்.

ஆஸ்திரிய—ஹங்கேரிப் பேரரசின் (1867) அரசியலமைப்பிலும், ஜெர்மானியப் பேரரசின் (1871) அரசியலமைப்பிலும், மைய அரசு மாநில அரசுகளுக்குக் கட்டுப்பட்டிருந்ததும், இந்திய (1919) அரசியலமைப்பிலும் தென் ஆப்பிரிக்க (1909) அரசியலமைப்பிலும் மாநில அரசுகள் மைய அரசுக்குக் கட்டுப்பட்டிருந்ததும் கூட்டாட்சிக் கொள்கைக்கு முரணான முறைகள் ஆகும். கூட்டாட்சி அரசியலமைப்பானது இவ்விரு அரசுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வு பாராட்டாமல், ஒன்றை மற்றொன்று கட்டுப்படுத்த அனுமதிக்காமல், இரண்டையும் சரிசமமாகப் (Coordinate) பாவிப்பதுதான் அதன் தனிச் சிறப்பாக எண்ணப்படுகிறது. 1789-ல் நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சிதான் இன்று உலகில் இருக்கின்ற கூட்டாட்சிகளில் மிகப் பழமையானதும் முழுமையானதுமாகும். அமெரிக்காவையும், ஆஸ்தி

ரேலியாவையும், சுவிட்சர்லாந்தையும் நல்ல கூட்டாட்சிகளுக்குச் சிறந்த உதாரணமாகக் கூறலாம். ஒன்றுக இருந்த அரசு பலவாகப் பிரிந்து புதிய மாநில அரசுகளை ஏற்படுத்தியும் (கனடா), பலவாக இருந்த சுதந்திர அரசுகள் ஒன்றுக இணைந்து புதிய மைய அரசை ஏற்படுத்தியும் (அமெரிக்கா) கூட்டாட்சி அரசுகளைத் தோற்றுவிக்கலாம்.

கூட்டாட்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்

கூட்டாட்சி அரசுகள் இடர்ப்பாடில்லாமல் இயங்குவதற்குச் சில சூழ்நிலைகள் அவசியம். முதலாவதாக அடுத்தடுத்த பகுதிகளில் தனித்து வாழ்ந்துகொண்டிருக்கும் சின்னஞ் சிறு நாடுகளிடையே தாங்கள் ஒன்றுகச் சேர்ந்து வாழ வேண்டுமென்ற இச்சை பிறக்க வேண்டும். இராணுவத் தற்காப்புக்காகவும், அக்கம் பக்கத்திலுள்ள பெரும் நாடுகளின் ஏகாதிபத்தியப் போக்கிலிருந்து தங்கள் சுதந்திரத்தைக் காத்துக் கொள்வதற்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும் நாடுகள் ஒன்றுசேர விழையலாம். அந்நாட்டின் மக்கள் ஒரே தேசீய இனம், ஒரே சமயம், ஒரே மொழி போன்ற ஒருமைப்பாட்டினை உடையவர்களாயிருந்தால், ஒரே கூட்டமைப்பில் சேர்ந்து வாழ வேண்டும் என்ற இச்சை மேலும் வலுப்படும்.

இரண்டாவதாக, சேர்ந்து வாழ வேண்டும் என்ற விருப்பம் ஓரளவோடு நின்று, சேருகின்ற நாடுகளிடையே தங்கள் தனித்தன்மையைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் இருக்க வேண்டும். பொதுக்காரியங்களுக்கு மாத்திரம் கூடி வாழ்ந்தால் போதும் என்ற எண்ணமும், பொதுத் தன்மையற்ற தனிக் காரியங்களுக்குப் பிரிந்தே வாழவேண்டும் என்ற எண்ணமும் உடைய மக்களுக்கே கூட்டாட்சி சரியான அரசியல் முறையாக அமையும். கூட்டாட்சி ஒற்றுமையை (Unity) விரும்புகின்ற நாடுகளுக்குத்தான் ஏற்ற அரசே ஒழிய ஒருமையை (Union) விரும்புகின்ற நாடுகளுக்கு அன்று என்பது A. V. டைஸியின் (Dicey) தெளிவான கருத்து. கூட்டாட்சியில் சேரும் நாடுகள் வெவ்வேறுன அரசியல் மரபுகளைக் கொண்டவையாகவும், மற்றவைகளிடமிருந்து காடுகளாலும் மலைகளாலும் ஆறுகளாலும் பிரிக்கப்பட்டு தங்கள் தனிப் பண்புகளைக் காத்துக் கொண்டவையாகவும், தங்கள் பொருளாதார வளத்தின் பெரும் பயனைத் தாங்களே அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவையாகவும் இருக்கும் சூழ்நிலைகள் மாநில அரசுகளை மைய அரசோடு முழுதும் ஒன்றிவிடாமல் தனித்து நிற்கச் செய்கின்றன.

மூன்றாவதாக, ஒன்று சேரும் நாடுகளுக்குள் மக்கள்தொகையிலும், நிலப் பரப்பிலும், பொருள் வளத்திலும் அளவுக்கு மீறிய ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் சமநிலை இருக்க வேண்டும். மிகப் பெரிய நாடுகளையும், மிகச் சிறிய நாடுகளையும் ஒன்றாகச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டாட்சி, சக்திச் சமநிலை இல்லாத காரணத்தால் நெடுங் காலம் நீடிக்காது. 1871ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஜெர்மானியப் பேரரசாகிய கூட்டாட்சி அழிந்ததற்குக் காரணமே அதன் உறுப்பு நாடுகளில் ஒன்றாகிய பிரஷ்யாவின் எல்லை மீறிய வலுவும் செல்வாக்குமேயாம்.

நான்காவதாக, இணையும் நாடுகள் நிலத் தொடர்ச்சி உடையனவாய் அடுத்தடுத்த பகுதிகளாய் இருக்க வேண்டும். இந்தியக் கூட்டாட்சியிலுள்ள பதினெட்டு மாநிலங்களும் ஒரே தொடர்ச்சியாய் இருப்பதைக் காண்கிறோம். பாகிஸ்தான் கூட்டாட்சியில் கிழக்கு பாகிஸ்தானும் மேற்கு பாகிஸ்தானும் தொடர்ச்சியாக இல்லாமல் நடுவே இந்திய மண்ணால் பிரிக்கப்பட்டிருப்பது அந்நாட்டிற்கு எவ்வளவோ இடர்பாடுகளைத் தருகிறது. உலகம் பூராவும் பரந்து கிடக்கும் காமன்வெல்த் நாடுகளை ஒரு கூட்டாட்சியின்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சி தோற்றதில் வியப்பொன்றுமில்லை.

ஐந்தாவதாக, மைய அரசு, மாநில அரசு எனும் இருவகையான அரசுகளின் சுமைகளையும் தாங்கக்கூடிய பொருளாதாரம் இருந்தால்தான் கூட்டாட்சி உருவாகும். மைய அரசுக்கென சில வருவாய் மூலங்களையும், மாநில அரசுகளுக்கென சில வருவாய் மூலங்களையும் ஒதுக்கக்கூடிய பொருளாதார வசதியுள்ள நாடுகளில்தான் கூட்டாட்சி சாத்தியமாகும். தென் அமெரிக்கக் குடியரசுகளில் கூட்டாட்சி சரியாகச் செயல்படாமல் இருப்பதற்குக் காரணம் அக்குடியரசுகளின் ஏழ்மை நிலைதான் என்பது K. C. வியரின் (Wheare) கருத்து.

ஆறாவதாக, K. C. வியர் வலியுறுத்துவதுபோல் தக்க சமயத்தில் தகுந்த தலைவர்கள் தோன்றி பொதுமக்களின் கருத்துகளைக் கூட்டாட்சிக்கு ஆதரவாக உருவாக்கினால்தான் அத்தகைய அரசை அமைத்துக்கொள்ளும் அவசியம் மக்களால் உணரப்படும். அமெரிக்காவில் வாஷிங்டனும் (Washington), கனடாவில் மெக்டனால்டும் (Macdonald), ஆஸ்திரேலியாவில் பார்க்சும் (Parkes), தென் ஆப்பிரிக்காவில் ஸ்மட்சும் (Smuts), இந்தியாவில் பட்டேலும் (Patel) அவரவர் நாட்டில் கூட்டாட்சி அமைக்க பட்டபாட்டை யாரும் மறப்பதற்கில்லை.

கூட்டாட்சியின் பண்புகள்

கூட்டாட்சி அரசின் பண்புகள் A. V. டைஸியாலும், அவரைத் தழுவி K. C. வியராலும் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. 1. கூட்டாட்சியில் அரசின் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு, மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பங்கிடப்படுகின்றன. அமெரிக்காவைப்போல் மைய அரசின் அதிகாரங்களை வரையறை செய்து எஞ்சியவற்றை மாநிலங்களுக்கு ஒதுக்கியோ, அல்லது கனடாவைப்போல மாநில அரசுகளின் அதிகாரங்களை வரையறை செய்து எஞ்சியவற்றை மைய அரசுக்கு ஒதுக்கியோ, அல்லது இந்தியாவைப்போல மைய அரசின் அதிகாரங்கள், மாநில அரசுகளின் அதிகாரங்கள், இரு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் எல்லாவற்றையுமே வரையறை செய்தோ அதிகாரப் பங்கீட்டினைச் செய்யலாம். நாடு முழுவதும் பொதுவான காரியங்களான தற்காப்பு, முப்படைகள், வெளிநாட்டு விவகாரங்கள், நாணயச் செலாவணி, தபால் தந்தி, பன்னாட்டு வாணிபம் போன்றவை மைய அரசின் மேற்பார்வையிலும், மற்றக் காரியங்களான சட்டம், ஒழுங்கு, கல்வி, விவசாயம், பொதுச் சுகாதாரம், ஊராட்சி, மாநிலத்துக்குள் வாணிபம் போன்றவை மாநில அரசுகளின் மேற்பார்வையிலும் வைப்பதுதான் பொதுவான வழக்கம். இவ்வாறு அதிகாரங்களைப் பங்கிட்டு இரு அரசாங்கங்களுக்கும் தனித்தனி எல்லைகளை வகுப்பதுதான் கூட்டாட்சி முறைக்கு ஆதாரமாக அமைகிறது.

2. மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களை அமைத்து அவைகளுக்கு அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்கும் முறையோ, அல்லது மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்தை அமைத்து அதற்கு அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்கும் முறையோ கூட்டாட்சி கொள்கைக்குப் புறம்பானதாகும். இரு அரசாங்கங்களுமே அரசியலமைப்பால் நிறுவப்பெற்று அதனிடமிருந்து நேரடியாகவே தங்கள் அதிகாரங்களையும் உரிமைகளையும் பெறுகின்ற காரணத்தால் கூட்டாட்சி அரசியலமைப்பில் மைய அரசாங்கத்தின் மேலாண்மையோ அல்லது மாநில அரசுகளின் மேலாண்மையோ ஒப்புக்கொள்ளப்படுவதில்லை என்பதும், அதற்கு மாறாக அரசியலமைப்பின் மேலாண்மையே ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பதும் புலனாகிறது. அரசியலமைப்பானது இருவகை அரசாங்கங்களின் வெவ்வேறான ஆட்சிப் பரப்புக்கு எல்லை வகுத்து, ஒவ்வொரு அரசாங்கத்தையும் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு உட்படுத்திவிடுவதனால், ஒன்று மற்றொன்றிற்கு அடங்கி நடக்க வேண்டிய தேவையில்லை என்றாலும், இரண்டுமே அரசியலமைப்புக்கு அடங்கித்தான்

நடக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாத முடிவாகும். 'ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பும், அதைப் பின்பற்றி இயற்றப்படும் சட்டங்களும் இந்நாட்டின் தலையாய சட்டங்களாகும்' என்று அமெரிக்க அரசியலமைப்பில் ஒரு விதியே கூறுகிறது.

3. கூட்டாட்சி என்பது அரசுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கையின் வாயிலாகப் பிறப்பதால், அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏட்டுருவில் எழுதி வைத்தாக வேண்டும். வாய்மொழியால் அதிகாரங்களை இப்படி இப்படிப் பகிர்ந்துகொள்வது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூட்டாட்சி அமையுமானால், விரைவிலேயே இரு தரப்பாருக்குமிடையே பூசலும் போராட்டமும் எழும். ஆகையினால் கூட்டாட்சியின் அரசியலமைப்பு நிச்சயமாக எழுதப்பெற்ற அரசியலமைப்பாகத்தான் இருக்கும்.

4. மேலும், அது நெகிழாத அரசியலமைப்பாகவும் இருக்கும். மைய அரசு, அல்லது மாநில அரசுகள் மாத்திரம் தேசிய அரசியலமைப்பை மாற்றமுடியும் என்ற நிலை இருந்தால், விரைவில் கூட்டாட்சி கலைந்து போகும். அரசியலமைப்பைத் திருத்துகின்ற அதிகாரத்தை எந்த நிறுவனத்திடம் ஒப்படைத்தாலும், அந்த நிறுவனத்தில் மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடமுண்டு. இரு தரப்பாரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே அரசியலமைப்பை மாற்ற முடியும். அமெரிக்க அரசியலமைப்பைத் திருத்த மத்தியப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் இணக்கமும், நான்கில் மூன்று பங்கு மாநிலப் பாராளுமன்றங்களின் இணக்கமும் தேவை.

5. கூட்டாட்சியில் மைய அரசு மாநில அரசுகளின் அலுவல்களில் தலையிடாமலும், மாநில அரசுகள் மைய அரசின் அலுவல்களில் தலையிடாமலும் பார்த்து, அரசியலமைப்பில் நிர்ணயிக்கப்பட்ட சக்திச் சமநிலையைக் காக்க நடுநிலை தவறாத ஒரு தலைமை நீதிமன்றம் தேவை. அரசியலமைப்பில் ஐயப்பாட்டுக்குரிய பகுதிகளுக்குப் பொருள் விளக்கம் காண்பதும், மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைப்பதும், மாநில அரசாங்கங்களுக்கிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதும், இத் தலைமை நீதிமன்றத்தின் முக்கியப் பொறுப்புகளாகும். மத்தியப் பாராளுமன்றமோ, மாநிலப் பாராளுமன்றமோ அரசியலமைப்புக்குப் புறம்பான சட்டங்களை இயற்றினால், அவைகளைச் செல்லத்தக்கன அல்ல என்று அறிவிக்கின்ற மேலான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்குப் பொது

வாகத் தரப்படும். அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அந்நாட்டு அரசியலமைப்பின் காவல் தெய்வமாகப் போற்றப்படுவதற்குக் காரணம், அது அரசியலமைப்பை யாரும் சிதைத்துவிடாமல் கண்காணித்துக் கொள்வதேயாம். அரசியலமைப்புகளைச் சட்ட மன்றங்களின் அத்துமீறிய ஆக்கிரமிப்புச் செயல்களிலிருந்து பாது காக்கும் வழக்கம் 1803-ல் பிரதம நீதிபதி ஜான் மார்ஷலால் (John Marshall) ஏற்படுத்தப்பட்டது.

கூட்டாட்சியை 'அழிக்க முடியாத மாநிலங்களின் அழிக்க முடியாத கூட்டரசு' (Indestructible Union of Indestructible States) எனக் கூறுவது பொருத்தமானதொரு விளக்கமாகும். கூட்டாட்சியில் மைய அரசாகப் பார்த்து மாநிலங்களைக் கூட் டமைப்பிலிருந்து விலக்குவதோ, அல்லது மாநிலங்கள் தாங்க ளாகவே கூட்டமைப்பிலிருந்து விலகுவதோ முடியாது. 1861-லிருந்து 1865-வரை நடந்த அமெரிக்கப் பிரிவினைப் போரின் (War of Secession) முடிவு இந்த உண்மையை உறுதிப்படுத்து வதாக அமைந்தது. கூட்டாட்சியில் சேர்ந்த நாடுகளைப் பிரிக்க முடியாது என்ற உண்மை ஒப்புக் கொள்ளப்படுவது போல, புதிதாகச் சேர விரும்பும் நாடுகள் வரவேற்கப்படும் என்ற உண்மையும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. 1789-ல் பதிமூன்று மாநிலங்களைக் கொண்டு தொடங்கிய அமெரிக்கக் கூட்டாட்சி, இன்று ஐம்பது மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சியாய் வளர்ந் திருப்பது, கூட்டாட்சி அரசுகள் வளரும் தன்மை உடையனவே யல்லாது தேயும் தன்மை உடையனவல்ல என்ற கருத்தை மெய்ப் பிக்கிறது. இன்று உலகிலுள்ள கூட்டாட்சி அரசியலமைப்புகளுள் சோவியத்துக் குடியரசில் மாத்திரம்தான் மாநில அரசுகளுக்கு கூட்டாட்சியிலிருந்து பிரிந்து தனி அரசுகளாக மாறிவிடுகிற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வுரிமை ஏட்டளவில் நிற்கின்றதேயொழிய, நடைமுறையில் இதுவரை செயல்படுத்தப் படட்டதில்லை.

கூட்டாட்சியின் குணங்களும் குறைகளும்

1. கூட்டாட்சி அரசு முறையானது பன்மையில் ஒருமை காண விழையும் பண்புக்குச் சான்றாக விளங்குகிறது. தேசிய இறைமையையும் மாநிலங்களின் இறைமையையும் இணைத்து, ஒரே சமயத்தில் தேசிய ஒற்றுமைக்கும் மாநிலங்களின் உரிமை களுக்கும் பாதுகாப்பளித்து, இணைக்க முடியாததுபோல் தோன் றும் சக்திகளை இணைப்பதில்தான் கூட்டாட்சியின் பெருமை அடங்கியிருக்கிறது. வலுவிழந்திருக்கும் சின்னஞ் சிறு நாடுகளை ஒன்றாகச் சேர்த்து, அச் சேர்க்கையின் பயனாக அவைகளை வலுவுள்ள நாடாக மாற்றுவது கூட்டாட்சியின் சாதனையாகும்.

2. நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் அரசாங்கம் என்று ஏற்பட்டால், மாநில அரசாங்கங்கள் தங்கள் மாநிலங்களின் தேவைகளை அக்கறையோடு உணர்ந்து, அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட ஊக்கம் பிறக்கும். ஆங்காங்கே அரசாங்கங்கள் என்று அரசாங்கங்கள் பலவாக இயங்கினுல்தான் மக்கள் விருப்பு வெறுப்புகள் உடனுக்குடன் உணரப்பட்டு, ஆட்சியானது முறைப்படி நடைபெறும்.

3. கருத்து வேறுபாட்டுக்குரிய மது விலக்கு, குடும்பக் கட்டுப்பாடு போன்ற திட்டங்களை நாடு முழுவதும் ஒரே சமயத்தில் கொண்டுவராமல், முதலில் ஓரிரு மாநிலங்களில் சோதனை செய்து பார்த்து, அதன் விளைவுகளின் அடிப்படையில் அத்திட்டங்களை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதா அல்லது விட்டு விடுவதா என்று முடிவு செய்யக் கூட்டாட்சியில் வாய்ப்புண்டு. விவாதத்துக்குரிய திட்டங்களை நாடு பூராவும் ஒரே சமயத்தில் ஏற்கும்படி கட்டாயப்படுத்தினுல், அதன் விளைவாக ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை எல்லோருமல்லவா அனுபவிக்க நேரிடும்.

4. நாடுகள் ரஷியா, அமெரிக்கா, இந்தியா போன்று பரந்த நிலப் பரப்புடையனவாகவும், அதிக மக்கள்தொகை உடையனவாகவும் இருக்குமேயானுல், ஒற்றை ஆட்சியைவிடக் கூட்டாட்சியே அவைகளின் அலுவல்களைச் சரிவர கவனிக்க முடியும். நாடு சிறியதாக இருந்தால்கூட அந் நாட்டு மக்கள் பல்வேறு இனங்களையும், சமயங்களையும், மொழிகளையும் சார்ந்தவர்களாயிருப்பின், அவர்களுக்கும் அவரவர் கலாசாரத்தைக் காத்து வளர்க்கக்கூடிய கூட்டாட்சியே பொருத்தமானதாகும்.

5. கூட்டாட்சியானது சர்வாதிகாரத்தை ஓரளவுக்குத் தடுக்கும் ஆற்றலுள்ள அரசாகவும் அமைகிறது என்பது பிரைசின் கருத்தாகும். வல்லாட்சியை நிறுவ முனையும் சர்வாதிகாரி, மத்திய அரசாங்கத்தை மாத்திரமல்லாமல் மாநில அரசாங்கங்களையும் அடக்கித் தன் பக்கம் திருப்புவது அவ்வளவு எளிதான காரியமன்று.

1. அதிகாரப் பங்கீடு என்பது கூட்டாட்சி அரசியலமைப்பின் மிகப் பெரிய பிரச்சினையாகும். அதிகாரங்களை மைய அரசும் மாநில அரசுகளும் எங்ஙனம் பகிர்ந்து கொள்வது என்பதைப் பற்றிய உடன்பாடு எளிதில் உண்டாகாது. ஒரு நூற்றுண்டுக்கு முன்பு மாநிலங்களுக்கென ஒதுக்கிய பொருள், இப்பொழுது வளர்ந்து மைய அரசின் ஆட்சியின்கீழ் வரவேண்டிய முக்கியத்துவத்தை அடையலாம். வலுவுள்ள மைய அரசு வேண்டுமென்

போரும், வலுவுள்ள மாநில அரசுகள் வேண்டுமென்போரும், சமரச உணர்வோடு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதென்பது எளிதான காரியமன்று. அரசியலமைப்பை எழுதுவது என்பதே கடினமான காரியம்; கூட்டாட்சி அரசியலமைப்பை எழுதுவது என்பதோ அதைவிடக் கடினமான காரியம்.

2. பொதுநலச் சேவைகளான கல்வி, தொழிலாளர் நலன், தாய்சேய் நலன், வேலை வாய்ப்புப் போன்றவைமீது நாடு பூராவும் ஒரே மாதிரியான சட்டங்கள் இருப்பது விரும்பத்தக்க தாகும். அப்பொழுதுதான் நாட்டின் பல்வேறு பகுதிகளிடையே ஏற்றத்தாழ்வில்லாத ஒரே அளவான சமுதாய வளர்ச்சியைக் காணலாம். இப்பொழுது பல கூட்டாட்சிகளில் இக் காரியங்கள் மாநிலங்கள் ஆட்சிக்கு விடப்பட்டிருப்பதால், சில மாநிலங்கள் முற்போக்குடையனவாகவும், சில மாநிலங்கள் பிற்போக்குடையனவாகவும் இருக்கின்றன. அமெரிக்காவில் தெற்கு மாநிலங்களுக்கும் வடக்கு மாநிலங்களுக்குமிடையே காலப்போக்கில் வளர்ந்த சமூகப் பொருளாதார வேறுபாடுகள் அங்கே உள்நாட்டுப் போருக்கு அடிப்படையாக அமைந்தன என்பது வரலாறு கூறும் உண்மை.

3. கூட்டாட்சி அரசியலமைப்புகள் நெகிழாதனவாய் இருப்பதால் விரைவாக மாறும் சூழ்நிலைக்கேற்ப அவை மாறுவதில்லை. உதாரணமாக ஆஸ்திரேலியாவில் மையப் பாராளுமன்றத்தின் ஒப்புதலையும், பெரும்பான்மை மாநிலங்களிலிருக்கும் பெரும்பான்மை வாக்காளர்களின் ஒப்புதலையும் பெற்ற பிறகே அரசியலமைப்பை மாற்ற முடியும். கடந்த எழுபது ஆண்டுகளில் அங்கே நான்கு அரசியலமைப்புத் திருத்தங்களே கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பது கூட்டாட்சி அரசியலமைப்பை மாற்றுவது எவ்வளவு கடினம் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

4. கூட்டாட்சிகளில் மைய அரசில் சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய அரசாங்க நிறுவனங்களும், மாநில அரசுகளிலும், சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய அரசாங்க நிறுவனங்களும் இரட்டித்து இயங்குவதனுல், அவைகள் பெருஞ்செலவு பிடிக்கும் அரசியல் முறைகளாய் அமைகின்றன.

5. கூட்டாட்சி அரசுகளில் அரசியலமைப்பின் ஐயப்பாட்டுக்குரிய பகுதிகளுக்கு விளக்கம் கூறும் அதிகாரமும், மத்திய மாநிலச் சட்டமன்றங்களின் அத்துமீறிய சட்டங்களிடமிருந்து அரசியலமைப்பைக் காக்கும் பொறுப்பும், தலைமை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படுவதால், சட்டத்துறையையும் ஆட்சித்துறை

யையும்விட நீதித் துறை அதிக வல்லமையுள்ளதாகக் காட்சி யளிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் விருப்பப்படி அரசாங்கம் நடக்காமல், நீதிபதிகளின் விருப்பப் படியே நடைபெறுகிறது என்று சிலர் குறைபட்டுக் கொள்வதில் உண்மை இல்லாமலில்லை. அமெரிக்க அரசாங்கத்தைச் சிலர் 'நீதிபதிகளின் அரசாங்கம்' (Government by Judges) என இடித்துக் கூறுகின்றனர்.

கூட்டாட்சியின் எதிர்காலம்

தற்காலக் கூட்டாட்சிகளின் போக்கை ஆராயும்பொழுது, எல்லா நாடுகளிலுமே நாளுக்கு நாள் மைய அரசின் கரங்கள் வலுவடைகின்றன என்ற உண்மை தெளிவாகத் தெரிகிறது. மைய அரசு ஏராளமான வருவாய் மூலங்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதாலும், நாடுகள் அமைதியான சூழ்நிலையை இழந்து போருக்குத் தயாரான நெருக்கடி நிலையில் வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதாலும், நவீன நாகரிக வாழ்க்கை சிக்கல் நிறைந்த வாழ்க்கையாக மாறி வருவதாலும், மைய அரசின் ஆதிக்கம் மேல் நோக்கி வளர்வதைப் பார்க்கிறோம். இப்போக்குக் கூட்டாட்சி அரசுகளின் எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறியன்று.

4. அதிகாரப் பிரிவினை

(The Theory of Separation of Powers)

[அதிகாரப் பிரிவினை : பொருள்—இத் தத்துவத்தின் வரலாறு—மான்டெஸ்க்யூவின் அதிகாரப் பிரிவினை எத்தன்மையது?—இக் கொள்கையின் குறைகள்—தற்கால அரசாங்கங்களில் அதிகாரப் பிரிவினை.]

அதிகாரப் பிரிவினை : பொருள்

அரசாங்கத்தின் அதிகாரங்களைச் சட்டமியற்றல் (Legislation), ஆட்சிப் பரிபாலனம் (Administration), நீதி நிர்வாகம் (Adjudication) என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இந்த வெவ்வேறான அதிகாரங்களைப் பெறும் அரசாங்கத் துறைகள், முறையே சட்டத்துறை (Legislative), ஆட்சித் துறை (Executive), நீதித் துறை (Judiciary) என அழைக்கப்படுகின்றன. சட்டத் துறையினருக்குச் சட்டமியற்றும் பொறுப்பினைத் தவிர, ஆட்சிப் பரிபாலன அதிகாரமோ, நீதி நிர்வாக அதிகாரமோ இருக்கக் கூடாதென்றும், ஆட்சித் துறையினருக்கு ஆட்சிப் பரிபாலன பொறுப்பைத் தவிர, சட்டமியற்றும் அதிகாரமோ நீதி நிர்வாக அதிகாரமோ இருக்கக்கூடாதென்றும், நீதித் துறையினருக்கு நீதி நிர்வாகப் பொறுப்பைத் தவிர, சட்டமியற்றும் அதிகாரமோ ஆட்சிப் பரிபாலன அதிகாரமோ இருக்கக் கூடாதென்றும் கூறும் கோட்பாட்டைத்தான் அதிகாரப் பிரிவினை என அழைக்கிறோம். இந்த மூன்று துறைகளில் எந்த ஒரு துறையும் வேறெந்தத் துறையையும் சார்ந்திராமல் சர்வ சுதந்திரத்தோடு இயங்குவது இன்றியமையாதது. ஒரு துறையின் உறுப்பினரை மற்றொரு துறையின் உறுப்பினர் நியமிப்பதோ நீக்குவதோ இக் கொள்கைக்குப் புறம்பானது. எல்லாத் துறையினருமே மக்களால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் முறை என எண்ணப்படுகிறது. அதிகாரங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குவியுமானால் அது சர்வாதிகாரத்துக்கு வழி கோலும்

என்றும், பல இடத்தில் பிரிந்திருக்குமானால் அது மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்குமென்றும் நம்பப்படுவது வரலாற்றுப் பூர்வமாக உண்மை எனத் தோன்றுகிறது. 'நானே அரசு' என்று கூறிக்கொண்ட பதினான்காம் லூயி (Louis XIV) மன்னரின் சர்வாதிகாரம் அதிகாரக் குவிப்புக்கு அடையாளமாய் விளங்கியது. எங்குப் பார்த்தாலும் மக்களாட்சி மலர்ந்திருக்கும் இன்றைய உலகில் அதிகாரப் பிரிவினை ஓர் உரிமைக் கோட்பாடாகக் (Doctrine of liberty) கருதப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

இத் தத்துவத்தின் வரலாறு

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த கிரேக்கத் தத்துவ மேதை அரிஸ்டாட்டில் (Aristotle) அதிகாரப் பிரிவினையின் அவசியத்தை அறிந்திருந்தார் என்பதை அவருடைய 'அரசியல்' என்னும் நூலிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம். பெருமைக்குரிய பெரிக்ளீஸ் (Pericles) அரசாண்ட காலத்தில் நகர-அரசான ஏதென்ஸில் (Athens) சட்டமியற்றல், ஆட்சிப் பரிபாலனம், நீதி நிர்வாகம் ஆகிய பொறுப்புகள் தனித்தனி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. உரோமாபுரி, ஜனநாயகத்தின் உச்ச நிலையிலிருந்த காலத்தில் அதன் அரசியலமைப்பைப் புகழும் சிசரோ (Cicero), பொலிபியஸ் (Polybius) போன்ற அறிஞர்கள், அந்தப் புகழுக்குக் காரணம் அதிகாரப் பிரிவினையே என்பதை உணர்ந்திருந்தனர். ஐரோப்பாவில் இடைக்காலம் இருண்ட காலமாக இருந்ததனால், இக் கொள்கையைப் பற்றி அக்கறை காட்டியோர் யாருமில்லை. பதினாறுவது நூற்றாண்டில் பிரெஞ்சு ஆசிரியர் போதின் (Bodin), அரசரே நீதிபதியாக இருக்கக் கூடாதென்றும், நீதி நிர்வாகத்தை நடுநிலைமை தவறாத நீதிபதிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார். இங்கிலாந்தில் புகழ்பெற்ற புரட்சிக் (Glorious Revolution) காலத்தில் வாழ்ந்த லாக் (Locke) என்பாரும் அரசாங்கத்தின் அதிகாரங்களை மூன்றாகப் பிரித்து விளக்கினார்.

அரசியல் கலையில் அதிகாரப் பிரிவினை என்பது ஓர் அடிப்படைத் தத்துவம் என்று கூறி, அக் கொள்கையின் பண்பு நலன்களைப் பிரபலப்படுத்திய பெருமை மான்டெஸ்க்யூ (Montesquieu) எனும் பிரெஞ்சு அரசியல் மெய்ஞ்ஞானியைச் சாரும். 'சட்டத்தின் உள்ளுணர்வு' (The Spirit of the Laws) என்னும் நூலில் அவர் எழுதுவதாவது: 'சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரத்தை, அவற்றைச் செயல்படுத்தக்கூடிய அதிகாரத்தோடு இணைத்து ஒருவரிடமோ, ஒரு நிறுவனத்திடமோ கொடுத்தால்

அங்கே சுதந்திரம் இருக்க முடியாது; ஏனெனில் அந்த அரசனே அவையோ கொடுமையான சட்டங்களை இயற்றி அவற்றைக் கொடுமையான வழிகளில் நிறைவேற்றும் என்ற அச்சம் எழும். நீதி நிர்வாக அதிகாரத்தைச் சட்டமியற்றலிலிருந்தும் ஆட்சிப் பரிபாலனத்திலிருந்தும் பிரிக்காவிட்டால் அங்கே சுதந்திரமில்லை. அதைச் சட்டமியற்றலோடு இணைத்தால் குடிமகனின் உயிரும் உரிமையும் கொடுங்கோன்மையான கட்டுப்பாட்டுக்கு இலக்காகும்; ஏனெனில், சட்டமியற்றுபவர் தானே நீதிபதியாகவும் இருக்கிறார். அதை ஆட்சிப் பரிபாலன அதிகாரத்தோடு இணைத்தால் நீதிபதி வன்முறை, அடக்குமுறை ஆகியவைகளைப் பின்பற்றினாலும் பின்பற்றுவார். சட்டங்கள் இயற்றுதல், அவைகளைச் செயல்படுத்துதல், மக்களின் வழக்குகளை விசாரித்தல் ஆகிய மூன்று அதிகாரங்களையும், தனி மனிதரோ, அல்லது ஒரு நிறுவனமோ, அவர்கள் உயர்குடிப் பிறந்தோரோ அல்லது சாதாரண மக்களோ பெறுவார்களேயானால் அங்கே எல்லாம் அழிந்துவிடும்'. மான்டெஸ்க்யூவின் இக் கொள்கை அவர் காலத்து அரசியல் சிந்தனையைப் பெருமளவுக்குப் பாதித்தது; 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய அரசியலமைப்புகள் அநேகம் இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டன.

பிளேக்ஸ்டன் (Blackstone) எனும் ஆங்கிலேயச் சட்ட நிபுணர் மான்டெஸ்க்யூவின் எண்ணங்களையே மீண்டும் எதிரொலித்தார். 'கொடுங்கோன்மை அரசாங்கங்கள் அனைத்திலும் சட்டமியற்றும் அதிகாரமும், அவற்றை நிறைவேற்றும் அதிகாரமும் ஒரு தனிமனிதரிடமோ அல்லது ஒரு நிறுவனத்திடமோதான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கெல்லாம் இந்த அதிகாரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றனவோ, அங்கெல்லாம் பொதுச் சுதந்திரம் இருக்க முடியாது'.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களில் ஒன்றான மெஸ்ஸாசுசெட்ஸ் (Massachusetts) என்ற மாநிலத்தின் அரசியலமைப்பிலும் (1780) மான்டெஸ்க்யூவின் கொள்கைக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அந்த அரசாங்கத்தில் ஒவ்வொரு துறையினரும் அவரவர்க்குரிய அதிகாரங்களை அனுபவிக்கின்றனர் என்றும், அதன் பயனாக அவர்களுடைய அரசாங்கம் 'மனிதர்களின் அரசாங்கமாயிராமல், சட்டத்தின் அரசாங்கமாயிருக்கிறது' (Government of laws, not of men) என்றும் அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கிறது.

அமெரிக்க அரசியலமைப்பின் பிதாக்களில் ஒருவரான மேடிசனும் (Madison) அதிகாரப் பிரிவினையின் உயர்வை உணர்ந்திருக்கிறார். சட்டமியற்றல், ஆட்சிப் பரிபாலனம், நீதி நிர்வாகம்

ஆகிய அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவியுமானால் அதைக் கொடுங்கோன்மையின் இலக்கணம் எனக் கூறலாம் என்பது அவர் கருத்து.

பிரான்சில், புரட்சித் தீக்கனலில் உருவாகிய அரசியல் நிர்ணயச் சபை (1789) 'மனித உரிமைகளின் பிரகடனம்' (Declaration of the Rights of Man) என்ற பத்திரத்தில் 'எந்த நாட்டில் அதிகாரப் பிரிவினைக்கு இடமளிக்கப்படவில்லையோ அந்த நாட்டில் அரசியலமைப்பு என்பதே இல்லை' என அறிவிக்கிறது.

அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் தன் தீர்ப்பொன்றில் இக் கோட்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது. அரசாங்கத்தை மூன்று துறைகளாகப் பிரித்து ஒவ்வொரு துறைக்கும் இந்த இந்த அதிகாரம் என ஒதுக்கியிருப்பது அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்புகளில் ஒன்று என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

மான்டெஸ்க்யூவின் அதிகாரப் பிரிவினை எத்தன்மையது ?

மான்டெஸ்க்யூ அதிகாரப் பிரிவினையை முழுமையாக விரும்பினரா அல்லது ஓரளவே விரும்பினரா என்ற வினவுக்கு நாம் விடை காண வேண்டும். மேடிசன் குறிப்பிடுவது போல, மூன்று துறைகளிடையே ஒன்றோடொன்று எந்தத் தொடர்பும் இருக்கக் கூடாதென்பது மான்டெஸ்க்யூவின் நோக்கமன்று. ஒரு துறையின் முழு அதிகாரமும் அல்லது பெரும்பான்மையான அதிகாரமும் மற்றொரு துறைக்கு இருக்கக்கூடாதென்றும், ஒரு துறையை முழுக்க முழுக்கக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் மற்றொரு துறைக்கு இருக்கக் கூடாதென்றும் அவர் விரும்பினரே தவிர, மூன்று துறைகளும் ஒன்றோடொன்று தொடர்பற்ற மூன்று உலகங்களாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பவில்லை.

இக் கொள்கையின் குறைகள்

1. அரசாங்கம் என்பது ஒரு முழு மொத்த உரு; அது முழுமையாக இயங்கினல்தான் செம்மையாக இயங்கமுடியும் என்ற கொள்கை உடையோர் அதைப் பல துறைகளாகப் பகுப்பதை விரும்புவதில்லை. மனித உடல் தன்னுடைய இயக்கத்துக்கு எல்லா உறுப்புகளையும் நம்பி இருப்பதுபோல, அரசாங்கமும் தன்னுடைய பணிகளைச் செய்வதற்கு எல்லாத் துறைகளையும் நம்பி இருக்கிறது. உடலுறுப்புகள் ஒன்றையொன்று

பகைத்துக் கொண்டால் உடல் நோய்வயப்படுவதுபோல, அரசாங்கத் துறைகள் ஒன்ருேடொன்று ஒத்துப் போகாவிட்டால், அந்த அரசின் நலன்கள் நலியும்.

2. அரசாங்கத் துறைகள் மூன்று என்ற எண்ணமே தவறு எனக் கருதுவோரும் உண்டு. சிலர் சட்டத்துறை, ஆட்சித்துறை என்ற இரண்டு துறைகள்தான் உண்டென்றும், வேறு சிலர் வாக்காளர் தொகுதி (Electorate), சட்டத்துறை, ஆட்சித்துறைத் தலைவர்கள், அரசின் அன்ருட நடைமுறை அலுவல்களில் ஈடுபடும் பணியாளர், நீதித்துறை என ஐந்து துறைகள் உண்டென்றும் கூறுகின்றனர்.

3. அரசாங்கத்தின் துறைகள் மூன்றும் சமமானவை என்ற கருத்தும் இக்காலத்தில் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களின் அடிப்படையில்தான் ஆட்சித் துறையும், நீதித் துறையும் இயங்க வேண்டுமென்பது இன்றியமையாததாகையால், சட்டத்துறை மற்றத் துறைகளைவிட உயர்ந்ததென்பதில் ஐயமில்லை. நாட்டின் வருவாய் மூலங்களையும் செலவினங்களையும் நிர்ணயிக்கின்ற பெரும் பொறுப்பே சட்டத் துறையின் கைகளில்தான் இருக்கிறதென்பது, அதன் உயர்வை மேலும் உறுதிப்படுத்துகிறது.

4. பிரிட்டிஷ் அரசியலமைப்பை அதிகாரப் பிரிவினையை மையமாகக் கொண்ட அரசியலமைப்பு என மான்டெஸ்க்யூ நினைத்தது தவருகும். சட்டத்துறையையும் ஆட்சித் துறையையும் ஒன்ருக இணைக்கும் கேபினட்டைக் (Cabinet) கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினை அங்கீகரிக்கப்பட்ட காலமே இருந்ததில்லை. எனவே மான்டெஸ்க்யூ பிரிட்டிஷ் அரசியலமைப்பைத் தவருகப் புரிந்துகொண்டார் எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

5. அதிகாரப் பிரிவினையின் அடிப்படையில் அமையாத அரசியலமைப்புகளைக் கொண்ட நாடுகளில் மக்களுக்குச் சுதந்திரமிருக்காது என மான்டெஸ்க்யூ கருதினுர். இக்கருத்துத் தவருனதாகும். மக்கள் உரிமையோடு இருப்பதும் இல்லாததும் அதிகாரப் பிரிவினையைப் பொறுத்ததன்று, அது அவர்களுடைய பாரம்பரியம், விழிப்புணர்ச்சி போன்ற சக்திகளைப் பொறுத்தது என வாதிக்கப்படுகிறது.

6. அதிகாரப் பிரிவினை என்பது மான்டெஸ்க்யூ காலத்தில் சாத்தியமாயிருந்திருக்கலாம். ஆனுல், எல்லாத் துறைகளிலும் ஊடுருவிப் பாய்கின்ற அரசியல் கட்சிகள் வளர்ந்துவிட்ட

இக் காலத்தில் அது சாத்தியமன்று என்று சொல்லப்படுகிறது. சட்டமன்றத் தலைவராயிருக்கும் முதலமைச்சர், ஆட்சித் துறைத் தலைவராயும் இருப்பது இன்று பல நாடுகளில் சர்வ சாதாரண நிகழ்ச்சியாய்விட்டது. எவ்வகையான சட்டங்களை இயற்ற வேண்டும், அவற்றை எங்ஙனம் செயல்படுத்த வேண்டும், நீதிமன்றங்களில் எவ்வகையான எண்ணமுடைய நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்ற கொள்கைகளெல்லாம் செல்வாக்குள்ள சில அரசியல் தலைவர்களால் தீர்மானிக்கப்படுகின்ற இக்காலத்தில் அதிகாரப் பிரிவினை என்பது உருக்குலைந்துவிட்டது.

7. மான்டெஸ்க்யூவின் காலத்தில் மக்களை அடக்குவதையே அரசாங்கம் தன் நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆகையினால் எந்த அரசாங்கம் குறைவாக ஆள்கிறதோ அதையே மக்கள் நல்ல அரசாங்கமாகக் கொண்டனர். அரசாங்கத்தின் அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்தால் அது மக்களுக்கு ஆபத்தாய் முடியும் என நினைத்து, அந்த அதிகாரங்களைச் சிதறடிக்க வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட முறைதான் அதிகாரப் பிரிவினை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் தற்கால அரசுகளில் பல அடக்கு முறை அரசுகளாயில்லாமல் நலம் நாடும் அரசுகளாய் (Welfare State) மாறி வருவதனால் இக்கோட்பாட்டுக்கு இனி அவசியமில்லை. மேலும், ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவியுமானால், அது மக்கள் அரசாங்கத்திடமிருந்து பலவிதப் பயன்களை விரைவாகப் பெற வகை செய்கிறது என்ற எண்ணம் இப்பொழுது வளர்ந்து வருகிறது.

தற்கால அரசாங்கங்களில் அதிகாரப் பிரிவினை

அமெரிக்கா: அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படை ஆதாரமாக அதிகாரப் பிரிவினையைக் கருதுவது வழக்கம். சட்டமியற்றுதலைக் காங்கிரசிடமும் (Congress), ஆட்சிப் பரிபாலனத்தைக் குடியரசு தலைவரிடமும், நீதி நிருவாகத்தை நீதிமன்றங்களிடமும் ஒப்படைப்பதாக அரசியலமைப்பே பேசுகிறது. இருப்பினும் அதிகாரப் பிரிவினைக்கு முரணான சில முறைகளை அங்கே காண்கிறோம். குடியரசு தலைவர் காங்கிரசுக்குச் செய்திகள் அனுப்புவது, அதன் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டுவது, அதன் சட்டங்களைத் தடுப்பது, நீதிபதிகளை நியமிப்பது, குற்றவாளிகளின் தண்டனையைக் குறைப்பது ஆகிய செயல்களில் ஈடுபடுவதிலிருந்து ஆட்சித்துறைத் தலைவர் மற்றத் துறைகள் சார்புடைய அதிகாரங்களைப் பெற்றிருப்பது தெரிகிறது. காங்கிரஸ் குடியரசு தலைவர், உயரதிகாரிகள், நீதிபதிகள் ஆகியோரைக் குற்றஞ்சாட்டிப் பதவி நீக்கம் செய்வது, செனட் சபை குடியரசு தலைவரால் அனுப்பப்

படும் அதிகாரங்களுக்கான நியமனங்களை ஏற்க மறுப்பது, செனட் சர்வதேச உடன்படிக்கைகளை ஆமோதிக்க மறுப்பது ஆகிய செயல்களில் ஈடுபடுவதிலிருந்து சட்டத்துறை மற்றத் துறைகள் சார்புடைய அதிகாரங்களைப் பெற்றிருப்பது தெரிகிறது. நீதிபதிகள் ஆட்சித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பது, காங்கிரசின் சட்டங்களை அரசியலமைப்புக்கு முரணானதெனச் சொல்லி அவை செல்லாது என அறிவிப்பது ஆகிய செயல்களில் ஈடுபடுவதிலிருந்து, நீதித்துறை மற்றத் துறைகள் சார்புடைய அதிகாரங்களைப் பெற்றிருப்பது தெரிகிறது. 'அதிகாரப் பிரிவினைமீதான கட்டுரை' (on Essay of Separation of Powers) என அழைக்கப்படும் அமெரிக்க அரசியலமைப்பிலேயே அத் தத்துவம் அரைகுறையாகப் பின்பற்றப்படுவது; அதை முழு அளவுக்குப் பின்பற்றுவது முடியாத காரியம் என்பதைக் காட்டுகிறது.

பிரிட்டன்: பிரிட்டிஷ் அரசியலமைப்பை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால்கூட அங்கே அதிகாரப் பிரிவினை புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரியும். ஆட்சித் துறையின் தலைவர்களாய் இருக்கும் அமைச்சர்கள் பாராளுமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதோடல்லாமல் அதில் தொடர்ந்து நீடிப்பது, சட்டங்களைத் தோற்றுவிப்பது, பொதுமக்கள் சபையைக் கலைப்பதற்கும், பிரபுக்கள் சபைக்கு நியமனங்கள் செய்வதற்கும் சிபார்சு செய்வது ஆகிய செயல்களைச் செய்வது ஆட்சித் துறைக்கு அதன் இயல்புக்கு மாறான அதிகாரங்கள் உண்டென்பதைக் காட்டுகிறது. பாராளுமன்றம் அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்வது, நீதிபதிகளை நீக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றுவது, பிரபுக்கள் சபை பெரு நீதிமன்றமாக இயங்குவது ஆகிய செயல்களைச் செய்வது சட்டத் துறைக்கு அதன் இயல்புக்கு மாறான அதிகாரங்கள் உண்டென்பதைக் காட்டுகிறது. சான்சலர் பிரபு (Lord Charcellor) எனும் அதிகாரி மேல் சபையின் தலைவராகவும், அமைச்சர்களில் ஒருவராகவும், நீதிபதிகளில் முதன்மையானவராகவும் இருப்பது, பிரிட்டனில் அதிகாரப் பிரிவினை எந்த அளவுக்கு உதாசீனம் செய்யப்படுகிறது என்பதற்கு அடையாளமாய் இருக்கிறார். அதிகாரப் பிரிவினையை உள்ளடக்கிய அரசியலமைப்பு என்று மான்டெஸ்க்யூவினால் புகழ்ந்துரைக்கப்பட்ட பிரிட்டனின் அரசியலமைப்பில் அக் கோட்பாடு காணப்படாதிருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது.

இந்தியா: பிரிட்டிஷ் அரசியல் மரபுகளின் செல்வாக்கு உள்ளான இந்திய அரசியலமைப்பிலும் அதிகாரப் பிரிவினை அலட்சியம் செய்யப்பட்டிருப்பது இயல்பே. குடியரசு தலைவர்

பாராளுமன்றத்தைக் கூட்டுவது, கலைப்பது, அதற்கு உரை நிகழ்த்துவது, மேல் சபைக்குப் பன்னிரண்டு உறுப்பினர்களை நியமிப்பது, பாராளுமன்றச் சட்டங்களை ரத்து செய்ய அதிகாரம் பெற்றிருப்பது, அவசர காலங்களில் சட்டங்களுக்குச் சமமான ஆணைகளை அறிவிப்பது, நீதிபதிகளை நியமிப்பது போன்ற காரியங்களைச் செய்வதிலிருந்து ஆட்சித் துறைக்கு அதன் தன்மைக்கு மாறான அதிகாரங்கள் உண்டென்பது தெரிகிறது. பாராளுமன்றம் அமைச்சர்களை விலக்க முடியும் என்பதும், குடியரசு தலைவர், உபதலைவர் ஆகியோரின் தேர்தல்களில் அது பங்கு கொள்கிறது என்பதும், நீதிபதிகளை நீக்கக்கூடிய அதிகாரமும் அதற்கு உண்டென்பதும், சட்டத்துறைக்கு அதன் தன்மைக்கு மாறான அதிகாரங்கள் உண்டென்பதை உணர்த்துகின்றன. நீதித் துறையானது ஆட்சித் துறை அதிகாரிகளை விசாரித்துத் தண்டிக்க முடியுமாதலாலும், பாராளுமன்றச் சட்டங்களையும், குடியரசு தலைவரின் ஆணைகளையும் அரசியலமைப்புக்கு முரணானவையாய் இருந்தால் அவை செல்லத்தக்கன அல்ல என அறிவிக்க முடியுமாதலாலும், நீதித் துறைக்கும் அதன் தன்மைக்கு மாறான அதிகாரங்கள் உண்டென்பதைக் காட்டுகின்றன.

5. வழக்காறுகளும் மரபுகளும்

(Conventions and Usages)

[அரசியலமைப்பில் வழக்காறுகளுக்கும் மரபுகளுக்குமுரிய இடம்—வழக்காறுகளும் மரபுகளும்: பொருள்—வழக்காறுகளும் மரபுகளும் சட்ட திட்டங்களிலிருந்து மாறுபட்டவை என்பது—பிரிட்டனில் பின்பற்றப்படும் வழக்காறுகளும் மரபுகளும்—வழக்காறுகளும் மரபுகளும் ஏன் பின்பற்றப்படுகின்றன?—வழக்காறுகள் மரபுகளினால் ஏற்படும் விளைவுகள்.]

அரசியலமைப்பில் வழக்காறுகளுக்கும் மரபுகளுக்குமுரிய இடம்

எழுதப்பெற்ற சட்ட திட்டங்களும், எழுதப்பெருத பழக்க வழக்கங்களும் சேர்ந்தே அரசியலமைப்பினை நிறைவும் முழுமையும் பெறச் செய்கின்றன. எழுதப்பெற்ற அரசியலமைப்பையுடைய அமெரிக்காவிலும், எழுதப்பெருத அரசியலமைப்பையுடைய பிரிட்டனிலும் எழுத்துருவம் கொண்ட சட்ட திட்டங்களும், எழுத்துருவம் காணுத பழக்க வழக்கங்களும் இணைந்தே நாட்டின் அரசினை இயக்குவிக்கின்றன. எழுதப்பெற்ற சட்ட திட்டங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு என்பதோ, எழுதப்பெருத பழக்க வழக்கங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு என்பதோ எந்நாட்டிலும் நடைமுறையில் இல்லை; தற்கால அரசியலமைப்புகள் அனைத்திலும் இவ்விரு கூறுகளும் கலந்தே காணப்படுகின்றன.

வழக்காறுகளும் மரபுகளும்: பொருள்

ஓர் அரசானது சீராகவும் செம்மையாகவும் செயல்பட, அந் நாட்டின் அரசாங்கம் சட்ட திட்டங்களில் கூறப்படாத சில பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும். இவ்வகையான பழக்க வழக்கங்களை அரசியல் இலக்கியத்தில், வழக்காறுகளும் மரபுகளும் என அழைக்கிறோம். ஒரு நாட்டின் அரசியலமைப்பை அறிந்து கொள்ள அதன் சட்ட திட்டங்களைத் தெரிந்து கொள்வது

எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் அதன் வழக்காறு களையும் மரபுகளையும் தெரிந்து கொள்வது. சட்ட திட்டங்களை நாடி நரம்புகள் என்று கூறினால், வழக்காறுகளையும் மரபுகளையும் இரத்தமும் தசையும் எனக் கூறலாம்.

வழக்காறுகளும் மரபுகளும் சட்ட திட்டங்களிலிருந்து மாறுபட்டவை என்பது

சட்ட திட்டங்களை ஒரு பக்கமும், வழக்காறுகளையும் மரபு களையும் மறு பக்கமும் வைத்து ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், சில மாறுபாடுகளைக் காணலாம். 1. சட்ட திட்டங்களுக்கு வலிமை அதிகம். அவைகளை நீதிமன்றங்கள் மூலமாக நிறை வேற்றிக் கொள்ளலாம். பிரிட்டனில் வயது வந்தோர்க் கெல்லாம் வாக்குரிமை உண்டென்பது சட்டம். இந்த உரிமை உரியவர்க்கு வழங்கப்படவில்லை எனின் நீதிமன்றங்கள் மூலமாக அவர்கள் இதனைப் பெறலாம். சட்டங்களை யாருமே புறக்கணிக்க முடியாது. ஆனால் வழக்காறுகளுக்கும் மரபுகளுக்கும் வலிமை குறைவு. பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்த அமைச் சர்கள் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்பது மரபு. இந்த மரபினை அமைச்சர்கள் மதிக்க மறுத்துப் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்த பின்பும் தொடர்ந்து பதவியில் இருப்பார் களானால், எந்த நீதிமன்றமும் இவ்விவகாரத்தில் தலையிடாது. வழக்காறுகளும் மரபுகளும் மதிக்கப்படுகின்றனவா என்ற ஆய்வு நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டது.

2. சட்ட திட்டங்களெல்லாம் குறிப்பிட்ட நிறுவனங்களால் உருவாக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தின் தனிப் பெரும் பொறுப்பே சட்டங்களை இயற்றுவதுதானே! ஆனால் வழக்காறு களும் மரபுகளும் எந்தத் தனிப்பட்ட நிறுவனத்தாலும் உருவாக் கப்படுவதில்லை; அவைகள் பொதுமக்களின் கருத்துகளில் தோன்றி வளர்கின்றன. பிரிட்டனில் நாட்டு மன்னர் பிராட் டஸ்டன்டு (Protestant) மதத்தைச் சேர்ந்தவராய் இருக்க வேண்டும் எனக் கூறும் அரசுரிமை நிர்ணயச் சட்டம் (1701) பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. ஆனால் அரசியானவர் பாராளுமன்றம் சமர்ப்பிக்கும் மசோதாக்கள்மீது ரத்து அதிகா ரத்தைப் பிரயோகிக்கக் கூடாது என்ற மரபு யாரால் உண்டாக்கப் பட்டது? அது மக்கள் மத்தியில் உருவாகி வளர்ந்த மரபே யாகும்.

3. சட்ட திட்டங்கள் பொதுவாகத் தெளிவானவையாயும் துல்லியமானவையாயும் இருக்கும். பாராளுமன்றச் சட்டத்தின் (1911) பொருள் பற்றி யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

ஆனல் வழக்காறுகளும் மரபுகளும் தெளிவற்றனவாயும் துல்லிய மற்றனவாயும் இருக்கக் காண்கிறோம். முதலமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என அரசுக்கு அறிவுரை கூறினல், எந்தச் சமயங்களில் அந்த அறிவுரையை நாட்டுத் தலைவர் ஏற்க வேண்டும் என்பது பற்றி உறுதியான உடன்பாடு எதுவும் கிடையாது.

பிரிட்டனில் பின்பற்றப்படும் வழக்காறுகளும் மரபுகளும்

எல்லா நாடுகளின் அரசியலமைப்புகளிலும் வழக்காறுகளும் மரபுகளும் பின்பற்றப்படுகின்றன என்பது உண்மை என்றாலும், பிரிட்டனில் வேறெந்த நாட்டையும்விட அதிகப்படியான வழக்காறுகளும் மரபுகளும் பின்பற்றப்படுகின்றன என்பதை நாம் நினைவிலிருத்த வேண்டும். ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வரம்பில்லா முடியாட்சியாகத் தோன்றிய பிரிட்டிஷ் அரசு காலப்போக்கில் வளர்ந்தும் தேய்ந்தும் ஒரு ஜனநாயக முடியாட்சியாக (Crowned Republic) மலர்ந்ததற்கு உறுதுணையாய் இருந்தவை வழக்காறுகளும் மரபுகளுமேயாம்.

அரசியும் மரபுகளும்: பாராளுமன்றத்தால் சமர்ப்பிக்கப்படும் எல்லா மசோதாக்களுக்கும் அரசி தன் இசைவினைத் தெரிவிக்க வேண்டுமென்பதும், அமைச்சரவையின் அறிவுரையின்பேரிலும், இணக்கத்தின்பேரிலும்தான் உயர் பதவிக்கான ஊழியர்களை அவர் நியமிக்கவும் நீக்கவும் வேண்டுமென்பதும், அரசியின் பெயரில் அறிவிக்கப்படும் ஆணைகளுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்கவேண்டுமென்பதும், அரசியைப்பற்றிய மரபுகளில் சில. செயலளவிலிருந்த முடியாட்சியைப் பெயரளவுக்கு மாத்திரம் முடியாட்சியாக மாற்றி உண்மையில் குடியாட்சியை ஏற்படுத்திய பெருமை வழக்காறுகளையும் மரபுகளையுமே சாரும்.

அமைச்சரவையும் மரபுகளும்: பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்த அமைச்சரவை உடனடியாகப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்பதும், முதலமைச்சர் பொதுமக்கள் சபையைக் கலைக்க வேண்டும் என அரசியைக் கேட்டுக் கொண்டால் அரசி அந்த யோசனையை ஏற்க வேண்டுமென்பதும், அமைச்சர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொதுமக்கள் சபைக்குப் பொறுப்புள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதும், அமைச்சர்களெல்லாம் பொதுமக்கள் சபையிலுள்ள பெரும்பான்மை கட்சியிலிருந்து நியமிக்கப்பட வேண்டுமென்பதும், அப் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென்பதும் அமைச்சரவையைப் பற்றி

மரபுகளில் சிலவாகும். அமைச்சரவையின் தொகுப்பு, அமைப்பு, உரிமைகள், பொறுப்புகள் எல்லாமே மரபுகளால்தான் ஒழுங்கு படுத்தப்படுகின்றன.

பாராளுமன்றமும் மரபுகளும்: பாராளுமன்றம் ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டும் என்பதும், ஒவ்வொரு சபையிலும் மசோதாக்கள் மூன்று முறை விவாதிக்கப்பட வேண்டும் என்பதும், பொதுமக்கள் சபையில் மசோதாக்களையும் மற்ற முக்கிய அலுவல்களையும் ஆராயப் பல குழுக்கள் இருக்க வேண்டும் என்பதும், ஒவ்வொரு குழுவிலும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தாய்ச் சபையில் இருக்கும் வீதப்படி பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்பதும், விவாதங்களில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் மாறிமாறிப் பேச வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதும், சபாநாயகர் (Speaker) போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதும், அவர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராயிருந்து சாதாரண வாக்களிப்புகளில் கலந்துகொள்வதில்லை என்பதும், பிரபுக்கள் சபை நீதிமன்றமாகச் செயல்படும்பொழுது சட்ட பிரபுக்களும், சட்டத் துறையில் பயிற்சியும் அனுபவமுள்ள பிரபுக்களும் மாத்திரம் பங்கு பெற வேண்டும் என்பதும் பாராளுமன்றத்தைப் பற்றிய மரபுகளில் சிலவாகும். பிரபுக்கள் சபைக்கும் பொதுமக்கள் சபைக்கும் மசோதாக்கள்மீது கருத்து வேறுபாடு ஏற்படுமானால், பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபைக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்ற மரபு 1911ஆம் ஆண்டில் சட்டமாக வடிவம் பெற்றது.

காமன்வெல்த்தும் (Commonwealth) மரபுகளும்: காமன்வெல்த்துக் கழகமே மரபுகளால் வளர்க்கப்பட்ட ஒரு பன்னாட்டுக் கழகமாகும். கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து போன்ற குடியேற்ற நாடுகள் சுய ஆட்சி உரிமை பெற்றது வழக்காறுகளின் வழியேயாம். காமன்வெல்த் நாடுகள் ஒன்றையொன்று பரஸ்பர நேச உணர்ச்சியோடு அணுகவேண்டுமென்பதும், அவைகளுக்குப் பொதுவான பிரச்சினைகளைப் பற்றிக் கலந்து பேசிக் கூட்டு முயற்சியால் தீர்வுகாண வேண்டுமென்பதும், டொமினியன் (Dominion) நாடுகளுடைய ஆளுநர்களை அந்தந்த டொமினியன் அரசாங்கத்தின் விருப்பப்படியே நியமிக்க வேண்டுமென்பதும், காமன்வெல்த் மரபுகளில் சிலவாகும். 1931ஆம் ஆண்டின் வெஸ்ட்மினிஸ்டர் சட்டம் (Statute of Westminister) பிரிட்டன் தன் டொமினியன்களோடு கொள்ள வேண்டிய தொடர்புகளை மரபுகளிலிருந்து சட்டமாக மாற்றியது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

வழக்காறுகளும் மரபுகளும் ஏன் பின்பற்றப்படுகின்றன ?

சட்டங்களுக்குள்ள வலிமை மரபுகளுக்குக் கிடையாது என்பதை முன்பே பார்த்தோம். மக்கள் சட்டங்களை மீருமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களுடையது; மரபுகளுக்கு அது போன்ற காப்புக் கிடையாது. இருந்தாலும் சட்டங்கள் எவ்வளவு புனிதமானவையாய் கருதப்படுகின்றனவோ அவ்வளவு புனிதமானவையாகவே மரபுகளும் கருதப்படுகின்றன. மரபுகள் அவ்வாறு மதிக்கப்படுவானேன் ?

1. பொதுமக்கள் கருத்து, வழக்காறுகளும் மரபுகளும் பின்பற்றப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. பாராளு மன்றத்தால் இயற்றப்பட்ட மசோதாக்கள்மீது அரசி தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாதென்றும், பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்த அமைச்சரவை பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்றும், அமைச்சர்கள் எல்லாம் பாராளுமன்றத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், பாராளுமன்றம் ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டு மென்றும், பிரபுக்கள் சபை நீதிமன்றமாக இயங்கும்பொழுது சட்டப் பிரபுக்களைத் தவிர மற்றவர் கலந்து கொள்ளக் கூடாதென்றும், சபாநாயகர் நடுநிலை தவருதவராயிருக்க வேண்டு மென்றும் பொதுமக்கள் கருத்து எதிர்பார்க்கிறது. பொது மக்கள் கருத்துக்கு எதிராக நடக்கும் வலிமை எந்த அரசாங்கத் துக்கும் இல்லை; அவ்வாறு நடக்க முயலுமாளுல் அது விரைவிலேயே கவிழும்.

2. மரபுகள் சட்டங்களல்ல என்ருலும், மரபுகளை மீறுகின்ற வர்கள், சட்டங்களை மீறுகின்ற நிலை ஏற்படும் என்ற உண்மையை A. V. டைஸி விளக்குகிருர். ஆண்டுதோறும் பாராளுமன்றத் தைக் கூட்டவேண்டுமென்ற மரபைக் கைவிட்டு, பாராளுமன் றத்தின் துணை இல்லாமல் ஆட்சி செய்ய முயலும் அரசியும் அவர் ஊழியர்களும், உண்மையில் சட்டத்தை மீருமல் ஆட்சி செய்ய முடியாது. ஓராண்டுப் பாராளுமன்றம் கூட்டப்படவில்லை என்ருல் வருடாந்திரப் படைச் சட்டம் காலாவதியாய் விடும்; படைச் சட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்காமல் படைகளை வைத்துப் பராமரிப்பது சட்ட விரோதமான செயலாகும். எனவே பாராளுமன்றத்தைக் கூட்டாமலிருப்பது சட்டத்தை மீறிய செயலன்று என்ருலும், அதன் இசைவில்லாமல் படைகளை வைத்திருப்பது சட்டத்தை மீறிய செயலாகும். அதே போலத் தான் ஒவ்வொரு ஆண்டும் வரி வசூல் செய்யவும், வசூலிக்கப்பட்ட வரிப் பணத்தைச் செலவு செய்யவும் பாராளுமன்றத்தின்

இணக்கம் தேவை; அதன் ஒப்புதல் இல்லாமல் வரவு செலவு செய்வது என்பது சட்ட விரோதமான செயலாகும். எனவே பாராளுமன்றத்தைக் கூட்டாதது சட்டத்தை மீறிய செயலன்று என்றாலும், அதன் இசைவின்றி வரவு செலவு செய்வது சட்டத்தை மீறிய செயலாகும். இக்காரணம் பற்றிதான் மரபுகள் சட்டங்களாக பாவிக்கப்படுகின்றன.

3. சட்டங்களைக் கடைப்பிடிப்பது போல மரபுகளையும் கடைப்பிடித்தால்தான், அரசு எனும் இயந்திரம் கடல்வழிச் செல்லும் கப்பல்போலத் தங்கு தடையின்றி இயங்க முடியும் என்ற உண்மையை அரசாங்கங்கள் உணர்கின்றன. பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்த அமைச்சர்கள் தொடர்ந்து பதவியில் நீடிப்பதென்பதோ, சாதாரணப் பிரபுக்களும் சட்டப் பிரபுக்களோடு நீதி நிர்வாகம் செய்வதென்பதோ அரசாங்கத்தில் பல சிக்கல்களை உண்டாக்கும் என்பதை உணரும் அரசாங்கம், அச் சிக்கல்களைத் தவிர்க்க மரபுகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

வழக்காறுகள் மரபுகளினால் ஏற்படும் விளைவுகள்

வழக்காறுகளும் மரபுகளும் அரசியலமைப்புகள் இயங்கும் விதத்தைப் பல வழிகளில் பாதிக்கின்றன. முதலாவதாக, இவைகள் அரசியலமைப்பின் சில பகுதிகளைப் பயனற்றுப் போகச் செய்கின்றன. உதாரணமாக பிரிட்டன், நார்வே, சுவீடன், ஹாலந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளில் சட்டபூர்வமாக மன்னர்களுக்குரிய ரத்து (Veto) அதிகாரம், மரபுகளின் வலிமையால் பயன்படுத்தப்படாமையால் இப்பொழுது வழக்கிலில்லை. பிரான்சில் மூன்றாவது குடியரசில் (1875) குடியரசு தலைவருக்கு அளிக்கப்பட்ட கீழ்ச்சபையைக் கலைக்குமதிகாரம் அறுபத்தைந் தாண்டுக் காலத்தில் ஒரே ஒரு முறையே பயன்படுத்தப்பட்டது. குடியரசு தலைவர் இவ்வதிகாரத்தை ஜனநாயக ஆட்சிக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்ற அச்சம் மக்கள் மனத்தில் தோன்றியதால், இவ்வதிகாரப் பிரயோகத்திற்கு எதிராகப் பொது மக்கள் கருத்து வளர்ந்து இவ்வதிகாரத்தை அவரிடமிருந்து பறித்துவிட்டது எனக் கூறலாம். அமெரிக்காவில் அரசியலமைப்புப்படி ஒருவரே குடியரசு தலைவராக எத்தனை தடவை வேண்டுமென்றாலும் திரும்பத் திரும்பத் தேர்ந்தெடுக்கப்படுவது பற்றித் தடை இல்லை என்றாலும் கூட, இரண்டு பருவத்திற்கு மேல் மூன்றாவது முறையாக மறு தேர்தலுக்கு யாரும் நிற்பதில்லை என்ற மரபு வளர்ந்தது. அமெரிக்க அரசியலமைப்புத் தோன்றிய நாளிலிருந்து 1940ஆம் ஆண்டுவரை எல்லாக் குடியரசு தலைவர்

களாலும் மதிக்கப்பட்டு வந்த இம்மரபானது, F. D. ரூஸ்வெல்ட்டால் (Roosevelt) கைவிடப்பட்டதை அடுத்து, இம்மரபை 1951ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றிவிட்டனர். அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட உரிமையானது மரபுகளின் வலிமையால் நூற்றைம்பது ஆண்டுகளாகப் பயனற்றதாய் இருந்தது இந்த உதாரணத்தால் விளங்கும்.

இரண்டாவதாக, அரசியலமைப்பால் ஒருவருக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்கள் மரபுகளால் வேறொருவருக்கு மாற்றப்படுகின்றன. உதாரணமாக பிரிட்டன் போன்ற நாடுகளில் அரசியே அமைச்சர்களை நியமிப்பதாக அறிவிக்கப்பட்டாலும், நடைமுறையில் முதலமைச்சரால் சிபாரிசு செய்யப்படுகிறவர்கள்தான் அமைச்சர்களாக நியமனம் பெறுகிறார்கள். அரசியின் அதிகாரங்கள் இங்கே முதலமைச்சருக்கு மாற்றப்படுவதைப் பார்க்கிறோம். அமெரிக்க அரசியலமைப்புப்படி குடியரசு தலைவர் தேர்தல் குழுவால் (Electoral College) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்தாலும் கூட, நடைமுறையில் அவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதைக் காண்கிறோம். தேர்தல் குழுவின் அதிகாரம் அங்கே வாக்காளர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, அரசியலமைப்பிலுள்ள குறைகளை நிரப்புகிற சாதனமாகவும் மரபுகள் இயங்குகின்றன. கனடாவில் கவர்னர்-ஜெனரல் யாரை வேண்டுமென்றாலும் அமைச்சராக நியமிக்கலாம் என்று சட்டம் கூறுகிறது. ஆனால் கனடாவிலுள்ள பத்து மாநிலங்களிலிருந்தும் அமைச்சர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதும், அமைச்சரவையில் ஆங்கில மொழி பேசுவோருக்கும் பிரெஞ்சு மொழி பேசுவோருக்கும் இடமளிக்கப்படவேண்டும் என்பதும், கியூபெக் (Quebec) மாநிலத்திற்கும் ஒன்டாரியோ (Ontario) மாநிலத்திற்கும் கூடுமானவரை ஒத்தப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதும், சட்டங்களில் கூறப்படாவிட்டாலும் கூட, மரபுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. அமெரிக்க அரசியலமைப்பு, கீழ்ச்சபை தனக்கொரு சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கும் என்று மாத்திரம் கூறுகிறதே தவிர அவருடைய பொறுப்புகளை விவரிக்கவில்லை. ஆனால் மரபுகள் அடிப்படையில் அவர் அச் சபையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராகவும், தன் கட்சிக் கொள்கைகளைச் சட்டங்களாக நிறைவேற்றிக் கொடுப்பதில் பெரும் ஈடுபாடுடையவராகவும் இருக்கிறார்.

6. சட்டத்தின் ஆட்சி
(The Rule of Law)

[சட்டத்தின் ஆட்சி : பொருள்—டைஸியின் விளக்கம் : (அ) மனம் போனபடி அரசாள முடியாது என்பது—(ஆ) சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது—(இ) அரசியலமைப்பு நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து பிறந்தது என்பது.]

சட்டத்தின் ஆட்சி: பொருள்

நீதியும், நேர்மையும், சட்டமும் ஒழுங்கும் காக்கப்படுகிற சம்பிரதாயத்தைச் சட்டத்தின் ஆட்சி என அழைக்கிறோம். அரசாங்கத்தின் எதேச்சாதிகாரத்துக்கு எல்லை வகுத்து, மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளித்து, சுதந்திரமான சூழ்நிலையில் எல்லோரும் வாழ வகை செய்யும் அரசியலமைப்பில் சட்டத்தின் ஆட்சி பரவி நிற்பதாகக் கொள்கிறோம். இச் சட்டத்தின் ஆட்சியே ஆங்கில அரசியலமைப்பின் தலைச்சிறந்த பண்பாக எண்ணப்படுகிறது; ஆங்கில அரசியலமைப்பைத் தழுவி எழுந்த அரசியலமைப்புகளிலும் இத் தன்மை நடுநாயகமாக இடம் பெறுகிறது. இதுவரை நாம் தெளிவற்ற நிலையில் மாத்திரம் தெரிந்து கொண்ட சட்டத்தின் ஆட்சி என்ற தத்துவத்தைப் பேராசிரியர் A. V. டைஸி அலசி ஆராய்ந்து அதற்குத் தெளிவான பொருள் விளக்கம் கண்டார்.

டைஸியின் விளக்கம்

முதலாவதாக, சட்டத்தை ஒருவன் மீறினான் என்று, எல்லோருக்கும் பொதுவான நீதிமன்றங்களில், எல்லோருக்கும் பொதுவான சட்ட முறைப்படி, ஐயம் திரிபற நிரூபிக்கப்பட்டால்தான், அவன் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவான். அவன் சட்டத்தினுடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குகிற வரையில் அவனுடைய உயிருக்கோ, உடலுக்கோ, உடமைகளுக்கோ யாராலும் ஊறு செய்ய முடியாது. பிரிட்டிஷ்

அரசியலமைப்பின் அடிக்கல்லாக விளங்கும் இப்பண்பு, மிகப் பழங் காலத்திலிருந்தே அங்கே பேணி வளர்க்கப்பட்டதென்பதை அவர்கள் வரலாறு உணர்த்துகிறது. நாகரிக நாடுகள் பின்பற்ற வேண்டிய இன்றியமையாத இவ்வியல்பானது பிரான்சில் புரட்சிக் காலம் வரை மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்தது. பிரான்சில் நடைபெற்ற தான்தோன்றித்தனமான ஆட்சிக்கு வால்ட்டேர் (Voltaire) அனுபவித்த இன்னல்களை உதாரணமாகக் காட்டலாம். புரட்சிக் கனலாய், அறிவுலக மேதையாய், கலைகளுக்கெல்லாம் கருவூலமாய்த் திகழ்ந்த வால்ட்டேர் 1717ஆம் ஆண்டிலும் 1725ஆம் ஆண்டிலும் அதிகாரவர்க்கத்தினரைப் பகைத்துக் கொண்ட ஒரே பாவத்திற்காக பாஸ்ட்டைல் (Bastille) சிறைச் சாலையில் வழக்கின்றி, விசாரணையின்றி, தீர்ப்பின்றி, அடைக்கப் பட்டார் என்பதே, பிரான்சில் எதேச்சாதிகார ஆட்சி தலைவிரித் தாடியது என்பதற்குச் சான்றாக அமைகிறது. பாஸ்ட்டைல் சிறைச்சாலை தகர்த்தெறியப்பட்டதை நாகரிக நாடுகளெல்லாம் ஆரவாரத்தோடு வரவேற்றனவே, அது ஏன்? பாஸ்ட்டைல் எதேச் சாதிகாரத்தின் புறச் சின்னமாய் இருந்ததுதான்! ஆனால் இங்கி லாந்தில் எதேச்சாதிகாரச் சக்திகளுக்கு எதிர்ப்புச் சக்திகள் எக்காலத்திலும் இருந்துவந்ததினால் சட்டத்தின் இறைமை வேரூன்றிவிட்டது.

இங்கிலாந்தில் எதேச்சாதிகாரத்திற்கு கடுகளவேனும் இட மில்லை என டைஸி நினைப்பது தவறு என்பதை W. I. ஜென்னிங்ஸ் (Jennings) எடுத்துக் காட்டுகிறார். கொலைக் குற்றம் சாட்டப் பட்டு விசாரிக்கப்படும் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை அளிப்பதோ அல்லது விடுதலை அளிப்பதோ அரசின் கையில் இருக் கிறது. வெளி நாட்டவர் இங்கிலாந்தின் குடியுரிமை (Citizen-ship) வேண்டுமென விரும்பிக் கேட்கும்பொழுது, அதைக் கொடுக்கவோ மறுக்கவோ அரசுக்கு அதிகாரமுண்டு. பொது நலனுக்கெனக் காரணம் காட்டி ஒருவரின் சொத்துக்களை எடுத்துக் கொள்ளவோ, சொந்த வேலையை விட்டுவிட்டு ஜூரராக (Juror) பணியாற்ற வேண்டுமெனக் கேட்கவோ அரசுக்கு அதிகாரமுண்டு. மேலும் சட்டத்தின் இறைமை என்பது சிறப்பான பண்புதான்; ஆனால் சட்டமன்றங்கள் தவறான சட்டங்களை இயற்றுமானால், மக்களெல்லாம் அவ்வகைச் சட்டங்களால் அல்லலுற மாட்டார் களா? ஆங்கிலப் பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கு வரம் பில்லை என்பதும், அது தவறான சட்டங்களை இயற்றினால் அதைத் தடுத்து நிறுத்த யாருமில்லை என்பதும் உணரவேண்டிய உண்மைகள்.

இரண்டாவதாக, சட்டத்துக்கு மேலானவர் யாருமில்லை என்பதும், சட்டத்தின் முன்னர் எல்லோரும் சமம் என்பதும் இங்கிலாந்தில் வலியுறுத்தப்படுகிறது. சாதாரண குடிமக்கள் சட்டத்துக்கு அடிபணிவது எவ்வளவு அவசியமோ அதேபோல அரசாங்க அதிகாரிகளும் சட்டத்துக்கு அடிபணிவது அவசியமென எண்ணப்படுகிறது. சாதாரண மக்களுள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சட்டப்படி நடப்பதுதான் முறை எனக் கருதப்படுவதுபோல, அரசாங்க அதிகாரிகளுள்ளும் மேலதிகாரி, கீழதிகாரி என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சட்டப்படி நடப்பதுதான் முறை என எண்ணப்படுகிறது. 1763-ல் இங்கிலாந்தின் உள்துறை அமைச்சர் ஹாலிபாக்சும் (Halifax) அவர் உதவி அமைச்சர் உட்டும் (Wood), தங்களுடைய அதிகார வரம்புமீறி வில்க்ஸ் (Wilkes) என்னும் பத்திரிகை ஆசிரியரையும் அவருடைய கூட்டாளிகளையும் சிறையிலடைத்ததற்காகத் தொடரப்பட்ட வழக்கில், அவ்வமைச்சர்கள் அத்துமீறிய அதிகாரத்தைப் பிரயோகித்ததற்காக வில்க்ஸுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளில் அரசாங்க அலுவலர்கள் சாதாரணச் சட்டங்களுக்குக் கட்டுப்படுவதினின்றும் விலக்களிக்கப்பட்டு, ஆட்சித்துறைச் சட்டத்திற்கு (Administrative Law) மட்டுமே கட்டுப்பட்டவர்களாய் இருக்கின்றனர். சாதாரண நீதிமன்றங்களால் விசாரிக்கப்படுவதினின்றும் அவர்கள் விலக்களிக்கப்பட்டு, ஆட்சித்துறை நீதிமன்றங்களால் (Administrative Tribunals) மட்டுமே விசாரிக்கப்படக் கூடியவர்களாய் இருக்கின்றனர். நாட்டு மக்களை அரசின் அலுவலர் என்றும் சாதாரணக் குடிமக்கள் என்றும் பிரித்து, முன்னவர்க்கு ஒரு சட்டம் என்றும், பின்னவர்க்கு வேறொரு சட்டம் என்றும் தனித்தனியான சட்டத் தொகுப்புகளைப் பின்பற்றுவது 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்' என்ற கோட்பாட்டுக்குப் புறம்பானதாகத் தெரிகிறது.

இங்கிலாந்தில் சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என டைஸி நினைப்பது தவறு என்பதை ஜென்னிங்ஸ் விளக்குகிறார். அரசாங்க அலுவலராக வேலை செய்கின்றவர்க்கு, சாதாரணக் குடிமக்களுக்கில்லாத சில தனிப் பொறுப்புகள் இருக்கின்ற காரணத்தால், சாதாரணக் குடிமக்களுக்கில்லாத சில தனி உரிமைகளும் இருக்கின்றன. சுகாதார அதிகாரியானவர் ஒருவர் வீட்டில் கழிவுநீர்க் கால்வாய் கட்டப்பட்டிருக்கிறதா எனக் கண்காணிக்க முடியும்; வருமானவரி அதிகாரியானவர் ஒருவரை வரவு செலவு கணக்குகளைக் காட்டச் சொல்லிக் கட்டாயப்படுத்த முடியும்; சுங்க

இலாகா அதிகாரியானவர் ஒருவர் வீட்டில் கள்ளக் கடத்தல் பண்டங்கள் பதுக்கப்பட்டிருக்கின்றனவா எனச் சோதனை செய்ய முடியும்; இதையெல்லாம் அக்கம்பக்கத்திலுள்ள சாதாரணக் குடிமக்கள் செய்ய முடியுமா என்ன?

மேலும், இங்கிலாந்தில் ஆட்சித்துறையினரும் ஓரளவுக்கு நீதி நிர்வாகம் செய்வதை இன்று நாம் பார்க்கிறோம். தொழிற் புரட்சியின் விளைவாகவும், நலம் நாடும் அரசை நிறுவ வேண்டும் என்ற விழைவின் விளைவாகவும், பாராளுமன்றம் சமூக நலச் சட்டங்கள் பலவற்றை இயற்றுகிறது. பொதுச் சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி போன்றவை குறித்து எழும் வழக்குகளைப் பொதுவாக ஆட்சித்துறை அதிகாரிகளே விசாரித்து முடிவு செய்கின்றனர். இது போன்ற வழக்குகளை விசாரிப்பதற்கு நீதிபதிகளுக்குள்ள தகுதிகளைவிட ஆட்சித்துறை அதிகாரிகளுக்குள்ள தகுதிகள் மேலானவையாய்க் கருதப்படுகின்றன.

மூன்றாவதாக, இங்கிலாந்தில் அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளெல்லாம் நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து பிறப்பனவாக டைஸி கருதுகிறார். மக்களின் உரிமைகள் போன்ற அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளெல்லாம், நீதிபதிகளால் வழக்குகளுக்குத் தீர்ப்பளிக்கின்ற வகையில் நிர்ணயம் செய்யப்பட்டனவாம். எழுதப்பெற்ற அரசியலமைப்புகள் உள்ள நாடுகளில் அந்த அரசியலமைப்புகளே மக்கள் உரிமைகளின் பிறப்பிடமாய் அமைகின்றன. ஆனால் எழுதப்பெறாத அரசியலமைப்பைப் பெற்றிருக்கும் இங்கிலாந்தில், நீதிபதிகள், மக்களுரிமையைப் பற்றிய வழக்குகளை விசாரிக்கையில், பழங்காலச் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டே முடிவு கூறுகிறார்கள். மக்கள் உரிமைகளை உறுதிப்படுத்தும் அவர்கள் தீர்ப்பே பிரிட்டிஷ் அரசியலமைப்பின் அடிப்படையாக அமைகிறது. ஆங்கில அரசியலமைப்பை 'நீதிபதிகளால் ஆக்கப்பட்ட அரசியலமைப்பு' (Judge-made Constitution) என டைஸி அழைக்கிறார்.

இவ்விளக்கம் உண்மையன்று என்பது ஜென்னிங்ஸின் கருத்தாகும். அடிப்படை உரிமைகள் நீதித் தீர்ப்புகளிலிருந்து தோன்றியிருக்கலாம். ஆனால் அரசியலமைப்பின் மற்ற அம்சங்களுக்கும் நீதித் தீர்ப்புகளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. பாராளுமன்றத்தின் இறைமை, நீதித்துறையின் சுதந்திரம், வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பேரரசு காமன்வெல்த்தாக மாறியது ஆகிய பண்புகளும் அரசியலமைப்பின் அடிப்படைகள்தான், ஆனால் இவைகளெல்லாம் நீதிமன்றங்களால் தோற்று

விக்கப்பட்டவை என யாரும் எண்ண முடியாது. அரசியலமைப் பென்றால் அதில் மக்களின் உரிமைகள் மாத்திரம்தான் உண்டு என எண்ணுவோர்தான் டைஸியின் விளக்கத்தை விரும்பி ஏற்பர். பாராளுமன்றச் சட்டங்களுக்குத்தான் அரசியலமைப்பின் பெரும் பான்மையான அடிப்படைப் பண்புகளை ஆக்கிக் கொடுத்த பெருமை உண்டு என்பது ஜென்னிங்ஸின் கருத்து. அரசரின் எதேச் சாதிகாரத்துக்கு வரம்பு உண்டாக்கி (உரிமைகள் மசோதா, 1680), வாரிசுரிமையை நிர்ணயம் செய்து (அரசுரிமை நிர்ணயச் சட்டம், 1701), ஸ்காட்லாந்தையும் அயர்லாந்தையும் இங்கிலாந் தோடு இணைத்து (இணைப்புச் சட்டங்கள், 1707, 1801), பொது மக்கள் சபையை ஜனநாயகச் சபையாக மாற்றி (பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள், 1832, 1867, 1872, 1884, 1885, 1918), பிரபுக்கள் சபையிடமிருந்து பொதுமக்கள் சபைக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுத்து (பாராளுமன்றச் சட்டங்கள் 1911, 1949), முதலமைச்சரோடு எதிர்கட்சித் தலைவருக்கும் ஊதியம் அளித்து (அரசு அமைச்சர்கள் சட்டம், 1937), அரசிய லமைப்பை வளர்த்ததே பாராளுமன்றந்தான் என்பது உலகறிந்த செய்தியாயிற்றே!

7. ஆட்சித்துறைச் சட்டம்

(The Administrative Law)

[ஆட்சித்துறைச் சட்டம்: பொருள் — ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைகள்—முரண்பாடு நீக்க நீதிமன்றம்—ஆட்சித் துறைச் சட்டம் எவ்வாறு உயர்ந்தது என்பது—இரு சட்ட முறை களுக்கிடையே உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்—எந்தச் சட்ட முறை சிறந்தது ?]

ஆட்சித்துறைச் சட்டம்: பொருள்

பிரான்சு, பெல்ஜியம் போன்ற ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் ஆட்சித்துறைச் சட்டம் எனப்படும் தனித்தன்மை வாய்ந்ததொரு சட்டம் பின்பற்றப்படுகிறது. இங்கிலாந்தில் நிலவும் சட்டத்தின் ஆட்சியிலிருந்தும் அது மாறுபட்டு இருப்ப தோடல்லாமல், அதற்குப் புறம்பானதாகவும் இருக்கிறது எனக் கூறலாம். 'ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அதிகாரிகளுக்கும், ஆளப்படுகிற குடிமக்களுக்குமிடையே உள்ள உறவுகளை நிர்ண யிக்கிற விதிகளின் தொகுப்பே ஆட்சித்துறைச் சட்டமாகும்' என்பது A. V. டைஸியின் கருத்து. 'ஆட்சித்துறை நிறுவனங் களின் அமைப்பையும், அதிகாரங்களையும், கடமைகளையும் விவரிக்கும் விதிகளை ஆட்சித்துறைச் சட்டம் எனக் கூறலாம்' என்பது W. I. ஜென்னிங்ஸ், H. பைனர் (Finer) போன்றோரின் கருத்தாகும்.

ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைகள்

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு பேரரசர் நெப்போலியன் (Nepolcon) காலத்திலிருந்து இந்த ஆட்சித்துறைச் சட்டம் என்னும் தத்துவம் போற்றி வளர்க்கப்பட்டு நாளுக்குநாள் வலுவடைந்தது. இரு முக்கிய அடிப்படைகளை ஆதாரமாகக்கொண்டு இந்த ஆட்சித் துறைச் சட்டம் அங்கே வளர்ந்ததாகக் கூறப்படுகிறது. அரசும், அரசின் ஊழியர்களும், சாதாரணக் குடிமக்களுக்கெதிராகத் தனிப் பட்ட உரிமைகள் உடையோர் என்பது முதலாவது அடிப்படை

யாகும். சாதாரணக் குடிமக்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு மிடையே உள்ள தொடர்புகளை நிர்ணயிக்கின்ற விதிகள், சாதாரணக் குடிமக்கள் ஒருவர்க்கொருவர் இடையே உள்ள தொடர்புகளை நிர்ணயிக்கின்ற விதிகளைக் காட்டிலும் வேறானவை. சாதாரணக் குடிமக்களுக்கிடையே நிலவ வேண்டிய தொடர்பு களைக் கூறும் சட்டத்தைச் சாதாரணச் சட்டம் என்றும் அவர்களுக் கிடையே எழும் வழக்குகளை விசாரிக்கின்ற நீதிமன்றங்களை சாதாரண நீதிமன்றங்கள் என்றும், குடிமக்களுக்கும் அரசுக்கு மிடையே நிலவ வேண்டிய தொடர்புகளைக் கூறும் சட்டத்தை ஆட்சித்துறைச் சட்டம் என்றும் அவர்களுக்கிடையே எழும் வழக்குகளை விசாரிக்கின்ற நீதிமன்றங்களை ஆட்சித்துறை நீதிமன் றங்கள் என்றும் பிரான்சில் அழைக்கின்றனர்.

அதிகாரப் பிரிவினை என்ற கொள்கைப்படி அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்பது இரண்டாவது அடிப்படையாகும். சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறை களும் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளாதிருக்க வேண்டு மென்ற கொள்கைப்படி, ஆட்சித்துறை அதிகாரிகள் நீதித்துறை யின் ஆணைகளுக்கு அப்பாற்பட்டவர்களாய்க் கருதப்படுகின்றனர். அரசாங்க ஊழியர்கள், தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுகிற காரியங்களில் ஈடுபடும்பொழுது ஏற்படும் தவறுகளுக்காக, அவர்களை நீதிமன்றங்கள் தங்கள் முன் அழைத்து தண்டிக்க முடியாது. அரசாங்க ஊழியர்களை விசாரித்துத் தண்டிக்கக்கூடிய அதிகாரம் அரசாங்க மேலதிகாரிகளுக்கு மாத்திரமே உண்டு. புரட்சிக் காலத்தில் நீதித்துறையானது ஆட்சித்துறையினர் கொண்டுவந்த சீர்திருத்தங்களுக்குத் தடையாக இருந்ததால், ஆட்சித் துறையினரை நீதித்துறையின் அதிகார எல்லைக்கு அப்பால் வைப்பது அவசியம் என உணரப்பட்டது.

முரண்பாடு நீக்க நீதிமன்றம் (Tribunals des Conflit)

அரசாங்க ஊழியர் ஒருவர் குற்றம் செய்வாரானால் அது அவர் தனிமனிதர் என்ற முறையில் செய்த குற்றமா (Personal fault), அல்லது அரசின் பிரதிநிதி என்ற முறையில் செய்த குற்றமா (Service fault) எனக் கண்டறிந்து முந்திய வகைக் குற்றமானால் சாதாரண நீதிமன்றங்களிலும், பிந்திய வகைக் குற்றமானால் ஆட்சித்துறை நீதிமன்றங்களிலும் விசாரிப்பதுதான் பிரான்சில் பின்பற்றப்படும் முறையாகும். சாதாரண நீதிமன்றங்களில் 'கேசேசன் நீதிமன்றம்' (Cour de Cassation) என்பது உயர் நீதி மன்றமாகவும், ஆட்சித்துறை நீதிமன்றங்களில் 'கான்சல் டி எடாட்' (Conseil de Etat) நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகவும் இயங்குகின்றன. ஒரு வழக்கு, சாதாரண நீதிமன்றங்களில்

விசாரிக்கப்பட வேண்டுமா, ஆட்சித்துறை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டுமா என்பதை 'முரண்பாடு நீக்க நீதி மன்றம்' (Tribunal des Conflits) என்ற ஒரு நிறுவனம் முடிவு செய்யும். ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் இந் நீதி மன்றத்தில் மூவர் கேசேசன் நீதிமன்ற நீதிபதிகளாலும், மூவர் கான்சல் டி எடாட் நீதிமன்ற நீதிபதிகளாலும், மேலும் இருவர் மேல்கண்ட அறுவர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நீதி அமைச்சர் ஒன்பதாவது உறுப்பினராக இருந்து இம் மன்றத் துக்குத் தலைமை தாங்குவார்.

ஆட்சித்துறைச் சட்டம் எவ்வாறு உயர்ந்தது என்பது

பிரான்சில் அரசாங்க ஊழியர்களைச் சாதாரண நீதிமன்றங் களில் விசாரிக்கக்கூடாது, ஆட்சித்துறை நீதிமன்றங்களில்தான் விசாரிக்க வேண்டும் என்பது அரசாங்க ஊழியர்களுக்குத் தனிப் பட்ட உரிமைகளும், சலுகைகளும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தோன்றும். ஆனால் இவ்வேற்பாட்டால் அரசின் ஊழியர் களுக்குக் கிட்டும் நலன்களைவிடக் குடிமக்களுக்குக் கிட்டும் நலன்களே அதிகம் என எண்ணப்படுகிறது. அரசாங்க ஊழியர் களின் கொடுமைகளுக்குக் குடிமக்கள் இலக்காகக் கூடாது என்ற எண்ணத்தோடும், குடிமக்களுக்கு அவர்களுடைய குற்றங்களி லிருந்து தகுந்த பாதுகாப்புத் தரவேண்டும் என்ற நோக்கத் தோடும்தான் ஆட்சித்துறை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அத்துமீறி நடந்துவிட்ட அதிகாரி ஒருவர், அவருடைய செயலால் பாதிக்கப்படும் குடிமகனுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால், பிரான்சில் அந்த இழப்பீட்டை அரசாங்கமே கொடுக்குமென்பது மக்கள் உரிமைகளுக்கு சட்ட பூர்வமாகத் தரப்படும் உத்தரவாதத்தைக் காட்டுகிறது. மேலும், ஆட்சித்துறை நீதிமன்றங்களில், சாதாரண நீதிமன் றங்களைவிட, குறைந்த செலவில் வழக்காட முடியும் என்பதும், அங்கே பின்பற்றப்படும் முறைகள் எளிய முறைகளாயிருக் கின்றன என்பதும், அங்கே வழக்குகள் விரைவாக விசாரிக் கப்படுகின்றன என்பதும் ஆட்சித்துறை நீதிமன்றங்கள் ஏன் மக்களால் விரும்பப்படுகின்றன என்பதற்குக் காரணங்களாய் அமைகின்றன.

இரு சட்ட முறைகளுக்குமிடையே உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமை களும்

சட்டத்தின் ஆட்சியையும் ஆட்சித்துறைச் சட்டத்தையும் ஒப்பிட்டு அவைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்று மைகளை டைஸி குறிப்பிடுகிறார். 1. இன்று சட்டத்தின் ஆட்சி முழுமையாக நிலவுவதாகக் கூறப்படும் இங்கிலாந்தில் 16,

17ஆம் நூற்றுண்டுகளில் ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப் படைக் கொள்கைகளே செல்வாக்குப் பெற்றிருந்தன. காலப் போக்கில் அரசரின் எதேச்சாதிகாரம் கட்டுப்படுத்தப்படவே, ஆட்சித்துறை பற்றிய அடிப்படைக் கொள்கைகளும் கைவிடப் பட்டன. 2. இவ்விரு சட்ட வகைகளும் நீதிபதிகளின் தீர்ப்பு களின் விளைவாக வளர்ந்தனவாகக் கருதப்படுகின்றன. இங்கி லாந்தில் பொதுச் சட்டமானது (Common Law) எங்ஙனம் தொகுக்கப்படாமல் இருக்கிறதோ, அங்ஙனமே பிரான்சில் ஆட்சித்துறைச் சட்டமும் தொகுக்கப்படாமல் இருக்கிறது. நீதிபதிகளின் முன் தீர்ப்புகளே (Precedents) இவ்விரு சட்ட முறை களும் வளரப் பெரிதும் ஆதாரமாய் இருந்திருக்கின்றன. 3. இரு சட்டங்களும் தொகுக்கப்படாமல் இருக்கிற காரணத்தால் சட்டங்களை விளக்குகிற வகையில் இரு நாடுகளிலுமே ஏராளமான சட்ட உரை நூல்கள் (Commentaries) எழுதப்பட்டிருக்கின்றன. 4. இங்கிலாந்தில் ஆரம்ப காலத்தில் எப்படி மன்னர் மன்றம் (King's Council), நிர்வாகம், நீதி ஆகிய இரு துறைகளிலும் செல் வாக்குப் பெற்றிருந்ததோ, அதேபோல பிரான்சிலும் கான்சல் டி எடாட் மன்றமும் இரு துறைகளிலும் செல்வாக்குப் பெற்று விளங்கியது. மன்னர் மன்றம் எப்படித் தொடக்க காலத்தில் தீர்ப்புக் கூறும் மன்றமாயில்லாமல் ஆலோசனை கூறும் மன்றமாய் மட்டும் இருந்ததோ, அதே மாதிரியே கான்சல் டி எடாட் மன்றமும் இயங்கியது. 5. இரு நாடுகளிலுமே அதனதன் சட்ட முறைகள் இயற்கையாக வளர்ந்தனவாகத் தெரிகிறதேயொழிய, மனித முயற்சிகளால் திட்டமிட்டு வளர்க்கப்பட்டனவாகத் தெரியவில்லை.

மேற்கூறப்பட்ட ஒற்றுமைகளில் பல இவ்விரு சட்ட முறை களின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் காணப்படும் ஒருமைப் பாடுகளை உணர்த்துகின்றனவே யொழிய, இன்றைய நடை முறையில் ஒன்றை மற்றொன்று ஒத்திருக்கிறது என்பதைக் காட்ட வில்லை. இங்கிலாந்தில் எல்லோருக்கும் ஒரு சட்டம் என்று இருப் பதும், பிரான்சில் அரசாங்க அதிகாரிகளுக்கு ஒரு சட்டம் சாதாரணக் குடிமக்களுக்கு வேறொரு சட்டம் என்று இருப்பதும், இரு நாட்டு சட்ட முறைகளுக்கிடையே காணப்படும் அடிப்படை வேறுபாட்டைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. சட்டத்தின் ஆட்சி நிலவும் இங்கிலாந்தில், அரசு ஊழியர்கள் தீங்கிழைத்ததாக மெய்ப்பிக்கப்பட்டு, அவர்கள் இழப்பீடு கொடுக்க வேண்டும் எனக் கட்டளை இடப்பட்டால், அந்தத் தொகையை அவர்கள் தங்கள் சொந்தச் சேமிப்பிலிருந்துதான் கொடுக்க வேண்டும். ஆனால்

பிரான்சிலோ அரசாங்க ஊழியர்கள் இழைத்த தீங்குக்கு ஈடாக அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை அரசே தன் கருவூலத்திலிருந்து ஈடு செய்யும்.

எந்தச் சட்ட முறை சிறந்தது?

சட்டத்தின் ஆட்சி, ஆட்சித்துறைச் சட்டம்—இவைகளில் எவை சிறந்தது என்ற வினவுக்கு விடையளிப்பது எளிதன்று. அரசியல் நிறுவனங்கள் செடி கொடிகள் போலவாகும். ஒரு நாட்டில் செழிப்பாக வளரும் தாவரம், இன்னொரு நாட்டிலும் அவ்வாறே வளர்வதில்லை என்பது நமக்குத் தெரிந்த செய்தியே. ஒவ்வொரு நாட்டின் பயிர்ப் பச்சைகள் அதனதன் நிலவளம், நீர்வளம், தட்பவெப்ப நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இடத்துக்கு இடம் மாறுபடுவது போல, நாடுகளின் அரசியல் நிறுவனங்களும், சட்ட திட்டங்களும் மாறுபட்டுக் காணப்படுவது இயற்கையே. மக்களின் சுதந்திரத்துக்குச் சட்டத்தின் ஆட்சி மூலமாகக் காப்பளிப்பது இங்கிலாந்தில் பின்பற்றப்படும் வழியாகும். பிரான்சில் அதே காப்பினை ஆட்சி முறைச் சட்டத்தின் வழியாக மக்கள் பெறுகின்றனர். ஒவ்வொரு முறையிலும், அதன் இயல்புக்கு உரிய குணங்களும் குறைகளும் காணப்படுகின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை.

படிக்கவேண்டிய நூல்கள்

(1)	A. Appadorai	The Substance of Politics (Oxford)
(2)	A. V. Dicey	Introduction to the Study of the Law of the Constitution (Macmillan)
(3)	C. J. Friedrich	Constitutional Government and Democracy (Oxford)
(4)	J. W. Garner	Political Science and Government (American Book Company)
(5)	Herman Finer	The Theory and Practice of Modern Government (Methuen)
(6)	W. I. Jennings	The Law and the Constitution (University of London Press)
(7)	C. F. Strong	Modern Political Constitutions (Sidgwick & Jackson)
(8)	K. C. Wheare	Federal Government (Oxford)
(9)	K. C. Wheare	Modern Constitutions (Oxford)

II. பிரிட்டிஷ் அரசியலமைப்பு

(The British Constitution)

1. அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

(Characteristic features of the Constitution)

[முன்னுரை — பாராளுமன்றத்தின் இறைமை — எழுதப்பெருத அரசியலமைப்பு—வழக்காறுகளும் மரபுகளும்—நெகிழும் அரசியலமைப்பு—வளர்ச்சியின் விளைவு—சட்டத்திற்கும் நடைமுறைக்குமிடையே உள்ள வேறுபாடு—அரசியல் கட்சிகள்—சட்டத்தின் ஆட்சி.]

முன்னுரை

பண்டைக் காலத்தில் உரோமானியரின் ஆட்சிமுறை உலகெலாம் பரவியிருந்ததுபோல தற்காலத்தில் பிரிட்டிஷாரின் ஆட்சிமுறை உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து பரவியிருப்பதைப் பார்க்கிருேம். பிரிட்டிஷ் அரசியல் அனுபவங்களின் பயனை அனுபவிக்காத நாடு இன்று உலகில் எதுவுமில்லை எனக் கூறலாம். 'பிரிட்டிஷ் அரசியலமைப்பு அரசியலமைப்புகளின் தாய்; பிரிட்டிஷ் பாராளுமன்றம் பாராளுமன்றங்களின் தாய்' என்ற அழகான சொற்களில் மன்ருே (W. B. Munro) பிரிட்டன் ஆட்சித் துறையில் ஆற்றியிருக்கும் அருந்தொண்டினைப் புகழ்கிருர். பிரிட்டனிடமிருந்து சமுதாய, பொருளாதார, சமயத் துறைகளில் பெரிதும் வேறுபட்டிருக்கும் நாடுகள்கூட பிரிட்டிஷ் அரசியல் கோட்பாடுகளைப் பின்பற்றுவது அவற்றின் உயர்வை உணர்த்துகிறது. மேலும் இன்று உலகில் இயங்கும் அரசியலமைப்புகளில் பிரிட்டிஷ் அரசியலமைப்பே மிகப் பழமையானதாய் இருப்பது அதன் பெருமைக்கு மற்ருெரு காரணமாய் அமைகிறது. ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஆங்கிலோ—சாக்சானியர்களால் (Anglo-Saxons) தோற்றுவிக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசியலமைப்பின் தொன்மையை விஞ்சும் அரசியலமைப்பு உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லை. ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக ஒரே அரசியலமைப்பு இயங்கி வருவது இதுவரை வரலாறு காணுத விந்தையாகும்.

பாராளுமன்றத்தின் இறைமை (Parliamentary Sovereignty)

பிரிட்டிஷ் பாராளுமன்றம் இறைமை பொருந்திய பாராளு மன்றமாகும். உலகிலேயே அளவற்ற அதிகாரங்களையுடைய பாராளுமன்றம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஒன்றேயாகும். பாராளுமன்றத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட செயல்கள் என்பன எதுவுமில்லை; அதனால் அரசாங்கத்தில் எதையும் ஆக்கவும் அழிக்கவும் முடியும். எதைப்பற்றி வேண்டுமானாலும் சட்டங்களை இயற்றவோ, மாற்றவோ, நீக்கவோ அதற்கு உரிமையுண்டு. ஆணைப் பெண்ணாகவோ, பெண்ணை ஆணாகவோ மாற்ற மட்டும் அதனால் இயலாது என வேடிக்கையாகக் கூறுவதுண்டு; இக் கூற்றைக்கூட மனித சக்தியின் எல்லையைக் காட்டுவதாகக் கருதலாமே ஒழிய, பாராளுமன்றத்தின் எல்லையைக் காட்டுவதாகக் கருதுவதற்கில்லை. முடியரசாக இருக்கும் இங்கிலாந்தை ஒரு குடியரசாகக்கூடப் பாராளுமன்றம் மாற்றமுடியும் என்று பேஜ்ஹாட் (Bagehot) குறிப்பிடுகிறார். நாட்டிலுள்ள எந்த நீதி மன்றமும் அதன் சட்டங்களைச் செல்லாதவை என அறிவிக்க முடியாது. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில், பாராளு மன்றத்தின் அதிகாரங்கள் அரசியலமைப்பால் வரையறுக்கப் பட்டிருக்கின்றன என்பதும், அது மக்களுக்கு உத்தரவாதமளிக்கப் பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளைப் பறிக்க முடியாது என்பதும், அதன் சட்டங்கள் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்படலாம் என்பதும், அப் பாராளுமன்றங்களின்மீதுள்ள கட்டுப்பாடுகளை அறிவுறுத்துகின்றன. இதுபோன்ற எந்தவிதமான தடைகளாலும் கட்டுப்படுத்தப்படாமல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இறைமை யோடு இயங்கும் தன்மையையே பிரிட்டிஷ் அரசியலமைப்பின் தலைசிறந்த பண்பாக A. V. டைஸி கருதுகிறார்.

எழுதப்பெறாத அரசியலமைப்பு

தற்கால அரசியலமைப்புகளில் பிரிட்டிஷ் அரசியலமைப்பு மட்டுமே எழுதப்பெறாத அரசியலமைப்பாய் திகழ்கிறது. முன்னூறு ஆண்டுகட்கு முன்பு பிரிட்டனில் எழுதப்பெற்ற அரசிய லமைப்பு ஒன்று ஆலிவர் கிராம்வெல்லால் (Oliver Cromwell) தோற்றுவிக்கப்பட்டபோதிலும் அது அவரோடு அழிந்துவிட்டது. அமெரிக்காவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏராளமான நாடுகள் தங்கள் அரசியலமைப்புகளை எழுத்துருவில் வரைந்துகொண்ட போதிலும், பிரிட்டன் மட்டும் இன்றும் எழுதப்பெறாத அரசியல மைப்பைப் பின்பற்றும் தனிமரமாய் நிற்கின்றது. ஆனால் பிரிட்டிஷ் அரசியலமைப்பை முற்றிலும் எழுதப்பெறாத அரசியலமைப்பு எனக் கருதுவது சரியன்று, ஏனெனில்; உரிமைப்பட்டயம், 1215,

உரிமைகள் மசோதா, 1689; பாராளுமன்றச் சட்டங்கள், 1911, 1949; வெஸ்ட் மினிஸ்டர் சட்டம், 1931; போன்ற எத்தனேயோ எழுதப்பெற்ற சட்டங்கள் அரசாங்கத்தால் பின்பற்றப்படு கின்றன. பிரிட்டிஷ் அரசியலமைப்பை எழுதப்பெருத அரசிய லமைப்பு எனக் கூறுவது ஓரளவுக்கு உண்மையென்ருலும், அதை அரசப் பட்டயங்கள் (Royal Charters), சட்டங்கள், நீதித் தீர்ப்புகள், வழக்காறுகள், மரபுகள் ஆகியவற்றின் தொகுப்பு எனக் கூறுவதே பொருத்தமாகும். பிரிட்டனில் அமெரிக்க அரசிய லமைப்புப் போன்ற எழுதப்பெற்ற அரசியலமைப்பு இல்லே என்ற காரணத்தால், டி டாக்வில் (de Tocqueville) போன்று நாமும் அந்நாட்டில் அரசியலமைப்பு என்பதே இல்லே எனக் கூறுவோ மாஞல் அரசியலமைப்பின் உண்மையான பொருளே உணர்ந்தவர் களாகக் கருதப்படமாட்டோம்.

வழக்காறுகளும் மரபுகளும்

பிரிட்டிஷ் அரசியலமைப்பு எழுதப்பெருத அரசியலமைப்பாக இருப்பதால், அங்கே கணக்கற்ற வழக்காறுகளும் மரபுகளும் பின்பற்றப்படுவது இயல்பே. அது எழுதப்பெருத அரசியலமைப் பாக இருப்பதோடல்லாமல், மிகத் தொன்மையான அரசிய லமைப்பாகவும் இருப்பதால், வேறெந்த நாட்டிலும் காணப் படாத அளவுக்கு அதிகப்படியான வழக்காறுகளேயும் மரபுகளேயும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசியலமைப்பில் வழக்காறுகளாலும் மரபுகளாலும் பாதிக்கப்படாத நிறுவனமே இல்லே எனக் கூறலாம். அரசியார் பாராளுமன்ற மசோதாக் களுக்குத் தன் இசைவை மறுக்காமல் அளிப்பதற்கும், அமைச்சர் களின் அறிவுரையைத் தட்டாமல் ஏற்பதற்கும், ஆண்டுக்கு ஒரு முறையாவது பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் காரணமாய் அமைகிறவை சட்டங்களல்ல, வழக்காறுகளே என்பது அறியத் தக்கது. அரசாங்கத்தின் உயிர்நாடியாய் விளங்கும் கேபினட்டின் அமைப்பு, உரிமைகள், அதிகாரங்கள் ஆகியவையெல்லாம் மரபு களால்தான் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. பாராளுமன்றத்தில் மசோதாக்கள் மும்முறை வாசிக்கப்படுவதும், சபாநாயகர் நடுநிலே தவருது நடந்துகொள்வதும், பிரபுக்கள் சபை நீதிமன்ற மாகச் செயல்படும்பொழுது சட்டப் பிரபுக்கள் மட்டுமே நீதிபதி களாக அமர்வதும் நெடு நாளேய மரபுகளாகும். வழக்காறுகளும் மரபுகளும் தவருமல் பின்பற்றப்படவேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லே என்ருலும், சட்டங்கள் எவ்வளவு ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவோ, அதே போன்று வழக்காறுகளும் மரபுகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

3734

நெகிழும் அரசியலமைப்பு

நெகிழும் அரசியலமைப்புக்கு பிரிட்டிஷ் அரசியலமைப்புச் சிறந்த உதாரணமாய் விளங்குகிறது. பிரிட்டனில் அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களும் சாதாரணச் சட்டங்களும் பாராளுமன்றத்தாலேயே எந்தவிதமான வேறுபாடின்றி ஒரே முறையைப் பின்பற்றியே ஆக்கப்படுகின்றன. அரசியின் அதிகாரங்களை மாற்றும் அரசியலமைப்புத் திருத்தச் சட்டமும், வன விலங்குகளுக்குப் பாதுகாப்பளிக்கும் சாதாரணச் சட்டமும் ஒரே முறையைத் தழுவியே இயற்றப்படுகின்றன. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் சாதாரணச் சட்டங்களைவிட முக்கியமானவையாய் கருதப்படுகின்றன என்பதும் அவைகள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றி ஆக்கப்படுகின்றன என்பதும் அறியத்தக்கது. பிரிட்டிஷ் அரசியலமைப்பு முற்றிலும் நெகிழ்கின்ற அரசியலமைப்பாய் இருப்பதால்தான், காலம் மாற மாற அரசியலமைப்பும் மாறிக் கொண்டே வளரமுடிந்தது. வரம்பில்லா முடியாட்சியாய் தோன்றிய பிரிட்டன், தற்காலத்தில் ஒரு சிறந்த மக்கள் நாயக முடியரசாய் மலரத் துணை செய்தது அரசியலமைப்பின் நெகிழும் தன்மையே. அரசியலமைப்பை எளிதில் திருத்தலாம் என்றாலும் அதை அடிக்கடி திருத்துவதை பிரிட்டிஷ் மக்கள் விரும்புவதில்லை. பழமையில் பற்றுள்ள அவர்கள், தவிர்க்க முடியாத சமயங்களில் மட்டுமே அரசியலமைப்பைத் திருத்தி அமைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வளர்ச்சியின் விளைவு

அமெரிக்கா, பிரான்சு, ரஷ்யா போன்ற நாடுகளில் பெரும் புரட்சிகளின் விளைவாக அரசியலமைப்புகள் தோன்றின. ஆனால், இங்கிலாந்தின் நீண்ட வரலாற்றில், நாம் பெரும் புரட்சிகளைக் காண்பது அரிது. அதன் அரசியலமைப்பு ஆங்கிலோ - சாக்சானியர் காலத்திலிருந்து 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற முறையைத் தழுவிச் சிறிது சிறிதாக வளர்ந்ததொன்றாகும். அமெரிக்க அரசியலமைப்பு பிலடெல்பியா (Philadelphia) பேரவையால் ஆக்கப்பட்டது போன்று பிரிட்டிஷ் அரசியலமைப்பு எந்த அவையாலும் ஆக்கப்பட்டதன்று. இந்திய அரசியலமைப்பு 1950ஆம் ஆண்டில் தோன்றியதுபோல் பிரிட்டிஷ் அரசியலமைப்பு எந்தக் குறிப்பிட்ட ஆண்டிலும் தோன்றியதன்று. மற்ற அரசியலமைப்புகள் திட்டமிட்டு ஆக்கப்பட்டவை; ஆனால், பிரிட்டிஷ் அரசியலமைப்புத் தற்செயலாய் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் பயனாய் வளர்ந்ததொன்றாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிறுவ

...IYAPPA'S COLLEGE LIB...

ணங்கள் பலவும் பல்வேறு கால கட்டங்களில் நிறுவப்பட்டவை என்பது, பிரிட்டிஷ் அரசியலமைப்பை மற்ற அரசியலமைப்புகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பிரிட்டிஷ் அரசியலமைப்பு டார்வினுடைய (Darwin) உயிரின வளர்ச்சித் தத்துவத்திற்குச் (Theory of Evolution) சிறந்த சான்ருக அமைகிறது.

சட்டத்திற்கும் நடைமுறைக்குமிடையே உள்ள வேறுபாடு

மற்ற நாடுகளில் அரசாங்கத்தின் செயல்கள் அரசியலமைப்பின் அடிப்படையில் நடைபெறுவதைக் காண்கிறேம். ஆனுல், பிரிட்டனில் அரசியலமைப்புச் சட்டங்கள் ஒரு மாதிரியாகவும், அரசாங்க நடைமுறைகள் வேறு மாதிரியாகவும் இருப்பது நமக்கு வியப்பூட்டுகிறது. அங்கே அரசியலமைப்பின் வெளித் தோற்றத்திற்கும் உள் அமைப்பிற்கும் தொடர்பில்லை. அரசியாரின் ஆணைப்படி அரசாங்கம் இயங்குவதாகச் சட்டங்கள் அறிவிக்கின்றன; ஆனுல், நடைமுறையில் அமைச்சர்களே அரசாங்கத்தை இயக்குகின்றனர். பிரிட்டிஷ் அரசியலமைப்பை விளக்குவது என்பது எளிதான காரியமன்று. சட்டங்களைக் கூறி அவை நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை எனக் கூறுவதா, அல்லது நடைமுறைகளைக்கூறி அவை சட்டங்களல்ல எனக் கூறுவதா என்பது விளங்கவில்லை. சட்டங்களோடு தொடர்பற்ற நடைமுறைகளும், நடைமுறைகளோடு தொடர்பற்ற சட்டங்களும் பிரிட்டிஷ் அரசியலமைப்பின் தனித் தன்மைகளில் அடங்கும். சட்டங்களும் நடைமுறைகளும் ஒன்றிற்கொன்று முரணுனவையாய் இருப்பதைக்கண்ட டி டாக்வில் பிரிட்டனில் அரசியலமைப்பே இல்லை எனக் கூறியதில் வியப்பில்லை.

அரசியல் கட்சிகள்

குடியாட்சி அரசுகள் திறம்படச் செயல்படுவதற்கு அரசியல் கட்சிகள் இன்றியமையாத சாதனங்கள் என்பது தெரிந்ததே. பிரிட்டன் அரசியல் கட்சிகளின் தாயகம் என அழைக்கப்படும் பெருமையுடைய நாடு. ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்து, காலப்போக்கில் அவைகளை வளர்த்து, மற்ற நாடுகளும் அரசியல் கட்சிகளின் அவசியத்தை உணரச் செய்த பெருமை பிரிட்டனையே சாரும். அரசியல் கட்சிகளின் அடிப்படையில் பொதுத் தேர்தல் நடைபெறுவதும், தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெறும் கட்சி ஆளுங்கட்சியாய் ஆட்சியில் அமர்வதும், சிறுபான்மை இடங்களைப் பெறும் கட்சி எதிர்க்கட்சியாய் இருந்து ஆளுங்கட்சியின் குற்றங் குறைகளை எடுத்துக் கூறுவதும், பிரிட்டனிடமிருந்து மற்ற நாடுகள் கற்றுக்

கொண்ட முறைகளாகும். ஆளுங்கட்சியின் தலைவரான பிரதமருக்கு ஊதியம் தரப்படுவதுபோல எதிர்க்கட்சியின் தலைவருக்கும் ஊதியம் தரப்படுகிறது என்பது, எதிர்க்கட்சியின் அவசியம் உணரப்படுவதோடல்லாமல் மதிக்கப்படுகிறது என்பதையும் காட்டுகிறது. ஒரே ஒரு அரசியல் கட்சியை மட்டும் கொண்டு இயங்கும் அரசுகளையும், பல அரசியல் கட்சிகளைக் கொண்டு இயங்கும் அரசுகளையும் விட, இரு கட்சிகளைக் கொண்டு இயங்கும் அரசாங்கமே செம்மையான அரசாங்கமாய் அமையும் என்பதை பிரிட்டிஷார் அனுபவத்திலிருந்து நாம் அறிகிறோம்.

சட்டத்தின் ஆட்சி

சட்டத்தின் ஆட்சி என்னும் பண்பு பிரிட்டிஷ் அரசியலமைப்பின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாய்க் கருதப்படுகிறது. A. V. டைஸி சட்டத்தின் ஆட்சிக்கு மூன்று வகையாகப் பொருள் கூறுகிறார். முதலாவதாக, சட்டத்தை ஒருவன் மீறினான் என்பது, எல்லோருக்கும் பொதுவான நீதிமன்றங்களில், எல்லோருக்கும் பொதுவான சட்ட முறைப்படி, ஐயத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டால்தான், அவன் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவான். அவன் சட்டத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறவரை, அவனுடைய உயிருக்கோ, உடலுக்கோ, உடைமைகளுக்கோ யாராலும் ஊறு செய்ய முடியாது. இரண்டாவதாக, சட்டத்துக்கு மேலானவர் யாருமில்லை என்பதாலும், சட்டத்தின் முன்னர் எல்லோரும் சமம் என்பதாலும், சாதாரணக் குடிமக்கள் சட்டத்துக்கு அடிபணிவது எவ்வளவு அவசியமோ, அதேபோன்று அரசாங்க அதிகாரிகளும் சட்டத்துக்கு அடிபணிவது அவசியமாகும். மூன்றாவதாக, இங்கிலாந்தில் அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளெல்லாம் நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து பிறப்பவையாக டைஸி கருதுகிறார். சட்டத்தின் ஆட்சி இங்கிலாந்தில் மட்டுமல்லாமல் காமன்வெல்த் நாடுகள் அனைத்திலும் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அட்லாண்டிக் பெருங்கடலைத் தாண்டி அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர்களும், சட்டத்தின் ஆட்சியில் மேன்மையை உணர்ந்து, அதை 1789ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் அடிப்படைகளில் ஒன்றாய் அமைத்தனர்.

2. அரசியார்

(The Queen)

[முன்னுரை—அரசியாரின் பட்டம்—அரசுரிமை—முடி சூடுதல்—பகர ஆட்சி—முடி துறத்தல்—ஊதியமும் உரிமைகளும்—அரசியாரின் அதிகாரங்கள்—பிரிட்டனில் முடியாட்சி இன்றும் நிலைத்து நிற்பதற்கான காரணங்கள்.]

முன்னுரை

பழமையும் பெருமையும் பெற்று விளங்கும் பிரிட்டிஷ் முடியரசின் தலைவியாய் இருக்கும் இரண்டாம் எலிசபெத் (Elizabeth II) உலக மக்களின் உளம் கவர்ந்த அரசியார் எனப் போற்றப்படுகிறார். தேசியக் கொடியோ, தேசிய கீதமோ, தேசிய மொழியோ இல்லாத ஆங்கிலேயர், அரசியாரையே தங்கள் ஒற்றுமையின் அடையாளமாகவும், பண்பாட்டின் சின்னமாகவும் எண்ணி மகிழ்கின்றனர். நாட்டின் குடிமக்களை அரசியாரின் குடிமக்கள் (Queen's subjects) என்றும், அரசாங்கத்தை 'மாண்புமிக்க அரசியாரின் அரசாங்கம்' (Her Majesty's Government) என்றும், எதிர்க் கட்சியை 'மாண்புமிக்க அரசியாரின்பால் விசுவாசமுள்ள எதிர்க்கட்சி' (Her Majesty's Loyal Opposition) என்றும், உலகப் பொது மொழியாய் வளர்ந்திருக்கும் ஆங்கிலத்தை 'அரசியாரின் ஆங்கிலம்' (Queen's English) என்றும் கூறி, அரசியாரைப் பலபடப் புகழ்ந்து பாராட்டிப் பெருமைப்படுத்துகின்றனர். அரசியாரின் அதிகாரங்களில் பல காலப்போக்கில் அவரிடமிருந்து அகற்றப்பட்டுவிட்டபோதிலும், அவரின் செல்வாக்கு என்றும்போல் சிறப்பானதாக இன்றும் இருக்கக் காண்கிறோம்.

அரசியாரின் பட்டம்

'இரண்டாம் எலிசபெத், கடவுளின் அருளால், கிரேட் பிரிட்டனையும் வட அயர்லாந்தையும் கொண்ட ஐக்கிய அரசுக்கும், மேலும் அவரின் மற்றப் பிரதேசங்களுக்கும் அரசியார்; காமன்

வெல்த்தின் தலைவி; சமயத்தின் காப்பாளர்' என்ற பட்டம் அரசியாருக்கு 1953ஆம் ஆண்டின் அரசப் பட்டப் பெயர் சட்டத்தால் (Royal Titles Act) தரப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசியாரைத் தங்களின் அரசியாராகவும் ஏற்றுக்கொள்ளும் கனடா, ஆஸ்திரேலியா, நியூஸீலந்து, தென் ஆப்பிரிக்கா, இலங்கை போன்ற நாடுகளில் அரசியாரின் பட்டப் பெயர் நாட்டுக்கு நாடு மாறுபடும். பட்டத்து இளவரசர், வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) என அழைக்கப்படுகிறார்.

அரசுரிமை (Succession)

1701ஆம் ஆண்டின் அரசுரிமை நிர்ணயச் சட்டமானது ஆளும் உரிமையை முதலாம் ஜேம்ஸின் பேரப்பெண் சோபியாவுக்கும் (Electress Sophia), அவருடைய வழித் தோன்றல்களுக்கும் மரபுரிமையாக்கியது. முதலாம் ஜேம்ஸுக்கு (James I) சோபியாவைவிட நெருங்கிய உறவினர்கள் 57 பேர் இருந்தபோதிலும், அவர்களுடைய உரிமைகளெல்லாம் அவர்கள் கத்தோலிக்கர்களாய் இருந்த காரணத்தால் நிராகரிக்கப்பட்டன. அரியணையில் அமர்கின்றவர்கள் பிராட்டெஸ்டெண்டுகளாக இருக்க வேண்டுமென்பதும், கத்தோலிக்கர்களை மணந்துகொள்ளக் கூடாதென்பதும் அவசியம். இப்பொழுது இருக்கும் அரசுரிமை பற்றிய விதிகளை மாற்றவேண்டுமென்றால், அதற்கு பிரிட்டிஷ் அரசியாரைத் தங்கள் அரசியாராகவும் ஏற்கும் அத்தனை காமன் வெல்த் நாடுகளின் இணக்கமும் தேவை என வெஸ்ட் மினிஸ்டர் சட்டம் (1931) அறிவிக்கிறது. அரசர் அல்லது அரசியாரின் பிள்ளைகளில் ஆண் வாரிசுகளுக்குப் பெண் வாரிசுகளைக் காட்டிலும், மூத்த வாரிசுகளுக்கு இளைய வாரிசுகளைக் காட்டிலும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்ற மரபு பிரிட்டனில் நெடுங்காலமாகப் பின்பற்றப்படுகின்றது. இன்றைய இரண்டாம் எலிசபெத், கி.பி. 829-ல் இங்கிலாந்து முழுவதையும் ஒன்றாக இணைத்த சாக்சானிய அரசர் எக்பர்ட்டின் (Egbert) வழித் தோன்றல் என்ற செய்தி, அந்நாட்டில் முடியாட்சியானது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மரபுரிமையாக வந்துகொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஐரோப்பாவில் பிரிட்டிஷ் முடியாட்சிக்கும் மூத்ததாக இருக்கும் நிறுவனம் போப் ஆண்டவர் ஆட்சி (Papacy) ஒன்றேயாகும்.

முடி சூடுதல் (Coronation)

ஆளும் அரசர் இறந்தால், பட்டத்து இளவரசர் உடனடியாக அரசப் பொறுப்பேற்பதுதான் வழக்கம். ஆறும் ஜார்ஜ் மன்னர் (Geroge VI), 1952ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் நாள்

இறந்தவுடன், அதே நாள் அவர் மூத்த மகள் இரண்டாம் எலிசபெத் பதவி ஏற்றூர் என்பதிலிருந்து அரசப் பொறுப்புகள் பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பாற்பட்டதென்பதை அறிகின்ரேம். பதவி ஏற்று ஓராண்டு கழித்துதான் மன்னர் முடி சூட்டிக் கொள்வது மரபு. வெஸ்ட்மினிஸ்டர் ஆலயத்தில் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள், ஐக்கிய அரசின் பெருங்குடி மக்கள், காமன்வெல்த் நாடுகளின் முதலமைச்சர்கள், அயல் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலேயில் கேண்டர்பரி அதிமேற்றிராணியாரால் (Archbishop of Canterbury) மன்னர் முடிசூட்டப்படுவார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எட்கர் (Edgar) என்ற அரசரின் முடிசூட்டு விழாவின்பொழுது (973) எந்த இறைவழிபாட்டு முறை பின்பற்றப்பட்டதோ, அதே முறை 1953ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் நாள் இரண்டாம் எலிசபெத்தின் முடிசூட்டு விழாவின்பொழுதும் பின்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பகர ஆட்சி (Regency)

1937, 1953ஆம் ஆண்டுகளின் பகர ஆட்சிச் சட்டங்கள் அரசப் பொறுப்பை அரசருக்குப் பதிலாக யார் ஏற்கலாம் என்பதை நிர்ணயிக்கின்றன. 1953ஆம் ஆண்டின் சட்டம் அரசர் பதினெட்டு வயதிற்கு உட்பட்டவராக இருந்தாலும், அரச காரியங்களேக் கவனிப்பதற்கு முழுமையாகத் தகுதியற்றவராய்விட்டாலும், அரசியாரின் கணவரான எடின்பரோ கோமகன் (Duke of Edinburgh) பகர ஆட்சியாளராகப் பதவி பெற வகை செய்கிறது. அரசியார் ஓரளவுக்கே தகுதியற்றவராய்விட்டாலும், வெளிநாடு சென்றுலும் அவருடைய பொறுப்புகள் நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட பகர ஆட்சிக் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்படும்; அக்குழுவில் அரசியாரின் தாயும், கணவரும், அரசுரிமை வழியில் அடுத்திருக்கும் நான்கு பேரும் உறுப்பினராய் இடம் பெறுவர். ஆனல் பகர ஆட்சிக் குழுவினர் புதுப் பிரபுக்களே நியமித்தல், பாராளுமன்றத்தைக் கலேத்தல் போன்ற காரியங்களேச் செய்ய மேற்கண்ட சட்டங்கள் அனுமதிப்பதில்லே.

முடி துறத்தல் (Abdication)

பிரிட்டிஷ் அரசர்கள் முடி துறப்பதும் உண்டு என்பதற்கு எட்டாம் எட்வர்டின் (Edward VIII) செயல் சான்ருக அமைகிறது. அரசர் எட்வர்டு அமெரிக்கப் பெண் வாலிஸ் சிம்சனே (Wallis Simpson) மணந்து கொள்வது ஆட்சேபிக்கப்பட்டதால், 325 நாட்கள் அரசாண்ட பிறகு, அவர் தனக்கும் தன் வழித் தோன்றல்களுக்கும் அரசுரிமை வேண்டாமென அறிவித்துச்

காதலுக்காக முடியைத் துறந்தார். பாராளுமன்றமும் 1936ஆம் ஆண்டின் முடிதுறத்தல் சட்டத்தை (Declaration of Abdication Act) இயற்றி, எட்வர்டு பட்டத்தையும் பதவியையும் துறந்தார் என அறிவித்து, அவருடைய இளைய சகோதரரான ஆரும் ஜார்ஜுக்கு அரசுரிமையை வழங்கியது. வெஸ்ட்மினிஸ்டர் சட்டம் (1931) கோருகிறபடி, இந்த ஏற்பாட்டை பிரிட்டிஷ் அரசியாரைத் தங்கள் அரசியாராக ஏற்கும் காமன்வெல்த் நாடுகளும் தனித்தனி சட்டங்கள் இயற்றி ஏற்றுக்கொண்டன.

ஊதியமும் உரிமைகளும்

1953ஆம் ஆண்டிலிருந்து அரசியார் ஆண்டொன்றுக்கு 4,75,000 பவுன்களையும், அரசியாரின் கணவர் ஆண்டொன்றுக்கு 40,000 பவுன்களையும் ஊதியமாகப் பெறுகின்றனர். இத்தொகை பற்றுக்குறையாய் இருக்கிறதென்று 1970-ல் வெளிவந்த செய்தி ஆங்கில மக்களிடையே சலசலப்பை உண்டாக்கியது. பக்கிங்ஹாம் அரண்மனையே (Buckingham Palace) அரசியாரின் குடியிருப்பு. அரசியார் சட்டத்துக்கு மேலானவராகக் கருதப்படுகிறார். எந்த நீதிமன்றத்திற்கும் அவரை விசாரிக்கக்கூடிய உரிமை இல்லை. டைஸி விளையாட்டாகக் கூறுவதுபோல, அரசியார் தன் பிரதம மந்திரியைச் சுட்டுக் கொன்றாலுங் கூட, அவரைக் கைது செய்வது இயலாத காரியமாகும்.

அரசியின் அதிகாரங்கள்

அரசின் அலுவல்களெல்லாம் அரசியாரின் பெயரில் மேற்கொள்ளப்படுகின்றன. அரசியாரின் பெயரால் பிறப்பிக்கப்படும் ஆயிரக்கணக்கான ஆணைகளை அவர் அறிந்தால், அது அவரை வியப்பில் ஆழ்த்தும் எனக் கூறப்படுகிறது. அரசின் உயர் அதிகாரிகளான பிரதம மந்திரி, மற்ற அமைச்சர்கள், நீதிபதிகள், தூதுவர்கள், டொமினியன்களுக்கும் குடியேற்ற நாடுகளுக்குமான ஆளுநர்கள், இராணுவ அதிகாரிகள், இங்கிலாந்து திருச்சபையின் அதிமேற்றிராணியார்கள், மேற்றிராணியார்கள் போன்ற உயர்பதவியாளர்கள் ஆகியோர் அரசியாரால் நியமிக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாக நியமிக்கப்பட வேண்டும் என்ற மரபானது, அரசியாரின் கரங்களைக் கட்டுப்படுத்தினாலும், சில சமயங்களில் அரசியார் தன் அதிகாரத்தை உண்மையாகவே பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாவதும் உண்டு. 1957-ல் கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்த சர் அந்தோனி ஈடன் (Sir Anthony Eden) பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொண்ட பிறகு, பட்லர் (Butler), மேக்மில்லன் (Macmillan) ஆகிய இருவரில்

எவரைப் பிரதம மந்திரியாக நியமிப்பது என்ற சிக்கல் எழுந்த பொழுது, அரசியார் மேக்மில்லனையே அப்பதவிக்கு நியமித்தார். 1924ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை கிட்டாமல் போகவே, லிபரல் கட்சித் தலைவரான ஆஸ்க்வித்தை (Asquith) பிரதம மந்திரியாக ஆக்குவதா, தொழிற் கட்சித் தலைவரான இராம்சே மேக்டனல்டை (Macdonald) பிரதம மந்திரியாக ஆக்குவதா என்று முடிவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டபொழுது, தொழிற்கட்சித் தலைவரான மேக்டனல் டையே அரசர் பிரதம மந்திரியாக ஏற்றார். சாதாரண அமைச் சர்களை நியமிப்பதிலும் நீக்குவதிலும் அரசியார் பிரதம மந்திரியின் சிபாரிசுப்படியே நடந்துகொள்வதுதான் மரபு. நீதிபதிகளைத் தவிர மற்ற அதிகாரிகளை அரசியார் எச்சமயத்திலும் பதவி நீக்கம் செய்ய முடியும் என்பது சட்டப்படி உண்மையானாலும், எல்லோரும் அவரவர்க்கு உரிய காலம் வரை பதவியிலிருந்து பிறகு ஓய்வு பெறுவதுதான் வழக்கம்.

அரசியார் முப்படைகளுக்கும் தலைவியாய் இருக்கும் பெருமை உடையவர். போர் தொடுக்கவோ, சமாதானம் செய்து கொள்ளவோ அவருக்கு அதிகாரமுண்டு. அயல் நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும் அவருக்கு உரிமையுண்டு. ஐரோப்பிய நாடுகளிலிருந்த அரச குடும்பங்களோடு பிரிட்டிஷ் அரச குடும்பம் உறவு பாராட்டியது, ஐரோப்பிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்குமிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்த்தது. ஐரோப்பாவில் பல இடங்களில் முடியாட்சி மறையவே, அந்தப் பழைய சூழ்நிலை இன்று இல்லை. டொமினி யன்களின் கவர்னர்-ஜெனரல்களோடும், குடியேற்ற நாடுகளின் கவர்னர்களோடும், பிரிட்டனின் பிரதிநிதிகளாக வெளிநாடுகளில் வேலை பார்ப்பாரோடும் அரசியார் தொடர்பு கொள்வதும், பிரிட் டனுக்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களை வரவேற்று உபசரிப் பதும், தான் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதும், பிரிட்ட னுக்கும் மற்ற நாடுகளுக்குமிடையே நல்லுறவை வளர்ப்பதும், அரசியாரின் பொறுப்புகளில் அடங்கும்.

அமைச்சரவையின் நடவடிக்கைகள் அனைத்தும் அரசியாருக்கு அவ்வப்பொழுது அறிவிக்கப்படும். அரசாங்கத்தின் தலைவர் களாய் திகழும் அமைச்சர்களை ஊக்குவிக்கும் உரிமையும் (The Right to Encourage), எச்சரிக்கும் உரிமையும் (The Right to Warn), அவர்கள் தன்னைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கோரக்கூடிய உரிமையும் (The Right to be Consulted), அரசியின் உரிமைகளில் அடங்கும் என பேஜ்ஹாட் (Bagehot)

குறிப்பிடுகிறுர். அரசியாரின் விருப்பு வெறுப்புகள் எப்படி இருந்தாலும், அமைச்சர்கள் விருப்பப்படியே அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே பிரிட்டனில் ஒப்புக்கொள்ளப்படும் கருத்தாகும்.

பாராளுமன்றத்தின் அங்கங்களில் அரசியாரும் ஒருவர். அரசியாரோடு கூடிய பாராளுமன்றமே (Queen-in-Parliament), முழுப் பாராளுமன்றமெனக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்தைக் கூட்டவும், தள்ளி வைக்கவும், கலைக்கவும் அரசியாருக்கு மாத்திரமே அதிகாரமுண்டு. பிரான்சில் புரட்சிக்கு முன்பு 175 ஆண்டுகள் அரசர்கள் பாராளுமன்றத்தைக் கூட்டாது ஆட்சி செய்தது போல், இங்கிலாந்திலும் அரசியார் ஆட்சி செய்வது சட்டத்துக்குப் புறம்பான செயலன்று என்ருலும், ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றம் தவருது கூட்டப்படுவதுதான் முறை என்ற மரபு வளர்ந்திருக்கிறது. பாராளுமன்றமானது ஐந்து ஆண்டுக்காலம் பதவியிலிருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஐந்தாண்டு முடிவதற்கு முன்பே அதை அரசியார் பிரதம மந்திரியின் அறிவுரைப்படி கலைக்கலாம். கடந்த 100 ஆண்டுகளில் பிரிட்டனில் நிகழ்ந்திருக்கும் பாராளுமன்றக் கலைப்புகள் அனைத்துமே பிரதம மந்திரியின் அறிவுரைப்படிதான் நிகழ்ந்திருக்கின்றன. ஆனுல், பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்த பிரதம மந்திரி அந்தப் பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டுமென்று அரசியாரைக் கேட்பாரானுல் அரசியார் அதை ஏற்க வேண்டிய அவசியமில்லை என்றும், அதற்கு மாருக எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து, அவரைப் பிரதம மந்திரியாக ஆக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றக் கூட்டத்தை அரசியாரே துவக்கி வைத்து, அப்பாராளுமன்றத்தின் ஆய்வுக்குக் காத்திருக்கும் அலுவல்களை ‘அரியணை உரை’ (Speech from the Throne) மூலமாகத் தெரிவிப்பார். இதை நாம் அரசியாரின் உரை என அழைத்தாலும் இது உண்மையிலேயே பிரதம மந்திரியால் எழுதப்பட்டு, அரசியாரின்மூலமாகப் படிக்கப்படும் அறிக்கை என்றே கொள்ளவேண்டும். இவ்வறிக்கை அரசியாரின் சொந்தக் கருத்துகளைப் பிரதிபலிப்பதாக எண்ணக்கூடாதென்பதும், அதில் கூறப்படும் கொள்கைகளினுல் விளையும் நன்மை தீமைகளுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்க வேண்டுமென்பதும், நூருண்டுகட்கு முன்பே தோன்றிய மரபுகளாகும்.

பாராளுமன்றத்தில் மசோதாக்கள் சட்டங்களாவதற்கு அரசியாரின் இசைவு தேவை; ஆனுல் 1708-ல் ஆன் அரசியார் (Queen Anne) மசோதாவிற்குத் தன் இசைவை மறுத்த நிகழ்ச்சிக்குப் பிறகு

வேறு எந்த அரசரும் ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தியதில்லை. இனி இந்த அதிகாரம் மீண்டும் பயன்படுத்தப்படலாம் என்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாய்த் தோன்றவில்லை. இருநூற்றைம்பது ஆண்டுகட்கு மேலாக வழக்கற்றுப் போயிருக்கும் ரத்து அதிகாரம் இனி உயிர்ப்பிக்கப்படும் என நாம் எண்ண முடியாது. பிரிவி கவுன்சில் (Privy Council) பாராளுமன்றத்தால் அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் இனங்கள்மீது ஆணைகளைப் பிறப்பிக்கும்போது, அவைகட்கும் அரசியாரின் ஒப்பம் தேவை.

1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பாக, பொதுமக்கள் சபையின் எண்ணத்துக்கு மாறாக நடக்கும் பிரபுக்கள் சபையின் எதிர்ப்பைச் சமாளிக்க அச்சபைக்கு அரசாங்கத்திற்குச் சாதகமாக வாக்களிக்கும் உறுப்பினர்களை நியமிக்கும்படி அரசர் கேட்டுக்கொள்ளப்படுவதுண்டு. அரசியல் நோக்கத்துக்காகப் பிரபுக்கள் சபைக்குப் புதுப் பிரபுக்களை நியமித்தது பிரிட்டன் வரலாற்றில் ஆன் அரசியார் காலத்தில் மட்டும் ஒரே ஒரு முறை (1712) நிகழ்ந்திருக்கிறது. ஆனால் 1832ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டத்தையும் (Reform Act), 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தையும் இயற்றும் பொழுது பிரபுக்கள் சபையில் எழுந்த எதிர்ப்புகளை அடக்க, மசோதாவுக்குச் சாதகமாக வாக்களிக்கும் புதுப் பிரபுக்களைத் தான் நியமிக்கப்போவதாக அரசர் அறிவித்தார்; ஆனால், அந்த எச்சரிக்கையைச் செயல்படுத்தவேண்டிய அவசியம் எழவில்லை. இக்காலத்தில் அரசியல் காரணங்களுக்காகப் பிரபுக்களை நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதில்லை.

ஆங்கிலேய வரலாற்றின் ஆரம்பக்காலத்தில் நீதி நிர்வாகம் செய்வதையே அரசர் தன் மிக முக்கியப் பொறுப்பாகக் கருதினார். ஆனால், இன்று இப் பொறுப்பு, சுயேச்சையான நீதிபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உயர் நீதிபதிகளிலிருந்து சாதாரண அமைதிக் காவல் நடுவர் (Justice of Peace) வரை அரசியாரால் நியமிக்கப்படுகின்றனர். அரசியார் நீதியின் ஊற்றாகக் (Fountain of Justice) கருதப்படுவதாலும், நாட்டின் முதல் மகளாய் இருப்பதாலும் குற்றவாளிகளை மன்னிக்கக்கூடிய உரிமையைப்பெறுகிறார்.

அரசியார் இங்கிலாந்து திருச்சபையின் (Church of England) தலைவியாக இருக்கிறார். சமயத்தைக் காப்பது அவரின் கடமை என்பதைக் காட்ட, சட்டமே அவரை 'சமயத்தின் பாதுகாவலர்' (Defender of Faith) என அழைக்கிறது. திருச்சபை மன்றங்களால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அரசியாரின் இசைவைப்

பெற்ற பிறகே செயல்படுத்தப்படும். திருச்சபையின் உயர் அதிகாரிகள் அரசியாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்ற செய்தி முன்னரே கூறப்பட்டது.

சிறப்பான செயல்கள் செய்தோரைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குப் பட்டங்கள் வழங்கக்கூடிய உரிமை அரசியாருக்கு உண்டு. பட்டங்களுக்காகச் சிபாரிசு செய்யப்படுவோர் அவற்றிற்குத் தகுதியுடையோரா அல்லவா என்பதை பிரிவிகவுன்சிலர்களில் மூன்றுபேர்களைக் கொண்ட குழு ஒன்று ஆராய்ந்து அரசியாருக்கு அறிவுரை கூறும் வழக்கம் 1922-லிருந்து பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பட்டங்கள் பெறுவோர் பட்டியல் புத்தாண்டு தினத்தன்றோ அல்லது அரசியாரின் பிறந்த நாளன்றோ வெளியிடப்படும். முடிசூட்டு விழாபோன்ற வைபவங்களின்பொழுது எதிர்க்கட்சித் தலைவரால் சிபாரிசு செய்யப்படும் சிலருக்கும் பட்டங்கள் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. துறைமுகங்களைக் கட்டுதல், அறக் கொடைகளைப் பரிபாலனம் செய்தல், விவிலிய நூலை அச்சிடுதல், புதையல்களுக்குச் சொந்தம் பாராட்டுதல் ஆகியவை அரசியார் மற்ற உரிமைகளில் சிலவாகும்.

அரசியாருக்குரிய எண்ணற்ற அதிகாரங்கள் அனைத்தும் அவருடைய சொந்தப் பொறுப்பில் பயன்படுத்தப்படுவதில்லை. அரசியாரின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஏதாவது ஓர் அமைச்சர் பொறுப்பேற்பார் என்பது, அரசியாரின் அதிகாரங்கள் அவர் சார்பில் அவருடைய அமைச்சர்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உணர்த்துகிறது. ‘அரசியார் தவறு செய்யமாட்டார்’ (The Queen can do no wrong) என்ற முதுமொழியொன்றுண்டு. அரசியாரின் பெயரால் நிகழும் காரியங்களுக்கு அமைச்சர்களே காரணகர்த்தாக்களாக இருப்பதால், அவைகளில் ஏதாவது தவறு ஏற்படுமானால் அது அமைச்சர்களின் தவறேயன்றி அரசியாரின் தவறன்று என்று எண்ணுவது இயற்கையே. அரசியார் தன் இச்சைப்படி ஆள்கின்ற முறை 1688ஆம் ஆண்டோடு முடிவடைந்துவிட்டது. அரசியார் என்ற தனிப்பட்டவரிடமிருந்த அதிகாரங்கள் ‘அரசு’ (Crown) என்ற நிறுவனத்திடம் மாற்றப்பட்டிருப்பதையே பிரிட்டிஷ் முடியாட்சியின் தலைசிறந்த பண்பாகக் கருதவேண்டும்.

பிரிட்டனில் முடியாட்சி இன்றும் நிலைத்து நிற்பதற்கான காரணங்கள்

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு ஐரோப்பாவில் பல நாடுகளில் ஒன்றன் பின் ஒன்றாக முடியாட்சி மறைந்து குடியாட்சி மலர்ந்த போதிலும், பிரிட்டனில் எந்தவிதச் சலனமுமின்றித் தொடர்ந்து முடியாட்சியே பின்பற்றப்படுகிறது. அவ்வாறு முடியாட்சி முறையை பிரிட்டிஷார் போற்றிக் காக்கக் காரணமென்ன?

ஆங்கிலேயர்கள் பழைமையில் பற்றுள்ளவர்கள். ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக அவர்களிடையே நிலவி வரும் ஒரு பெருமை மிக்க நிலையத்தை நீக்க அவர்கள் மனந் துணியமாட்டார்கள். வரம்பில்லா முடியாட்சியானது ஜனநாயக முடியாட்சியாக மாறி இருக்கும் இக்காலத்தில் அதைக் கலைக்க வேண்டிய அவசியமில்லை என எண்ணுகின்றனர். மேலும், அரச குடும்பத்தினர் மக்களின் அன்புக்கும் பற்றுதலுக்கும் பாத்திரமாயிருக்கும் காரணத்தால் முடியாட்சியை மாற்றவேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலோருக்குத் தோன்றுவதில்லை.

அரசியலமைப்பைப் பற்றியோ, அரசியல் கோட்பாடுகளைப் பற்றியோ மக்கள் புரிந்துகொள்வதைவிட அரசியாரைப் பற்றி அதிகம் புரிந்துகொள்வர் என்பது தெளிவு. மணிமுடி தரித்து, செங்கோல் தாங்கி, அரியணையில் அமர்ந்து, புரவிகள் பூட்டிய இரதத்தில் பவனி வரும் அரசியாரின் கட்டளைகளை மக்களுக்கு மறுக்கத் தோன்றுது. அதுவும் கடல்கடந்த பகுதிகளில் நாகரிகத்தின் பல கட்டங்களில் வாழும் மக்களைக் கொண்ட பிரிட்டிஷ் பேரரசை ஒன்றுகப் பிணைக்கும் சக்தி முடியாட்சிக்கு வேறெந்த ஆட்சியைக்காட்டிலும் அதிகம்.

அரசியார் சமுதாயத்தின் தலைவி. சமுதாயத்தின் பல துறைகளில் உயர்ந்த தரங்களை ஏற்படுத்தி, மக்களை நல்ல வழியில் நடத்திச் செல்வது அரசியாரின் கடமையாகும். கல்வி, கலைகள், ஒழுக்கம், தான தருமம் ஆகிய துறைகளில் அரசியாரின் செயல்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. அரசியாரைத் தங்கள் சமுதாயத்தின் தலைமகளாய்க் கொள்ளும் ஆங்கிலேயர், வேறெந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரையும் அதுபோன்று ஏற்றுக்கொள்ளத் தயங்குவர் என்பது உறுதி.

அரசியார், கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று, நடுநிலைமை தவருது, அமைச்சர்களுக்கு அறிவுரை வழங்கக்கூடிய மேல் நிலையில் இருக்கிருர். அறுபத்து மூன்று ஆண்டுகள் ஆண்ட விக்டோரியா மகாராணி (Queen Victoria), இருபத்தைந்து ஆண்டுகள் ஆண்ட ஐந்தாம் ஜார்ஜ் ஆகியோரின் அனுபவங்கள், அவர்களின் பிரதம மந்திரிகளுக்குப் பெருந்துணையாய் இருந்தன. பல ஆண்டு தொடர்ந்து அரசராயிருந்தோர், அரசியலில் பலவிதமான சிக்கல்களைத் தீர்த்து, முதிர்ச்சியையும் தெளிந்த அறிவுடைய நிலையையும் அடைந்திருப்பர். முடியாட்சி நீக்கப்பட்டால் அரசர்களின் அறிவு, அனுபவம் ஆகியவற்றின் பயன்களை நாடு இழக்க நேரிடும்.

அரசியார் இன்று காமன்வெல்த் கழகத்தின் தலைவியாக ஒப்புக்கொள்ளப்படுகிறார். ஏறத்தாழ முப்பது நாடுகளையும் அறுபது கோடி மக்களையும் கொண்டிருக்கும் காமன்வெல்த்தை ஒரே குடும்பமாகப் பின்னிப் பிணைக்கும் ஆற்றல் முடியாட்சிக்கு மாத்திரமே உண்டு. பல்வேறு இனங்களையும், சமயங்களையும், மொழிகளையும், பண்பாடுகளையும் கொண்டு உலகம் முழுதும் பரந்து கிடக்கும் காமன்வெல்த் நாடுகள், பிரதம மந்திரியைப் போன்ற ஒருவரைத் தங்கள் தலைவராக ஏற்கமாட்டா. காமன் வெல்த் குடிகள் பாசத்தோடும் நேசத்தோடும் அரசியாரை வரவேற்பதுபோல வேறெந்த பிரிட்டிஷ் அதிகாரியையும் வரவேற்கமாட்டார்கள் என்பது தெளிவு.

முடியாட்சி வேண்டாமென்று முடிவு செய்தாலும், அரசி யாருக்குப் பதிலாக அமெரிக்கக் குடியரசு தலைவர் போன்றோ அல்லது இந்தியக் குடியரசு தலைவர் போன்றோ ஓர் அதிகா ரியைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும். அமெரிக்கத் தலைவர்போல் வைத்துக்கொண்டால், அது இப்பொழுதிருக்கும் அமைச்ச ரவையின் மேலான நிலையை பாதிக்கும்; அதை பிரிட்டிஷார் விரும்பமாட்டார்கள். இந்தியத் தலைவர் மாதிரி வைத்துக்கொண் டால், அது இப்பொழுதிருக்கும் முடியாட்சியை வேறு பெயரில் மாற்றி அமைப்பதாக அமையுமே தவிர, புதிய ஏற்பாடாக அமையாது. முடியாட்சியை மாற்றினால் அதற்குத் தகுந்த மாற்றீடு இல்லை என்பது புலனாகிறது.

முடியாட்சியைத் தவிர்த்தால் அரசியாரின் பராமரிப்புக் கான செலவு குறையும் என எண்ணலாம். செலவு குறையும் என்பதற்காகச் சிலவற்றைத்தான் துறக்க முடியுமேயொழிய, மக்கள் தங்கள் உயிருக்கும் மேலானதாய் போற்றும் முடியாட்சி யைத் துறக்க இசையமாட்டார்கள். மேலும் குடியரசுகளிலும் தலைவர்களின் தேர்தலுக்கும் பராமரிப்புக்கும் பெருந்தொகை செலவிடப்படுவது இவ்வாதத்தை அர்த்தமற்றதாக ஆக்குகிறது.

3. கேபினட் அமைச்சரவை
(The Cabinet)

[முன்னுரை — கேபினட்டின் அமைப்பு — கேபினட்டுச் செயலகம்—கேபினட்டின் பணிகள்—கேபினட்டின் பண்புகள்.]

முன்னுரை

பாராளுமன்றத்திலிருக்கும் பெரும்பான்மைக் கட்சி உறுப்பினர்களிலிருந்து பிரதம மந்திரியால் தேர்ந்தெடுக்கப்படும் முக்கிய அமைச்சர்கள் அடங்கிய அவையே கேபினட் அமைச்சரவை என அழைக்கப்படுகிறது. கேபினட்டை மையமாகக் கொண்ட அரசாங்க முறை ஆங்கிலேயரின் அரசியல் படைப்புகளில் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் இம்முறை 1937ஆம் ஆண்டு வரை நாட்டின் சட்டங்களால் முறையாக ஒப்புக்கொள்ளப்படாது, பழக்க வழக்கங்களின் அடிப்படையில் செயல்பட்டு வந்தது.

கேபினட்டின் அமைப்பு

கேபினட்டில் எத்தனை அமைச்சர்கள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சட்டதிட்டங்கள் கூறுவிட்டாலும், ஏறத்தாழ இருபத்தைந்து உறுப்பினர்களுக்கு இடமளித்தலே இக் கால வழக்கம். நாளுக்கு நாள் கேபினட் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது அரசாங்கத்தின் பொறுப்புகள் அதிகரிப்பதை உணர்த்துகிறது. நாட்டில் யார் வேண்டுமென்றாலும் கேபினட்டில் அமர்த்தப்படலாம் என்பது உண்மையானாலும், பொதுவாகப் பாராளுமன்ற உறுப்பினர்களே அமைச்சர்களாக அமர்த்தப்படுவது தற்கால மரபு. பாராளுமன்றத்திலிருக்கும் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை அரசியார் பிரதம மந்திரியாக நியமிப்பார். பிரதம மந்திரியே கேபினட்டை ஆக்கவும் அழிக்கவும் வல்ல தலைவராகப் பொறுப்பேற்பார்.

அவரின் சிபாரிசுபடியே அரசியார் மற்றக் கேபினட்டு அமைச்சர் களையும் நியமிப்பார். கேபினட் உறுப்பினர்களை நியமிப்பதிலும் நீக்குவதிலும் பிரதம மந்திரிக்கு முழு உரிமை உண்டென்பதும், அரசியாரின் விருப்பு வெறுப்புகளுக்கு அவைமீது ஆதிக்கம் இருப்ப தில்லை என்பதும், நெடு நாட்களுக்கு முன்பே ஒப்புக்கொள்ளப் பட்ட கருத்துகளாகும். எந்தெந்தத் துறைத் தலைவர்கள் கேபினட் அமைச்சர்களாகக் கருதப்படவேண்டும் என்பதுபற்றி விதிகள் இல்லையெனினும், பொதுவாகத் தற்காப்பு, நீதி, உள்துறை, வெளிநாட்டு அலுவல்கள், கல்வி, தொழில், வேளாண்மை, வர்த்தகம், காமன்வெல்த் அலுவல்கள் ஆகிய துறைத் தலைவர்கள் அதில் இடம் பெறுவார்கள் என்பது திண்ணம். பாராளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர் களையும், கட்சித் தலைவர்களையும், அமைச்சர்களாக இருந்து அனுபவம் பெற்றவர்களையும், அறிவும் ஆற்றலும் உள்ளவர் களையும், நாட்டின் சமுதாய, பொருளாதார, சமயப் பிரிவுகளின் பிரதிநிதிகளையும் கருத்தில் கொண்டு பிரதம மந்திரி தன்னுடைய அமைச்சரவையை உருவாக்குவாரானல், அது செல்வாக்கோடு செயல்படும் என்பது ஆங்கிலேயரின் அனுபவம். 1937, 1964ஆம் ஆண்டுகளின் அரசு அமைச்சர்கள் சட்டங்கள் (Ministers of the Crown Acts), அமைச்சர்களின் ஊதியத்தை நிர்ணயிக்கின்றன. பிரதம மந்திரி ஆண்டொன்றுக்கு 10,000 பவுன்கள் ஊதியம் பெறுகிறார்.

கேபினட் அமைச்சரவை வாரத்திற்கு ஒரு முறையோ இரு முறையோ பிரதம மந்திரியின் மாளிகையில் கூடும்; அவரே கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்; கூட்டத்தின் இறுதியில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை அவரே தீர்மானிப்பார்; வாக்கெடுப்புமூலமாக ஒரு முடிவுக்கு வரும் முறை வழக்கமன்று. 1920ஆம் ஆண்டின் அரசாங்க இரகசியச் சட்டப்படி (Official Secrets Act), கூட்டத்தில் நிகழும் பேச்சு வார்த்தைகளை இரகசிய மாக வைத்திருப்பது உறுப்பினர்களின் கடமையாகும்; கேபினட் டுக்குள் நடைபெற்ற விவாதங்களை வெளிஉலகுக்கு அறிவிக்க எந்த உறுப்பினராவது விரும்பினல், அதற்கு அரசியாரின் இசைவைப் பெறவேண்டும். கேபினட்டில் பல குழுக்கள் உண்டு; சட்டக் குழு, தற்காப்புக் குழு, உற்பத்திக் குழு போன்ற குழுக்கள் அததற்கு உரிய காரியங்களை ஆராய்ந்து தாய்ச் சபையான கேபினட்டுக்கு ஆலோசனை வழங்கும்.

கேபினட்டுச் செயலகம் (Cabinet Secretariat)

முதலாவது உலகப் போரின்பொழுது 1916ஆம் ஆண்டில் கேபினட்டுச் செயலகம் ஒன்று நிறுவப்பட்டது. கேபினட்டுக்கும்

அதன் குழுக்களுக்கும் தேவையான செய்திகளைத் திரட்டித் தருவது, கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல்களைத் தயாரிப்பது, கூட்டங்களுக்கான அழைப்புகளை அனுப்புவது, அவையின் முடிவுகளையும் அறிக்கைகளையும் எழுதுவது, கேபினட்டின் குறிப்புகளையும் ஏடுகளையும் பாதுகாப்பாக வைத்திருப்பது ஆகியவை செயலகத்தின் பொறுப்புகளில் அடங்கும். கேபினட் செயலர் எனும் அரசாங்க அதிகாரி, கூட்டங்கள் நடைபெறும்பொழுது அமைச்சர்களோடு தானும் அமர்ந்து குறிப்பெடுத்துக்கொள்வார். இரண்டாம் உலகப் போரின்பொழுது 1941ஆம் ஆண்டில் மத்திய புள்ளி விவர அலுவலகம் (Central Statistical Office) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அமைச்சர்களுக்கு வேண்டிய பொருளாதாரப் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தருவது இந்நிறுவனத்தின் கடமையாகும்.

கேபினட்டின் பணிகள்

1918ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஹால்டேன் குழு அறிக்கை (Haldane Committee Report) கேபினட்டின் பணிகளை விவரிக்கிறது. முதலாவதாக, கேபினட் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அரசாங்கக் கொள்கைகளை முடிவு செய்கிறது. பல கொள்கைகளைச் சட்டங்கள் வாயிலாகவே செயல்படுத்த முடியுமாதலால், ஒவ்வொரு ஆண்டும் எந்தெந்த மசோதாக்கள் பாராளுமன்றத்தில் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதைக் கேபினட்டே முடிவு செய்கிறது. பாராளுமன்றம் சட்டங்களை இயற்றுகிறது என்பது உண்மையானாலும் இவற்றில் பலவற்றை அங்கே தோற்றுவித்து, விளக்கிக் கூறி, குற்றங் குறைகளுக்குச் சமாதானம் சொல்லிச் சட்டங்களாக ஆக்கும் பெருமை கேபினட்டையே சாரும். வருடாந்திர வரவு செலவுப் பட்டியலைத் தயாரித்துப் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பும் பொறுப்பும் கேபினட்டுடையதே. அரசாங்கத்தின் கொள்கை விளக்கமாகக் கருதப்படும் அரசியின் உரையும் கேபினட்டால்தான் தீர்மானிக்கப்படுகிறது. இரண்டாவதாக, அரசியிடம் தங்கியிருக்கும் ஆட்சித்துறை அதிகாரங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் கேபினட்டே முடிவு செய்கிறது. உயர் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதும், பாரளுமன்றத்தைக் கலைப்பதா கலைப்பதில்லையா என்பதை முடிவு செய்வதும், வெளிநாட்டு உறவுகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று நிச்சயிப்பதும் கேபினட் கூட்டங்களில் முடிவு செய்யப்படுகின்றன. மூன்றாவதாக, பல்வேறு துறைகளின் எல்லைகளை வரையறுத்து அவை ஒன்றோடொன்று ஒத்துப்போகுமாறு வகை செய்வதும் கேபினட்டின் கடமையே. 1940-ல் பிரிட்டிஷ் படைகளை நார்

வேயில் (Norway) இறக்கவும், டன்கிர்க்கிலிருந்து (Dunkirk) பின் வாங்கவும், பல துறைகள் ஒன்ருக இயங்கவேண்டி இருந்தது. கடற்படைத் துறையும் (Admiralty), விமான அமைச்சரகமும் (Air Ministry), போர் அலுவலகமும் (War Office), போக்கு வரத்து அமைச்சரகமும் (Ministry of Transport), தரவு அமைச்ச ரகமும் (Ministry of Supply), உணவு அமைச்சரகமும் (Ministry of Food) ஒன்று சேர்ந்து இயங்கியதால் போர் நடவடிக்கைகள் தங்குதடையின்றி மேற்கொள்ளப்பட்டன. கேபினட்டிலுள்ள, துறைகள் ஒதுக்கப்படாத அமைச்சர்கள் (Ministers without Portfolios) பல துறைகளிடையே எழும் முரண்பாடுகளைத் தீர்த்து, அவைகளின் பணிகளை ஒன்று திரட்டி ஒருமுகப்படுத்தும் பொறுப்பை ஏற்பர்.

கேபினட்டின் பண்புகள்

இன்றைய பிரிட்டிஷ் கேபினட்டின் பண்புகளில் பல இரு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு, முதல்முறை பிரதம மந்திரி யாய் இருந்த சர் ராபர்ட் வால்போல் (Sir Robert Walpole) காலத்தில் தோன்றி வளர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கேபினட்டிலிருந்து அரசியார் விலகியிருப்பது அதன் முதலாவது பண்பாகும். ஆனல் இது தற்செயலாய் நிகழ்ந்த நிகழ்ச்சியின் பயனுல் விளைந்த பண்பாகும். 1714—27 வரை அரசாண்ட முதலாம் ஜார்ஜும், 1727—1760 வரை அரசாண்ட இரண்டாம் ஜார்ஜும் ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த காரணத்தால் பிரிட்டிஷ் அரசியல் அலுவல்களில் போதுமான அக்கறை காட்டாது தங்களுடைய பிரதம மந்திரிகள் கேபினட் கூட்டங் களுக்குத் தலைமை தாங்கும்படி பணித்தனர். 1714-ல் தோன்றிய இவ்வழக்கத்தின் காரணமாகத்தான், தற்கால அரசியலமைப் பிலும் கேபினட் கூட்டங்களுக்கு அரசியார் தலைமை தாங்காமல், முதலமைச்சர் தலைமை தாங்கும் வழக்கம் காணப்படுகிறது. அரசி யார் கேபினட் நடவடிக்கைகளில் கலந்துகொள்வதில்லை என்ப தால் கேபினட்டில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு அவர் பொறுப் பில்லை என்றும் அமைச்சர்களே பொறுப்பென்றும் கருதுவது இயல்பு.

அமைச்சர்கள் அனைவரும் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்த வர்களாயிருப்பது கேபினட்டின் இரண்டாவது பண்பாகக் கருதப்படுகிறது; அந்த ஒரே கட்சியும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியாய் இருப்பது அவசியம். அமைச்சர் களெல்லாம் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருந்தால்தான் அரசாங்கம் எந்தெந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட வேண்டும்

என்பதுபற்றி அவர்களுக்குள் உடன்பாடு ஏற்படும். அவர்களுடைய கட்சி, பெரும்பான்மைக் கட்சியாய் இருந்தால்தான் அவர்களுடைய கொள்கைகளைப் பாராளுமன்றம் எளிதாக ஏற்கும். இருபதாம் நூற்றாண்டின் துவக்கம்வரை இங்கிலாந்தின் அமைச்சரவைகள் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களைக் கொண்டதாகவோ, லிபரல் கட்சி உறுப்பினர்களைக் கொண்டதாகவோ அமைந்திருந்தன. இந்த நூற்றாண்டில் தொழிற்கட்சி தலையெடுக்கவே 1924ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டுவரை மூன்று அரசியல் கட்சிகள் நிலவிய காரணத்தால் அடிக்கடி கூட்டு மந்திரி சபைகள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாளுக்குநாள் லிபரல் கட்சி செல்வாக்கு இழக்கவே மீண்டும் பிரிட்டன் இரு கட்சிகளைக் கொண்ட நாடாக இயங்குகிறது. அமைச்சர்களுக்கிடையே எந்தவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவைகளைத் தங்களுக்குள் அவர்கள் தீர்த்துக் கொள்ளவேண்டும். வெளி உலகைப் பொறுத்தவரை அமைச்சர்கள் ஒன்றை ஆதரிப்பதென்றால் ஒரேமுகமாக ஆதரிப்பதும், ஒன்றை எதிர்ப்பதென்றால் ஒரேமுகமாக எதிர்ப்பதும் தற்கால வழக்கம். கேபினட் அவையின் முடிவுகளை எந்த அமைச்சராவது ஏற்றுக் கொள்ள மறுப்பாரானால், அவர் அவையிலிருந்து விலகிக் கொள்ளும்படி எதிர்பார்க்கப்படுவார். கேபினட்டின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள இயலாத காரணத்தால் 1932-ல் ஸ்னோடன் பிரபுவும் (Lord Snowden), சர் ஹெர்பர்ட் சாமுவேலும் (Sir Herbert Samuel), 1951-ல் பெவனும் (Bevan) அவையிலிருந்து விலகிக்கொண்டனர்.

அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புள்ளவர்கள் என்பது கேபினட்டின் மூன்றாவது பண்பாகக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்தின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்றிருக்கும்வரைதான் அமைச்சர்கள் பதவியிலிருக்க முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு அமைச்சரவை அடங்கி நடக்க வேண்டுமென்பது வால்போல் காலத்திலேயே தோன்றிய வழக்கமாகும். கேபினட்டால் தோற்றுவிக்கப்படும் மசோதாக்கள் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டாலோ, கேபினட்டால் எதிர்க்கப்படும் மசோதாக்கள் பாராளுமன்றத்தால் ஏற்கப்பட்டாலோ, வருடாந்திர வரவுசெலவுத் திட்டத்தைப் பாராளுமன்றம் அங்கீகரிக்க மறுத்தாலோ, அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலோ அமைச்சரவைப்பதவியிலிருந்து விலகிக்கொள்வது மரபு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டும் பாராளுமன்றம் அமைச்சரவையைப் பத்து தடவைகள் தோற்கடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்கள். இதைத்தான் கூட்டுப் பொறுப்பென்றும் (Collective responsibility) தனிப் பொறுப்பென்றும் (Individual responsibility) வேறுபடுத்திப் பேசுகிறேம். கேபினட்டில் முடிவு செய்யப்பட்ட கொள்கையொன்று பாராளுமன்றத்தால் ஏற்கப்படாவிட்டால், அமைச்சர்கள் அனைவருமே பதவியிலிருந்து விலகிக்கொள்வதைக் கூட்டுப் பொறுப்பென்கிறேம். 'வாழ்ந்தால் ஒன்றாய் வாழ்வது, வீழ்ந்தால் ஒன்றாய் வீழ்வது' என்ற உணர்வின் அடிப்படையில் ஒவ்வொருவரும் மற்றவருக்காக வாதாடும் செயல் கேபினட்டின் தனித்தன்மையென எண்ணப்படுகிறது.

அரசியாரின் முன்பும், பாராளுமன்றத்தின் முன்பும், வாக்காளர்கள் முன்பும் கேபினட்டின் முடிவு ஒருமித்த முடிவாகவே வைக்கப்படும். ஒவ்வொரு அமைச்சரும் ஒரு துறையின் தலைவராயிருந்து, தத்தம் துறையின் செயல்களுக்குத் தாமே பொறுப்பேற்பதைத் தனிப் பொறுப்பென்கிறேம். ஒருவர் துறையில் ஏற்படும் குற்றங்குறைகளுக்குச் சமாதானம் சொல்ல வேண்டிய முழுப் பொறுப்பையும் அவரே ஏற்கவேண்டும். 1946-ல் வருடாந்திர வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே அதைப்பற்றிய செய்திகள் செய்தித்தாள்களில் வெளிவந்ததற்காக நிதி அமைச்சரான டால்டனைப் (Dalton) பாராளுமன்றம் பதவியிலிருந்து விலகிக் கொள்ளச் செய்தது.

பிரதம மந்திரியின் மேலான நிலை கேபினட்டின் நான்காவது பண்பாகக் கருதப்படுகிறது. முதலமைச்சர் பொதுமக்கள் சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற மரபு 1902ஆம் ஆண்டிலிருந்து வழுவாமல் பின்பற்றப்படுகிறது. 1963ஆம் ஆண்டில் பிரபுக்கள் சபையிலிருந்த கன்சர்வேடிவ் கட்சித் தலைவரான சர் டக்லஸ் ஹ்யூமை (Sir A. Douglas Hume) முதலமைச்சராக நியமிக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியபொழுது, சர் ஹ்யூம் பிரபுக்கள் சபையிலிருந்து விலகி, பொதுமக்கள் சபையின் உறுப்பினராகி, மரபைக் காத்தார் என்பது அறியத்தக்கது. பிரிட்டிஷ் பிரதமர்களில் மிகப் பெரும்பாலோர் வயது முதிர்ந்தவர்களாகவும், பழுத்த அரசியல் அனுபவம் பெற்றவர்களாயும் இருந்திருக்கின்றனர். கடந்த பதின்மூன்று முதலமைச்சர்களைக் கருத்தில் கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால், சராசரியாக ஒவ்வொருவரும் அறுபது வயதைக் கடந்தவராயும், இருபத்தைந்து ஆண்டுகட்கு மேம்பட்ட பாராளுமன்ற அனுபவம் உடையவராயும் தோன்றுகின்றனர். முதலாம் ஜார்ஜ் காலத்திலேயே பிரதம அமைச்சர்

என்ற பட்டமும் பதவியும் தோன்றியபோதிலும், இன்னுள்வரை அவரின் பணிகளும் பொறுப்புகளும் சட்டங்களால் வரையறுக்கப் படாமல் இருப்பது விந்தையே.

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பிரதம மந்திரியின் முக்கியத்து வத்தை உணர்ந்தோர், அந்த அரசாங்கத்தைக் கேபினட்டு அரசாங்கம் என்று கூறுவதைவிடப் 'பிரதமமந்திரியின் அரசாங்கம்' (Primeministerial Government) என அழைப்பதே பொருத்தம் எனக் கருதுகின்றனர். பிரதம மந்திரி 'கேபினட் வளைவின் மையக்கல்' (Keystone of the Cabinet arch) என்ற மார்லியின் (Morley) விளக்கத்தைவிட 'அரசியலமைப்பின் மையக்கல்' (Keystone of the Constitution) என்ற ஜென்னிங்சின் விளக்கமே பொருத்தமெனக் கூறலாம். பொதுத் தேர்தல்கூடப் பிரதம மந்திரியை மையமாகக் கொண்டே நடைபெறுகிறது. 1945-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சர்ச்சிலை (Churchill) முதல்வ ராகக் கொள்ள விரும்பியவர்கள் கன்சர்வேடிவ் கட்சிக்கும், அட்லியை முதல்வராகக் கொள்ள விரும்பியவர்கள் தொழிற் கட்சிக்கும் வாக்களித்தனர் என்பதிலிருந்து பிரதம மந்திரியையே மக்கள் அரசாங்கத்தின் நடு நாயகமாகக் கருதுகின்றனர் என்பதை அறியலாம்.

பிரதம மந்திரியின் அதிகாரங்களை அறிவோமாஞல், அவர் பிரிட்டனின் முடிசூடா மன்னராய் இருப்பது தெளிவாய் விளங்கும். அமைச்சரவையிலுள்ள அமைச்சர்கள் அனைவரையும் அவரே நியமிக்கின்ருர்; எந்தெந்த அமைச்சர் எந்தெந்தத் துறைக்குத் தலைவர் என்பதையும் அவரே தீர்மானம் செய்கிருர். தன்னுடைய நம்பிக்கைக்கும் கருத்துக்கும் ஏற்ற வகையில் நடக்கத் தவறும் அமைச்சர்களை அவர் பதவியிலிருந்து நீக்குவார். மேக் மில்லன் (Macmillan) பிரதமராக இருந்த சமயம், தன்னுடைய அரசாங்கம் செல்வாக்கு இழந்து வருவதைக்கண்டு அதற்குப் புதுப் பொலிவையும், தெம்பையும் ஊட்ட, இருபது அமைச்சர்களைக் கொண்டிருந்த கேபினட்டிலிருந்து ஒரே சமயத்தில் (1962) ஏழு அமைச்சர்களை நீக்கிவிட்டு இளைஞர்களை அந்த இடங்களில் அமர்த் திஞர். பிரதமர் பதவியிலிருக்கும் வரைதான் கேபினட்டும் பதவியி லிருக்க முடியும்; அவர் பதவியிலிருந்து விலகிஞல் உடனடியாக மற்ற அமைச்சர்களும் பதவியிலிருந்து விலகுவது மரபு.

கேபினட்டின் கூட்டங்களைப் பிரதமரே கூட்ட முடியும். அக் கூட்டங்கள் டௌனிங் தெருவில் பத்தாம் எண்ணுள்ள (No. 10, Downing Street) அவர் பணிமனையில் நடைபெறும்; கூட்டங் களுக்கு அவரே தலைமை தாங்குவார். பிரதமரால் அங்கீகரிக்கப் பட்ட பொருள்களே அக்கூட்டங்களில் விவாதிக்கப்படலாம்.

கேபினட் குழுக்களும் அவராலேயே நியமிக்கப்படுகின்றன; அவைகளில் பலவற்றிற்கு அவரே தலைமை தாங்குவார். 1945-லிருந்து 1951 வரை முதலமைச்சராய் இருந்த அட்லி ஏழு கேபினட் குழுக்களுக்குத் தலைவராய் இருந்தாராம். அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படியே நியமிக்கப்படுகின்றனர். மேலும் அவர் விருப்பப்படியே விருதுகளும் வழங்கப்படும். பாராளுமன்றத்தைக் கலைப்பது குறித்து அரசியாருக்கு அறிவுரை வழங்கும் உரிமை அவருக்கே உரியதென எண்ணப்படுகிறது. அவர் வேண்டுமென்று விரும்பினால் பொதுமக்கள் சபையின் தலைவராயும் (Leader of the House of Commons) பொறுப்பேற்கலாம். தன் கட்சிக்குப் பாராளுமன்றத்திற்குள்ளேயும், பல சமயங்களில் வெளியிலும் அவரே தலைவர். பிரதமர் தலைவராய் இருப்பதால்தான் தன் பதவிக்காலம் முழுதும் தொடர்ந்து தேர்தல் பிரசாரம் செய்தவண்ணமாய் இருக்கிறார். பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்கிக் கூறியும், முக்கியமான வினாக்களுக்கு விடையளித்தும், கட்சிக் கூட்டங்களில் அடிக்கடி பேசியும், தேசிய விழாக்களிலும் வைபவங்களிலும் கலந்துகொண்டும், தொலைக்காட்சிகளில் (Television) தோன்றியும், நிருபர்களுக்கு பேட்டியளித்தும், மக்கள் மனத்தில் இடம் பெறும் வாய்ப்பு மற்றத் தலைவர்களைவிடப் பிரதமருக்கு அதிகமுண்டு என்பதில் ஐயமில்லை.

அரசாங்கத் துறைகளின் பணிகளை மேற்பார்வை செய்யவும், அவற்றிற்கிடையே எழும் பிணக்குகளைத் தீர்த்துவைக்கவும் பிரதமருக்கு அதிகாரமுண்டு. மற்றத் துறைகளைவிட வெளிநாட்டு உறவுகள் துறையோடு அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பார். காமன்வெல்த் பிரதம மந்திரிகளோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவதும், அவர்கள் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதும் அவரின் உரிமைகளில் அடங்கும். அரசியாரின் அந்தரங்க ஆலோசகராகவும், அரசியாரையும் அமைச்சர்களையும் இணைக்கும் பாலமாகவும் பணியாற்றும் பெருமை அவருக்கு உண்டு.

பிரதமரின் செல்வாக்கு அவரின் ஆளுமையைப் பொறுத்தது. இதுவரை எத்தனையோ பிரதமர்கள் இருந்து சென்ற போதிலும், எல்லோருடைய பெயரும் பீல் (Peel), டிஸ்ரேலி (Disraeli), கிளேட்ஸ்டன் (Gladstone), லாயிட் ஜார்ஜ் (Lloyd George), சர்ச்சில், ஆட்லி ஆகியோரின் பெயர் போன்று வரலாற்று ஏடுகளில் நிலைத்து நிற்பதில்லை. பிரிட்டிஷ் பிரதமர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்; நாடுமுழுதும் பரவியிருக்கும் அரசியல் கட்சி ஒன்றின் பெருந்தலைவர்; விவரிக்கமுடியாத அளவுக்கு விளம்பர வாய்ப்புகள் பெற்றிருப்பவர்; எனவே நாட்டிலுள்ள மற்றத் தலைவர்களைவிட அவர் அதிகச் செல்வாக்கோடு விளங்குவது இயற்கையே.

4. பிரபுக்கள் சபை

(House of Lords)

[முன்னுரை—உலகியல் பிரபுக்கள் — ஆன்மீகப் பிரபுக்கள்—பிரபுக்களின் உரிமைகள்—சபையின் அதிகாரிகள்—சபையின் அதிகாரங்கள்—சபையின் பயனுள்ள சேவைகள்—பிரபுக்கள் சபையைத் திருத்தி அமைத்தல்—சபையின் குறைகள்—உறுப்பினர்களின் தரம்.]

முன்னுரை

அரசியார், பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை ஆகிய முப்பிரிவுகள் கொண்ட அமைப்பே பிரிட்டனில் பாராளுமன்றம் என அழைக்கப்படுகிறது. பிரபுக்கள் சபையை மேல்சபையாகவும் (Upper House), பொதுமக்கள் சபையைக் கீழ்ச்சபையாகவும் (Lower House) கருதுவது மரபு. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை மாதிரியாகக் கொண்டு உலகின் பல நாடுகளில் பாராளுமன்றங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அதைப் பாராளுமன்றங்களின் தாய் என அழைக்கிறோம்.

உலகிலேயே மிகப்பழையது, மிகப்பெரியது என பாராட்டப்படுகிற பெருமை பிரபுக்கள் சபைக்கு உண்டு. எண்ணூறு ஆண்டுகட்கு முன்பு பிரிட்டனை ஆண்ட நார்மானிய (Norman) அரசரான முதலாம் ஹென்றியின் (Henry I, 1100—1135) 'மாமன்றமே' (Magnum Concilium) காலப்போக்கில் வளர்ந்து இன்றைய பிரபுக்கள் சபையாய் காட்சியளிக்கிறது. இச்சபையில் 1000-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உண்டு என்ற செய்தி நம்மை வியப்பிலாழ்த்துகிறது. இந்நூற்றுண்டின் துவக்கத்தில் 591 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இச்சபையில் இன்று 1082 உறுப்பினர்கள் இருக்கின்றனர். பிரபுக்கள் உலகியல் பிரபுக்கள் (Lords Temporal) என்றும், ஆன்மீகப் பிரபுக்கள் (Lords Spiritual) என்றும் இரு வகைப்படுவர்.

உலகியல் பிரபுக்கள்

மரபுரிமைப் பிரபுக்கள் (Hereditary Peers), ஆயுட்காலப் பிரபுக்கள் (Life Peers), சட்டப் பிரபுக்கள் (Law Lords) ஆகியோர் உலகியல் பிரபுக்கள் என்ற வகையில் அடங்குவர். பல தலைமுறைகளில் பல அரசர்களால் பிரபுக்களாய் ஆக்கப்பட்டோரின் வழி வந்தோரே இன்று பிரபுக்கள் சபையில் பெரும்பாலோராய் இருக்கும் மரபுரிமைப் பிரபுக்கள். தந்தைக்குப் பிறகு தலைமகன் என்ற முறையில் வழிவழியாகப் பிரபுக்கள் சபையில் இன்று இடம் பெறுவோரின் எண்ணிக்கை 883 ஆகும். 1963ஆம் ஆண்டின் பிரபுரிமைச் சட்டப்படி (Peerage Act), பிரபுக்கள் சபையில் அமரும் உரிமை பெறும் பிரபு, அவ்வுரிமையை ஏற்க விரும்பவில்லை எனின் அவருடைய ஆயுட்காலம்வரை அதைத் துறக்கலாம்; அவர் காலத்துக்குப் பிறகு அவ்வுரிமை மீண்டும் அவர் மூத்த பிள்ளைக்கு உரியதாகும். மரபுரிமையாகச் சபையில் இடம்பெற ஆண்கள் மாத்திரமே தகுதியுடையோராய் இருந்தது. 1963ஆம் ஆண்டின் சட்டத்தால் மாற்றப்பட்டு, பெண்களுக்கும் அத்தகுதி உண்டென ஒப்புக்கொள்ளப்பட்டது. மரபுரிமைப் பிரபுக்களில் பலர் தற்செயலாய் சபையில் இடம் பெற்றுவிட்ட காரணத்தால், அதன் நடவடிக்கைகளில் ஆர்வமோ அக்கறையோ காட்டுவதில்லை.

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்குவோரின் சேவையைப் பிரபுக்கள் சபை பெறவேண்டி, ஆயுட்காலப் பிரபுக்கள் சிலரை அரசியார் 1958ஆம் ஆண்டின் ஆயுட்கால பிரபுரிமைச் சட்டப்படி நியமிப்பதுண்டு, எதிர்க் கட்சித் தலைவர்களால் சிபாரிசு செய்யப்படும் சிலருக்கும் இப்பெருமை வழங்கப்படுவதும், பெண்களும் ஆயுட்காலப் பிரபுக்களாகப் நியமனம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையைச் சேர்ந்த 100 உறுப்பினர்கள் தற்பொழுது பிரபுக்கள் சபையில் இருக்கின்றனர். இவர்கள் பெற்றிருக்கும் பதவி, இவர்கள் பிள்ளைகளுக்கு மரபுரிமையாக வராது எனக் கூறத் தேவையில்லை.

சட்டத்துறையில் பேரும் புகழும், அறிவும் அனுபவமும் பெற்றிருக்கும் சிலரை, அரசியார் சட்டப் பிரபுக்களாகப் பிரபுக்கள் சபைக்கு நியமிப்பார். இவர்களும் ஆயுட்கால உறுப்பினர்களே. மற்ற உறுப்பினர்களைப் போலல்லாமல், இவர்கள் சம்பளம் பெறுகின்றனர் என்ற செய்தி, மற்ற உறுப்பினர்களுக்கு இல்லாத பொறுப்புகள் இவர்களுக்கு உண்டு என்பதை உணர்த்துகிறது. சட்டப் பிரபுக்கள் என்ற பெயரில் இன்றைய சபையில் ஒன்பது உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

ஆன்மிகப் பிரபுக்கள்

இங்கிலாந்து திருச்சபையின் (Church of England) பிரதிநிதிகளாக இருபத்தாறு சமயகுருமார்கள் பிரபுக்கள் சபையில் இடம் பெறுகின்றனர். கேண்டர்பரி, யார்க் ஆகியவைகளின் அதிமேற்றிராணியார்களும் (Archbishops of Canterbury & York), லண்டன், டர்ஹம், வின்செஸ்டர் ஆகியவைகளின் மேற்றிராணியார்களும் (Bishops of London, Durham and Winchester), மேலும் இருபத்தோரு மூத்த மேற்றிராணியார்களும் திருச்சபையில் அவர்கள் வகிக்கின்ற பதவி அடிப்படையில் சபையின் உறுப்பினர்களாக அமர்கின்றனர். திருச்சபையில் அவர்கள் பதவி நீக்கம் பெற்றால், பிரபுக்கள் சபையிலிருந்தும் அவர்கள் நீங்குவார்கள்.

பிரபுக்களின் உரிமைகள்

பிரபுக்கள் தங்கள் பொறுப்புகளைத் தடங்கலின்றிச் செய்ய சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றனர். சபையின் கூட்டத்திற்கு நாற்பது நாள்கள் முன்பிருந்து நாற்பது நாள்கள்பின் வரை எந்தச் சிவில் குற்றத்திற்காகவும் அவர்களைக் கைது செய்ய முடியாது. சபையின் விவாதங்களில் கலந்துகொண்டு பேச முழு பேச்சுரிமை அவர்களுக்கு உண்டு. ஒவ்வொரு பிரபுவுக்கும் அரசியாரை நேரடியாகச் சந்தித்துப் பேச அளிக்கப்பட்டிருக்கும் உரிமை, பொது மக்கள் சபையின் பிரதிநிதிகளுக்கு இல்லாத சிறப்புரிமையாகும். சபையை யாராவது அவமதிப்பதாகத் தெரிந்தால் அவர்களைத் தண்டிக்கக்கூடிய உரிமையும் உறுப்பினர்களுக்கு உண்டு. மேற்கண்ட உரிமைகளைச் சபை அரசியாரிடமிருந்தோ, மற்றவரிடமிருந்தோ கேட்டுப் பெறுவதில்லை; அவை நெடுங்காலமாய் பிரபுக்கள் சபைக்கு இயல்பாகவே உரியனவாய் இருந்திருக்கின்றன.

சபையின் அதிகாரிகள்

சான்சலர் பிரபுவே பிரபுக்கள் சபையின் தலைவர். துணைத் தலைவர்கள் சிலரும் அரசியாரால் நியமிக்கப்படுவார்கள். குழுக்களின் தலைவர் பிரபு (Lord Chairman of the Committees) என்பவரே முதலாவது துணைத்தலைவராய் பொறுப்பேற்று, சபையின் குழுக்களுக்குத் தலைமை தாங்குவார். இவர்களைத் தவிர, பாராளுமன்ற எழுத்தர் (Clerk of the Parliaments), வினைமுறை அலுவலர் (Serjeant-at-arms) போன்ற நிரந்தர அலுவலர்கள் சிலரும் இருக்கின்றனர்.

பிரபுக்கள் சபையில் 1000-க்கு மேலான உறுப்பினர்கள் இருக்கின்றபோதிலும், சபையின் கூட்டங்களுக்குச் சராசரியாக 100 பேர்கூட வருவதில்லையாம். கூட்டம் நடத்துவதற்குக் குறைந்த

அளவு மூன்று பிரபுக்கள் வந்தால் போதுமானது. சட்டங்கள் இயற்ற வேண்டுமெனின் குறைந்தது முப்பது பிரபுக்களாவது சபையில் இருக்கவேண்டும். 1964ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு வரும் உறுப்பினர்களுக்குப் பயணப்படியைத் தவிர நாளொன்றுக்கு $4\frac{1}{2}$ கினிகள் (guineas) ஊதியம் வழங்கப்படுகிறது. சபைக்கு வருகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாய் இருப்பதால், கீழ்ச்சபை போன்று மேல்சபையில் நிறைய குழுக்கள் அமைக்க முடிவதில்லை. அநேகமாக எல்லா மசோதாக்களும் நிறைமன்ற குழுவில் (Committee of the Whole House) விவாதிக்கப்படுகின்றன.

சபையின் அதிகாரங்கள்

நீதி நிர்வாகமே பிரபுக்கள் சபையின் முக்கியமான அதிகாரமெனக் கருதப்படுகிறது. ஐக்கிய அரசின் பல்வேறு பகுதிகளில் எழும் சிவில், குற்றவியல் வழக்குகளுக்கு, பிரபுக்கள் சபையே மேல்முறையீடு நீதிமன்றமாக இயங்குகிறது. பிரபுக்கள் சபை நீதிமன்றமாக வேலை செய்யும்பொழுது, எல்லாப் பிரபுக்களும் சபையில் அமராமல், சட்டப் பிரபுக்களும், முன்பு நீதித்துறையில் பெரும் பதவிகள் வகித்துத் தற்பொழுது பிரபுக்கள் சபையில் இடம் பெற்றிருக்கும் பிரபுக்களும் மட்டுமே நீதிபதிகளாக அமர்ந்து, வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புகள் வழங்குவார்கள். சட்டப்படி எல்லாப் பிரபுக்களுக்கும் உரியதான உரிமையொன்று, மரபுப்படி சட்டப் பிரபுக்களுக்கும், சட்டத்தோடு தொடர்பு கொண்டிருந்த மற்றப் பிரபுக்களுக்கும்மட்டுமே உரியதாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சட்ட மன்றமானது உயர் நீதிமன்றமாகவும் இயங்கும் புதுமையை பிரிட்டிஷ் அரசியலமைப்பைத் தவிர வேறெந்த அரசியலமைப்பிலும் நாம் பார்ப்பதற்கில்லை.

அரசின் உயரதிகாரிகள், பெருங்குற்றங்களுக்காகவும், தவறான நடத்தைகளுக்காகவும் குற்றம் சாட்டப்படும் நீதிமன்றமாகவும் (Court of Impeachment) பிரபுக்கள் சபை விளங்கியதுண்டு. 1788-லிருந்து 1795 வரை நடைபெற்ற வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) மீதான குற்றச்சாட்டு நடவடிக்கைகளை அறியாத வரலாற்று மாணவர்கள் இருக்கமாட்டார்கள். 1805ஆம் ஆண்டிற்குப் பிறகு பிரிட்டனில் குற்றச்சாட்டு விசாரணைகள் எதுவுமே நடைபெறவில்லை. தற்காலத்தில் அமைச்சர்கள்போன்ற அதிகாரிகளை நீக்க, பொதுமக்கள் சபையின் சாதாரணத் தீர்மானங்களே போதுமானதாகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பொதுமக்கள் சபைக்கு இணையான சட்டமியற்றும் அதிகாரங்கள் பிரபுக்கள்

சபைக்கு இருந்து வந்தது. 1909ஆம் ஆண்டில் லிபரல் கட்சி சமர்ப்பித்த வரவுசெலவுத் திட்டத்தை பிரபுக்கள் சபை ஏற்க மறுத்து அரசியலில் பெருஞ் சிக்கலைத் தோற்றுவித்ததன் பயனாக, அதன் அதிகாரம் 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின் வாயிலாகக் குறைக்கப்பட்டது. இச் சட்டத்தின் விதிகள்படி, பொதுமக்கள் சபையால் இயற்றப்படும் பண மசோதாக்களுக்குப் பிரபுக்கள் சபை ஒருமாத காலத்திற்குள் தன் இசைவினைத் தெரிவிக்காவிட்டால், அவை தாமாகவே சட்டங்களாகும். பண மசோதாவின் இலக்கணம் சட்டத்திலேயே விளக்கப்பட்டிருக்கிறது; ஒரு குறிப்பிட்ட மசோதா, பண மசோதாவா, சாதாரண மசோதாவா என்று ஐயப்பாடு எழுமாயின், அதுபற்றிச் சபாநாயகரின் தீர்ப்பே இறுதியான தீர்ப்பாகும். சாதாரண மசோதாக்கள் பொதுமக்கள் சபையில் மூன்று கூட்டத் தொடர்களில் (Sessions) இயற்றப்பட்டு, முதல் கூட்டத் தொடரின் முதலாவது வாசிப்பிற்கும், மூன்றும் கூட்டத் தொடரின் மூன்றாவது வாசிப்பிற்கும் இடையே இரண்டாண்டுகள் கடந்திருக்குமானால், பிரபுக்கள் சபையின் இசைவைப்பெறாமலே அவை சட்டங்களாகும். 1911ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டப்படி, பிரபுக்கள் சபை பண மசோதாக்களை ஒருமாத காலத்திற்கும், சாதாரண மசோதாக்களை இரண்டாண்டு காலத்திற்கும் தற்காலிகமாகத் தள்ளிவைக்கலாமே ஒழிய, முற்றிலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது அறியத் தக்கது. பல நூற்றாண்டுகளாகச் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பொதுமக்கள் சபையோடு சமமாக அனுபவித்து வந்த பிரபுக்கள் சபை, 1911ஆம் ஆண்டில் தன் அதிகாரத்தைப் பெருமளவுக்கு இழந்தது.

பிரபுக்கள் சபையிலுள்ள கன்சர்வேடிவ்கட்சியினர்சீர்திருத்தச் சட்டங்கள் உடனடியாக இயற்றப்படுவதற்குத் தடையாய் இருப்பதைக் கண்ட தொழிற்கட்சி, 1949ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தை இயற்றி, பிரபுக்கள் சபையின் அதிகாரத்தை மேலும் குறைத்தது. இச்சட்டத்தின் விதிகள்படி, சாதாரண மசோதாக்கள் பொதுமக்கள் சபையால் இரண்டு கூட்டத் தொடர்களில் இயற்றப்பட்டு, முதலாம் கூட்டத் தொடரின் இரண்டாம் வாசிப்பிற்கும், இரண்டாம் கூட்டத் தொடரின் மூன்றும் வாசிப்பிற்கும் இடையே ஓராண்டு கடந்திருக்குமானால், பிரபுக்கள் சபையின் இசைவைப் பெறாமலே அவை சட்டங்களாகும். 1911, 1949 ஆகிய ஆண்டுகளின் பாராளுமன்றச் சட்டங்கள் பிரபுக்கள் சபையின் செல்வாக்கை மிகவும் குறைத்து, பொதுமக்கள் சபையின் செல்வாக்கை மிகவும் உயர்த்திவிட்டன.

சபையின் பயனுள்ள சேவைகள்

ஒரு சிறந்த மேல்சபை என்னென்ன சேவைகள் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறதோ, அத்தனை சேவைகளையும் பிரபுக்கள் சபை செய்வதாக பிரைஸ் பிரபு கருதுகிறார். 1. பொது மக்கள் சபை அவசரமாக இயற்றும் மசோதாக்களை, பிரபுக்கள் சபை நிதானமாக ஆராய்ந்து, அவற்றிலுள்ள தவறுகளைக் களைய முற்படுகிறது. கீழ்ச்சபையில் மசோதாக்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப் போதுமான நேரமில்லாத இக்காலத்தில், மேல் சபையின் இப்பணி வரவேற்கத் தக்கதாகும். 2. கருத்து வேறுபாடுகளுக்கு இடமற்ற மசோதாக்களை (Non-Controversial Bills) முதலில் பிரபுக்கள் சபையில் தோற்றுவித்து, அங்கே தக்க வடிவில் அவற்றை அமைத்துக் கொள்வதால், பின்னர் அவை பொதுமக்கள் சபைக்கு அனுப்பப்படும்பொழுது அதன் நேரத்தையும் சக்தியையும் வீணாக்காமல் அதன் இசைவை எளிதாகப் பெறுகிறது. 3. மசோதாக்கள் தோற்றுவிக்கப்பட்ட உடனே சட்டங்களாகாமல், சிறிது காலங்கழித்துச் சட்டங்களாவதற்கு பிரபுக்கள் சபை வகைசெய்கிறது. அந்த இடைக்காலத்தில் மசோதாக்களைப்பற்றிப் பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பாராளுமன்றம் அறிய முடிகிறது; மக்களால் ஆதரிக்கப்படும் மசோதாக்களைக் கைவிடுவதற்கும் பிரபுக்கள் சபையால் செய்யப்படும் காலதாமதம் துணை செய்கிறது, 4. பெரும் பிரச்சினைகள் குறித்து, கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று, முழுமையாகவும், தடைகளின்றியும் அவற்றை விவாதிப்பதற்கு ஏற்ற பேரவையாய் பிரபுக்கள் சபை விளங்குகிறது. அயல்நாட்டுக் கொள்கை போன்ற சிக்கலுள்ள பொருள்களைப்பற்றிப் பொதுமக்கள் சபை சாவதானமாக விவாதிக்கக்கூடிய நிலையிலில்லாத இக் காலத்தில், பிரபுக்கள் சபையின் அவசியம் உணரப்படுகிறது.

பிரபுக்கள் சபையைத் திருத்தி அமைத்தல்

1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின் முன்னுரை, பிரபுக்கள் சபை திருத்தி அமைக்கப்படவேண்டிய நிறுவனம் என்பதை வலியுறுத்துகிறது. முதலாம் உலகப்போர் சமயத்தில் லாயிட் ஜார்ஜ் (Lloyd George) அரசாங்கத்தால் பிரைஸ் பிரபுவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, பிரபுக்கள் சபை எந்த வடிவில் திருத்தப்படலாம் என்பதற்கான சில யோசனைகளைத் தெரிவித்தது. புதுச் சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென்றும், அவர்களில் பலர் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களாகவும், சிலர் நியமிக்கப்படும் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்

பட்டது. 327 உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும் திருந்திய சபையில், 246 உறுப்பினர்கள் பொதுமக்கள் சபையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 81 உறுப்பினர்கள் இரு சபை அங்கத்தினர்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக்குழு ஒன்றினால் பிரபுக்களிலிருந்து நியமிக்கப்படுவார்கள். எல்லா உறுப்பினர்களும் பன்னிரண்டு ஆண்டுகள் பதவியிலிருப்பார்கள். கீழ்ச்சபைக்கும் மேல்சபைக்குமிடையே கருத்து வேறுபாடுகள் எழுமானால், அவை, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பின்பற்றப்படும் முறையைப் போன்று, இரு சபைகளின் பிரதிநிதிகள் அடங்கிய சமரசக் குழுவினால் தீர்த்துவைக்கப்பட வேண்டும். பிரபுக்கள் சபையைத் திருத்தி அமைத்தலைப்பற்றி இதுவரை பலராலும் கூறப்பட்டிருக்கும் யோசனைகளில் பிரைஸ் குழுவின் யோசனைகளை சிறந்தவை என எண்ணப்படுகிறது; எனினும் அது இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1957ஆம் ஆண்டில் பென் (A. W. Benn) என்னும் அரசியல்வாதி இப்பொழுதிருக்கும் பிரிவி கவுன்சிலை (Privy Council) பிரபுக்கள் சபைக்குப் பதிலாகப் புதிய மேல்சபையாக மாற்றி அமைக்கலாம் என்ற புதுமையான கருத்தைத் தெரிவித்தார். ட்யூடர் (Tudor) காலம்வரை செல்வாக்கோடு திகழ்ந்த பிரிவி கவுன்சிலை மீண்டும் அதன் பழைய நிலைக்குக் கொண்டுசெல்ல விரும்புவது நியாயமே. மேலும், இன்றைய பிரிவி கவுன்சிலில் இருக்கும் நீதிக் குழு (Judicial Committee) பிரபுக்கள் சபையின் நீதிநிர்வாகப் பொறுப்பை எந்தவிதமான இடரின்றியும் ஏற்கலாம். முன்னாள் அமைச்சர்கள் அனைவரும் பிரிவி கவுன்சில் உறுப்பினர்களாய் இருப்பதால், மேல்சபையில் பேரும் புகழுமுள்ள உறுப்பினர்களுக்குக் குறைவிராது. மேலும் பிரதமராகப் பார்த்துப் பிரிவி கவுன்சிலர்களை நியமிப்பதால், அதில் பெண்கள், காமன்வெல்த் அரசியல் பிரமுகர்கள், சமயத்துறை சான்றோர் ஆகியோரும் இடம்பெற வாய்ப்புண்டு. இப்பொழுது இருக்கும் பிரபுக்கள் சபையில் இங்கிலாந்து திருச்சபையின் பெரியோர்களுக்கு மட்டும் இடமளிக்கும் முறையை மாற்றி, எல்லாப் பிரிவு திருச்சபைகளின் பெரியோர்களுக்கும் புதிய சபை இடமளிக்கும். இரு சபைகளுக்குமிடையே நிலவ வேண்டிய தொடர்புகளை ஆராயும் பென், கீழ்ச்சபை அனுப்பும் மசோதாவை மேல்சபை மூன்று மாதத்திற்குள் ஏற்காவிடில், கீழ்ச்சபை அதை மீண்டுமொருமுறை இயற்றினால் அது சட்டமாக வேண்டுமென விரும்புகிறார். பிரபுக்கள் சபையின் அதிகாரத்தை மிக மோசமாகக் குறைக்கக் கோருவது இத் திட்டத்தின் பெருங் குறையாகும்.

பிரபுக்கள் சபையை எப்படி மாற்றி அமைத்தாலும், அதில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுக்கு இடமளிப்பது அவசிய மாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் சபையில் அமர்ந் தால், அதன் அதிகாரம் இப்பொழுதிருப்பதைவிட அதிகரிக்கப் படுவதே பொருத்தமாகும். ஆனால் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தை அதிகரிப்பதென்பது, பொதுமக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்குச் சமம்; பொதுமக்கள் சபையின் அதிகாரம் குறைக்கப்படுவதை பிரிட்டிஷ்காரர்கள் விரும்பமாட் டார்கள் என்பது உறுதி. பிரபுக்கள் சபையில் எவ்வளவோ குறைபாடுகள் இருப்பினும், அது இருந்தபடியே இருக்கட்டும் என்ற எண்ணமே நாட்டில் பெரும்பாலோரின் எண்ணமாய் இருக் கிறது. சில ஆண்டுகட்கு முன்பு பிரபுக்கள் சபையைக் கலைத்துவிட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதைக் கலைக்க வேண்டிய அவசியமில்லை என்பதே தற்காலக் கருத்தாய் தோன்று கிறது. 1911, 1949ஆம் ஆண்டுகளின் சட்டங்களின் விளைவாய் அதிகாரங்களை இழந்து, பல் பிடுங்கப்பட்ட பாம்பாய் நடமாடும் பிரபுக்கள் சபையைக் கண்டு அஞ்சவேண்டிய அவசியமில்லாத இக்காலத்தில் அதை ஏன் கலைக்கவேண்டும்?

சபையின் குறைகள்

பிரபுக்கள் சபையில் பெரும்பாலான பிரபுக்கள் மரபுரிமைப் பிரபுக்களாய் இருப்பது அதன் பெருங்குறை என்பதில் ஐயமில்லை. பரம்பரை உறுப்பினர்களின் பதவி அவர்கள் செய்த தொண் டிற்காக வழங்கப்பட்டதன்று; பல தலைமுறைகளுக்கு முன்பாக அவர்களின் முன்னோர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகளின் பயனை அவர்களின் சந்ததியினர் அனுபவிப்பது முறையன்று. இருபதாம் நூற்றாண்டில் பரம்பரை உரிமையின் அடிப்படையில் பாராளுமன் றத்தின் பெரும் பகுதியினர் பதவியிலிருப்பதை லாஸ்க்கி (H. J. Laski) என்னும் அரசியல் அறிஞர் 'ஆதரிப்பதற்கு அருகதையற்ற கால முரண்பாடு' (Indefensible Anachronism) எனக் குறிப்பிடுகிறார். மக்களாட்சி அரசாங்கமும் பரம்பரை பதவிகளும் ஒன்றிற்கொன்று முரணானவை எனச் சொல்லத் தேவையில்லை.

பொதுமக்கள் சபையில் எந்தக் கட்சி பெரும்பான்மையான கட்சியாய் இருந்தாலும், பிரபுக்கள் சபையில் கன்சர்வேடிவ் கட்சியே எக்காலத்திலும் நிரந்தரமாகப் பெரும்பான்மைக் கட்சியாய் இருப்பது அச்சபையின் மற்றொரு குறையாகப் பேசப் படுகிறது. ஆளுங்கட்சி கன்சர்வேடிவ் கட்சியாய் இருந்தால் பிரபுக்கள் சபை அதனுடன் ஒத்துழைப்பதும், வேறு கட்சியாய்

இருந்தால் ஒத்துழைக்க மறுப்பதும் விரும்பத்தக்க செயல்களன்று. மேலும் பிரபுக்கள் சபையில் பெரும்பாலோர் சீர்திருத்தக் கருத்துகளை எதிர்க்கும் போக்குடையவர்களாய் காணப்படுகிறார்கள். மக்களில் பெரும்பாலோருக்கு வாக்குரிமை வழங்கிய 1832ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டத்தைத் தடைசெய்யப் பிரபுக்கள் அரும்பாடுபட்டதை வரலாற்று மாணவர்கள் மறக்க முடியாது. பிரபுக்கள் சபை பணக்காரர்கள் சபையாகவும், பழமை விரும்பிகள் சபையாகவும் கருதப்படுவது அதன் பெருமைக்கு உகந்ததன்று.

உறுப்பினர்களின் தரம்

சபையின் கூட்டங்களுக்குப் பெரும்பாலான பிரபுக்கள் வருவதில்லை என்றாலும், வருகின்ற பிரபுக்கள் உயர்ந்த பண்புகளுள்ள உறுப்பினர்கள் என்பதில் ஐயமில்லை. இதைக் கருத்தில் கொண்டு தான் பிரபுக்கள் சபையை 'வாழும் மூதறிஞர்களின் வெஸ்ட்மினிஸ்டர் திருமடம்' (Westminster Abbey of living Celebrities) என அழைக்கின்றனர். பொதுமக்கள் சபை ஒரு வகையில் பிரதிநிதிகள் சபை என்றால், பிரபுக்கள் சபையும் வேறொரு வகையில் பிரதிநிதிகள் சபையே. பெருநிலக்கிழார்களும், தொழிலதிபர்களும், வர்த்தகர்களும், வழக்கறிஞர்களும், சமயத் தலைவர்களும் தங்கள் தங்கள் இனத்தின் பிரதிநிதிகளாக அமரும் பிரபுக்கள் சபையும் பிரதிநிதிகள் சபைதானே! அறிவிலும் அனுபவத்திலும், பிரிட்டிஷ் பிரபுக்கள், பொதுமக்கள் சபையின் பிரதிநிதிகளுக்குத் தாழ்ந்தவர்களில்லை என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்படும் செய்தியாகும். பிரபுக்கள் சபையில் குறைபாடுகள் உண்டென்ற கருத்தைப் பிரபுக்களே ஏற்கின்றனர். மனிதனால் ஆக்கப்படும் எந்த நிறுவனத்தில் குறைபாடில்லை?

5. பொதுமக்கள் சபை

(House of Commons)

[முன்னுரை — சபையின் அமைப்பு — சபையின் அதிகாரங்கள் : (அ) சட்டத் துறை—(ஆ) ஆட்சித் துறை—(இ) நிதித் துறை—(ஈ) குற்றங்குறைகளைக் களைதல்—(உ) தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்.]

முன்னுரை

ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளாக இயங்கிவரும் பிரிட்டிஷ் பொதுமக்கள் சபை இன்று உலகில் இருக்கின்ற சட்டமன்றங்களுள் மிக மேலானதாய் கருதப்படுகிறது. பொதுமக்கள் சபையே பாராளுமன்றம் என்று எண்ணக்கூடிய அளவுக்கு அது சிறப்பும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்கிறது. மற்ற நாடுகளின் சட்டமன்றங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் அமையும் பொதுமக்கள் சபை, ஒரே நாளில் தோன்றியதன்று. அரசர்க்கெதிராக அது பல நூற்றாண்டுகள் போராடிய வரலாறு, அதன் இன்றைய வளர்ச்சியின் பின்னணியாக அமைகிறது.

சபையின் அமைப்பு

பிரிட்டிஷ் பொதுமக்கள் சபை 630 ஆண், பெண் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஒரு பெரிய சட்டமன்றமாகும். ஐக்கிய அரசின் பல்வேறு பகுதிகளான இங்கிலாந்திலிருந்து 511 உறுப்பினர்களும், வேல்ஸிலிருந்து 36 உறுப்பினர்களும், ஸ்காட்லாந்திலிருந்து 71 உறுப்பினர்களும், வட அயர்லாந்திலிருந்து 12 உறுப்பினர்களும் வெஸ்ட்மினிஸ்டரில் கூடும் சட்டமன்றத்தில் அமர்கின்றனர். 630 தொகுதிகளிலிருந்து வரும் 630 உறுப்பினர்களில் ஒவ்வொருவரும் ஏறத்தாழ 58,000 வாக்காளர்களின் பிரதிநிதியாகப் பொறுப்பேற்கிறார். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய பகுதிகளின் நிரந்தர எல்லைக் குழுக்கள் (Permanent Boundary Commissions) பத்துத் பதினைந்து ஆண்டுகட்கு ஒருமுறை தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை மாற்றி

அமைக்க வேண்டியது குறித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும். 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டப்படி பொது மக்கள் சபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஐந்து ஆண்டுகள் முடிவடைவதற்கு முன் பாகவே, பிரதம மந்திரியின் அறிவுரைப்படி அரசியார் சபையைக் கலைக்கலாம். போர்க்காலங்களில் சபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகட்கு மேலாக நீடிப்பதுண்டு. முதலாம் உலகப் போரின் பொழுது எட்டு ஆண்டுகளும், இரண்டாம் உலகப் போரின் பொழுது பத்து ஆண்டுகளும் பொதுமக்கள் சபை பதவியிலிருந்து குறிப்பிடத்தக்கது.

தேர்தல் தொடர்புள்ள விதிகள் அனைத்தையும் 1949ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (Representation of the People Act) தொகுத்தளிக்கிறது. உறுப்பினர்கள் அனைவரும் பிரிட்டிஷ் வாக்காளர்களால், இரகசிய வாக்களிப்புமூலம் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். பதினெட்டு வயது நிரம்பிய ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பிரபுக்கள் சபை உறுப்பினர்கள், அயல்நாட்டவர், பைத்தியங்கள், கடந்த ஐந்து ஆண்டுகட்குள் தேர்தல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப் பட்டோர் ஆகியோருக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது. வாக்குரிமை உடையோர் அனைவரும் சபைக்குத் தேர்ந்தெடுக் கப்பட தகுதியுடையோரே; மத குருமார்கள், ஓட்டாண்டிகள் (Undischarged bankrupts), 1957ஆம் ஆண்டின் பொதுமக்கள் சபைக்குத் தகுதியின்மைச் சட்டத்தால் (House of Commons Disqualification Act) விலக்கப்பட்டிருக்கும் நீதித்துறை அதிகாரிகள், அரசு ஊழியர்கள், படைத் துறையினர் போன்றோர் பொதுமக்கள் சபைக்குப் போட்டியிட முடியாது. வேட்பாளர்கள் எந்தத் தொகு தியிலிருந்து போட்டியிடுகிறார்களோ அந்தத் தொகுதியைச் சேர்ந் தவர்களாய் இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. பதினைந்து ஆண்டுகள் பிரதம மந்திரியாய் இருந்த கிளேட்ஸ்டன் (Gladstone) ஐந்து வெவ்வேறு தொகுதிகளின் பிரதிநிதியாய் தேர்ந்தெடுக்கப் பட்டபோதிலும், எந்தத் தடவையும் அவர், அவரைத் தேர்ந் தெடுத்த தொகுதியில் குடியிருந்ததில்லை. தேர்தல்களில் வாக் காளர்கள் கட்டாயமாக வாக்களிக்க வேண்டுமென்று சட்டமில்லை; இருந்தாலும் 75 சதவிகிதத்துக்கு மேலான வாக்காளர்கள், வாக் களிப்பது தங்கள் கடமை எனக் கருதி வாக்களிக்கின்றனர். படைத் துறையினரும், அரசியாரின் சார்பில் கடல்கடந்த நாடுகளில் வேலை பார்ப்போரும், அவர்களோடு வசிக்கும் அவர் மனைவியரும் பதிலாள் (Proxy) மூலம் வாக்களிக்கும் உரிமை பெறுகின்றனர். உடற்குறை, தொழிலின் தன்மை போன்ற காரணங்களுக்காக,

நேரடியாக வாக்களிக்க முடியாதோருக்கு அஞ்சல் மூலமாக வாக்களிக்க வசதி செய்துகொடுக்கப்படும்.

பொதுமக்கள் சபையின் பிரதிநிதி ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு 3,250 பவுன்கள் ஊதியம் பெறுகிறார். 1965ஆம் ஆண்டின் அமைச்சர்களின் சம்பளம்-உறுப்பினர்களின் ஒய்வுகால ஊதியச் சட்டம் (Ministerial Salaries and Member's Pensions Act) பத்தாண்டு பாராளுமன்றப் பணிக்கு பிறகு ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கு ஓய்வுகால ஊதியம் அளிப்பதற்கு வகை செய்கிறது. மேலும், பிரபுக்கள் சபைக்கு உள்ள உரிமைகள்போன்று பொதுமக்கள் சபைக்கும் சில உரிமைகள் உண்டு. ஒவ்வொரு புதிய பாராளுமன்றமும் துவங்கும் முன்னர், சபைத்தலைவர் அரசியாரிடமிருந்து 'பண்டைய, ஐயத்திற்கு இடமற்ற உரிமைகளையும், சலுகைகளையும்' வேண்டிப் பெறுவார். சபைக் கூட்டத்திற்கு நாற்பது நாள்கள் முன்பிருந்து, நாற்பது நாள்கள் பின்வரை எந்தச் சிவில் குற்றத்திற்காகவும் உறுப்பினர்களைக் கைது செய்ய முடியாது. சபையின் விவாதங்களில் கலந்துகொண்டு பேச, முழு பேச்சுரிமை அவர்களுக்கு உண்டு. சபை அதன் உரிமைகளை மீறுவோரையும், அதை அவமதிப்போரையும் தண்டிக்க முடியும். சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்போர் சட்டப்படி தகுதியுடையோர்தானா என்று முடிவு செய்யக்கூடிய உரிமையும் அதன் உரிமைகளில் ஒன்றாகும்.

பொதுமக்கள் சபை தன் உறுப்பினர்களிலிருந்து ஒரு தலைவரையும் இரு துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கிறது. இவர்களைத் தவிர நிரந்தர ஊழியர்களாக இருக்கும் ஓர் எழுத்தரும் (Clerk of the House of Commons), ஒரு வினைமுறை அலுவலரும், ஒரு நூலகரும் (Librarian) சபை நன்கு செயல்படத் துணை செய்கின்றனர். பொதுமக்கள் சபையின் அன்றாட நடவடிக்கைகள் 'ஹேன்ஸார்டு' (Hansard) என்ற பெயரில் வெளியிடப்படும் இதழில் பிரசுரிக்கப்படுகின்றன.

பாராளுமன்றக் கூட்டத் தொடர்களைக் கூட்டும் உரிமை அரசியாருக்கு மட்டுமே உண்டு. ஒவ்வோர் ஆண்டும் பாராளுமன்றத்தின் முதற்கூட்டம் அரசியாரால் தொடங்கி வைக்கப்படும். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 160 நாள்கள் சபையின் கூட்டங்கள் நடைபெறும். குறைந்த அளவு 40 உறுப்பினர்களாவது சபையில் இருந்தால்தான் சபை தன் நடவடிக்கைகளைத் தொடங்க முடியும். சபையின் கூட்டங்கள் திங்களிலிருந்து வியாழன் வரையில், ஒவ்வொரு நாளும் மாலை 2-30 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலும், வெள்ளிக்கிழமைகளில் காலை 11 மணியிலிருந்து மாலை 4-30 மணி வரையிலும் நடைபெறும்; சில சமயங்களில்

இரவு முழுவதும் கூட்டம் நடப்பதுண்டு. பொதுமக்கள் சபையில் 630 உறுப்பினர்கள் இருந்தபோதிலும், சபையின் மண்டபத்தில் 350 உறுப்பினர்களுக்கே உட்கார இடமிருக்கிறது. சபையின் பணிகளில் பல, அதன் குழுக்களால் செய்யப்படுகின்றன. குழுக்களில், நிலைக் குழுக்கள், கூட்டத் தொடர் குழுக்கள், ஆய்வுக் குழுக்கள் என்று பலவகை உண்டு. பாராளுமன்றம் செயற்படும் முறைகள் சர் தாமஸ் எர்ஸ்கின் மே (Sir Thomas Erskine May) என்பவரால் நூறு ஆண்டுகட்கு முன் வெளியிடப்பட்ட 'பாராளுமன்ற நடைமுறைகள்' (Parliamentary Procedure) என்ற நூலில் தெளிவாக விவரிக்கப்படுகின்றன. பொதுமக்கள் சபையின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1966ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் சபையில் 127 வழக்கறிஞர்களும், 110 வர்த்தகர்களும், 111 தொழிலாளர் தலைவர்களும், 77 ஆசிரியர்களும், 46 பத்திரிகை ஆசிரியர்களும் இருந்தனர்; அந்தச் சபையில் 26 பெண் பிரதிநிதிகளும் இருந்தனர்; அவர்களில் ஏழு பேர் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும், 19 பேர் தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும், கன்சர்வேடிவ் கட்சியைவிடத் தொழிற் கட்சிப் பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் தருவதை உணர்த்துகிறது.

சபையின் அதிகாரங்கள்

சட்டங்கள் இயற்றும் பொறுப்பே பொதுமக்கள் சபையின் பெரும் பொறுப்பாய் இருப்பதால் அது சட்டசபை என அழைக்கப்படுகிறது. ஐக்கிய அரசுக்கான சட்டங்களை இயற்றுவதோடு அதன் குடியேற்ற நாடுகளுக்கான சட்டங்களை இயற்றும் அதிகாரமும் பொதுமக்கள் சபைக்கு உண்டு. சட்டங்கள் பாராளுமன்றத்தால் ஆக்கப்படுகின்றன எனக் கூறுவதைவிட, பொதுமக்கள் சபையால் ஆக்கப்படுகின்றன எனக் கூறுவதே பொருத்தமாகும். பெரும்பாலான மசோதாக்கள் பொதுமக்கள் சபையில்தான் தோற்றுவிக்கப்படுகின்றன. 1911, 1949ஆம் ஆண்டுகளின் பாராளுமன்றச் சட்டங்கள்படி, பிரபுக்கள் சபை அவற்றைக் கால தாமதம் செய்ய முடியுமே ஒழிய, தடுத்து நிறுத்தி விடமுடியாது. அரசியாரும் எல்லா மசோதாக்களுக்கும் தன் இசைவை அளிப்பதே மரபாகும். எனவே பொதுமக்கள் சபையால் அனுப்பப்படும் மசோதாக்கள் அனைத்தும் சட்டங்களாவது உறுதி. சபையிலுள்ள எந்த உறுப்பினரும் மசோதாவை முன்மொழியலாம் என்றாலும், மிகப் பெரும்பாலான மசோதாக்கள் அமைச்சர்களாலேயே முன்மொழியப் படுகின்றன என்பது அறியத்தக்கது. தற்காலத்தில் மசோதாக்களை

வரைவதும், அவற்றைத் தோற்றுவிப்பதும், அவற்றை விளக்குவதும், அவற்றிற்கு ஆதரவு தேடுவதும் அமைச்சர்களின் பொறுப்பாய்விட்டன. எனவே, மசோதாக்கள் பொதுமக்கள் சபையால் ஆக்கப்படுகின்றன எனக் கூறுவதைவிட, பொதுமக்கள் சபையின் இசைவோடு அமைச்சர்களால் ஆக்கப்படுகின்றன எனக் கூறுவதே சரியாகும்.

ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அமைச்சரவையைக் கட்டுப்படுத்தி, அதைப் பொறுப்புள்ள அரசாங்கமாய் இயங்கச் செய்வதும் பொதுமக்கள் சபையின் கடமையாகும். அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பிரபுக்கள் சபைக்கு இல்லை என்பதும், பொதுமக்கள் சபைக்கு மட்டுமே உண்டு என்பதும் நியாயமான வழக்கமாகக் கருதப்படுகிறது. பொதுமக்கள் சபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரைதான் எந்த அமைச்சரவையும் பதவியிலிருக்க முடியும்; சபையின் நம்பிக்கையை இழக்கும் அமைச்சரவை தானுகவே உடனடியாகப் பதவியிலிருந்து விலகிக் கொள்வது மரபு. பொதுமக்கள் சபை அரசாங்கத்தின்மீது தனக்கு நம்பிக்கையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றினுலோ, அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்படும் மசோதாவை ஏற்க மறுத்தாலோ, அரசாங்கம் கோரும் செலவினங்களை அங்கீகரிக்க மறுத்தாலோ அமைச்சரவை பதவி துறக்கும். ஆனுல் அமைச்சரவை பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்ததாய் இருப்பதாலும், பொதுமக்கள் சபையிலுள்ள பிரதிநிதிகள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாய் இருப்பதாலும், அமைச்சரவையின் செயல்கள் அனைத்தும் பொதுமக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படுவதே வழக்கம். பொதுமக்கள் சபையால் தோற்கடிக்கப்படும் அமைச்சரவை, சில சமயங்களில் பதவியிலிருந்து விலகாமல், தாய்ச் சபையையே கலைக்கும்படி அரசுக்கு ஆலோசனை கூறுவதுமுண்டு. பொதுமக்கள் சபை அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடிவது போல, அமைச்சரவையும் பொதுமக்கள் சபையைக் கட்டுப்படுத்த முடியும் என்பது அறியத்தக்கது.

நாட்டின் நிதி நிலை பொதுமக்கள் சபையின் பொறுப்பென எண்ணப்படுகிறது. சபையைத் 'தேசிய நிதியின் காவலர்' (Guardian of National Finance) எனக் கருதுவது மரபு. பண மசோதாக்கள் அனைத்தும் பொதுமக்கள் சபையில் மட்டுமே தோற்றுவிக்கப்படலாம்; பிரபுக்கள் சபை அவற்றை ஒரு மாத காலத்திற்குள் ஏற்க மறுத்தால், அவை அரசியாரின் இசைவைப் பெற அவருக்கு நேரடியாக அனுப்பப்படும். அரசாங்கத்திற்குரிய வருவாய்த் துறைகளையும், செலவுத் துறைகளையும் பொதுமக்கள் சபையே நிர்ணயிக்கும். சபை வருவாய் மூலங்களை விவாதிக்கும்

பொழுது அது 'வழிவகைகள் குழு' (Committee of Ways and Means) என்றும், செலவுப் பங்கீடுகளை விவாதிக்கும்பொழுது அது 'அளிப்புக் குழு' (Committee of Supply) என்றும் அழைக்கப்படுகிறது. சபையில் பெரும்பாலோரின் இசைவில்லாமல் அரசாங்கம் சிறிதும் பொருள் திரட்ட முடியாதென்பதும், சிறிதும் பொருள் செலவு செய்ய முடியாதென்பதும் சபையின் பெருமைக்குரிய அதிகாரங்களாகும். அரசாங்கத் துறைகளில் பணம் செலவு செய்யப்படும் முறையைத் திறனுய்வு செய்யும் உரிமையும் சபைக்கு உண்டு. தலைமைத் தணிக்கையாளர் (Comptroller and Auditor-General) சமர்ப்பிக்கும் அரசாங்கக் கணக்குகளைப் 'பொதுக் கணக்குக் குழு' (Public Accounts Committee) என்னும் பாராளுமன்றக் குழு தணிக்கை செய்யும். சபையின் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் இக் குழுவிற்கு எதிர்க்கட்சி உறுப்பினர் தலைவராய் இருப்பதே மரபு. அரசாங்கத் துறைகளிலேயே மிகவும் சிக்கல் நிறைந்த துறை நிதித் துறையாகும். நிதி நிர்வாகத்தின் நுணுக்கங்களை அறியக்கூடிய அறிவும் பொறுமையும் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு இருப்பதில்லை. நிதி அமைச்சரால் வேண்டப்படும் கோரிக்கைகளைப் புரிந்தும் புரியாமலும் உறுப்பினர்கள் ஏற்கின்றனர் என்ற கூற்று உண்மையானதே.

பொதுமக்கள் சபை மிகப் பழங்காலந்தொட்டு மக்கள் குறை தெரிவிக்கும் மன்றமாகச் செயல்பட்டு வருகிறது. அரசாங்கம் செய்யவேண்டியதைச் செய்யாததால் ஏற்பட்ட குறைகளையும், செய்யக்கூடாததைச் செய்ததால் ஏற்பட்ட குறைகளையும் உறுப்பினர்கள் எடுத்துக்கூறி, அவற்றிற்குத் தீர்வுகாண முயலும் பொது மன்றமாய் அமைகிறது பொதுமக்கள் சபை. மக்களுக்கு எவ்வளவோ மனக்குறைகள் இருக்கும்; அவ்வளவையும் அரசாங்கம் உணர்ந்திருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. அரசாங்கத்தின் தவறுகளை அது உணரும்படி செய்து, அவற்றைக் களையும்படி சபையில் அதிருப்தி அடைந்திருக்கும் உறுப்பினர்கள் கேட்பார்கள். வினுக்கள் மூலமாகவும், ஒத்திவைப்புக் கோரிக்கைகள் மூலமாகவும் உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசாங்கத்தின் தவறுகளை அம்பலப்படுத்த முயல்வார்கள். சபைக் கூட்டங்கள் நடைபெறும் காலங்களில், திங்கள் கிழமையிலிருந்து வியாழக்கிழமைவரை, ஒவ்வொருநாளும் முக்கால் மணி நேரம் கேள்விகளுக்காக ஒதுக்கப்படுகிறது; இந்தக் கேள்வி பதில் நேரமே சபையின் கவர்ச்சி மிக்க நேரமெனக் கருதப்படுகிறது. சாதாரணக் குடிமக்களுக்குக்கூடத் தங்கள் குறைகளை மனுக்கள்மூலமாகச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரும் உரிமையுண்டு. 1958—59ஆம் ஆண்டில் கில்பர்ட்-சலைவன்

(Gilbert and Sullivan) ஆகியோரின் இசை நாடகங்களின் பதிப்புரிமை ஏதாவது கலைக்குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற விண்ணப்பம் ஒன்று சபைக்கு அனுப்பப்பட்டது; அதில் ஏறத்தாழ ஐந்து லட்சம் மக்கள் கையொப்பமிட்டிருந்தனர். ஆனால், தற்காலத்தில், மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பதற்கு, பொதுமக்கள் சபையை மட்டுமே நம்பியிருப்பதில்லை. பொதுக் கூட்டங்கள், செய்தித் தாள்கள், வானொலி ஆகிய சாதனங்கள் மூலமாகவும் அரசாங்கத்தின் தவறுகள் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

நாட்டின் ஆட்சித்துறைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் இடமாகவும் பொதுமக்கள் சபை விளங்குகிறது. 630 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் பொதுமக்கள் சபையில் பேரும் புகழும் பெறுவது எளிதன்று. கட்சிக் கட்டுப்பாடுகளை ஏற்று, அரசியல் அலுவல்களில் அக்கறைகாட்டி, விவாதங்களில் பங்கேற்று, குழுக்களில் அங்கம்வகித்து, சொந்தத் தொகுதியின் நலனையும் நாட்டின் நலனையும் தங்கள் இரு கண்களாகப் பாவித்து, சுயநலத்தைவிடப் பொதுநலமே உயர்ந்தது என்று எண்ணி, அறிவுடைமையோடு நடந்து கொள்ளும் உறுப்பினர்களே பிற்காலத்தில் அரசாங்கத்தில் முக்கிய அதிகாரிகளாகும் வாய்ப்பைப் பெறுவார்கள். பெருந் தலைவர்கள் ஒரே நாளில் உருவாவதில்லை; அவர்கள் படிப் படியாக வளர்வார்கள். பொதுமக்கள் சபை தலைவர்களின் பயிற்சிப் பள்ளியாய் அமைகிறது. 630 உறுப்பினர்களில் எல்லோரும் பெருந் தலைவர்களாய் மலருவதில்லை. ஆற்றலும் அறிவும் உள்ளவர்கள், தங்களின் ஆற்றலையும் அறிவையும் பொது மக்கள் சபையில் தெளிவாக மெய்ப்பித்த பிறகே, பெரும்பதவிகள் வகிக்க அழைக்கப்படுவார்கள். ஆனால் தற்காலப் பாராளுமன்ற முறை, உறுப்பினர்களுக்குத் தங்கள் திறமையை நிரூபிக்கப் போதுமான வாய்ப்புகள் அளிப்பதாகக் கூற முடியாது. சபையின் நேரத்தில் மிகுதியான பங்கு அமைச்சர்களால் ஆக்கிரமித்துக் கொள்ளப்படுவதால், சாதாரண உறுப்பினர்கள் சபையின் கவனத்தை ஈர்ப்பது எளிதன்று. மேலும் பொதுமக்கள் சபையில் மட்டுமே ஒருவர் பேரும் புகழும் அடைய வழியுண்டு என எண்ணுவது முறையாகாது. சபையில் நுழையாமலேயே அரசியல், பொருளாதார, சமுதாய, சமயத் துறைகளில் பணி செய்து, நாடு போற்றும் தலைவர்களாய் மாறமுடியும்.

6. அவைத் தலைவர்
(Mr. Speaker)

[முன்னுரை—அவைத் தலைவர் தேர்தல்—கட்சிச் சார்பற்ற தலைவர்—அவைத் தலைவரின் பணிகள்.]

பொதுமக்கள் சபையின் தலைவரான அவைத் தலைவரின் நிலையும் பொறுப்புகளும் நாம் வியந்து பாராட்டத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய இத் தலைவர் பதவி, ஆங்கிலேயர்களின் நீதி உணர்ச்சிக்கும் நேர்மை மனப்பான்மைக்கும் சிறந்த சான்றாக விளங்குகிறது. பொதுமக்கள் சபையின் அவைத் தலைவர் நடுநிலை தவறாதவராகவும், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராகவும், செயல் நயம் படைத்தவராகவும், இடையறா விழிப்புடையவராகவும், சட்டமன்றம் செயற்படும் முறைகளைப்பற்றிய விதிகள் முழுதும் தெரிந்தவராகவும், அவையின் பெருமையை நாட்டின் பெருமையாகக் கருதுபவராகவும் இருக்க வேண்டும்.

அவைத் தலைவர் அரசரால் நியமிக்கப்படுகின்ற வழக்கம் இப்பொழுது மறைந்து, பொதுமக்கள் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் நிலவுகிறது. புதிய சபையில் வந்தமர்ந்திருக்கும் எல்லா உறுப்பினர்களின் முன்னிலையில் அவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவரை, அவர் பெயரை முன்மொழிந்தவரும் வழிமொழிந்தவரும் அவருடைய இருக்கைக்கு அழைக்க, அவைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க மறுப்பது போல் பாசாங்கு செய்வாராம். பழங்காலத்தில் சபையின் தீர்மானங்களைத் தலைவர் அரசருக்கு எடுத்துச் சென்றபோது, பல சமயங்களில் அவரின் ஆத்திரத்துக்கு தலைவர் ஆளாகவேண்டியிருந்த ஆபத்தான நாள்களை இச்சடங்கு நமக்கு நினைவூட்டுகிறது. அவைத் தலைவர், அவர் தேர்தல் முடிந்த மறுநாளே பிரபுக்கள் சபைக்குச் சென்று, அரசியாரின் பிரதிநிதிகளைக் கண்டு, பொது மக்கள் சபையின் 'பண்டைய உரிமைகளையும் சலுகைகளையும்'

மீண்டும் தரவேண்டும் எனக் கேட்டுப் பெற்று, தன் அவைக்குத் திரும்பி, சட்டப்படி அரசியாருக்கும் அவருடைய வழித் தோன்றல்களுக்கும் தான் கடப்பாடுடையவராய் இருப்பதாக உறுதிமொழி கூறி, மற்ற உறுப்பினர்களையும் அதேபோன்று உறுதி மொழி எடுத்துக் கொள்ளச் செய்வார். பளபளப்பான கறுப்பு மேலங்கியும், நீண்ட மயிர்க்குல்லாயும் அணிந்து, விழுமிய தோற் றத்தோடும், வீறுர்ந்த நடையோடும், அரசு முத்திரைக்கோல் ஏந்திய காவலர் முன்னே வர, தன் இருக்கையில் வந்தமர்வது கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கும் என அதைக் கண்டவர்கள் சொல்கிறுர்கள். விதானத்தோடு அமைந்த அவர் இருக்கை ஆஸ்திரேலியாவின் அன்பளிப்பாம்.

கட்சி அரசியலில் தீவிர ஈடுபாடற்றவராகவும், இதுவரை அரசாங்கப் பதவிகள் வகிக்காதவராகவும், பொதுமக்கள் சபையின் அகமும் புறமும் நன்குணர்ந்தவராகவும், அவையில் இதுவரை மற்ற உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்காத சாதாரண உறுப்பினராகவும் இருக்கும் ஒருவரையே, சபை தன்னுடையத் தலைவராக தேர்ந்தெடுக்க விரும்புகிறது. பொதுவாக, தலைவரை ஒருமனதாக தேர்ந்தெடுக்கும் முறையே இங்கிலாந்தில் வழக்கமாயிருக்கிறது. ஆளுங்கட்சியினர் எதிர்க் கட்சியினரின் உடன்பாட்டைப் பெற்ற பிறகே, யாரைத் தலைவ ராகத் தேர்ந்தெடுப்பது என்பதைத் தீர்மானிப்பார்கள். பழைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிய பாராளுமன்றமொன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில்கூட, பழைய சபையின் தலைவர் புதிய சபைக்கும் தலைவராகத் தொடர்ந்து பதவியிலிருக்க விரும்பு வாராளுல், அவரையே தலைவராக ஒப்புக்கொள்ளும் பழக்கத் தையும் அங்கே காண்கிறோம். பழைய பாராளுமன்றத்திலிருந்த கட்சி நிலை புதிய பாராளுமன்றத்தில் தலைகீழாய் மாறி இருந்தால் கூட, புதிதாகப் பதவிச்கு வருகிற கட்சியினர் பழைய அவைத் தலைவரைத் தங்கள் புதிய அவையின் தலைவராக வைத்துக் கொள்ளும் செயல், எந்த அளவுக்கு அவைத் தலைவர் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடில்லாமல் நடந்து கொள்கிறுர் என்பதற்குச் சான்ருக அமைகிறது. பொதுத் தேர்தல் களின்பொழுதும் அவைத் தலைவரின் தொகுதியில் அவருக்குப் போட்டியாக யாரும் போட்டியிடுவதில்லை என்ற மரபும் பிரிட்டனில் வளர்ந்திருக்கிறது. 1895-க்கும் 1935-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரே ஒரு முறைதான் அவைத் தலைவரின் தொகுதியில் போட்டியிருந்தது; ஆனுல், அந்தத் தடவைகூட அவைத் தலைவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் தோற்கடிக்கப்பட்டார். அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்

படும் எவரும், எந்த அரசியல் கட்சியோடும் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ஆகையால்தான் எல்லோரும் அவரைத் தங்கள் தலைவராகவும், தங்கள் உரிமைகளின் காப்பாளராகவும் ஒப்புக்கொள்கின்றார்கள். பொதுமக்கள் சபையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும், அவர் கட்சி நடவடிக்கைகளில் கலந்து கொள்வதோ, அரசாங்கத்தில் வேறு பதவிகள் வகிப்பதோ, விரும்பத் தக்கதன்று என்ற நல்ல மரபும் அங்கே தோன்றியிருப்பதை K. C. வியர் குறிப்பிடுகிறார்.

அவைத் தலைவருக்கு வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் குடியிருப்பும், ஆண்டொன்றுக்கு 8,500 பவுன்கள் ஊதியமும் தரப்படுகின்றன. ஓய்வு பெற்ற பிறகு கணிசமான ஓய்வு ஊதியமும், விரும்பினால் பிரபுக்கள் சபையின் உறுப்பினராயிருக்கும் பெருமையும் அவருக்கு உண்டு. அவைத் தலைவர் சபையில் மட்டுமல்லாமல் வெளியிலும், மதிப்போடும் மரியாதையோடும் நடத்தப்படுகிறார் என்பது அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் அவருக்களிக்கப்படும் கண்ணியமான வரவேற்பிலிருந்து தெரிகிறது.

பொதுமக்கள் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி, சபையில் ஒழுங்கையும் அமைதியையும் காத்து, கூட்டங்களை நடத்திக் கொடுக்க வேண்டியது அவைத் தலைவரின் முதன்மையான கடமையாகும். சபையில் குறைந்த அளவு வந்திருக்க வேண்டிய உறுப்பினர்கள் வந்திருக்கிறார்களா என்று எண்ணிப் பார்ப்பதும், தீர்மானங்களை உறுப்பினர்களின் வாக்களிப்புக்கு விட்டு முடிவு அறிவிப்பதும், தீர்மானங்கள்மீது கொண்டுவரப்படும் திருத்தங்களில் எவற்றை ஏற்கலாம், எவற்றை மறுக்கலாம் என்று முடிவு செய்வதும், ஒத்திவைப்புக் கோரிக்கைகளை அனுமதிப்பது அவசியமா இல்லையா என்று தீர்மானிப்பதும், கிளைக் கேள்விகளை எவ்வளவு தூரம் கேட்கவிடலாம் என்று முடிவு செய்வதும் அவைத் தலைவரின் பொறுப்புகளில் அடங்கும். உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்படும்பொழுது, அங்கே உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவா அல்லவா என்பதைக் கண்டறிந்து, அப் பிரச்சினைகளை உரிமைகள் குழு தீர்ப்பிற்கு அனுப்ப வேண்டுமா வேண்டாமா என்று அவரே முடிவு செய்வார். உறுப்பினர்கள் ஒழுக்கக் குறைவாக நடந்து கொள்ளாமலும், பேசியதையே திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிராமலும், சபையின் நடவடிக்கைகள் சரியாய் நடக்காவண்ணம் தடைசெய்யாமலும் அவரே கவனித்துக் கொள்கிறார். அவைத் தலைவரின் ஆணைக்குப் படிய மறுக்கும் உறுப்பினரை, சபையின் மற்ற உறுப்பினர்களின் இணக்கத்தோடு, தாற்காலிகமாக விலக்கி வைக்கும் அதிகாரமும்

அவருக்கு உண்டு. முதல் குற்றமாக இருந்தால் ஐந்து நாள்களும், இரண்டாவது குற்றமாக இருந்தால் இருபத்தொரு நாள்களும், மூன்றாவது குற்றமாக இருந்தால் எத்தனை நாள்கள் வேண்டுமென்றாலும் தண்டனைபெறும் உறுப்பினர் சபையிலிருந்து விலக்கி வைக்கப்படலாம். பெருங் குற்றங்கள் புரிந்தோரை பிக் பென்னில் (Big Ben) உள்ள தனிச் சிறையில் அடைத்து வைக்கும் அதிகாரம் கூட அவைத் தலைவருக்கு உண்டு. சபையிலிருந்து வெளியேற மறுக்கும் உறுப்பினர்களை வெளியேற்ற, அவைத் தலைவர், காவல் படையினரின் துணையை நாடவேண்டிய அவசியமும் ஏற்படும். ஆனால், பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் உறுப்பினர்கள் அவைத் தலைவரின் ஆணைகளுக்குப் பணிய மறுப்பதோ, அவையில் கூச்சலும் குழப்பமும் விளைவிப்பதோ, ஒருவரை ஒருவர் தரக் குறைவான முறையில் திட்டிக்கொள்வதோ, அதன் மரபுகளுக்கு முரணானவை.

உறுப்பினர்களை ஒவ்வொருவராகப் பேச அழைக்கின்ற உரிமை அவைத் தலைவரைச் சார்ந்தது. முக்கியமான மசோதாக்கள்மீது ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் பேசப் போதுமான வாய்ப்புகளை அவர் அளிப்பார். ஒரே சமயத்தில் பலர் பேச எழுந்தாலும், அவைத் தலைவரின் பார்வை யார்மீது படுகிறதோ அவர் பேச அனுமதிக்கப்படுவார்; மற்றவர்கள் இருக்கையில் அமர்த்தப்படுவார்கள். முக்கியமாகப் பாராளுமன்றத்தில் சிறுபான்மையோரின் நலனைக் காப்பது அவைத் தலைவரின் கடமையாகும். பேச விழைகின்றவர்களில் பிரிவி கவுன்சிலர்களுக்கும், விவாதிக்கப்படும் பொருள்பற்றித் தனிப்பயிற்சி உள்ளவர்களுக்கும் சலுகை அளிக்கப்படுவது வழக்கம்.

சாதாரணமாகப் பொதுமக்கள் சபையின் வாக்கெடுப்புகளில் அவைத் தலைவர் கலந்து கொள்வதில்லை; அவ்வாறு கலந்து கொள்வது அவர் நடுநிலையைப் பாதிக்கும் என்ற எண்ணமே இச் செய்கைக்குக் காரணமாகும். ஆனால் சபையில் வந்திருக்கும் உறுப்பினர்களில் ஒரு பாதி மசோதாவுக்குச் சாதகமாகவும், மறுபாதி பாதகமாகவும் வாக்களித்து, வெற்றி தோல்வியற்ற நிலையைத் தோற்றுவிக்குமானால், அப்பொழுது அவைத் தலைவர் தன்னுடைய வாக்கினை அளித்து, மசோதா வென்றதா தோற்றதா என்று தீர்வு காண்பார். இதுபோன்ற அரிய சந்தர்ப்பங்களில்கூடப் புதிய மாற்றங்களைத் தவிர்க்கும் வகையிலும், பழைய நிலையே நீடிக்கும் வகையிலும் அவர் வாக்களிப்பதே மரபாகும்.

ஒரு குறிப்பிட்ட மசோதா, பண மசோதாவா சாதாரண மசோதாவா என்று தீர்மானிக்கும் அதிகாரம் 1911ஆம் ஆண்டு

பாராளுமன்றச் சட்டத்தால் அவைத் தலைவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் யார் என்று ஐயப்பாடு எழுமாயின், 1937ஆம் ஆண்டின் அரசு அமைச்சர்கள் சட்டப்படி, அவைத் தலைவரே அவரை நியமிக்க வேண்டும். பொதுமக்கள் சபையின் நிலைக்குழுக்களின் தலைவர்களை நியமிப்பதற்காக, பத்துப் பேர் அடங்கிய பெயர்ப் பட்டியல் (Chairmen's Panel) ஒன்றைத் தயார் செய்வதும் இவரே. இவருடைய ஆணையின்பேரில்தான் இடைத் தேர்தல்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளை 'அரசு அலுவலகம்' மேற்கொள்கிறது. பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் அரசியாரைக் காணவேண்டுமென்றால், அவைத் தலைவரின்மூலமாகத்தான் காணவேண்டுமென்ற விதி, அவரின் முக்கியத்துவத்தை இன்னும் அதிகப்படுத்துகிறது. பொதுவாக அவைத் தலைவர் சபையின் பிரதிநிதியாக இருந்து, சபையின் உரிமைகளையும் பெருமைகளையும் பாதுகாத்து, பொதுமக்கள் சபை மற்றப் பாராளுமன்றங்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டியாய் இருப்பதற்குப் பேருதவி புரிகிறார்.

7. சட்டமியற்றும் முறை
(Process of Lawmaking)

[முன்னுரை — மசோதாக்களின் வகைகள் — மசோதாக்களைத் தயாரித்தல்—முதலாம் வாசிப்பு—இரண்டாம் வாசிப்பு—குழுக் கட்டம் —அறிக்கைக் கட்டம் — மூன்றும் வாசிப்பு — பிரபுக்கள் சபையில் மசோதா — அரசியாரின் இசைவு — தனிப்பட்ட உறுப்பினர்கள் மசோதா.]

முன்னுரை

ஐக்கிய அரசின் சட்டங்கள் அரசியார், பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை ஆகிய மூன்று அங்கங்களைக் கொண்டிருக்கும் பாராளுமன்றத்தால் இயற்றப்படுகின்றன. ஐந்தாம் ஹென்றியின் (Henry V) காலத்திலிருந்துதான் (1413-1422) பிரிட்டிஷ் பாராளுமன்றம் சட்டமன்றமாகச் செயற்படத் தலைப்பட்டது. இன்று வெஸ்ட்மினிஸ்டரில் பின்பற்றப்படும் சட்ட ஆக்கமுறை, கடந்த ஐந்நூறு ஆண்டுகளாக மெல்ல மெல்ல வளர்ந்த முறையாகும். பிரிட்டிஷ் முறையைத் தழுவியே மற்ற நாடுகளும் சட்டங்களியற்றுகின்றன என்பது பிரிட்டிஷ் முறையின் சிறப்பை உறுதிப்படுத்துகிறது.

மசோதாக்களின் வகைகள்

நாட்டு மக்கள் அனைவரையும் அல்லது பெரும்பாலோரையும் பாதிக்கும் மசோதாக்கள் 'பொது மசோதாக்கள்' (Public Bills) என அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வாக்குரிமைக்குரிய வயதினை மாற்றும் மசோதா ஒரு பொது மசோதாவாகும். மக்களில் சிலரையே பாதிக்கும் மசோதாக்கள் 'தனி மசோதாக்கள்' (Private Bills) என அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நகராட்சி ஒன்றிற்குக் கடன் திரட்ட அனுமதி வழங்கும் மசோதா ஒரு தனி மசோதாவாகும், மசோதாக்கள் அமைச்சர்களால் தோற்றுவிக்கப்பட்டால் 'அரசாங்க

மசோதாக்கள்' (Government Bills) என்றும், சாதாரண உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்பட்டால் 'தனிப்பட்ட உறுப்பினர்கள் மசோதாக்கள்' (Private Members' Bills) என்றும் அழைக்கப் படுகின்றன. வரி வசூலுக்கும் செலவுகளுக்கும் வகை செய்யும் மசோதாக்கள் 'பண மசோதாக்கள்' என்ற பெயரைத் தாங்கு கின்றன. 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் எவை எவை பண மசோதாக்களாகும் என்பதை விளக்குகிறது. பண மசோதாக்கள் அமைச்சர்களால் மட்டுமே தோற்றுவிக்கப் படலாம்; மேலும் அவை பொதுமக்கள். சபையில் மட்டுமே முன்மொழியப்பட வேண்டும். சாதாரண மசோதாக்களைக் கொண்டுவர பிரபுக்கள் சபைக்கும் பொதுமக்கள் சபைக்கும் சமமான உரிமையுண்டு; எனினும் பெரும்பாலான மசோதாக்கள் பொதுமக்கள் சபையில்தான் தோற்றுவிக்கப்படுகின்றன என்பது அறியத்தக்கது.

மசோதாக்களைத் தயாரித்தல்

மசோதாக்கள் சபையில் முன்மொழியப்படும் முன்பு அது பல பூர்வாங்கக் கட்டங்களை கடக்கும். மசோதா ஒன்றைத் தோற்று விக்க விரும்பும் அமைச்சர், அமைச்சரவை கூட்டமொன்றில் தன் கருத்துகளைத் தெரிவித்து, அவற்றிற்கு மற்ற அமைச்சர்களின் இசைவைப் பெற முயல்வார். அமைச்சரவை இசைந்தால், அது பாராளுமன்ற வழக்கறிஞர்கள் அலுவலகத்துக்கு (Office of the Parliamentary Counsel) அனுப்பப்பட்டு, அங்குள்ள அதிகாரி களால் மசோதாவாக முறைப்படி வரையப்படும். வரை மசோதா (Draft Bill) மீண்டும் அமைச்சரவையின் பார்வைக்கு அனுப்பப் படும்; அது மசோதாவை ஏற்றுக்கொண்டால், மசோதா சபையில் அறிமுகப்படுத்தப்படலாம். பொதுவாக, மசோதாக்கள் சபையில் தோன்றுவதற்கு முன்பாக, ஏறத்தாழ மூன்று மாதங்கள் அவற்றின் பூர்வாங்க ஏற்பாடுகளுக்காகச் செலவிடப்படும். மசோதாக்கள் அனைத்தும் ஒரே அளவுள்ளவையாய் இருப்பதில்லை; சில பெரியவையாயும் சில சிறியவையாயும் இருக்கும். 1958ஆம் ஆண்டின் ஊராட்சி சட்டம் (Local Government Act) நூறு பக்கங் களில் பரவியிருக்கிறது. ஆனால், அதே ஆண்டின் ஆயுள் பிரபுக்கள் சட்டம் இருபது வரிகளில் அடங்கிவிடுகிறது. எல்லா மசோதாக் களும் ஒரே கால அளவில் இயற்றப்படுவதில்லை. சில மசோதாக்கள் ஒரே நாளிலேயும், மற்றும் சில மசோதாக்கள் பல மாதங்களுக்குப் பிறகும் இயற்றப்படுகின்றன.

முதலாம் வாசிப்பு (First Reading)

மசோதாவை வழிநடத்திச் செல்லப் பொறுப்பேற்கும் அமைச்சர், தன் கட்சிக் கொறடாவிடமிருந்து (Whip)

மசோதாவைத் தோற்றுவிப்பதற்குரிய நாளையும் நேரத்தையும் கேட்டறிவார். குறித்த காலத்தில் அவைத் தலைவர் அமைச்சரை மசோதாவை முன்மொழிய அழைக்க, அமைச்சர் இருக்கையி லிருந்து எழுந்து வணங்குவார்; மசோதாவின் தலைப்பு மட்டும் சபையின் எழுத்தரால் வாசிக்கப்படும். சில விநாடிகளே நீடிக்கும் இச் செயல் 'அறிமுகமும் முதலாம் வாசிப்பும்' என அழைக்கப் படுகிறது. எழுத்தர் வாசிக்கும் மசோதாவை 'அச்சிடா வெற்றேடு' (Dummy Bill) எனக் கூறுவது வழக்கம்; ஏனெனில், அதில் மசோதாவின் தலைப்பும் பெயரும் மட்டுமே இருக்கும். மசோதாவின் தொடக்கநிலையைக் குறிக்கும் இக்கட்டம் முதலாம் வாசிப்பு என அழைக்கப்பட்டாலும், அப்பொழுது மசோதா முழு வதும் வாசிக்கப்படுவதில்லை என்பதும், முதலாம் வாசிப்பு என்னும் பெயர் வெறும் சம்பிரதாயமே என்பதும் அறியத் தக்கது. முதலாம் வாசிப்பிற்கு வரும் எல்லா மசோதாக்களையும் மறுப்பின்றி ஏற்பதே சபையின் வழக்கம்.

இரண்டாம் வாசிப்பு (Second Reading)

முதலாம் வாசிப்பு முடிந்தவுடன், மசோதா அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்குத் தரப்படும். அச்சிடப்பட்ட மசோதாவில், மசோதாவின் பெயரெனக் கருதப்படும் அதன் சிறிய தலைப்பும், அதன் நோக்கங்களைச் சுருக்கிக்கூறும் நீண்ட தலைப்பும், அது ஏன் விரும்பத்தக்கது என்பதை விளக்கும் முகப்புரையும், அதன் பல் வேறு சட்டப் பிரிவுகளும், இறுதியாக அட்டவணைகளும் இடம் பெறும். இரண்டாவது வாசிப்பிற்கெனக் குறிக்கப்பட்டிருக்கும் நாளன்று, தொடர்புள்ள அமைச்சர், 'மசோதா இப்பொழுது இரண்டாவது முறையாக வாசிக்கப்படுவதாக' எனத் தொடங்கி அதன் அவசியத்தை வற்புறுத்துவார். அவரை அடுத்து எதிர்க் கட்சித் தலைவர் பேசுவார். மசோதாவைப்பற்றிக் கூட்டு மொத்த மாக அது தேவையா தேவையற்றதா, பயனுள்ளதா பயனற் றதா என்ற பொதுவான அடிப்படையில் விவாதம் நடைபெறும். மசோதாவின் தனித்தனியான விதிகளைப்பற்றி யாரும் விவாதிக்க முடியாது. இரண்டாவது வாசிப்பிற்காகச் சபை ஒரு நாள் முழு வதையும் ஒதுக்குவது வழக்கம்; முக்கியமான மசோதாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று நாள்கள் ஒதுக்கப்படுவதுமுண்டு. மசோதா கடந்து செல்ல வேண்டிய பல கட்டங்களில், இரண் டாவது வாசிப்பே மிக முக்கியமான கட்டமெனக் கருதப்படுகிறது. மசோதாவைத் தோற்றுவிக்கும் அமைச்சரும் சபையின் பெரும் பாலான உறுப்பினர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருப்பதால், அரசாங்க மசோதா சபையில் ஏற்கப்படுவது உறுதி. அப்படி அது ஏற்கப்படாவிட்டால், மசோதா தோல்வியடைவ

தோடல்லாமல், அமைச்சரவையே ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக நேரிடும்.

குழுக் கட்டம் (Committee Stage)

இரண்டாம் வாசிப்பின்பொழுது சபையின் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் மசோதா, அடுத்து, சபையின் நிறைமன்றக் குழுவிற்கோ, அல்லது நிலைக் குழுக்களில் ஒன்றிற்கோ செல்லும். மசோதாவின் பல்வேறு பகுதிகளைத் தீர ஆராய்வதே குழுவின் பொறுப்பாகும். அதன் ஒவ்வொரு விதியும் குழுவால் கூர்ந்து ஆராயப்பட்டு, அதை அப்படியே வைத்துக் கொள்வதா, அல்லது திருத்தி அமைப்பதா, அல்லது நீக்கி விடுவதா என்பது முடிவு செய்யப்படும். ஆனால், முன்பே சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாவின் அடிப்படை கொள்கைகளைக் குழு மாற்ற முயல்வது முறையாகாது. மசோதா குழுவொன்றில் ஆராயப்படும்பொழுது அதற்குப் பொறுப்பேற்கும் அமைச்சரும், தொடர்புள்ள அரசாங்க அதிகாரிகளும், பாராளுமன்ற வழக்கறிஞர்களும் உடனிருந்து குழுவின் வேலையை எளிதாக்குவார்கள். மற்றக் கட்டங்களைவிடக் குழுவில் மசோதாக்கள் அதிக நாள்கள் தங்கியிருக்கும். 1927ஆம் ஆண்டின் திரைப்பட மென்தாள் சட்டம் நிலைக் குழுவில் இருபத்தைந்து நாள்கள் விவாதிக்கப்பட்டது. குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டு வரும் திருத்தங்கள் அத்தனையும் அமைச்சரால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனாலும், அவற்றில் நியாயமானவையாய்த் தோன்றும் திருத்தங்களை ஏற்றுக்கொள்வதே மரபு.

அறிக்கைக் கட்டம் (Report Stage)

குழு மசோதாவைப்பற்றித் தன் முடிவைத் தாய்ச் சபைக்கு அறிவித்த பிறகு, சபையில் நடைபெறும் விவாதமே மசோதாவின் அடுத்த கட்டமாகும்; இது அறிக்கைக் கட்டம் என அழைக்கப்படுகிறது. மசோதாமீது திருத்தங்களைக் கொண்டு வர விரும்பும் உறுப்பினர்கள் இந்தக் கட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வார்கள். குழுவில் மசோதா எவ்வாறு அங்கம் அங்கமாக ஆராயப்பட்டதோ, அதே போன்று இப்பொழுது சபையில் அது ஆராயப்படலாம். குழுவில் எதிர்க்கட்சியினரால் வற்புறுத்தப்பட்டு ஆனால் ஏற்றுக்கொள்ளப்படாத திருத்தங்கள் இப்பொழுது மீண்டும் வற்புறுத்தப்படலாம். இரண்டாம் வாசிப்பிற்குப் பிறகு மசோதா எல்லா உறுப்பினர்களும் அடங்கிய நிறைமன்றக் குழுவினால் விவாதிக்கப்பட்டிருந்தால், அதற்கு அறிக்கைக் கட்டத்தில் விவாதம் அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

மூன்றும் வாசிப்பு (Third Reading)

சபையில் மசோதாவின் கடைசிக் கட்டம் மூன்றும் வாசிப்பு என அழைக்கப்படுகிறது. இரண்டாம் வாசிப்புக்கு என்ன விதிகள் பொருந்துமோ, அதே விதிகள் மூன்றும் வாசிப்புக்கும் பொருந்தும். மசோதா எந்த உருவில் சபைமுன் இருக்கின்றதோ, அதே உருவில் அதை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதுபற்றி மட்டும் உறுப் பினர்கள் விவாதிக்கலாம். மசோதாவின் விதிகளுக்கு எந்தவித மான திருத்தமும் இந்தக் கட்டத்தில் கொண்டுவர முடியாது. மூன்றும் வாசிப்பின்பொழுது மசோதாக்கள் நிராகரிக்கப்படுவது என்பது அரிது. எனவே இக்கட்டத்தையும் ஒரு சம்பிரதாயமாகக் கருதுவோமானுல் அது தவருகாது. பொதுமக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதா, சிவப்பு நாடாவால் கட்டப் பட்டு, பிரபுக்கள் சபைக்கு அதன் இசைவைப் பெற அனுப்பப்படும்.

பிரபுக்கள் சபையில் மசோதா

பொதுமக்கள் சபையில் மசோதா எந்தெந்தக் கட்டங்களைக் கடந்து வந்ததோ, அது போன்ற கட்டங்களைப் பிரபுக்கள் சபையி லும் கடக்கவேண்டும். முதலாம் வாசிப்பு, இரண்டாம் வாசிப்பு, மூன்றும் வாசிப்புப் போன்ற நிலைகள் பிரபுக்கள் சபையிலும் உண்டு. பொதுமக்கள் சபையில் பெரும்பாலான மசோதாக்கள் ஏதாவதொரு நிலைக் குழுவினுல் ஆராயப்படுகிறதென்பதைக் கண்டோம்; ஆனுல், பிரபுக்கள் சபைக்கு வருகிற உறுப்பினர் களின் எண்ணிக்கை நூறுக்குக் குறைவாகவே இருக்குமாதலால், மசோதாக்கள் அனைத்தும் நிறைமன்றக் குழுக்களால் ஆராயப் படுவதே வழக்கம். கீழ்ச்சபையில் மசோதா நன்கு விவாதிக்கப் பட்டுச் சீரான உருவில் அமைக்கப்பட்டுவிடுவதால், மேல் சபை அதன்மீது அதிக நேரம் செலவிடவேண்டிய அவசியம் ஏற்படாது. பொதுமக்கள் சபை அனுப்பும் மசோதாக்களில் பெரும்பாலான வற்றைப் பிரபுக்கள் சபை தயங்காது ஏற்றுக்கொள்வதே மரபு. சில சமயங்களில் கீழ்ச்சபையின் மசோதாக்களுக்கு மேல்சபை திருத் தங்கள் கொண்டுவர முயல்வதும் உண்டு; அதுபோன்ற சமயங் களில் மசோதா மீண்டும் கீழ்ச்சபைக்கு அனுப்பப்படும். பொது மக்கள் சபையின் மசோதாவைப் பிரபுக்கள் சபை ஏற்க மறுத்து, அதுகுறித்துப் பொதுமக்கள் சபை மேற்கொண்டு ஒன்றும் செய்ய வில்லை என்றுல், மசோதா கைவிடப்படும். ஆனுல், **1911**ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டப்படி பிரபுக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படாத பண மசோதாவைப் பொதுமக்கள் சபை நேராக அரசியாருக்கு அனுப்பலாம். **1949ஆம் ஆண்டின் பாராளு** மன்றச் சட்டப்படி மேல்சபையால் நிராகரிக்கப்படும் சாதாரண

மசோதா, மீண்டும், ஓராண்டு கழித்து, கீழ்ச்சபையால் நிறைவேற்றப்பட்டால், மேல்சபையின் இணக்கத்தைப் பெருமலே அதை அரசியாருக்கு அனுப்பலாம்.

அரசியாரின் இசைவு

அரசியாரின் இசைவில்லாமல் எந்த மசோதாவும் சட்டமாவது இயலாது. கடந்த நூறு ஆண்டுகளாக அரசியார் தன் இசைவை மூன்று பிரபுக்கள் அடங்கிய குழு ஒன்றின்மூலமாகப் பிரபுக்கள் சபையில் அறிவிப்பது வழக்கம். அறுநூறு ஆண்டுகட்கு முன்பு எந்த நார்மானிய பிரெஞ்சு (Norman French) சொற்களில் அரசர்கள் தங்கள் ஒப்பத்தினை அளித்தார்களோ, அதே சொற்களில்தான் இன்றும் அரசியாரின் ஒப்பம் அறிவிக்கப் படுகிறது. பாராளுமன்றத்திலிருந்து செல்லும் மசோதாக்கள் அனைத்தையும் அரசியார் மறுக்காமல் ஏற்பதே மரபு. 1707ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசியார் தன் மறுப்பாணையைப் பயன்படுத்தியது கிடையாது என்பது அறியத்தக்கது.

தனிப்பட்ட உறுப்பினர்கள் மசோதா

சாதாரண மசோதாக்களை முன்மொழியும் உரிமை தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு உண்டென்ருலும், அதற்கென அவர்களுக்குத் தரப்படும் நேரம் மிகக் குறைவானதால், இந்த உரிமையை அவர்கள் முழு அளவில் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. நூற்றறுபது நாள்களுக்குமேல் நீடிக்கும் சபையின் கூட்டத் தொடரில், தனிப்பட்ட உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் மசோதாக்களுக்குப் பத்தே நாள்கள்தான் ஒதுக்கப்படுகின்றன. அந்தப் பத்து நாள்களில் ஏறத்தாழ இருபது மசோதாக்களையே தோற்றுவிக்க முடியும்; தோற்றுவிக்கப்படும் மசோதாக்களில் ஐந்தாறு மசோதாக்கள் சட்டங்களாவதே அருமை. பொதுமக்கள் சபையின் உறுப்பினர்களில் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் தனிப்பட்ட உறுப்பினர் இனத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களில் பெரும்பாலோர் மசோதாக்களை முன்மொழிய முயல்வது இயல்பு. உறுப்பினர்களில் யார் யார் மசோதாக்களைத் தோற்றுவிக்கலாம் என்பது திருவுளச் சீட்டு மூலமாக முடிவு செய்யப்படும். மற்றபடி, தனிப்பட்ட உறுப்பினர் மசோதா அரசாங்க மசோதா போன்றே இயற்றப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஆஷ்லி பிரபுவால் (Lord Ashley) தோற்றுவிக்கப்பட்ட தொழிற்சாலை சீர்திருத்தச் சட்டங்கள் அனைத்தும் தனிப்பட்ட உறுப்பினர் மசோதாக்களாகவே தோற்றுவிக்கப்பட்டன. இருபதாம் நூற்ருண்டின்

மிகச் சிறந்த சட்டங்களுள் ஒன்ருன மரண தண்டனை ஒழிப்புச் சட்டம் (Abolition of Death Penalty Act, 1965) அரசாங்கச் சட்டமாக இயற்றப்பட்ட போதிலும், 1955ஆம் ஆண்டிலேயே சிட்னி சில்வர்மேன் (Sydney Silverman) என்னும் பிரதிநிதி அதைத் தனிப்பட்ட உறுப்பினர் சட்டமாக இயற்ற முயன்ருர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனி மசோதாக்கள்

ஊராட்சி அமைப்புகள், போக்குவரத்து நிறுவனங்கள், வர்த்தகக் கழகங்கள், தனிப்பட்ட குடிமக்கள் ஆகியோரும், பாராளுமன்றம் சில மசோதாக்களை ஆக்கித்தர வேண்டுமென்று மனுச் செய்து கொள்ளலாம். மூன்ரும் ஜார்ஜ் மன்னர் காலத்தில் இயற்றப்பட்ட 1,532 வேலியடைப்புச் சட்டங்களும் (Enclosure Acts) தனிச் சட்டங்களே. பத்தொன்பதாம் நூற்ருண்டின் இடைக்காலத்தில் தனிச்சட்டங்களின் எண்ணிக்கை உச்சநிலையை அடைந்தது; 1846ஆம் ஆண்டின் கூட்டத்தொடரில் மட்டும் எழுநூறுக்கு மேற்பட்ட இருப்புப்பாதை மசோதாக்கள் சட்டங்களாயின. ஆனல் தற்காலத்தில் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 35 தனி மசோதாக்களே பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. தனி மசோதாக்களைத் தோற்றுவிக்க விரும்புவோர், ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்த் திங்கள் 27ஆம் நாளுக்கு முன்பாகத் தங்கள் மசோதாவை மனுவோடு இணைத்துத் 'தனி மசோதாவிற்கான அலுவலகத்தில்' (Private Bill Office) பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவாகும் மசோதாவின் நகல் அரசிதழில் வெளியிடப்படுவதோடல்லாமல், தொடர்புடைய அனைவருக்கும் அனுப்பபபட வேண்டும். அவை 'தனி மசோதாக்களின் மனுக்களை ஆராய்வோர்' (Examiners of Petitions for Private Bills) என அழைக்கப்படும் அதிகாரிகளால் ஆராயப்படும். முறைப்படி அமைந்திருக்கும் மசோதாக்களில் எவை எவை எந்தெந்தச் சபையில் முன்மொழியப்பட வேண்டுமென்பது இரு சபைகளின் தலைவர்களாலும் முடிவு செய்யப்படும். மற்ற மசோதாக்களைப்போலத் தனி மசோதாக்களுக்கும் முதலாம் வாசிப்பு என்பது வெறும் சடங்கே. இரண்டாம் வாசிப்பின் பொழுது மசோதாவை விவாதித்து, அதை ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா என்று சபை முடிவு செய்யும். சபையில் மசோதாவிற்கு எதிர்ப்பு இருக்குமாயின், அது 'எதிர்ப்புள்ள தனி மசோதாக் குழுவிற்கும்', எதிர்ப்பு இல்லையென்ருல் 'எதிர்ப்பற்ற தனி மசோதாக் குழுவிற்கும்' அனுப்பப்படும். ஆட்சேபணைக்குரிய தனி மசோதாவை, குழு, நீதிமன்றம்போல அமர்ந்து விசாரணை செய்யும். மசோதா வேண்டுமென்போரும் வேண்டாமென்

போரும், வழக்கறிஞர்கள் மூலமாகத் தங்கள் வாதப் பிரதி வாதங்களைக் குழுவின் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படுவார்கள். மசோதாவால் பாதிக்கப்படும் குடிமக்களில் எவரும், அதைப்பற்றிச் சாதகமாகவோ பாதகமாகவோ குழுவிற்குத் தங்கள் கருத்துகளை விளக்கலாம். தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளும் குழுவின் முன் தோன்றி மசோதாவைப்பற்றி அவர்களுடைய எண்ணங்களை எடுத்துரைக்கும்படி அழைக்கப்படுவார்கள். தீர விசாரித்த பிறகு, குழு, மசோதா அவசியமென்று முடிவு செய்தால் சபை அதை ஏற்றுக்கொள்ளும்படியும், அவசியமில்லை என்று முடிவு செய்தால் நிராகரிக்கும்படியும் சிபாரிசு செய்யும். குழுவின் சிபாரிசுகளைச் சபை ஏற்றுக்கொள்வதே மரபு. மேற்கொண்டு தனி மசோதாக்கள் மற்ற மசோதாக்களைப் போலவே நடத்தப்படும். தனி மசோதாக்களை இயற்றுவது பெருஞ்செலவு பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. பொதுவாக ஆயிரம் பவுன்களாவது செலவு செய்யாமல் மசோதாவை நிறைவேற்றுவதென்பது இயலாத காரியமாகும். 1927ஆம் ஆண்டின் கூட்டத்தொடரில் தோற்றுவிக்கப்பட்ட தனி மசோதா ஒன்றிற்காக 17,000 பவுன்கள் செலவிடப்பட்டதாம்; தனி மசோதாக்கள் ஏழை எளியவர்களின் செயலுக்கு அப்பாற்பட்டவை என்பது தெளிவு.

8. குழு முறை

(Committee System)

[முன்னுரை—நிறைமன்றக் குழுக்கள்—நிலைக் குழுக்கள்—ஆய்வுக் குழுக்கள்—கூட்டத்தொடர் ஆய்வுக் குழுக்கள்—கூட்டுக் குழுக்கள்—தனி மசோதாக் குழுக்கள்.]

முன்னுரை

பெரும் பாராளுமன்றங்களனைத்திலும் அவற்றின் பொறுப்புகளில் பெரும்பாலானவை குழுக்களால் நிறைவேற்றப்படுகின்றன. குழுக்கள் இல்லாவிட்டால் தற்காலப் பாராளுமன்றங்கள் தங்கள் பணிகளின் சுமையைத் தாங்க முடியாமல் தவிக்கும் என்பதில் ஐயமில்லை. உலகின் பல்வேறு சட்டமன்றங்களில் பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையைப்போல அதிகப்படியான பொறுப்புகளை மேற்கொண்டு களைத்துப் போகும் சட்டமன்றம் வேறெதுவுமில்லை என 1881-ல் கிளேட்ஸ்டன் குறிப்பிட்டார். நூறு ஆண்டுகட்கு முன்பே அப்படியென்றால் தற்காலத்தில் அதன் சுமையைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயங்கும் குழுக்களில் நிறைமன்றக் குழுக்கள், நிலைக் குழுக்கள், ஆய்வுக் குழுக்கள், கூட்டத்தொடர்க் குழுக்கள், கூட்டுக் குழுக்கள், தனி மசோதாக் குழுக்கள் ஆகியவை முக்கியமான குழுக்களாகும்.

நிறைமன்றக் குழுக்கள் (Committees of the Whole House)

சில முக்கியமான மசோதாக்களைச் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் மன்றத்தின் உறுப்பினர்களாய் அமராது, குழுவின் உறுப்பினர்களாய் அமர்ந்து ஆராய்வார்கள். சபை, சட்டமன்றம் என்ற பெயரில் அமராமல், நிறைமன்றக் குழு என்ற பெயரில் அமரும்பொழுது, அவைத் தலைவர் சபையை விட்டு வெளியேறுவார். துணைத் தலைவர்களில் ஒருவர் குழுவின் தலைவராய்

அமர்வார்; முத்திரைக்கோல் (mace) மேசைக்கு அடியில் மறைத்து வைக்கப்படும்; சபையின் விதிகள் சற்றுத் தளர்த்தப் படும். சபை, குழுவாக மாறி முக்கியமான பொது மசோதாக்களை விவாதிக்கும்பொழுது அது 'நிறைமன்றச் சாதாரணக் குழு' (Ordinary Committee of the Whole House) என்றும், பொது மசோதா ஒன்றின் பணப் பிரிவுகளை விவாதிக்கும்பொழுது 'நிதித் தீர்மானத்தின்மீதான நிறைமன்றக் குழு' (Committee of the Whole House on a Money Resolution) என்றும், வரி வசூல் மூலங்களை ஆராயும்பொழுது 'வழி வகைகள் குழு' (Committee of Ways and Means) என்றும், செலவினங்களை ஆராயும்பொழுது 'அளிப்புக் குழு' (Committee of Supply) என்றும் அழைக்கப்படு கிறது. பிரபுக்கள் சபையால் இயற்றப்படும் சட்டங்கள் அனைத்தும் அச் சபையின் நிறைமன்றக் குழுவினாலேயே ஆராயப் படும். நிறைமன்றக் குழுக்களின் பயனை உணர்ந்த அமெரிக்க அரசியல் அறிஞர்கள், தங்கள் காங்கிரசிலும் அவற்றையொத்த குழுக்களை அமைத்திருக்கின்றனர்.

நிலைக் குழுக்கள் (Standing Committees)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் நிலைக் குழுக்கள் இன்றைய அமைப்பை அடைந்தன. 1945-லிருந்து 1950வரை ஆட்சிப் பொறுப்பிலிருந்த தொழிற்கட்சி, நிலைக் குழுக் களைப் பெருமளவுக்குப் பயன்படுத்தி ஏராளமான சட்டங்களை இயற்றியது. இன்று பொதுமக்கள் சபையில் ஒன்பது நிலைக் குழுக்கள் இருக்கின்றன. அவற்றில் முதல் ஆறு குழுக்களும் நிலைக் குழுக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ (A, B, C, D, E, F) என்றழைக் கப்படுகின்றன; ஏழாவது குழு 'ஸ்காட்லாந்தின் பெருங் குழு' (Scottish Grand Committee) என்ற பெயரையும், எட்டாவது குழு 'ஸ்காட்லாந்தின் நிலைக் குழு' என்ற பெயரையும், ஒன்ப தாவது குழு 'வேல்ஸின் பெருங்குழு' (Welsh Grand Committee) என்ற பெயரையும் தாங்கி நிற்கின்றன. முதல் ஆறு குழுக்கள் ஒவ்வொன்றிலும் இருபதிற்குக் குறையாமலும் ஐம்பதிற்கு மிகாமலும் உறுப்பினர்கள் இருப்பார்கள்; ஸ்காட்லாந்தின் பெருங் குழுவில், ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், மேலும் பத்திலிருந்து பதினைந்து வரை இதர உறுப்பினர்களும் இருப்பார்கள்; ஸ்காட்லாந்தின் நிலைக் குழுவில், அப் பகுதியின் பிரதிநிதிகளில் முப்பது பேரும், மேலும், இருபது இதர உறுப்பினர் களும் இருப்பார்கள்; வேல்ஸ் பெருங் குழுவில், வேல்ஸைச் சேர்ந்த முப்பத்தாறு பிரதிநிதிகளும், மேலும் ஐந்திற்கு மிகாத இதர உறுப்பினர்களும் இருப்பார்கள். தாய்ச் சபையில் எந்த விகிதா சாரப்படி வெவ்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் இடம் பெற்

றிருக்கின்றனரோ அதே விகிதாசாரப்படியே குழுவிலும் அவர்கள் இடம் பெறுவார்கள். நிலைக் குழுக்களின் உறுப்பினர்கள் சபையின் நியமனக் குழுவால் நியமிக்கப்படுகிறார்கள்; அவற்றின் தலைவர்கள் ‘ தலைவர்கள் பட்டியலிலிருந்து ’ (Chairmen's Panel) அவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு நிலைக் குழுவும், அதன் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களாவது வந்திருந்தால்தான் தன் வேலையைத் தொடங்க முடியும். பிற்பகலில் சபையின் கூட்டங்கள் நடைபெறுவதால், முற்பகலில் குழுக்களின் கூட்டங்கள் நடைபெறும்; சபையின் மேல் மாடியிலுள்ள குழு அறைகளில் அவற்றின் உறுப்பினர்கள் கூடுவார்கள். நிலைக்குழுக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ ஆகியவை சபையால் அனுப்பப்படும் எந்த மசோதாவையும் ஆராயும்; ஸ்காட்லாந்தின் பெருங் குழு, அந் நாட்டிற்குரிய பொதுவான அலுவல்களைக் கவனிக்கும்; ஸ்காட்லாந்து நிலைக் குழு, அதோடு தொடர்புள்ள மசோதாக்களை ஆராய்ந்து சபைக்கு ஆலோசனை வழங்கும்; வேல்ஸ் பற்றிய விவகாரங்கள், வேல்ஸ் பெருங்குழுவின் கவனத்திற்கு விடப்படும். நிலைக் குழுக்களின் அயரா உழைப்பே மசோதாக்களைச் சட்டங்களாக்குவதால் அவை ‘ சட்டங்களின் பணிமனை ’ (Workshop of Legislation) என அழைக்கப்படுகின்றன.

ஆய்வுக் குழுக்கள் (Select Committees)

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1689ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டதாக ஹாலமும் (Hallam), அவரைப் பின்பற்றி ஆன்சனும் (Anson) குறிப்பிடுகின்றனர். பாராளுமன்றம் ஏதாவது பொருள்பற்றி விவரங்கள் திரட்ட விரும்பினால், அதற்கென ஆய்வுக் குழு ஒன்றை நியமிப்பதே வழக்கம். மன்னரால் நியமிக்கப்படும் ஆய்வு ஆணைக் குழு (Royal Commission) எவ்வாறு விசாரணைக் குழுவாகக் கருதப்படுகிறதோ, அவ்வாறே பொதுமக்கள் சபையின் ஆய்வுக் குழுவும் கருதப்படுகிறது. ஒரு பொருள்பற்றி ஆராய ஆய்வுக் குழு ஒன்றை அமைக்கவேண்டும் எனக் கோரும் உரிமை சபையின் சாதாரண உறுப்பினர்களுக்குக்கூட உண்டென்பது உண்மையானாலும், பொதுவாக அத்தகைய குழுக்கள் அரசாங்கத்தாலேயே அமைக்கப்படும். குழு அமைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றவரே, அதன் ஆய்வுக்குரிய செய்திகளை வரையறை செய்து, அதில் யார் யார் இடம் பெறுவார்கள் என்பதையும் தெரிவிப்பார். குழுவில் எல்லாக் கட்சிகளுக்கும் இடமளிப்பதே மரபு. பொதுவாக ஒவ்வோர் ஆய்வுக் குழுவும் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டதாயிருக்கும். குழுவின்

உறுப்பினர்களே அதன் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். குழுவின் முன்பு சாட்சியமளிக்க எந்தக் குடிமகனும் அழைக்கப் படலாம்; எந்தப் பதிவேடும் தருவிக்கப்படலாம். குழு தன் விசாரணையை முடித்த பிறகு அதன் தலைவர் குழுவின் அறிக்கையைத் தயார் செய்வார். குழு, தலைவரின் அறிக்கையைப் பத்தி பத்தியாக ஆராயும். பெரும்பாலான உறுப்பினர்களின் இசைவைப் பெறும் செய்திகள் அடங்கிய அறிக்கை தாய்ச் சபைக்கு அனுப்பப்படும். குழுவின் அறிக்கை பொதுமக்கள் சபையில் வைக்கப்பட்டவுடன் குழு கலைக்கப்படும்; தேவையுள்ள சமயங்களில் மட்டுமே ஆய்வுக் குழுக்கள் நிறுவப்படும் என்பதும், நிலைக் குழுக்கள் போன்று அவை கூட்டத்தொடர் முழுதும் நீடிப்ப தில்லை என்பதும் அறியத்தக்கது.

கூட்டத்தொடர் ஆய்வுக் குழுக்கள் (Sessional Committees)

ஆய்வுக் குழுக்களில் சில ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் திரும்பத் திரும்ப நியமிக்கப்படுகின்றன. பொதுக் கணக்குக் குழு (Committee of Public Accounts), மதிப்பீட்டுக் குழு (Estimates Committee), தேசிய உடைமையாக்கப்பட்ட தொழில்கள் பற்றிய குழு (Committee on Nationalised Industries), சட்ட ஆணைகள் குழு (Committee on Standing Instruments), உரிமைக் குழு (Committee of Privileges), பொது மனுக்கள் குழு (Committee on Public Petitions), நிலை ஆணைகள் குழு (Committee on Standing Orders) ஆகிய குழுக்கள் கூட்டத்தொடர் குழுக்களில் குறிப் பிடத்தக்கவை. பொதுக் கணக்குக் குழு, முதன் முதலாக 1861-ல் கிளேட்ஸ்டனால் ஏற்படுத்தப்பட்டது. பதினைந்து உறுப்பி னர்களைக் கொண்டிருக்கும் இக் குழுவிற்கு, எதிர்க்கட்சித் தலைவர் களில் ஒருவர் தலைவராய் இருப்பார். அரசாங்கத்தின் செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்வது இதன் கடமையாகும். 1964ஆம் ஆண்டின் குழு, ஃபெரான்டி (Ferranti) என்ற மின் னியக்க நிறுவனம் அரசாங்கத்துக்கு வேட்டை நாய் (Blood Hound Mark I) என்ற பெயருடைய ஏவுகணை ஒன்றைத் தயாரித்து விற்றதில் நாற்பத்தைந்து லட்சம் பவுன்கள் இலாபம் சம்பாதித் ததைக் கண்டு பிடித்தது. 1912-ல் நிறுவப்பட்ட மதிப்பீட்டுக் குழு, பொதுமக்கள் சபையில் பல்வேறு இனங்களின் செலவுக்கென ஒதுக்கப்படும் மதிப்பீடுகளை ஆராயும். ஆரசு உடைமையாக்கப் பட்ட தொழில்களின் அறிக்கைகளையும் கணக்குகளையும் பரிசீலனை செய்வது, தேசிய மயமாக்கப்பட்ட தொழில்கள்பற்றிய குழுவின் கடமையாகும். சட்டங்களால் தங்களுக்கு வழங்கப்படும் அதிகா ரத்தின் அடிப்படையில் அமைச்சர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான ஆணைகளைப் பிறப்பிப்பார்கள்; அதுபோன்ற

ஆணைகள் சரியானவைதானா என ஆராய்வது சட்ட ஆணைகள் குழுவின் பொறுப்பாகும். சபையின் செல்வாக்கு மிக்க குழுக்களில் உரிமைக் குழுவும் ஒன்றாகும். அனுபவம் மிக்க பத்து அங்கத்தினர்களைக் கொண்டிருக்கும் இக்குழுவில் பல சமயங்களில் முதல் அமைச்சரே ஓர் உறுப்பினராய் இருப்பார். சபையின் உரிமைகளை மீறுகிறவர்களை — அவர்கள் சபையின் உறுப்பினர்களாயிருந்தாலும் சரி, வெளியாராயிருந்தாலும் சரி, உரிமைக் குழு விசாரித்து அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்பதைச் சபைக்குச் சிபாரிசு செய்யும். பொது மனுக்கள் குழு, சபைக்கு வரும் மனுக்களைக் கவனிக்கும். சபை, தன் நிலை ஆணைகளில் நீக்க வேண்டியதை நீக்கியும், மாற்ற வேண்டியதை மாற்றியும், சேர்க்க வேண்டியதைச் சேர்த்தும், அவற்றைக் காலத்தோடொட்டியவையாய் ஆக்கும் பணியில் நிலை ஆணைக் குழுவின் சிபாரிசை ஏற்கும். இவற்றைத் தவிர, நிபுணர் குழுக்கள் (Specialist Committees) என்ற சில குழுக்களும் உண்டு; அவற்றில் விவசாயக் குழு குறிப்பிடத்தக்கது.

கூட்டுக் குழுக்கள் (Joint Committees)

ஏதாவதொரு பொருள் இரு சபைகளின் உறுப்பினர்களையும் கவர்ந்தால், அதை ஆராய கூட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படுவதுண்டு. கூட்டுக் குழுக்கள் எப்பொழுதாவது சில சமயங்களில் அமைக்கப்படுவதே வழக்கம். கீழ்ச் சபையிலிருந்தும் மேல் சபையிலிருந்தும் சம எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் கூட்டுக் குழுவில் இடம் பெறுவர். கீழ்ச்சபையின் பிரதிநிதிகள் கீழ்ச் சபையாலும், மேல்சபையின் பிரதிநிதிகள் மேல் சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இரு சபைகளும் கூட்டுக் குழுவிற்கு எதுபோன்ற அதிகாரங்களை அளிக்கலாம் என்று முடிவு செய்கின்றனவோ அந்த அதிகாரங்களையே குழு பெறும். குழு கூடும் இடமும் காலமுங்கூட இரு சபைகளாலும் முடிவு செய்யப்படும். குழுவின் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். அதன் அறிக்கை இரு சபைகளிலும் சமர்ப்பிக்கப்படும். கூட்டுக் குழுவின் நோக்கம் ஏதாவதொரு பொருள்பற்றி ஆராய்வதாய் இருந்தால், அதை அமைக்கும்படி பொதுமக்கள் சபையோ பிரபுக்கள் சபையோ தீர்மானிக்கலாம்; ஆனால், ஒரு மசோதாவைப்பற்றி விசாரிப்பதற்குரிய கூட்டுக் குழுவாய் இருந்தால், எந்தச் சபையில் அந்த மசோதா தோன்றியதோ, அந்தச் சபையே கூட்டுக் குழு அமைக்க வேண்டியதைப் பற்றி முதலில் முடிவு செய்யும். 1933ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பாராளுமன்றக் கூட்டுக் குழு ஒன்றின் பரிசீலனைக்கு விடப்பட்டது அறியத்தக்கது.

தனி மசோதாக் குழுக்கள் (Private Bill Committees)

பொது மசோதாக்கள் நிலைக் குழுக்களுக்கு அனுப்பப்படுவது போல, தனி மசோதாக்கள் தனி மசோதாக் குழுக்களுக்கு அனுப்பப்படும். நான்கு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் சிறு குழுக்களான தனி மசோதாக் குழுக்களின் உறுப்பினர்களும் தலைவர்களும் நியமனக் குழுவால் நியமிக்கப்படுகிறார்கள். இக்குழுவில் உறுப்பினராயிருப்பது மிகவும் பொறுப்பான வேலை எனக் கருதப்படுகிறது. குழு சிறியதாய் இருப்பதால் அது கூடும்பொழுதெல்லாம் அதன் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரவேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். உறுப்பினர்கள் மசோதாவின் நன்மை தீமைகளை விருப்பு வெறுப்பின்றி ஆராய வேண்டுமென்பதற்காக, அவர்கள் தங்களுக்கு மசோதாவின் வெற்றியிலோ தோல்வியிலோ அக்கறையில்லை என்றும், தங்கள் தொகுதி மக்களை அது பாதிக்கவில்லை என்றும் உறுதி கூற வேண்டும். குழு கிட்டதட்ட நீதிமன்றம்போல அமர்ந்து, மசோதாவிற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல கருத்துகளைக் கேட்ட பிறகு, தன் சிபாரிசுகளைச் சபைக்குத் தெரிவிக்கும்; சபை அவற்றை ஏற்றுக்கொள்வதே மரபு.

குழுக்கள் எத்தனையோ இருந்தபோதிலும் அவை அனைத்தும் அவற்றை நியமிக்கும் சபைக்குக் கட்டுப்பட்டே இயங்கவேண்டும். குழுக்கள் சபைக்கு ஆலோசனை வழங்கமுடியுமே ஒழிய, தாங்களாகவே ஒன்றும் செய்துவிட முடியாது. சபையில் பல வகையான குழுக்கள் இருப்பதால், துடிப்பும் திறமையும் உள்ள உறுப்பினர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட குழுக்களில் இடம் பெறுவது உறுதி. பொதுமக்கள் சபை எவ்வாறு பெருந் தலைவர்களின் பயிற்சிப் பள்ளியாய் அமைகிறதோ, அதுபோன்று குழுக்களும் அமைகின்றன என்று எண்ணுவது முறையே.

9. அரசுபணித் துறை

(Civil Service)

[முன்னுரை—தொடக்கம்—துறையின் தன்மை—பல்வேறு பிரிவுகள்—பொறுப்புகள்—ஊழியர்களைப் பொறுக்கி எடுத்தல்—பயிற்சி—பதவி உயர்வு—வேலை நிலைமை—ஃபுல்டன் குழு.]

முன்னுரை

பிரிட்டனில் அரசுபணித் துறையைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான அலுவலர்கள் அரசாங்கத்தின் முதுகெலும்பெனக் கருதப்படுகின்றார்கள். அரசாங்கத்தின் அன்றாடப் பணி, அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் பணி புரியும் இவர்களை நம்பியே இருக்கிறது எனக் கூறுவது மிகையாகாது. பிரிட்டிஷ் அரசுபணித் துறை தகுதிக்கும் திறமைக்கும் உலகப் புகழ் பெற்றதொரு நிறுவனமாகும். காமன்வெல்த் நாடுகள் அனைத்தும் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றியே தங்கள் பணித் துறைகளை அமைத்திருக்கின்றன என்பது பிரிட்டிஷ் முறையின் சிறப்புக்குச் சான்றாக அமைகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தோன்றிய பணித் துறை, கடந்த நூறு ஆண்டுகளில் சிறிது சிறிதாக வளர்ந்து, இன்று உலக நாடுகள் பாராட்டும் அளவுக்கு மேம்பாடு அடைந்திருக்கிறது.

தொடக்கம்

சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை பிரிட்டனில் செல்வாக்கையும் பணத்தையும் பயன்படுத்திப் பதவிகளைப் பெற முடிந்தது; தகுதியும் திறமையும் இல்லாத மேற்குடி இளைஞர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது அரசாங்கத்தின் தரத்தைக் குறைத்ததோடல்லாமல், மக்களை வேதனைக்கு உள்ளாக்கியது. மெக்காலே (Macaulay) போன்றோரின் முயற்சியால் 1833ஆம் ஆண்டிலிருந்து கிழக்கிந்தியக் கம்பெனி போட்டித் தேர்வுகள் மூலமாகத்

தன் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தது, பிரிட்டிஷ் பொதுப் பணித் துறை வரலாற்றில் திசைத் திருப்பமாய் அமைந்தது. 1855ஆம் ஆண்டு, அறிவும் ஆற்றலுமுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுக்க பிரிட்டனில் அரசு அலுவல் குழு ஒன்று நிறுவப்பட்டது. ஆனால், இக் குழு எளிய பதவிகளுக்கான அலுவலர்களை மட்டுமே தேர்ந்தெடுத்தது; உயர் பதவி அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் அமைச்சர்களிடையே தொடர்ந்து நீடித்தது. 1870ஆம் ஆண்டுதான், எளிய பதவிகள், உயர் பதவிகள் என்ற வேறுபாடு இல்லாமல், எல்லாப் பதவிகளுக்கான அலுவலர்களையும் அதிகாரிகளையும் நியமிக்கும் பொறுப்பு அரசு அலுவல் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்ற நூற்றுண்டு வரை வெறும் காவலரசாக (Police State) இருந்த பிரிட்டன், இந்த நூற்றுண்டில் சமுதாய நலம் பேணும் அரசாக மலர்ந்ததால், அதன் ஊழியர்களின் எண்ணிக்கை பலமடங்கு பெருகிவிட்டது. 1797ஆம் ஆண்டு 16,267 ஆக இருந்த எண்ணிக்கை இன்று 8,55,000-க்கு மேலாக உயர்ந்திருப்பது, அரசாங்கம் மேலும் மேலும் புதிய பொறுப்புகளை ஏற்றிருப்பதை உணர்த்துகிறது. அரசு அலுவல் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்தோர் அதை அரசாங்கத்தின் நான்காவது துறையென அழைக்கின்றனர்.

துறையின் தன்மை

பிரிட்டிஷ் அரசாங்க ஊழியர்கள் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களல்லர். அரசாங்கம் என்பது எல்லாலாருக்கும் பொதுவானதோர் அமைப்பு; அதன் பணியாளர்கள் எந்த அரசியல் கட்சியின் தலைவர்களாகவோ தொண்டர்களாகவோ இருப்பது முறையாகாது. எந்தக் கட்சி அரசாங்கம் அமைத்தாலும் அதற்குத் தங்கள் அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் பயனை அவர்கள் அளிக்கக் கடமைப்பட்டவர்கள். அரசாங்க ஊழியர்களுக்கும் அரசியல் கட்சிகள்பால் விருப்பு வெறுப்பு இருக்கலாம்; ஆனால் அவை வெளிப்படையாகத் தோன்றலாகாது. இதற்கு நேர்மாருக, அமைச்சர்களெல்லாம் அரசியல் கட்சிகளையே தங்கள் உயிர்மூச்சென நம்பியிருப்பதைக் காண்கிறோம். பிரிட்டிஷ் அரசாங்க ஊழியர்கள் நிரந்தரமான ஊழியர்களாய் வேலை பார்க்கின்றனர். பள்ளிப் படிப்பை முடித்ததும் வேலைக்கு அமரும் அவர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் அரசின் பணியில் இருக்கும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள். சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, தன் நடத்தையோடு நடந்துகொள்ளும் ஊழியர்கள், ஏறத்தாழ தங்கள் வாழ்நாள் முழுவதையும் அரசின் ஊழியத்தில் கழிப்பார்கள். ஆனால் அமைச்சர்களுக்கு அவர்கள் பதவி தற்காலிகமானவையே; அமைச்சர்கள் வருவார்கள் போவார்கள்;

அவர்கள் நிரந்தரமாகப் பதவியிலிருப்பார்கள் என்று யாரும் உறுதி கூற முடியாது. பிரிட்டிஷ் அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கப் பணி என்பது முழுநேர வாழ்க்கைத் தொழில். அவர்கள் தங்கள் தொழிலைப் பல ஆண்டுகள் செய்துவரும் பழக்கத்தால் அவற்றின் நுணுக்கங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுகின்றனர். அரசாங்கத்தை அமைக்கும் கட்சிகள் அடிக்கடி மாறும்; ஆனால், அரசாங்க ஊழியர்கள் மாறுவதில்லை. ஊழியர்களின் அனுபவம் நாளுக்கு நாள் அதிகமாக, அவர்களின் ஆற்றலும் அதிகமாகிறது; எனவே, எந்தச் சிக்கலுக்கும் தீர்வு காணக்கூடிய திறமை அவர்கள் உடன் பிறப்பாய் வளர்ந்துவிடுகிறது. ஆனால், அமைச்சர்கள் தங்கள் துறைகளைப் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ளவர்கள் என்று கூறுவதற்கில்லை. போர்ப் பயிற்சி இல்லாதவர்கள் படைத் துறை அமைச்சர்களாவதும், பொருளாதாரத்தில் புலமை இல்லாதவர்கள் நிதி அமைச்சர்களாவதும், உழவைப்பற்றி ஒன்றும் அறியாதவர்கள் விவசாய அமைச்சர்களாவதும் சாதாரண நிகழ்ச்சிகள். அரசாங்க ஊழியர்கள் அரசியலில் நடுநிலைமை வகிப்பதும், நிரந்தரமாக வேலை பார்ப்பதும், தங்கள் வேலையின் விவரங்கள் அனைத்தும் அறிந்திருப்பதும், அவர்களை அமைச்சர்களிடமிருந்து வேறு படுத்திக் காட்டும் சிறப்பியல்புகளாகும்.

பல்வேறு பிரிவுகள்

இன்றைய பிரிட்டிஷ் அரசு அலுவல் துறை, வேலை வகைகளின் அடிப்படையில் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது பிரிவுக்கு, 'ஆட்சித்துறை அதிகாரிகள் பிரிவு' (Administrative Class) என்று பெயர். அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியும், அரசாங்கக் கொள்கைகளை அமைக்க அவர்களுக்கு அறிவுரை வழங்கியும், அவற்றை நிறைவேற்றும்பொழுது தோன்றும் சிக்கல்களைத் தீர்த்தும், அரசாங்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாக ஆட்சித்துறை அதிகாரிகள் செயல்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பல்கலைக்கழகப் படிப்பு முடிந்த உடனேயே பதவிக்கு வந்து விடுகிறார்கள். எனவே, அரசாங்கம் ஊக்கத்தோடும் துடிப்போடும் பணியாற்றும் படித்த இளைஞர்களின் சேவையைப் பெற முடிகிறது. இப் பிரிவுக்கு அடுத்தபடியாகக் கீழேயுள்ள பிரிவிலிருந்தும் சிலர் பதவி உயர்வு பெற்று ஆட்சித்துறை அதிகாரிகளாய் அமர்த்தப்படுகின்றனர். இப் பிரிவில் 3500-க்கு மேற்பட்ட அதிகாரிகள் இருக்கின்றனர். இரண்டாவது பிரிவுக்கு, 'நிர்வாக அதிகாரிகள் பிரிவு' (Executive Classes) என்று பெயர். அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயல் படுத்தி அதன் அன்றாட அலுவல்களைக் கவனிப்பது நிர்வாக

அதிகாரிகளின் பொறுப்பாகும். வரி வசூல் போன்ற முக்கியமான செயல்களெல்லாம் இவர்களின் கடமைகளில் அடங்கும். இப் பிரிவில் 81,000-க்கு மேற்பட்ட அதிகாரிகள் இருக்கின்றனர். மூன்ருவது பிரிவுக்கு, 'தனித்துறை நிபுணர்கள் பிரிவு' (Specialist Classes) என்று பெயர். அரசாங்கத்தின் தனித்தன்மை வாய்ந்த பணிகளெல்லாம் தனித்துறை நிபுணர்களிடம் ஒப்படைக்கப்படு கின்றன. கணக்கர்கள், கட்டடக் கலைஞர்கள், மருத்துவர்கள், பொறிவலாளர்கள், வழக்கறிஞர்கள், அளவாயர்கள் (Surveyors), விஞ்ஞானிகள் போன்ருேரும் அரசாங்க ஊழியத்தில் சேர்ந்து தங்கள் தனிப் பயிற்சியின் பயனை அரசு அடையும்படி செய்கின் றனர். இப்பிரிவில் 1,27,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கின் றனர். நான்காவது பிரிவுக்கு, 'எழுத்தர் பிரிவு' (Clerical Classes) என்று பெயர். ஒவ்வொரு துறையிலுமுள்ள எழுத்தர்கள் தங்கள் துறையின் சாதாரண வேலைகளைச் செய்கின்றனர். கணக்குகளைத் தயாரித்தல், அரசாங்க ஏடுகளைப் பத்திரமாக வைத்திருத்தல், மேலதிகாரிகளின் கவனத்திற்கெனச் செய்திகளைச் சுருக்கித் தருதல் ஆகியவை இவர்களின் பொறுப்புகளில் சிலவாம். இப் பிரிவில் 1,30,000-க்கு மேற்பட்ட எழுத்தர்கள் இருக்கின்றனர். ஐந்தாவது பிரிவுக்கு, 'உதவி எழுத்தர்கள் பிரிவு' (Ancillary Clerical Classes) என்று பெயர். உதவி எழுத்தர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், படியெடுப்புப் பொறி இயக்குவோர்கள் (Duplicator Operators) ஆகியோர் இத் துறையில் பணியாற்று கின்றனர். இப் பிரிவில் 1,12,000-க்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை பார்க்கின்றனர். ஆருவது பிரிவுக்கு, 'தகவலாளர்கள் பிரிவு' (Messengerial Classes) என்று பெயர். தகவலாளர்கள், துப்புறவு செய்வோர், சுமை தூக்குவோர் போன்ருேர் இப்பிரிவைச் சேர்ந்த வர்கள். இவர்களைக் கடைநிலை ஊழியர்கள் என அழைக்கலாம். இப்பிரிவில் 35,000-க்கு மேற்பட்டவர்கள் வேலை பார்க்கின்றனர். அரசாங்கத் தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான தொழி லாளர்கள் வேலை பார்க்கின்றனர். அவர்களும் அரசாங்க ஊழி யர்கள்தான் என்ருலும், அலுவலகங்களில் வேலை பார்ப் போரையே முக்கியமாக அரசாங்க ஊழியர்களாகக் கருதுவது வழக்கம். பிரிட்டிஷ் அரசாங்க ஊழியர்களில் மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள் பெண்கள் என்பது அறியத்தக்கது.

அஞ்சல் துறையிலும் ஏராளமான பேர் பணியாற்றுகின் றனர். இத் துறையில் 1,20,000-க்கு மேற்பட்ட அஞ்சலாள் களும், 52,000-க்கு மேற்பட்ட தொலைபேசி இயக்குவோர்களும், 22,000-க்கு மேற்பட்ட தபால் தந்தி அதிகாரிகளும் பணிபுரிகின் றனர். இவர்களைத் தவிர, தொலைபேசி, தந்திப்பொறி ஆகிய

வற்றை அமைத்துப் பராமரிப்பதற்கு 1,00,000-க்கு மேற்பட்ட ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ‘அரசியல் தூதுவர் பிரிவு’ (Diplomatic Service) என ஒரு தனிப் பிரிவும் உண்டு. பிரிட்டனின் வெளிநாட்டுத் துறையிலும், காமன்வெல்த் அலுவலகத்திலும் வேலை பார்ப்போர் இப் பிரிவைச் சேர்ந்தவர்களே. இவர்களில் பெரும்பாலோர் பிரிட்டனின் பிரதிநிதிகளாக அயல் நாட்டுத் தலைநகர்களிலும் பெருநகரங்களிலும் பணி புரிகின்றனர். இத் தூதுவர் துறையிலும் ஆட்சித்துறைப் பிரிவு, நிர்வாகத் துறைப் பிரிவு, எழுத்தர் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு நிகரான பிரிவுகள் இருக்கின்றன. வட அயர்லாந்துக்குத் தனியானதொரு பணித் துறை அமைக்கப்பட்டிருக்கிறது. இத்துறையின் அமைப்பு பிரிட்டிஷ் துறையின் அமைப்பைப் போன்றதே. பிரிட்டனுக்கு ஒரு பணித் துறைக் குழு இருப்பது போன்று, வட அயர்லாந்துக்கும் ஒரு பணித் துறைக் குழு உண்டு. சில சமயங்களில் இவ்விரு அலுவல்துறைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு அதிகாரிகள் மாற்றப்படுவதுண்டு.

பொறுப்புகள்

அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்துவதே அரசு அலுவல்துறையின் முதன்மையான பொறுப்பாகும். அரசாங்கக் கொள்கைகள் சட்டங்கள் மூலமாகவும், ஆணைகள் மூலமாகவும், நீதித் தீர்ப்புகள் மூலமாகவும் வெளிப்படும்; அவற்றை அரசாங்கத்தின் பணியாளர்களே நிறைவேற்றுவார்கள். கட்டளைகள் பிறப்பிக்கும் அரசாங்கத்தை, மனிதனின் மூளையாகவும் இதயமாகவும் கருதினால், அக் கட்டளைகளைச் செயல்படுத்தும் அரசுபணித் துறையை மனிதனின் கை கால்களாகக் கருத வேண்டும். கொள்கைகளை வகுக்கின்ற அமைச்சர்களுக்கு அவற்றின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவது அரசாங்கத்தின் தலைமை அதிகாரிகளாய் இருக்கும் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் போன்றோரின் பொறுப்பாகும். அமைச்சர்கள் சட்டமன்றங்களில் தோற்றுவிக்கும் மசோதாக்களில் பெரும்பாலானவை அரசு ஊழியர்களால்தான் தயாரிக்கப்படுகின்றன. அம் மசோதாக்கள் தடையின்றிச் சட்டங்களாக, இரு சபைகளிலும் அவற்றின் குழுக்களிலும், அமைச்சர்களுக்கு ஆலோசனை அளிப்பவர்களும் அரசு ஊழியர்களே. பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சரைக் கேட்கும் வினாக்களுக்கு விடை தயாரித்துத் தருவதும் அரசு பணியாட்களின் வேலையே. அமைச்சர்களும் அரசின் அதிகாரிகளும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு செயல்படுவதே பிரிட்டிஷ் முறை; இந்த இரு இனத்தாருக்கிடையே நல்ல உறவுகள் இல்லை என்றால்

அது இருவரையும் பாதிக்கும். ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் அமைக்கப்படும் அரசாங்கத்தில் முதன் முறையாக சிலர் அமைச்சர்களாகப் பதவி ஏற்பார்கள்; அவர்களுக்குத் தாங்கள் தலைமை தாங்கும் துறைகளைப்பற்றிய விவரங்கள் தெரியாமலிருக்கலாம்; அவற்றை விளக்குவது நிரந்தர ஊழியர்களின் பொறுப்பே. ஆனால், அமைச்சர்களின் செயல்களுக்கு அமைச்சர்களே பொறுப்புள்ளவர்கள்; தங்கள் ஊழியர்கள்மேல் குற்றத்தைச் சுமத்தி அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது.

ஊழியர்களைப் பொறுக்கி எடுத்தல்

அரசாங்கத்திற்குத் தேவையான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் அரசுபணிக் குழு (Civil Service Commission) என்ற சிறியதொரு நிறுவனத்தின் உரிமையாக்கப்பட்டிருக்கிறது. இக் குழுவின் உறுப்பினர்கள் அரசியாரால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் அமைச்சர்களுக்கோ பாராளுமன்றத்திற்கோ கட்டுப்பட்டவர்களல்லர். வருடாவருடம் தேர்வுகள் நடத்தி அவற்றில் தேருகின்றவர்களுக்கு வேலை வழங்குவதே இக்குழுவின் முதன்மையான கடமையாகும். தேர்வுகள் எழுத்து மூலமான பரீட்சைகளாகவோ, நேர்முகப் பேட்டிகளாகவோ, அல்லது இரண்டும் கலந்தவையாகவோ இருக்கும். குழுவால் நடத்தப்படும் பல தேர்வுகள் பிரிட்டிஷ் கல்வித் திட்டத்தின் பல கட்டங்களுக்கு ஏற்றவையாய் அமைக்கப்படுகின்றன. ஆட்சித் துறை அதிகாரிகளை 'ஒன்றும் முறை' (Method I) என்ற முறையையொட்டி எழுத்து மூலமான பரீட்சைகள் மூலமாகவும் நேர்முக பேட்டிகள் மூலமாகவும் இதுவரை தேர்ந்தெடுத்தனர். 'இரண்டாம் முறை' (Method II) என்ற ஒரு புதுமுறையும் சமீப காலத்தில் பின்பற்றப்படுகிறது; இந்த முறையில் தேர்வு எழுதுவோரின் அறிவுக் கூர்மையும், மதிப்பீட்டுத் திறனும், செயல் முறை சார்ந்த திறமையும் சோதனை செய்யப்படுகின்றன. ஒன்றும் முறை மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவோரைவிட இரண்டாம் முறை மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் சிறந்த ஆட்சித்துறை அதிகாரிகளாய் விளங்குகின்றனர் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அரசு அலுவல் குழு 1965ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கைப்படி ஒன்றும் முறை வாயிலாக வேலைக்கு அமர்ந்தோரில் 35 சதவிகிதத்தினரும், இரண்டாம் முறை வாயிலாக வேலைக்கமர்ந்தோரில் 59 சதவிகிதத்தினரும் சிறந்த அதிகாரிகளென மதிப்பிடப்பட்டனர். நாட்டின் முதல்தரமான பட்டதாரிகளும் ஒன்றுவது முறையைவிட இரண்டாவது முறையையே அதிகம் விரும்புகின்றனர். 1962ஆம் ஆண்டில் ஒன்றும் முறை மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோரில் 20 சத

விகிதத்தினரும், இரண்டாம் முறை மூலமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டோரில் 42 சதவிகிதத்தினரும் முதல் வகுப்புப் பட்டதாரி களெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

பயிற்சி

புதிதாக வேலைக்குச் சேர்வோருக்கு அவர்களின் பொறுப்புகளை அறிமுகப்படுத்த எல்லாத் துறைகளிலும் பயிற்சி ஆசிரியர்கள் இருக்கின்றனர். நெடுநாள்களாக வேலை பார்க்கும் ஊழியர் களுக்கு அவ்வப்பொழுது ஊக்கப் பயிற்சி (Refresher Course) அளிக்கப்படும். பொறுக்கி எடுக்கப்பட்ட சில அதிகாரிகள் மேற் படிப்பிற்காக அயல்நாட்டுக்கு அனுப்பப்படுவதுமுண்டு. பிரிட்டிஷ் ஆட்சித்துறை அதிகாரிகளுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப் படுவதில்லை என்று சேப்மேன் (Chapman) என்ற ஆசிரியர் குறைபட்டுக் கொள்கிறார். பிரான்சில் உயர் அதிகாரிகளுக்கு 29 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படுவதுபோல பிரிட்டனிலும் அளிக் கப்பட வேண்டுமென அவர் விரும்புகிறார். 1963ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 'ஆட்சித்துறைக் கல்வி நிறுவனம்' (Centre for Administrative Studies) அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டபோதிலும், மேலும் முழுமையான பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று பலர் கருது கின்றனர்.

பதவி உயர்வு

எளிய பதவியில் சேர்கின்றவர்கூட உயர்ந்த பதவிக்கு வர பிரிட்டனில் நல்ல வாய்ப்புகள் உண்டு. பதவி உயர்வுக்கென நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெறுவோர் ஒரு பிரிவிலிருந்து அடுத்த மேல்பிரிவுக்கு உயர்த்தப்படுவார்கள். அரசாங்கத்தில் பெரிய பதவிகளுக்கு உயர்த்தப்படுவோரின் நியமனங்கள் முதலமைச்சரால் உறுதி செய்யப்பட்ட பிறகே அறிவிக்கப்படும். 1939ஆம் ஆண்டுக்கு முன்பு நிர்வாகத் துறையிலிருந்து ஆட்சித் துறைக்கு வெகு சிலரே பதவி உயர்வு பெற்றனர்: ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இந்த நிலை மாறிவிட்டது. 1953ஆம் ஆண்டில் ஆட்சித்துறை அதிகாரிகள் பிரிவைச் சேர்ந்த 703 துணைச் செயலாளர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் நிர்வாகத் துறையிலிருந்து பதவி உயர்வு பெற்றவர்களே. பொதுவாக அனுபவம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதே வழக்கம்.

வேலை நிலைமை

அரசின் ஊழியர்கள் அரசியாரால் விரும்பப்படும் வரைதான் வேலையிலிருக்க முடியும் என்பது சட்டமானாலும் அவர்கள் காரண மின்றி இடையில் நீக்கப்படுவதில்லை. ஓய்வு பெறுகிறவரை

ஒவ்வொருவரும் வேலையிலிருப்பதே மரபு. அலுவலகங்களில் பணிபுரிவோர் லண்டனில் வாரத்துக்கு 41 மணிகளும், மற்ற இடங்களில் வாரத்துக்கு 42 மணிகளும் வேலைபார்க்க வேண்டும்; அதிகப்படி வேலை செய்யும் சாதாரணச் சம்பளக்காரர்களுக்கு மிகைநேரச் சம்பளம் கொடுக்கப்படும். எல்லா ஊழியர்களுக்கும் வருடாந்திர விடுப்பு (Annual Leave), நோவு விடுப்பு (Sick Leave), ஓய்வுக்கால ஊதியம் போன்ற சலுகைகள் உண்டு. அரசாங்க ஊழியர்கள் தங்கள் அதிகாரங்களைச் சொந்தநலனுக்குப் பயன் படுத்தக் கூடாதென்பதற்காக அவர்கள் சொந்த முறையில் தொழிலோ, வியாபாரமோ செய்வதுபற்றிச் சில தடைகள் விதிக் கப்படுகின்றன. அரசாங்கத்தின் இரகசியப் பொறுப்புகளில் கம்யூனிஸ்ட் கட்சி, பாஸிஸ்ட்டுக் கட்சி போன்ற அமைப்புகளைச் சேர்ந்தோர் அமர்த்தப்படுவதில்லை. அரசாங்க ஊழியர்கள் தொழிற்சங்கங்கள் அமைப்பது குறித்து எந்தத் தடையுமில்லை. 'அரசு அலுவல் எழுத்தர் சங்கம்' (Civil Service Clerical Association), 'அஞ்சலகத் தொழிலாளர்கள் சங்கம்' (Union of Post Office Workers), 'முதற் பிரிவு அரசு ஊழியர்கள் சங்கம்' (Association of First Division Civil Servants) போன்ற எத்தனையோ அமைப்புகள் அரசு ஊழியர்களின் நிலைமையை உயர்த்துவதற்காக இயங்கி வருகின்றன.

ஃபுல்டன் குழு (Fulton Committee)

பிரிட்டிஷ் அரசுபணித் துறையின் எல்லா அம்சங்களையும் பற்றி ஆராய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஃபுல்டன் குழு 1968-ல் அதன் முடிவுகளை அறிவித்தது. அரசு பணித் துறை என்னும் தனியானதோர் அரசாங்கத் துறை ஏற்படுத்த வேண்டு மென்றும், அது முதலமைச்சரின் கண்காணிப்பின்கீழ் இயங்க வேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்பட்டது. வெவ்வேறு வேலை களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் பொது அறிவுள்ளவர் களாய் மட்டும் இருந்தால் போதாது, அவரவர் சேர விரும்பும் துறையைப்பற்றித் தனி அறிவும் உடையவர்களாயிருப்பது நல்லது எனக் குழு அறிவித்தது. அரசாங்க ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப் பதற்கென ஒரு கல்லூரி துவக்கப்பட வேண்டுமென்றும் அது யோசனை கூறியது. 1806ஆம் ஆண்டிலேயே கிழக்கிந்தியக் கம்பெனி தன் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென ஹெய்லிபரி (Haileybury) என்னுமிடத்தில் ஒரு கல்லூரியை ஆரம்பித்தது ஈண்டு அறியத்தக்கது. தேவைப்படும்பொழுது அரசாங்கம் தனியார் துறை களைச் சேர்ந்த அறிஞர்களின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. ஃபுல்டன் குழுவின் யோசனைகளில் பல அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டன என்பதும், அவை இப்பொழுது செயல்படுத்தப்படு கின்றன என்பதும் பாராட்டத்தக்கது.

10. நீதிமன்றங்கள்
(Courts of Law)

[முன்னுரை—நீதிபதிகள்—சிவில் வழக்குகள்—குற்றவியல் வழக்குகள்—பிரபுக்கள் சபை—பிரிவி கவுன்சில்—அறம் கூறும் ஆயம்—ஆட்சித்துறை நீதிமன்றங்கள்.]

முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைக்காலம் வரை தாறுமாருகக் கிடந்த பிரிட்டிஷ் நீதித் துறை, இந் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் ஒழுங்கான அமைப்பைப் பெற்றது. கணக்கற்ற நீதிமன்றங்கள் இயங்கியதும், அவற்றின் அதிகார எல்லேகள் வரையறுக்கப்படாதிருந்ததும் குடிமக்களேக் குழப்பியது. கடந்த நூற்றுண்டில் இயற்றப்பட்ட பல சட்டங்கள் வாயிலாக நீதித் துறையின் குறைபாடுகள் களேயப்பட்டதன் விளேவாக, இன்று அது ஒரு சீரான அமைப்பாய் விளங்குகிறது. பிரிட்டிஷ் அரசியலமைப்பின் மற்ற நிறுவனங்களேப்போல நீதித் துறையும் மெல்ல மெல்ல வளர்ந்தே இன்றைய நிலேயை அடைந்தது என்பது அறியத்தக்கது.

நீதிபதிகள்

பிரிட்டிஷ் நீதித் துறை அதன் சுதந்திரத்துக்குப் புகழ்பெற்றது. விருப்பு வெறுப்பு, தயவு தாட்சண்யம் இல்லாமல் நடுநிலே நின்று நீதிபதிகள் நியாயம் வழங்குவதைக் குறித்து, பிரிட்டிஷார் பெருமைப்படுவது வழக்கம். நீதி நிர்வாகம் என்பது அரசியாரின் மிகப் பழமையான பணிகளில் ஒன்ருதலால், இன்றும் நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் 'அரசியாரின் நீதிமன்றங்கள்' (Queen's Courts) என்றும், அவற்றில் வழங்கப்படும் நீதி 'அரசியாரின் நீதி' (Queen's Justice) என்றும் அழைக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் நீதிபதிகள் அரசியாரால் நியமிக்கப்படுகின்ருர்கள். மேல்நிலே

நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்க முதலமைச்சரும், சாதாரண நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்கச் சான்சலர் பிரபுவும் அரசியாருக்கு ஆலோசனை வழங்குவார்கள். பொதுவாக வழக்கறிஞர்களே நீதிபதிகளாய் நியமிக்கப்படுவது வழக்கம். நீதிபதிகள் நல்லொழுக்கத்தோடு நடந்துகொள்ளும் வரை பதவியிலிருக்க 1701ஆம் ஆண்டின் அரசுரிமை நிர்ணயச் சட்டம் வகை செய்கிறது. பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் அடிப்படையில்தான் அரசியார் நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து விலக்க முடியும். 1701ஆம் ஆண்டிற்குப் பிறகு 1830ஆம் ஆண்டில் ஒரே ஒரு முறைதான் பணத்தைக் கையாடிய குற்றத்திற்காக நீதிபதி ஒருவரை நீக்கக் கோரி, பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது என்பது அறியத்தக்கது. சான்சலர் பிரபு என்பவரே பிரிட்டிஷ் நீதித் துறையின் தலைவராய்ப் பணியாற்றுகிறார். இவர் பிரபுக்கள் சபையின் தலைவராயும், கேபினட்டு அமைச்சர்களில் ஒருவராயும் பணியாற்றுவதிலிருந்து, இவர் அரசாங்கத்தின் மூன்று துறைகளிலும் முக்கியப் பொறுப்புகள் வகிப்பது தெரியவருகிறது. முதலமைச்சரைக் காட்டிலும் ஆண்டொன்றுக்கு 2,000 பவுன்கள் அதிகமாய் ஊதியம் பெறும் சான்சலர் பிரபு ஆண்டொன்றுக்கு 12,000 பவுன்கள் ஊதியம் பெறுகிறார்.

சிவில் வழக்குகள்

சாதாரணச் சிவில் வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் (County Courts) விசாரிக்கப்படுகின்றன. இன்றைய இங்கிலாந்தில் ஏறத்தாழ 400 மாவட்ட நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஆனால், மாவட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 79ஆக இருப்பதால் ஒவ்வொரு நீதிபதியும் ஒன்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களுக்கு மாறிமாறித் தலைமை தாங்குவார். ஐந்நூறு பவுன்களுக்கு உட்பட்ட மதிப்புள்ள சிவில் வழக்குகளே இந் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படலாம். அவதூறு, பொய்யான இகழுரை போன்ற குற்றங்களுக்கான வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் தோன்ற முடியாது.

ஐந்நூறு பவுனுக்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகளைத் துவக்கவும், மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்யவும் உரிய இடம் உயர் நீதிமன்றமாகும் (High Court of Justice). உயர் நீதிமன்றம், 'சான்சரி பிரிவு' (Chancery Division) என்றும். 'இறப்புறுதிச்சான்று, மணவிலக்கு, கடற்றுறைப் பிரிவு' (Probate, Divorce and Admiralty Division) என்றும், 'அரசியாரின் நீதிமன்றப் பிரிவு' (Queen's Bench

Division) என்றும் மூன்று பகுதிகளாக அமர்ந்து நீதி நிர்வாகம் செய்கிறது. முதலாவது மன்றத்திற்குச் சான்சலர் பிரபுவும், இரண்டாவது மன்றத்திற்கு ஒரு தலைவரும் (President), மூன்றாவது மன்றத்திற்குத் தலைமை நீதிபதி பிரபுவும் (Lord Chief Justice) தலைமை வகிக்கின்றனர். எந்தெந்த மாதிரியான வழக்குகள் எந்தெந்த உயர் நீதிமன்றப் பிரிவினுல் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை மரபுகள் தீர்மானிக்கின்றன. உயர் நீதிமன்றத்தில் 53 நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். மன்றத்திற்கு முதன் முறையாக வரும் வழக்குகளை ஒரு நீதிபதியும், மேல் முறையீடாக வரும் வழக்குகளை மூன்று நீதிபதிகளும் விசாரிப்பார்கள்.

மாவட்ட நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் முடிவுகளுக்கு எதிராக முறையிட்டுக்கொள்ள விரும்புவோர் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் (Court of Appeal) வழக்காட வேண்டும். 'மேல் முறை மன்ற நடுவர்' (Master of the Rolls) எனப்படும் நீதிபதியின் தலைமையில் ஒன்பது சட்டப் பிரபுக்கள் இந் நீதிமன்றத்தில் நடுவர்களாய் பணியாற்றுகின்றனர்.

குற்றவியல் வழக்குகள்

சிறு குற்றங்களைப்பற்றிய குற்றவியல் வழக்குகள் அனைத்தும் 'அமைதி காவல் நடுவர்' (Justice of the Peace) எனப்படும் கௌரவ நீதிபதிகளின் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படும். இத்தகைய நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் இரண்டுக்குக் குறையாத ஏழுக்கு மேற்படாத நீதிபதிகள் இருப்பார்கள். இந்த நீதிபதிகள் செல்வாக்குள்ள சாதாரணக் குடிமக்களாதலால் இவர்களுக்குச் சட்டத்துறையில் தனி அறிவோ பயிற்சியோ இருக்காது. கௌரவ நீதிபதிகள் ஊதியமன்றி உழைக்கின்றனர் என்பது அறியத்தக்கது. பெரிய நகரங்கள் சிலவற்றில், இத்தகைய நீதிமன்றங்களில் ஊதியம் பெறும் வழக்கறிஞர்களே நீதிபதிகளாக நியமிக்கப்படுகின்றனர். இங்கிலாந்தில் நிகழும் குற்றங்களில் 97 சதவிகிதத்துக்கு மேலானவை மேற்கண்ட முதல் நிலை குற்றவியல் நீதிமன்றங்களில் தீர்க்கப்பட்டுவிடுகின்றன. கௌரவ நீதிபதிகள் அரசியாரின் சார்பாகச் சான்சலர் பிரபுவால் நியமிக்கப்படுகின்றனர்; இன்றைய இங்கிலாந்தில் 20,000-க்கு மேற்பட்ட கௌரவ நீதிபதிகள் இருக்கின்றனர்.

'காலாண்டுப் பருவ வழக்கு மன்றங்கள்' (Court of Quarter Sessions) என்பவை சற்று மேல்படியில் இருக்கும் நீதிமன்றங்களாகும். எல்லா மாவட்டங்களிலும் (counties) நகரங்களிலும் (boroughs) இத்தகைய நீதிமன்றங்கள் இயங்குகின்றன. இவை ஒவ்வோர் இடத்திலும் ஆண்டுக்கு நான்கு முறை கூடி வழக்குகளை

விசாரிக்கும். மாவட்டத்தில் கூடும் நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் சட்டப் பயிற்சி பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் கௌரவ நீதிபதிகள் சிலரும், நகரத்தில் கூடும் நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் வழக்கறிஞர் ஒருவரும் நீதி நிர்வாகம் செய்வார்கள். அகண்ட லண்டன் (Greater London) என்ற பகுதி ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் ஒரு காலாண்டுப் பருவ வழக்கு நீதிமன்றம் நிறுவப்பட்டிருக்கிறது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளில் சிலர் ஆண்டிற்கு மூன்று முறை (இலையுதிர் காலத்தில் ஒரு முறை, குளிர் காலத்தில் ஒரு முறை, கோடைக் காலத்தில் ஒரு முறை) முக்கியமான நகரங்களிலும் பட்டணங்களிலும் அமர்ந்து, மேல் முறையீடாக வரும் குற்றவியல் வழக்குகளை விசாரிப்பார்கள். ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் இந் நீதிமன்றம் ஒருமுறையாவது கூடும். காலாண்டுப் பருவ வழக்கு நீதிமன்றங்கள் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகளுக்கு எதிராக முறையிட்டுக் கொள்ள விரும்புகிறவர்கள் 'குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றத்திடம்' (Court of Criminal Appeal) வழக்காட வேண்டும். மூன்று நீதிபதிகளைக் கொண்டிருக்கும் இம்மன்றத்திற்கு தலைமை நீதிபதி பிரபுவே தலைமை தாங்குவார்.

பிரபுக்கள் சபை

சிவில் வழக்குகளுக்கும் குற்றவியல் வழக்குகளுக்கும் பிரபுக்கள் சபையே இறுதியான நீதிமன்றமாகச் செயல்படுகின்றது; எனவே பிரபுக்கள் சபையைத்தான் நாட்டின் தலைமை நீதிமன்றம் என அழைக்க வேண்டும். சட்டமன்றமான பிரபுக்கள் சபை, நீதி மன்றமாகவும் இயங்குவது பிரிட்டனில் மட்டும் காணப்படும் ஒரு புதுமையான வழக்கமாகும். சட்டப்படி பிரபுக்கள் சபையில் இருக்கும் அனைவருக்கும் நீதிபதிகளாக அமரும் உரிமை உண்டென்பதும் உண்மையானாலும், 1876ஆம் ஆண்டின் மேல் முறையீட்டு விசாரணை அதிகாரச் சட்டத்தின் (Appellate Jurisdiction Act) அடிப்படையில் நியமிக்கப்பட்ட சட்ட பிரபுக்களும், நீதி நிர்வாகத்தில் தனி அறிவும் அனுபவமும் பெற்ற வேறு சில பிரபுக்களும் மட்டுமே நீதிபதிகளாய் அமர்ந்து தீர்ப்பு வழங்குவதே வழக்கம். பிரபுக்கள் சபையின் சட்டமியற்றும் அதிகாரம் காலப் போக்கில் குறைந்துவிட்டபோதிலும் அதன் நீதி பரிபாலன அதிகாரம் தொடர்ந்து நீடிப்பது குறிப்பிடத்தக்கது.

பிரிவி கவுன்சில்

ஐக்கிய அரசின் டொமினியன்கள் குடியேற்ற நாடுகள் சிலவற்றிற்குப் 'பிரிவி கவுன்சிலின் நீதிக் குழு' (Judicial Committee of the

Privy Council) இறுதியான நீதிமன்றமாய் அமைகிறது. இங்கிலாந்தின் சமய நீதிமன்றங்களும் (Ecclesiastical Courts) இந் நீதிமன்றத்தையே தங்கள் கடைசி நீதிமன்றமாக ஏற்கின்றன. போரில் ஆங்கிலேயர் வசம் சிக்கும் பகை நாட்டவர் சொத்துகள்மீது இறுதியான தீர்ப்பு வழங்கும் அதிகாரம், இக் குழுவின் சிறப்பான அதிகாரங்களில் ஒன்ருகும். பிரிவி கவுன்சிலின் நீதிக் குழுவில் சான்சலர் பிரபு, முன்னுள் சான்சலர் பிரபுக்கள், சட்டப் பிரபுக்கள், நீதித் துறையில் பெரும் பொறுப்புகள் வகித்த இதர பிரிவி கவுன்சிலர்கள் ஆகியோர் இடம் பெறுவார்கள். இக்குழுவின் முடிவுகள் நீதித் தீர்ப்புகளாக அறிவிக்கப்படுவதில்லை; அவை அரசியாருக்கு ஆலோசனைகளாகத் தெரிவிக்கப்படுகின்றன; அரசியார் தன் கட்டளைகள்மூலம் அவற்றை நிறைவேற்றுவார்.

அறம் கூறும் ஆயம் (Juries)

குற்ற வழக்குகள் விசாரணையின் பொழுது, நீதிபதி, ஜூரர்கள் எனப்படும் அறம் கூறும் ஆயத்தாரின் முடிவுப்படி தீர்ப்பளிப்பார். குற்றம் சாட்டப்பட்டவர் விசாரிக்கப்படும் காலத்தில் நீதிமன்றத்தில் அமர்ந்து வழக்கினைக் கவனிக்கும் ஜூரர்களே அவர் குற்றவாளியா குற்றமற்றவரா என முடிவு செய்வார்கள். அவர்களின் முடிவைத் தழுவியே நீதிபதியின் தண்டனை அமையும். அறம் கூறும் ஆயத்தில் பன்னிரண்டு நடுவர்கள் இருப்பார்கள். இருபத்தொரு வயதிற்கும் அறுபது வயதிற்கும் இடைப்பட்ட பிரிட்டிஷ் ஆண் பெண் குடிமக்களில் யார் வேண்டுமென்ருலும் (சில குறிப்பிட்ட தொழில்கள் செய்வோரைத் தவிர) ஜூரர்களாக நியமிக்கப்படலாம். ஜூரர்களின் முடிவு ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்ட முடிவாக இருக்க வேண்டுமென்று சமீப காலம் வரை கோரப்பட்டது; ஆனுல், 1966ஆம் ஆண்டின் குற்றவியல் நீதிச் சட்டம் (Criminal Justice Act) பன்னிரண்டு ஜூரர்களில் பத்து ஜூரர்களின் முடிவே போதுமானது என வகை செய்கிறது. ஜூரர்களைத் தாக்குதல், அச்சுறுத்தல், கைக்கூலி கொடுத்து வசப்படுத்த முயலுதல் ஆகியவை குற்றங்களாய்க் கருதப்படுகின்றன.

ஆட்சித்துறை நீதிமன்றங்கள்

பிரிட்டிஷ் அரசு சமுதாய நலம் பேணும் அரசாக இயங்குவதால் அரசியாரின் பொறுப்புகள் பலவாகப் பெருகிவிட்டன. தனி மனிதன் அடிக்கடி அரசாங்கத் துறைகளோடு தொடர்புகொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகிறது. குடிமக்களுக்கும் அரசாங்கத் துறைகளுக்குமிடையே எழும் வழக்குகளை விசாரிக்க சாதாரண நீதிமன்றங்களைவிட ஆட்சித்துறை நீதிமன்றங்களே

சிறந்தவை என்ற எண்ணத்தில், இங்கிலாந்தில் 2000-க்கு மேற்பட்ட ஆட்சித்துறை நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை கடந்த இருபத்தைந்து ஆண்டுகட்கு உள்ளாகத் தோன்றி வளர்ந்தவை. ஆட்சித்துறை நீதிமன்றங்கள் அனைத்தும் அவ்வப்பொழுது பாராளுமன்றத்தால் நிறுவப்பட்டவை; அவை அமைப்பில் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருப்பதைக் காண்கிறோம். தீர்ப்புகள் பெரும்பான்மை நீதிபதிகளால் அறிவிக்கப்பட வேண்டியிருப்பதால் அவற்றின் நீதிபதிகளின் கூடுதல் எண்ணிக்கை ஒற்றைப்படையாய் இருக்கும். ஆட்சித்துறை நீதிபதிகள் பொதுவாக அந்தந்தத் துறையின் அமைச்சரால் நியமிக்கப்படுவார்கள். நீதிமன்றங்களை நிறுவும் சட்டங்களே அவற்றின் அமைப்பு, பொறுப்புகள், நடைமுறை ஆகியவற்றை வரையறை செய்யும். ஆட்சித்துறை நீதிமன்றங்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. (1) போக்குவரத்து நீதிமன்றம் (Transport Tribunal) போன்ற நிறுவனங்கள் அனுபவம் மிக்க வழக்கறிஞர்கள் தலைமையில் அமையும். இவற்றில் நிரந்தர உறுப்பினர்கள் சிலர் இருப்பார்கள். லண்டன் இருப்புப் பாதைகளில் பிரயாணிகள் கட்டணங்களைப் பற்றிய வழக்குகளும் பிரிட்டன் முழுவதிலுமுள்ள பொதி ஊர்திகள் உரிமை (License) பற்றிய வழக்குகளும் போக்குவரத்து நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும். (2) வருமான வரி ஆணையர்கள் (Special Commissioners of Income Tax) போன்றோரின் மன்றங்கள் பொதுவாக ஆட்சிமுறை சார்ந்த அலுவல்களையே கவனிக்கின்றன. உள்நாட்டு வரி வசூல் அதிகாரிகளின் (Inland Revenue Officials) தீர்ப்புகளுக்கு எதிராக முறையிட்டுக் கொள்ள விரும்புவோர் வருமான வரி ஆணையர்கள் முன்பாக வழக்குத் தொடரலாம். (3) 'ஓய்வு கால ஊதியங்கள் மேல் முறையீட்டு நீதிமன்றங்கள்' (Pensions Appeal Tribunals) போன்ற நிறுவனங்கள் மக்களில் சிலருக்கு மட்டுமே பயனுள்ளவையாய் இருக்கும். அமைச்சரால் நிராகரிக்கப்படும் ஓய்வு ஊதியக் கோரிக்கைகள் இந் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும். (4) 'வாடகைத் தொகை நீதிமன்றங்கள்' (Rent Tribunals) போன்ற நிறுவனங்களில் அமைச்சரால் நியமிக்கப்படும் சாதாரணக் குடிமக்களே நடுவர்களாய் அமர்ந்து தகராறுகளைத் தீர்த்துவைக்கின்றனர். சொத்துகளின் வாடகை, குத்தகை பற்றிய வழக்குகள் இந் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படும். (5) தொழில் தரத்தைக் காப்பதற்கும் சில மன்றங்கள் இருக்கின்றன. பொது மருத்துவக் குழு (General Medical Council), சட்டக் கழக ஒழுங்குமுறைக் குழு (Disciplinary Committee of the Law Society) போன்ற அமைப்புகள் அந்தந்தத் தொழில் துறையில் குற்றம் செய்கிறவர்களை விசாரித்துத் தண்டனை வழங்கும்.

11. அரசியல் கட்சிகள்

(Political Parties)

[முன்னுரை—கன்சர்வேடிவ் கட்சி—லிபரல் கட்சி—தொழிற்கட்சி—கட்சிகளின் அமைப்பு.]

முன்னுரை

மக்களாட்சியின் உயிர்க்குருதி என அழைக்கப்படும் அரசியல் கட்சிகளை ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவித்து வளர்த்த பெருமை பிரிட்டனையே சாரும். முதலாம் எலிசபெத் (Elizabeth I, 1558—1603) காலத்தில் முளைவிட்ட கட்சிகள், ஸ்டூவர்ட் (Stuart) மன்னர்கள் காலத்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே எழுந்த ஆதிக்கப் போராட்டத்தில் பங்கேற்றுத் தங்கள் நிலைகளை உறுதிப்படுத்திக்கொண்டன. அரசரின் திறமையை ஆதரித்தோர் 'டோரிகள்' (Tories) எனவும், பாராளுமன்றத்தின் இறைமையை ஆதரித்தோர் 'விக்குகள்' (Whigs) எனவும் அழைக்கப்பட்டனர். 1832ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்துக்குப் பிறகு டோரி கட்சி கன்சர்வேடிவ் கட்சி (Conservative Party) என்றும், விக்கு கட்சி லிபரல் கட்சி (Liberal Party) என்றும் புதிய பெயர்களைப் புனைந்துகொண்டன. இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொழிலாளர் நலன்களுக்காகப் போராடத் தொழிற்கட்சி (Labour Party) என்ற ஓர் அமைப்பு 1906ஆம் ஆண்டில் தோன்றியது. தொழிற்கட்சி வளர வளர, லிபரல் கட்சி தேய்ந்து நலிந்துவிட்டது. இன்றைய பிரிட்டிஷ் அரசாங்கத்தில் கன்சர்வேடிவ் கட்சி ஆளும் கட்சியாகவும், தொழிற் கட்சி எதிர்க்கட்சியாகவும் செயல்படுகின்றன. நேற்றைய எதிர்க்கட்சி இன்றைய ஆளுங்கட்சியாகவும், இன்றைய ஆளும் கட்சி நாளைய எதிர்க்கட்சியாகவும் மாறி மாறி அமைவது பிரிட்டனில் இயல்பு. ஆளும் கட்சி பொறுப்புள்ள கட்சியாய் இயங்குவதுபோல எதிர்க்கட்சியும்

பொறுப்புள்ள கட்சியாய் இயங்குவது பிரிட்டிஷ் கட்சி முறையின் தனிப் பண்பாகும். ஆளுங் கட்சியினுல் அமைக்கப்படும் அரசாங் கத்தை 'மாட்சிமை தங்கிய அரசியாரின் அரசாங்கம்' என அழைக்கும் பிரிட்டிஷார், எதிர்க்கட்சியை 'மாட்சிமை தங்கிய அரசியாரின்பால் விசுவாசமுள்ள எதிர்க்கட்சி' என அழைப்பது அறியத்தக்கது.

கன்சர்வேடிவ் கட்சி

நாட்டின் தொன்மையான நிறுவனங்களான முடியாட்சி, பிரபுக்கள் சபை, ஆங்கிலத் திருச்சபை ஆகியவற்றைக் காப்பதைக் கன்சர்வேடிவ் கட்சி தன் கடமையாய்க் கருதுகிறது. 'கதிரவன் மறையாத பிரிட்டிஷ் பேரரசு' எனப் புகழப்பட்ட கடல் கடந்த பிரிட்டிஷ் பேரரசு சிதையாமல் காப்பதும், மற்ற நாடுகளிடையே பிரிட்டிஷ் பண்பாட்டின் பயனைப் பரப்புவதும், தனியார் சொத்துரிமையைப் போற்றுவதும், தேசிய ஒற்றுமையை வளர்ப்பதும், காப்புள்ள வாணிபத்தை ஆதரிப்பதும் இதன் கொள்கைகளில் அடங்கும். இருபதாம் நூற்ருண்டில் சமுதா யத்தில் தோன்றியிருக்கும் மாற்றங்களுக்கு உகந்த வகையில், சமூகச் சீர்த்திருத்தச் செயல்களிலும் இக்கட்சி அக்கறை காட்டு கிறது. கிராமப்புறங்கள் கன்சர்வேடிவ் கட்சியின் கோட்டை களாகக் கருதப்படுகின்றன. நிலக்கிழார்கள், தொழிலதிபர்கள், பத்திரிகைச் சொந்தக்காரர்கள், பெரும் பதவிகள் வகிப்போர், கடைக்காரர்கள் ஆகியோர் கன்சர்வேடிவ் கட்சிக்கு நல்ல ஆதரவு தருகின்றனர். இக் கட்சி பணக்காரர்கள் கட்சி எனக் கருதப் படுவதில் ஓரளவுக்கு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

லிபரல் கட்சி

முதலாளித்துவத்தை ஆதரிக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் பொதுவுடைமையை ஆதரிக்கும் தொழிற் கட்சிக்கும் இடைப் பட்ட நிலையில் லிபரல் கட்சியின் கொள்கைகள் அமைந்திருக் கின்றன. அரசைவிடத் தனி மனிதன் உயர்ந்தவன் என்பதும், தனி மனிதனின் பண்புகளை வளர்க்க அரசு முழு ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதும், நாட்டில் தடையில்லா வாணிபம் நிலவ வேண்டும் என்பதும், பிரிட்டன் பிற நாடுகளை அடக்கி ஆள முயலக்கூடாது என்பதும், அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகள் சுதந்திரமடைய ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்பதும் லிபரல் கட்சியின் கொள்கைகளில் சிலவாம். அமைதியான வழிகளைப் பின்பற்றி உலக சமாதானத்தை வளர்ப்பதை இக் கட்சி பெரிதும் விரும்புகிறது. வங்கிகள், போக்குவரத்துச் சாதனங்கள், மின்சக்தி, நிலக்கரி அகழ்தல் போன்ற தொழில்கள் சமுதாய நலனுக்காக

அரசாங்கத்தால் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டுமே ஒழிய, தேசிய மயமாக்கப்படுவது அவசியமில்லை என்பது லிபரல் கட்சியின் கருத்தாகும். ஏழை எளியவர்களின் குறைகளை நீக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று இக் கட்சி பெரிதும் விரும்புகிறது. இதன் கொள்கைகளை நன்கு அறிந்தோர் இதற்கு 'தாராளக் கட்சி' என்ற பெயர் மிகப் பொருத்தம் என எண்ணுகின்றனர். மனித உரிமைகளைப் பெரிதும் மதிப்போர் நடுத்தர வகுப்பினர், கை வினைஞர்கள், தேசிய மதத்துக்கு இணங்காதோர் (non-conformists), சிறு குடியானவர்கள் ஆகியோர் லிபரல் கட்சிக்குப் பெரிதும் ஆதரவு தருகின்றனர். இருபதாம் நூற்றாண்டில் லிபரல் கட்சி நாளுக்கு நாள் நலிந்து வருவதைப் பார்த்தால், அது இனியும் ஆளும் கட்சியாய் வளருமா என்பது ஐயத்திற்குரியதாய் தோன்றுகிறது. 1906ஆம் ஆண்டில் பொதுமக்கள் சபையில் 397ஆக இருந்த லிபரல் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 1911, 1923, 1929, 1931, 1935, 1945, 1949, 1962, 1964, 1966 ஆகிய ஆண்டுகளில் 271, 158, 59, 37, 21, 12, 6, 7, 9, 12ஆக குறைந்திருப்பது லிபரல் கட்சிக்கு எதிர்காலமில்லை என்பதை உணர்த்துகிறது.

தொழிற் கட்சி

தொழிற் கட்சி முதலாளித்துவத்துக்கு எதிராக எழுந்த ஒரு சமதர்மக் கட்சியாகும். உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் அரசு உடைமையாக்கப்படவேண்டும் என்பதே தொழிற் கட்சியின் கொள்கையாகும். நாட்டில் சமதர்மக் கோட்பாடுகளைப் படிப்படியாகவும், ஜனநாயக முறைகளையொட்டியும் புகுத்துவதே இக் கட்சியின் நோக்கம். வேலை, கூலி, கல்வி, ஓய்வு, வேலையின்மை, நோய், முதுமை ஆகியவைகளிலிருந்து காப்புப் போன்றவை எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்று இக் கட்சி வற்புறுத்துகிறது. பொதுநலத்துறைகள் (Public utilities), இயற்கை வளங்களின் ஏகபோக உரிமை ஆகியவை முதலிலும் நிலம், தொழில்கள் ஆகியவை பிறகும் தேசிய மயமாக்கப்பட வேண்டுமெனத் தொழிற் கட்சி விரும்புகிறது. சர்வதேச அரங்கில் உலகநாடுகளின் கூட்டுப் பாதுகாப்பை (Collective Security) இக் கட்சி வரவேற்கிறது. சமதர்மக் கோட்பாடுகளின் பெருமையை மக்கள் உணரச்செய்து, அவர்களாகவே அவற்றை விரும்பி ஏற்கச் செய்வது தொழிற்கட்சியின் இலக்காகும். சமதர்மமும் ஜனநாயகமும் இக் கட்சியின் இரு கண்கள் என்றாலும், ஜனநாயகமே வலது கண்ணாகக் கருதப்படுகிறது. குடியேற்ற நாடுகள் சுதந்திர நாடுகளாக மலர்வதை இக் கட்சி ஆதரிக்கிறது. 1947ஆம் ஆண்டில் அட்லியின் (Attlee)

தொழிற்கட்சி அரசுதான் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கியது என்பது அறியத்தக்கது. தொழிலிலும் உழவிலும் ஈடுபட்டிருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களே தொழிற்கட்சியின் முதுகெலும்பாய் அதைத் தாங்கி நிற்கின்றனர். சாதாரண நடுத்தர வகுப்பினரும், அரசு ஊழியர்களில் இடைநிலையிலும் தாழ்ந்த நிலையிலும் வேலைப் பார்ப்போரும் இக் கட்சியை ஆதரிக்கின்றனர். படித்தவர்களில் பலரை இக் கட்சியின் கொள்கைகள் கவர்கின்றன. பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்கட்சியோடு கூட்டுச்சேர பல ஆண்டுகளாக முயன்று வருகின்றபோதிலும், இன்றுவரை தொழிற்கட்சி தனித்தே இயங்கி வருகிறது.

கட்சிகளின் அமைப்பு

கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் (Leader) அக் கட்சியின் சார்பில் பொதுமக்கள் சபையில் இடம்பெறும் பிரதிநிதிகளால் முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார். இத் தேர்தல் பாராளு மன்றத்தின் இரு சபைகளிலுமுள்ள கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள், வருங்கால வேட்பாளர்கள், செயற்குழு அங்கத்தினர்கள் ஆகியோர் அடங்கிய அமைப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் செல்லுபடியாகும். இந்த முறையை ஒட்டியே இன்று முதலமைச்சராய் இருக்கும் எட்வர்டு ஹீத் (Edward Heath) 1965ஆம் ஆண்டு கட்சியின் முதல்வராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் முக்கியமான நிறுவனங்களில் மத்தியக்குழு (Central Council) ஒன்றாகும். நாடெங்கிலும் இருக்கும் தேர்தல் தொகுதிக்கழகங்களின் (Constituency Associations) பிரதிநிதிகளும், மண்டலக் குழுக்களின் பிரதிநிதி களும் மத்தியக்குழுவின் அங்கத்தினர்கள். இவர்களைத் தவிர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், வருங்கால வேட்பாளர்களும் குழுவில் அமரும் உரிமையைப் பெறுகின்றனர். இது ஆண்டிற்கு ஒருமுறை கூடிச் செயற்குழுவின் அறிக்கையை விவாதிக்கும். செயற்குழு என்பது சில செல்வாக்குள்ள உறுப் பினர்கள் அடங்கிய சிறியதோர் அமைப்பாகும். ஆண்டுக்கு ஒரு முறை கட்சியின் வருடாந்திர மாநாடு நடைபெறும்; இதில் 4,000-க்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் கலந்து கொள்வார்கள். கன்சர்வேடிவ் கட்சி அமைப்பில் தலைவரே முதன்மையான இடம் பெறுகிறார். கட்சியின் நிறுவனங்கள் அனைத்தும் தலைவர் சொற்படி நடப்பதே பொதுவான வழக்கம்.

லிபரல் கட்சியின் தலைவர், துணைத்தலைவர், பொருளாளர்கள் ஆகியோர் ‘லிபரல் பேரவை’ (Liberal Assembly) என

அழைக்கப்படும் அதன் வருடாந்திர மாநாட்டில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். கட்சியின் முக்கியமான நிறுவனங்களில் 'லிபரல் சபை' (Liberal Council) ஒன்றாகும். இச் சபையில் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படும் முப்பது உறுப்பினர்களும், கீழ்ச் சபையி லிருந்து ஆறு லிபரல் பிரதிநிதிகளும், மேல் சபையிலிருந்து ஆறு லிபரல் பிரதிநிதிகளும், 'லிபரல் கட்சிக் குழு'வின் (Liberal Party Committee) அங்கத்தினர்களும் இடம் பெறுகின்றனர். கட்சியின் முதல்வரையும் பெருந் தலைவர்களையும் கொண்ட அமைப்பே லிபரல் கட்சிக் குழு என அழைக்கப்படுகிறது.

தொழிற்கட்சியின் அமைப்பில், வருடாந்திரம் கூடும் மாநாடே கட்சிக் கொள்கைகளையும் மற்றச் செயல்களையும் நிர்ணயிக்கும் நிறுவனமாகக் கருதப்படுகிறது. தேர்தல் தொகுதிக் கழகங்களும், தொழிற் சங்கங்களும், சமதர்மக் கழகங்களும் சேர்ந்த அமைப்பே தொழிற்கட்சி ஆதலால், மாநாட்டிற்கு இம் மூன்று வகையான பிரிவுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். 1965ஆம் ஆண்டில் தேர்தல் தொகுதிக் கழகங்களில் எட்டு லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களும், தொழிற் சங்கங்களில் ஐம்பத்தாறு லட்சத்துக்கு மேற்பட்ட உறுப் பினர்களும், சமதர்மக் கழகங்களில் இருபத்தோராயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் இருந்தனராம். கட்சியின் தேசியச் செயற்குழுவில் தொழிற்சங்கங்களின் சார்பாகப் பன்னிரண்டு உறுப்பினர்களும், தேர்தல் தொகுதிக் கழகங்களின் சார்பாக ஓர் உறுப்பினரும் இருப்பதிலிருந்து, தொழிற்சங்கங்களே கட்சியின் முக்கிய அங்கமாய் விளங்குவது தெளிவாகிறது. தொழிற்கட்சியின் தலைவர் அதன் பாராளுமன்ற உறுப் பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். கட்சியின் முக்கியமான முடிவுகள் அனைத்தும் அதன் மாநாட்டால்தான் எடுக்கப் படுகின்றன என்பதிலிருந்து தொழிற்கட்சியில் அதன் தலைவருக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

மூன்று கட்சிகளும் தங்கள் மாநாடுகளைச் சிறப்பாக நடத்த முயல்வது இயல்பு. அவற்றில் இயற்றப்படும் தீர்மானங்களையும், பேசப்படும் பேச்சுகளையும் நாடு முழுதுமுள்ள மக்கள் தொலைக் காட்சியில் காண்பதால், அவை மக்கள் மனத்தைக் கவரத்தக்க வகையில் அமைய வேண்டுமென்று தலைவர்கள் விரும்புகிறார்கள். தலைவர்கள் என்னதான் முயன்றாலும் கட்சி உறுப்பினர் களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் பல சமயங்களில் வெளிப்படையாகத் தோன்றுவதுண்டு.

12. செல்வாக்குக் குழுக்கள்
(Pressure Groups)

[முன்னுரை — ஆதாயக் குழுக்கள் — கருத்துக் குழுக்கள்— தாற்காலிகக் குழுக்கள்—செல்வாக்குக் குழுக்கள் செயல்படும் முறை—செல்வாக்குக் குழுக்களும் பாராளுமன்றமும்—அமெரிக்க செல்வாக்குக் குழுக்களோடு ஒப்பிடுதல்.]

முன்னுரை

தற்கால அரசுகளில் காணப்படும் செல்வாக்குக் குழுக்கள் பொதுவாக அரசியல் கட்சிகளைப் போன்றே அமைந்திருக்கின்றன. ஆனால், அரசியல் கட்சிகள் சமுதாயத்தின் பல வகையான சிக்கல்களைத் தீர்க்க முயல்வதுபோல் செல்வாக்குக் குழுக்கள் முயல்வதில்லை; செல்வாக்குக் குழுக்கள் தங்கள் நலனில் மட்டுமே அக்கறை காட்டும். மேலும் அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றித் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும்; செல்வாக்குக் குழுக்களோ தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தியே தாங்கள் விரும்பியவற்றைப் பெற விழையும். செல்வாக்குக் குழுக்கள் தற்கால அரசுகளின் தனிப்பண்பாகக் கருதப்பட்டாலும் அரசியல் ஆரம்பித்த காலத்திலேயே அவையும் ஆரம்பித்துவிட்டன எனக் கருத இடமுண்டு. ஆனால் முற்காலத்தில் அவற்றின் அமைப்புச் சரியாக அமையவில்லை.

ஆதாயக் குழுக்கள்

பிரிட்டிஷ் தன்னலக் குழுக்களை 'ஆதாயக் குழுக்கள்' (Interest Groups) என்றும், 'கருத்துக் குழுக்கள்' (Idea Groups) என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்; ஆதாயக் குழுக்களே எண்ணிக்கையில் அதிகமாய் இருக்கின்றன. அவை 'உற்பத்தியாளர் குழுக்கள்' (Producers groups) என்றும், 'உபயோகிப்போர் குழுக்கள்' (Consumers groups) என்றும் இரு

வகைப்படும். 'பிரிட்டிஷ் தொழில்கள் கூட்டமைப்பு' (Federation of British Industries), 'பிரிட்டிஷ் வேலை அளிப்போர் கூட்டுக் குழு' (British Employers' Confederation), 'பிரிட்டிஷ் உற்பத்தி யாளர்களின் தேசியச் சங்கம்' (National Association of British Manufacturers) ஆகியவை உற்பத்தியாளர் குழுக்களில் மிகப் பெரியவை. உற்பத்தியாளர் குழுக்களில் பெரும்பாலானவை பிரிட்டிஷ் தொழில் கூட்டமைப்பு' (Confederation of British Industry) என்ற அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. பிரிட்டனில் இருக்கும் தொழிற்சங்கங்களும் உற்பத்தியாளர் சங்கங்களாகவே கருதப்படுகின்றன. 'போக்குவரத்துப் பொதுத் தொழிலாளர் சங்கம்' (Transport and General Workers' Union) என்பது பிரிட்டனின் மிகப்பெரிய தொழிற்சங்கமாகும். 1966ஆம் ஆண்டில் இச்சங்கத்தில் 14,43,738 உறுப்பினர்கள் சேர்ந்திருந் தார்கள். பிரிட்டனில் இருக்கும் பெரும்பாலான தொழிற் சங்கங்கள் 'தொழிற்சங்க குழுமம்' (Trade Union Congress) என்ற அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. விவசாயிகளும் தங்களுக்கெனத் தனிச் சங்கங்கள் அமைத்துக் கொண் டிருக்கின்றனர். 'தேசிய உழவர் சங்கம்' (National Farmers' Union) என்பது பிரிட்டிஷ் நிலக்கிழார்களின் மிகப்பெரிய சங்கமாகும். 'தேசிய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம்' (National Union of Agricultural Workers) என்ற அமைப்பில் பண்ணைக் குடியானவர்களில் பெரும்பாலோர் சேர்ந்திருக் கின்றனர். 'பிரிட்டிஷ் மருத்துவச் சங்கம்' (British Medical Association) என்பது மருத்துவர்களின் செல்வாக்கு மிக்க சங்கமாகும்.

உபயோகிப்போருக்கு, உற்பத்தியாளர் போன்று அதிகப் படியான சங்கங்கள் இல்லை. இருக்கின்ற சில சங்கங்களும் நன்கு அமைக்கப்படவில்லை. 'மோட்டார் வண்டி சங்கம்' (Automobile Association) என்ற அமைப்பைச் சாலை உபயோகிப்போர் சங்கம் எனக் கருதலாம். உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகிப்போர், 1957ஆம் ஆண்டில் 'உபயோகிப்போர் சங்கம்' (Consumers' Association) ஒன்றை ஆரம்பித்தனர்; இதற்கு நாடெங்கிலும் கிளைகள் உண்டு. சந்தையில் விற்கும் பல வகையான பொருள்களின் தரத்தைப்பற்றி மக்களுக்கு அறிவுரை வழங்குவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். வர்த்தக நிறுவனங்கள் தங்கள் பொருள்களை விற்பனை செய்ய எப்படி எப்படியெல்லாமோ விளம்பரங்கள் செய்கின்றன; விளம்பரங் களில் காணப்படும் செய்திகள் எல்லாம் உண்மை என்று நம்புவதற்கில்லை. ஒவ்வொரு பொருள் பற்றியும், அதன்

குணங்களையும் குறைகளையும் மதிப்பிட்டு மக்களுக்கு எடுத்துக் கூறும் பணியை உபயோகிப்போர் சங்கம் ஏற்றுக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது, 'எது?' (Which?) என்ற செய்தி இதழை இச் சங்கம் வெளியிடுகிறது. ஊசியிலிருந்து இரயில் பெட்டிவரை ஒவ்வொரு பொருளின் தரத்தையும் இந்த இதழ் மக்களுக்குத் தெரிவிக்கிறது. கல்வித் துறையில் பெற்றோர்கள் முயற்சியால் 'அரசு கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பு' (Confederation for the Advancement of State Education) என்ற சங்கமும், சுகாதாரத் துறையில் 'நோயர் சங்கம்' (Patients' Association), 'மருத்துவ மனைகளிலுள்ள குழந்தைகள் நலனுக்கான தேசியச் சங்கம்' (National Association for the Welfare of Children in Hospital) ஆகிய சங்கங்களும் உபயோகிப்போர் சங்கங்களில் அடங்கும்.

கருத்துக் குழுக்கள்

ஆதாயக் குழுக்கள் தங்கள் சொந்த நலனுக்காகப் பாடு படுகின்றன; ஆனால், கருத்துக் குழுக்கள் சமுதாய நலனுக்காக பாடுபடுகின்றன; அவை மனிதாபிமான பண்புகளால் உந்தப் படுகின்றன. குற்றவாளிகளும் மனிதர்களே; தண்டனைகளின் நோக்கம் அவர்களைத் திருத்துவதே; எனவே அவர்களுக்குச் சாவு தண்டனை வழங்குவது கொடுமையாகும் என்று எண்ணுவோர் 'சாவு தண்டனை ஒழிப்புத் தேசியச் சங்கம்' (National Campaign for the Abolition of Capital Punishment) என்ற அமைப்பை ஏற்படுத்தி இருக்கின்றனர். ஆப்பிரிக்க நாடுகளில் வெள்ளையர் களால் பின்பற்றப்படும் இன ஒதுக்கீட்டுக் கொள்கையை (apartheid) எதிர்ப்போர், 'ஆப்பிரிக்கா அரங்கம்' (Africa Bureau) என்ற கழகத்தை ஆரம்பித்திருக்கின்றனர். குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டுமென்று வாதாடுவோர் 'குடியேற்ற நாடுகள் சுதந்திர இயக்கம்' (Movement for Colonial Freedom) ஒன்றை நடத்துகின்றனர். குத்துச் சண்டை, எருதும் மனிதனும் போராடுதல் (bull fight), கோழிச் சண்டை போன்ற கொடுமையான விளையாட்டுகளைக் கண்டு வேதனை அடைவோர், அவற்றை நிறுத்த 'இரக்கமற்ற விளையாட்டுகளை ஒழிப்பதற்கான சங்கம்' (The League for the Abolition of Cruel Sports) ஒன்றை அமைத்திருக்கின்றனர். ஆதாயக் குழுக்கள் போன்று கருத்துக் குழுக்கள் வலுவுள்ளவை அல்ல; அவைகளிடம் நிறைய பணமும் இல்லை; அவைகளின் முழு நேர ஊழியர்களின் எண்ணிக்கையும் குறைவே; இவ்வளவு இடர்பாடு களுக்கிடையிலும், அவை சில துறைகளில் வெற்றி அடைந் திருப்பது பாராட்டுதலுக்குரிய செயலே.

தாற்காலிகக் குழுக்கள்

சில சமயங்களில் ஏதாவது ஒரு நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தாற்காலிகக் குழுக்கள் (Adhoc Committees) அமைக்கப்படுவதுண்டு. எந்தக் காரியத்துக்காகக் குழு அமைக்கப் படுகிறதோ, அந்தக் காரியம் நிறைவேறியவுடன் குழு கலைக்கப் படும். அரசாங்க வேலைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகச் 'சமச் சம்பளப் போராட்டக் குழு' (Equal Pay Campaign Committee) ஒன்று தோன்றியது. 1956ஆம் ஆண்டில் அரசாங்கம் இருபால் ஊழியர்களுக்கும் சம அளவான சம்பளம் வழங்குவதாக வாக்குறுதி அளித்ததும், அந்தக் குழு கலைந்துவிட்டது. தொலைக் காட்சியில் வர்த்தகத் தொலைக்காட்சிக்கு (Commercial Television) ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்த 'விரும்பத்தக்க தொலைக்காட்சி சங்கம்' (Popular Television Association) ஒன்று அமைக்கப்பட்டது. 1954ஆம் ஆண்டின் தொலைக்காட்சி சட்டத்தின் மூலமாக வர்த்தகத் தொலைக் காட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டவுடன் அந்தச் சங்கம் கலைந்தது. 'ஐரோப்பாவில் பிரிட்டன்' (Britain in Europe) என்ற தாற்காலிக அமைப்பு நெடுநாள்களாக இயங்கி வருகிறது; ஐரோப்பியப் பொதுச் சந்தையில் (European Common Market) பிரிட்டனையும் சேர்ப்பதே இச் சங்கத்தின் நோக்கம்; எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றனர் என்பது அறியத்தக்கது.

செல்வாக்குக் குழுக்கள் செயல்படும் முறை

செல்வாக்குக் குழுக்கள் மூன்று வழிகளில் தங்கள் ஆற்றலைப் பயன்படுத்த முயல்கின்றன: அரசாங்கத் துறைகள், பாராளு மன்றம், பொதுமக்கள். வெவ்வேறு குழுக்கள் வெவ்வேறு முறைகளில் தங்கள் விருப்பங்களை அடையமுயலும். ஆதாயக் குழுக்கள் அரசாங்கத் துறைகளோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, அரசாங்க அதிகாரிகளை அடிக்கடி நேரில் சந்தித்துத் தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும். எடுத்துக் காட்டாக, நிலக்கிழார்களின் சங்கமான தேசிய உழவர் சங்கம் விவசாய அமைச்சகத்தோடு நயமாகப் பழகித் தன் கொள்கைகள் பலவற்றிற்கு அரசாங்கத்தை இணங்கச் செய்திருக்கிறது. ஆட்சித் துறை அதிகாரிகள் குழுக்களின் கருத்துகளுக்கு இணங்கத் தயங்குகிற காலங்களில்தான் அவை பாராளுமன்றத்தை அணுகும்.

பல வர்த்தக நிறுவனங்கள் சட்டமன்ற உறுப்பினர்களிடம் நல்ல பழக்கம் வைத்துக்கொண்டு தாங்கள் வேண்டியவற்றைப் பெற முயல்கின்றன. ஆண்ட்ரூ ராத் (Andrew Roth) என்பவர் ஆராய்ச்சிப்படி 1963ஆம் ஆண்டில் 360 பொதுமக்கள் சபை பிரதிநிதிகளுக்குக் குறிப்பிடத்தக்க அளவுக்கு வர்த்தகத் தொடர்புகள் இருந்ததாம். பல தொழிற்சங்கங்களின் தலைவர்களே சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக அமர்ந்திருப்பது அறியத் தக்கது. 1966ஆம் ஆண்டின் பொதுமக்கள் சபையில் சுரங்கத் தொழிலாளர்கள் சார்பாக 27 உறுப்பினர்களும், போக்குவரத்துத் தொழிலாளர்கள் சார்பாக 27 உறுப்பினர்களும், பொறிவலாளர் சார்பாக 17 உறுப்பினர்களும், நகராட்சி மேலும் பொது ஊழியர்கள் சார்பாக 10 உறுப்பினர்களும் இருந்தனர். அந்தந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் அவரவர் நலன்களைப் பாதுகாக்கச் சட்டமன்றத்தைப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

செல்வாக்குக் குழுக்கள், பொதுமக்கள் கருத்தைத் தங்கள் பக்கம் திருப்புவது என்பது எளிதன்று. ஆகையால்தான் ஆதாயக் குழுக்கள் இந்த வழியைப் பயன்படுத்த முன்வருவதில்லை. சில சமயங்களில் உற்பத்தியாளர் குழுக்கள் சார்பாகவும் உபயோகிப்போர் குழுக்கள் சார்பாகவும் செய்தித்தாள்களில் பெரும் விளம்பரங்கள் வரும். இவை கௌரவத்திற்காக வெளியிடப் படுகின்றனவேயல்லாது, எந்த நோக்கத்தையும் உடனடியாக நிறைவேற்றிக்கொள்வதற்காக அல்ல என்பது அறியத்தக்கது. கருத்துக் குழுக்கள் மட்டும் அரசாங்கத் துறைகளைவிடப் பாராளுமன்றத்தையும் பொதுமக்களையுமே அதிகமாக நம்புகின்றன. 'அணு ஆயுதப் படைக்குறைப்புக் கழகம்' (Campaign for Nuclear Disarmament), பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் உபதேசித்து உபதேசித்துத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பாடுபடுகிறது. அதன் ஊர்வலங்களும், அது டிராஃபால்கர் சதுக்கத்தில் (Trafalgar Square) நடத்தும் கூட்டங்களும் பொதுமக்களைத் தங்கள்பால் ஈர்ப்பதற்காகவே நடத்தப்படுகின்றன. சாத்வீகப் போராட்டத்தின் வாயிலாக நாடே தங்களைப்பற்றி அறிந்துகொள்ளும்படி செய்கின்றனர். இவர்களின் செயல்கள் முதலாவது உலகப் போருக்கு முன்பு பெண்கள் வாக்குரிமைக்காகப் போராடியோரின் செயல்களை (suffragette movement) நினைவுபடுத்துகின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னலக் குழுக்களின் கோரிக்கைகளை அனுதாபத்தோடு அணுகுகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் எந்த அரசாங்கத் துறையும் எந்தத் தன்னலக் குழுவின் செல்வாக்

கிற்கும் முழுக்க முழுக்க பணிந்துபோய் விடுவதில்லை. சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவுகளும் குழுக்கள் அமைத்துக் கொள்வது என்பது இயலாத காரியம். தேசியக் குழு அமைத்திருக்கும் தொழிலானாலும் சரி, குழுவே அமைக்காத தொழிலானாலும் சரி, அரசாங்கம் எல்லோருக்கும் பொதுவாக நடந்துகொள்வதே நியாயம். சில சமயங்களில் ஒரே தொழிலில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் இருப்பதுண்டு. எடுத்துக் காட்டாக, மருத்துவத்துறையில் 'பிரிட்டிஷ் மருத்துவச் சங்கம்', 'மருத்துவர் ஒன்றியம்' (Medical Practitioners' Union), 'சோஷலிஸ்ட்டு மருத்துவச் சங்கம்' (Socialist Medical Association) ஆகிய மூன்று சங்கங்கள் இருக்கின்றன. அரசாங்கம் மருத்துவத்துறையில் எதாவது செய்ய விரும்பினால் இந்த மூன்று அமைப்புகளின் கருத்துகளையும் கேட்டறிவதே நியாயமாகும்.

செல்வாக்குக் குழுக்களும் பாராளுமன்றமும்

பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் செல்வாக்குக் குழுக்களோடு தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்பதை முன்பே பார்த்தோம். இது விரும்பத்தக்கதன்று என்பது பலரின் கருத்து. பொதுமக்களுக்கு எது நல்லது என்பதை ஆராய்ந்து அறிவதே பிரதிநிதிகளின் பொறுப்பு; ஆனால் அவர்கள் தன்னலக் குழுக்களில் பதவி வகிப்பவர்களாய் இருந்தால் தங்கள் குழுக்களின் நலனை நாடுவதிலேயே அக்கறை காட்டுவார்கள். வர்த்தகத் தொலைக் காட்சியைத் தொடங்க வேண்டுமென்று வாதாடிய சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர், அதனால் இலாபமடைய இருந்தவர்களே எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களில் யார் யார் எந்தெந்தத் தன்னலக் குழுக்களோடு தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப் படுவது நல்லது. பிரிட்டிஷ் தன்னலக் குழுக்கள், அமெரிக்கத் தன்னலக் குழுக்களைப்போன்று, தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி வற்புறுத்தப்பட வேண்டும். அவற்றின் பெயர், நோக்கம், வருவாய், பணியாளர்களின் பெயர்கள் ஆகிய எந்த விவரமும் இரகசியமாய் வைக்கப்படக்கூடாது. மேற்கண்ட விவரங்களைப் பதிவுசெய்ய ஒரு பதிவாளர் (Registrar) நியமிக்கப் படலாம். அவர் குழுக்களின் ஆண்டு அறிக்கைகளையும், வரவு செலவுக் கணக்குகளையும், சட்டதிட்டங்களையும் கண்காணிக்க அனுமதிக்கப்படவேண்டும்.

அமெரிக்க செல்வாக்குக் குழுக்களோடு ஒப்பிடுதல்

சாமுவேல் பீர் (Samuel Beer) என்பவரின் கருத்துப்படி, அமெரிக்க செல்வாக்குக் குழுக்களைவிட பிரிட்டிஷ் செல்வாக்குக்

குழுக்கள் அதிக ஆற்றல் வாய்ந்தவையாம். தன் கருத்தை உறுதிப் படுத்த அவர் மூன்று காரணங்கள் காட்டுகிறுர். முதலாவதாக, அமெரிக்கக் குழுக்களைவிட பிரிட்டிஷ் குழுக்கள் செறிவானவை; உதாரணமாக, பிரிட்டனிலுள்ள தேசிய உழவர் சங்கத்தில் 90 சதவிகித உழவர்கள் உறுப்பினர்களாயிருக்கின்றனர். ஆனுல் அமெரிக்காவில் 1956-ல் இருந்த மூன்று உழவர் சங்கங்களில் 30 சதவிகித உழவர்களே உறுப்பினர்களாய் இருந்தனர். இரண் டாவதாக, பிரிட்டன் ஒற்றையாட்சி நாடாக இருப்பதாலும், நலம்நாடும் அரசை நிறுவ முயன்றுவருவதாலும் பிரிட்டிஷ் குழுக்கள் அமெரிக்கக் குழுக்களைவிட அதிகமான சலுகைகளை அரசாங்கத்திடமிருந்து பெறுகின்றன. மூன்ருவதாக, பிரிட்டிஷ் குழுக்கள் அசாங்கத்தோடு நல்ல உறவுகளைப் பேணிவருவதால், அமெரிக்கக் குழுக்களைவிட அவை அதிகம் சாதிக்கின்றன.

படிக்கவேண்டிய நூல்கள்

(1) N. H. Brasher — Studies in British Government (Macmillan)

(2) W. I. Jennings — The British Constitution (Cambridge)

(3) H. J. Laski — Parliamentary Government in England (Allen & Unwin)

(4) W. B. Munro — The Governments of Europe (Macmillan)

(5) J. P. Mackintosh — The Government and Politics of Britain (Hutchinson)

(6) F. Stacey — The Government of Modern Britain (Oxford)

III. அமெரிக்க அரசியலமைப்பு

(The American Constitution)

1. அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

(Characteristic Features of the Constitutions)

[முன்னுரை — எழுதப்பெற்ற அரசியலமைப்பு — மக்களரசு— கூட்டாட்சி—அதிகாரப் பிரிவினை——சமநிலைத் தடையீடுகள்—நீதிப் புனராய்வு — அரசியலமைப்பில் இடம் பெருதவை — கட்டுப்பாடுள்ள அரசாங்கம்—அடிப்படை உரிமைகள்.]

முன்னுரை

1789ஆம் ஆண்டிலிருந்து இடைவிடாது இயங்கிவரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு பிலடெல்பியாவில் (Philadelphia) சுதந்திர மாளிகையில் கூடிய ஐம்பத்தைந்து அங்கத்தினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணயச் சபையின் படைப்பாகும். ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington), பெஞ்சமின் ஃபிராங்ளின் (Benjamin Franklin), அலெக்சாந்தர் ஹேமில்டன் (Alexander Hamilton), ஜேம்ஸ் மேடிசன் (James Madison) ஆகியோரை அரசியலமைப்பின் பிதாக்களில் அழியாப் புகழ் பெற்றோராய்க் கருதுவது வழக்கம். 1789ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் சீரிய தலைமையில், பதின்மூன்று மாநிலங்கள் ஐம்பது மாநிலங்களாகவும், முப்பது லட்சம் மக்கள் இருபது கோடி மக்களாகவும் வளர்ந்திருப்பதோடல்லாமல், உலக நாடுகளில் அமெரிக்கா ஓர் ஈடு இணையற்ற வல்லரசாகவும் உயர்ந்திருக்கிறது. அக்காலத்தில் புதிய உலகமாகக் கருதப்பட்ட அமெரிக்காவில் குடியேறிய மக்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயராய் இருந்த காரணத்தால், ஆங்கிலேய அரசியல் கோட்பாடுகள் அமெரிக்க அரசியலமைப்பின் அடித்தளமாய் அமைந்தன. உரிமைப்பட்டயம், 1215; உரிமை விண்ணப்பம், 1628; உரிமைகள் மசோதா, 1689; லாக், மான்டெஸ்க்யூ, பிளாக்ஸ்டன் போன்ற அரசியல் மேதைகளின் தத்துவங்களின் சாயலை நாம் அமெரிக்க அரசியலமைப்பில் காண்கிறோம்.

எழுதப்பெற்ற அரசியலமைப்பு

உலகில் இன்று இருக்கின்ற அரசியலமைப்புகளில் முதன் முதலாக எழுத்துருவம் பெற்ற பெருமை அமெரிக்க அரசியல்

அமைப்பையே சாரும். இது சுருக்கமாகவும், தெளிவாகவும், அழகாகவும் வரையப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஏறத்தாழ 4000 வார்த்தைகளைத் தன்னகத்தே கொண்டு உலகிலேயே மிகச் சுருக்கமானதாய் விளங்கும் அமெரிக்க அரசியலமைப்பில் ஒரு முகப்பும் (Preamble), ஏழு விதிகளும், இருபத்தைந்து திருத்தங்களும் அடங்கி இருக்கின்றன. எனினும் பத்துப்பன்னிரண்டு பக்கங்களுக்குள்ளே சுருங்கிக் கிடக்கும் இச் சட்டத் தொகுப்பு அமெரிக்காவின் அரசியலமைப்பை முழுமையாக விளக்குவதாகக் கூற முடியாது. கடந்த 182 ஆண்டுகளில் காங்கிரசின் சட்டங்களும், நீதித் தீர்ப்புகளும், வழக்காறுகளும், மரபுகளும் அரசியலமைப்பைப் பெரிதும் வளரச் செய்திருக்கின்றன. இன்று இருக்கின்ற அரசியலமைப்பை ஒரு மாளிகைக்கு ஒப்பிடுவோமானால், 1789-ல் தோன்றிய ஆவணத்தை அதன் அடித்தளமாகவும், அதன் பின்னர்த் தோன்றிய வளர்ச்சிகளை அதன் தூண்களாகவும் தளங்களாகவும் கருதலாம். அரசியலமைப்பு இன்றும் வளர்கிறது என்பதும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் வளர வளர அதுவும் வளரும் என்பதும் உறுதி.

மக்கள் அரசு

மக்களின் குரல் கடவுளின் குரலுக்குச் சமம் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்ட அமெரிக்க மக்கள் தங்கள் அரசியலமைப்பை மக்களின் அரசியலமைப்பாகப் (People's Constitution) போற்றுவதில் வியப்பொன்றும் இல்லை. 'ஐக்கிய நாடுகளின் மக்களாகிய நாம், மேலும் முழுமையானதொரு கூட்டரசை அமைக்கவும், நீதியை நிலை நாட்டவும், உள்நாட்டில் அமைதியை உறுதிப்படுத்தவும், பொதுப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யவும், பொது நலத்தை வளர்க்கவும், சுதந்திரத்தின் இன்பங்களை நாமும் நம் சந்ததியினரும் பெறவும், இந்த அரசியலமைப்பை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வகுத்து நிறுவுகிறோம்' என்பதாக அரசியலமைப்பின் முகப்புரை அமைந்திருக்கிறது. இது அரசியலமைப்பின் நோக்கங்களை விளக்குவதோடு, அது மக்களால் சமைக்கப்பட்டது என்பதை அழுத்தம் திருத்தமாய்க் கூறுகிறது. அரசியலமைப்பு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பேரவையால் வரையப்பட்டது; மாநிலங்களில் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பேரவைகளே அதை உறுதி செய்தன. தாங்கள் விரும்புகிற அரசியலமைப்பை அமைத்துக்கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு என்பதற்கு அமெரிக்க அரசியலமைப்புச் சிறந்த எடுத்துக்காட்டாய் அமைகிறது. ஆபிரஹாம் லிங்கன் (Abraham Lincon) அமெரிக்க அரசாங்கத்தை 'மக்களின் அரசாங்கம் (Government

of the people), மக்களால் அரசாங்கம் (Government by the people), மக்களுக்காக அரசாங்கம் (Government for the people) என அழைத்தது இங்கு அறியத்தக்கது.

கூட்டாட்சி

உலகில் இன்று இருக்கின்ற கூட்டாட்சிகளில் முதன் முதலாக நிறுவப்பட்டது அமெரிக்கக் கூட்டாட்சியே ஆகும். மிக மூத்த கூட்டாட்சி என்ற பெருமையோடு, மிகச் சிறந்த கூட்டாட்சி என்ற பெருமையும் அமெரிக்காவுக்கு உண்டு. பதினெட்டு வகையான இனங்கள்மீது சட்டம் இயற்றும் அதிகாரங்கள் தேசிய அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. வரி வசூல், தற்காப்பு, வெளிநாட்டு அலுவல்கள், மாநிலங்களுக்கு இடையே வர்த்தகம், அஞ்சல் துறை போன்ற இனங்கள் மைய அரசின் ஆளுகைக்கு உட்பட்டவை. மைய அரசுக்குத் தரப்படாமல் எஞ்சி நிற்கும் அதிகாரங்கள் மாநில அரசுகளுக்குச் சொந்தமாகின்றன. கல்வி, சட்டமும் ஒழுங்கும், வாக்குரிமை போன்ற இனங்கள் மாநில அரசுகளின் ஆளுகைக்கு உட்பட்டவை. மத்திய மாநில அரசுகளுக்கு வெவ்வேறுன இனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் பல செயல்களை இரு அரசுகளும் ஒன்று சேர்ந்தே செய்கின்றன. இதையே தற்காலத்தில் 'கூட்டுறவுக் கூட்டாட்சி' (Co-operative Federalism) என அழைக்கிறோம். ஆரம்பக் காலத்தில் தேசிய அரசு வலுக்குறைந்த அரசாக இயங்கிய போதிலும், காலப் போக்கில் அதன் கரங்கள் வலுவூட்டப்பட்டதன் காரணமாக, இன்று அது ஒரு வலிமை மிக்க அரசாக வளர்ந்திருக்கிறது. சிறியனவும் பெரியனவுமாக ஐம்பது மாநிலங்களைக் கொண்ட கூட்டுக் குடும்பமே இன்றைய அமெரிக்கக் கூட்டாட்சியாகும்.

அதிகாரப் பிரிவினை

அமெரிக்க அரசியலமைப்பை 'அதிகாரப் பிரிவினைமீதான கட்டுரை' என அழைப்பது வழக்கம். அரசியலமைப்பின் முதல் மூன்று விதிகளின் முதலாவது வாக்கியங்கள் சட்டமியற்றுதல், ஆட்சிப் பரிபாலனம். நீதி நிருவாகம் ஆகிய அதிகாரங்கள் முறையே காங்கிரசிடமும், குடியரசு தலைவரிடமும், நீதிமன்றங்களிடமும் ஒப்படைக்கப்படுவதாக அறிவிக்கின்றன. பிரெஞ்சு நாட்டு அரசியல் மேதகையான மான்டெஸ்க்யூவின் அதிகாரப் பிரிவினைத் தத்துவம் அக்காலத்தில் பெரிதும் போற்றப்பட்டது என்பதற்கு அமெரிக்க அரசியலமைப்பைச் சிறந்த சான்றுகக் கூறலாம். மெஸ்ஸாசுஸெட்ஸ் மாநிலத்தின் அரசியலமைப்பு அதிகாரப் பிரிவினைக்கு அழகான இலக்கணம் கூறி, அத் தத்து

வத்தைப் பின்பற்றுவதால்தான் அம் மாநிலத்தின் அரசாங்கம் மனிதர்களின் அரசாங்கமாய் இராமல், சட்டங்களின் அரசாங்கமாய் இருக்கிறது எனப் புகழ்கிறது. மான்டெஸ்க்யூவையும் அமெரிக்கத் தேசிய மாநில அரசியலமைப்புகளின் தந்தைகளில் ஒருவராகக் கருதுவது தவருகாது. அரசின் அதிகாரங்கள் அனைத்தும் ஒருவரிடம் குவிந்திருக்குமானுல் அம்முறை வல்லாட்சிக்கு வகை செய்யும் என்பதும், பலரிடம் பகிர்ந்தளிக்கப்படுமானுல் நல்லாட்சிக்கு வழி செய்யும் என்பதும் வரலாறுபூர்வமாக அறியப்பட்ட உண்மையாகும்.

சமநிலைத் தடையீடுகள் (Checks and Balances)

சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளில், ஒவ்வொரு துறையும் மற்றத் துறைகள் அத்துமீறி நடக்காவண்ணம் தடை செய்து, அதன் விளைவாக அவைகளுக்கிடையே சக்திச்சமநிலையை நிலவச் செய்யும் சிறந்த ஏற்பாட்டிற்கு அமெரிக்க அரசியலமைப்பு இடமளிக்கிறது. குடியரசு தலைவரால் செய்யப்படுகிற உயர் பதவிக்கான நியமனங்களையும், சர்வதேச உடன்படிக்கைகளையும் செனட் சபை தடை செய்ய முடியும். காங்கிரசின் சட்டங்களைக் குடியரசு தலைவர் தடை செய்ய முடியும். இம்மாதிரியான தடை பெருந்தடையாய் இருக்கக்கூடாது என்பதற்காகக் காங்கிரஸ் மூன்றில் இரு பங்குப் பெரும்பான்மையோடு இதை மீற அனுமதிக்கப்படுகிறது. நீதிபதிகள்மீது குற்றம் சாட்டிக் காங்கிரஸ் அவர்களைப் பதவியிலிருந்து விலக்க முடியும். எந்தத் துறையின் போக்கிலாவது சர்வாதிகாரச் சாயல் தென்படுமானுல், அதை மற்றத் துறைகள் அடக்கி, அதை நியாயமாக நடக்கும்படி வற்புறுத்தலாம். அரசியலமைப்பின் பிதாக்கள் நியூட்டனின் இயற்பியலை (Newtonian Physics) நன்கு அறிந்தவர்கள். அவர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள கோளங்களில் ஒவ்வொன்றும் மற்றவையால் ஈர்க்கப்படுவதால்தான் எதுவும் இடம்பெயராமல் அததற்கு உரிய இடத்தில் இயங்குகிறது என்பதை உணர்ந்தவர்கள். ஆகையால்தான் அவர்கள் அரசாங்கத்திலும் ஒவ்வொரு துறையும் மற்றத் துறைகளைத் தன்பால் ஈர்க்க முயன்று, எந்தத் துறையும் அததற்குரிய போக்கிலிருந்து வழுவாமல் காக்கக் கூடிய அரசியலமைப்பை நிறுவினுர்கள்.

நீதிப் புனராய்வு (Judicial Review)

நீதி மறு ஆய்வு என்னும் முறை அமெரிக்க அரசியலமைப்பின் தனித்தன்மை வாய்ந்த பண்புகளில் ஒன்ருகக் கருதப்படுகிறது. மைய, மாநில அரசுகளின் சட்டங்கள் தேசிய அரசியலமைப்புக்கு

முரணுனவையாய்த் தோன்றிஞல் நீதிமன்றங்கள் அவற்றைச் செல்லாதவை என அறிவிக்கும் செயலேயே நீதி மறு ஆய்வு என்கிறேம். அரசியலமைப்பு, தன்னே நாட்டின் தலேயாய சட்டம் எனக் கூறிக்கொள்வதால் அதன் சட்டங்களுக்கு மாறுன சட்டங்களே நாட்டில் யாரும் இயற்றுமல் பார்த்துக்கொண்டால் தான் அது சிதையாமல் குலேயாமல் நிலேத்து நிற்க முடியும். நீதி மன்றங்களின் அதிகாரங்களில் மிக மேலானதாய் மதிக்கப்படும் இவ் வதிகாரம் அரசியலமைப்பால் அம் மன்றங்களுக்குத் திட்டவட்ட மாய் அளிக்கப்படவில்லே என்பது குறிப்பிடத்தக்கது. அரசிய லமைப்புத் தந்தைகளின் உட்கருத்தை ஆராய்ந்த C. A. பியேர்டு (C. A. Beard) போன்ற வரலாற்று ஆசிரியர்கள் நீதிமன்றங்கள் நீதி மறு ஆய்வு அதிகாரத்தைப் பயன்படுத்துவது அவர்களின் நோக் கத்துக்கு மாறுனதன்று என்பதாக நினேக்கின்றனர். அமெரிக்கக் கூட்டாட்சி ஏற்படுவதற்கு முன்பாகத் தனித்தனியாக இயங்கி வந்த மாநில அரசுகளில் நீதிமன்றங்கள் இதுபோன்ற அதிகாரங் களேப் பயன்படுத்தியதாக அறிகிறேம். சட்டத் துறையினர், ஆட்சித் துறையினர் ஆகியோரின் செயல்களே மறு ஆய்வு செய்து அவை அரசியலமைப்புக்கு உட்பட்டவைதாஞ என்று முடிவு செய்யும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இருப்பது, நீதித்துறையை மற்றத் துறைகளேவிட மேலான துறை ஆக்கிவிடுகிறது. ஆஞல் பிரிட்டிஷ் அரசியலமைப்பில் பாராளுமன்றத்தின் இறைமையே தலேயாய பண்பாய் விளங்குகிறது என்பதும், சட்டங்கள் எத்தன்மையதாயினும் அவற்றை ஏற்றுக்கொள்வது நீதிமன்றங் களின் கடமை என்பதும் நினேவில் இருத்தத் தக்கது.

அரசியலமைப்பில் இடம் பெறுதவை

அமெரிக்க அரசியலமைப்பில் பல முக்கியமான பொருள்கள் பற்றி எந்தச் செய்தியும் கூறப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரசில் அங்கத்தினர்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், குடியரசு தலேவர் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழியின் வாசகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பன போன்ற முக்கியமற்ற செய்திகளேக் கூறும் அரசியலமைப்பு, பல முக்கியமான செய்தி களேப் பற்றி ஒன்றும் கூறுதிருப்பது நமக்கு வியப்பூட்டுகிறது. வங்கிகள், குடியேறுதல், கல்வி, வரவு செலவுத் திட்டப் பட்டியல், கூட்டுரிமைக் குழு (Corporations), அரசியல் கட்சிகள் ஆகிய வற்றைப் பற்றி அரசியலமைப்பில் ஒரு வார்த்தைகூடக் காணப் படவில்லே. பிரதிநிதிகள் சபைத்தலேரின் அதிகாரங்கள், உயர் அதிகாரிகளேக் குற்றச்சாட்டு முறை அல்லாமல் வேறு வழிகளில் வேலேயிலிருந்து நீக்கல், காங்கிரசின் இரு சபைகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுமாஞல் அதைத் தீர்க்கும் முறை ஆகிய

வற்றைப்பற்றி அரசியலமைப்பில் ஒன்றும் கூறப்படவில்லை. மேலும் பல செய்திகளைப் பொதுவாகக் குறிப்பிட்டதோடு நின்று, அவற்றைப் பற்றிய விவரங்களை அது விளக்காமல் விட்டுவிட்டது. அரசியலமைப்பின் இந்தக் குறைக்குச் சமாதானம் சொல்ல வேண்டுமானால், இருநூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த அமெரிக்க அரசியல் தலைவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தேவைகளை எண்ணிப் பார்த்திருக்க முடியாது என்றே கூறவேண்டும். அரசிய லமைப்பின் கோட்பாடுகளை அவர்கள் பொதுவாய்க் கூறியது ஒரு வகையில் நல்லதாய் அமைந்துவிட்டது; அந்தப் பொதுவிதி களுக்குத் தற்காலத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் நாம் பொருள் கூற அது வகை செய்கிறது.

கட்டுப்பாடுள்ள அரசாங்கம் (Limited Government)

அமெரிக்க அரசியலமைப்பு, கட்டுப்பாடுள்ள அரசாங்கங்களை நிறுவ வழி வகுத்திருக்கிறது. தேசிய, மாநில, வட்டார அரசாங் கங்கள் அனைத்தின் அதிகாரங்களுக்கும் எல்லைகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வோர் அரசாங்கமும் அதற்காக வரையறுக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள்தான் இயங்க வேண்டும். அரசாங்கம் எதை வேண்டுமென்றாலும் செய்யலாம்; அதனுடைய அதிகார எல்லைக்கு வரம்பே இல்லை, அரசுக்காகவே மக்களே அன்றி மக்களுக்காக அரசு அன்று; மக்கள் அனைவரும் அரசாங்கத்தின் அடிமைகள் போன்றோர்—இதுபோன்ற பாசிச, நாசிசக் கோட்பாடுகளுக்கு அமெரிக்க அரசியலமைப்பு இடமளிக்க மறுக்கிறது. தேசிய அரசாங்கம் எதை எதைச் செய்யக்கூடாது, மாநில அரசாங்கங்கள் எதை எதைச் செய்யக்கூடாது என்று அரசியலமைப்பு இரு வகையான அரசாங்கங்கள்மீதும் தடைகளை விதிக்கிறது. தேசிய அரசோ, மாநில அரசோ சட்டப்படி அல்லாமல் எந்தக் குடிமகனின் உயிரையோ, உரிமையையோ, உடைமையையோ பறிக்க முடியாது என அரசியலமைப்பு அறிவிக் கிறது. பிரிட்டனில் அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு எல்லை எதுவுமில்லை என்பதும், பாராளுமன்றம் எச்செயலை வேண்டு மென்றாலும் செய்ய உரிமையுடையது என்பதும் ஈண்டு அறியத் தக்கது. அரசாங்கத்திற்கு அதன் அதிகாரங்கள் எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று மக்களுக்கும் அவர்களின் உரிமைகள் முக்கியம் என்ற கொள்கையை வலியுறுத்துவதாக அமெரிக்க அரசியலமைப்பு அமைகிறது.

அடிப்படை உரிமைகள்

தற்கால அரசியலமைப்புகளில் அடிப்படை உரிமைகளைப் பற்றி முதன் முதலாக விவாதித்தது அமெரிக்க அரசியலமைப்பே

யாகும். 1789ஆம் ஆண்டின் அரசியலமைப்பில், மக்கள் உரிமைகள் பற்றிய செய்திகள் எதுவும் முதலில் சேர்க்கப் படவில்லை. ஆனால் 1791ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் பத்து அரசியலமைப்புத் திருத்தங்களின் வாயிலாக மக்களுக்குப் பலவிதமான உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகும் பதின்மூன்றாவது (1865), பதினான்காவது (1868), பதினைந்தாவது (1870), பத்தொன்பதாவது (1919) திருத்தங்களும் மேலும் சில உரிமைகளை மக்களுக்கு வழங்கி இருக் கின்றன. அரசியலமைப்பின் முதல் பத்துத் திருத்தங்களையும் ' உரிமைகள் மசோதா ' (Bill of Rights) என அழைப்பது வழக்கம். மக்களுக்குச் சமய உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, குற்றங்குறைகளைக் களையும்படி வேண்டி அரசாங் கத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளும் உரிமை, ஆயுதங்கள் தாங்கும் உரிமை (The right to bear arms), காரணமில்லாமல் மக்களையோ, அவர்கள் குடியிருப்பையோ, அவர்கள் சொத்து களையோ கைப்பற்றுவதற்கெதிரான உரிமை, அவர்களின் உயிர், உரிமைகள், உடைமைகள் ஆகியவை சட்ட முறைகளை ஒட்டியல்லாமல் பறிக்கப்படுவதற்கு எதிரான உரிமை, பொதுக் காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட தனியார் சொத்து களுக்கு நியாயமான இழப்பீடு பெறும் உரிமை, குற்றஞ் சாட்டப் பட்டவர்கள் விரைவாகவும் பகிரங்கமாகவும் விசாரிக்கப் படுவதற்கான உரிமை ஆகியவை முதல் பத்துத் திருத்தங்களில் கூறப்படும் முக்கியமான உரிமைகளாகும். பதின்மூன்றாவது திருத்தம் அடிமைத்தனத்தை அகற்றியது. பதினான்காவது திருத்தம் சட்டத்தின்முன் அனைவரும் சமம் என அறிவிக்கிறது. பதினைந்தாவது திருத்தம் இனம், நிறம், இதற்கு முன்பிருந்த அடிமைநிலை ஆகியவற்றின் அடிப்படையில் யாருக்கும் வாக்குரிமை மறுக்கப்படக் கூடாது எனத் தெரிவிக்கிறது. பத்தொன்பதாவது திருத்தம் பெண்களுக்கும் வாக்குரிமை வழங் கப்படவேண்டுமென வற்புறுத்துகிறது. உரிமைகள் பட்டிய லொன்று அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருப்பதால் மட்டும் அதில் கண்ட உரிமைகள் அனைத்தையும் மக்கள் தடையில்லாது அனுபவிக்கலாம் எனக் கூற முடியாதென்றாலும், பெரும்பாலும் அந்த உரிமைகள் அரசாங்கத்தால் மதிக்கப்படுமென்பது உறுதி. இந்திய அரசியலமைப்பில் மக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட் டிருக்கும் உரிமைகள், அமெரிக்க மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளைத் தழுவியே அமைந்திருக்கின்றன என்பது அறியத் தக்கது.

2. அரசியலமைப்புத் திருத்தங்கள்

(Constitutional Amendments)

[முன்னுரை—முறைப்படி செய்யப்படும் திருத்தங்கள்—காங்கிரசின் சட்டங்கள்—ஆட்சித்துறையினர்—நீதிமன்றத் தீர்ப்புகள்—வழக்காறுகளும் மரபுகளும்.]

முன்னுரை

அமெரிக்க அரசியலமைப்பு ஒரு நெகிழாத அரசியலமைப்பாகும். சாதாரணச் சட்டங்களை இயற்றுவது போல அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களை அங்கே எளிதாக இயற்ற முடியாது. 1789ஆம் ஆண்டில் தோன்றிய அரசியலமைப்பு, கடந்த 182 ஆண்டுகளில் பல திருத்தங்களுக்கு உள்ளாகி இன்று ஆல் போல் தழைத்திருப்பதைக் காண்கிறோம். அரசியலமைப்பின் வளர்ச்சிக்குத் துணையாய் இருந்த சாதனங்களில், முறைப்படி செய்யப்பட்ட திருத்தங்களும் (formel amendments), காங்கிரசின் சட்டங்களும், ஆட்சித்துறையினரின் செயல்களும், நீதிமன்றங்களின் தீர்ப்புகளும், வழக்காறுகளும், மரபுகளும் குறிப்பிடத் தக்கவை. இவை எல்லாம் சேர்ந்துதான் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த அரசியலமைப்பை இருபதாம் நூற்றாண்டின் தேவைகளுக்கு உகந்த வகையில் மாற்றி அமைத்திருக்கின்றன. மாறும் சூழ்நிலைக்கேற்ப அரசியலமைப்பு மாறவேண்டும் என்ற கொள்கையின் முக்கியத்துவத்தை மற்ற நாடுகளைப்போல அமெரிக்காவும் உணர்கிறது என்பதில் ஐயமில்லை.

முறைப்படி செய்யப்படும் திருத்தங்கள்

அமெரிக்க அரசியலமைப்பின் ஐந்தாவது விதி அதை மாற்றுவதற்கான முறையை விளக்குகிறது. அரசியலமைப்புத் திருத்தங்கள் சட்டங்களாக ஏற்கப்படுவதற்கு இரு கட்டங்களைத் தாண்ட வேண்டும். முதலாவது கட்டத்தை முன்மொழிதல்

(proposal) என்றும், இரண்டாவது கட்டத்தை உறுதி செய்தல் (ratification) என்றும் கூறலாம். (1) காங்கிரசின் இரு சபைகளும் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மைமூலம் திருத்தங்களை முன்மொழியலாம். அல்லது மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் பாராளுமன்றங்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் கூட்டப்படும் பேரவையும் (Convention) திருத்தங்களை முன்மொழியலாம். இதுவரை அரசியலமைப்பில் இடம்பெற்றிருக்கும் திருத்தங்கள் அனைத்தும் காங்கிரசால் முன்மொழியப்பட்டவை என்பதும், அதற்காகத் தனிப்பேரவை ஒருமுறைகூடக் கூட்டப்பட்டதில்லை என்பதும் அறியத்தக்கது. (2) முன்மொழியப்பட்ட திருத்தங்கள் நான்கில் மூன்று பங்கு மாநிலங்களின் பாராளுமன்றங்களால் உறுதி செய்யப்பட வேண்டும்; அல்லது நான்கில் மூன்று பங்கு மாநிலங்களில் கூட்டப்படும் பேரவைகளால் உறுதி செய்யப்பட வேண்டும். அமெரிக்க அரசியலமைப்பின் இருபத்தொன்றும் திருத்தத்தைத் தவிர, மற்றத் திருத்தங்களெல்லாம் மாநிலப் பாராளுமன்றங்களால் உறுதி செய்யப்பட்டவையாகும்.

காங்கிரசாலோ அல்லது பேரவையாலோ முன்மொழியப்பட்டு மாநிலங்களின் ஒப்பத்துக்காக அனுப்பப்படும் திருத்தங்களுக்கு, தங்கள் இசைவு உண்டா இல்லையா என்பதை மாநிலங்கள் எவ்வளவு காலத்திற்குள்ளாகத் தெரிவிக்கவேண்டும் என்பதைப் பற்றி அரசியலமைப்பு ஒன்றும் கூறவில்லை. மாநிலங்கள் ஏழு ஆண்டுகளுக்குள் தங்கள் முடிவைத் தெரிவிக்க வேண்டுமெனச் சமீபகாலத்தில் (அதாவது 18, 20, 21, 22ஆம் திருத்தங்களின் பொழுது) காங்கிரஸ் அறிவித்திருக்கிறது. இதுபோன்று கால வரம்பைக் குறிப்பிட காங்கிரசிற்கு அதிகாரம் உண்டு என்பதை அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அரசியலமைப்புத் திருத்தங்கள் மற்ற மசோதாக்களைப்போலக் குடியரசு தலைவரின் இசைவைப் பெறவேண்டிய அவசியமில்லை. அவருடைய ஒப்பமில்லாமலே அவை சட்டங்களாகின்றன.

1789-லிருந்து இன்றுவரை ஐயாயிரத்துக்கு மேலான அரசியலமைப்புத் திருத்த மசோதாக்கள் காங்கிரசில் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன; எனினும் அவற்றில் இருபத்தைந்து மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில்கூட அரசியலமைப்பைத் திருத்துவதற்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ஐம்பது மசோதாக்கள் காங்கிரசில் சமர்ப்பிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது; ஆனால், அவற்றின்மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை எனச் சொல்லத் தேவையில்லை. இதுவரை அமெரிக்க அரசியலமைப்பு இருபத்தைந்து தடவைகள் திருத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது பேரளவில்தான் உண்மையாய்த்

தோன்றுகிறது. முதல் பத்துத் திருத்தங்களும் மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கும் சட்டங்களாய் அமைகின்றன; அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளை விளக்கும் பட்டியல் ஒன்று இல்லாத குறையை நீக்கவே முதல் பத்துத் திருத்தங்களும் 1791ஆம் ஆண்டில் ஒரே சமயத்தில் கொண்டுவரப்பட்டன. இவற்றை அரசியலமைப்புத் திருத்தங்கள் எனக் கருதுவதைவிட அரசியலமைப்பின் தொடர்ச்சியான ஒரு பகுதியாகக் கருதுவது பொருத்தமாகும்.

இதுவரை கொண்டுவரப்பட்டிருக்கும் அரசியலமைப்புத் திருத்தங்களை ஆராய்வோமானால் சில பொதுவான உண்மைகள் புலப்படுகின்றன. முதலாவதாக, திருத்தங்களில் பல அரசாங் கத்தின் அதிகாரங்களைக் குறைக்க முயல்வதைப் பார்க்கின்றோம். முதல் எட்டுத் திருத்தங்கள் மத்திய அரசின் கரங்களையும், உள்நாட்டுப் போரின் விளைவாக ஏற்பட்ட திருத்தங்கள் மாநில அரசுகளின் கரங்களையும் கட்டுப்படுத்துகின்றன. இரண்டாவதாக, இதுவரை தோன்றியிருக்கும் திருத்தங்கள் அரசியலமைப்பின் அடிப்படையில் பெரும் மாற்றம் எதையும் தோற்றுவிக்கவில்லை. அரசியலமைப்பின் தூண்கள் எனக் கருதப்படும் நிறுவனங்கள் 178 -ல் இருந்தது போலத்தான் இன்றும் இருக்கின்றன என்பது தெளிவு. மூன்றாவதாக, இத் திருத்தங்கள் அமெரிக்க அரசாங் கத்தை ஒரு சிறந்த குடியாட்சி அரசாங்கமாக மாற்றி இருக் கின்றன எனக் கூறலாம். முதல் எட்டுத் திருத்தங்களும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதம் அளிக்கின்றன. பதினைந்து, பத்தொன்பது, இருபத்துமூன்று, இருபத்துநான்கு ஆகிய திருத் தங்கள் எல்லா மக்களுக்கும் வாக்குரிமையை வழங்குகின்றன. பதினேழாவது திருத்தம் செனட் சபை நேரடியாகத் தேர்ந்தெடுக் கப்படுவதற்கு வழி செய்கிறது. மேற்கூறப்பட்ட செய்திகளி லிருந்து, திருத்தங்களால் விரும்பத்தக்க நல்ல மாற்றங்களே அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கின்றன என்பது தெளிவாய்த் தெரிகிறது.

அரசியலமைப்பைத் திருத்த நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முறையில் பலவிதமான குறைகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. முதலாவதாக, சிலர் திருத்துகின்ற முறை மிகக் கடினமானமுறை என எண்ணுகின்றனர், புகழ்மிக்க தலைமை நீதிபதி மார்ஷல் அதை 'எளிதில் கையாள முடியாத முறை' எனக் கூறினார். 1870—1913-க்கு இடைப்பட்ட காலத்திலும், 1920—1933-க்கு இடைப்பட்ட காலத்திலும் அரசியலமைப்பை ஒருமுறைகூடத் திருத்த முடியவில்லை. இரண்டாவதாக, மேலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு நேர்மாறாக, சிலர் இப்பொழுது இருக்கும் முறையை

மிக எளிதானமுறை என எண்ணுகின்றனர். அவர்கள் பதினெட்டாவது திருத்தம் மிகக் குறுகிய காலத்தில் கொண்டு வரப்பட்டதை உதாரணமாகக் காட்டி, அரசியலமைப்பைத் திருத்துவதற்கு மேலும் சில தடைகள் இருக்கவேண்டுமென வாதாடுகின்றனர். இதுபோன்று நினைப்போரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. மூன்றாவதாக, அரசியலமைப்பைத் திருத்தும் பணியில் மக்களுக்கு நேரடியான தொடர்பு இல்லை என்பது ஒரு பெருங்குறை எனக் கருதப்படுகிறது. திருத்தங்களை முன் மொழிவதற்கோ உறுதிப்படுத்துவதற்கோ வாக்காளர்களுக்கு உரிமை இல்லை. சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் பெரும்பாலான வாக்காளர்களின் இசைவைப் பெறாமல் அரசியலமைப்பைத் திருத்த முடியாது என்ற நிலை இருப்பதுபோல அமெரிக்காவிலும் இருக்க வேண்டும் என சிலர் விரும்புவதில் தவறில்லை. நான்காவதாக, அரசியலமைப்புத் திருத்தங்களைக் கொண்டுவர முப்பத்தெட்டு மாநிலங்களின் ஒப்புதல் தேவைப்படுவதால், பதின்மூன்று மாநிலங்கள் நினைத்தால் அவற்றைத் தடுத்துவிட முடியும். அந்தப் பதின்மூன்று மாநிலங்களும் மிகச் சிறிய மாநிலங்களாய் இருப்பின், அவற்றின் மக்கள்தொகை நாட்டின் மக்கள்தொகையில் இருபது சதவிகித மாகக்கூட இராது. இந்த முறை அரசியலமைப்பிற்குத் திருத் தங்கள் கொண்டுவரப்படுவதைத் தடுக்கும் அதிகாரத்தைச் சிறுபான்மை மாநிலங்களுக்குக் கொடுப்பதாய் அமைகிறது. ஐந்தாவதாக, அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களைக் கொண்டுவரும் உரிமையைக் காங்கிரசே முழுக்க முழுக்க ஆக்கிர மித்துக்கொண்டதாகத் தோன்றுகிறது. இதுவரை இயற்றப் பட்டிருக்கும் இருபத்தைந்து திருத்தங்களும் காங்கிரசால் முன்மொழியப்பட்டவையே என்பதை முன்பே பார்த்தோம். மாநிலப் பாராளுமன்றங்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் கூட்டப்படும் பேரவையும் திருத்தங்களை முன்மொழியலாம் என்றாலும், அம்மாதிரியான பேரவையைக் கூட்டுகின்ற அதிகாரமே காங்கிரசின் கைகளில்தான் இருக்கின்றது. எவ்வளவோ குறைபாடுகள் உண்டெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இப்பொழுது இருக்கின்ற முறையை மாற்றுவதற்கான அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. பெரும்பாலான அமெரிக்கக் குடிமக்கள் இப்பொழுது இருக்கின்ற முறையைச் சரியான முறை எனவே கருதுகின்றனர். அமெரிக்க அரசியலமைப்பின் சிற்பிகளில் ஒருவரான மேடிசன், தற்போதைய முறையை மிக எளிதென்றோ மிகக் கடினமென்றோ நினைப்பதற்கில்லை எனக் கூறியதை நாமும் ஏற்பதே பொருத்தமாகும்.

காங்கிரசின் சட்டங்கள்

அரசியலமைப்பை ஆக்கியோர் அதைப் பொதுவாக எழுதி, அதில் விடப்பட்டிருக்கும் விவரங்களைக் காங்கிரசே நிரப்பும்படி விட்டுவிட்டனர். குடியரசு தலைவர், உபதலைவர் ஆகிய இருவரின் பதவிகளும் காலியாய் இருந்தால் அவற்றை நிரப்பக்கூடிய அதிகாரத்தை அரசியலமைப்புக் காங்கிரசுக்கு வழங்குகிறது. காங்கிரசும் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி 1947ஆம் ஆண்டில் சட்டமொன்றின் மூலமாக, அப்பதவிகளை எந்த அதிகாரிகளைக் கொண்டு நிரப்புவது என்பதை முடிவு செய்தது. நிருவாகத் துறைகளைப் பற்றிக் குறிப்பிடுவதோடு அரசியலமைப்பு நின்றுவிடுகிறது. எத்தனை துறைகள் இருக்கவேண்டும் என்பதும், அவை என்ன வேலை செய்யவேண்டும் என்பதும், அவைகளுக்கிடையே என்ன தொடர்புகள் இருக்கவேண்டும் என்பதும் காங்கிரசின் சட்டங்களால் முடிவுசெய்யப்படுகின்றன. அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பால் நிறுவப்பட்ட போதிலும், அதன்கீழ் இயங்கும் மற்ற நீதிமன்றங்கள் அனைத்தும் காங்கிரசின் சட்டங்களால் நிறுவப்பட்டன. இரு சபைகளின் அமைப்பைப் பற்றி அரசியலமைப்பு விளக்கமாகக் கூறியபோதிலும் தேர்தல்களின் 'காலம், இடம், முறை' ஆகியவற்றை தீர்மானிக்கும் உரிமை மாநிலச் சட்டமன்றங்களுக்கே விடப்பட்டிருக்கின்றன.

ஆட்சித்துறையினர் செயல்கள்

குடியரசு தலைவரும், அவரின் அமைச்சர்கள் போன்ற அதிகாரிகளும் அரசியலமைப்பின் வளர்ச்சிக்குத் துணைசெய்கின்றனர். குடியரசு தலைவர் உயர் அதிகாரிகளை நியமனம் செய்யும் பொழுதும், மற்ற நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் பொழுதும் செனட் சபையின் 'அறிவுரையோடும் சம்மதத்தோடும்' (advice and consent) செய்யவேண்டுமென அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால் குடியரசு தலைவர் செனட் சபையின் சம்மதத்தைப் பெற அதனிடம் வருவது வழக்கமே ஒழிய, அதன் அறிவுரையை நாடும் வழக்கமில்லை. போர் அறிவிக்கக்கூடிய அதிகாரம் அரசியலமைப்பால் காங்கிரசுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குடியரசு தலைவர் போரைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடுமெனலாம். குடியரசின் துணைத் தலைவரை அரசியலமைப்பு நிருவாகத் துறைகளின் தலைவர்களில் ஒருவராகக் கருதவில்லை; ஆனால் கென்னடி (J. F. Kennedy) காலத்திலிருந்து அமைச்சரவை கூட்டங்களுக்கு அவரும் அழைக்கப்படுகிறார்.

நீதிமன்றத் தீர்ப்புகள்

அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகளுக்குப் பொருள் விளக்கம் கூறி அதை வளர்த்த பெருமை தலைமை நீதிமன்றத்தையே சாரும். 'நிலையானதோர் அரசியல் நிர்ணயச்சபை' என அழைக்கப்படும் அளவுக்குத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பின் பல்வேறு விதிகளுக்கு அவ்வப்பொழுது புதுப்பொருள் காண்கிறது. தலைமை நீதிமன்றம் மெக்குல்லாவுக்கு எதிரான மேரிலாந்து (Mc Culloh Vs Maryland, 1819) என்ற வழக்கில் தீர்ப்பளிக்கும்பொழுது காங்கிரசுக்கு அரசியலமைப்பால் தரப் பட்டிருக்கும் திட்டவட்டமான அதிகாரங்களைத் தவிர, அந்த அதிகாரங்களைத் தொக்கி நிற்கும் அதிகாரங்களும் உண்டு என அறிவித்தது. குடியரசு தலைவரால் செய்யப்படும் நியமனங்களுக்கு மட்டுமே செனட் சபையின் இணக்கம் தேவையே ஒழிய, பதவி நீக்கங்களுக்கு அது தேவையில்லை எனத் தலைமை நீதிமன்றம் 1926-ல் வழக்கொன்றில் தீர்ப்புக்கூறி, தலைவரின் அதிகாரத்தை மேலும் அதிகரித்தது.

வழக்காறுகளும் மரபுகளும்

அமெரிக்க அரசியலமைப்பில் எழுதப் பெற்ற சட்டதிட்டங்களே பெரும் பகுதியாய் விளங்கினாலும், காலப் போக்கில் பல வழக்காறுகளும் மரபுகளும் அங்கே தோன்றி அரசியலமைப்பின் வளர்ச்சிக்குத் துணை செய்திருக்கின்றன. குடியரசு தலைவரின் நேரடித் தேர்தல், நிருவாகத் துறைத் தலைவர்கள் அடங்கிய அமைச்சரவை, காங்கிரசின் இரு சபைகளிலுமுள்ள குழு முறை, அரசியல் கட்சிகள் ஆகியவை அனைத்தும் வழக்காறுகள், மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் வளர்ந்திருக்கின்றன. குடியரசு தலைவரும் துணைத் தலைவரும் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களாய் இருக்கவேண்டுமென்பதும், பிரதிநிதிகள் சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் அவர்கள் போட்டியிடும் தொகுதியைச் சேர்ந்தவர்களாய் இருக்கவேண்டுமென்பதும், குடியரசு தலைவர் உயர் அதிகாரிகளை நியமிக்கும் முன்னர் அவ்வதிகாரிகள் பணியாற்றப் போகும் மாநிலங்களின் செனட்டர்களைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதும் அமெரிக்க மரபுகளில் சிலவாகும்.

3. கூட்டாட்சி

(Federalism)

[முன்னுரை — அதிகாரப் பிரிவினை — கூட்டாட்சியில் புதிய மாநிலங்கள் சேர்தல்—மத்திய அரசின் அதிகாரங்கள்—மத்திய அரசு மீதான தடைகள் — மாநில அரசுகளின் அதிகாரங்கள் — மாநில அரசுகள் மீதான தடைகள் — மைய அரசு மாநில அரசுகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் — மாநிலங்களுக்கிடையே உள்ள உறவுகள்—மத்திய அரசு வழங்கும் மானியத் தொகை.]

முன்னுரை

இன்று உலகில் இயங்குகிற கூட்டாட்சிகளுள் மிக மூத்த கூட்டாட்சி என்ற பெருமையும், மிக மேலான கூட்டாட்சி என்ற சிறப்பும் அமெரிக்கக் கூட்டாட்சியையே சாரும். கூட்டாட்சி அரசு முறைக்கே அமெரிக்கா ஓர் இலக்கணமாக விளங்குவதை டி டாக்வில், வியர் போன்ற அரசியல் அறிஞர்கள் பாராட்டியிருக்கின்றனர். பதின்மூன்று மாநிலங்களைக் கொண்டு தொடங்கப் பெற்ற இக் கூட்டாட்சி காலப்போக்கில் வளர்ந்து, இன்று ஐம்பது மாநிலங்களைக் கொண்டு இயங்கும் பெருங் கூட்டாட்சியாக வளர்ந்திருக்கிறது.

அதிகாரப் பிரிவினை

அரசின் அதிகாரங்களை மைய அரசும் மாநில அரசுகளும் தங்களுக்குள்ளே பகிர்ந்துகொள்கின்றன. மைய அரசின் அதிகாரங்கள் மட்டுமே அரசியலமைப்பில் விவரிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள அதிகாரங்கள் மாநில அரசுகளின் உரிமையாக்கப்பட்டிருக்கின்றன. அரசியலமைப்பில் முதலாவது பிரிவின் எட்டாவது, பத்தாவது துணைப் பிரிவுகளும், பத்தாவது திருத்தமும், கூட்டாட்சி அரசியல் மைய அரசின் நிலையையும், மாநில அரசுகளின் நிலையையும் விளக்குகின்றன.

கூட்டாட்சியில் புதிய மாநிலங்கள் சேர்தல்

கூட்டாட்சியில் புதிதாகச் சேர விழையும் மாநிலங்களை அதில் சேர்த்துக் கொள்வதா இல்லையா என்று காங்கிரசே தீர்மானிக்கும். இன்று அமெரிக்கக் கூட்டாட்சியில் அங்கம் வகிக்கும் ஐம்பது மாநிலங்களில் கடைசியாகச் சேர்ந்தது ஹவாய் மாநிலம் (Hawai) (1959) என்பது அறியத்தக்கது. ஹவாய் மாநிலத்தில் நடந்த தனித் தேர்தல் ஒன்றில் பெரும்பாலான வாக்காளர்கள் தாங்கள் அமெரிக்கக் கூட்டாட்சியில் சேர விரும்புவதாக வாக்களித்துத் தங்கள் ஆர்வத்தைத் தெரிவித்த பிறகே, காங்கிரஸ் அம் மாநிலத்தைக் கூட்டாட்சியில் இணைத்துக் கொண்டது. கூட்டாட்சியின் அங்க நாடுகள் அனைத்தும், அவை வர்ஜீனியா (Virginia) போன்று பழைய மாநிலமாக இருந்தாலும் சரி, ஹவாய் போன்று புதிய மாநிலமாக இருந்தாலும் சரி, ஒத்த உரிமைகள் உள்ள மாநிலங்களாகவே பாவிக்கப்படும். கூட்டாட்சியில் சேர்ந்த பிறகு அந்த அமைப்பை விட்டு எந்த மாநிலமும் விலகிச் செல்ல முடியாது. 1861ஆம் ஆண்டிலிருந்து 1865ஆம் ஆண்டுவரை லிங்கன் காலத்தில் நடைபெற்ற பிரிவினைப் போரின் முடிவு இதை உறுதி செய்கிறது. அமெரிக்கக் கூட்டாட்சியை 'அழிக்க முடியாத மாநிலங்களின் அழிக்க முடியாத கூட்டரசு' என்ற அழகிய சொற்களால் அந்நாட்டுத் தலைமை நீதிமன்றம் வருணித்திருக்கிறது.

மத்திய அரசின் அதிகாரங்கள்

அரசியலமைப்பால் மத்திய அரசிற்குத் தரப்பட்டிருக்கும் பதினெட்டு அதிகாரங்களை எட்டு வகையான தலைப்புகளில் அடக்கலாம். முதலாவதாக, **நிதித்துறை :** வரி வசூல் செய்தல், கடன் வாங்குதல், இரண்டாவதாக, **வர்த்தகத்துறை :** அயல் நாடுகளோடும் மாநிலங்களுக்கு இடையேயுமான வாணிகத் தொடர்புகள், மூன்றாவதாக, **படைத்துறை :** போர் அறிவித்தல், படை திரட்டுதல், குடிப்படையை (militia) அமைத்து அதைப் படைக்கலந் தாங்கச் செய்தல். நான்காவதாக, **நாணயத் துறை :** பணம் அச்சடித்தல்; அதன் மதிப்பை ஒழுங்குபடுத்துதல். ஐந்தாவதாக, **அஞ்சல் துறை :** அஞ்சல் நிலையங்கள் நிறுவுதல், அஞ்சல் பாதைகள் அமைத்தல், ஆறாவதாக, **நீதித்துறை :** தலைமை நீதிமன்றத்திற்குக் கீழான கூட்டாட்சி நீதிமன்றங்களை நிறுவுதல். ஏழாவதாக, **பலதரப்பட்டவை :** அயல் நாட்டவருக்குக் குடியுரிமை வழங்குதல், கடன் தீர்க்க வகையற்ற நிலை, காப்புரிமையும் பதிப்புரிமையும், தலைநகரின் அரசாங்கம், எட்டாவதாக, **துணை அதிகாரங்கள் :** மேற் கூறப்பட்ட அதிகாரங்களை நிறைவேற்றத் தேவையான எல்லா அதிகாரங்களும். மத்திய அரசின் அதிகாரங்

களைக் கூறும் அரசியலமைப்பின் முதலாவது விதி, எட்டாவது பிரிவு (Article I Section 8) அரசியலமைப்பின் மிக நீளமான பிரிவாக இருப்பதோடு, மிக முக்கியமான பிரிவாகவும் இருப்பது அறியத்தக்கது; தேசிய இயந்திரத்தின் பொறி என இப் பிரிவு கருதப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

மத்திய அரசுமீதான தடைகள்

மத்திய அரசு எதைச் செய்யலாம் எனக் கூறும் அரசிய லமைப்பு எதைச் செய்யக் கூடாது எனவும் அறிவிக்கிறது. கைது செய்யப்பட்டவர் நீதிபதி ஒருவர் முன் நிறுத்தப்பட்டு அவர் கைதானதற்கான காரணங்களை அறிவிக்கப்பட வேண்டிய உரிமையை மத்திய அரசு மறுக்க முடியாது. மாநிலங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரி விதிக்கவோ, மாநிலங்களின் துறைமுகங்களுக்குள் ஓரவஞ்சனை பாராட்டவோ, மத்திய அரசிற்கு உரிமையில்லை. வழிபாட்டு உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, குற்றங் குறைகளைக் களையும்படி கோரி அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொள்ளும் உரிமை ஆகியவற்றை அது குறைக்க இயலாது. ஒருவர் ஒரே குற்றத்திற்காக இரு முறை தண்டிக்கப்படுவதையும், குற்ற வழக்குகளில் ஒருவர் தனக்கு எதிராகச் சாட்சி சொல்ல கட்டாயப் படுத்தப்படுவதையும் அரசியலமைப்புத் தடை செய்கிறது. காங் கிரஸ் ஒருவரைக் குற்றவாளி என அறிவித்து அவரை மரண தண்டனைக்கு உட்படுத்தும் சட்டத்தை (Bill of attainder) நிறை வேற்றக்கூடாது; மேலும் அது கடந்த காலத்தையும் உட்படுத்துகிற சட்டங்களை (ex post facto laws) இயற்றக்கூடாது; இந்த இரு தடைகளும் மத்திய அரசிற்கு மட்டுமல்லாமல் மாநில அரசுகளுக்கும் பொருந்தும்.

மாநில அரசுகளின் அதிகாரங்கள்

மத்திய அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் நீங்கலாக எஞ்சியிருக்கும் அதிகாரங்கள் மாநில அரசாங்கங்களுக்கு உரியவையாகும். சாதாரணச் சிவில் குற்றயியல் சட்டங்களை இயற்றி அவற்றை நிறைவேற்றுவதும், ஊராட்சி அரசாங்க அமைப்புகளை நிறுவி அவற்றை மேற்பார்வை செய்வதும், தேர்தல்கள் நடத்துவதும், மாநிலத்திற்குள் தொழிலையும் வாணி பத்தையும் ஒழுங்குபடுத்துவதும், மக்களின் உயிர், உடல் நலன், ஒழுக்கம் ஆகியவற்றைக் காப்பதும் மாநில அரசுகளின் பொறுப்பு களில் அடங்கும். அமெரிக்காவில் மாநில அரசுகளின் முக்கியத் துவம் அவ்வளவாக உணரப்படுவதாகத் தோன்றவில்லை. ஒருவ

ருடைய பிறப்பு அவர் பிறக்கும் மாநிலச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகிறது; அவர் பயிலும் பள்ளி மாநிலப் பள்ளியாய் இருக்கும்; அவர் பயணம் செல்லும் சாலைகள் மாநிலத்தால் அமைக்கப்படுபவையேயாகும்; அவருடைய திருமணமும் திருமண விலக்கும் மாநிலச் சட்டத்தின் அடிப்படையில் நடைபெறு கின்றன; நோயுற்றால் அவருக்கு மருத்துவம் செய்வதும் மாநில மருத்துவ மனையேயாகும்; இறந்தவரைப் புதைப்பதற்கு அனுமதி வழங்குவது கூட மாநில அரசாங்கத்தின் அதிகாரமேயாகும். பிறப்பிலிருந்து இறப்புவரை மக்களுடைய அன்றாட வாழ்வோடு தொடர்பு கொண்டிருக்கும் மாநில அரசாங்கத்தின் பணிகளும் சேவைகளும் உள்ளபடி உணரப்பட வேண்டியது அவசியமாகும்.

மாநில அரசுகள்மீதான தடைகள்

அரசியலமைப்பால் மைய அரசிற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு உரிமையாக்கப்பட்ட போதிலும், மாநிலங்கள் சில செயல்களைச் செய்யக்கூடாதென்று அரசியலமைப்புத் தடை செய்கிறது. எந்த மாநிலமும் அயல் நாடுகளோடு உடன்படிக்கைகள் எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், காசுகள் வெளியிடக் கூடாதென்றும், ஒப்பந்தங்கள் முறியும்படியான சட்டங்களை இயற்றக்கூடாதென்றும், சட்டப்படிக்கல்லாமல் மக்களின் உயிரையும், உரிமையையும், உடைமையையும் பறிக்கக் கூடா தென்றும் அரசியலமைப்பு அறிவிக்கிறது. மேலும் காங்கிரசின் சம்மதமில்லாமல் மாநிலங்கள் தங்களுக்குள்ளே ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவோ, இறக்குமதி ஏற்றுமதி மீது வரிகள் விதிக்கவோ, போர்ப் படைகள் வைத்திருக்கவோ, போர் அறிவிக்கவோ கூடாது. மாநில அரசுகளிலிருக்கும் மத்திய அரசின் சொத்துகள்மீது மாநிலங்கள் வரி விதிக்கக்கூடாது. மேரிலாந்து அரசாங்கம் அங்கிருந்த மத்திய வங்கியின்மீது வரி விதித்ததைத் தலைமை நீதிமன்றம் செல்லாது என 1819ஆம் ஆண்டில் அறிவித்தது. மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்த கத்தை ஒழுங்கு செய்யும் அதிகாரம் மைய அரசுக்கே உரியதா தலால், மாநிலங்கள் அததன் எல்லைகளுக்குள்ளே நடைபெறும் வர்த்தகம் பற்றியே சட்டங்கள் இயற்ற முடியும். அடிமை முறையை அனுமதிக்கவோ, இனம், நிறம், முன்பு அடிமையாய் இருந்த நிலை, பால் ஆகியவற்றின் அடிப்படையில் யாருக்கும் வாக்குரிமையை மறுக்கவோ மாநில அரசுகளுக்கு உரிமை கிடையாது. மேலும் எந்த மாநில அரசும் அமெரிக்கக் குடிமக் களின் உரிமைகளைக் குறைத்துச் சட்டமியற்றக் கூடாது.

மைய அரசு மாநில அரசுகளுக்கு ஆற்றவேண்டிய கடமைகள்

ஒவ்வொரு மாநிலத்திற்கும் குடியரசு அரசாங்கத்தை உத்தர வாதமளிப்பது மைய அரசின் கடமையாகும். 1841—1842-ல் ரோடுத் தீவில் (Rhode Island) டோர் (Dorr) என்னும் கிளர்ச்சிக் காரர் தலைமையில் அமைந்த போட்டி அரசாங்கத்தை மைய அரசு ஏற்க மறுத்தது குறிப்பிடத்தக்கது. ஒரு மாநிலத்தில் இயங்கும் அரசாங்கம் குடியரசு அரசாங்கமா இல்லையா என்பதை மைய அரசின் சார்பில் காங்கிரசே முடிவு செய்யும். மாநிலங்களை வெளி நாட்டுப் படையெடுப்புகளிலிருந்தும் உள்நாட்டுக் குழப்பங்களி லிருந்தும் காப்பது மைய அரசின் கடமையாகும். மாநில மொன்றின் மீது எடுக்கப்படும் படையெடுப்பானது அமெரிக் காவின் மீது எடுக்கப்படும் படையெடுப்பாகும் என்பதில் ஐயமில்லை; எனவே அவற்றைத் தடுப்பது மைய அரசின் பொறுப் பாகும். மாநிலங்களில் ஏற்படும் குழப்பங்களைத் தடுக்க, மாநில அரசுகள் மைய அரசின் துணையை வேண்டினால், உதவி செய்வது மைய அரசின் கடமையாகும். சில சமயங்களில் மாநில அரசு களின் விருப்பத்திற்கு மாறாகக்கூட, அங்கே படைகள் அனுப்பப் பட்டுக் குழப்பங்கள் அடக்கப்படுவதுண்டு. சமீப காலத்தில் ஐசன்ஹோவர், கென்னடி, ஜான்சன் ஆகிய குடியரசு தலைவர்கள் நீக்கிரோக்களின் உரிமைகளைக் காக்க, சில மாநிலங்களுக்கு அவற்றின் கவர்னர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் படைகளை அனுப்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மாநிலப் பிரதேசங்களின் முழுமையைக் (territorial integrity) காப்பதும் மைய அரசின் கடமைகளில் அடங்கும். சம்பந்தப்பட்ட மாநிலங் களின் இசைவைப் பெறாமல், ஒரு மாநிலத்தின் பிரதேசத்திற்குள் இன்னொரு மாநிலத்தை நிறுவுவதோ, அல்லது, இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்களை ஒன்றாக இணைத்து ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குவதோ இயலாத செயலாகும். டெக்சாஸ் (Texas) மாநிலம் கூட்டாட்சியில் சேரும்பொழுது அதை ஐந்து மாநிலங்களாகப் பிரிக்கலாம் என யோசனை கூறப்பட்டது. ஆனால் டெக்சாஸ் அதுபோன்ற பிரிவினைக்கு இன்றுவரை உடன்படா ததால் அமெரிக்கக் கூட்டாட்சியில் மிகப் பெரிய மாநிலமாக இருந்து வருகிறது.

மாநிலங்களுக்கிடையே உள்ள உறவுகள்

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு அமெரிக்க மக்களில், ஆண்டுக்கு ஒருமுறை ஐந்தில் ஒரு பங்கினராவது இடம் விட்டு இடம் குடி பெயர்கின்றனராம். பிறப்பிலிருந்து இறப்புவரை ஒரே இடத்தில் வாழும் அமெரிக்க மக்களின் எண்ணிக்கை

நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. மாநிலங்களுக்கிடையே நல்ல உறவுகள் இருப்பது, மக்கள் மாநிலம் விட்டு மாநிலம் குடி பெயரத் துணை செய்கிறது. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குக் குடி பெயர்வதால், குடி பெயர்வோரின் உரிமைகள் பொதுவாகப் பாதிக்கப்படுவதில்லை. ஒரு மாநிலத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒருவர் வேறொரு மாநிலத்திற்குத் தப்பியோடுவாரானால், அவர் அங்கே கைது செய்யப்பட்டு முதல் மாநிலத்திற்கே அனுப்பப்படுவார். மாநிலங்கள் பல பொதுக் காரியங்களுக்காகத் தங்களுக்கிடையே காங்கிரசின் சம்மதத்தோடு ஒப்பந்தங்கள் செய்து கொள்வது, நாளுக்கு நாள் அதிகரிப்பதைக் காண்கிறோம். இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல், வெள்ளத் தடுப்பு, கல்வி அபிவிருத்தி போன்றவற்றிற்காக, அக்கம் பக்கத்திலுள்ள மாநிலங்கள் ஒன்றாக இணைந்து செயல்படுவது, இன்றைய அமெரிக்க அரசியலில் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. மாநிலங்களுக்கிடையே தகராறுகள் எழுமானால் அவற்றைத் தீர்த்து வைப்பது தலைமை நீதிமன்றத்தின் கடமையாகும்.

மத்திய அரசு வழங்கும் மானியத் தொகை (Federal Grants-in-aid)

மாநில அரசுகள் செலவு செய்யும் தொகைகளில் ஏறத்தாழ 20 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. நெடுஞ்சாலைகள், பொதுச் சுகாதாரம், தொழிற் கல்வி, தாய் சேய் நலம் போன்றவற்றின் அபிவிருத்திக்காக மத்திய அரசு மாநில அரசுகளுக்குப் பெருந்தொகையை மானியமாக அளிக்கிறது. மானியங்கள் பொதுவாக 'நாங்கள் பாதி, நீங்கள் பாதி' என்ற அடிப்படையில் அளிக்கப்படும்; மத்திய அரசு அளிக்கும் தொகைக்கு ஈடான தொகையை மாநில அரசு செலவு செய்ய முன்வர வேண்டும். மத்திய அரசு விதிக்கும் நிபந்தனைகளை மானியம் பெறும் அரசுகள் ஏற்க வேண்டும். எந்தக் காரியத் திற்காக மானியம் வழங்கப்படுகிறதோ, அதற்கு மட்டுமே அத்தொகை செலவு செய்யப்படலாம். மானியங்கள் முறைக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல கருத்துகள் தெரிவிக்கப் படுகின்றன. போதிய பொருளாதாரம் இல்லாததால் தடைப் பட்டுக் கிடக்கும் எத்தனையோ நல்ல காரியங்கள், மத்திய அரசின் கொடையால் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய அரசு மானியங்கள் வழங்கும்பொழுது சில தரங்களை நிர்ணயிப்பதால், மாநிலங்கள் அந்தத் தரங்களை எட்டும் என்பது உறுதி. ஆனால் மானியங்களைப் பெறும் மாநிலங்கள் மத்திய அரசின் நிபந்தனைகளை ஏற்கவேண்டியிருப்பது, அவைகளின்

சுதந்திரத்தைப் பாதிப்பதாய் எண்ணப்படுகிறது. மேலும் இது மைய அரசால் வழங்கப்படும் மானியம் என அழைக்கப் பட்டாலும், மாநிலங்களிலிருந்து வரிகளாக வசூலிக்கப்படும் தொகைதான் மீண்டும் அவைகளிடையே பகிர்ந்தளிக்கப் படுகிறது என்பது யாவரும் அறிந்த செய்தியாகும்; மாநிலங் களின் நிதி மீண்டும் மாநிலங்களுக்கே தரப்படுவதை மானியம் என்ற பெயரால் எப்படி அழைக்க முடியும் என்ற வினவிலும் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது.

4. குடியரசு தலைவர்

(The President)

[முன்னுரை — தகுதிகள் — பதவிக் காலம் — தேர்தல் முறை— ஊதியம்—உறுதி மொழி—பதவி நீக்கம்—அதிகாரங்கள் : (அ) ஆட்சித் துறை — (ஆ) அயல் நாட்டு அலுவல்கள் — (இ) படைத் துறை— (ஈ) சட்டத் துறை — (உ) நீதித் துறை — (ஊ) கட்சித் தலைவர்— குடியரசுத் தலைவரின் அலுவலகம்.]

முன்னுரை

பாராளுமன்றத்தை மையமாகக் கொண்ட அரசாங்கத்தினின்றும் (Parliamentary Government) மாறுபட்டு, குடியரசு தலைவரை மையமாகக் கொண்ட அரசாங்கத்தைப் (Presidential Government) பெற்றிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியரசு தலைவரே அரசாங்கத்தின் நடு நாயகமாக விளங்குகிறார். பிரிட்டன், இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் அரசின் தலைவர் (Head of the State) ஒருவராகவும், அரசாங்கத்தின் தலைவர் (Head of the Government) வேறொருவராகவும் இருப்பது போல அமெரிக்காவில் இல்லை என்பதும், குடியரசு தலைவர் அரசின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் பணியாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா ஒரு பெரும் வல்லரசாகவும், செல்வச் செழிப்புள்ள நாடாகவும் விளங்குவது, உலக நாடுகளிடையே குடியரசு தலைவரின் செல்வாக்கை மேலோங்கச் செய்திருக்கிறது.

தகுதிகள்

குடியரசு தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறவர் அமெரிக்காவின் இயற்கைக் குடிமகனாகவும் (natural born citizen), குறைந்தது முப்பத்தைந்து வயது உடையவராகவும், அமெரிக்காவில் பதினான்கு ஆண்டுகளாவது குடியிருந்தவராகவும்

இருக்கவேண்டுமென அரசியலமைப்பு விதிக்கின்றது. குடியரசின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவரும் இதே தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும்.

பதவிக் காலம்

குடியரசு தலைவர் நான்கு ஆண்டுகள் பதவியிலிருக்கத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒருவரே மீண்டும் மீண்டும் பல தடவைகள் தலைவராய் தேர்ந்தெடுக்கப்படுவதை 1789ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் தடை செய்யவில்லை எனினும், யாரும் இரு பருவங்களுக்கு மேல் தலைவராய் இருக்கக்கூடாது என்ற மரபு முதல் தலைவரான வாஷிங்டன் காலத்திலேயே தோன்றிவிட்டது. நூற்றைம்பது ஆண்டுகளாகக் காக்கப்பட்ட இம்மரபானது 1940-லும் 1944-லும் ரூஸ்வெல்ட்டு (F. D. Roosevelt) மூன்றாவது முறையாகவும் நான்காவது முறையாகவும் குடியரசு தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது முறிந்தது. இது போன்ற நிகழ்ச்சிகள் இனியும் நடைபெறா வண்ணம் தடுக்க 1951ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இருபத்திரண்டாவது அரசியலமைப்புத் திருத்தமானது இரு முறைக்குமேல் யாரும் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடாதென அறிவிக்கிறது.

தேர்தல் முறை

குடியரசு தலைவரின் தேர்தலுக்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் 538 உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் குழு (Electoral College) ஒன்றினால் அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். குடியரசு தலைவரின் தேர்தல் மறைமுகமானதாக (indirect) இருக்கவேண்டும் என்பதே அரசியலமைப்பை ஆக்கியோரின் நோக்கமாக இருப்பினும், இன்றைய தேர்தல் வழக்கப்படி அவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதைப் போல மாறியிருக்கிறது. தேர்தல் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தங்கள் சொந்த விருப்பப்படி குடியரச தலைவரைத் தேர்ந்தெடுக்காமல், தங்களுக்கு வாக்களித்த வாக்காளர்கள் விருப்பப்படியே அவரைத் தேர்ந்தெடுக்கின்றனர் என்பதிலிருந்து குடியரசு தலைவரின் தேர்தல், தேர்தல் குழுவின் கரங்களினின்றும் நழுவி, வாக்காளர்களின் கரங்களை அடைந்துவிட்டது என்பது தெளிவு. நாட்டின் தலைவர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராய் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அக்காலத்தில் தேர்தல் குழுவிற்கு வகை செய்தனர். ஆனால் இக்காலத்தில் அரசியல் கட்சிகளே முன்னின்று தேர்தலை ஒரு பெரும் போர் நடத்துவது போல நடத்தும் காட்சியைக் காண்கிறோம்.

ஊதியம்

1969ஆம் ஆண்டிலிருந்து குடியரசு தலைவருக்கு ஆண்டொன்றுக்கு 2,00,000 டாலர்கள் சம்பளம் வழங்கப் படுகிறது. இதைத் தவிர வெள்ளை மாளிகையில் (White House) இலவசக் குடியிருப்பும், பயணம், விருந்தோம்பல், மெய்க்காவல் படை, ஆகியவற்றின் செலவுக்கான தொகையையும் அவர் பெறுகிறார். எந்தக் குற்றத்திற்காகவும், நாட்டிலுள்ள எந்த நீதிமன்றமும் அவரை விசாரிக்க முடியாது; எக்காரணத்துக் காகவும் அவரைச் சிறையில் அடைக்க முடியாது.

உறுதி மொழி

குடியரசு தலைவர் பதவி ஏற்பதற்கு முன்பாக, தான் குடியரசு தலைவரின் பொறுப்புகளை உண்மையாக செயல் படுத்துவதாயும், அரசியலமைப்பைக் காத்துப் பேணுவதாயும் உறுதி மொழி எடுத்துக் கொள்ளவேண்டும். பொதுவாக, தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியே இந்தப் பதவிப் பிரமாணத்தைத் 'தொடக்கவிழா நாள்' (Inauguration Day) என அழைக்கப்படும் ஜனவரித் திங்கள் 20ஆம் நாளன்று செய்து வைப்பார்.

பதவி நீக்கம்

மன்பகை (treason), கைக்கூலி வாங்குதல், அல்லது வேறு பெருங்குற்றங்கள், தவறான நடத்தை ஆகியவைகளுக்காக குடியரசு தலைவர் குற்றம் சாட்டப்பட்டு பதவியிலிருந்து நீக்கப் படலாம். குற்றங்களை எடுத்துரைக்கும் அதிகாரம் பிரதிநிதிகள் சபைக்கும், அவை மெய்யா பொய்யா என விசாரித்து முடிவு செய்கிற அதிகாரம் செனட் சபைக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றன. குற்றங்கள் மெய்யென செனட் தீர்மானிக்குமானால், குடியரசு தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படுவதோடல்லாமல், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 'மதிப்போ, நம்பிக்கையோ, ஆதாயமோ' உள்ள எந்த வேலையும் பார்க்கத் தகுதியற்றவர் ஆவார். இதுவரை அமெரிக்காவில் எந்தக் குடியரசு தலைவரும் பதவியி லிருந்து விலக்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1868-ல் தலைவர் ஆண்ட்ரூ ஜான்சனை (Andrew Johnson) பதவிநீக்கம் செய்ய மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது.

அதிகாரங்கள்

அரசியலமைப்பின் விதிகள் குடியரசு தலைவருக்குப் பல அதிகாரங்கள் வழங்கிய போதிலும், காங்கிரசின் சட்டங்களும், நீதிமன்றத் திர்ப்புகளும், மரபுகளும் அவர் அதிகாரங்களை மேலும்

விரிவாக்கி இருக்கின்றன. சென்ற நூற்றுண்டில் லிங்கனும், இந்த நூற்றுண்டில் ரூஸ்வெல்ட்டும் செய்த செயல்களைப் பார்ப்போமானல் குடியரசு தலைவரின் அதிகாரங்களுக்கு வரம்பில்லை போலும் என்றுகூட எண்ணத் தோன்றும்.

ஆட்சித்துறை

அமெரிக்க அரசியலமைப்பு ஆட்சித்துறை அதிகாரங்கள் குடியரசு தலைவரிடம் ஒப்படைக்கப்படுவதாக அறிவிப்பதனுல், அவர் ஆட்சித்துறைத் தலைவராகக் (Chief Executive) கருதப் படுகிருர். ஆட்சித்துறைத் தலைவர் என்ற பொறுப்பில் அரசியல மைப்பும், சட்டங்களும், நீதிமன்றத் தீர்ப்புகளும் நாடுமுழுவதும் நிறைவேற்றப்படுகின்றனவா என்று கண்காணிப்பது அவருடைய கடமையாகும், சட்டத்தின் ஆணைகளை ஏற்க யாராவது மறுப்பார் களானுல், அவர்களை அடக்க படைபலத்தைக்கூடக் குடியரசு தலைவர் பயன்படுத்தலாம். 1957-ல் ஆர்க்கன்சாஸ் (Arkansas) மாநிலத்திலும், 1962-ல் மிஸ்ஸிஸிப்பி (Mississipi) மாநிலத்திலும் 1963-ல் அலபாமா (Alabama) மாநிலத்திலும் நீக்கிரோக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் துடைக்கக் குடியரசு தலைவர்கள் படைகளைப் பயன்படுத்தியது உலகறிந்த செய்தியாகும்.

அரசியலமைப்பானது ஆயிரக்கணக்கான அதிகாரிகளை நியமிக்கக்கூடிய அதிகாரத்தைக் குடியரசு தலைவருக்கு வழங்கு கிறது. அமைச்சர்கள், தூதுவர்கள், நீதிபதிகள் போன்ற உயர் அதிகாரிகள் அவரால் நியமிக்கப்படுகின்றனர்; ஆனுல் குடியரசு தலைவரால் செய்யப்படும் எல்லா நியமனங்களும் செனட் சபையின் இசைவைப் பெற்ற பிறகே செல்லுபடியாகும். பொதுவாக, செனட் அதன் உடன்பாட்டை மறுப்பதில்லை என்றுலும், மறுக்கக்கூடிய அதிகாரம் அதற்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சில சமயங்களில் நடந்து கொண்டிருக் கிறது. குடியரசு தலைவர் மாநிலங்களில் அதிகாரிகளை நியமிக்கும் பொழுது, அந்நியமனங்களுக்குக் குறிப்பிட்ட மாநிலத்திலிருந்து செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களை (அவர்கள் தன் கட்சியைச் சேர்ந்தோராய் இருப்பின்) இணக் கத்தை முன்கூட்டியே பெறவேண்டும் என செனட் சபை எதிர் பார்க்கிறது; அவ்வாறு சம்பந்தப்பட்ட செனட்டர்களின் இணக் கத்தைப் பெருத நியமனங்களைச் செனட் சபை ஏற்றுக் கொள்ளாது என்பது திண்ணம். இந்த முறையைத்தான் அமெரிக்காவில் 'செனட்டர்களுக்குக் காட்டும் மரியாதை' (Senatorial Courtesy) என அழைக்கின்றனர்,

குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் அதிகாரிகளில், நீதிபதிகளைத் தவிர மற்றவர்களெல்லாம் அவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்; அதற்குச் செனட் சபையின் இணக்கம் தேவையில்லை. செனட் சபையின் இசைவைப் பெற்ற பிறகே குடியரசு தலைவர் அதிகாரிகளைப் பதவியிலிருந்து விலக்க வேண்டும் எனக் கூறும் 1876ஆம் ஆண்டின் சட்டமானது செல்லத்தக்கதன்று என அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் 1926-ல் மையர்சுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் (Myers Vs United States, 1926) என்னும் வழக்கின் விசாரணையின்பொழுது தீர்ப்பளித்தது.

அயல் நாட்டு அலுவல்கள்

குடியரசு தலைவரே அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையின் பிரதான சிற்பியாகக் கருதுதப்படுகிறார். வாஷிங்டனின் நடுநிலைமைக் கொள்கையும் (Neutrality, 1793), மன்றோவின் தலையிடாக் கொள்கையும் (Monroe Doctrine, 1823), வில்சனின் பதினான்கு அம்சங்களும் (Fourteen Points), ட்ரூமனின் கொள்கையும் (Truman Doctrine, 1947) குடியரசு தலைவர்கள் எந்த அளவுக்கு வெளிநாட்டு விவகாரங்களில் அக்கறை காட்டினர் என்பதைத் தெளிவாக்குகின்றன.

குடியரசு தலைவர் அமெரிக்காவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் தூதர்களைச் செனட் சபையின் சம்மதத்தோடு நியமிக்கிறார். வெளிநாடுகளிலிருந்து அமெரிக்கவுக்கு வரும் தூதர்களை வரவேற்பவரும் அவரே. அயல்நாடுகளில் இயங்கும் அரசாங்கங்களில் எவற்றை முறையானவை என ஏற்பது, எவற்றை முறையற்றவை என ஏற்க மறுப்பது என்று முடிவுசெய்வது குடியரசு தலைவரின் உரிமையாகும்.

உலக நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்துகொள்ளும் அதிகாரமும் குடியரசு தலைவருக்கு உண்டு; ஆனால் செனட் சபையின் மூன்றில் இருபங்குப் பெரும்பான்மையால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகே அவ்வுடன்படிக்கைகள் செல்லுபடியாகும், அமெரிக்கக் குடியரசு தலைவர்களால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் இதுவரை ஒரு சதவிகிதமே செனட்டால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. தலைவர் வில்சன் சர்வதேசச் சங்கத்திற்கான (League of Nations) ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அமெரிக்கா திரும்பியதும், செனட் சபை அவரின் செயல்களை ஏற்க மறுத்ததும் (1919), அதன் பயனாய் அமெரிக்கா அச்சபையில் அங்கம் வகிக்க முடியாமல் போனதும் யாவரும் அறிந்ததே. தாங்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களைச் செனட்

சபை இடரில்லாமல் ஏற்றுக்கொள்ள வகை செய்யும் பொருட்டு, ஒப்பந்தம் பேச்சு வார்த்தை கட்டத்தில் இருக்கும்பொழுதே, அச்சபையின் வெளிநாட்டு அலுவல்கள் குழுவின் அங்கத்தினர்களோடு குடியரசு தலைவர் கலந்து பேசுவதே தற்கால வழக்கம்.

படைத்துறை

அரசியலமைப்பு, குடியரசு தலைவரை படைத்துறைத் தலைவர் (Commander-in-Chief) என அழைக்கிறது. நாட்டைக் காக்க வேண்டிய பொறுப்பு அவருடைய சிறப்பான பொறுப்பாய் கருதப்படுகிறது, லிங்கன், வில்சன், F. D. ரூஸ்வெல்ட் ஆகியோரின் பதவிக் காலங்களில் குடியரசு தலைவரின் இராணுவ அதிகாரங்கள் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு அதிகரித்தன. முதலாம் உலகப் போரின்பொழுது அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தியையும் பங்கீட்டையும் ஒழுங்குபடுத்தவும், தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்த ஆணை இடவும், இராணுவத்திற்கு கட்டாயமாக ஆட்களைச் சேர்க்கவும், வெளிநாடுகளுக்குச் செல்லும் செய்திகளைக் கண்காணித்து அவற்றில் தீங்கானவற்றைத் தடை செய்யவும், தபால்தந்திப் போக்குவரத்துகளை அரசே ஏற்று நடத்தவும், உணவுப் பண்டங்களை வாங்கி விற்கவும், அவற்றிற்கான விலைகளை நிர்ணயம் செய்யவும், காங்கிரஸ் குடியரசு தலைவருக்கு அதிகாரம் வழங்கியது.

போர் அறிவிக்கக்கூடிய அதிகாரம் குடியரசு தலைவருக்கு இல்லை என்றாலும், படைகளை இயக்கக்கூடிய அதிகாரத்தின் மூலம் போரைத் தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையை அவர் உண்டாக்க முடியும். காங்கிரசின் சம்மதமில்லாமல் இதுவரை 150 தடவைகளுக்கு மேலாகக் குடியரசு தலைவர் சிறு சண்டைகளில் அமெரிக்காவை ஈடுபடுத்தி இருக்கிறார். காங்கிரசின் இசைவைப் பெறாமல்தான் 1950-ல் தலைவர் ட்ரூமன் கொரியாவில் (Korea) சண்டையைத் துவங்கினார். ஆனால் சமீப காலத்தில் காங்கிரசின் ஒப்புதலைப் பெற்ற பிறகே குடியரசு தலைவர்கள் போர்ச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு அலுவல்களிலும் படைகளைப் பயன்படுத்தக்கூடிய உரிமை குடியரசு தலைவருக்கு உண்டு என்பது முன்னரே கூறப்பட்டது. எல்லா மாநிலங்களிலுமுள்ள அரசாங்கங்கள் குடியரசு அரசாங்கங்களாக இயங்குவதில் எதாவது இடர்ப்பாடு எழுமானாலும், அல்லது அவை உள்நாட்டுக் கலகங்களால் பாதிக்கப்பட்டாலும், குடியரசு தலைவர் தேசியப் படைகளைப் பயன்படுத்தி நிலைமையைச் சீர் செய்யலாம்.

சட்டத்துறை

அதிகாரப் பிரிவினையின் அடிப்படையில் அமெரிக்க அரசியல மைப்பில் ஆட்சித்துறைத் தலைவரான குடியரசு தலைவருக்கு, சட்டத்துறை அதிகாரங்கள் இருக்கும் என எதிர்ப்பார்க்க நமக்குத் தோன்றுது. இருப்பினும் 'பிரதான சட்டமியற்றுனர்' (Chief Legislator) என்ற பெயரைப் பெறும் அளவிற்கு அவர் சட்டத் துறையில் செல்வாக்குப் பெற்றிருக்கிறுர்.

காங்கிரசைக் கூட்டுகின்ற அதிகாரமோ, கலைக்கின்ற அதிகாரமோ பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளில் நாட்டின் தலைவர்களுக்கு இருப்பது போன்று அமெரிக்கத் தலைவருக்கு இல்லை; இருந்தாலும் சிறப்புக் கூட்டங்களைக் (extraordinary sessions) கூட்டும் அதிகாரம் அவருக்கு உண்டு. அவ்வப்போது நாட்டின் நிலையைக் காங்கிரசுக்கு எடுத்துரைத்து அதன் பரிசீலனைக்குத் திட்டங்களைச் சிபாரிசு செய்வதும் குடியரசு தலைவரின் அதிகாரங்களில் அடங்கும். விரும்பினுல் அவர் தானே காங்கிரசுக்குச் சென்று உரை நிகழ்த்தலாம்; இல்லையேல் தன் உரையை அங்கே படிக்கவும் ஏற்பாடு செய்யலாம். ஐசன் ஹோவர் (Eisenhower) தலைவராய் இருந்த காலத்தில் 1956-ல் மட்டும் 225 வேண்டுகோள்களைக் காங்கிரசுக்கு அனுப்பினுர் எனக் கூறப்படுகிறது. சட்டப்படி குடியரசு தலைவருக்குக் காங்கிரசில் மசோதாக்களைத் தோற்றுவிக்கும் அதிகாரம் இல்லை; எனினும் அவர் விரும்பும் மசோதாக்கள், அவர் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களால் அங்கே தோற்றுவிக்கப்படுகின்றன. குடியரசு தலைவரும் பெரும்பாலான காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருப்பின், தலைவர் விரும்பும் மசோதாக்கள் சட்டங்களாவது உறுதி. குடியரசு தலைவர் பல பதவிகளை அளிக்கக்கூடிய நிலையில் இருப்பதாலும், பலவிதமான காரியங்களுக்குப் பணத்தை ஒதுக்கக்கூடிய நிலையில் இருப்ப தாலும், அவருடைய கொள்கையை விளக்கிக்கூற ஆயிரக் கணக்கான அதிகாரிகளைப் பெற்றிருப்பதாலும், தேசியத் தலைவர் என்ற பெருமை உடையவராய் இருப்பதாலும் அவரின் தயவும் நல்லெண்ணமும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத் தேவைப்படு கிறது. எனவே அவரால் விழையப்படும் மசோதாக்களுக்குப் பெருமளவுக்கு எதிர்ப்பே இராது எனக் கூறலாம்.

காங்கிரசால் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் குடியரசு தலைவரின் ஒப்பத்தைப் பெற்ற பிறகே சட்டங்களாகும். பெரும் பாலான மசோதாக்களுக்குக் குடியரசு தலைவரின் கையொப்பம் மறுக்கப்படுவதில்லை. மசோதாக்கள் அவரை வந்தடைந்த பத்து

நாட்களுக்குள் தலைவர் அவற்றின்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவை சட்டங்களாகிவிடும். ஆனால் இந்தப் பத்து நாட்களுக்குள் காங்கிரஸ் ஒத்திவைக்கப்பட்டு, ஒத்திவைக் கப்படும் நாள்வரை தலைவர் மசோதாக்கள்மீது எவ்வித முடிவும் எடுக்கவில்லை எனின், அவை சட்டங்களாகமாட்டா. குடியரசு தலைவரால் மறுக்கப்பட்ட மசோதாக்களைக் காங்கிரஸ் மீண்டும் சட்டமாக்குவதற்கு அரசியலமைப்பு வழி செய்கிறது. மறுக்கப் பட்ட மசோதாக்களைக் காங்கிரசின் ஒவ்வொரு சபையும் மறு பரிசீலனை செய்து மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் வாக்கு களால் அவற்றை நிறைவேற்றுமானால், அவை குடியரசு தலைவரின் ஒப்பமில்லாமலே சட்டங்களாகும். வாஷிங்டன் காலத்திலிருந்து லிங்கன் காலம் வரை 57 மசோதாக்களே குடியரசு தலைவரின் மறுப்பாணைக்கு இலக்காகியிருக்கின்றன; ஆனால் F. D. ரூஸ் வெல்ட்டு காலத்தில் மட்டும் 631 மசோதாக்கள் அவரால் மறுக்கப்பட்டன என்ற செய்தி சென்ற நூற்றாண்டைவிட இந்த நூற்றாண்டில் மறுப்பாணை அதிகாரம் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது என்பதை அறிவுறுத்துகிறது.

நீதித் துறை

நீதிமன்றங்களால் தண்டிக்கப்படும் குற்றவாளிகளுக்குக் கருணை காட்டி அவர்களுக்கு மன்னிப்பு வழங்கக்கூடிய அதிகாரம் குடியரசு தலைவருக்கு உண்டு. தண்டனையை முற்றிலும் தள்ளுபடி செய்யவோ, அல்லது குறைக்கவோ, அவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். தண்டனை நிறைவேற்றப்படுவதை அவர் தள்ளிப் போடலாம். உள்நாட்டுப் போர், கலகம் போன்றவை களில் ஈடுபட்ட குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கும் குற்ற வாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு. கருணை காட்டும் அதிகாரம் குடியரசு தலைவரால் அவருடைய சொந்தப் பொறுப்பில் பயன்படுவதில்லை என்பதும், நீதித் துறையின் சிபாரிசுபடியே பயன்படுத்தப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. குற்றச்சாட்டு முறையைப் பின்பற்றிக் காங்கிரசால் தண்டிக்கப்படுகின்றவர்களை மன்னிக்கக்கூடிய அதிகாரம் குடியரசு தலைவருக்கு இல்லை என அரசியலமைப்பு அறிவிக்கிறது.

கட்சித் தலைவர்

குடியரசு தலைவர் இருபெருங் கட்சிகள் ஒன்றின் தலைவராய் இருப்பது அவரை நாடு முழுதும் செல்வாக்குள்ளவராய் ஆக்கு கிறது. கட்சிகள் அடிப்படையில் நடக்கும் தேர்தல் வாயிலாக தேர்ந்தெடுக்கப்படும் குடியரசு தலைவரை நாடு முழுவதிலும்

கோடிக்கணக்கான மக்கள் தங்களின் தலைவராக ஏற்று, அவர் காட்டும் பாதையில் நடக்கக் காத்திருப்பது இயற்கையே. தான் தலைவராய் இருக்கும் கட்சியின் அமைப்பைத் தன் விருப்பப்படி இயக்கவும், கட்சிக் கொள்கைகளை தீர்மானிக்கவும், கட்சித் தலைவர்களை நியமிக்கவும், தேர்தல் நிதியை வேட்பாளர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவும் அவருக்கு இருக்கும் அதிகாரங்கள் அவரை அவர் கட்சியின் சர்வாதிகாரியாக ஆக்குகிறது எனக் கூறலாம்.

குடியரசு தலைவரின் அலுவலகம்

குடியரசு தலைவருக்குள்ள அலுவல்கள் ஒரு தனி மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டவை என்பதை நாம் அறிவோம். அவர் சுமையைக் குறைக்கவும், அவர் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், 1939ஆம் ஆண்டில் ஆட்சித்துறை அலுவலகம் (Executive Office) ஒன்று நிறுவப்பட்டது. வெள்ளை மாளிகை அலுவலகம் (White House Office), வரவு செலவுக் கணக்கு அலுவலகம் (Bureau of the Budget), பொருளாதார ஆலோசகர்கள் குழு (Council of Economic Advisers), தேசியப் பாதுகாப்புக் குழு (National Security Council), தேசிய விண்வெளிக் குழு (National Aeronautics and Space Council), விஞ்ஞான, தொழில் நுணுக்க அலுவலகம் (Office of Science and Technology), அவசரகாலப் பொருளாதார திட்ட அலுவலகம் (Office of Economic Planning) ஆகியவை ஆட்சித்துறை அலுவலகத்தின் ஏழு அங்கங்களாக அமைந்து குடியரசு தலைவருக்குப் பேருதவி புரிகின்றன.

5. கேபினட் அமைச்சரவை

(The Cabinet)

[முன்னுரை—அமைப்பு — பொறுப்புகள் — ஆட்சித் துறைகள் சீரமைப்பு—பிரிட்டிஷ் அமெரிக்கக் கேபினட்டுகளுக்கிடையே வேற்றுமைகள்.]

முன்னுரை

பிரிட்டிஷ் கேபினட் மாதிரியே அமெரிக்கக் கேபினட்டும் காலப் போக்கில் சிறிது சிறிதாக வளர்ந்து இன்றைய நிலையை அடைந்திருக்கிறது. *1789*ஆம் ஆண்டின் அரசியலமைப்பு, கேபினட்டின் அமைப்பைப் பற்றியோ அதிகாரங்களைப் பற்றியோ ஒன்றும் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. காங்கிரசின் சட்டங்கள் இன்றைய அமெரிக்கக் கேபினட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. 'ஐக்கிய நாடுகளின் ஆட்சித்துறை' அதிகாரங்கள் ஒரு குடியரசு தலைவருக்கு உரிமையாக்கப்படும்' எனக் கூறும் அரசியலமைப்பு, அப்பெரும் பணியைக் குடியரசு தலைவர் தனி ஒருவராகச் செய்யமுடியாது என்பதை உணர்ந்து 'ஒவ்வொரு நிருவாகத் துறையின் தலைமை அதிகாரியின் கருத்துரையை எழுத்துருவில் குடியரசு தலைவர் வேண்டிப் பெறலாம்' எனக் கூறுகிறது. இன்று அமெரிக்க அரசாங்கத்தின் நிருவாகத் துறைகளாய் இயங்கும் அயலரசுத் துறை (State, *1789*), நிதித் துறை (Finance, *1789*), பாதுகாப்புத் துறை (Defence, *1947*), நீதித்துறை (Justice, *1870*), அஞ்சல் துறை (Post Office, *1872*), உள்துறை (Interior, *1848*), விவசாயத் துறை (Agriculture, *1862*), வாணிகத் துறை (Commerce, *1913*), தொழிலாளர் துறை (Labour, *1913*), சுகாதாரம், பொதுநல, கல்வித் துறை (Health, Education, and Welfare, *1953*), வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை, (Department of Housing and Urban Development, *1965*) ஆகிய பதினொரு துறைகளும் காங்கிரசால்

நிறுவப்பட்டவையே. இத்துறைகளின் தலைவர்கள் செயலாளர்கள் என அழைக்கப்படுகின்றனர். இச் செயலாளர்கள் மற்ற நாடுகளில் காணப்படும் அமைச்சர்களுக்குச் சமமானவர்கள்.

அமைப்பு

அமெரிக்க அமைச்சர்கள் அனைவரையும் குடியரசு தலைவர் செனட் சபையின் இணக்கத்தோடு நியமிக்கிறார். அமைச்சரவைக்கான நியமனங்களைச் செனட் சபை கூடுமானவரை மறுக்காமல் ஏற்றுக்கொள்வதே வழக்கம். குடியரசு தலைவர் யாரை வேண்டுமென்றாலும் அமைச்சராக நியமிக்கலாம்; இருந்தாலும் அவர் கட்சிக்கு வெற்றி தேடிக் கொடுத்த கட்சித் தலைவர்களில் சிலராவது அமைச்சரவையில் இடம் பெறுவது உறுதி. அமைச்சர்கள் அனைவரும் குடியரசு தலைவர்பால் பற்றுறுதியோடு நடந்து கொள்வது மரபு; தலைவரின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் இழக்கும் அமைச்சர்கள் பதவியில் நீடிக்கமாட்டார்கள். சில திறமையுள்ள அமைச்சர்கள் பல தலைவர்களின் கீழ்த் தொடர்ந்து பணி புரிந்திருப்பதாய் அறிகிறோம். ஆண்ட்ரூ மெலான் (Andrew W. Mellon) என்பவர் ஹார்டிங் (Harding), கூலிட்ஜ் (Coolidge), ஹூவர் (Hoover) ஆகிய மூன்று தலைவர்களின் கீழ் நிதி அமைச்சராய் இருந்திருக்கிறார். பிரிட்டனில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாவது மாதிரி, அமெரிக்காவில் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமைச்சர்களாகப் பொறுப்பேற்க விழைந்தால் அவர்கள் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

கேபினட்டு அவை வாரத்திற்கு இருமுறை ‘வெள்ளை மாளிகையில் கூடும். குடியரசு தலைவரால் விரும்பப்படும் பொருள்கள் மட்டுமே அங்கே விவாதிக்கப்படும்; மேலும் அமைச்சர்களின் ஆலோசனையைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. ஆண்ட்ரூ ஜேக்சன் (Andrew Jackson) தன் அமைச்சரவையைப் பெரும் தொந்தரவாகக் கருதி இரண்டு ஆண்டுகள் அதைக் கூட்டவே இல்லை. குடியரசு தலைவருக்கும் அமைச்சர்களுக்கும் இடையே உள்ள தொடர்புகள் குடியரசு தலைவரின் ஆளுமையைப் பொறுத்தது. தலைவர் புக்கனன் (Buchanan) அமைச்சர்களின் கைப்பாவையாய் இருந்தார் என்ற செய்தியும், தலைவர் கிராண்ட் (Grant) அமைச்சர்களைத் தன் ஆணைகளை நிறைவேற்றும் அதிகாரிகளாய் நடத்தினார் என்ற செய்தியும் அவ்விருவரின் வெவ்வேறான பண்பியல்புகளை அறிவுறுத்துகின்றன.

பொறுப்புகள்

அமைச்சர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடிச்செய்யும் செயல்களை விட ஒவ்வொருவரும் தன் துறையில் செய்யும் செயல்களே முக்கியத்துவம் வாய்ந்தவை. தன் துறைப் பணியாளர்களின் வேலையை மேற்பார்வை செய்தும், துறை செம்மையாக இயங்குவதற்கான விதிகளைப் பிறப்பித்தும், தன்னைக் காண வரும் காங்கிரஸ் உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுக்கு மறுமொழி கூறியும், காங்கிரசின் குழுக்களுக்குச் சென்று அவற்றின் வினாக்களுக்கு விடையளித்தும், தன் துறைபற்றிப் பொதுமக்களால் தெரிவிக்கப்படும் குற்றங் குறைகளுக்குப் பரிகாரம் தேடியும் பல வழிகளில் ஓய்வு ஒழிவின்றி அமைச்சர்கள் உழைத்தால்தான் தங்கள் கடமைகளை ஓரளவுக்கு நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு துறையும், கிளையின்கீழ்க் கிளையாய்ப் பலவாகப் பிரிந்து இயங்குகிறது. அமைச்சர்களின் சுமையைக் குறைக்க ஒவ்வொருவருக்கும் பல துணை அமைச்சர்கள் இருக்கின்றனர். எல்லாத் துறைகளும் ஒரே மாதிரியாய் அமைவதில்லை; அரசாங்கத்தின் பல துறைகள் பல்வேறு சமயங்களில் நிறுவப்பட்டதால், அவற்றின் அமைப்புகளில் சில வேறுபாடுகள் காணப்படுவது இயல்பே.

நிருவாகத் துறைகள் எனப்படும் பதினொரு துறைகளைத் தவிர வேறு சில துறைகளிடமும் அரசாங்கப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவை வாரியங்கள் (Boards) என்றும், குழுக்கள் (Commissions) என்றும் பலவகையான பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இக் குழுக்கள் ஒருவர் தலைமையில் அமையாமல் ஐந்திலிருந்து பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் தலைமையில் இயங்குகின்றன. நிருவாகத் துறைகளைவிட இத்துறைகளுக்குச் சற்று அதிகமான சுதந்திரமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது. மாநிலங்களுக்கிடையே வாணிகக்குழு (Interstate Commerce Commission, 1887), தேசியத் தொழிலாளர் தொடர்புகள் வாரியம் (National Labour Relations Board, 1935), டென்னஸி பள்ளத்தாக்கு நிறுவனம் (Tennese Valley Authority, 1933), ஆகியவை நிருவாகத் துறைகளில் அடங்காத வேறு அரசாங்க அமைப்புகளுக்கு உதாரணங்களாகும்.

ஆட்சித்துறைகள் சீரமைப்பு

நிருவாகத் துறைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்ததையும், அவற்றின் அமைப்பு மேலும் மேலும் சிக்கலாய் மாறி வந்ததையும் கண்ட காங்கிரஸ், அவற்றைச்

சீர் செய்யும் நோக்கத்தோடு 1939ஆம் ஆண்டில் சீரமைப்புச் சட்டம் (Reorganization Act) ஒன்றை இயற்றியது. இச்சட்டம் அப்பொழுது குடியரசு தலைவராய் இருந்த F. D. ரூஸ்வெல்ட்டுக்கு, காங்கிரசின் சம்மதத்தோடு, புதுத் துறைகளை நிறுவவோ, பழைய துறைகளை நீக்கவோ, துறைகளின் அதிகாரங்களைக் கூட்டவோ, குறைக்கவோ, பொறுப்புகளை ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றவோ அதிகாரம் வழங்கியது. 1949ஆம் ஆண்டின் சீரமைப்புச் சட்டம், ஆட்சித்துறைகள் வளர்ச்சியின் வரலாற்றில் ஒரு முக்கியக் கட்டமாகக் கருதப்படுகிறது. முன்னாள் குடியரசு தலைவரான ஹீவர் (Hoover) தலைமையில் அமைக்கப் பட்ட குழு சமர்பித்த அறிக்கையின் விளைவாக இயற்றப்பட்டதே 1949ஆம் ஆண்டின் சீரமைப்புச் சட்டமாகும். காங்கிரஸ், ஹீவர் குழுவின் சிபாரிசுகளை ஏற்று, வேண்டிய திருத்தங்களைப் புகுத்தும்படி தலைவர் ட்ரூமனுக்கு (Truman) அதிகாரம் வழங்கியது. சில ஆண்டுகள் கழித்து மறுமுறை அமைக்கப்பட்ட ஹீவர் குழுவின் ஆலோசனைகளின் அடிப்படையில் ஐசன் ஹோவர், கென்னடி, ஜான்சன் ஆகிய தலைவர்கள் நிருவாகத் துறைகளில் மேலும் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர். அமெரிக்காவில் அரசாங்கத்தின் பொறுப்புகள் வளர்ந்துகொண்டு போகும் வேகத்தைப் பார்த்தால், ஒவ்வொரு குடியரசு தலைவர் காலத்திலும் நிருவாகத் துறைகளைத் திருத்தி அமைப்பது நல்லது எனத் தோன்றுகிறது.

பிரிட்டிஷ் அமெரிக்கக் கேபினட்டுகளுக்கிடையே வேற்றுமைகள்

இன்றைய பிரிட்டனில் கேபினட்டே அரசாங்கத்தின் உயிர் மூச்சாய் விளங்குகிறது; கேபினட் இல்லை என்றால் அரசாங்கமே இல்லை என்ற அளவுக்கு அது முக்கியத்துவம் அடைந்திருக்கிறது. ஆனால் அமெரிக்க அரசாங்கத்தில் கேபினட்டை ஓர் இன்றி யமையாத நிறுவனமாகக் கருதுவதற்கில்லை; கேபினட்டுக் கலைக்கப் பட்டாலும் அரசாங்கம் வழக்கம்போல இயங்கும். பிரிட்டனில் பாராளுமன்ற உறுப்பினர்களே அமைச்சர்களாக நியமிக்கப் படுவது மரபு; இதற்கு நேர்மாறான வழக்கம் அமெரிக்காவில் பின்பற்றப்படுகின்றது; காங்கிரஸ் உறுப்பினராய் இருப்பவர் அமைச்சராக விழைந்தால் அச்சபையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். பிரிட்டனில் முக்கியமான மசோதாக்களில் பெரும் பாலானவை அமைச்சர்களால் தோற்றுவிக்கப்படுகின்றன; ஆனால் அமெரிக்க அமைச்சர்களுக்கு இது போன்ற உரிமை இல்லை. பிரிட்டனில் அமைச்சர்கள் அனைவரும் கீழ்ச்சபைக்கு பொறுப் புள்ளவர்கள்; கீழ்ச்சபையின் நம்பிக்கையை இழக்கும் கேபினட்டுப் பதவியில் நீடிக்க முடியாது. ஆனால் அமெரிக்காவில் அமைச்சர்கள்

கீழ்ச்சபைக்கோ, மேல்சபைக்கோ பொறுப்புள்ளவர்கள் அல்லர், அவர்கள் குடியரசு தலைவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள். பிரிட்டிஷ் கேபினட்டு, அமெரிக்கக் கேபினட்டு ஆகிய இரண்டில் எது சிறந்தது என்ற கேள்வி சில சமயங்களில் கேட்கப் படுவது உண்டு. இது யானை வலுவுள்ளதா, திமிங்கலம் வலுவுள்ளதா எனக் கேட்பதை ஒத்தது. நிலத்தில் யானையும், நீரில் திமிங்கிலமும் வலுவுள்ளவை என்பது தெளிவு. பிரிட்டிஷ் அரசியலமைப்பும், அமெரிக்க அரசியலமைப்பும் வெவ்வேறு மாதிரியான அரசியலமைப்புகள், பிரிட்டிஷ் அரசியலமைப்புக்கு ஏற்றவாறு அதன் கேபினட்டும், அமெரிக்க அமைப்புக்கு ஏற்றவாறு அதன் கேபினட்டும் அமைந்திருக்கின்றது எனக் கூறுவது பொருத்தமாகும்.

6. காங்கிரஸ்

(The Congress)

[முன்னுரை — அமைப்பு — சபைகளின் அதிகாரிகள் — உறுப்பினர்களின் தன்மை—காங்கிரசின் குழுக்கள்—அதிகாரங்கள் : (அ) சட்டத்துறை—(ஆ) ஆட்சித் துறை—(இ) நீதித் துறை—(ஈ) அரசியலமைப்பைத் திருத்துதல்—(உ) அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல்—(ஊ) தொகுதியினருக்குத் தொண்டு—(எ) விசாரணைகள்—செனட் சபையின் சிறப்பான நிலை.]

முன்னுரை

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பாராளுமன்றம் காங்கிரஸ் (Congress) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. அரசியலமைப்பின் முதலாவது விதியே காங்கிரசைப் பற்றியதாக இருப்பதால், அதன் முக்கியத்துவத்தை ஓரளவுக்கு உணரலாம். இரு சபைகளைக் கொண்ட காங்கிரசின் மேல் சபை செனட் சபை என்றும், கீழ்ச்சபை பிரதிநிதிகள் சபை என்றும் அழைக்கப்படுகின்றன. மேல் சபையை மாநிலங்கள் சபை என்றும், கீழ்ச் சபையை மக்கள் சபை என்றும் கருதுவது வழக்கம்.

அமைப்பு

1789ஆம் ஆண்டில் 65 உறுப்பினர்களைக் கொண்டிருந்த பிரதிநிதிகள் சபையில் இன்று 435 உறுப்பினர்கள் இருக்கின்றனர். மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கவே, உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வந்து 1910ஆம், ஆண்டில் 435 ஆக உயர்ந்தது. பிரதிநிதிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போவதை விரும்பாத காங்கிரஸ், 1929-ல் அவர்களின் எண்ணிக்கையை 435-ஆக நிறுத்திவைத்தது. மக்கள் தொகையின் அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதால், பெரிய மாநிலங்களிலிருந்து அதிகமான பிரதிநிதிகளும், சிறிய மாநிலங்களிலிருந்து குறைவான பிரதிநிதிகளும் தேர்ந்

தெடுக்கப்படுகின்றனர். பிரதிநிதிகள் சபையின் தேர்தலுக்கென ஒவ்வொரு மாநிலமும் பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன; ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் சராசரி 4,12,000 மக்களைக் கொண்டிருப்பதாய்க் கணக்கிடப்பட்டிருக் கிறது. சில சிறிய மாநிலங்கள் மிகக் குறைவான மக்கள்தொகை உடையதாய் இருக்கின்ற காரணத்தால், அவை பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தினர்களை அனுப்பும் உரிமையை இழந்துவிடக் கூடாது என்பதற்காக, அரசியலமைப்பு ஒவ்வொரு மாநிலமும் குறைந்த அளவு ஓர் உறுப்பினரையாவது அனுப்பும் எனக் கூறுகிறது.

பிரதிநிதிகள் இருபத்தைந்து வயதிற்குக் குறையாதவர் களாகவும், ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் அமெரிக்கக் குடிமக்களாய் இருப்பவர்களாகவும், எந்த மாநிலத்தில் போட்டியிடுகின்றனரோ அந்த மாநிலத்தில் குடியிருப்பவர் களாகவும் இருக்க வேண்டுமென்று அரசியலமைப்பு நிர்ணயிக் கிறது. வேட்பாளர்கள் எந்த மாவட்டத்தில் போட்டியிடு கின்றனரோ அந்த மாவட்டத்தைச் சேர்ந்தோராய் இருப்பதும் அவசியம் என மரபு எதிர்பார்க்கிறது. பிரதிநிதிகள் சபை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறது. சபையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கலைக்கவோ, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீட்டவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. இரண்டு ஆண்டுகள் என்பது மிகவும் குறுகிய காலம் என்றும், ஒரு தேர்தல் முடிந்த உடன் மறு தேர்தலைப் பற்றி உறுப்பினர்கள் எண்ண ஆரம்பித்து விடுகின்றனர்கள் என்றும், இரண்டு ஆண்டுகள் நான்கு ஆண்டுகளாக மாற்றப்பட வேண்டும் என்றும் அடிக்கடி கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

செனட் சபைக்கு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரு செனட் டர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநிலங்களிடையே பெரிய மாநிலம் சிறிய மாநிலம், பணக்கார மாநிலம் ஏழை மாநிலம், தொழில் மாநிலம், விவசாய மாநிலம், என்ற வேற்றுமை இல்லாமல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரு இடங்களே வழங்கப் படுகின்றன. கூட்டாட்சி அரசுகளான சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும், அமெரிக்கா போன்றே, மையப் பாராளுமன்றத்தின் மேல்சபையில் எல்லா மாநிலங் களுக்கும் ஒத்த பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகின்றன என்பது இங்கு நினைவு கூறத்தக்கது. 1789ல் அமெரிக்கக் கூட்டாட்சியில் பதின்மூன்று மாநிலங்களே இருந்த காரணத்தால் செனட்டில் இருபத்தாறு உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால் இன்று மாநிலங் களின் எண்ணிக்கை ஐம்பதாக அதிகரித்து விட்டதால் உறுப்பினர் களின் எண்ணிக்கையும் நூறாக உயர்ந்திருக்கிறது.

செனட்டர்கள் முப்பது வயதிற்குக் குறையாதவர்களாகவும், ஒன்பது ஆண்டுகளுக்குக் குறையாமல் அமெரிக்கக் குடிமக்களாய் இருப்பவர்களாகவும், எந்த மாநிலத்தில் போட்டியிடு கின்ருர்களோ அந்த மாநிலத்தில் குடியிருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். செனட்டர்கள் ஆறு ஆண்டுகள் பதவியிலிருக்கத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் ; இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் தேர்தலில் மூன்றில் ஒருபங்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ; இத்தேர்தல் முறையின் பயனுகச் செனட் சபையில் ஒரு தொடர்ச்சி இருப்பதைக் காண்கிருேம். செனட்டர்களில் செல்வாக்குள்ள சிலர் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பதும், அதனுல் பதினெட்டு ஆண்டுகள் அல்லது இருபத்து நான்கு ஆண்டுகள் செனட்டில் தொடர்ந்து ஒருவர் உறுப்பினராய் இருப்பதில் புதுமை ஒன்று மில்லே என்ற செய்தியும் நமக்கு வியப்பூட்டுகிறது. பிரதிநிதிகள் சபையின் ஆயுட்காலத்தைப் போன்றே, செனட் சபையின் ஆயுட் காலத்தையும் பாராளுமன்றம் கூட்டவோ குறைக்கவோ முடியாது. 1913ஆம் ஆண்டிற்கு முன்பு, செனட்டர்கள் மாநிலச் சட்டமன்றங்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்தனர் ; அந்த முறையைப் பதினேழாவது அரசிய லமைப்புத் திருத்தம் மாற்றி அமைத்து, அவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வகை செய்தது.

காங்கிரசின் இரு சபைகளின் உறுப்பினர்களும் வாக்காளர் களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் இருப்பது போல அமெரிக்காவில் நாடு முழுதும் ஒரே மாதிரியான வாக்குரிமைச் சட்டங்கள் இல்லே என்பது அறியத்தக்கது. வாக்காளர்களின் தகுதிகள் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுகிறது. இனம், நிறம், அடிமை நிலே அல்லது பால் ஆகிய காரணங்களுக்காக வாக்குரிமை யாருக்கும் மறுக்கப்படக் கூடாது என்று மட்டும் அரசியலமைப்பு எச்சரிக்கிறது. பொதுவாக வயது வந்த ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு எனக் கூறலாம்.

ஒவ்வொரு காங்கிரஸ் உறுப்பினருக்கும் ஆண்டொன்றுக்கு 22,500 டாலர்கள் ஊதியமும், பயணச்செலவு போன்றவை களுக்காக ஒரு சிறு தொகையும், ஓய்வுபெற்ற பிறகு ஓய்வுச் சம்பளமும் தரப்படுகின்றன. காங்கிரஸ் கூட்டங்களில் பங்கு பெறும் பொழுதும், அவற்றிற்குப் போகும் பொழுதும் வரும் பொழுதும், உறுப்பினர்களே சிவில் குற்றங்களுக்காகக் கைது செய்ய முடியாது. சபையில் அவர்கள் பேசும் பேச்சு எத்தன் மையதாய் இருப்பினும், அதற்காக நீதிமன்றங்களுக்குச்

சமாதானம் சொல்ல அவர்கள் கடமைப்பட்டவர்களல்லர். காங்கிரசின் கூட்டங்களைப் பொதுமக்கள் பார்க்க அனுமதிக்கப் படுவார்கள்; சில சமயங்களில் இரகசியக் கூட்டங்கள் நடைபெறுவதும் உண்டு. ஒவ்வொரு சபையிலும் பாதிப்பங்கு உறுப்பினர்களாவது சபையில் இருந்தால் தான் சபையின் கூட்டத்தைத் தொடங்கமுடியும். அரசியலமைப்பின் இருபதாம் திருத்தம் காங்கிரஸ் ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும் என்றும், முதல் கூட்டம் ஜனவரித் திங்கள் 3ஆம் நாளன்று தொடங்கப்பட வேண்டும் என்றும் கோருகிறது.

சபைகளின் அதிகாரிகள்

பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் அவைத் தலைவரே பிரதிநிதிகள் சபையின் தலைவர். சபையில் மற்ற உறுப்பினர்களைக் காட்டிலும் அவருக்கு அதிகப்படியான அதிகாரம் வழங்கப் பட்டிருப்பது இயற்கையே. சபையின் கூட்டங்களுக்கெல்லாம் தலைமை தாங்குவதும், தன்னால் தலைமை வகிக்க இயலாத சமயங்களில் தாற்காலிகத் தலைவர்களை நியமிப்பதும், சபையில் ஒழுங்கையும் கண்ணியத்தையும் காப்பதும், உறுப்பினர்களைப் பேச அனுமதிப்பதும், மசோதாக்கள், தீர்மானங்கள் போன்ற வற்றை வாக்களிப்புக்கு விட்டு அவை வென்றதா தோற்றதா என்று முடிவு செய்வதும், சில சிறப்புக் குழுக்களுக்கான உறுப் பினர்களை நியமிப்பதும், மசோதாக்களைக் குழுக்களின் பரிசீலனைக்கு அனுப்புவதும், அவருடைய அதிகாரங்களில் சிலவாகும். பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிரதிநிதிகள் சபைத் தலைவர் சபையில் தன் கட்சியின் நலன்களுக் காகத் தன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்துவது அவரை பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையின் தலைவரிலிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது. குடியரசின் துணைத் தலைவரை செனட் சபையின் தலைவராய்ப் பணியாற்றுகிறார். பிரதிநிதிகள் சபையின் தலைவருடைய அதிகாரங்களை விட இவர் அதிகாரங்கள் மிகக் குறைவானவை; அவரைப் போல மிகுதியாகக் கட்சி வேலைகளும் இவருக்கு இருப்பதில்லை. அமெரிக்காவைப் போல் இந்தியாவிலும் குடியரசின் துணைத் தலைவரே மேல்சபையின் தலைவராய் பணியாற்றுகிறார் என்பது அறியத்தக்கது.

உறுப்பினர்களின் தன்மை

காங்கிரஸ் உறுப்பினர்களைப் பற்றிய ஆராய்ச்சி ஒன்று, பிரதிநிதி ஒருவரின் சராசரி வயது 52க்கு மேலாகவும், செனட்டர் ஒருவரின் சராசரி வயது 58க்கு மேலாகவும் இருப்பதாகவும், உறுப்பினர்கள் பிறப்பாலும் குடியிருப்பாலும் தங்கள் தொகுதி

களில் வேறுன்றியவர்கள் என்றும், அவர்களில் 88 சதவிகிதத்தினர் கல்லூரிப் படிப்புப் படித்தவர் என்றும், பலர் காங்கிரசுக்கு வருவதற்கு முன்பே அரசியல் அனுபவம் பெற்றிருந்தனர் என்றும், உறுப்பினர்களில் மற்றத் தொழில் செய்வோரைவிட வழக்கறிஞர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும் அறிவிக்கிறது. இதிலிருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்கான எல்லாத் தகுதிகளுமுடைய சான்றோர் எனத் தெரிய வருகிறது.

காங்கிரசின் குழுக்கள்

காங்கிரசின் சட்டமியற்றும் வேலை பெருமளவுக்கு அதன் நிலைக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. உலகில் வேறு எந்தப் பாராளுமன்றத்திலும் இல்லாத அளவுக்கு அமெரிக்கக் காங்கிரசில் நிலக் குழுக்கள் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. 1946ஆம் ஆண்டின் சீரமைப்புச் சட்டப்படி, (Reorganization Act) பிரதிநிதிகள் சபையில் பத்தொன்பது நிலைக் குழுக்களும், செனட் சபையில் பதினைந்து நிலைக் குழுக்களும் நிறுவப்பட்டன. சாரசரியாகப் பிரதிநிதிகள் சபையின் குழு ஒன்றில் முப்பது அங்கத்தினர்களும், செனட் சபையின் குழு ஒன்றில் பதினைந்து அங்கத்தினர்களும் இடம் பெறுவார்கள். பொதுவாக ஒவ்வொரு பிரதிநிதியும் ஏதாவது ஒரு குழுவிலும், ஒவ்வொரு செனட்டரும் ஏதாவது இரண்டு குழுக்களிலும் இடம் பெறுவது வழக்கம். சபையில் பெரும்பான்மைக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் சிறுபான்மைக்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாசாரப்படி குழுக்களில் இரு கட்சி உறுப்பினர்களுக்கும் இடமளிப்பதே மரபு. ஒவ்வொரு குழுவுக்கும் தலைமை தாங்க ஒரு தலைவரும் உண்டு. குழுவின் உறுப்பினர்களில் யார் அந்தக் குழுவில் அதிக நாட்கள் அங்கம் வகித்திருக்கின்றாரோ, அவரைத் தலைவராக ஆக்குவதுதான் பொதுவான வழக்கம். குழுக்களின் கூட்டங்களைக் கூட்டவும், துணைக் குழுக்களை அமைக்கவும், கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலை வரையவும், குழுவின் முன் சாட்சி சொல்ல விரும்புவோருக்கு அனுமதி வழங்கவும் அல்லது மறுக்கவும் அதிகாரம் பெற்றிருக்கும் இத் தலைவர்கள் சபையின் தூண்களெனக் கருதப்படுகின்றனர். குழுக்களின் உறுப்பினர்களும், அவற்றின் தலைவர்களும் சபையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

சபையில் தோற்றுவிக்கப்படும் மசோதாக்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட குழுக்களின் ஆய்வுக்கு அனுப்பப்படும். மசோதாக்களைப் பரிசீலனை செய்து அவற்றை ஏற்கலாமா ஏற்கக்கூடாதா என்று சபைக்கு ஆலோசனை வழங்குவது குழுக்களின் கடமை.

மசோதாக்களைப் பற்றிச் சாதகமாகவோ பாதகமாகவோ சாட்சி சொல்ல விரும்பும் குடிமக்கள், குழுக்கள் முன்னர்த் தோன்றித் தங்கள் கருத்துகளை எடுத்துக் கூறுவர். பொதுவாகக் குழுக்களின் ஆலோசனைகளைச் சபை ஏற்பது வழக்கம். மசோதாக்களைச் சபை தானே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாமல், சில உறுப்பினர்களே அடங்கிய குழு ஒன்றிற்கு அனுப்பி, அதன் முடிவுகளை வேத வாக்காக ஏற்பது பாராளுமன்ற முறைக்கே பங்கம் விளைக்கிறது எனச் சிலர் குறை கூறுகின்றனர். காங்கிரஸ் சட்டமியற்றுகிறது எனக் கூறுவதை விட, காங்கிரசின் குழுக்களே சட்டமியற்றுகின்றன எனக் கருதப்படும் அளவுக்கு அதன் குழுக்கள் முக்கியத்துவம் அடைந்திருப்பது விரும்பத்தக்க வளர்ச்சியன்று.

அதிகாரங்கள்

பிரிட்டிஷ் பாராளுமன்றம் போலல்லாமல் அமெரிக்கக் காங்கிரசின் அதிகாரங்கள் எல்லைக்குட்பட்டவை எனினும் பலவகையான அதிகாரங்கள் அதற்கு உண்டென்பதை மறுப்பதற்கில்லை. எந்தெந்த இனங்கள்மீது காங்கிரஸ் சட்டமியற்றலாம் எனக் கூறுவதோடு அரசியலமைப்பு நிற்காமல், எந்தெந்த இனங்கள் மீது சட்டமியற்றக் கூடாது எனக் கூறுவதிலிருந்து, அமெரிக்கக் காங்கிரஸ் இறைமை பொருந்திய மன்றம் அன்று என்பது தெளிவாகிறது. காங்கிரஸ் முக்கியமாகச் சட்டமன்றமாகக் கருதப்பட்ட போதிலும், வேறு சில பணிகளும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன; இது அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டுக்கு மாறுனதாய் இருப்பினும், இதில் புதுமை ஒன்றுமில்லை; ஏனெனில் மற்ற நாடுகளின் பாராளுமன்றங்களும் பலவகையான பணிகளில் ஈடுபடுவதைக் காண்கிறோம்.

சட்டத்துறை

சட்டங்கள் இயற்றுதலே காங்கிரசின் முதன்மையான கடமையாகும். அரசியலமைப்பின் முதலாவது வாக்கியமே 'இதில் அளிக்கப்பட்டிருக்கும் சட்டத்துறை அதிகாரங்கள் அனைத்தும் ஐக்கிய நாடுகளின் காங்கிரஸ் ஒன்றிடம் ஒப்படைக்கப்படும்' என அறிவிக்கிறது. அரசியலமைப்பின் முதலாவது பிரிவின் எட்டாவது பகுதி, காங்கிரஸ் சட்டமியற்றக் கூடிய இனங்கள் அடங்கிய பட்டியலொன்றைத் தருகிறது. பாதுகாப்பு, வெளிநாடுகளோடு தொடர்புகள், நாணயச் செலவாணி, அஞ்சல் நிலையங்கள் போன்ற இனங்கள் மீது சட்டமியற்றும் உரிமை காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது, காங்கிரஸ் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு முரணானவையாய் இருக்கக் கூடாது; தலைம

நீதிமன்றம் அவற்றை அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டவை எனக் கருதினல் அவை செல்லத்தக்கவை அல்ல என அறிவிக்கும். ஒவ்வொரு காங்கிரசிலும் ஆயிரக்கணக்கான மசோதாக்கள் தோற்றுவிக்கப்படுகின்றன; அவற்றில் எல்லாம் சட்டங்களாவது என்பது இயலாது. முதலாவது காங்கிரசில் 258 மசோதாக்கள் தோற்றுவிக்கப்பட்டன; ஆனல் ஐசன்ஹோவரின் மூன்ருவது காங்கிரசில் 17,230 மசோதாக்கள் தோற்றுவிக்கப்பட்டனவாம். மசோதாக்கள் சட்டங்களாவதற்குக் காங்கிரசின் இருசபைகளின் இணக்கமும் தேவை என்பது நினைவில் வைக்கத்தக்கது.

ஆட்சித்துறை

குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் உயர் அதிகாரிகள் செனட் சபையின் இசைவைப் பெற்ற பிறகே பதவியேற்க முடியும். அமைச்சர்கள், தூதர்கள், நீதிபதிகள், படைத்தலைவர்கள் போன்ற உயர் அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தைக் குடியரசு தலைவர் ஒருவரிடம் மட்டும் ஒப்படைப்பது நல்லதன்று என அரசியலமைப்பை ஆக்கியோர் நினைத்தால், அவரால் நியமிக்கப் படும் அதிகாரிகள் செனட் சபையின் இசைவைப் பெற்ற பிறகே பதவிப் பொறுப்பேற்க வேண்டுமெனக் கோருகின்றனர். இந்த முறையால் தகுதியும் திறமையும் அற்றோர் உயர் பதவிகளை அடைய முடியாது என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படுகிறது. குடியரசு தலைவரால் செய்து கொள்ளப்படும் சர்வதேச உடன் படிக்கைகளும் செனட் சபையின் மூன்றில் இருபங்குப் பெரும் பான்மை உறுப்பினர்களால் உறுதி செய்யப்பட்ட பிறகே செல்லு படியாகும். மற்ற நாடுகளோடு உடன்படிக்கை செய்து கொண்டு அவற்றின் அரசியல் அலுவல்களில் அமெரிக்காவை ஈடுபடுத்தக் கூடிய பெரும் அதிகாரத்தை குடியரசு தலைவர் ஒருவரிடம் மட்டும் ஒப்படைப்பது விரும்பத்தக்கதன்று என்ற எண்ணத்தோடுதான், உடன்படிக்கைகளுக்கான பேச்சு வார்த்தைகள் நடத்தக் கூடிய அதிகாரத்தைக் குடியரசு தலைவருக்கும், அவற்றை ஒப்புக் கொள்ளும் அதிகாரத்தைச் செனட் சபைக்கும் அரசியலமைப்பு அளிக்கிறது. செனட் சபையிலுள்ள வெளிநாட்டு விவகாரங்கள் குழு உடன்படிக்கைகளை ஆக்கவோ அழிக்கவோ வல்ல சக்தியுடை யதாய் இருக்கிறது; உயர் அதிகாரிகளின் நியமனங்களையும் சர்வதேச உடன்படிக்கைகளையும் சரிபார்த்து ஒப்புக்கொள்ளக் கூடிய அதிகாரம் செனட் சபைக்கு மட்டும் உண்டே ஒழிய பிரதி நிதிகள் சபைக்குக் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

நீதித்துறை

குடியரசு தலைவர், துணைத்தலைவர், சிவில் அதிகாரிகள் ஆகியோரை மன்பகை, கைக்கூலி அல்லது பெருங் குற்றங்கள்,

மேலும் தீய நடத்தைக்காக குற்றம்சாட்டிப் பதவியிலிருந்து நீக்கக்கூடிய அதிகாரம் காங்கிரசுக்கு உண்டு. அதிகாரி செய்த தாகக் கூறப்படும் குற்றங்கள் முதலில் பிரதிநிதிகள் சபையால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு செனட் சபை அக் குற்றச்சாட்டுகளை விசாரித்து, அவை மெய்யா, பொய்யா என முடிவு செய்யும். செனட் சபையின் முடிவு மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் முடிவாய் இருக்க வேண்டும். செனட் சபையால் விசாரிக்கப்படுகிறவர் குடியரசு தலைவராய் இருந்தால் தலைமை நீதிபதியும், வேறு எந்த அதிகாரியாய் இருந்தாலும் செனட் சபையின் தலைவரும், குற்றச் சாட்டு விசாரணைக்குத் தலைமை தாங்குவார்கள். குற்றச்சாட்டுகள் உண்மை எனச் செனட் தீர்மானிக்குமானால், அவ்வதிகாரி பதவியி லிருந்து விலக்கப்படுவதோடல்லாமல், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மதிப்போ, நம்பிக்கையோ, ஆதாயமோ உள்ள எந்த வேலையும் பார்க்கத் தகுதியற்றவராவார். இதுவரை அமெரிக் காவில் பன்னிரண்டு அதிகாரிகள்மீது குற்றச்சாட்டு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், அவர்களில் நான்கு பேரே தண்டிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. அரசியல மைப்பானது குற்றச்சாட்டு அதிகாரத்தின் முதல் கட்டத்தைப் பிரதிநிதிகள் சபைக்கும், மறு கட்டத்தைச் செனட் சபைக்கும் அளித்திருப்பதால் இரு சபைகளும் முயன்றால்தான் அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்க முடியும் என்பது தெளிவாகிறது.

அரசியலமைப்பைத் திருத்துதல்

அரசியலமைப்பைத் திருத்தக்கோரும் தீர்மானங்கள் காங்கிரசின் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களாலோ, அல்லது மூன்றில் இருபங்கு மாநிலங்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் காங்கிரசால் கூட்டப்படும் தேசிய அவை ஒன்றாலோ முதலில் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகே, மாநிலங்களின் ஒப்புதலைப் பெற அவற்றிற்கு அனுப்பப்படும். அரசியலமைப்புத் திருத்தத் தீர்மானங்களை முன்மொழிய இருவழிகள் கூறப்பட்டிருப்பினும், இதுவரை கொண்டு வரப்பட்டிருக்கும் இருபத்தைந்து திருத்தங் களும் காங்கிரசின் இரு சபைகளால் முன்மொழியப்பட்டவையே என்பது நினைவிலிருத்தத்தக்கது. அரசியலமைப்புத் திருத்தத் தீர்மானங்களை முன்மொழிவதற்குரிய தகுதி மற்ற நிறுவனங்களை விடக் காங்கிரசுக்கே அதிகம் என்பது திண்ணம்.

அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல்

குடியரசு தலைவரும் துணைத் தலைவரும் தேர்தல் குழுவினால் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என அரசியலமைப்புக் கூறுகிறது. குடியரசு தலைவர்

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை என்றால், வேட்பாளர்களில் அதிகப் படியான வாக்குகளைப் பெற்றிருக்கும் முதல் மூன்று பேரிலிருந்து பிரதிநிதிகள் சபை தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அதே போன்று துணைத்தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை என்றால், வேட்பாளர்களில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருக்கும் முதல் இரண்டு பேர்களிலிருந்து செனட் சபை துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்.

தொகுதியினருக்குத் தொண்டு

காங்கிரஸ் உறுப்பினர்கள் நாட்டின் பல பகுதிகளிலுள்ள தொகுதிகளிலிருந்து காங்கிரசுக்கு வருகின்றனர். ஒவ்வொரு உறுப்பினரும் அவருடைய தொகுதி மக்கள் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கும் நியாயமான உதவிகளைச் செய்யக் கடமைப் பட்டவர்; அதை மறப்பாரானால் மீண்டும் காங்கிரசுக்கு வரும் வாய்ப்பை அவர் இழக்க நேரிடும். தொகுதி மக்களுக்குக் கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், தொழிற்சாலைகள், போக்கு வரத்து வசதிகள், வேலை வாய்ப்புகள் போன்றவற்றை அரசாங்கத் திடமிருந்து பெறுவதில் உறுப்பினர் கண்ணும் கருத்துமாய் இருப்பதே இயல்பு. ஒவ்வொரு தொகுதி வாக்காளர்களும் அவர்கள் தொகுதியைச் சேர்ந்த வேட்பாளரையே உறுப் பினராகத் தேர்ந்தெடுக்க விரும்பும் காரணம், வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களை விட அவர்கள் பகுதியைச் சேர்ந்தவர்கள் அவர் களின் தேவையை முழுதும் உணர்ந்திருப்பார்கள் என்பதேயாம்.

விசாரணைகள் (Investigations)

காங்கிரஸ் சட்டமியற்றும் பொறுப்பைச் சரிவரச் செய் வதற்காகப் பல பொருள்களைப் பற்றிச் செய்திகள் சேகரிக்கும் அவசியம் ஏற்படுவதுண்டு; அதற்கென விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படும். இதுவரை எண்ணூறுக்கு மேற்பட்ட ஆய்வு விசாரணைகள் காங்கிரசால் நடத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்க நிருவாகத்தில் சில துறைகள் செம்மையாக இயங்கவில்லை என்று காங்கிரஸ் எண்ணினால், அது அந்தத் துறைகள் வேலைசெய்யும் விதத்தைப் பற்றியும் விசாரணை நடத்தி, குற்றங் குறைகளைப் போக்க வகை செய்யும். விசாரணையின்பொழுது சாட்சிகள் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவது இந்த விசாரணைகளைப் பரபரப்பூட்டக் கூடிய நிகழ்ச்சிகளாய் மாற்றுகிறது. உலகில் வேறு எந்த நாட்டிலும் பாராளுமன்றங்கள் இப்படி விசாரணை நடத்துவதாய் தெரியவில்லை. நிருவாகப் பொறுப்பிலிருப்போர்

அவர்கள் இதுபோன்ற விசாரணைகளுக்கு இலக்காகக் கூடாது என்று அஞ்சக்கூடிய அளவுக்கு, இவ்விசாரணை முறை அவர்களிடையே ஒருவிதமான அச்சத்தை ஏற்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது.

செனட் சபையின் சிறப்பான நிலை

அமெரிக்க அரசியலமைப்பை ஆக்கியோர், பிரதிநிதிகள் சபையைவிடச் செனட் சபையையே சிறந்த சபையாக ஆக்கியிருக்கின்றனர். மற்ற நாடுகளிலுள்ள மேல் சபைகளைவிட அமெரிக்காவின் மேல்சபையே அதிகமான அதிகாரமுள்ள மேல் சபையாய்க் கருதப்படுகிறது. அதன் தனிச் சிறப்புக்குரிய காரணங்களை இனி ஆராய்வோம். (1) பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் மேல் சபைகளைப் போலல்லாமல், செனட் சபை ஒரு சிறு சபையாய் அமைந்திருக்கிறது. பெரும் சபைகளை விடச் சிறிய சபைகள் விரைவாகவும் செம்மையாகவும் இயங்குவது இயல்பே. (2) செனட் சபை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது அதன் செல்வாக்கை அதிகரிக்கிறது. பிரிட்டனின் பிரபுக்கள் சபை, கனடாவின் செனட் சபை ஆகிய மேல் சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே இல்லாதிருப்பதால், அவை அந்நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்ச்சபைகளைப்போல முக்கியமானவையாய்க் கருதப்படுவதில்லை. (3) பிரதிநிதிகள் சபைக்கு இல்லாத சில சிறப்பான அதிகாரங்களை அரசியலமைப்புச் செனட் சபைக்கு மட்டும் வழங்கியிருப்பது அதன் சிறப்பை மேலும் உயர்த்துகிறது. உயர் அதிகாரிகளின் நியமனங்களும், சர்வதேச உடன்படிக்கைகளும் செனட் சபையால் உறுதி செய்யப்பட்டால்தான் செல்லுபடியாகும் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. (4) செனட் சபை மாநிலங்களின் சபை என அழைக்கப்படுகிறது. சிறிய மாநிலங்களைப் பெரிய மாநிலங்கள் நசுக்கிவிடாமல் பாதுகாப்பது செனட்டின் கடமை எனக் கருதப்படுகிறது. எனவே, செனட் அமெரிக்கக் கூட்டாட்சியின் தூண்களில் ஒன்ருக மதிக்கப்படுகிறது. (5) செனட்டர்களின் தகுதிகளும், பண்புகளும் பிரதிநிதிகளின் தகுதிகளையும், பண்புகளையும்விட உயர்ந்தது என்பதில் ஐயமில்லை. அரசியல்வாதிகள் பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகிப்பதைவிட, செனட் சபையில் அமர்வதையே அதிகம் விரும்புகின்றனர். 'நாவன்மை மிக்க வழக்கறிஞர்கள், புகழ்பெற்ற தளபதிகள், அறிவுமிக்க நீதிபதிகள், பெயர்பெற்ற அரசியல் வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டது செனட்' என்று நூறு ஆண்டுகளுக்கு முன்னரே டி டாக்வில் என்ற அரசியல் அறிஞர் குறிப்பிட்டது இன்றும் உண்மையே.

7. சட்டமியற்றும் முறை

(The Process of Law making)

[முன்னுரை—மசோதாக்களைத் தோற்றுவித்தல்—குழுக் கட்டம்—இரண்டாம் வாசிப்பு—மூன்றும் வாசிப்பு—சமரசக் குழுக்கள்—குடியரசு தலைவரின் ஒப்பம்—பிரிட்டிஷ்—அமெரிக்க முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள்.]

முன்னுரை

சட்டங்கள் இயற்றுதலைக் காங்கிரசின் முதன்மையான வேலையெனக் கருதலாம். தற்காலத்தில் ஆண்டொன்றுக்கு 10,000-க்கு மேற்பட்ட மசோதாக்கள் காங்கிரசில் தோற்றுவிக்கப்படுகின்றன என்றும், அவற்றில் 1000-க்கு மேற்பட்டவை சட்டங்களாகின்றன என்றும் கூறப்படுகிறது. அமைதியான காலங்களில் இப்படி என்றால் போர்க் காலங்களில் இதைவிடப் பன்மடங்கு மசோதாக்கள் காங்கிரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்பது தெளிவு. மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதாலும், வாழ்க்கை நவீன நாகரிகத்தின் சிக்கல் மிகுந்த வாழ்க்கையாய் மாறி வருவதாலும், அமெரிக்கா சர்வதேச நாடுகளின் விவகாரங்களில் பெரும் பொறுப்புகள் ஏற்பதாலும், காங்கிரஸ் மேலும் மேலும் புதுத்துறைகளில் சட்டங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

மசோதாக்களைத் தோற்றுவித்தல்

காங்கிரசில் தோன்றும் மசோதாக்கள் அதன் உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்பட்டாலும், அம்மசோதாக்கள் அனைத்தும் அவர்கள் எண்ணங்களில் உதயமானவை எனக் கூறுவதற்கில்லை. பெரும்பாலான மசோதாக்கள் வெளியார் தூண்டுதலின் பேரில்தான் தோற்றுவிக்கப்படுகின்றன. அரசாங்க நிருவாகத் துறைகளின் முயற்சியாலும் பல மசோதாக்கள் கொண்டுவரப் படுவதுண்டு. வர்த்தகக் கழகங்கள், தொழிற் சங்கங்கள்,

விவசாயிகள் நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் தூண்டுதல் பேரிலும் எண்ணற்ற மசோதாக்கள் காங்கிரஸ் முன்பாக வைக்கப் படுகின்றன. அரசியல் அமைப்புப்படி வரிவசூல் மசோதாக்கள் பிரதிநிதிகள் சபையில்தான் தோற்றுவிக்கப்பட வேண்டும்; மற்ற மசோதாக்கள், பிரதிநிதிகள் சபையிலோ, செனட் சபையிலோ, எங்கு வேண்டுமென்றாலும் தோற்றுவிக்கப்படலாம். மற்ற நாடுகள் போன்றே அமெரிக்காவிலும் பெரும்பாலான மசோதாக்கள் கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையில் தோன்று கின்றன. மசோதாக்களை முன்மொழிய விரும்பும் உறுப்பினர்கள் அவற்றை முறைப்படி வரைந்து கொள்ள, காங்கிரசின் சட்ட ஆலோசகர்களின் (Office of the Legislative Council) சேவையைப் பெறலாம்.

காங்கிரசில் மசோதாக்களைத் தோற்றுவிப்பது மிக எளிது. பிரதிநிதிகள் சபையில் மசோதா ஒன்றினைத் தோற்றுவிக்க விரும்பும் உறுப்பினர், மசோதாவின்மீது தன் பெயரை எழுதி, அதைச் சபையின் எழுத்தர் மேசையின்மேல் இருக்கும் பெட்டி யினுள் போடவேண்டும். மசோதாவின் தலைப்பு உடனடியாகக் காங்கிரஸ் இதழில் (Journal) பதிவு செய்யப்படும். இதுவே மசோதா சட்டமாகப் போகும் நீண்ட பாதையின் முதல் கட்ட மாகும். செனட் சபையில் மசோதாவைத் தோற்றுவிக்க விரும்பும் உறுப்பினர், அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தில், அதன் தலைப்பை அறிவித்தலே போதுமானது.

குழுக் கட்டம்

அடுத்தபடியாக, மசோதாக்கள் அச்சிடப்பட்டு, சம்பந்தப் பட்ட நிலைக் குழுக்களுக்கு அனுப்பப்படும். உதாரணமாக விவசாயம் பற்றிய மசோதா விவசாயக் குழுவின் பரிசீலனைக்கும், கல்வி பற்றிய மசோதா கல்விக் குழுவின் பரிசீலனைக்கும் விடப் படும். மசோதாக்கள் நிலைக் குழுக்களின் முன்பு இருக்கும் கட்டமே அவற்றின் தலைவிதியைத் தீர்மானிக்கும் கட்டமெனக் கருதப்படுகிறது, மசோதாக்களில் பெரும்பாலனவை நிலைக்குழுக் களில் மடிந்துபோவது வழக்கம். மசோதா தேவையா, தேவையில்லையா என்ற முடிவுக்கு வர, நிலைக்குழுக்கள் பலவழி களில் மக்கள் கருத்தைச் சேகரிக்கும். பொதுமக்கள், குழுக்கள் முன்வந்து மசோதாக்களைப் பற்றித் தங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துவார்கள். சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரி களும் மசோதாக்களைப் பற்றி அவர்கள் கருத்துக்களை எடுத் துரைக்க அழைக்கப்படுவார்கள். மேலும் ஒவ்வொரு குழுவிலும் இணைக்கப்பட்டிருக்கும் நிரந்தர ஊழியர்கள் காங்கிரஸ் நூல்

நிலையத்திலிருந்து வேண்டிய செய்திகளைச் சேகரித்துத் தருவார்கள். மசோதாவால் பாதிக்கப்பட இருக்கும் குடிமக்கள், குழு உறுப்பினர்களைத் தனியே சந்தித்து, அதன் நன்மை தீமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். நிலைக்குழு, இதுபோன்று பல வழிகளில் மசோதாவைப் பற்றிய கருத்துகளை ஒன்று திரட்டும். மசோதாவை நன்கு ஆராய்ந்த பிறகு, மசோதாவைச் சபை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றோ, அல்லது திருத்தங்களோடு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றோ, அல்லது அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்றோ சிபாரிசை செய்யும். பொதுவாக, தாய்ச்சபை நிலைக்குழுவின் சிபாரிசு ஏற்றுக் கொள்வது வழக்கம். மிகம் பெரும்பாலான மசோதாக்களை நிலைக் குழுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்பதும், எனவே அவற்றின்மீது எந்தவிதமான அறிக்கைகளும் அனுப்பப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. நிலைக்குழுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாது புறக்கணிக்கும் மசோதாக்களை அவற்றினின்றும் விடுவிப்பது என்பது எளிதன்று.

இரண்டாம் வாசிப்பு

நிலைக்குழுக்களின் ஆதரவைப் பெறும் மசோதாக்கள் குழுத் தலைவர்களால் சபைக்கு அனுப்பப்படும். மசோதா பண மசோதாவானால் சபையின் கூட்டரசு பட்டியலிலும் (Union Calendar), பொது மசோதாவானால் சபைப் பட்டியலிலும் (House Calendar), தனி மசோதாவானால் தனிப் பட்டியலிலும் (Private Calendar) பதிவு செய்து கொள்ளப்படும். மசோதாக்கள் குழுக்களிலிருந்து சபையை வந்தடையும் காலக்கிரமப்படியும், வெவ்வேறு மாதிரியான மசோதாக்கள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நாட்களிலும், சபையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மூன்று பட்டியல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான மசோதாக்களை சபை உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள சபையின் விதிகள் இடந்தருவதைப் பயன்படுத்திக் கொண்டு, சபை அவற்றின் பரிசீலனைக்கு முதலிடம் தருவது அறியத்தக்கது. நிலைக்குழுக்களால் சிபாரிசு செய்யப்படும் எல்லா மசோதாக்களையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள சபைக்குப் போதுமான நேரம் இருப்பதில்லையாதால், அவற்றில் பல மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவுமின்றிக் கைவிடப்படும்.

முக்கியமான மசோதாக்களைச் சபை முதன்முதலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது, அது சபையாக அமராமல், தன் விதிகளைச் சற்றுத் தளர்த்தி, நிலையான அவைத் தலைவருக்குப்

பதிலாகத் தாற்காலிகத் தலைவர் ஒருவரின் கீழ் நிறைமன்றக் குழுவாகக் கூடும். இரண்டாம் வாசிப்பு எனக் கூறப்படும் இக்கட்டத்தில், மசோதாவின் விவாதத்திற்கென ஒதுக்கப்படும் நேரம், பெரும்பான்மைக் கட்சியினராலும், சிறுபான்மைக் கட்சியினராலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். நிலைக்குழுவில் மசோதாவை ஆராய்ந்த அங்கத்தினர்கள் இப்பொழுது சபையில் மசோதாவிற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் உள்ள வாதப் பிரதிவாதங்களை எடுத்துரைப்பார்கள். பொதுவாக ஒவ்வொரு வரும் ஐந்து நிமிடங்கள் பேச அனுமதிக்கப்படுவார்கள். மசோதாவைப் பற்றிய பொதுவான விவாதத்திற்குப் பிறகு, அதன்மீது திருத்தங்கள் கொண்டு வர விரும்புவோர் அவற்றை முன்மொழியலாம். சபையில் மசோதாவின் ஒவ்வொரு பிரிவும் வாக்களிப்புக்கு விடப்பட்டு, அதை ஏற்பதா இல்லையா என்பது முடிவு செய்யப்படும்.

மூன்றும் வாசிப்பு

அடுத்ததாக, மசோதா திருத்தங்களை உள்ளடக்கிய புது உருவில் அச்சிடப்பட்டு மூன்றும் வாசிப்புக்குத் தயாராகும். இம்முறை மசோதாவின் தலைப்பு மட்டும் வாசிக்கப்படும். புதிய திருத்தங்களை இந்தக் கட்டத்தில் கொண்டு வர முடியாது. மசோதாவைச் சபை ஏற்கிறதா இல்லையா என்பது பற்றி இறுதியாக வாக்களிப்பு நடைபெறும். சபையால் ஏற்றுக் கொள்ளப்படும் மசோதா இனி கீழ்ச்சபையை விட்டு மேல்சபைக்குச் செல்லும். கீழ்ச்சபையில் மசோதா எந்தெந்தக் கட்டங்களைக் கடந்ததோ, அதுபோன்ற கட்டங்களை அது மேல்சபையிலும் கடக்க வேண்டும்.

சமரசக் குழுக்கள்

பிரநிதிகள் சபையால் செனட் சபைக்கு அனுப்பப்படும் மசோதாக்களைச் செனட் சபை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதன்மீது சில திருத்தங்களைக் கொண்டு வரலாம்; ஆனல் இத்திருத்தங்கள் மீண்டும் பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பப்பட்டு அதன் இசைவைப் பெறவேண்டும். சில சமயங்களில் மசோதாவைப் பற்றி இரு சபைகளுக்கிடையே கருத்துவேறுபாடு தோன்றுமாயின், அதைத் தீர்த்து வைக்க சமரசக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுவில் பொதுவாகக் கீழ்ச்சபையிலிருந்து மூன்று உறுப்பினர்களும், மேல்சபையிலிருந்து மூன்று உறுப்பினர்களும் அங்கத்தினர்களாய் இருப்பார்கள். கருத்து வேறுபாட்டுக்குரிய அம்சங்களை இவர்கள் சமரச உணர்வோடு ஆராய்ந்து, மசோதாவை இருசபை

களும் ஏற்றுக்கொள்வதற்கான வழிவகைகளைச் சிபாரிசு செய்வார்கள். இரு சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் மசோதாக்கள் குடியரசு தலைவரின் ஒப்பத்தைப் பெற அவருக்கு அனுப்பப்படும்.

குடியரசு தலைவரின் ஒப்பம்

குடியரசு தலைவர் பெரும்பான்மையான மசோதாக்களை ஏற்றுக்கொள்வது வழக்கம். சில சமயங்களில் மறுப்பதுமுண்டு; அவ்வாறு மறுக்கப்படும் மசோதாக்களைக் காங்கிரஸ் மீண்டும் பரிசீலனை செய்து, அதன் இரு சபைகளிலும் மூன்றில் இருபங்குப் பெரும்பான்மையால் ஒப்புக்கொண்டால், குடியரசு தலைவரின் இசைவு இல்லாமலே அவை சட்டங்களாகும்.

பிரிட்டிஷ்—அமெரிக்க முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பின்பற்றப்படும் சட்டமியற்றும் முறையே உலகில் பல நாடுகளின் பாராளுமன்றங்களால் பின்பற்றப்படுகின்றன. அமெரிக்காவில் பின்பற்றப்படும் முறையும் மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதற்கு பிரிட்டிஷ் முறை போன்றே தோன்றும்; உதாரணமாக, இரு நாடுகளிலும் மசோதாக்கள் மும்முறை வாசிக்கப்படுதலையும், குழுக்களால் ஆராயப்படுதலையும் கூறலாம். இரு நாடுகளிலும் பின்பற்றப்படும் முறைகளை மேலும் கவனமாக ஆராய்வோமானுல் நிறைய வேறுபாடுகள் இருப்பது தெரியவரும். முதலாவதாக, பிரிட்டனில் பெரும்பாலான மசோதாக்கள் அரசாங்க உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்படுகின்றன; சாதாரண உறுப்பினர்களுக்குள்ள வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. ஆனுல் அமெரிக்கக் காங்கிரசில் அரசாங்க உறுப்பினர்கள் என்ற இனமே இல்லாததால், அங்கே தோற்றுவிக்கப்படும் மசோதாக்கள் அனைத்தும் சாதாரண உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. இரண்டாவதாக, பிரிட்டனில் பண மசோதாக்களை முன்மொழியும் உரிமை அரசாங்கத் தரப்பு உறுப்பினர்களுக்கு மட்டுமே உண்டு; ஆனுல் அமெரிக்காவில் மசோதாக்களில் பண மசோதாக்கள், சாதாரண மசோதாக்கள் என்ற வேறுபாடு இன்றி எல்லாமே சாதாரண உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. மூன்ருவதாக, பிரிட்டனில் முதலில் மசோதாக்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகே நிலைக்குழுக்களின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றன. நிலைக்குழுக்சள் அவை ஏற்கத் தக்கவையா அல்லவா என்ற முடிவைச் சபைக்குத் தெரிவித்தாக வேண்டும். ஆனுல் அமெரிக்காவில் எடுத்த எடுப்பில் மசோதாக்கள்

நேராகக் குழுக்களுக்கே அனுப்பப்படுகின்றன. அவை குழுக்களால் சிபாரிசு செய்யப்பட்டால்தான் சபையின் பரிசீலனைக்கு வரும். பல மசோதாக்கள் குழுக்களால் கவனிக்கப்படாமலே கைவிடப் படுகின்றன. பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழுக்களைவிட அமெரிக்கப் பாராளுமன்றக் குழுக்கள் அதிக வல்லமையுடயவை என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. நான்காவதாக, பிரிட்டனில் பொதுமக்கள் சபை மட்டுமே பிரபுக்கள் சபையின் சம்மதம் இல்லாமல் மசோதாக்களை நிறைவேற்ற முடியும். ஆனால் அமெரிக்காவில் இரு சபைகளின் இசைவைப் பெறாமல் சட்டமியற்றுவது என்பது இயலாத காரியம். சட்டமியற்றும் அதிகாரத்தைப் பொறுத்தவரை அமெரிக்காவில் இரு சபைகளுக்குமிடையே உயர்வு தாழ்வு இல்லையெனக் கூறலாம். ஐந்தாவதாக, பிரிட்டனில் மசோதாக்களுக்கு அரசியாரின் இசைவு மறுக்கப்படுவதில்லை. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் எல்லா மசோதாக்களுக்கும் அரசியார் தன் இசைவைத் தெரிவிப்பதே மரபு. ஆனால் அமெரிக்காவில் குடியரசு தலைவரின் இணக்கத்தைப் பெறுவது அவ்வளவு எளிதன்று. இதுவரை நூற்றுக்கணக்கான மசோதாக்கள் தலைவரின் மறுப்பாணைக்கு இலக்காகிச் சட்டங்களாக முடியாமல் கைவிடப்பட்டிருக்கின்றன.

8. அரசுபணித் துறை

(The Civil Service)

[முன்னுரை — அரசுபணிக் கழகம் — ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை—ஊழியர்கள் செய்யக்கூடாத செயல்கள்—அரசு அலுவல் துறையைப்பற்றி சில செய்திகள்.]

முன்னுரை

'அருங்கலம் எல்லாம் ஆள்வோர்க்குரிய' என்னும் கொள்கைப்படி வெற்றிபெற்ற கட்சியின் ஆதரவாளர்களுக்கு அரசாங்கப்பதவிகளை வழங்குவதே நூறு ஆண்டுகட்கு முன்பு வரை அமெரிக்காவில் வழக்கமாய் இருந்தது. எந்தக்கட்சி ஆளும் கட்சியாய்த் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ அந்தக் கட்சியைச் சேர்ந்தோரே அரசாங்கப் பதவிகள் வகிக்கும் உரிமையுடையவர் என்ற கொள்கை அமெரிக்காவில் 1828-க்கும் 1865-க்கும் இடைப்பட்ட காலத்தில் உச்ச கட்டத்தை அடைந்தது. 1829ஆம் ஆண்டில் ஆண்டுரு ஜாக்சன் இக்கொள்கைக்கு உரமிட்டு வளர்த்தாராம். ஆளும் கட்சி மாற மாற, அரசாங்க ஊழியர்களும் மாற வேண்டியிருந்த முறையில் பெருங் குறைபாடுகள் இருந்ததை உணர்ந்த மக்கள், அதை மாற்றி அமைக்க 'தேசிய அரசு அலுவல் துறைச் சீர்திருத்த இயக்கம்' (National Civil Service Reform League) ஒன்றை ஆரம்பித்தனர். 1881-ல் குடியரசு தலைவர் கேர்பீல்டு (Garfield), வேலை கேட்டு ஏமாற்றமடைந்த வெறியன் ஒருவனால் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி, வேலை வழங்கும் முறையில் புரட்சிகரமான மாறுதல்களைத் தோற்றுவித்தது.

அரசுபணிக் கழகம்

1883ஆம் ஆண்டில் காங்கிரஸ் பெண்டில்டன் சட்டத்தை (Pendleton Act) இயற்றி, அரசாங்க வேலைகள் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுவதற்கு வழிசெய்தது. இச்சட்டம்

'அமெரிக்க அரசு அலுவல்துறையின் உரிமைப் பட்டயம்' (Magna Charta of American Civil Service) என இன்றும் பாராட்டப்படுகிறது. திறமையின் அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 1880-ல் பத்து சதவிகிதமாக இருந்து இன்று எண்பத்தைந்து சதவீதமாக வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய அமெரிக்கத் தேசிய அரசில் ஊழியர்களாய்ப் பணியாற்றும் இருபத்தைந்து லட்சத்துக்கு மேற்பட்ட ஊழியர்களில் மிகப் பெரும்பான்மையோர் திறமையின் அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டோரே என்ற செய்தி, அரசாங்கம் சீராகவும், செம்மையாகவும், நேர்மையாகவும் நியாயமாகவும் இயங்குகிறது என்பதை அறிவுறுத்துகிறது. பொதுப்பணிக் கழகம் என்னும் மூன்றுபேர் கொண்ட சிறிய குழு ஒன்று அரசு பணிகளுக்கு வேண்டிய ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த மூன்று உறுப்பினர்களும் இரு கட்சிகளிளிருந்தும் குடியரசு தலைவரால் செனட் சபையின் சம்மதத்தோடு நியமிக்கப்படுகின்றனர். தேசிய அரசிலுள்ள வேலை வாய்ப்புகளை விளம்பரப் படுத்துவதும், அவற்றிற்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வுகள் நடத்துவதும், வேலை காலியுள்ள துறைகளுக்குத் தகுந்தவர்களின் பெயர்களைச் சிபாரிசு செய்வதும், பதவிகளை, வேலை ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப் படுத்துவதும், பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவற்றிற்கான விதிகளைப் பிறப்பிப்பதும், ஊழியர்களின் வேலை பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வைத்திருப்பதும் பொதுப்பணிக் கழகத்தின் பொறுப்புகளில் சிலவாம்.

ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை

தேசிய அரசின் ஊழியத்தில் சேர ஆண்டுதோறும் நாட்டின் பல பகுதிகளில் பொதுப்பணிக் கழகம் தேர்வுகளை நடத்தும். தேர்வுகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பொதுத் தேர்வாக அமையாமல், அந்தந்தத் துறையின் தேவைகளைப் பொறுத்தே அமையும். பிரிட்டனில் அரசாங்கப் பணியில் சேர விரும்பும் அபேட்சகர்கள் அனைவரும் பொதுவான ஒரு தேர்வையே எழுதுவதும், அங்குத் தனித் துறையைப்பற்றிய அறிவைவிடப் பொது அறிவே முக்கியமாக விரும்பப்படுகிறது என்பதும், அமெரிக்க முறையினின்றும் அது மாறுபட்டது என்பதை அறிவுறுத்துகிறது. பல பதவிகளுக்கு எழுத்து மூலமான தேர்வோடு, நேர்முகப் பேட்டியும் நடைபெறும். தேர்வுகளில் எழுபது சதவிகிதம் மதிப்பெண்கள் பெறுவோரே வெற்றி பெற்றோராய்க் கருதப்படுவர். படைத் துறைகளிலிருந்து ஓய்வு பெற்றோர் ஐந்து மதிப்பெண்களும், போரில் முடமாக்கப்பட்ட

படை வீரர்கள் அல்லது அவர்களது மனைவியர் பத்து மதிப்பெண் களும் கூடுதலாக வழங்கப்படுவார்கள். ஒவ்வொரு பதவிக்கும் பொதுப்பணிக் கழகம் மூன்று பெயர்களைச் சிபாரிசு செய்யும்; சம்பந்தப்பட்ட துறைத் தலைவர் அந்த மூவரிலிருந்து ஒருவரை வேலைக்கு அமர்த்துவார். பொதுப்பணிக் கழகத்திற்குச் சிபாரிசு செய்யக்கூடிய உரிமை மட்டும் உண்டே அல்லாமல், வேலைக்கு அமர்த்தக் கூடிய உரிமை இல்லை என்பது அறியத்தக்கது. வேலையில் சேருமுன் ஒவ்வொரு ஊழியரும் தான் அரசிய லமைப்பைக் காத்து ஆதரிப்பதாகவும், தான் ஒரு கம்யூனிஸ்ட்டு அல்லது பாசிஸ்ட்டு (Fascist) அல்ல என்றும், வன்முறைச் செயல்களால் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலும் எந்த அமைப்பிலும் உறுப்பினர் அல்ல என்றும், அரசாங்கத்திற்கு எதிராக வேலைநிறுத்தம் செய்வதில்லை என்றும், வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைக்கோரும் எந்த இயக்கத்திலும் சேருவதில்லை என்றும் உறுதிமொழி கூறவேண்டும்.

கூட்டாட்சி விசாரணைக் குழு (Federal Bureau of Investigation), அயலரசுபணித் துறை (Foreign Service), அணுச்சக்திக் குழு (Atomic Energy Commission), மத்திய வேவுத் தகவல் அலுவலகம் (Central Intelligence Agency) போன்ற துறைகள் பொதுப்பணிக் கழகத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டு இயங்குகின்றன. தனித் தகுதிகளும் பண்புகளும் உடையோரே இத்துறைக்கு நியமிக்கப்படுகின்றனர். அரசியல் உத்தியோகங்கள் (political appointments) என்று சொல்லக் கூடியவை இன்னும் சில அமெரிக்காவில் இருக்கின்றன. 60,000-க்கு மேற்பட்ட பதவிகளை அரசியல் தலைவர்கள் தங்கள் கட்சிக்குச் சிறந்த தொண்டு செய்தவர்களுக்கு வழங்கக்கூடிய நிலையில் இருக் கின்றனர்.

அமெரிக்காவில் அரசாங்க ஊழியர்களை மேசையடி ஊழியர்கள் (white collar workers) என்றும், உடலுழைப்பு ஊழியர்கள் (blue collar workers) என்றும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். முதல்வகைப் பணிகள் பதினெட்டுப் படிகளாகவும், இரண்டாம் வகைப்பணிகள் பத்துப் படிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்க ஊழியர்களில் பத்தில் ஒருவர் தலைநகரான கொலம்பியா மாவட்டத்தில் (District of Columbia) வேலை பார்க்கின்றனர் என்ற செய்தி, அரசாங்க அலுவலகங்களில் பல அங்கே குவிந்திருப்பதை உணர்த்துகிறது. ஊழியர்கள் அமெரிக்காவின் 50 மாநிலங்களிலிருந்தும் அதனதன் மக்கள் தொகையின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு தேர்ந்

தெடுக்கப்படுகின்றனர். மற்ற மேலை நாடுகளைப்போல அமெரிக்காவிலும் ஏராளமான பெண்கள் வேலை பார்க்கின்றனர்; ஊழியர்களில் நால்வரில் ஒருவர் பெண்ணும், பிரிட்டனில் அரசாங்க வேலை பார்ப்பது மதிப்பிற்குரிய செயலாய்க் கருதப் படுகிறது. ஆனால் அமெரிக்காவில் அறிவும் திறமையும் மிக்க மக்கள் தனியார் துறைகளில் வேலை பார்ப்பதையே விரும்புகின்றனர். ஊதியமும், பதவியில் உயர்கின்ற வாய்ப்பும் பொதுத் துறையைவிடத் தனியார் துறையில் அதிகமிருப்பதால், தனியார் துறை விரும்பப்படுவது இயற்கையே.

மற்ற நாடுகளைவிட அமெரிக்காவில் அரசாங்க ஊழியர்கள் நல்ல ஊதியம் பெறுகின்றனர். உயர்ந்த பதவிகளிலிருப்போர் தங்கள் சம்பள விகிதத்தைப் பற்றிக் குறைபட்டுக் கொண்டாலும், சாதாரணப் பதவிகளிலிருப்போருக்கு நல்ல ஊதியம் தரப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. சாதாரணப் பதவிகளில் சேர்கின்றவர்கள் உயர்ந்த பதவிகளுக்கு உயர வாய்ப்புகள் உண்டு. ஊழியர்கள் ஓய்வு பெறுதல் குறித்துத் திட்டவட்டமான விதிகள் 1920ஆம் ஆண்டில் புகுத்தப்பட்டன. அறுபத்தைந்தாவது வயதில் விரும்புகிறவர்கள் வேலையிலிருந்து விலகிக் கொள்ளலாம்; எழுபது வயதிற்குமேல் வேலை பார்க்க யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. வேலையிலிருந்து ஓய்வு பெறுகின்றவர்களுக்கு, அவர்கள் பதவியிலிருந்த காலத்தையும் கடைசியாகப் பெற்ற சம்பளத்தையும் பொறுத்து ஓய்வு ஊதியம் வழங்கப் படுகிறது.

ஊழியர்கள் செய்யக்கூடாத செயல்கள்

திறமையற்ற ஊழியர்களையும், ஒழுக்கக் குறைவான ஊழியர்களையும், துறைத் தலைவர்கள் பல வழிகளில் தண்டிக்கலாம். அவர்களைத் தாற்காலிகமாக விலக்கி வைக்கவோ, நிரந்தரமாக நீக்கவோ துறைத் தலைவர்களுக்கு அதிகாரமுண்டு. 1939ஆம் ஆண்டின் ஹேட்ச் சட்டம் (Hatch Act) அரசு ஊழியர்கள் அரசியல் வேலைகளில் ஈடுபடுவதைத் தடைசெய்கிறது. அவர்களுக்குத் தேர்தல்களில் வாக்களிக்கவும், சொந்தப் பொறுப்பில் கட்சிகளுக்குப் பணம் கொடுக்கவும், கட்சிக் கூட்டங்களுக்குச் செல்லவும் உரிமை உண்டு எனினும், தேர்தலுக்குப் போட்டியிடவும், கட்சிப் பிரசாரம் செய்யவும், நிதி வசூலிக்கவும் உரிமை இல்லை. கம்யூனிஸ்ட்டுகளின் செயல்களிலிருந்து, அரசாங்கம் தன்னைக்காத்துக் கொள்ளும் நோக்கத்தோடு அரசாங்க ஊழியர்களின் நடவடிக்கைகளைத் தீவிரமாய் கவனிக்கிறது. 1947ஆம்

ஆண்டில் தலைவர் ட்ரூமனல் (Truman) பிறக்கப்பட்ட ஆணை, நாசவேலை, வேவு பார்த்தல், இராச துரோகம், அமைதி குலைப்பு, புரட்சி அல்லது வன்முறைச் செயலை ஆதரித்தல், இரகசிய அரசாங்க ஏடுகளை அயல் நாட்டவருக்குக் காட்டுதல் ஆகிய செயல்கள் அரசைக் கவிழ்க்க முயலும் செயல்கள் என அறிவித்ததன் பயனாக, ஐயப்பாட்டிற்குரிய பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். 1953ஆம் ஆண்டில் ஐசன்ஹோவர் பிறபித்த ஆணை ஒன்றின் அடிப்படையில், தேசியப் பாதுகாப்புக்குப் பங்கம் விளைப்போராகக் கருதப்பட்டோர் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டனர். அரசாங்க ஊழியர்கள் விசுவாச முடையோரா இல்லையா என்று அறிந்து, அவர்கள் வேலை பார்க்கலாமா கூடாதா என்று முடிவு கூறும் உரிமை பொதுப்பணிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

அரசு அலுவல்துறையைப் பற்றிச் சில செய்திகள்

வாஷிங்டனிலுள்ள புருக்கிங்ஸ் ஆராய்ச்சிக் கழகம் (The Brookings Institution) அமெரிக்க அரசு பணித் துறையைப் பற்றிச் சில பயனுள்ள செய்திகளை வெளியிட்டிருக்கிறது. (1) 1801ஆம் ஆண்டில் 2000 அமெரிக்கர்களில் ஒருவரே தேசிய அரசின் ஊழியராய் இருந்தார்; ஆனால் இன்றோ 80 பேரில் ஒருவர் தேசிய அரசின் ஊழியராய் இருக்கின்றார். (2) ஆரம்பக் காலத்தில் சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் உயர் குடியினராய் இருந்தோரே அரசு பணிகளில் பெருவாரியாய் சேர்ந்தனர். ஆனால் இன்றோ அமெரிக்கச் சமுதாயத்தின் பல்வேறு படிகளைச் சேர்ந்த மக்களையும் அங்கே காண்கிறோம். (3) பதினெட்டாம் நூற்றாண்டில் பொது ஆட்சி என்பது எளிமையான செயலாய்க் கருதப்பட்டது. நாடு தொழில் மயமாக்கப்பட்டு விஞ்ஞான ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டில், விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவும் பயிற்சியும் உடையோரின் சேவை மிகத் தேவைப் படுகிறது. இன்று அரசாங்க ஊழியர்களில் பதினான்கு பேரில் ஒருவர் அறிவியல் பொறியியல் தொடர்புடைய வேலை பார்ப்பவராய் இருக்கிறார். (4) போர்க் காலங்களில்தான் பொதுவாக ஏராளமான பேர் படைத் துறையில் வேலை பார்ப்பது வழக்கம். ஆனால் இன்றைய அமெரிக்காவில் சிவில் துறையில் வேலை பார்ப்போரின் எண்ணிக்கையைவிடப் போர்த்துறையில் வேலை பார்ப்போரின் எண்ணிக்கை அதிகமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. (5) 1920ஆம் ஆண்டிற்குப் பிறகு ஊழியர்களின்

வசதிகள் அதிகரித்திருக்கின்றன. ஓய்வுகால ஊதியம், விடுமுறை நாட்கள், வேலையில் பயிற்சி போன்ற முன்னேற்றங்களெல்லாம் கடந்த ஐம்பது ஆண்டுகளின் சாதனைகள் எனக் கருதப்படுகிறது. (6) தேசிய ஊழியர்கள் என்ற பதத்தைக் கேட்டவுடன் உங்கள் மனத்தில் என்ன தோன்றுகிறது என்று பல அமெரிக்கர்களைக் கேட்டதற்கு 'அவர்கள் நல்ல பண்புள்ளவர்கள் என்ற எண்ணமே எங்களுக்கு முதலில் தோன்றுகிறது' என்று விடை அளித்தனராம். அமெரிக்க அரசு அலுவல்துறையின் நல்ல பெயருக்கு இதைவிட நல்லசான்று வேறு என்ன வேண்டும்?

9. தலைமை நீதிமன்றம்

(The Supreme Court)

[முன்னுரை—மன்றத்தின் அமைப்பு—விசாரிக்கப்படும் வழக்குகள் —நீதி மறு ஆய்வு—ஜான் மார்ஷல்—ரோஜர் டானி—தொக்கி நிற்கும் அதிகாரங்கள்—நீதிபதிகளின் சுதந்திரம்.]

முன்னுரை

தேசிய அரசியலமைப்பிற்கு விளக்கம் கூறவும், மாநிலங்களுக்கிடையே எழும் பூசல்களைத் தீர்த்துவைக்கவும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கவும் வலுவுள்ள தலைமை நீதிமன்றம் ஒன்று தேவை என்ற உணர்வின் அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு தலைமை நீதிமன்றம் நிறுவப்பட்டிருக்கிறது. தேசிய அரசின் சார்பில் இன்று அங்கே 87 மாவட்ட நீதிமன்றங்களும், 11 மேல் முறையீட்டு நீதிமன்றங்களும், ஒரு தலைமை நீதிமன்றமும் இயங்கினாலும், இவற்றில் தலைமை நீதிமன்றம் மட்டுமே அரசியலமைப்பால் நிறுவப்பட்டது என்பதும், மற்ற நீதிமன்றங்கள் அனைத்தும் காங்கிரசால் நிறுவப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. 1789ஆம் ஆண்டின் அரசியலமைப்பு, தலைமை நீதிமன்றத்தை நிறுவியதோடு நின்று, அதன் அமைப்பைப்பற்றி விவரிக்காமல் விட்டுவிட்டது. காங்கிரசின் சட்டங்களே நீதிமன்றங்கள் இயங்கும் முறையை ஒழுங்குபடுத்துகின்றன.

மன்றத்தின் அமைப்பு

அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் ஒன்பது துணை நீதிபதிகளையும் கொண்டு இயங்குகிறது. நீதிபதிகள் அனைவரும் குடியரசு தலைவரால் செனட் சபையின் சம்மதத்தோடு நியமிக்கப்படுகின்றனர். இந்திய அரசியலமைப்பு நீதிபதிகளின் தகுதிகளை நிர்ணயிக்கின்ற மாதிரி அமெரிக்க அரசிய

லமைப்பு நிர்ணயிக்கவில்லை; எனினும் இதுவரை தலைமை நீதிமன்றத்தில் நீதிபதிகளாய் வேலை பார்த்தவர்கள் சட்டம் படித்தவர்கள் என்பதும், வழக்கறிஞர்களாய் தொழில் செய்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நீதிபதிகளாய் நியமிக்கப்படுவோருக்குத் தங்கள் வாழ்நாள் முழுதும் நீதிபதிகளாய் பதவியில் இருக்கும் உரிமை உண்டு. தலைமை நீதிபதி ஆண்டொன்றுக்கு 35,500 டாலர்களும், மற்ற நீதிபதி ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 30,000 டாலர்களும் ஊதியம் பெறுகின்றனர். தலைமை நீதிமன்றத்தின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதும், எந்தெந்தத் தீர்ப்புகளை எந்தெந்த நீதிபதி எழுதுவது என்று முடிவு செய்வதும், பல தீர்ப்புகளைத்தானே எழுதுவதும், நீதிமன்றத்தின் விதிகளை அமைக்கக் குழுக்களை நியமிப்பதும், புது குடியரசு தலைவருக்குப் பதவிப் பிரமாணம் செய்விப்பதும், அவர் குற்றம் சாட்டப்பட்டுச் செனட் சபையில் விசாரிக்கப்படும் பொழுது விசாரணைக்குத் தலைமை தாங்குவதும், தலைமை நீதிபதியின் பொறுப்புகளில் சிலவாம். தலைமை நீதிபதி, குடியரசு தலைவருக்குச் சமமானவராகக் கருதப்படுவதிலிருந்து அவருடைய பெருமையை ஓரளவு உணரலாம். ஆண்டொன்றுக்குப் பல்லாயிரக்கணக்கான வழக்குகள் தலைமை நீதிமன்றத்தின் கவனத்துக்குப் கொண்டுவரப்பட்டாலும், அவற்றில் ஏறத்தாழ 1000 வழக்குகளே விசாரிக்கப்படுகின்றன. முதன் முதலாக 1790-ல் ஜான் ஜே (John Jay) என்பவரைத் தலைமை நீதிபதியாய்க் கொண்டு தலைமை நீதிமன்றம் கூடியபொழுது மன்றத்தின் விசாரணைக்கு ஒரு வழக்குக் கூட வரவில்லை என்பது அறியத்தக்கது.

தலைமை நீதிமன்றம் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்திலிருந்து மே மாதம்வரை எட்டு மாதங்கள் வழக்குகளை விசாரிக்கும்; கோடைக்காலம் அதற்கு விடுமுறைக் காலமாகும். பொதுவாக வழக்கறிஞர்கள் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். வழக்கினைப் பற்றிய முக்கிய அம்சங்கள் அடங்கிய சிறிய பேச்சுகளையே நாம் அங்கே கேட்க முடியும். வழக்குகளின் தீர்ப்புகள் பொதுவாகத் திங்கட்கிழமைகளில் படிக்கப்படுவது வழக்கம். ஒவ்வொரு வழக்கையும் குறைந்தது ஆறு நீதிபதிகளைக்கொண்ட நீதிமன்றம் விசாரிக்கும். நீதிபதிகளில் பெரும்பான்மையோரால் எடுக்கப்படும் முடிவே நீதிமன்றத்தின் முடிவாகும். நீதிமன்றத் தீர்ப்புகள் அனைத்தும் 'ஐக்கிய நாடுகளின் அறிக்கைகள்' (United States Reports) என்ற பெயரில் வெளிவரும் புத்தகங்களில் வெளியிடப்படும். அமெரிக்காவில் கூட்டாட்சி நீதிமன்றங்களும், மாநில அரசுகளின்

நீதிமன்றங்களும் அருகருகே இயங்குகின்றன. தேசியச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் கூட்டாட்சி நீதிமன்றங்களிலும், மாநிலச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் அந்தந்த மாநில நீதிமன்றங்களிலும் விசாரிக்கப்படுகின்றன. கூட்டாட்சி நீதிமன்றங்களில் தலைமை நீதிமன்றமே இறுதியான நீதிமன்றமென்பது நினைவில் இருத்தத்தக்கது.

நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் வழக்குகள்

அரசியலமைப்பில் மூன்ருவது விதியின் இரண்டாவது பிரிவு கூட்டாட்சி நீதிமன்றங்களின் அதிகார எல்லையைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வரையறுக்கிறது. (1) தேசிய அரசியலமைப்பு, சட்டங்கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றின் கீழ் எழும் வழக்குகளைக் கூட்டாட்சி நீதிமன்றங்கள் விசாரித்துத் தீர்ப்பளிக்கும். அரசியலமைப்பாலோ, சட்டங்களாலோ, உடன்படிக்கைகளாலோ ஒருவருக்கு அளிக்கப்படும் உரிமைகள் பாதிக்கப்படுமாளுல், அவற்றைப் பெற விரும்புவோர் கூட்டாட்சி நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம். (2) வெளிநாட்டுத் தூதர்கள், மற்றுமிருக்கும் தூதரக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய வழக்குகளையும் கூட்டாட்சி நீதிமன்றங்கள் விசாரிக்கலாம். ஆனுல் சர்வதேச சட்டப்படி (International Law) ஒரு நாட்டின் தூதர்கள் மீது மற்ரெரு நாடு வழக்குத் தொடர்வது முறையற்ற செயலாய்க் கருதப்படுவதால், நீதிமன்றங்கள் தூதர்களைப் பற்றிய வழக்குகளை விசாரிக்கும் சூழ்நிலை எழுவதில்லை. தூதர்கள் விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அமெரிக்கா எண்ணிஞல், அவர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளும்படி அவர்களின் அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்வதே பொதுவான வழக்கம். (3) கடல் துறை வழக்குகளை (Admiralty and maritime cases) விசாரிக்கக்கூடிய அதிகாரமும் கூட்டாட்சி நீதிமன்றங்களுக்கு உண்டு. அமெரிக்கக் கடல் வழிகளில் பயணம் செல்லும் கப்பல்கள் தொடர்புடைய வழக்குகள் அனைத்தும் கூட்டாட்சி நீதிமன்றங்களில் தொடரப்படும். சரக்குக் கட்டணங்கள், மாலுமிகள் ஊதியம், நடுக்கடலில் கப்பல்கள் மோதிக் கொள்ளுதல் ஆகியவற்றைப் பற்றிய வழக்குகளை விசாரிக்க கூட்டாட்சி நீதிமன்றங்களே தகுந்த நீதிமன்றங்களாய்க் கருதப்படுகின்றன. (4) அமெரிக்க ஐக்கிய நாடுகளை வாதியாகவோ பிரதிவாதியாகவோ கொண்ட வழக்குகளையும், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையே எழும் வழக்குகளையும் கூட்டாட்சி நீதிமன்றங்களே விசாரிக்கும். ஒரு மாநிலத்தின் குடிமகன் வேறொரு மாநிலத்தின்மீது கூட்டாட்சி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என அரசியலமைப்பு

ஆரம்பக்காலத்தில் அனுமதித்ததை அதன் பதினோராவது திருத்தம் ரத்து செய்தது. தென் கெரோலினாவைச் (South Carolina) சேர்ந்த குடிமகன் ஒருவன் ஜார்ஜியா (Georgia) மீது வழக்குத் தொடர்ந்ததை, ஜார்ஜியா எதிர்த்ததன் பயனாகப் பதினோராவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இப்பொழு துள்ள முறைப்படி, குடிமகன் ஒருவன் மாநிலம் ஒன்றின்மீது வழக்குத் தொடர விரும்பினால், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் இசைவைப் பெற்ற பிறகு அதன் நீதிமன்றங்களில்தான் வழக்குத் தொடர வேண்டும். (5) அமெரிக்கக் குடிமக்களுக்கும் வெளிநாட்டவர்களுக்குமிடையே எழும் வழக்குகளையும் ஒரு மாநிலத்தின் குடிமகனுக்கும் வேறொரு மாநிலத்தின் குடிமகனுக்கு மிடையே எழும் வழக்குகளையும் கூட்டாட்சி நீதிமன்றங்களே விசாரிக்க முடியும்.

தலைமை நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் வழக்குகளில், தூதர்களைப் பற்றிய வழக்குகளும், கூட்டரசோ அல்லது மாநிலம் ஒன்றோ வாதியாகவோ பிரதிவாதியாகவோ இருக்கும் வழக்கு களும் எடுத்த எடுப்பில் தலைமை நீதிமன்றத்தால் விசாரிக்கப்படு கின்றன. மற்ற வழக்குகள் அனைத்தும் கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து முறையிட்டுக் கொள்ளப்படும் வழக்குகளே. தலைமை நீதிமன்றம் சட்டங்கள் மீறப்படுவதால் எழும் வழக்குகளை விசாரிக்குமே அல்லாது அரசியல் பிரச்சினைகளை ஆராயாது. உதாரணமாக ஒரு மாநிலத்தில் இயங்கும் அரசாங்கம், குடியரசு அரசாங்கமா இல்லையா என்பதுபற்றித் தலைமை நீதிமன்றம் எந்தக் கருத்தும் தெரிவிக்காது. அறிவுரை (Advisory Opinion) கூறும் வழக்கமும் தலைமை நீதிமன்றத்திற்குக் கிடையாது. 1793ஆம் ஆண்டில் வாஷிங்டன் இருபத்தொன்பது பிரச்சினைகளை நீதிமன்றத்திற்கு அனுப்பி அவைகளைப் பற்றி அதன் அறிவுரையைக் கேட்டபொழுது, நீதிமன்றமானது உண்மையான வழக்குகளை மட்டும் அது விசாரித்துத் தீர்ப்புக் கூறுமே ஒழிய வேறு எந்த அறிவுரையும் வழங்காது என அறிவித்தது.

நீதி மறு ஆய்வு

அரசியலமைப்பு நாட்டின் அடிப்படையான சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுவதால் அதற்கு எதிராக யாரும் நடந்து கொள்ளாமல் பார்த்துக்கொள்வது தலைமை நீதிமன்றத்தின் கடமை என எண்ணப்படுகிறது. அரசியலமைப்பால் வகுக்கப் பட்டிருக்கும் எல்லைகளுக்குள் எல்லா நிறுவனங்களும் இயங்குகின் றனவா இல்லையா என்று தலைமை நீதிமன்றம் கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொள்ளும் காரணத்தால் அம்மன்றத்தை 'அரசியலமைப்பின் காவலர்' எனக் கருதுகிறோம். தலைமை

நீதிமன்றமானது தேசியக் காங்கிரஸ், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்ருல் இயற்றப்படும் சட்டங்களை அரசியலமைப்புக்கு உட்பட்டவையா அல்லது முரணுனவையா என ஆராய்ந்து, முரணுனவையாய்த் தோன்றும் சட்டங்களைச் செல்லத் தக்கவை அல்ல என அறிவிக்கும் செயலையே நீதி மறு ஆய்வு என அழைக்கிருேம். இவ்வாறு தேசிய, மாநில அரசுகளின் சட்டங்களையும், அத்துமீறிய செயல்களையும் செல்லாதவை என அறிவிக்கக்கூடிய அதிகாரம் அரசியலமைப்பால் தலைமை நீதிமன்றத்திற்குத் திட்டவட்டமாக அளிக்கப்படவில்லை. எனினும், தலைமை நீதிமன்றத்திற்கு இந்த அதிகாரத்தைக் கொடுப்பதை அரசியலமைப்பின் தந்தைகளில் பெரும்பாலோர் விரும்பினர் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. 1803ஆம் ஆண்டிலிருந்து தலைமை நீதிமன்றமானது இந்த அதிகாரத்தைப் பெரும் எதிர்ப்பு எதுவுமின்றிப் பயன்படுத்தி வருவதால், இவ்வதிகாரம் மன்றத்தின் அசைக்கமுடியாத அதிகாரங்களில் ஒன்ருகி விட்டது எனக்கூறலாம். தலைமை நீதிமன்றத்தின் இன்றைய அதிகாரங்களில் நீதி மறு ஆய்வே அதன் மிகச் சிறந்த அதிகாரம் எனப் போற்றப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு ஆக்கியோர், இந்நாட்டுத் தலைமை நீதிமன்றத்துக்கும் சட்டத்துறை, ஆட்சித் துறை ஆகியவற்றின் செயல்களை மறு ஆய்வு செய்கிற அதிகாரத்தை வழங்கியிருக்கின்றனர்.

ஜான் மார்ஷல் (1801—1835)

அமெரிக்கத் தலைமை நீதிபதிகளில் ஜான் மார்ஷல் தலைசிறந்தவராய்க் கருதப்படுகிருர். புதிதாக ஏற்படுத்தப்பட்ட தேசிய அரசு வலுவுள்ள அரசாக மாற்றப்பட வேண்டுமென மார்ஷல் தன் குறிக்கோளாய்க் கொண்டார், அவர் பதவியிலிருந்த முப்பத்து நான்கு ஆண்டுகளில், மத்திய அரசின் கரங்களைப் பலப்படுத்த நீதிமன்றத்தால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தார். அவர் ஒரு சிறந்த நீதிபதி எனப் போற்றப்படுவதுபோல, சிறந்த அரசியல் மேதகை எனவும் போற்றப்படுகிருர். நீதித் துறையை மற்றத் துறைகளுக்குச் சமமாக உயர்த்தி அதை அரசியலமைப்பின் 'வாழும் குரலாக' (Living Voice) மாற்றிய பெருமை மார்ஷலைச் சாரும். மேர்பரிக்கு எதிராக மேடிசன் (Marbury *Vs* Madison), மெக்குல்லாவுக்கு எதிராக மேரிலாந்து (McCulloh *Vs* Maryland), டார்ட்மௌத் கல்லூரி வழக்கு (Dartmouth College Case) ஆகிய வழக்குகளில் மார்ஷல் அளித்த தீர்ப்புகள் தலைமை நீதிமன்றத்தின் பெருமையை உயர்த்தியதோடல்லாமல், மார்ஷலுக்கும் அமெரிக்க வரலாற்றில் அழியாப் புகழைத் தேடிக்கொடுத்தன.

ரோஜர் டானி (Roger Tawney)

தேசிய அரசுகளின் உரிமைகளுக்காக மார்ஷல் வாதாடியது போல மாநில அரசுகளின் உரிமைகளுக்காக வாதாடியவர் தலைமை நீதிபதி ரோஜர் டானி ஆவார். இவருக்கு அமெரிக்க நீதிபதிகளில் மார்ஷலுக்கு அடுத்தபடியான இடம் அளிக்கப்படுகிறது. ட்ரெட்ஸ்காட்டுக்கு எதிராக ஸேண்ட்போர்டு (Dredscott *Vs* Sandford, 1857) என்ற வழக்கில் அவர் நீக்கிரோக்களை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடிமக்களாய்க் கருதவேண்டியதில்லை என்றும், அவர்களுக்கு மற்றக் குடிமக்களுக்கு இருப்பதுபோல உரிமைகள் எதுவுமில்லை என்றும் கூறியது, அவர்மீது மக்களிடையே பெரும் வெறுப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது. டானியின் தீர்ப்பு அமெரிக்க உள்நாட்டுப் போரைத் துரிதப்படுத்தியது எனக்கூடக் கூறலாம்.

தொக்கி நிற்கும் அதிகாரங்கள் (Implied Powers)

அரசியலமைப்பு, காங்கிரசின் அதிகாரங்களைப் பதினெட்டுத் தலைப்புகளின் கீழ் வரிசைப்படுத்திக் கூறுகிறது; அவற்றைப் பயன்படுத்த பல துணை அதிகாரங்களும் தேவைப்படும். அரசியலமைப்பு மூல அதிகாரங்களைமட்டும் தருவதோடு நின்றுவிட்ட போதிலும், அவற்றோடு தொடர்பு கொண்ட துணை அதிகாரங்கள் அனைத்தும் காங்கிரசுக்கு உண்டு என அறிவிக்கும் கோட்பாடு 'தொக்கி நிற்கும் அதிகாரக் கோட்பாடு' எனப்படுகிறது. 1791-ல் காங்கிரஸ் ஐக்கிய நாடுகள் வங்கி ஒன்றை நிறுவி, அதன் கிளைகளை நாட்டின் பல பகுதிகளிலும் திறந்தது. மேரிலாந்து மாநிலம் காங்கிரசுக்கு வங்கிகளைத் திறக்கும் அதிகாரம் அரசியலமைப்பில் தரப்படவில்லை என்றும் வாதாடியது. வழக்கை இறுதியாக விசாரித்த தலைமை நீதிமன்றம் அரசியலமைப்புக் காங்கிரசுக்கு வரி வசூலித்தல், கடன் வாங்குதல் போன்ற அதிகாரங்களைத் தருகிறது என்றும், அவ்வதிகாரங்களைக் குறையில்லாமல் அனுபவிக்க அது வங்கிகளை நடத்தலாம் என்றும், வங்கிகளை நிறுவக்கூடிய அதிகாரம் வரி வசூலித்தல், கடன் வாங்குதல் போன்ற அதிகாரங்களில் பொதிந்து கிடக்கிறது என்றும் தீர்ப்புக் கூறியது. அதே போன்று அரசியலமைப்பு மாநிலங்களுக்கிடையே வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தக் கூடிய அதிகாரத்தைக் காங்கிரசுக்குக் கொடுத்திருப்பதை ஆதாரமாகக் கொண்டு, வர்த்தகத்தோடு தொடர்பு கொண்ட பல இனங்கள்மீது சட்டமியற்றும் அதிகாரமும் காங்கிரசுக்கு உண்டு என்று தலைமை நீதிமன்றம் அறிவித்திருக்கிறது; நெடுஞ்சாலைகள், பாலங்கள், கால்வாய்கள், இரயில் பாதைகள் ஆகியவை அனைத்தும் மாநிலங்களுக்கிடையே வர்த்தகம் என்ற தலைப்பில் வருவதாக மன்றம் கருதுகிறது.

நீதிபதிகளின் சுதந்திரம் (Independence of Judiciary)

அரசியலமைப்புக் கூடுமானவரை நீதிபதிகள் சுதந்திரமாக இயங்குவதற்கு வகை செய்கிறது. முதலாவதாக, பதவியில் அமரும் நீதிபதிகள் தங்கள் வாழ்நாள் முழுதும் நீதிபதிகளாய் இருக்கலாம். குடியரசு தலைவர்போன்றோ, காங்கிரஸ் உறுப்பினர்கள்போன்றோ, அவர்கள் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. தலைமை நீதிமன்றத்தின் புகழ்மிக்க நீதிபதிகளில் ஒருவரான ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் (Oliver Wendel Holmes) தொண்ணூற்றோராவது வயது வரையில் வேலைபார்த்தார் என்பது அறியத்தக்கது. இரண்டாவதாக, நீதிபதிகளின் ஊதியத்தைக் காங்கிரஸ் உயர்த்த முடியுமே ஒழிய குறைக்க முடியாது. காங்கிரஸ் தங்களுடைய ஊதியத்தைக் குறைத்துவிடுமோ என்ற அச்சம் நீதிபதிகளுக்கு எழ முடியாது. எனினும், நாம் நினைப்பதுபோல நீதிபதிகள் மீது எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமலில்லை. முதலாவதாக, மற்ற உயரதிகாரிகள் போன்று அவர்களும் குற்றம்சாட்டப்பட்டுப் பதவியிலிருந்து விலக்கப்படலாம். இதுவரை ஒன்பது நீதிபதிகள்மீது குற்றம்சாட்டப்பட்டதாகவும், அவர்களில் நான்கு பேர் தண்டிக்கப்பட்டதாகவும் அறிகிறோம்; அந்த நான்குபேரும் கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளே; தலைமை நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர்கூட இதுவரை பதவியிலிருந்து விலக்கப்படவில்லை. இரண்டாவதாக, புதிய நீதிமன்றங்களை நிறுவவும், நீதிபதிகளின் எண்ணிக்கையையும் ஊதியத்தையும் நிர்ணயிக்கவும், நீதிமன்றங்களின் அதிகார எல்லையை வரையறுக்கவும் காங்கிரசுக்கு அதிகாரமுண்டு. மூன்றாவதாக, நீதிபதிகள் குடியரசு தலைவரால் நியமிக்கப்படும்பொழுது அவர்களில் பெரும்பாலோர் கட்சி அரசியலின் அடிப்படையில்தான் நியமிக்கப்படுகின்றனர். நீதிபதிகளாக அமர்ந்தபிறகு அவர்கள் தங்கள் பழைய கட்சித் தொடர்புகளை முழுதும் மறப்பார்களா என்பது ஐயத்துக்குரிய வினாவாகும். நான்காவதாக, நீதிபதிகள் தீர்ப்புகள் கூற முடியுமே ஒழிய அவற்றை நிறைவேற்ற முடியாது. 1832-ல் ஜார்ஜியா மாநிலம் இந்தியர்களிடமிருந்து பறித்த நிலங்களை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடும்படி தலைமை நீதிமன்றம் கட்டளையிட்டது; ஆனால் ஜார்ஜியா அக்கட்டளையை நிறைவேற்ற மறுத்துவிட்டது.

10. அரசியல் கட்சிகள்

(The Political Parties)

[முன்னுரை—பொதுமக்களும் கட்சிகளும்—கட்சிகளின் பணிகள்—கட்சிகளின் அமைப்பு—கட்சி நிதி.]

முன்னுரை

அமெரிக்க அரசியலமைப்பின் தந்தைகள் அரசியல் கட்சிகளின் எழுச்சியை ஆதரிக்க மறுத்தனர். அரசியல் கட்சிகள் நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பனவாகவும், மக்களுக்குள்ளே பகைமையையும் பூசலையும் வளர்ப்பனவாகவும், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் மாறுன வன்முறைச் செயல்களைத் தூண்டுவனவாகவும் அவர்கள் மனப்பூர்வமாக நம்பினர். ஐக்கிய நாடுகளின் மூல முதல்வரான வாஷிங்டன் நல்ல அரசுகளின் வளர்ச்சி அரசியல் கட்சிகளின் வளர்ச்சியால் கெடும் என எண்ணினர். இந்தச் சூழ்நிலையில் உருவாகிய 1789ஆம் ஆண்டின் அரசியலமைப்பு அரசியல் கட்சிகளைப்பற்றி எந்தச் செய்தியும் குறிப்பிடாதது இயற்கையே. இருப்பினும் அரசியலமைப்புத் தோன்றிய பத்து ஆண்டுகளுக்குள் கட்சிகள் முளைத்து வளர்ந்துவிட்டன. தேசிய அரசு வலுவுள்ளதாய் இருக்கவேண்டுமென்று விரும்பியோர் அலெக்சாந்தர் ஹேமில்டன் தலைமையில் 'கூட்டாட்சியினர்' (Federalists) என்ற கட்சியையும், மாநில அரசுகள் வலுவுள்ளதாய் இருக்க வேண்டுமென்று விரும்பியோர் 'கூட்டாட்சி எதிர்ப்பாளர்' (Anti-Federalists) என்ற கட்சியையும் அமைத்துக் கொண்டனர். காலப்போக்கில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட இக்கட்சிகளே இன்று குடியரசு கட்சி (Republican Party) என்றும், மக்களாட்சிக் கட்சி (Democratic Party) என்றும் அழைக்கப்படுகின்றன. இவ்விரு கட்சிகளைத் தவிர வேறு சில கட்சிகளும் அவ்வப்பொழுது தலையெடுக்க முயன்றபோதிலும், அவை தேசியக் கட்சிகளாக வளர முடியாமல் நசித்துப்போனதால்

இன்றும் அமெரிக்காவில் பிரிட்டனைப்போல் இருபெரும் கட்சிகளே இயங்கி வருகின்றன. 1964ஆம் ஆண்டுத் தேர்தலில் வேறு கட்சியினரால் காங்கிரசிலோ, மாநிலச் சட்டமன்றங்களிலோ ஒரு இடத்தைக்கூட வெல்லமுடியவில்லை என்பது அவைகளின் நிலையைக் காட்டுகிறது. தற்காலக் குடியரசுகளில் அரசியல் கட்சிகளில்லாத நாடே இல்லை எனலாம். அரசியல் கட்சிகள் இல்லாவிட்டால் அரசாங்கமும் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு அவை இன்றியமையாதனவாய் கருதப்படுகின்றன.

பொதுமக்களும் கட்சிகளும்

ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களித்தோ, அல்லது அக்கட்சியின் வேட்பாளர்களுக்குப் பிரசாரம் செய்தோ, அல்லது அதன் கொள்கைகளைப் பலவழிகளில் பரப்பியோ ஒருவர் தன் கட்சிக்குச் சேவை செய்தாலும், பொதுவாகக் கட்சியில் முறைப்படி அங்கத்தினராகச் சேர்வது என்ற பழக்கம் அமெரிக்காவில் இல்லை எனக் கூறப்படுகிறது. கட்சி உறுப்பினராவதற்குப் பதிவு செய்துகொள்ளத் தேவையில்லை; சந்தா செலுத்த வேண்டியதில்லை; கட்சிக் கூட்டங்களுக்குச் செல்லவேண்டியதில்லை; பெரும்பான்மையான அமெரிக்கர்கள் கட்சியைப் பொறுத்தவரை பட்டும் படாமலும் நடந்துகொள்கிறார்கள். மக்கள் தொகையில் மூன்றில் ஒருபங்கு அரசியல் அலுவல்களில் எந்தவிதமான அக்கறையும் காட்டுவதில்லையாம். வயது வந்தோரில் ஐந்து சதவிகிதத்தினரே அரசியலில் தீவிரவாதிகள் (militants) எனப்படுகின்றனர். நல்லகாலமாக அந்த சிறுபான்மையோர் நன்கு படித்தவர்களாகவும், மேலான வேலை பார்ப்போர்களாகவும், ஏராளமான வருவாயுள்ளவர்களாகவும் இருப்பதால், அவர்களிடம் சுயநலத்துக்கல்லாமல் பொது நலத்துக்காகப் பாடுபடும் பரந்த மனப்பான்மையைப் பார்க்கிறோம்.

அமெரிக்கக் குடிமக்களில் சிலர் குடியரசு கட்சிக்காரர்களாகவும், சிலர் மக்களாட்சிக் கட்சிக்காரர்களாகவும் இருப்பது, அவர்கள் சிந்தித்து அந்தக் கட்சிகளை ஆதரிக்கவேண்டும் என்று முடிவு செய்ததால் அல்லவாம். வெவ்வேறு மக்களின் அரசியல் நோக்கங்கள் வெவ்வேறு காரணங்களால் ஆக்கப்படுகின்றன. (1) பலர் பிறக்கும்பொழுதே குடியரசு கட்சியினராகவோ மக்களாட்சிக் கட்சியினராகவோ பிறக்கின்றனர் என்ற கூற்று மெய்யானதாகத் தோன்றுகிறது. பலர் அவர்கள் பெற்றோரின் கட்சியை விரும்பி ஏற்பதே வழக்கம் (2) பொதுவாக வடக்கு மாநிலங்களைச் சேர்ந்தோர் குடியரசு கட்சியையும், தெற்கு மாநிலங்களைச் சேர்ந்தோர் மக்களாட்சிக் கட்சியையும் ஆதரிப்பது

நெடுநாளைய மரபு. (3) பல இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் அமெரிக்காவில் மக்களின் இனங்களுக்கும், அவர்களின் அரசியல் கட்சிகளுக்கும் நெருங்கிய தொடர்பைக் காண்கிறோம். பொதுவாக ஐரிஷ் (Irish) இனத்தைச் சேர்ந்தவர்கள் குடியரசு கட்சிக்கும், ஜெர்மானிய (German) இனத்தைச் சேர்ந்தவர்கள் மக்களாட்சிக் கட்சிக்கும் ஆதரவு தருகின்றனர். (4) மேலும் மக்களின் சமயம் தொழில் போன்றவையும் அவர்களின் கட்சித் தொடர்புகளைத் தீர்மானிக்கின்றன. ஒவ்வொரு கட்சியின் கொள்கைகளையும் சிந்தித்துப் பார்த்து, அவற்றின் நன்மை தீமைகளின் அடிப்படையில் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்று முடிவு செய்வோரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்பதில் ஐயமில்லை.

கட்சிகளின் பணிகள்

அமெரிக்கக் கட்சிகள் நான்கு வகையான பணிகளைச் செவ்வனே செய்வதாகக் கூறப்படுகிறது. (1) தேர்தல் சமயங்களில் இரு கட்சிகளும் அரசியல் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கப் போகின்றன என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறும். குடியரசு கட்சியின் முறைகளை விரும்புவோர் அதற்கும், மக்களாட்சிக் கட்சியின் முறைகளை விரும்புவோர் அதற்கும் வாக்களித்துத் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயலுவார்கள். சமுதாயத்தை எதிர்நோக்கி இருக்கும் பெரும் சிக்கல்களைத் தீர்க்க ஒன்றிற்கு மேற்பட்ட முறைகள் இருக்கலாம், வெவ்வேறு கட்சிகள் வெவ்வேறு முறைகளுக்கு ஆதரவுகோரும். இருகட்சிகளும் தங்களுடைய கொள்கைகளை மக்களுக்குச் சமர்ப்பித்து அவர்களை 'அது வேண்டுமா, இது வேண்டுமா' என்று கேட்காவிட்டால் எந்த அடிப்படையில் மக்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பார்கள்? பெரும்பாலோரின் வாக்குகளைப் பெறும் கட்சி ஆளுங்கட்சியாய் அமையப் போவதால், அக்கட்சியை ஆதரித்தோரின் கொள்கைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படும் என்பது திண்ணம். ஆனால் அமெரிக்கக் கட்சிகளுக்கிடையே அடிப்படையான மாறுபாடுகள் இருப்பதாகத் தோன்றவில்லை. எல்லாம் பெரும் பிரச்சினைகளைப் பொறுத்தவரை குடியரசு கட்சியும் மக்களாட்சிக் கட்சியும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகத்தான் நினைப்பதாகத் தோன்றுகிறது. (2) பதவிகள் மனிதர்களைத்தேடி வரவேண்டும். மனிதர்கள் பதவிகளைத் தேடிப் போகக்கூடாது' என்பது பழமொழி. ஆனால் இதற்கு நேர்மாறாக நடைமுறையே உலகியலாய் விளங்குகிறது. பதவி வேட்டையில் பல்லாயிரக்கணக்கான வேட்பாளர்கள் இறங்கினால், வாக்காளர்கள் அவர்களிலிருந்து எந்த அடிப்படையில் தேர்ந்தெடுப்பது?

இங்கேதான் கட்சிகள் வாக்காளர்களுக்கு பெருந்துணை புரிகின்றன. கட்சி சார்பில் பதவிகளுக்குப் போட்டியிடுவதே தற்கால வழக்கம். தேசிய மாநிலச் சட்டமன்றங்களில் ஒவ்வொரு இடத்துக்கும் பொதுவாக இருவரே போட்டியிடுகின்றனர். இது வாக்காளர்களின் வேலையை மிக எளிதாக்குகிறது என்பது தெளிவு. கட்சிகள் மூலமாக அல்லாமல், வேட்பாளர்கள் சொந்தப் பொறுப்பில் போட்டியிட வேண்டும் என எதிர் பார்க்கப்பட்டால், ஒவ்வொரு பதவிக்கும் கணக்கற்ற வேட்பா ளர்கள் போட்டியிட்டு, வாக்காளர்களின் வேலையைக் கடினமாக்கு வார்கள். கட்சிகள் பதவிகளுக்குத் தகுந்த அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களின் பண்புகளை வாக்காளர்களுக்கு விளக்கி, அவர்கள் மற்ற அபேட்சகர்களைவிட எந்த வகையில் சிறந்தவர்கள் என்பதை எடுத்துக்கூறி, வாக்காளர்கள் யாரை ஆதரிப்பது என்பதுபற்றி ஒரு முடிவுக்குவர உதவி செய்கின்றன. (3) வெற்றிபெரும் கட்சியின் தலைவர் களும் தொண்டர்களும் பெரும் பதவிகளில் அமர்வது இயல்பே. அவ்வாறு பதவி ஏற்கின்றவர்கள் பொறுப் புள்ளவர்களாய் நடந்து கொள்கின்றனரா என்பதை அவர்கள் கட்சி கவனித்துக்கொள்ளும். அரசியல் கட்சிகளில் இருக்கின்ற வர்கள் தங்கள் தொகுதி வாக்காளர்களைப் பகைத்துக் கொண் டாலும் பகைத்துக்கொள்வார்கள், கட்சியின் மேலிடத்தை நிச்சயம் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் பொது வாழ்வில் உயர்வதும் தாழ்வதும் கட்சியில் அவர்களுக்குள்ள மதிப்பைப் பொறுத்தது. ஒரு கட்சியைச் சேர்ந்த அரசியல் அதிகாரி தவருக நடந்து கொண்டால், அந்தத் தவருன நடத்தை அவருக்கு மட்டுமல்லாது அவருடைய கட்சிக்கே கெட்ட பெயரைத் தேடிக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே பதவியிலிருக்கும் அதிகாரிகளின் போக்கைக் கட்சியின் மேலிடம் கண்ணும் கருத்துமாய் கவனித்து, அவர்களை நேர்மையோடும் நியாயத்தோடும் நடந்து கொள்ளக் கட்டாயப்படுத்தும். அரசாங் கத்தின் நன்னடத்தைக்கு அதை அமைத்திருக்கும் கட்சி உத்தர வாதம் அளிக்கிறது எனக் கூறலாம். (4) பிழைக்கும் வழிகளைத் தேடி, பொழுது போக்கும் பெரும்பாலான மக்களுக்கு அரசியல் அலுவல்களைப்பற்றிச் சிந்திப்பதற்குப் போதுமான நேரமோ ஆர்வமோ இருப்பதில்லை. அரசியல் கட்சிகள் உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி, அவர்களுக்கு அரசியல் அறிவு புகட்டு வதில் பெரும் பங்கேற்கின்றன. தேர்தல் நாளன்று வாக்காளர் களைத் தேர்தல் சாவடிக்களுக்குச் செல்லுமாறு செய்வதே கட்சிகள்தானே! பொதுக்கூட்டங்கள், செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, ஊர்வலங்கள் போன்றவை மூலமாக

நாட்டின் பிரச்சினைகளை மக்களுக்கு விளக்கி, அவற்றைப்பற்றி அவர்களை ஓரளவாவது சிந்திக்கத் தூண்டுவது அரசியல் கட்சிகளே. கட்சிகளின் தூண்டுதல் இல்லாமல், தங்கள் சொந்த முயற்சியால் அரசியல் விவகாரங்களை ஆராய முற்படுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாய் இருக்கும் என்பது கூறத் தேவையில்லை. எனவே மக்களுக்கு அரசியலறிவு புகட்டும் சாதனங்களில் கட்சிகள் முதன்மையானவையாய் கருதப்படவேண்டும்.

கட்சிகளின் அமைப்பு

அமெரிக்க அரசியல் கட்சிகள் வேறு எந்த நாட்டிலும் காண முடியாத அளவுக்கு நல்ல அமைப்பினைப் பெற்றிருக்கின்றன. கீழைக் கடலிலிருந்து மேலைக் கடல்வரை பரந்து கிடக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் 'வட்டங்கள்' (Precincts) என்னும் அமைப்புகளை இரு கட்சிகளும் அமைத்திருக்கின்றன. இவ்வட்டங்களில் கட்சித் தொண்டர்கள் வாக்காளர்களை நேருக்கு நேர் சந்தித்து, தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடுகின்றனர். 'வட்டத் தலைவர்கள்' (Precinct captains) கட்சியின் முதுகெலும்பாய் கருதப்படக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றனர். இத் தலைவர்கள் வட்டத்திலுள்ள மக்களுக்குப் பல வழிகளில் துணை நின்று, அவர்களைத் தங்கள் கட்சியில் ஈர்க்க முயல்கின்றனர். தேர்தல் காலத்தில் மட்டுமல்லாமல் எக்காலத்திலும் கட்சிக்காக உழைக்கும் முழு நேர ஊழியர்களான வட்டத் தலைவர்களின் சேவையைப் பொறுத்துதான் கட்சிகளின் வெற்றி தோல்வி இருக்கும் எனக் கூறுவது மிகையாகாது. ஒவ்வொரு மாவட்டத்திலும், (County) வட்டத் தலைவர்களைக் கொண்ட மாவட்டக் குழு அதன் எல்லைகளுக்குள் கட்சிக் காரியங்களுக்குப் பொறுப்பேற்கும். மாவட்டக் குழு ஒரு தலைவரையும், ஒரு துணைத் தலைவரையும், ஒரு பொருளாளரையும், ஒரு செயலாளரையும் தேர்ந்தெடுக்கும். தேர்தல் சமயத்தில் இக்குழு அடிக்கடி கூடித் தேர்தல் தொடர்புடைய எல்லா வேலைகளிலும் ஈடுபடும். இரு கட்சிகளிலும் 'மாநில மையக் குழு' (State Central Committee) என்ற ஓர் அமைப்பு உண்டு. மாவட்டங்களிலிருந்து செல்லும் பிரதிநிதிகளைக் கொண்ட இக்குழு, இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை மாநில மாநாடு (State Convention) ஒன்று நடத்தி, மாநிலத்திற்குள் கட்சியின் நடவடிக்கைகளை முடிவு செய்யும்.

நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை, குடியரசு தலைவர் தேர்தலுக்கு முன்பாக, இரு கட்சிகளும் 'தேசிய மாநாடு' (National Convention) நடத்தி 'தேசியக் குழு' (National Committee) என்ற அமைப்பினைத் தேர்ந்தெடுக்கும், இந்தத் தேசியக் குழுவில்

ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரு அங்கத்தினர்கள்—ஒரு ஆண், ஒரு பெண்—இடம் பெறுவர். இக் குழுவின் தலைவருக்கு நாடு முழுவதும் செல்வாக்கு உண்டு என்பதைச் சொல்லத் தேவை யில்லை. குடியரசு தலைவர் பதவிக்குப் போட்டியிடும் அபேட்சகரே தேசியக் குழுவின் தலைவரை நியமிப்பார். தேசியக் குழு பல கிளைக் குழுக்களாகப் பிரிந்து வேலை செய்யும்; அவற்றில் 'செயற் குழு' (Executive Committee) என்பது குறிப்பிடத் தக்கதொன் ருகும். கட்சியின் மிக முக்கியமான முடிவுகள் அனைத்தும் இச் செயற் குழுவால்தான் எடுக்கப்படுகின்றன. செனட் சபைக்கான தேர்தல் வேலைகளைக் கவனிக்க 'செனட் தேர்தல் குழுவும்' (Senatorial Campaign Committee), பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் வேலைகளைக் கவனிக்க 'காங்கிரஸ் தேர்தல் குழுவும்' (Congressional Campaign Committee), கட்சியின் நிதி அலுவல் களைக் கவனிக்க நிதிக் குழுவும், ஒவ்வொரு தேசியக் குழுவின் கிளைக் குழுக்களில் சிலவாம்.

கட்சி நிதி

நிதி வசதி இல்லாமல் எந்த அரசியல் கட்சியும் அரசாங் கத்தைக் கைப்பற்ற முடியாது என்பது கண்கூடு, ஒவ்வொரு கட்சியும் ஆண்டு தோறும் பல லட்சக் கணக்கான டாலர்களைச் செலவு செய்வதன் பயனுகவே அவை மக்களிடையே நிலைத்து நிற்கமுடிகிறது. தேர்தல் சமயங்களில் கட்சிகள் கோடிக் கணக்கான டாலர்களை வாரி இறைக்கின்றன. வீடு வீடாக ஏறி இறங்கும் தொண்டர்களுக்குக் கூலி, பெரும் கூட்டங்களில் பேசும் சொற்பொழிவாளர்களுக்கு ஊதியம், விளம்பரச் சாதனங் களுக்குக் கட்டணம், போக்குவரத்துச் சத்தம்—இப்படிப் பலவகையான வழிகளில் இரு கட்சிகளும் ஒன்றை ஒன்று மிஞ்சுகிற அளவுக்குச் செலவு செய்கின்றன. கட்சிகள் இப்பெரும் பொருளை எங்கிருந்து பெறுகின்றன? தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்களே தேர்தல் செலவில் ஒருபங்கை ஏற்பது வழக்கம். பெருமைக்கும் வருவாய்க்குமுரிய பெரும் அரசியல் பதவிகளிலிருக்கும் அதிகாரி களும் தங்கள் கட்சியின் வெற்றிக்காகக் கணிசமான தொகையைக் கொடுத்து உதவுவார்கள், நாடெங்கிலும் வாழும் கட்சியின் அனுதாபிகளில் பலர் தங்கள் சக்திக்குத் தக்க வகையில் கட்சிக் கருவூலத்தை நிரப்ப முன்வருவார்கள். இருப்பினும் பெரு மளவுக்குப் பணம் கொடுப்போர் வர்த்தகர்களும், அரசாங்க ஒப்பந்தக்காரர்களும், அரசாங்கத்திடம் சில சலுகைகளை எதிர்ப் பார்ப்போருமே.

கட்சிகளால் கணக்கற்ற தொகை வசூலிக்கப்படுவதையும், செலவிடப்படுவதையும் கண்ட காங்கிரஸ், அவைகளின் வரவு

செலவுகள்மீது சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. தேசிய வங்கிகளோ, கூட்டுரிமைக் குழுக்களோ, தொழிற் சங்கங்களோ, தேர்தல் நிதிக்காக எந்தத் தொகையும் கொடுக்கக்கூடாது என்றும், தனிப்பட்டவர் யாரும் எந்த அபேட்சகருக்காகவும் ஓர் ஆண்டில் 5,000 டாலர்களுக்குமேல் தரக்கூடாது என்றும் சட்டங்கள் கூறுகின்றன. செனட் சபைக்குப் போட்டியிடும் அபேட்சகர் 10,000 டாலர்களுக்கு மேலும், பிரதிநிதிகள் சபைக்கு போட்டியிடும் அபேட்சகர் 2,500 டாலர்களுக்கு மேலும் செலவு செய்யக்கூடாது. வாக்குகளைப் பணத்திற்கு விற்பதும் வாங்குவதும் குற்றமே. வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் சம்பந்தமான வரவு செலவு விவரங்களை அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டும் எனக் கோரப்படுகிறது. என்னதான் கட்டுப்பாடுகள் இருப்பினும் அளவுக்கு மீறிய வரவும் செலவும் நடந்து வருவதைப் பார்க்கிறோம், வேட்பாளர்கள் செலவு செய்யும் தொகை மீது உச்சவரம்பு உண்டே ஒழிய, அவர்களுக்காக அவர்களுள் நண்பர்கள் செய்யும் செலவுக்கு உச்சவரம்பில்லை. மேலும் வேட்பாளர் ஒவ்வொருவரும் வேட்பு மனுதாக்கல் செய்யும் முன்னர் அவர் கட்சி அவரை வேட்பாளராகத் தேர்ந்தடுப்பதற்காக அவரால் செலவு செய்யப் படும் பெருந்தொகை எந்தக் கணக்கிலும் சேர்வதில்லை. சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் எல்லைகடந்து செலவு செய் கின்றவர்கள்மீது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பது வழக்கமில்லையாதலால், சட்டங்கள் இருந்தும் பயனில்லை.

11. செல்வாக்குக் குழுக்கள்

(Pressure Groups)

[முன்னுரை — வாணிகக் குழுக்கள் — தொழிலாளர் குழுக்கள் — விவசாயிகள் குழுக்கள்—வேறு சில குழுக்கள்—செல்வாக்குக் குழுக்கள் கையாளும் முறைகள்—குறைபாடுகள்.]

முன்னுரை

பிரிட்டிஷ் செல்வாக்குக் குழுக்களைப்போலவே அமெரிக்கச் செல்வாக்குக் குழுக்களும் அரசாங்கத்தின்மீது தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தித் தங்கள் நோக்கங்களை நிறைவேற்ற முயல்கின்றன. அமெரிக்கச் சமுதாயப் பொருளாதார அமைப்பில் உள்ள வேறுபாடுகள், பலரைப் பல காரணங்களுக்காக வாதாடத் தூண்டுகின்றன. மற்ற நாடுகளைவிட அமெரிக்காவில் உள்ள செல்வாக்குக் குழுக்கள் எண்ணிக்கையில் உயர்ந்தனவாயும், அமைப்பில் சிறந்தனவாயும் கருதப்படுகின்றன. சமுதாய, பொருளாதார, சமய அடிப்படையில் கணக்கற்ற குழுக்கள் தோன்றி, அவை அதனதன் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள அரும்பாடுபடுவது அமெரிக்க அரசியலின் தனித்தன்மை வாய்ந்த பண்புகளில் ஒன்றாகும். தலைநகரில் ஐந்நூறுக்கு மேற்பட்ட கழகங்கள் தங்கள் தலைமை அலுவலகங்களை அமைத்து அரசாங்கத்திடமிருந்து பல சலுகைகளைப் பெற முயல்கின்றன. நாடெங்கிலுமுள்ள செல்வாக்குக் குழுக்களின் எண்ணிக்கை 1,50,000-க்கு மேற்பட்டது எனக் கூறப்படுகிறது. தங்களுக்குச் சாதகமான சட்டங்களைக் கொண்டுவரவும், பாதகமான சட்டங்களைத் தடுக்கவும் காங்கிரஸ் உறுப்பினர்கள்மீது தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துவதே செல்வாக்குக் குழுக்களின் முக்கியமான வேலையாகும்.

வாணிகக் குழுக்கள்

ஐக்கிய நாடுகளின் வர்த்தகச் சங்கம் (Chamber of Commerce of the United States) என்னும் அமைப்பு அமெரிக்கா முழுவதிலு

முள்ள வர்த்தகச் சங்கங்களின் இணைப்பாகும். அரசாங்கம் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தல் கூடாது, வரிகளைக் குறைக்க வேண்டும், தொழிற் சங்கங்களுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது ஆகியவை அதன் கோரிக்கைகளில் சிலவாகும். உற்பத்தி யாளர்களின் தேசியச் சங்கம் (National Association of Manufacturers) என்னும் அமைப்பில் உற்பத்தி நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன. தனியார் துறைக்கு ஊக்கம் தரப்படவேண்டும், தொழிற் சங்கங்களின் செல்வாக்குக் குறைக்கப்பட வேண்டும், குறைவான வரிகள் வசூலிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கங் களுக்காக இது போராடுகிறது.

தொழிலாளர் குழுக்கள்

தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கப் பாடுபடும் மிகப்பெரிய அமைப்புகளான அமெரிக்கத் தொழிலாளர் சங்கமும் (American Federation of Lobour), தொழில் நிறுவனங்கள் குழுமமும் (Congress of Industrial Organisations) இன்று ஒரே அமைப்பாக இணைந்து இயங்குகின்றன. நாடெங்கிலுமுள்ள தொழிற்சங்கங்கள் ஒன்றுக ஒரே அமைப்பில் கூடிக் குரலெழுப் புவதை எந்த அரசாங்கமும் எளிதில் புறக்கணிக்க முடியாது. குறைந்த வேலை, நிறைந்த ஊதியம், இதர வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றைத் தொழிலாளர் பெற வாதாடும் இந்தக் குழு, அமெரிக்காவின் செல்வாக்குள்ள தன்னலக் குழுக்களில் முதன்மை யானதாய்க் கருதப்படுகிறது. தொழிலாளர்களின் சுதந்திரத்தில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்றும், அது முதலாளிகளுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பளிக்கக் கூடாதென்றும் இக்குழு விரும்புகிறது.

விவசாயிகள் குழுக்கள்

அமெரிக்கப் பண்ணைகள் குழு (American Farm Bureau Federation) என்னும் அமைப்பு விவசாயிகளுக்காகப் பாடுபடும் அமைப்புகளில் தலைச் சிறந்தது. விவசாயப் பண்டங்களுக்கு நியாயமான விலை, சொத்துக்களின்மீது குறைவான வரி, விவசாய ஆராய்ச்சி போன்றவைகளுக்கு அரசாங்கத்திடம் ஆதரவு தேட முயல்கிறது இவ்வமைப்பு. தேசியப்பண்ணை அமைப்பு (The National Grange), தேசிய விவசாயிகள் சங்கம் (The National Farmer's Union) போன்ற கழகங்களும் விவசாயிகளின் முன்னேற் றத்திற்காக உழைக்கின்றன.

வேறுசில குழுக்கள்

போர்ப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் முன்னாள் இராணுவ வீரர்களின் நலன்களுக்காக வாதாட 'அமெரிக்க

மறவர்' (American Legion) என்ற சங்கமும், நீக்கிரோக்களின் உரிமைகளுக்காகப் போராட 'நீக்கிரோக்கள் முன்னேற்றத்திற்கான தேசியச் சங்கம்' (National Association for the Advancement of Coloured People) என்ற அமைப்பும், ஆசிரியர்களின் வசதிகளைப் பெருக்க 'தேசியக் கல்விக் கழகம்' (National Educational Association) என்ற நிறுவனமும், மருத்துவர்களின் நலன்களை அதிகரிக்க 'அமெரிக்க மருத்துவர்கள் சங்கம்' (American Medical Association) என்ற சங்கமும், பொதுவாக எல்லா மக்களின் சிவில் உரிமைகளைக் காக்க 'அமெரிக்கச் சிவில் உரிமைகள் சங்கம்' (American Civil Liberation Union) என்ற அமைப்பும், பெண்கள் ஆண்களுக்குச் சமமான உரிமைகளை அனுபவிக்க 'அமெரிக்கப் பெண் வாக்காளர்கள் சங்கம்' (American Women Voters League) என்ற நிறுவனமும் இன்று அமெரிக்காவில் செல்வாக்குப்பெற்று விளங்கும் தன்னலக் குழுக்களில் குறிப்பிடத்தக்கவை.

செல்வாக்குக் குழுக்கள் கையாளும் முறைகள்

அரசியல் கட்சிகளைப் போன்றே தன்னலக் குழுக்களும் நல்ல அமைப்பைப் பெற்றிருக்கின்றன. பெரும் தன்னலக் குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைமை அலுவலகம், முழுநேர ஊழியர்கள், ஆண்டுக்கு ஒருமுறை மாநாடு, ஒரு செய்தித்தாள் அல்லது இதழ், போதுமான பணம் ஆகிய எல்லா வசதிகளும் உண்டு. பெருங்குழுக்கள் ஒவ்வொன்றும் வாஷிங்டனில் ஒரு முகவரை (Lobbyist) நியமித்து அதனுடைய நலன்களைக் காத்துக்கொள்ள முயலும். இந்த முகவர் முன்னாள் காங்கிரஸ் உறுப்பினராய் இருந்தவராகவோ, அல்லது புகழ் மிக்க வழக்கறிஞராய் பணியாற்றியவராகவோ, அல்லது பெரும் பத்திரிகைகளில் ஆசிரியராய் இருந்தவராகவோ இருப்பார். முகவர்கள் பெரும் தொகைகளை ஊதியமாய்ப் பெறுவார்கள். அவர்கள் தேவையான சமயங்களில் காங்கிரஸ் உறுப்பினர்களைச் சந்தித்து, தங்கள் கருத்துகளை எடுத்துக் கூறி, அவற்றிற்கு அவர்களின் ஆதரவை நாடுவார்கள். மசோதாக்கள் காங்கிரசின் நிலைக் குழுக்களில் ஆராயப்படும் பொழுது, முகவர்கள் குழுக்களுக்குச் சென்று தம் கட்சியை எடுத்துக்கூறி, அதை குழு ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்துவார்கள். முகவர்களின் அலுவலகங்களில் மசோதா தொடர்புடைய விவரங்கள் தயாராய் இருக்கும் என்பது காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத் தெரியுமாதலால், சில சமயங்களில் அவர்களே முகவர்களை அணுகித் தங்களுக்கு வேண்டிய செய்திகளைச் சேகரித்துக் கொள்வார்கள். தன்னலக் குழுக்கள் தேர்தல் காலங்களில் தங்கள் கொள்கையை ஏற்க முன்வரும் அரசியல் கட்சிகளை

ஆதரிக்கும். தன்னலக் குழுக்கள் தாங்கள் விரும்பும் கட்சிகளுக்கு வெற்றி தேடித்தர, அவற்றின் அபேட்சகர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தும், கட்சிகளின் தேர்தல்நிதிக்கு நன்கொடைகள் வழங்கியும், அவற்றிற்குத் துணை நிற்கும். தன்னலக் குழுக்கள் ஆதரிக்கும் வேட்பாளர்கள் வெற்றியடைவார்களானால், அவர்கள் தங்களை ஆதரித்த குழுக்களின் கொள்கைகளுக்காக வாதாடு வார்கள் என்பது திண்ணம். அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற முயலுவதுபோல, சில பெருங்குழுக்கள் மக்களிடையேயும் செல்வாக்குப் பெறமுயலும், செய்தித்தாள்கள், வானொலி ஒலி பரப்புகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், ஆகிய சாதனங்கள் மூலமாக தன்னலக்குழுக்கள் தங்கள் கொள்கையை மக்களிடையே பரப்பி, அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறமுயலும். ஒரு தன்னலக்குழுவின் கொள்கைகளில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமானால், அரசாங்கமும் அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடுமல்லவா!

அமெரிக்க ஆற்றல் குழுக்கள் தங்கள் செல்வாக்கைச் சட்ட விரோதமான வழிகளில் பயன்படுத்துவதைத் தடுக்க காங்கிரஸ் 1946ஆம் ஆண்டில் சட்டமொன்றை இயற்றியது. அதன்படி முகவர்கள் அனைவரும் தாங்கள் யாருக்காக, எதற்காக, எவ்வளவு காலம், என்ன ஊதியத்தில் வேலை செய்கிறார்கள் என்பதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். தன்னலக்குழுக்கள் ஒவ்வொன்றும் யார் யாரிடமிருந்து 500 டாலர்களுக்குமேல் நன்கொடையாகப் பெற்றன என்றும், யார் யாருக்கு 100 டாலர் களுக்குமேல் செலவிட்டது என்றும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்குக் காட்டவேண்டும். இந்த சட்டத்தை மீறுகின்ற வர்கள் 5000 டாலர்களுக்கு மிகாத அபராதம் செலுத்தவோ, அல்லது பன்னிரண்டு மாதங்கள்வரை சிறைத்தண்டனையோ அனுபவிக்க நேரிடும்.

குறைபாடுகள்

தன்னலக் குழுக்கள் இயங்கும் முறையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை இப்பொழுது ஆராய்வோம். (1) நாட்டிலுள்ள எல்லாத் துறைகளுக்கும் தன்னலக் குழுக்கள் அமைக்கும் வசதி இருப்பதில்லை. வசதி இல்லாதோரின் நலன் களுக்காகக் காங்கிரசின் முன்பு வாதாட எந்த முகவரும் இல்லாதது அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்குகிறது. (2) மேலும் தன்னலக் குழுக்கள் அந்தந்தத் துறையிலுள்ளோரின் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கிறது எனக் கூறமுடியாது.

ஐக்கிய நாடுகளின் வர்த்தகர் சங்கம் அதில் இணைந்திருக்கும் பெரும்பாலான சங்கங்களின் நோக்கங்களுக்காக வாதாடுகிறது; பெரும்பாலான சங்கங்களின் கருத்துக்கு மாறாக நினைக்கும் சங்கங்களின் கருத்துகளுக்கு எந்த வலுவும் இல்லாமலிருப்பது அவ்வளவு திருப்திகரமான ஏற்பாடாய்த் தோன்றவில்லை. (3) தன்னலக் குழுக்கள் எதை வேண்டுமென்றாலும் செய்துவிட முடியும் என்ற தவறான எண்ணம் மக்களிடையே நிலவுகிறது. குழுக்களாகத் தங்களை அமைத்துக் கொள்ளாத கோடிக் கணக்கான மக்கள் அமெரிக்காவில் உண்டு. அவர்களின் நலன்களுக்குக் கேடு விளைக்கும் வகையில் எந்த அரசாங்கமும் நடந்து கொள்ள விரும்பாது. (4) குடியரசு தலைவர், காங்கிரஸ், நிருவாகத் துறைகள், நீதிமன்றங்கள் ஆகிய நிறுவனங்களெல்லாம், தன்னலக் குழுக்களின் கைப்பாவை என்ற தவறான எண்ணம் சிலரிடையே நிலவுகிறது. சமீப காலங்களில் தன்னலக் குழுக்களால் அதிகமாக ஒன்றும் சாதிக்கப்படுவதில்லை என்று கூறப்படுவது, பெரும்பாலான வாக்காளர்களுக்கு மன நிறைவைக் கொடுக்கிறது. சட்டங்கள் காங்கிரசால் இயற்றப்பட வேண்டும் என நாடு எதிர்பார்க்கிறதே ஒழிய, தன்னலக் குழுக்களின் விருப்பு வெறுப்பை ஒட்டி அவை ஆக்கப்படுவதையோ, அழிக்கப்படுவதையோ யாரும் விரும்புவதில்லை.

படிக்கவேண்டிய நூல்கள்

(1)	C. A. Beard	American Government and Politics (Macmillan)
(2)	M Beloff	American Federal Government (Oxford)
(3)	M. D Irish & J. W. Prothro	The Politics of American Democracy (Prentice Hall)
(4)	W. B. Munro	The Government of the United States (Macmillan)
(5)	Ogg & Ray	Essentials of American Government (Oxford & IBH)
(6)	H. Zink, H. R. Penniman, & G. R. Hathorn	American Government and Politics (Van Nostrand)

IV. சோவியத்துக் குடியரசின் அரசியலமைப்பு

(The Constitution of the U.S.S.R)

1. அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்
(Characteristic features of the Constitution)

[முன்னுரை—சமதரும அரசு—அடிப்படை உரிமைகளும் கடமைகளும்—கூட்டாட்சி—பிரிசிடியம்—பொதுவுடைமைக் கட்சி—அரசியலமைப்புத் திருத்தம்.]

முன்னுரை

தற்கால ரஷ்யாவின் தந்தை எனக் கருதப்படும் ஸ்டாலின் (Stalin) தலைமையில் அமைந்த ஒரு குழுவின் படைப்பே இன்றைய ரஷ்ய அரசியலமைப்பாகும். வரலாற்றுப் புகழ் மிக்க ரஷ்யப் புரட்சிக்குப் (1917) பிறகு அங்கே தோன்றிய அரசியலமைப்புகளுள் மூன்றாவதான ஸ்டாலின் அரசியலமைப்பு 1936ஆம் ஆண்டிலிருந்து அந் நாட்டின் அடிப்படைச் சட்டமாய் இயங்கி வருகிறது. பதின்மூன்று அத்தியாயங்களில் நூற்று நாற்பத்தாறு விதிகளைக் கொண்டிருக்கும் ரஷ்ய அரசியலமைப்பு மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கும் ஓர் அரசியலமைப்பாகும். பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் வரையப்பட்ட முதல் அரசியலமைப்பு என்ற பெருமை ரஷ்ய அரசியலமைப்புக்கு உண்டு. மற்றப் பொதுவுடைமை நாடுகளில் இயங்கும் அரசியலமைப்புகளும் ரஷ்ய அரசியலமைப்பைத் தழுவியே அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பேச்சு வழக்கில் நாம் ரஷ்யா என அழைக்கும் நாடு, அரசியலமைப்பில் 'சோவியத்துச் சமதருமக் குடியரசுகளின் கூட்டமைப்பு' (Union of Soviet Socialist Republics) என அழைக்கப்படுகிறது.

சமதரும அரசு (Socialist State)

சோவியத்துக் குடியரசு, தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியோரின் சமதரும அரசு என அரசியலமைப்பின் முதலாவது விதி அறிவிக்கிறது. நிலக்கிழார்கள், முதலாளிகள் ஆகியோரின் ஆதிக்கம் வீழ்த்தப்பட்டதன் பயனாகப் பாட்டாளிகளின்

சர்வாதிகார ஆட்சி (Dictatorship of the proletariat) நிறுவப்பட்டு, அதிகாரங்கள் அனைத்தும் உழைப்பாளிகளின் உரிமையாக்கப் பட்டிருக்கிறது. அரசியலமைப்பு முதலாளித்துவ முறைக்கு மாறானதொரு பொருளாதார முறையை நிறுவி, உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் பொதுவுடைமை ஆக்கி, மனிதனை மனிதன் சுரண்டுவதைத் தடைசெய்கிறது. பொதுவுடைமைச் சொத்துகள் அனைத்தும் அரசின் சொத்துகளாகவோ அல்லது கூட்டுப் பண்ணைகள் (Collective farms), கூட்டுறவுக் கழகங்கள் ஆகியவைகளின் சொத்துகளாகவோ கருதப்படுகின்றன. நிலம், நீர், காடுகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்துச் செய்தித் தொடர்புச் சாதனங்கள், வங்கிகள், பெரும் விவசாயப் பண்ணைகள், பெரும்பாலான குடியிருப்பு வீடுகள் ஆகியவை அரசின் சொத்துகளாம். கூட்டுப் பண்ணைகள், கூட்டுறவுக் கழகங்கள் ஆகியவை மேற்கொண்டிருக்கும் விவசாயத்துக்கும் தொழிலுக்கும் தேவையான கால்நடைகள், கட்டடங்கள், கருவிகள், அவற்றின் உற்பத்திப் பொருள்கள் ஆகியவை அந் நிறுவனங்களின் சொத்துகளாம். சிறு உழவர்களும், கைத் தொழில்கள் செய்வோரும் வேறு ஆள்களை வேலைக்கு அமர்த்தாமல் தங்கள் சொந்த உழைப்பால் உழவிலும் தொழிலிலும் ஈடுபட அரசியலமைப்பு அனுமதிக்கிறது. குடிமக்களுக்குக் குறிப்பிட்ட அளவு சொந்தச் சொத்துகள் வைத்துக்கொள்ளும் உரிமையும் உண்டு. அவர்கள் ஊழியத்தின் ஊதியம், அதன் சேமிப்பு, குடியிருக்கும் வீடு, வீட்டு உபயோகத்திற்கான பொருள்கள், போன்றவை அவர்களில் தனிச் சொத்தாகக் கருதப்படுகிறது. இச் சொத்துகளை அவர்களின் சந்ததியினர்க்கு விட்டுச்செல்லும் உரிமையும் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. வேலை செய்து பிழைத்தல் அரசியலமைப்பால் மதிப்பிற்குரிய செயலெனப் பாராட்டப்படுகிறது. 'வேலை செய்யாதவர்கள் சாப்பிடவும் கூடாது' என்ற புனித பாலின் (St. Paul) பொன்மொழி அரசியலமைப்பில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருவரும் அவர் திறமைக்குத் தக்க வகையில் வேலைசெய்ய வேண்டுமென்றாலும், வேலைக்குத் தக்க வகையில் கூலி பெற வேண்டுமென்றும் அரசியலமைப்பு அறிவிக்கிறது. 'வேலைக்குத் தக்க வகையில் கூலி' என்பதற்குப் பதிலாகத் 'தேவைக்குத் தக்க வகையில் கூலி' என்பதே உண்மையான சமதருமமாகும் என்பது தற்கால அறிஞர்களின் கருத்தாகும்.

அடிப்படை உரிமைகளும் கடமைகளும்

அரசியலமைப்பில் பதினாறு விதிகள் (விதிகள் 118—133) குடிமக்களின் உரிமைகளையும் கடமைகளையும் விவரிக்கின்றன.

ரஷ்யாவில் பாட்டாளி வர்க்கத்தினரின் வல்லரசு நிலவுவதால், அவர்களின் மேம்பாட்டுக்குரிய பொருளாதார உரிமைகள் முதலிடம் பெறுகின்றன. குடிமக்கள் அனைவருக்கும் வேலைசெய்யும் உரிமையும், வேலையின் தரத்திற்கும் அளவிற்கும் தக்க வகையில் ஊதியம் பெறும் உரிமையும் உண்டு. ஓய்வு அனுபவிக்கக் கூடிய உரிமையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. வேலை செய்கின்றவர்களுக்கு ஓய்வு இன்றியமையாதது என்ற கருத்தை அரசியலமைப்பு ஒப்புக்கொள்வது பாராட்டத்தக்கது. ஒவ்வொரு வேலையிலுமுள்ள உழைப்பைப் பொறுத்து வேலை நேரம் நாளொன்றுக்கு ஏழு மணிகளாகவோ, ஆறு மணிகளாகவோ, நான்கு மணிகளாகவோ நிர்ணயிக்கப்படுகிறது. ஓய்வுக் காலங்களில் ஓய்வை அனுபவிப்பதற்குச் சம்பளத்துடன் விடுமுறை நாள்களும், களைப்பாறுவதற்கு விடுமுறை விடுதிகள், பொழுதுபோக்குச் சங்கங்கள் போன்ற வசதிகளும் செய்து தரப்படுகின்றன. குடிமக்களுக்கு முதுமையிலும், உடல் நலம் குன்றிய நிலையிலும், இயலாத காலத்திலும் (disability) அரசாங்கத்தால் பராமரிக்கப்படக்கூடிய உரிமையும் அளிக்கப்படுகிறது. அரசின் செலவில் சமுதாயக் காப்பீடு, இலவச மருத்துவச் சேவை, ஆரோக்கிய நிலையங்கள் (health resorts) ஆகிய வசதிகள் எல்லோருக்கும் செய்து தரப்படுகின்றன. குடிமக்களின் உரிமைகளில் கல்வி கற்கும் உரிமையும் ஒன்றாகும். முதல் எட்டு ஆண்டுகட்கு ஆண் பெண் அனைவருக்கும் கட்டாயக் கல்விக்கு அரசியலமைப்பு வகை செய்கிறது. பள்ளிப்படிப்பு என்பது எல்லோருக்கும் இலவசமாக்கப்பட்டிருக்கிறது; அதற்குமேல் படிப்புப் பயில்வோர் பலருக்கு அரசு உதவித்தொகை அளித்து ஊக்கமளிக்கிறது. அரசியலமைப்பு, தொழிற்கல்விக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் அளிக்கிறது என்பது அறியத்தக்கது. பண்ணைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை பார்ப்போருக்குக்கூட அவரவர் துறைக்குரிய மேற்பயிற்சி அளிக்கப்படுகிறது. எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கும் ஆண்களைப் போல, சமஉரிமை வழங்கப்படுகிறது. தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரின் நலன்களில் அரசு தனிப்பட்ட அக்கறை காட்டுகிறது. அரசியலமைப்பு அரசு வேறு, திருச்சபை வேறு என்று கூறி, எல்லோருக்கும் வழிபாட்டு உரிமையை வழங்குவதோடு நிற்காமல், சமய மறுப்புப் பிரசார (anti-religious propaganda) உரிமையையும் வழங்குகிறது. சமதருமக் கோட்பாடுகளுக்கு வலுவூட்ட பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தும் உரிமை ஆகியவைகள் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. தொழிற் சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள், இளைஞர் சங்கங்கள், கலாசார தொழில்நுட்ப விஞ்ஞான நிறுவனங்கள்,

பொதுவுடமைக் கட்சி ஆகிய அமைப்புகளில் சேரும் உரிமை குடிமக்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அரசியலமைப்பு மக்களின் உடலுரிமையைப் பாதுகாப்பதோடு, அவர்களின் வீடுகளில் யாரும் அத்துமீறி நுழையக்கூடாது எனவும் அறிவிக்கிறது. தொழிலாளர்களின் நலன்களுக்காக வாதாடியதற்காவும், அறிவியல் நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காகவும், தேசிய விடுதலைக்காகப் போராடியதற்காகவும் துன்புறுத்தப்படும் அயல் நாட்டுக் குடிமக்களுக்கு ரஷ்யாவில் புகலிடம் பெறும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது மற்ற அரசியலமைப்புகளில் காணப்படாத ஒரு புதுவிதமான உரிமையாகும்.

தாராளமான முறையில் உரிமைகளை வாரிவழங்கும் அரசியலமைப்பு, குடிமக்களிடமிருந்து சில கடமைகளையும் எதிர்பார்க்கிறது. அரசியலமைப்பையும் சட்டங்களையும் பின்பற்றுவதும், தொழிற் கட்டுப்பாட்டைக் காப்பதும், பொதுக் கடமைகளை நேர்மையாகச் செய்வதும், சமதருமச் சமுதாயத்தின் விதிகளை மதித்து நடப்பதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். அரசின் சொத்துகள் அனைத்தையும் காப்பது குடிமக்களின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும்; அவற்றிற்கு எதிராகக் குற்றங்கள் செய்வோர் மக்களின் பகைவர்கள் என அறிவிக்கப்படுகின்றனர். எல்லோரும் படைத்துறையில் பயிற்சி பெற வேண்டுமென்பது சோவியத்துச் சட்டம். இராணுவச் சேவை என்பது மதிப்புக்கும் பெருமைக்குமுரிய செயலெனக் கருதப்படுகிறது. நாட்டைக் காப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமை எனக் குறிப்பிடப்படுகிறது. தாய் நாட்டிற்கு எதிரான குற்றங்கள், குற்றங்களில் மிகக் கொடிய குற்றமாய்க் கருதப்படுகிறது.

கூட்டாட்சி

நான்கு மாநிலங்களைக் கொண்டு 1922ஆம் ஆண்டில் தோன்றிய சோவியத்துக் குடியரசு, இன்று பதினைந்து மாநிலங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு கூட்டாட்சியாக விளங்குகிறது. 1,70,75,000 சதுரக் கிலோமீட்டர் நிலப்பரப்பையும், 12,85,00,000 மக்கள்தொகையையும் உடைய ரஷ்ய மாநிலம், கூட்டாட்சியில் இணைந்திருக்கும் பதினைந்து மாநிலங்களில் மிகப்பெரிய மாநிலம் என்பது குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பின் பதினான்காம் விதி, மைய அரசின் ஆளுகைக்கு உட்பட்ட இனங்கள் எவையெவை எனக் கூறுகிறது. அயலரசுகளோடு தொடர்புகள், போரும் சமாதானமும், புதிய மாநிலங்களைச் சோவியத்துக் குடியரசில் இணைத்துக்கொள்ளுதல்,

தேசியப் பாதுகாப்பு, வெளிநாடுகளோடு வியாபாரம், பொருளாதாரத் திட்டங்கள், வங்கிகள், தொழில் விவசாய வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாகம், நாணயச் செலாவணி, நிலவுடைமை, இயற்கை வளங்கள், கல்வி, பொதுச் சுகாதாரம், தொழிற் சட்டம், நீதி நிருவாகம் ஆகியவை பற்றிய அடிப்படைக் கருத்துகளை முடிவு செய்தல், அரசியல் குற்ற மன்னிப்புச் சட்டங்கள் ஆகியவை மத்திய அரசிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருபத்துநான்கு இனங்களில் முக்கியமானவையாகும். அரசியலமைப்பின் பதினுன்காம் விதியில் அடங்காத மற்ற இனங்கள் அனைத்தும் மாநிலங்களுக்கு உரிமையாக்கப்பட்டிருக்கின்றன. அரசியலமைப்பு, தேசிய அரசு, மாநில அரசுகள் இரண்டையுமே இறைமை பொருந்திய அரசுகளென அறிவிக்கிறது.

மாநிலங்களின் அரசியலமைப்புகள் தேசிய அரசியலமைப்புக்கு ஒத்தனவாய் இருக்கவேண்டுமென்றும், மாநில அரசுகளின் சட்டங்கள் தேசிய அரசின் சட்டங்களுக்கு மாறுபட்டவையாய் இருப்பின் தேசிய அரசின் சட்டங்களே செல்லத்தக்கவை என்றும் அரசியலமைப்புக் குறிப்பிடுவது மைய அரசின் உயர்வை வலியுறுத்துவதாய் அமைகிறது. மாநில அமைச்சரவைகளின் ஆணைகளைத் தள்ளுபடி செய்யக்கூடிய அதிகாரம் மைய அரசின் பிரிசிடியத்திற்கு உண்டென்பதும், மாநிலங்களின் நிருவாகத் துறைகள் அவற்றிற்கு நிகரான மைய அரசின் நிருவாகத் துறைகளுக்குக் கீழ்ப்பட்டவை என்பதும், பல துறைகளில் சட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிய அடிப்படைக் கருத்துகளைத் தீர்மானிக்கும் உரிமை மைய அரசிற்கு உண்டு என்பதும், மாநிலங்களின் வரவுசெலவுத் திட்டங்கள் மைய அரசால் வரையப்படுகின்றன என்பதும், மைய அரசிற்கு மாநில அரசுகள்மீதுள்ள செல்வாக்கைத் தெளிவாக்குகிறது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாநில அரசியலமைப்பு உண்டு எனத் தேசிய அரசியலமைப்பு அறிவித்தபோதிலும், அநேகமாக எல்லா மாநிலங்களின் அரசியலமைப்புகளும் தேசிய அரசியலமைப்பைப்போன்றே தோற்றமளிக்கின்றன. கூட்டாட்சியில் இணைந்திருக்கும் மாநிலங்களுக்கு அதிலிருந்து பிரிந்துசெல்லக் கூடிய உரிமையை அரசியலமைப்பின் பதினேழாவது விதி வழங்குகிறது. ஆனால், இதுவரை எந்த மாநிலமும் பிரிந்து சென்றதோ, அல்லது பிரிந்து செல்ல முயன்றதோ இல்லை என்பதிலிருந்து இந்த உரிமை ஏட்டளவோடு நிற்கிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம். மாநிலங்களில் ஒவ்வொன்றும் அயல்நாடுகளோடு தொடர்புகள் வைத்துக்கொள்ளலாம் என்றும், அவைகளோடு

உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம் என்றும், அவைகளோடு தூதர்களைப் பரிமாறிக்கொள்ளலாம் என்றும் அரசியலமைப்புக் குறிப்பிடுகிறது. இந்த விதியின் அடிப்படையில்தான் ஐக்கிய நாடுகள் சபையில் சோவியத்துக் குடியரசுக்கு ஓர் இடமும், உக்ரேன் (Ukraine), பைலோரஷ்யா (Byelorussia) ஆகிய இரு மாநிலங்களுக்கு இரு இடங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கு வேண்டிய படைப் பிரிவுகளை வைத்துக்கொள்ளும் உரிமையும் உண்டு. ஆனால், அயலரசுகளோடு உறவுகள், படைகளின் அமைப்பு ஆகிய இனங்கள் அரசியலமைப்பால் மத்திய அரசிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், அதன் இசைவின்றி மாநில அரசுகள் அத் துறைகளில் எதுவும் செய்ய இயலாது என்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத்துக் குடியரசு நூற்றுக்கு மேற்பட்ட மக்களினங்களைக் கொண்ட நாடாகும். இன்றிருக்கும் ஒவ்வொரு மாநிலமும் அதில் வாழும் பெரும்பாலான இனத்தவரின் பெயரால் அழைக்கப்படுகிறது. ரஷ்யா போன்ற மாநிலங்களில் பல மாறுபட்ட இனத்தவர்கள் வாழ்வதால், மாநில அரசிற்குள் அவைகளின் தனித்தன்மையைக் காக்கும் வகையில் அவைகளுக்குத் தனி அமைப்புகள் தரப்பட்டிருக்கின்றன. இன்று சோவியத்துக் குடியரசில் மேற்கண்ட அமைப்புகளாக இருபது தன்னாட்சிக் குடியரசுகளும் (Autonomous Republics), எட்டுத் தன்னாட்சிப் பிரதேசங்களும் (Autonomous Regions), பத்துத் தேசியப் பகுதிகளும் (National Areas) இருக்கின்றன. ரஷ்ய மாநிலத்தில் மட்டும் பதினாறு தன்னாட்சிக் குடியரசுகளும், எட்டுத் தன்னாட்சிப் பிரதேசங்களும், பத்துத் தேசியப் பகுதிகளும் அடங்கி இருக்கின்றன. இதுபோன்ற ஏற்பாடு சோவியத்துக் கூட்டாட்சியில் மட்டும் காணப்படும் ஒரு புதுமையான அம்சமாகும்.

பிரிசிடியம் (Presidium)

சோவியத்து அரசியலமைப்பு, 'பாராளுமன்றத்தின் பிரிசிடியம்' என்ற ஒரு புதுமையான அமைப்பை நிறுவியிருக்கிறது. முப்பத்து ஏழு அங்கத்தினர்களைக் கொண்டிருக்கும் இச் சபையைச் சோவியத்துக் குடியரசின் கூட்டுத் தலைவர் (Collegial Head of State) என அழைக்கலாம். பிரிசிடியத்தின் தலைவர் சோவியத்துக் குடியரசின் தலைவர் எனக் கருதப்பட்டாலும், அவர் மற்ற உறுப்பினர்களைவிட உயர்ந்தவர் என எண்ணுவதற்கு இடமில்லை. அரசாங்கத்தில் பாராளுமன்றம், அமைச்சரவை, தலைமை நீதிமன்றம் போன்ற நிறுவனங்கள் இருந்தபோதிலும், அவற்றிற்கு இயல்பாக உரிய அதிகாரங்களில் சிலவற்றை அரசியலமைப்பு

பிரிசிடியத்திடம் ஒப்படைக்கிறது. பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் இச் சபை, பாராளுமன்றக் கூட்டத்தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களிலும் அமர்ந்து, அதன் நிரந்தரக் குழு என்று கருதப்படக்கூடிய அளவுக்குச் செல்வாக்கோடு செயல்பட்டு வருகிறது. சோவியத்து அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினைக்கு இடமில்லை என்பதற்குப் பிரிசிடியம் சிறந்த சான்ருக விளங்குகிறது. சட்டங்களை ஆக்கவும், ஆட்சிப் பரிபாலனம் செய்யவும், நீதி நிர்வாகம் செய்யவும் பிரிசிடியத்துக்கு உள்ள அதிகாரங்களை உண்மையாக உணர்ந்தோர், அது சோவியத்து நிறுவனங்களில் தலையாயது என்பதை மறுக்க மாட்டார்கள்.

பொதுவுடைமைக் கட்சி

சோவியத்துக் குடியரசு என்ற மாளிகையைத் தாங்கி நிற்கும் ஒற்றைத் தூணகப் பொதுவுடைமைக் கட்சி கருதப்படுகிறது. அரசும் கட்சியும் ஒன்றே என்று எண்ணக்கூடிய அளவுக்கு ஒன்ருேடு மற்ருென்று பின்னிப் பிணைந்து காணப்படுகிற நிலையை மற்ற நாடுகளில் நாம் காண்பது அரிது. கட்சியின் தீர்மானங்களே அரசின் தீர்மானங்களாய் அறிவிக்கப்படுவதால் ஒன்றில் மற்ருென்று முழுமையாய் ஐக்கியமாகி விடுவதைப் பார்க்கின்ருேம். அரசியலமைப்பு, பொதுவுடைமைக் கட்சியை உழைப்பாளிகளின் முன்னணி என்றும், உழைப்பாளிகளுக்காக உள்ள நிறுவனங்களில் இதுவே அவர்களின் இதயம் போன்றது என்றும் வருணிக்கிறது. பொதுவுடைமைக் கட்சியைத் தவிர மற்றக் கட்சிகளுக்கு நாட்டில் இடமில்லையாதலால், அங்கே எதிர்க்கட்சிக்கு இடமில்லை என்பதைக் கூறத் தேவையில்லை. எதிர்க்கட்சி இல்லை என்ருல் இருக்கின்ற அரசாங்கத்தை மாற்றி வேறு வகையான அரசாங்கத்தை அமைக்கும் வழியுமில்லை. இன்று நாடெங்கிலும் சிறியதும் பெரியதுமாய் 3,59,000-க்கு மேற்பட்ட கட்சி அமைப்புகள் இயங்குகின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மத்தியக் குழுவின் அரசியல் அலுவலகம் (Politbureau) என்னும் சிறு குழுவே பொதுவுடைமைக் கட்சியின் மேலிடமாக இருந்து அதன் நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறது.

அரசியலமைப்புத் திருத்தம்

அரசியலமைப்பின் கடைசி விதியான 146ஆவது விதி, அரசியலமைப்பைத் திருத்தும் முறையை ஒரே வாக்கியத்தில் விவரிக்கிறது. அரசியலமைப்புத் திருத்தங்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தனித்தனியாக மூன்றில் இரு பங்குப் பெரும்பான்

மையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என அது கூறுகிறது. சோவியத்துக் குடியரசு ஒரு கூட்டாட்சியாக இருந்தும் அங்கே அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு மாநிலங்களின் இணக்கம் தேவையில்லை என்பது அறியத்தக்கது. மேலும் அரசியலமைப் பிற்குத் திருத்தங்களை முன்மொழியும் உரிமை தேசியப் பாராளு மன்றத்திற்கு மட்டுமே தரப்பட்டிருக்கிறது. அரசியலமைப்பு, தேசிய அரசு மாநில அரசுகள் இரண்டையும் இறைமை பொருந்திய அரசுகள் என அறிவித்தபோதிலும், அரசிய லமைப்பைத் திருத்தும் அதிகாரத்தை மத்திய அரசின் கரங்களில் மட்டும் ஒப்படைத்திருப்பது விரும்பத்தக்கதன்று. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சிகளில் பெரும் பாலான மாநிலங்களின் இசைவைப் பெறுமல் அரசியலமைப்பில் எந்தத் திருத்தமும் செய்ய முடியாது என்ற செய்தியிலிருந்து சோவியத்துக் குடியாட்சி அவைகளினின்று மாறுபட்டது என்பதை உணரலாம்.

2. கேபினட் அமைச்சரவை

(The Cabinet)

[அமைப்பு—அதிகாரங்கள்—திட்டக் குழு.]

அமைப்பு

கூட்டாட்சியின் அமைச்சரவை, அரசியலமைப்பால் 'அர சாங்கம்' என அழைக்கப்படக்கூடிய அளவுக்கு முக்கியமான நிறுவனமாக அமைந்திருப்பது நோக்கற்பாலது. மேலும் அது அரசின் மிக உயர்ந்த நிருவாக ஆட்சித்துறை அமைப்பு எனச் சிறப் பிக்கப்படுகிறது. சோவியத்துக் குடியரசின் அமைச்சரவை ஏறத் தாழ நூறு அங்கத்தினர்களைக் கொண்டிருக்கும் ஒரு பெரிய நிறுவனமாகும். அதில் ஒரு தலைவரும், முதல் துணைத்தலைவர் களும் (First Vice-Chairmen), துணைத்தலைவர்களும், அமைச்சர் களும், அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கும் பல குழுக்களின் தலைவர்களும், மாநில அமைச்சரவைகளின் தலைவர்களும் இடம் பெறுகின்றனர். அரசியலமைப்பு இருவகையான அமைச் சகங்களை நிறுவுகிறது. அயல்நாட்டு வாணிகம், வாணிகக் கப்பல்கள், சிவில் வானப் போக்குவரத்து (civil aviation), இருப்புப் பாதைகள் ஆகியவற்றிற்கான அமைச்சகங்கள் 'தேசிய அமைச்சகங்கள்' (All-Union Ministries) என்றும், கல்வி, சுகாதாரம், அயல்நாட்டு அலுவல்கள், பண்பாடு, பாதுகாப்பு, செய்திப் போக்குவரத்துத் தொடர்புகள், விவசாயம், நிதி ஆகிய வற்றிற்கான அமைச்சகங்கள் 'மாநிலக் குடியரசுகளுக்கான அமைச்சகங்கள்' (Union-Republican Ministries) என்றும் அழைக் கப்படுகின்றன. ஒவ்வொரு தேசிய அமைச்சகமும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் துறைக்குரிய அலுவல்களைத் தானே நேரடியாக நிருவாகம் செய்யும். ஒவ்வொரு மாநிலக் குடியர சிற்கான அமைச்சகமும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை, மாநிலங்களில் நிலவும் அதை ஒத்த அமைச்சகத்தின் மூலமாக நிருவாகம் செய்யும். அரசியலமைப்பு, பதினாறு குழுக்

களைக் கூறி அவற்றின் தலைவர்களும் அமைச்சரவையில் இடம் பெறுவார்கள் என அறிவிக்கிறது. பிரிசிடியம் விரும்பினால் அரசியலமைப்பில் கூறப்படாத அதிகாரிகளையும் அமைச்சரவையின் அங்கத்தினர்களாக்கலாம். பிரிட்டனில் இருப்பது போலப் பாராளுமன்ற உறுப்பினர்கள்மட்டுமே அமைச்சர்களாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அதில் இடம் பெருத உயர் அதிகாரிகளும் அமைச்சர்களாகப் பணியாற்றும்படி அழைக் கப்படுவது அடிக்கடி நிகழக்கூடிய செயலாகும். அமைச்சர்களில் பெரும்பாலோர் அவர்களின் அரசியல் தொண்டுக்காக அமைச்சர் களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் எனக் கூறுவதைவிட அவர் களின் நிருவாகத் திறமைக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் எனக் கூறுவதே பொருத்தமாகும். அநேகமாக ஒவ்வொரு துறைக்கும் அத் துறையில் நீண்டநாள் அனுபவமும் நல்ல அறிவும் உடையவரே அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படுவதைச் சோவி யத்து மக்கள் விரும்புகின்றனர்.

தேசிய இனங்கள் சபை, கூட்டாட்சி சபை ஆகிய இரு சபை களின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் இணைப்புக் கூட்ட மொன்றில் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மற்ற நாடு களைப்போல நாட்டின் தலைவர் அமைச்சர்களை நியமிக்கும் வழக்கம் சோவியத்துக் குடியரசில் கிடையாது. சாதாரணமாக அமைச் சரவை நான்கு ஆண்டுகள் பதவியிலிருக்கும். அதைத் தேர்ந் தெடுத்த பாராளுமன்றம் நான்கு ஆண்டுகட்கு முன்பாகக் கலைக் கப்படுமானல் அமைச்சரவையும் கலைக்கப்படும் என்பதைக் கூறத் தேவையில்லை. அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப் புள்ளது என்றும், அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது என்றும் அரசியலமைப்பு அறிவிக்கிறது. பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில், அது பாராளு மன்றத்தின் நிரந்தரக் குழுவான பிரிசிடியத்திற்கு விடையிறுக்கக் கடமைப்பட்டது. அமைச்சரவையின் செயல்கள் அனைத்தும் பாராளுமன்றத்தின் சட்டங்களின் அடிப்படையிலும், பிரிசிடி யத்தின் ஆணைகளின் அடிப்படையிலும் அமைவது அவசியம். அதன் முடிவுகளும் கட்டளைகளும் நாடெங்கிலும் செல்லத்தக்கன.

அதிகாரங்கள்

உலகின் பல நாடுகளில் அரசியலமைப்பு அமைச்சரவையின் அதிகாரங்களை விவரமாகக் கூறுவதில்லை. ஆனல் சோவியத்துக் குடியரசின் அரசியலமைப்பு அதன் அமைப்பினைப் பற்றி மட்டுமல் லாமல் அதிகாரங்களைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறது. தேசிய அமைச்சகங்கள், மாநிலங்கள் பற்றிய அமைச்சகங்கள்,

அரசு குழுக்கள் ஆகிய நிறுவனங்களின் பணிகள் ஒன்றிற்கொன்று முரண்படாது ஒத்திசைவிக்கும்படி செய்வது அமைச்சரவையின் கடமையாகும். அரசாங்கத்தின் பல்வேறு அங்கங்கள் மாறுபட்ட நோக்கங்களைப் பின்பற்ருமல் ஒரே மாதிரியான நோக்கங்களைப் பின்பற்றும்படி செய்வது எத்துணை அவசியம் என்பதை வற்புறுத்தத் தேவையில்லை. ஐந்தாண்டுத் திட்டம் போன்ற பொருளாதாரத் திட்டம், வருடாந்திர வரவுசெலவுத் திட்டம், நிதி நிலையை வலுவூட்டுவதற்கான ஏற்பாடுகள் ஆகியவற்றை அமைச்சரவை ஏற்கும். மேலும் அது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கும், நாட்டின் நலன்களைக் காப்பதற்கும், குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அயலரசுகளோடு வைத்துக்கொள்ளப் படும் உறவுகள் அமையவேண்டிய வழிமுறைகளை அமைச்சரவையே தீர்மானிக்கும். இராணுவச் சேவைக்கென ஒவ்வோரு ஆண்டும் எவ்வளவு குடிமக்கள் அழைக்கப்பட வேண்டுமென முடிவு செய்வதோடு, அது படைப் பிரிவுகள் எவ்வாறு அமைக்கப் படவேண்டுமெனத் தீர்மானிக்கிறது. அமைச்சரவைக்குப் பொருளாதாரம், பண்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றிற்கான அரசு குழுக்கள், சிறப்புக் குழுக்கள், மத்தியக் கழகங்கள் (Central Boards) ஆகியவற்றை நியமிக்கும் அதிகாரமும் உண்டு.

கூட்டரசின் எல்லைக்குட்பட்ட இனங்கள்மீது மாநில அமைச்சரவைகள் எடுக்கும் முடிவுகளையும், பிறப்பிக்கும் கட்டளைகளையும் அமைச்சரவையால் நிறுத்தி வைக்க முடியும். கூட்டரசின் தனிப்பட்ட அமைச்சர்கள் அறிவிக்கும் விதிகளையும் ஆணைகளையும் அது நீக்கலாம். அமைச்சர்கள், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இரு சபைகளின் அங்கத்தினர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். எந்த மன்றத்தில் கேள்வி கேட்கப்படுகின்றதோ அந்த மன்றத்தில் மூன்று நாள்களுக்குள் தொடர்புடைய அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று அரசியலமைப்பு வற்புறுத்துகிறது. தேசிய இனங்கள் சபையிலும் கூட்டரசு சபையிலும் மசோதாக்களைத் தோற்றுவிக்கும் உரிமையும் அமைச்சர்களுக்கு உண்டு. உண்மையில் பாராளுமன்றத்தில் தோன்றும் பெரும்பாலான மசோதாக்கள் அமைச்சர்களால்தான் முன்மொழியப்படுகின்றன. அமைச்சரவைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை அறிவோமானல், அது அரசியல் நிறுவனங்களில் முக்கியமானவற்றில் ஒன்ருய் ஏன் விளங்குகிறது என்பது தெளிவாகும்.

திட்டக் குழு

அரசின் குழுக்களில் 'கோஸ்பிளான்' (Gosplan) என அழைக்கப்படும் திட்டக் குழுவே மிக முக்கியமான குழு எனக் கருதப்படுகிறது. பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி, நாட்டின் பொருளாதார வளம் எவ்வெத் துறைகளில் மேலும் வளர வேண்டும் எனத் தீர்மானித்து, அதன் திட்டங்களும் தீர்மானங்களும் நடைமுறையில் செயல்படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிக்கும் கடமை திட்டக் குழுவைச் சேர்ந்தது. சமுதாயத்தின் உற்பத்தித் திறனை வளர்ப்பதும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தறிவதும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், திட்டக் குழுவின் பொறுப்புகளில் அடங்கும். தேசியத் திட்டக் குழு மாநிலத் திட்டக் குழுக்களோடு நெருங்கிய தொடர்புகொண்டு இயங்குகின்றது. விலைக் குழு (Prices Committee) என்னும் அமைப்பு, திட்டக் குழுவின் கிளைக் குழுவாக இயங்கிப் பொருள்களின் மொத்த விலைகளை நிர்ணயிக்கிறது.

அமைச்சரவை அதனுடைய நடவடிக்கைகளைப் பற்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கும். அவ்வறிக்கைகள் அங்கத்தினர்களால் விவாதிக்கப்படும். அமைச்சர்களின் செயல்களைப் பற்றி அவர்கள் ஆலோசனைகள் தெரிவிப்பார்கள். அமைச்சர்கள் சட்டமன்றங்களுக்கு அவர்களின் செயல்களைப்பற்றி அறிவிப்பதுபோல, குடிமக்களுக்கும் அறிவிக்கக் கடமைப்பட்டவர்கள். மாநாடுகளிலும் தொழிற் சங்கங்களிலும் உரை நிகழ்த்தியும், வானொலியில் பேசியும், தொலைக் காட்சியில் தோன்றியும் அமைச்சர்கள் அவர்கள் செய்து வரும் காரியங்களை மக்களுக்கு எடுத்துக்கூறி அரசாங்கத்திற்கு ஆதரவு தேடுவார்கள்.

3. சோவியத்துப் பாராளுமன்றம்

(The Supreme Soviet)

[முன்னுரை—அமைப்பு—அதிகாரங்கள் : (அ) சட்டமியற்றுதல்—(ஆ) அரசியலமைப்பைத் திருத்துதல்—(இ) கூட்டமைப்பில் புதிய மாநிலங்களைச் சேர்த்தல்—(ஈ) அயல்நாட்டு அலுவல்கள்—(உ) நிதித் துறை—(ஊ) அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல்—(எ) கொள்கை விளம்பரம்—(ஏ) ஏற்றத் தாழ்வற்ற இரு சபைகள்,]

முன்னுரை

'சுப்ரீம் சோவியத்து' (Supreme Soviet) என அழைக்கப்படும் சோவியத்துப் பாராளுமன்றம் அரசின் மிக உயர்ந்த நிறுவனம் என மதிக்கப்படுகிறது. மக்களுக்குச் சொந்தமான இறைமையின் இருப்பிடமாகக் கருதப்படும் சோவியத்துப் பாராளுமன்றத்திற்கு நாட்டிலுள்ள மற்ற எல்லா நிறுவனங்களும் கீழ்ப்படிந்து நடப்பது இயல்பே. பாராளுமன்றத்தின் இரு சபைகளில் ஒன்று தேசிய இனங்கள் சபை (Soviet of Nationalities) என்றும், மற்றொன்று கூட்டரசு சபை (Soviet of the Union) என்றும் அழைக்கப் படுகின்றன. தேசிய இனங்கள் சபை, நாட்டின் பல்வேறு இனங் களின் நலன்களைப் பாதுகாக்கவும்; கூட்டரசு சபை, நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும் நிறுவப்பட்டிருக்கின்றன.

அமைப்பு

தேசிய இனங்கள் சபையில் 750 உறுப்பினர்கள் இருக் கின்றனர். மாநிலங்களில் ஒவ்வொன்றும் 32 பிரதிநிதிகளையும், தன்னாட்சிக் குடியரசுகளில் ஒவ்வொன்றும் 11 பிரதிநிதிகளையும், தன்னாட்சிப் பிரதேசங்களில் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதிகளையும், தேசியப் பகுதிகளில் ஒவ்வொன்றும் 1 பிரதிநிதியையும் தேசிய இனங்கள் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றன. கூட்டரசு சபையில் 767 உறுப்பினர்கள் இருக்கின்றனர். 3,00,000 குடி

மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே 12,85,00,000 மக்கள் தொகையுடைய ரஷ்ய மாநிலத்திற்குக் கூடுதலான பிரதிநிதிகளும், 13,00,000 மக்கள்தொகையுடைய எஸ்டோனியா (Estonia) மாநிலத்திற்குக் குறைவான பிரதிநிதிகளும் இருப்பது இயல்பே.

இரு சபைகளின் உறுப்பினர்களும் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு சபைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் எழுமாளுல் அவற்றைத் தீர்த்துவைக்க இரு சபைகளிலிருந்தும் ஒத்த எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சமரசக் குழு கருத்து வேறுபாடுகளைக் களைய முயலும். அதன் முயற்சி வெற்றி பெறவில்லை எனின் மீண்டும் இரு சபைகளும் ஓர் உடன்பாட்டுக்கு வர முயலும். உடன்பாடு ஏற்படாது என்பது உறுதியாளுல், பிரிசிடியம் இரு சபைகளையும் கலைத்து புதிய பாராளுமன்றத்திற்குரிய தேர்தலை நடத்த ஆணையிடும். இரு சபைகளின் கூட்டத்தொடர்களும் ஒரே சமயத்தில் தொடங்கி ஒரே சமயத்தில் முடிவடைகின்றன. ஆண்டொன்றுக்கு இரு சாதாரணக் கூட்டத்தொடர்கள் பிரிசிடியத்தால் கூட்டப்படுகின்றன. ஆளுல், ஒவ்வொரு முறையும் பாராளுமன்றம் ஒரு வாரத்திற்குமேல் அமர்வதில்லை. உலகில் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு குறைவான நாள்கள் கூடும் பாராளுமன்றத்தை நாம் காண்பது அரிது. பிரிசிடியம் அது விரும்பினுலோ அல்லது மாநிலம் ஒன்றின் விருப்பத்திற் கிணங்கவோ, பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டத்தைக் கூட்ட அரசியலமைப்பு வகை செய்கிறது. இரு சபைகளும் சில அலுவல் களுக்கு ஒன்ருகச் சேர்ந்து அமர்வதும், சில அலுவல்களுக்ுத் தனித்தனியாக அமர்வதும் வழக்கம். தேசிய இனங்கள் சபை ஒரு தலைவரையும் நான்கு துணைத்தலைவர்களையும், கூட்டரசு சபை ஒரு தலைவரையும் நான்கு துணைத்தலைவர்களையும் தேர்ந் தெடுக்கின்றன. இரு சபைகளின் இணைப்புக் கூட்டங்களுக்குக் கூட்டரசு சபையின் தலைவரும் தேசிய இனங்கள் சபையின் தலைவரும் மாறிமாறித் தலைமை தாங்குவார்கள் என அரசிய லமைப்பு அறிவிக்கிறது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சபைகள் கூடியவுடன் உறுப்பினர்களின் தேர்தல்கள் செல்லத்தக்கனவா என்பதை அறிய ஒவ்வொரு சபையும் 'நற்சான்றுக் குழு' (Credentials Committee) ஒன்றை அமைத்து, அதன் முடிவுகள்படி உறுப் பினர்களின் தேர்தல்களை ஏற்கவோ மறுக்கவோ செய்யும். பாராளுமன்றத்தின் அனுமதியில்லாமல் அதன் உறுப்பினர்கள் மீது வழக்குத் தொடரவோ அவர்களைக் கைது செய்யவோ

கூடாது என அரசியலமைப்பு அறிவிக்கின்றது. அதன் கூட்டத் தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் உறுப்பினர்கள்மீது வழக்குத் தொடரவோ அவர்களைக் கைது செய்யவோ நேர்ந்தால், பிரிசிடியத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

தேசிய இனங்கள் சபையின் உறுப்பினர்களும், கூட்டரசு சபையின் உறுப்பினர்களும் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வயது வந்தோர் அனைவர்க்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் பதினெட்டு வயதை அடைந்த ஆண் பெண் அனைவர்க்கும் இனம், சமயம், பால், கல்வி, குடியிருக்கும் இடம், சமூக நிலை, சொத்துடமை, முன்னுள் நடவடிக்கைகள் ஆகியவை எப்படியிருப்பினும் வாக்குரிமை வழங்கப்படுகிறது. இருபத்தொரு வயதை அடைந்த வாக்காளர்கள் அனைவரும் இரு சபைகளுக்கும் போட்டியிடத் தகுதியுடையவர்களே. வாக்காளர்கள் அனைவரும் ஒருவர் தவறுமல் வாக்களிக்கவேண்டும் என்பதற்காகத் தேர்தல்களை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை ஆறு மணிமுதல் இரவு பத்து மணிவரை நடத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1939ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வரும் எல்லாப் பொதுத் தேர்தல்களிலும் 99 சதவிகிதத்துக்குமேலான வாக்காளர்கள் வாக்களித்திருக்கின்றனர் என்ற செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. வேட்பாளர்களை நியமிக்கும் உரிமையை அரசியலமைப்பு, பொதுவுடைமைக் கட்சிக்கும், தொழிற்சங்கங்களுக்கும், கூட்டுறவுக் கழகங்களுக்கும், இளைஞர் சங்கங்களுக்கும், கலாசாரக் கழகங்களுக்கும் தருகின்றது. ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு வேட்பாளர் பெயரே பதிவு செய்யப்படுகிறது என்பதும், அவரே ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதும் சோவியத்துத் தேர்தல் முறையின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். பாராளுமன்றத்திற்கு அனுப்பப்படும் உறுப்பினர்களைத் திருப்பி அழைத்துக்கொள்ளும் (recall) உரிமையும் வாக்காளர்களுக்கு உண்டு. தங்களுடைய கடமையைச் செய்யத் தவறும் பிரதிநிதிகளும், வாக்காளர்கள் அவர்கள்பால் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு உகந்த வகையில் நடக்கத் தவறும் பிரதிநிதிகளும், தங்கள் பதவிக்குரிய கண்ணியத்தோடு செயல் படத் தவறும் பிரதிநிதிகளும் திருப்பி அழைக்கப்படலாம் என அரசியலமைப்பின் 142ஆம் விதியும், 1959ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் ஒன்றும் கூறுகின்றன. ஐந்தாவது ஆறுவது சோவியத்துப் பாராளுமன்றங்களிலிருந்து பத்துப் பிரதிநிதிகள் வாக்காளர்களால் திருப்பி அழைக்கப்பட்டனர் என்ற செய்தியிலிருந்து இந்த உரிமை ஏட்டளவோடு நிற்கவில்லை என்பதையும், உண்மையாகவே பயன்படுத்தப்படுகிறது என்பதையும் அறிகிறோம்.

மற்ற நாடுகளின் பாராளுமன்றங்களைப் போன்று சோவியத்துப் பாராளுமன்றத்திலும் நிலைக் குழுக்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. தேசிய இனங்கள் சபையில் பத்து நிலைக் குழுக்களும், கூட்டரசு சபையில் பத்து நிலைக் குழுக்களும் இயங்கிவருகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் ஏதாவதொரு குழுவில் இடம் பெறுவார்கள். பாராளுமன்றத்தால் குழுக்களுக்கு அனுப்பப்படும் மசோதாக்கள் அவற்றால் நன்கு ஆராயப்படும். சில சமயங்களில் குழுக்களே மசோதாக்களை வரைந்து அவற்றைப் பாராளுமன்றத்தில் முன் மொழியும். குழுவின் உறுப்பினர்கள் பல இடங்களுக்கும் பயணம் செய்து, சமுதாயத்தின் பல படிகளிலுள்ள நூற்றுக் கணக்கான மக்களைக் கண்டு பேசி, தேவையான விவரங்களைச் சேகரித்து அவற்றின் அடிப்படையில் மசோதாக்கள்மீது தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பார்கள்.

அதிகாரங்கள்

நாட்டு மக்கள் அனைவரின் விருப்பு வெறுப்புகளைப் பிரதி பலிக்கும் பேரவையாகக் கருதப்படும் சோவியத்துப் பாராளு மன்றம் அரசின் நிறுவனங்களில் முதன்மையானதாகக் கருதப் படுகிறது. பதினைன்குகோடிக்கு மேற்பட்ட வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1517 பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் சோவியத்துப் பாராளுமன்றம் ஈடு இணையற்ற நிறுவனமாக விளங்குவதில் வியப்பொன்றுமில்லை. சோவியத்துக் குடியரசை பாதிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அனைத்தும் பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டவையே.

சட்டமியற்றுதல்

சட்டமியற்றும் அதிகாரமே பாராளுமன்றத்தின் அதிகாரங் களில் முதன்மையானதாகும். அரசியலமைப்பின் பதினைன்காம் விதியில் காணப்படும் இடங்களில் எந்த இனத்தின்மீது வேண்டு மென்றாலும் பாராளுமன்றம் சட்டம் இயற்றமுடியும். பாராளு மன்றத்தின் சட்டங்களை மறுக்கக்கூடிய அதிகாரமோ, அவை செல்லத்தக்கவையல்ல என அறிவிக்கக்கூடிய அதிகாரமோ நாட்டில் எந்த நிறுவனத்திற்கும் இல்லை என்பது அறியத் தக்கது. பாராளுமன்றத்தில் தோற்றுவிக்கப்படும் மசோதாக்கள் அமைச்சரவை, பிரிசிடியம், கட்சியின் அரசியல் அலுவலகம் போன்ற அமைப்புகளின் ஆதரவைப் பெற்றவையாய் இருப்பதால், அவை பாராளுமன்றத்தால் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

அரசியலமைப்பைத் திருத்துதல்

அரசியலமைப்பைத் திருத்தும் உரிமை பாராளுமன்றத்திற்கு மட்டுமே உரியதாகும். அது விரும்பினால் இரு சபைகளின் மூன்றில் இரு பங்குப் பெரும்பான்மையான வாக்குகளால் அரசியலமைப்பில் எந்தத் திருத்தத்தையும் கொண்டு வரலாம். வேறு எந்தக் கூட்டாட்சிப் பாராளுமன்றமும் அரசியலமைப்பை இவ்வளவு எளிதாகத் திருத்த முடியாது என்பது குறிப்பிடத் தக்கது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து போன்ற நல்ல கூட்டாட்சிகளில் மாநிலங்களின் இசைவைப் பெருமல் அரசியலமைப்பைத் திருத்துவதென்பது இயலாத காரியம். மேலும் மாநிலங்களின் அரசியலமைப்புகள் தேசிய அரசியலமைப்புக்கு ஒத்திருக்கின்றனவா எனக் கண்காணித்து, தேசிய அரசியலமைப்பின் மேன்மையை நிலை நாட்டுவது பாராளுமன்றத்தின் பொறுப்பாகும்.

கூட்டமைப்பில் புதிய மாநிலங்களைச் சேர்த்தல்

சோவியத்துக் கூட்டாட்சியில் சேரவிரும்பும் புதிய மாநிலங்கள் பாராளுமன்றத்தின் இசைவைப் பெற்ற பிறகே அவ்வாறு சேர முடியும். சோவியத்துக் குடியரசில் புதிதாக உருவாக்கப்படும் தன்னாட்சிக் குடியரசுகளுக்கும், தன்னாட்சிப் பிரதேசங்களுக்கும், தேசியப் பகுதிகளுக்கும் பாராளுமன்றத்தின் இசைவு தேவை. மாநிலங்களுக்கிடையே நிகழும் எல்லை மாற்றங்களும் அதன் ஒப்பத்தோடுதான் நடைபெறவேண்டும் என அரசியலமைப்பு வற்புறுத்துகிறது.

அயல்நாட்டு அலுவல்கள்

சோவியத்துக் குடியரசு அயல்நாடுகளோடு பேண வேண்டிய தொடர்புகளைத் தீர்மானிப்பது தேசியப் பாராளுமன்றமாகும். அயலரசுகளோடு பிரதிநிதிகளைப் பரிமாறிக்கொள்வது, உடன்படிக்கைகள் செய்துகொள்வது ஆகியவைபற்றிப் பாராளுமன்றமே முடிவு செய்யும். மேலும் அது மாநில அரசுகள் அயல்நாடுகளோடு வைத்துக்கொள்ளும் உறவுகளைப்பற்றிய விதிகளையும் நிர்ணயிக்கும். சோவியத்துக் குடியரசின் பாதுகாப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பாராளுமன்றமே செய்ய வேண்டுமென அரசியலமைப்பு அறிவிக்கிறது. மாநில அரசுகளுக்குப் படைப் பிரிவுகளை வைத்துக்கொள்ளும் உரிமை உண்டெனினும், அவை அமைய வேண்டிய முறைகளைப் பாராளுமன்றமே முடிவுசெய்யும்.

நிதித் துறை

வருடாந்திர வரவு செலவுத் திட்டப் பட்டியலை ஏற்கும் உரிமை பாராளுமன்றத்தின் உரிமைகளில் ஒன்ருகும். வரிகளில்

எவை எவை மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும், வட்டார அரசுகளுக்கும் செல்ல வேண்டுமென அது தீர்மானிக்கும். ஐந்தாண்டுத் திட்டம் போன்ற பொருளாதாரத் திட்டங்களை ஏற்பதும் பாராளுமன்றமேயாகும். கடன் வாங்குவதும், கடன் கொடுப்பதும் அதன் அனுமதியில்லாமல் நடைபெற முடியாது.

அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல்

இரு சபைகளின் இணைப்புக் கூட்டமொன்றில் அவற்றின் உறுப்பினர்கள் பிரிசிடியத்தையும், அமைச்சரவையையும், தலைமை நீதிமன்றத்தையும், தலைமை வழக்கறிஞரையும் (Procurator–General) தேர்ந்தெடுக்கின்றனர். பிரிசிடியமும் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவை என அரசியலமைப்பு அறிவிக்கிறது. இவ்வளவு முக்கியமான நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் உலகில் மிகச்சில பாராளுமன்றங்களுக்கே உண்டு.

கொள்கை விளம்பரம்

மாஸ்கோவிற்கு (Moscow) வரும் பிரதிநிதிகள் அதிகம் சாதிக்க முடிவதில்லை என்றாலும், அது அவர்களுக்கு ஒரு புதிய அனுபவம் என்பதை மறுக்க முடியாது. நாடெங்கிலுமிருந்து வரும் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளோடு பழகவும், பெருந்தலைவர்களின் உரைகளைக் கேட்கவும், அரசாங்கத்தின் சாதனைகளை நேரில் அறியவும் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்கள் உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. தொகுதிகளுக்குச் செல்லும் பிரதிநிதிகள், அரசின் நற்செயல்களை மக்களுக்கு எடுத்துக் கூறி, அரசாங்கத்தின் சாதனைகளை அவர்களிடையே விளம்பரப்படுத்தி, அரசிற்கும் மக்களுக்குமிடையே நட்பையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கும் பாலமாக அமைவார்கள் என்ற கருத்தில் உண்மை இல்லாமலில்லை.

ஏற்றத் தாழ்வற்ற இரு சபைகள்

இரு சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒரேமாதிரியாக இருக்கிறது. இரு சபையினரும் நான்கு ஆண்டுகட்கே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு சபைகளின் பிரதிநிதிகளும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு சபைகளின் வேட்பாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தகுதிகளிலும் வேறுபாடு கிடையாது. ஒவ்வொரு சபையிலும் ஒரு தலைவரும் நான்கு துணைத்தலைவர்களும் இருக்கின்றனர். இரு சபைகளின் கூட்டத்தொடர்களும் ஒன்றாகத் தொடங்கி ஒன்றாக

முடிவடைகின்றன. அமைப்பில் மட்டுமன்றி அதிகாரங்களிலும் இரு சபைகளுக்கிடையே வேறுபாடு கிடையாது. சட்டமியற்றுதல் உட்பட பாராளுமன்றத்தின் எல்லாச் செயல்களுக்கும் இரு மன்றங்களின் உடன்பாடு தேவை. இரண்டிற்குமிடையே கருத்து வேறுபாடு தோன்றுமானல் இரண்டும் ஒரே சமயத்தில் கலைக்கப் படும். இப்படி எந்தவிதத்திலும் ஏற்றத் தாழ்வில்லாத இரு மன்றங் களைக் கொண்ட பாராளுமன்றத்தைச் சோவியத்துக் குடியரசி லன்றி நாம் வேறெங்கும் காண்பதற்கில்லை. பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் பிரபுக்கள் சபைக்கும் பொதுமக்கள் சபைக்கும், அமைப்பிலும் அதிகாரத்திலும், மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறு பாடுகள் இருப்பதைப் பார்த்துப் பழகிப்போன நமக்கு, சோவியத்துக் குடியரசில் இரு சபைகளும் ஒத்த அதிகாரங்களோடு ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருப்பது புதுமையாகக் காட்சி யளிப்பது இயற்கையே. தேசிய இனங்கள் சபை, கூட்டரசு சபை ஆகிய இரண்டிற்குமிடையே எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இல்லாத காரணத்தினல்தான் அரசியல் அறிஞர்கள் அவற்றை மேல்சபை என்றும் கீழ்ச்சபை என்றும் பிரித்துப் பேசுவதில்லை போலும்.

4. பிரிசிடியம்

(The Presidium)

[முன்னுரை—அமைப்பு—அதிகாரங்கள்.]

முன்னுரை

சோவியத்துக் குடியரசின் அரசியல் நிறுவனங்களில் பிரிசிடியம் என்பது ஒரு புதுவகையான நிறுவனமாய் விளங்குகிறது. அமைப்பிலும் அதிகாரத்திலும் பிரிசிடியத்தை ஒத்த நிறுவனமொன்றை வேறெந்த நாட்டிலும் காண்பது அரிது. மற்ற அரசியலமைப்புகள் நாட்டின் தலைவருக்கு அளிக்கும் இடத்தைச் சோவியத்து அரசியலமைப்புப் பிரிசிடியத்திற்கு அளிக்கிறது. இதைக் கருத்தில் கொண்டே அரசியலமைப்பின் பிரதான சிற்பியான ஸ்டாலின், பிரிசிடியத்தை நாட்டின் 'குழுத் தலைவர்' (Collegiate President) என அழைத்தார்.

அமைப்பு

பிரிசிடியம் 37 அங்கத்தினர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். அங்கத்தினர்களில் ஒருவர் தலைவரெனவும், பதினைந்து பேர் துணைத்தலைவர்களெனவும், ஒருவர் செயலாளரெனவும், இருபது பேர் உறுப்பினர்களெனவும் அழைக்கப்படுகின்றனர். 1958ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் திருத்தமொன்று சோவியத்துக் குடியரசின் பதினைந்து மாநிலங்களின் பிரிசிடியங்களின் தலைவர்களே கூட்டாட்சிப் பிரிசிடியத்தின் துணைத்தலைவர்களாய் இருப்பார்கள் என அறிவிக்கிறது. பிரிசிடியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தால் அதன் இணைப்புக் கூட்டமொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு புதிய பாராளுமன்றமும் புதியதொரு பிரிசிடியத்தைத் தேர்ந்தெடுக்கும். பாராளுமன்றம் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவதால் பிரிசிடியமும் நான்கு ஆண்டு

கட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒரு பிரிசிடியத்தைத் தேர்ந்தெடுத்த பாராளுமன்றம் கலைக்கப்பட்டால். அப் பிரிசிடியம் புதுப் பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் புதுப் பிரிசிடியம் அமைக்கப்படும் வரை பதவியிலிருக்கும். பிரிசிடியம் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளது என அரசிய லமைப்புத் திட்டவட்டமாய் தெரிவிக்கிறது. பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கு மாறுன எச்செயலையும் அது செய்யமுடியாது என்பது திண்ணம். பிரிசிடியம் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக் கப்படுவதாலும், அதன் பதவிக்காலம் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஒட்டியே அமைவதாலும், அது பாராளுமன்றத் திற்குப் பொறுப்புள்ளதாய் இயங்குவதாலும் அதற்குப் ‘பாராளு மன்றத்தின் பிரிசிடியம்’ (Presidium of the Supreme Soviet) எனப் பெயரிடப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாய்த் தோன்று கிறது. பாராளுமன்றக் கூட்டத்தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் பிரிசிடியமே அதன் பிரதிநிதியாக அமர்ந்து அதன் பொறுப்புகளை நிறைவேற்றும். ஆண்டுக்கு இருமுறை சில நாள்களே கூடும் பாராளுமன்றத்தின் நிரந்தரக் குழுவாய் இயங்கும் பெருமையைப் பெற்றிருக்கும் பிரிசிடியம் சோவியத்துக் குடியரசின் உயர் நிறுவனங்களில் (higher organ) ஒன்ருய் மதிக்கப் படுவது இயல்பே.

பிரிசிடியத்தின் தலைவர் சோவியத்துக் குடியரசின் தலைவ ரெனக் கருதப்படுவது மரபு. ஆனுல், அரசியலமைப்பு யாருக்கும் நாட்டின் தலைவர் என்ற பட்டத்தைச் சூட்டவில்லை. பிரிசிடியத்தின் கூட்டங்களைக் கூட்டி, அவற்றிற்குத் தலைமை தாங்கி, நாட்டின் தலைவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கௌரவமான செயல்கள் சிலவற்றைச் செய்வதைத் தவிர, அவருக்குத் தனிப்பட்ட அதிகாரம் எதுவுமில்லை. பிரிட்டிஷ் அரசிக்குள்ள தனிச் சிறப் புரிமைகள் (prerogatives) போன்ருே, அமெரிக்கக் குடியரசு தலைவருக்குள்ள வலிமைமிக்க அதிகாரம் போன்ருே சோவியத்துக் குடியரசு தலைவருக்கு இல்லை என்பது அறியத்தக்கது.

அதிகாரங்கள்

அரசியலமைப்பின் 49ஆம் விதி பிரிசிடியத்தின் அதிகாரங்கள் பற்றிய பட்டியலாய் விளங்குகிறது. பிரிசிடியம் ஆண்டுக்கு இரு முறை பாராளுமன்றத்தின் சாதாரணக் கூட்டத்தொடர்களைக் கூட்டும். அது, தான் விரும்பினுலோ அல்லது மாநிலமொன்றில் கேட்டுக்கொள்ளப்பட்டாலோ, பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டலாம். தேசிய இனங்கள் சபைக்கும் கூட்டரசு சபைக்குமிடையே தீர்க்க முடியாத கருத்து

வேறுபாடுகள் எழுமானல் பிரிசிடியம் இரு சபைகளேயும் கலேக்கும். பழைய பாராளுமன்றம் கலேக்கப்பட்ட இரண்டு மாதத்திற்குள் புதிய பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான கட்டளேகள் பிரிசிடியத்தால் பிறப்பிக்கப்படுகின்றன. புதிய பாராளு மன்றத்தின் முதற்கூட்டத்தொடரை அது தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று மாதத்திற்குள் கூட்டுவதும் பிரிசிடியத்தின் பொறுப்பாகும். பிரிசிடியத்திற்குப் பலவிதமான ஆணைகளேப் (ordinances) பிறப் பிக்கவும், சட்டங்களுக்கு விளக்கம் கூறவும் அதிகாரமுண்டு. பிரிசிடியம் தான் விரும்பினுலோ அல்லது மாநிலமொன்றின் வேண்டுகோள்படியோ எந்தப் பொருளின்மீதும் குடியொப்பம் நடத்தும்; ஆனுல் இதுவரை ஒருமுறைகூடப் குடியொப்பம் நடத்தப்பட்டதில்லே என்பது அறியத்தக்கது.

சட்டங்களுக்கு மாருன தேசிய அமைச்சரவையின் முடிவு களேயும் மாநில அமைச்சரவைகளின் முடிவுகளேயும் தள்ளுபடி செய்யக்கூடிய அதிகாரம் பிரிசிடியத்திற்கு உண்டு. பாராளு மன்றத்தின் கூட்டத்தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் அமைச்சரவைத் தலேவரின் சிபாரிசுப்படி பிரிசிடியம் பழைய அமைச்சர்களே விலக்கவோ புதிய அமைச்சர்களே நியமிக்கவோ முடியும். இவை பிறகு பாராளுமன்றத்தால் உறுதிசெய்யப் பட்டால்தான் செல்லுபடியாகும்.

தாய்நாட்டிற்கு அரிய பெரிய சேவைகள் செய்தோரைப் பாராட்டுவதற்குப் பதக்கங்களேயும் பட்டங்களேயும் நிறுவி, அவற்றைத் தக்கவர்க்கு வழங்குவது பிரிசிடியத்தின் உரிமை யாகும். அதற்கு இராணுவப் பட்டங்களேயும், தூதர் வரிசைத் தரங்களேயும் (diplomatic ranks), வேறு சிறப்பான பட்டங் களேயும் நிறுவும் அதிகாரமும் உண்டு. அரசியலமைப்பு, குற்ற மன்னிப்பு வழங்கக்கூடிய அதிகாரத்தையும் பிரிசிடியத்திடமே ஒப்படைத்திருக்கிறது. மற்ற நாடுகள் நாட்டின் தலேவராய்ப் பதவி வகிக்கும் அரசர், குடியரசு தலேவர் போன்ற தலேக் குடி மகனின் உரிமையாக்கும் குற்றமன்னிப்பு அதிகாரம், சோவியத்துக் குடியரசில் குழுவாக அமைந்திருக்கும் பிரிசிடியத்தின் உரிமை யாக்கப்பட்டிருப்பது நோக்கற்பாலது.

சோவியத்துக் குடியரசிலிருந்து அயல் நாடுகளுக்குச் செல்லும் தூதர்களே நியமிப்பதும், அவர்களேத் திருப்பி அழைக்க நேர்ந்தால் அவ்வாறு செய்வதும், அயல் நாடுகளிலிருந்து மாஸ்கோவிற்கு வரும் தூதர்களே வரவேற்பதும் பிரிசிடியத்தின் கடமைகளில் அடங்கும். சர்வதேச உடன்படிக்கைகளே ஏற்கவும் மறுக்கவும் அதற்கு அதிகாரமுண்டு. இராணுவத்துறையில் அரசியலமைப்பு,

பிரிசிடியத்திற்கு ஏராளமான அதிகாரங்களை அளிக்கிறது. படைப் பிரிவுகளின் உயரதிகாரிகளை அதுவே நியமிக்கவும் நீக்கவும் முடியும். பாராளுமன்றக் கூட்டத்தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் சோவியத்துக் குடியரசு தாக்கப்பட்டால் பிரிசிடியம் போர் அறிவிப்புச் செய்யலாம். ஆக்கிரமிப்புக்கு எதிராக அயல் நாடுகளோடு செய்துகொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளை நிறைவேற்றும்பொருட்டும் அது போர் அறிவிக்க முடியும். அது, படைகள் முழுதையுமோ அவற்றின் சில பிரிவுகளையோ, இடம்விட்டு இடம் பெயரும்படி கட்டளையிடலாம். நாட்டின் பாதுகாப்பிற்காகவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைபெறச் செய்யவும், சோவியத்துக் குடியரசு முழுவதுமோ அல்லது அதன் சில பகுதிகளில் மட்டுமோ, இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தும் அதிகாரமும் பிரிசிடியத்திற்கு உண்டு.

பிரிசிடியமே சோவியத்துக் குடியரசின் குடியுரிமை வேண்டுமென்று கேட்போருக்கு அதை வழங்கக்கூடும். சோவியத்துக் குடியுரிமையிலிருந்து விலகிக்கொள்ள விரும்புவோர்க்கும் அனுமதி அளிக்கக்கூடிய அதிகாரமும் அதற்கே உண்டு. மேலும் அது அவசியம் ஏற்படும்பொழுது மக்களின் குடியுரிமையைப் பறிக்கவும் செய்யலாம்.

பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்கள் குறுகியகால கூட்டத்தொடர்களாய் அமைவதாலும், அவற்றிற்கு இடைப்பட்ட காலங்களில் பிரிசிடியமே பாராளுமன்றத்தின் பிரதிநிதியாய் இயங்குவதாலும், பிரிசிடியம் சிறந்த செல்வாக்குள்ள நிறுவனமாய் இயங்குகிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் முழு நேர அரசியல்வாதிகள் அல்லர். அவரவர்க்குரிய வேலையைவிட்டு நீங்கி அவர்கள் அதிகநாள்கள் பாராளுமன்றக் கூட்டத்திற்கெனச் செலவிடுவது முறையன்று என எண்ணப்படுகிறது. எனவே பிரிசிடியம் பாராளுமன்றத்தின் பொறுப்புகளைத் தான் ஏற்று, தாய்ச் சபையின் அங்கத்தினர்கள் அவர்கள் தொகுதிகளில் அதிகநாள்கள் தங்க வகைசெய்கிறது, பிரிசிடியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களே. ஒவ்வொரு பாராளுமன்றக் கூட்டத்தொடரிலும் பிரிசிடியம் தான் செய்த செயல்களைப்பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பித்து அதன் இசைவைப்பெறும்.

5. நீதித்துறை

(The Judiciary)

[முன்னுரை — தேர்ந்தெடுக்கப்படும் நீதித்துறை — நீதிபதிகளின் தகுதிகள்—மக்கள் மதிப்பீட்டாளர்கள்—நீதிபதிகளின் சுதந்திரம்—விசாரணைகள் — அரசு வழக்கறிஞர்கள் — தலைமை நீதிமன்றம்—நண்பர்கள் நீதிமன்றங்கள்.]

முன்னுரை

1917ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சிக்கு முன்பிருந்த நீதிமன்றங்கள் பணக்காரர்களின் நலன்களைப் பாதுகாக்க நிறுவப்பட்டவை எனக் கருதப்பட்டதனால் அவை நீக்கப்பட்டு, பாட்டாளிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் சமதரும நீதித்துறை (Socialist Judiciary) ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. குடிமக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதும், பொது நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாப்பதும், எவரும் எளிதில் சட்டத்தை மீறாதவாறு பார்த்துக் கொள்வதும் சோவியத்து நீதித்துறையின் கடமையாகும். மக்களிடையே தாய்நாட்டிற்கும் பொதுவுடைமைத் தத்துவத்திற்கும் பற்றுறுதியை வளர்ப்பதும், சட்டங்களை உயர்வாக நினைத்து அவற்றிற்கு உட்பட்டு நடக்கும்படி அவர்களை ஊக்குவிப்பதும், பொதுவுடைமைச் சொத்துகளைக் கண்ணும் கருத்துமாய் கவனித்து வரவும், தொழிற்கட்டுபாடுகளைப் பேணவும், அரசிற்கும் நாட்டிற்குமுரிய கடமைகளை உண்மையாகச் செய்யவும், சகோதரக் குடிமக்களின் உரிமைகள், கௌரவம், கண்ணியம் ஆகியவற்றை மதிக்கவும், சமதருமச் சமுதாயத்தின் விதிகளைப் போற்றவும் மக்களுக்கு அறிவு புகட்டுவதும் சோவியத்து நீதிமன்றங்களின் பொறுப்புகள் எனக் கூறப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்படும் நீதித்துறை (Elective Judiciary)

சோவியத்துக் குடியரசில் எல்லாக் கட்டங்களிலுமுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகளும் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகள்

என்பது அறியத்தக்கது. உலகில் பெரும்பாலான நாடுகளில் நாட்டின் தலைவரே நீதிபதிகளை நியமிப்பது வழக்கம். ஆனால் சோவியத்துக் குடியரசில் மிகச் சாதாரண நீதிபதியிலிருந்து மிக உயர்ந்த நீதிபதிவரை எல்லோரும் ஐந்து ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவதே வழக்கம். மக்கள் நீதிமன்றங்களின் (People's Courts) நீதிபதிகள் வாக்காளர்களாலும், தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள் தேசியப் பாராளுமன்றத்தாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் நிறுவனத்திற்கு, அவர்களின் பதவிக்காலம் முடிவடையும் முன்பாக அவர்களைத் திருப்பி அழைக்கும் அதிகாரமும் உண்டு.

நீதிபதிகளின் தகுதிகள்

அரசியலமைப்போ அல்லது சட்டங்களோ நீதிபதிகளுக்குரிய தகுதிகளைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. இருபது வயதை அடைந்த எல்லாச் சோவியத்துக் குடிமக்களும் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையோரே என்றாலும், சட்டத் துறையில் பயிற்சியும் பழக்கமும் உடையோரே பொதுவாக நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். சிக்கிக்வாட்ஸ் (V. M. Chkhikvadze) எனும் ஆசிரியர் 1969-ல் வெளியிட்ட 'சோவியத்து அரசும் சட்டமும்' (The Soviet State and Law) எனும் நூலில் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் நீதிமன்றங்களின் தலைவர்களான 1,108 பேரில் 857 பேர் சட்டப்படிப்பில் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் என்றும், 220 பேர் சட்டப் பள்ளிகளில் படித்தோர் என்றும் குறிப்பிடுகிறார். சட்டத்துறையில் தனிப் பயிற்சி பெறாதவர்கள் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தேவையான பயிற்சிபெற அவர்களுக்குப் போதுமான வசதிகள் செய்து தரப்படுகின்றன. மக்கள் நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டோர் பெண்கள் என்பது அறியத்தக்கது. வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு அதிகப்படியான பெண்கள் நீதிபதிகளாக இருப்பதாகத் தெரியவில்லை.

மக்கள் மதிப்பீட்டாளர்கள் (People's Assessors)

சோவியத்து நீதிமன்றங்கள் எல்லாவற்றிலும் நீதிபதிகளுக்கு உதவியாக இருக்க மக்கள் மதிப்பீட்டாளர்கள் என்ற அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். முதலாவதாக விசாரிக்கப்படும் எல்லா வழக்குகளின் விசாரணைகளும் ஒரு நீதிபதியின் தலைமையிலும், இரு மதிப்பீட்டாளர்களின் முன்னிலையிலும் நடைபெறும். சாதாரண நீதிமன்றமான மக்கள் நீதிமன்றத்திலிருந்து இறுதி நீதிமன்றமான தலைமை நீதிமன்றம் வரை மதிப்பீட்டாளர்கள்

இருப்பார்கள். நீதிபதிகளைப்போல மதிப்பீட்டாளர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களே. மக்கள் நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் ஏறத்தாழ 60 மதிப்பீட்டாளர்கள் இருக்கின்றனர். இவர்கள் யாரும் இரண்டு வாரங்களுக்குமேல் வேலை செய்யாதவாறு மாறி மாறி அமர்வார்கள்.. நீதிபதிகளுக்கு உரிய உரிமைகள் அனைத்தும் மதிப்பீட்டாளர்களுக்கும் உண்டு. நீதிமன்றங்களின் தீர்ப்பு, நீதிபதிகள் மதிப்பீட்டாளர்கள் ஆகியோரில் பெரும்பான்மையோரின் தீர்ப்பேயாகும். நீதிமன்றங்கள் சட்டங்களின் அடிப்படையில் மட்டும் தீர்ப்புகள் வழங்குவதைவிட வாதிப் பிரதிவாதிகளின் சமுதாயப் பொருளாதாரச் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு தீர்ப்பளிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான், குடிமக்களும் மதிப்பீட்டாளர்கள் என்ற பெயரில் நீதி நிருவாகத்தோடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவு.

நீதிபதிகளின் சுதந்திரம்

மத்திய மாநில அரசியலமைப்புகள் அனைத்தும், அவற்றின் சட்டங்களும், நீதிபதிகள் சுயேச்சையானவர்கள் என்றும், அவர்கள் சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள் என்றும் அறிவிக்கின்றன. நீதிபதிகள் அயலாரின் செல்வாக்குகளுக்கு அப்பாற்பட்டவர்களாய் இருந்து, தங்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படும் சான்றுகளின் அடிப்படையில் சட்டம் மீறப்பட்டதா இல்லையா என்று முடிவு செய்வதே உண்மையான நீதி நிருவாகம் என்பது சோவியத்து மக்களின் கருத்து. நீதிபதிகளை ஒருவருக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ தீர்ப்பு வழங்கும்படி கோரி நீதி நிருவாகத்தில் குறுக்கிடுவது பெருங் குற்றமெனக் கருதப்படுகிறது. சோவியத்து அரசியல் முறைகளை நன்குணர்ந்த அறிஞர்கள் அங்கே நீதித்துறை தனித்து இயங்காமல் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு இயங்குவதாக எண்ணுகின்றனர். ஹசார்டு (J. N. Hazard) என்னும் ஆசிரியர் சோவியத்து நீதிமன்றங்கள் பொதுவுடைமைக் கட்சியின் கரங்களாகச் செயல்படுகின்றன எனக் கூறுகின்றார். நீதிமன்றங்கள் சுயேச்சையாக இயங்குகின்றன என்பது சாதாரண நீதிமன்றங்களைப் பொறுத்தவரைதான் ஓரளவுக்கு உண்மையே ஒழிய, தலைமை நீதிமன்றத்தைப் பொறுத்தவரை அது உண்மையன்று என அவர் கருதுகிறார்.

விசாரணைகள்

நீதிமன்றங்கள் அவை நிறுவப்பட்டிருக்கும் வட்டார மொழிகளில் விசாரணை நடத்துகின்றன. வாதிப் பிரதிவாதிகளில் யாருக்காவது அம்மொழி தெரியவில்லையானால், அவருக்கு அரசின்

மொழிபெயர்ப்பாளர் ஒருவர் விசாரணையின் போக்கினை எடுத்துக் கூறுவார். பொதுவாக விசாரணைகளைப் பகிரங்கமாக நடத்துவதே வழக்கம். பகிரங்க விசாரணையால் அரசின் இரகசியங்களும், வழக்கில் தொடர்புடையோரின் அந்தரங்க வாழ்க்கைபற்றிய செய்திகளும் வெளிப்படலாம் எனத் தோன்றினால், அதன் விசாரணை பொதுமக்களின் பார்வைக்கு அப்பாற்பட்டதாய் வைக்கப்படும். அரசுக்கெதிராகவும், பொதுச் சொத்துகளுக் கெதிராகவும் குற்றம் புரிகின்றவர்கள் கொடுமையான தண்டனைக் குள்ளாவதைத் தற்காலத்தில் பார்க்கிறோம். சந்தேகத்துக் குரியவர்கள் அவர்கள் குற்றம் செய்தது உண்மை என ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுவதும், நீதித் தீர்ப்புகள் மூலமாகப் பலர் கொலை செய்யப்படுவதும் (judicial murder), மக்களில் பலர் கூட்டம் கூட்டமாக அழிக்கப்படுவதும், தண்டனை பெற்ற குற்றவாளிகள் அடிமைகளைவிடக் கேடாய் நடத்தப் படுவதும், நாஸி (Nazi) ஜெர்மனியை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் சோவியத்துக் குடியரசில் உண்டெனச் சிலர் கருது கின்றனர். மேலும் பொதுவுடைமைக் கட்சிக்கெதிராகப் பேசுவதே பெருங் குற்றமென எண்ணப்படும் சோவியத்து நாட்டில் அரசுக்கும் கட்சிக்கும் எதிரான குற்றங்கள் மன்னிக்கப்படமாட்டா என்பது திண்ணம்.

அரசு வழக்கறிஞர்கள் (Procurators)

கூட்டாட்சியிலும், மாநிலங்களிலும், தன்னாட்சிக் குடியரசு களிலும், தன்னாட்சிப் பிரதேசங்களிலும், தேசியப் பகுதிகளிலும் அரசு வழக்கறிஞர்கள் நீதித்துறையின் முதுகெலும்பாய் அமர்ந்து அது சீராகச் செயல்படுவதற்குத் துணை செய்கின்றனர். அரசு வழக்கறிஞர்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்: (1) அமைச்சகங்கள், நிருவாகத் துறைகள், அவைகளின்கீழ் இயங்கும் நிறுவனங்கள், தல சோவியத் துகளின் செயற்குழுக்கள், அதிகாரிகள், குடிமக்கள் ஆகியோர் சட்டங்களைச் செயல்படுத்துவதை மேற்பார்வை செய்வது. (2) குற்றங்கள் செய்வோருக்கு எதிராக வழக்குகள் தொடர்வது. (3) குற்றங்களைப்பற்றிய நீதி விசாரணைகள் சட்டப்படி நடை பெறுகின்றனவா என்றும், குடிமக்களில் யாரும் சட்டத்திற்கு மாறான வகையில் அவர்களின் உரிமைகளை இழக்க நேரிடுகிறதா என்றும் ஆராய்வது. (4) நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளும் தண்டனைகளும் சட்டத்திற்கு உட்பட்டவையா என்பதையும், அவை சட்டப்படி நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் கண்டறிவது. சிறைச்சாலைகளுக்குச் சென்று அவை செயல்படும் விதத்தை அறிந்து, அங்கே சட்டவிரோதமான

செயல்கள் காணப்பட்டால் அவற்றை நீக்குவதற்கும் அரசு வழக்கறிஞர்களுக்கு அதிகாரமுண்டு. சிறைக் கைதிகள் தெரிவிக்கும் குறைகள் 24 மணி நேரத்திற்குள் தொடர்புடைய அரசு வழக்கறிஞரை அடையும்; அவற்றை ஆராய்ந்து ஆவன செய்வது அவரின் கடமையாகும். கூட்டாட்சியின் வழக்கறிஞர், தலைமை வழக்கறிஞர் (Procurator - General) என அழைக்கப்படுகிறார். அவர் ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மாநிலங்கள், தன்னாட்சிக் குடியரசுகள், தன்னாட்சிப் பிரதேசங்கள் ஆகியவற்றின் வழக்கறிஞர்கள், அரசு தலைமை வழக்கறிஞரால் ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை நியமிக்கப்படுகிறார்கள். மாவட்டங்கள், நகரங்கள் ஆகியவற்றின் வழக்கறிஞர்கள், அவற்றின் மாநில வழக்கறிஞர்களால் ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை நியமிக்கப்படுகிறார்கள். நாட்டிலுள்ள எல்லா அரசு வழக்கறிஞர்களும் தலைமை வழக்கறிஞர்க்குக் கட்டுப்பட்டவர்கள்.

தலைமை நீதிமன்றம்

சோவியத்துக் குடியரசின் தலைமை நீதிமன்றம் 45 நீதிபதிகளையும் 20 மதிப்பீட்டாளர்களையும் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாகும். மேலும் எல்லா மாநிலத் தலைமை நீதிமன்றங்களின் தலைவர்களும் தேசியத் தலைமை நீதிமன்றத்தின் உறுப்பினர்களே. நீதிபதிகளும் மதிப்பீட்டாளர்களும் பாராளுமன்றத்தின் இணைப்புக் கூட்டமொன்றில் ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தலைமை நீதிமன்றத்தில் சிவில், குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்குத் தனித்தனி பிரிவுகள் இருக்கின்றன. பொதுவாக வழக்குகள் மாநிலத் தலைமை நீதிமன்றங்களில் முடிந்துவிடுவது வழக்கம். அவற்றின் தீர்ப்புகள் தேசியச் சட்டங்களுக்கு முரணானவையாய்த் தோன்றினாலும், அல்லது மற்ற மாநிலங்களின் நலன்களைப் பாதிப்பதாகத் தோன்றினாலும் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்தில் பரிசீலனை செய்யப்படும். பாராளுமன்றச் சட்டங்கள் செல்லத்தக்கவையல்ல என அறிவிக்கும் அதிகாரம் சோவியத்துத் தலைமை நீதிமன்றத்திற்குக் கிடையாது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்தக் குறை இந் நீதிமன்றத்தை அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தைவிடத் தாழ்ந்ததாக்குகிறது என்பதில் ஐயமில்லை.

நண்பர்கள் நீதிமன்றங்கள் (Comrades Courts)

பண்ணைகளிலும், தொழிற்சாலைகளிலும், குடியிருப்புகளிலும், இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகளைக் கொண்ட 'நண்பர்கள் நீதிமன்றங்கள்' இயங்கி வருகின்றன.

இவ்வகை நீதிமன்றங்கள் சோவியத்து நீதித்துறையின் ஒரு புது அம்சமாகும். தொழிற்கட்டுப்பாட்டுக்கு எதிரான சிறு குற்றங்கள், ஒழுக்கக்குறைவான நடத்தை, காயத்தில் முடியாத கைகலப்புகள், ஐம்பது ரூபிள் மதிப்பிற்குக் குறைவான சிவில் வழக்குகள், பொதுச் சொத்துகளைச் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துதல், சிறு திருட்டுகள் போன்ற குற்றங்கள் நண்பர்கள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகின்றன. இந் நீதிமன்றங்களின் நோக்கம் குற்றவாளிகளைத் திருத்தவேண்டும் என்பதே ஒழிய, அவர்களைத் தண்டிக்கவேண்டுமென்பதன்று. விசாரணையின்பொழுது குற்றம் நடந்த பகுதியிலுள்ள பலரும் விசாரணையைப் பார்ப்பதால், அதுபோன்ற குற்றங்களை அக் குற்றவாளிகள் மீண்டும் செய்ய மாட்டார்கள் என நம்பப்படுகிறது. நண்பர்கள் நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனைகளும் புதுமையானவையே. குற்றவாளியைப் பொதுஇடத்தில் மன்னிப்புக் கேட்கும்படி கட்டளையிடுதல், அவன் குற்றத்தைப்பற்றிக் கண்டனம் தெரிவித்தல், பத்து ரூபிள்வரை அபராதம் விதித்தல், ஐம்பது ரூபிள்வரை இழப்பீடு கொடுக்கும்படி கட்டளையிடுதல் — இதுபோன்ற தண்டனைகளே பொதுவாக வழங்கப்படுகின்றன. நண்பர்கள் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் இறுதியானவை. ஆண்டுக்கு ஒருமுறையாவது இந் நீதிமன்றங்கள் தங்கள் செயல்களைப்பற்றித் தங்களைத் தேர்ந்தெடுத்த கூட்டத்தாருக்கு அறிவிக்கும். இன்று சோவியத்துக் குடியரசில் 2,00,000-க்கு மேற்பட்ட நண்பர்கள் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

6. பொதுவுடைமைக் கட்சி

(The Communist Party)

[முன்னுரை—உறுப்பினர்களாகச் சேர்வது — உறுப்பினர்களின் கடமைகள்—சின்னஞ்சிறு புரட்சி வீரர்கள் அணி—பள்ளிச் சிறுவர்கள் அணி—இளைஞர்கள் அணி — முதல்நிலை அமைப்புகள்—மேல்நிலை அமைப்புகள்—கட்சியும் படைப்பிரிவுகளும்—ஆண்கள் கட்சி.]

முன்னுரை

சோவியத்துக் குடியரசில் பொதுவுடைமைக் கட்சி அரசின் ஒரே கட்சியாய் இருக்கும் தனிப்பெருமை பெற்று விளங்குகிறது. அரசு வேறு, கட்சி வேறு என்று பிரித்துக் கூறமுடியாத அளவுக்கு இரு அமைப்புகளும் இரண்டறக் கலந்து நிற்கின்ற காட்சியை நாம் வேறெந்த நாட்டிலும் காண்பதற்கில்லை. அரசின் ஆதரவைப் பெறும் நிறுவனங்களில் பொதுவுடைமைக் கட்சியே முதன்மை யானதாய்க் கருதப்படுகிறது. பொதுவுடைமைக் கட்சியின் வளர்ச்சிக்குக் குடிமக்கள் எல்லாவிதமான தியாகங்களும் செய்யத் தயாராயிருக்கவேண்டுமென அரசியலமைப்பு எதிர் பார்க்கிறது. கட்சியின் முன்னேற்றத்திற்கு மாறான செயல்களைச் செய்வோர் கடும்தண்டனைகளை அனுபவிக்க நேரிடும். தொழிலா ளர்கள், விவசாயிகள், கற்றறிந்தோர் ஆகியோரில் அரசியலில் அக்கறையும் ஈடுபாடும் உடையோர் அவர்களாக விரும்பிச் சேரும் அமைப்பே சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியாகும். 'பாட் டாளி மக்கள் பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அவர்களின் முன்னணிப் படையாகவும், உழைப்பாளி களின் நிறுவனங்களில் முதன்மையானதாகவும்' அமையும் கட்சி என பொதுவுடைமைக் கட்சி அரசியலமைப்பால் சிறப்பிக்கப் படுகிறது. ஏறத்தாழ 24 கோடி மக்கள்தொகையும் 87 லட்சம் சதுரமைல்கள் பரப்பளவும் உடைய சோவியத்துக் குடியரசில் நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் பொதுவுடைமைக் கட்சி இயங்காத இடமே இல்லை எனலாம்.

உறுப்பினர்களாகச் சேர்வது

பொதுவுடைமைக் கட்சியில் புதிய உறுப்பினராகச் சேர்வது என்பது எளிதன்று. கட்சியில் நல்ல ஈடுபாடுடையோர் மட்டுமே உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். கட்சியில் சேர விரும்புகின்ற ஒவ்வொருவரின் விண்ணப்பமும், கட்சியில் ஐந்து ஆண்டுகட்கு மேலாக உறுப்பினர்களாயிருக்கும் மூன்று பேரால் சிபாரிசு செய்யப்பட வேண்டும். கட்சியில் சேர்த்துக்கொள்ளப் படுபவர், அவர் சேர்ந்த முதலாண்டில் உறுப்பினராகக் கருதப் படாமல் வேட்பாளராகவே (candidate - member) கருதப் படுவார். அவர் கட்சியின் நெறிமுறைகளுக்கு ஏற்றவகையில் நடந்துகொள்வார் என்றும், திறமையான பொதுவுடைமை வாதியாகச் செயல்படுவார் என்றும், கட்சித் தலைவர்களுக்குத் தோன்றினால் அவர் ஒரு முழு உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப் படுவார். உலகில் எல்லாக் குடியரசுகளிலும் அரசியல் கட்சிகளில் சேர்வதைப்போன்ற எளிதான காரியம் வேறெதுவுமில்லை என்பதும், அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக் கொண்டு தங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயலும் என்பதும் அவற்றைச் சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

உறுப்பினர்களின் கடமைகள்

கட்சி விதிகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குவதும், கட்சிக் காரியங்களை முழுமூச்சாய் கவனிப்பதும், அவரவர்க்குரிய தொழிலை மற்றவர்க்கு எடுத்துக்காட்டாய் அமையும் வகையில் திறம்படச் செய்வதும், பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு கட்சிக் கொள்கைகளை அவர்களிடம் பரப்புவதும், அவர்களின் குறைகளைத் தீர்க்க முயல்வதும் உறுப்பினர்களின் கடமை என எண்ணப்படுகிறது. கட்சியின் ஒருமைப்பாட்டினை வளர்ப்பதும், அதன் தீர்மானங்களை நிறைவேற்ற முயல்வதும், அவர்களின் செயல்களை அவர்களே மதிப்பிட்டு அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிவதும், அவர்களுக்குத் தெரியவரும் குற்றங் குறைகளைக் கட்சியின் மேலிடத்துக்குத் தெரிவிப்பதும், கட்சியின் இரகசியங்களைக் காப்பதும், நட்பு, உறவு, சொந்த விருப்பு வெறுப்பு என்பனவற்றைப் பொருட்படுத்தாமல் கட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதும் உறுப்பினர்களின் கடமைகளில் அடங்கும். ஒவ்வோர் உறுப்பினரும் மாதாமாதம் கட்சிக்குரிய கட்டணத்தைத் தவறாது செலுத்த வேண்டும். கட்சியில் சேர்கின்றபொழுது நுழைவுக் கட்டணமாக மாதச் சம்பளத்தில் இரண்டு சதவிகிதத்தைச் செலுத்தியதுபோக, ஒவ்வொரு

மாதமும் உறுப்பினர்கள், அவர்களின் வருவாய்க்குத் தக்கவாறு, அரை சதவிகிதத்திலிருந்து மூன்று சதவிகிதம் வரை சந்தா செலுத்த வேண்டும். உறுப்பினர்கள் தங்கள் அடிப்படை உரிமைகளில் பலவற்றை மறந்து கட்சியின் வளர்ச்சிக்காக உழைக்க வற்புறுத்தப்படுவார்கள். உரிமைகளை இழக்க நேரிட்டாலும், வாழ்க்கையில் உயரக்கூடிய வாய்ப்புகள் கட்சி உறுப்பினர்களுக்கே அதிகம் என்பதில் ஐயமில்லை; கட்சியின் முழுநேர ஊழியர்களாக இருப்பவர்களுக்கு எட்டாத பரிசுகளே இல்லை எனலாம்.

சின்னஞ்சிறு புரட்சி வீரர்கள் அணி (Little Getobrists)

பத்து வயதிற்கு உட்பட்ட பச்சிளம் பாலகர்களைக் கொண்ட கட்சி அமைப்பு, ‘சின்னஞ்சிறு புரட்சி வீரர்கள் அணி’ என அழைக்கப்படுகிறது. 1,50,00,000-க்கு மேற்பட்ட குழந்தைகள் இந்த அணியில் அங்கத்தினர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்குப் பொதுவுடைமைக் கட்சியின் பாலபாடத்தைப் போதிக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையது. பிறந்தது முதல் கட்சியின் பெருமைகளையும் சாதனைகளையும் கற்கும் குழந்தைகள் பொதுவுடைமைக் கட்சியை ஓர் ஈடு இணையற்ற நிறுவனமெனக் கருதுவது இயற்கையே. பொதுவுடைமைக் கட்சியைத் தவிர உலகில் வேறு எந்தக் கட்சியிலும் குழந்தைகளுக்கு என ஒரு பிரிவு இருப்பதாகத் தோன்றவில்லை.

பள்ளிச் சிறுவர்கள் அணி (Pioneers)

பத்திலிருந்து பதினான்கு வயதிற்கு உட்பட்ட பள்ளிச் சிறுவர்களைக் கொண்ட அமைப்பு ‘பள்ளிச் சிறுவர்கள் அணி’ என அழைக்கப்படுகிறது. 2,30,00,000 வண்ணச் சீருடை அணிந்து சிறுவர்களும் சிறுமிகளும் இப்பள்ளிப் படையில் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். கட்சியில் சேரும் சிறுவனும் சிறுமியும் இரண்டு மாதம் வேட்பாளராய் இருந்து தன் தகுதியை மெய்ப்பித்த பிறகே அதன் முழு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். சோவியத்துப் பள்ளிச் சிறுவர் அணி மற்ற நாடுகளிலுள்ள சாரணர்கள் அணியைப் (Scouts) போன்றதே. ஆனால், சாரணர்களுக்குப் புகட்டப்படாத கட்சிக் கல்வி சோவியத்துப் பள்ளிச் சிறுவர்களுக்குப் புகட்டப்படுகிறது. இச் சிறுவர்களுக்கு, எளிய முறையில் எழுதப்படும் நாளிதழ் ஒன்றும், கதைகளும், பாட்டுகளும், வண்ணப் படங்களும் நிறைந்த பருவ இதழ் ஒன்றும் வெளியிடப்படுகின்றன.

இளைஞர் அணி (Komsomol)

பதினன்கு வயதிலிருந்து இருபத்து எட்டு வயதிற்கு உட்பட்ட இளைஞர்களைக் கொண்ட கட்சி அமைப்பு 'இளைஞர் அணி' என அழைக்கப்படுகிறது. 2,30,00,000க்கு மேற்பட்ட துடிப்பான இளைஞர்கள் இந்த அணியில் அங்கத்தினர்களாய் இருக்கின்றனர். கட்சியில் சேர விரும்புகின்றவர்களின் விண்ணப்பம், ஓர் ஆண்டுக்கு மேலாக அதில் உறுப்பினர்களாய் இருப்போரின் இரண்டு பேரால் சிபாரிசு செய்யப்படவேண்டும். இளைஞர் அணியில் உடலுரம் உள்ள இளைஞர்கள் ஏராளமான பேர் இருப்பதால், புதிய நகரங்கள் அமைத்தல், பண்படாத நிலங்களைப் பண்படுத்துதல், தொழிற்சாலைகள் நிறுவுதல், நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் உற்பத்தியைப் பெருக்குதல் போன்ற ஆக்க வேலைகளில் ஈடுபட்டு அவர்கள் பொதுவுடைமைக் கட்சிக்குப் பெயரும் புகழும் தேடித் தருகின்றனர். இளைஞர்கள் அணிக்கென ஒரு நாளிதழும், ஒரு பருவ இதழும் வெளியிடப்படுகின்றன. பொதுவுடைமைக் கட்சியின் முதியோர்ப் பிரிவு எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வாறே இளைஞர் அணியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

முதல்நிலை அமைப்புகள் (Primary Organizations)

தொழிற்சாலைகள், பண்ணைகள், அரசாங்க அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், படைப் பிரிவுகள் ஆகிய இடங்களில் முதல் நிலை அமைப்புகள் இயங்குகின்றன. அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல, இவ்வமைப்புகளில் மூன்றிலிருந்து முந்நூறு வரை உறுப்பினர்கள் இருப்பார்கள். இவ்வமைப்புகள் மாதம் ஒரு முறை கூடும். ஒவ்வோர் அமைப்பிற்கும் ஒரு செயலாளரும், ஒரு துணைச் செயலாளரும் இருப்பார்கள். சற்றுப் பெரிய அமைப்புகள் ஒவ்வொன்றிலும் ஒரு குழுவும் இருக்கும். கட்சியில் சேர விரும்பும் புதிய தொண்டர்களைச் சேர்த்துக்கொள்வது குறித்து முதல்நிலை அமைப்புகளே முடிவு செய்யும். இன்று நாடெங்கிலும் சிறியதும் பெரியதுமாக 3,59,000-க்கு மேற்பட்ட முதல்நிலை அமைப்புகள் இயங்கி வருகின்றன.

மேல்நிலை அமைப்புகள்

நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை கூடும் கட்சிப் பேரவை கட்சியின் தலைமை அமைப்பெனக் கருதப்படுகிறது. கட்சிக் கொள்கைகளில் மாற்றம் இருப்பின் அவற்றைப் பேரவையில் அறிவிப்பது வழக்கம். நாலாயிரம் பிரதிநிதிகளுக்கு மேலாகக் கூடும் இப் பேரவையில் கட்சியின் முக்கியமான அமைப்புகளான மத்தியக் குழு (Central Committee), மத்தியக் குழுவின்

பிரிசிடியம், செயலகம் ஆகியவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 195 உறுப்பினர்களேயும் 105 வேட்பாளர்களேயும் கொண்டிருக்கும் மத்தியக் குழு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்திற்கும் அனுப்பப்பட வேண்டிய அலுவல்களே ஆராயும். கட்சியின் முக்கியமான முடிவுகள் அனைத்தும் மத்தியக் குழுவின் பெயரால்தான் அறிவிக்கப்படும் என்பது அறியத்தக்கது. லெனின் (Lenin) காலத்தில் நிறுவப்பட்ட அரசியல் அலுவலகம் என்னும் அமைப்பு 1952ஆம் ஆண்டிலிருந்து மத்தியக் குழுவின் பிரிசிடியம் என அழைக்கப்படுகிறது. 11 உறுப்பினர்களேயும் 9 வேட்பாளர்களேயும் கொண்டிருக்கும் பிரிசிடியம், மத்தியக் குழுவின் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலங்களில் கூடித் தாய்க் குழுவின் பொறுப்புகளைக் கவனிக்கும். செயலகத்திலுள்ள செயலாளர்கள், குறிப்பாக முதன்மைச் செயலாளர் (First Secretary) எந்தெந்தத் துறையில் என்ன நடக்கின்றது என்பதை முதலில் அறிந்துகொள்ளும் நிலையில் இருக்கின்றனர். முதன்மைச் செயலாளரின் நல்லெண்ணத்தைப் பெறுகின்ற தொண்டர்களுக்குப் பெரும் பதவிகளை அடையும் வாய்ப்புகள் உண்டு, ஸ்டாலின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த நாள்களில், பல ஆண்டுகள் அவர் கட்சியின் செயலாளர் பதவி ஒன்றை மட்டுமே வகித்து, நாட்டின் எல்லா அலுவல்களேயும் அவர் விரும்பிய வழிகளில் இயக்கி வந்தார் என்பது அறியத்தக்கது.

கட்சியும் படைப் பிரிவுகளும்

தரைப்படை கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்கள் கட்சியில் சேரும்படி ஊக்குவிக்கப்படுகின்றனர். படை வீரர்கள் இடையே கட்சியை வளர்ப்பது பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் குழுவின் பொறுப்பாகும். படைப் பிரிவுகளிலுள்ள அரசியல் துறைகளின் (political departments) தலைவர்கள் கட்சியில் ஐந்து ஆண்டுகளாவது உறுப்பினர்களாய் இருப்போராய் இருக்கவேண்டும். இராணுவத்தில் 90 சதவிகிதத்துக்கு மேலான அதிகாரிகள் கட்சி உறுப்பினர்களாம். ‘படைப் பிரிவுகளின் தலைமை அரசியல் ஆட்சித்துறை’ (Chief Political Administration of the Armed Forces) என்னும் நிறுவனம் படைவீரர்களுக்குக் கல்வி புகட்டுவதோடு, அவர்களிடையே கட்சிப் பற்றையும் வளர்க்கப் பாடுபடுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் ‘ஸம்போலித்’ (zambolit) என்றழைக்கப்படும் அதிகாரிகள் போர் வீரர்களுக்குக் கட்சிக் கொள்கைகளை விளக்கிக் கூறி, கட்சிக் கொள்கைகளைப் பின்னணியாகக் கொண்ட கதைப் புத்தகங்களைப் படிக்கும்படி தூண்டுவார்கள். படைப் பிரிவுகளில் கட்சிப் பிரசாரம் என்பது சோவியத்துக் குடியரசில் காணப்படும் ஒரு புதிய பழக்கமாகும்.

ஆண்கள் கட்சி

பொதுவுடைமைக் கட்சி நாட்டில் இயங்கும் ஒரே கட்சியாய் இருந்தபோதிலும் நாட்டு மக்களில் நான்கு சதவிகிதத்தினரே கட்சியின் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். நம்பிக்கைக் குரியவர்கள் மட்டுமே கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படுவதால் அதன் உறுப்பினர்கள் தொகை ஏறத்தாழ தொண்ணூறு லட்ச அளவில் இருக்கின்றது. உறுப்பினர்களில் மிகப் பெரும்பாலோர் ஆண்கள் என்பது அறியத்தக்கது. மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் ஒரு பங்கே பெண்களாம். கட்சிப் பதவிகள் அனைத்திலும் அநேகமாக ஆண்களே காணப்படுகின்றனராம். பொதுவுடைமைக் கட்சியை 'ஆணின் கட்சி' (man's party) என டெரக் ஸ்காட் (Derek J. R. Scott) அழைப்பது பொருத்தமாய்த் தோன்றுகிறது.

படிக்கவேண்டிய நூல்கள்

(1) B. Bayanov, Y. Umansky & M. Shafir — Soviet Socialist Democracy (Progress Publishers, Moscow)

(2) G. M. Carter, J. C. Ranney & J. H. Herz — The Government of the Soviet Union (World Press, Calcutta)

(3) V. M. Chkhkivadze (Ed) — The Soviet State and Law (Progress Publishers, (Moscow)

(4) L. Schapiro — Government and Politics of the Soviet Union (Hutchinson)

(5) D. J. R. Scott — Russian Political Institutions (Allen & Unwin)

(6) The Constitution of the Union of Soviet Socialistic Republics : English Translation.

V. பிரெஞ்சு அரசியலமைப்பு

(The French Constitution)

1. அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

(Characteristic features of the Constitution)

[முன்னுரை — 'துப்புரவற்ற அரசியலமைப்பு' — குடியாட்சிக் கருத்துகள்—ஆட்சித்துறை—ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள்— அரசியல் கட்சிகள் — அரசியலமைப்புத் திருத்தம் — பிரெஞ்சு சமுதாயம்.]

முன்னுரை

பிரான்சு ஒரு பழைய நாடானாலும் அது ஒரு புதிய குடியரசு என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய பிரெஞ்சுக் குடியரசு அரசியலமைப்பு 1958ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றதாகும். 1791-க்கும் 1958-க்கும் இடையே பிரான்சு பதினாறு அரசிய லமைப்புகளின்கீழ் வாழ்ந்திருப்பது ஓர் உலக சாதனையாகும். அவற்றில் மூன்றாவது குடியரசின் அரசியலமைப்பு மட்டுமே எழுபது ஆண்டுகள் நீடித்தது; மற்ற அரசியலமைப்புகள் அனைத்தும் மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்தனவாகும். நான்காவது குடியரசின் அரசியலமைப்பு (1946—1958) நன்கு செயல்படாததைக் கண்ட தளபதி டி கால் (General de Gaulle), .958ஆம் ஆண்டில் ஐந்தாவது குடியரசு என அழைக்கப்படும் புதியதோர் அரசியலமைப்பை அறிவித்தார். டி காலின் கருத்துகளை உள்ளடக்கி அரசியலமைப்பை வரைந்தவர் மைக்கேல் டைப்ரே (Michael Debre) என்பவராவார். ஐந்தாவது குடியரசின் முதல் தலைவராகவும், முதல் முதலமைச்சராகவும் முறையே டி காலும், டெப்ரேயும் பதவி ஏற்றனர் என்பது அறியத் தக்கது. 1958ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28ஆம் நாள் ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பு, குடியொப்பத்திற்கு விடப்பட்டது; ஏறத்தாழ 80 சதவிகித வாக்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் விளைவாக அது அதே ஆண்டு அக்டோபர் திங்கள் 4ஆம் நாள் நாட்டின் அடிப்படைச் சட்டமாக அறிவிக்கப்பட்டது.

'துப்புரவற்ற அரசியலமைப்பு'

ஒரு முகப்புரையையும் பதினைந்து அத்தியாயங்களையும் கொண்டிருக்கும் புதிய அரசியலமைப்பில் 92 விதிகள் இருக்கின்றன. ஆனால், அரசியலமைப்புத் தெளிவற்றதொன்றாய் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் அது அரசாங்கத்தின் எல்லாத் துறைகளையும் முழுமையாக விவரிக்கவில்லை. டி காலின் அரசியலமைப்பைத் 'துப்புரவற்ற அரசியலமைப்பு' (An Untidy Constitution) என ஆசிரியர் பிக்கிள்ஸ் (D. Pickles) அழைப்பது உண்மைக்கு மாறானதன்று. அரசியலமைப்புகளை ஆக்குவதில் மற்ற நாடுகளைவிட அதிகமான அனுபவம் உடைய பிரான்ஸ் 1958ஆம் ஆண்டின் அரசியலமைப்புப் போன்ற ஓர் அரைகுறை அரசியலமைப்பை உருவாக்கியிருப்பது வியப்பிற்குரிய செயலாகும். மேலும், புதிய அரசியலமைப்பு தளபதி, டி. காலுக்கு உகந்த வகையில் வரையப்பெற்றது (tailor-made for General de Gaulle) என்ற குற்றச்சாட்டிலும் ஓரளவுக்கு உண்மை இருப்பதாகத் தோன்றுகிறது. ஐந்தாவது குடியரசின் முதல் தலைவராக அமர்ந்த டி கால், அரசியலமைப்பைத் தன் விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்த வகையில் அமைத்துக்கொண்டார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. டி கால் நாட்டின் ஒப்பற்ற ஒரே தலைவராக விளங்கிய காரணத்தால், தன் சொந்தக் கருத்துப்படி ஓர் அரசியலமைப்பைத் தோற்றுவித்து, அதை மக்களால் ஏற்றுக் கொள்ளும்படி செய்யமுடிந்தது. டி காலைத் தவிர வேறு எந்தத் தலைவரும் அது போன்ற முயற்சியில் வெற்றி பெற்றிருக்க முடியாது எனத் திண்ணமாகக் கூறலாம்.

குடியாட்சிக் கருத்துகள்

பிரான்சு ஒரு 'பிரிக்கமுடியாத, சமயச் சார்பற்ற, ஜனநாயக, சமூகக் குடியரசு' என அரசியலமைப்பு அறிவிக்கிறது. பிறப்பு, இனம், சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களிடையே வேறுபாடு பாராட்டாமல் அனைவரையும் சமமாக நடத்துவது அரசின் கடமையாகும். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பன புதிய குடியரசின் பொன்மொழிகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. 'மக்களின் அரசாங்கம், மக்களால் அரசாங்கம், மக்களுக்காக அரசாங்கம்' என்பதே ஐந்தாம் குடியரசின் கொள்கை என அறிவிக்கப்படுகிறது. தேசிய இறைமை மக்களிடம் உறைவதாகக் கூறி, அதை அவர்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலமாகவும், குடியொப்பத்தின் மூலமாகவும் அனுபவிக்க அரசியலமைப்பு வகை செய்கிறது. வயது வந்த ஆண், பெண் இரு பாலருக்கும் வாக்குரிமை வழங்கப்படுகிறது.

1789 ஆகஸ்டு 26-ல் அறிவிக்கப்பட்ட 'மனித உரிமைகள்' இன்னும் பிரான்சில் மதித்துப் போற்றப்படும் என அரசிய லமைப்பு அறிவிப்பது, புரட்சியின்பொழுது பல்லாயிரக்கணக்கான மக்கள் தியாகத் தீயில் செத்து மடிந்தது வீண் போகவில்லை என்பதற்குச் சான்றாக அமைகிறது.

ஆட்சித்துறை

ஐந்தாம் குடியரசின் ஆட்சித்துறை 'இரு தலையுடைய ஆட்சித் துறை' (bicephalous executive) என விவரிக்கப்படுகிறது. அதன் அரசாங்கம் பாராளுமன்றஞ்சார்ந்த அரசாங்கமாகவும், குடியரசு தலைவர் சார்ந்த அரசாங்கமாகவும் தோற்றமளிக்கிறது. குடியரசு தலைவர், முதலமைச்சர் ஆகிய இருவருக்கும் சிறப்பான அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இவ்விருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு இயங்குகிற வரையில், அரசாங்க இயந் திரம் தங்கு தடையில்லாமல் செல்லும்; ஆனால், எதிரெதிரான திசைகளில் செல்ல ஆரம்பித்தார்களானால் அரசாங்கம் விவரிக்க முடியாத தொல்லைகளுக்கு உள்ளாகும் என்பதில் ஐயமில்லை. அரசியலமைப்பால் தரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் இதுவரை முதலமைச்சரைவிட, குடியரசு தலைவரால் அதிகமாகப் பயன்படுத் தப்பட்டு வந்திருக்கிறது. டி கால் நாட்டின் தலைவராக இருந்த வரை, முதலமைச்சருக்கு எந்தவிதமான சிறப்போ செல்வாக்கோ இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என உறுதியாகக் கூறமுடியாது.

ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள்

அரசாங்கத்திற்கு அவ்வப்பொழுது ஆலோசனை வழங்கப் புதிய அரசியலமைப்புச் சில நிறுவனங்களை அமைத்திருக்கிறது. முதலாவதாக, அரசியலமைப்புக் குழு: இக் குழு ஒன்பது ஆண்டுகள் பதவியிலிருக்கும் ஒன்பது உறுப்பினர்களைக்கொண்ட அமைப்பாகும். குடியரசு தலைவர் மூன்று உறுப்பினர்களையும், தேசியச் சபையின் தலைவர் மூன்று உறுப்பினர்களையும், செனட் சபையின் தலைவர் மூன்று உறுப்பினர்களையும் நியமிக்கிறார்கள். இந்த ஒன்பது பேரைத் தவிர, முன்னாள் குடியரசு தலைவர்களும் அதன் அங்கத்தினர்களாக அமர்வார்கள். குடியரசு தலைவரின் தேர்தலை மேற்பார்வை செய்வதும், அது சம்பந்தமாக எழும் தகராறுகளை முடிவு செய்வதும் இக்குழுவின் முக்கியமான பொறுப் பாகும். குடியொப்பத் தேர்தல்களை நடத்தி, அவற்றில் வாக் காளர்களின் தீர்ப்புகளை அறிவிப்பதும் இக்குழுவின் கடமையாகும். அமைப்பியல் சட்டங்களும் (organic laws), பாராளுமன்றச் சபைகளின் நடைமுறை விதிகளும் அரசியலமைப்புக் குழுவிற்குச்

சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அவை அரசியலமைப்பிற்கு உட்பட்டவை எனக் குழு கருதினுல்தான் அனுமதிக்கப்படும். சாதாரணச் சட்டங்களைக்கூட, அவை அறிவிக்கப்படும் முன்னர், குடியரசு தலைவரோ, கீழ்ச்சபை தலைவரோ, மேல்சபைத் தலைவரோ, குழுவின் ஆய்விற்கு அவற்றை அனுப்பி, அவை அரசிய லமைப்பிற்கு உட்பட்டவையா அப்பாற்பட்டவையா எனத் தெரிந்துகொள்ளலாம். பொதுவாகக் குழு அதற்கு அனுப்பப் படும் பிரச்சினைகள்மீது ஒருமாத காலத்திற்குள்ளாக அதன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்; அரசாங்கம் அவசரம் எனக் கூறினுல் எட்டு நாள்களுக்குள்ளாகவே அதன் கருத்துத் தெரிவிக் கப்படவேண்டியது அவசியமாகும். அரசியலமைப்புக் குழு அரசிய லமைப்பிற்கு முரணுனவை என அறிவிக்கப்படும் சட்டங்களைச் செயல்படுத்த முடியாது என்பது அறியத்தக்கது. குழுவின் தீர்ப்புகள் இறுதியானவையாதலால் அதற்கு எதிராக யாரிடமும் முறை செய்துகொள்வது இயலாது. நாட்டிலுள்ள எல்லா நிறுவனங்களும் அதன் முடிவை ஏற்று நடக்கக் கடமைப்பட்டவை யாகும்.

இரண்டாவதாக, பொருளாதாரச் சமுதாயக் குழு; அரசாங்கம் கேட்டுக்கொள்வதற்கிணங்க அதன் மசோதாக்கள், அவசரச் சட்டங்கள், ஆணைகள், தனி உறுப்பினர்கள் மசோதாக்கள் ஆகியவற்றின்மீது அதன் கருத்துகளைக் கூறப் பொருளாதாரச் சமுதாயக் குழு கடமைப்பட்டதாகும். குழுவின் கருத்துகள் அதன் உறுப்பினர் ஒருவரால் பாராளுமன்றச் சபை களில் அறிவிக்கப்படும். பிரெஞ்சு குடியரசு அல்லது சமுதாயத்தை பாதிக்கும் எந்தப் பிரச்சினை குறித்தும் அரசாங்கம் பொருளாதாரச் சமுதாயக் குழுவைக் கலந்தாலோசிக்கலாம். பொருளாதாரச் சமயச் சார்புடைய எல்லாத் திட்டங்களும் மசோதாக்களும் குழுவின் ஆலோசனைக்குத் தவருது அனுப்பப்பட வேண்டும். இக் குழுவில் 200 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்; அவர்கள் பல தொழில்துறைகளிலிருந்து ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை நியமிக்கப்படுகின்றனர்.

மூன்ருவதாக, நீதித்துறையின் உயர்மன்றம்: குடியரசு தலைவரைத் தலைவராகவும், நீதி அமைச்சரைத் துணைத்தலைவ ராகவும், குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களை அங்கத்தினர்களாகவும் கொண்ட நீதித்துறையின் உயர்மன்றம், நீதி நிர்வாகம்பற்றிய அலுவல்களில் அறிவுரை வழங்கும் மன்றமாக இயங்கி வருகிறது. தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள், மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் ஆகியோரின் நியமனங்களை அறிவிப்பதும், நீதி அமைச்சரால்

செய்யப்படும் மற்ற நீதிபதிகளின் நியமனங்கள் குறித்துத் தன் கருத்துகளைத் தெரிவிப்பதும் அதன் பொறுப்புகளில் அடங்கும். குடியரசு தலைவர் குற்றமன்னிப்பு வழங்குவதற்கு இம்மன்றத்தைக் கலந்தாலோசிக்கக் கடமைப்பட்டவராவார். நீதிபதிகள்மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரமும் இவ்வுயர் குழுவிற்கு உண்டு.

நான்காவதாக, உயர் நீதிமன்றம் : தேசியச் சபையிலிருந்தும் செனட் சபையிலிருந்தும் ஒரே அளவான உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்படும் உயர் நீதிமன்றத்திற்குக் குடியரசு தலைவரை இராசத்துரோகக் குற்றத்திற்காக விசாரிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்களையும், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்களையும் குற்றங்களுக்காகவும் தவறான நடத்தைக்காகவும் உயர் நீதிமன்றம் விசாரிக்கலாம். ஆனால், பாராளுமன்றத்தின் சபைகள் மேலே கூறப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக, பகிங்கரமாக வாக்களித்துத் தீர்மானங்கள் இயற்றிய பிறகே உயர் நீதிமன்றம் அவர்களை விசாரிக்க முடியும் என்பது அறியத்தக்கது.

அரசியல் கட்சிகள்

ஐந்தாம் குடியரசின் அரசியலமைப்பு, அரசியல் கட்சிகளை முறைப்படி அங்கீகரிக்கிறது. ஜனநாயக அரசியலமைப்பொன்று, அரசியல் கட்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டு அவற்றை ஏற்பது இதுதான் முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் கட்சிகள் மக்களின் வாக்குகளுக்குப் போட்டியிடலாம் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. அவை தடையில்லாமல் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால், அவை தேசிய இறைமை, மக்களாட்சி ஆகிய கொள்கைகளை மதித்து நடப்பது அவசியமாகும். பல கட்சி முறைக்கும் (multi - party system), அதன் விளைவாகத் தோன்றும் தீமைகளுக்கும் பிரான்சை எடுத்துக் காட்டாகக் கூறுவது வழக்கம். ஐந்தாவது குடியரசின் தொடக்கத்திலிருந்து இந்த நிலை ஓரளவுக்கு மாறிவருகிறது எனக் கூறலாம். சின்னஞ்சிறு அரசியல் கட்சிகள், ஒத்த கருத்துகளுடைய கட்சிகளோடு இணைந்துவரும் போக்குத் தற்காலத்தில் தென்படுவதால், எதிர்காலத்தில் அவை திடநிலை அடையும் என நம்பலாம். அரசியலில் எவ்வளவு கொள்கைகள் சாத்தியமோ அவ்வளவு கொள்கைகளுக்கும் கட்சிகள் இருப்பது பிரெஞ்சு அரசியலுக்கே உரிய தனித்தன்மையாகும்.

அரசியலமைப்புத் திருத்தம்

பிரெஞ்சு அரசியலமைப்பு ஒரு நெகிழாத அரசியலமைப்பாகும். முதலமைச்சரின் ஆலோசனைப்படி குடியரசு தலைவரும்,

பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியலமைப்புத் திருத்தங்களை முன்மொழியலாம். இரு சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் திருத்தங்கள் குடியொப்பத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; பங்குபெறும் வாக்காளர்களில் அவை பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் சட்டங்களாகும். ஆனால், குடியரசு தலைவர் விரும்பினால், அரசியலமைப்புத் திருத்தமொன்றை மக்கள் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்காமல், பாராளுமன்றத்தின் இரு சபைகளும் அடங்கிய 'காங்கிரசின்' தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கலாம். வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பங்கு உறுப்பினர்களால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் சட்டமாகும். நாட்டின் ஒருமைப்பாடு ஆபத்தான நிலையில் இருக்கும்பொழுது, அரசியலமைப்பைத் திருத்தும் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடாது. நாட்டின் ஜனநாயக அரசாங்க முறையை மாற்றக்கோரும் திருத்தங்களைமட்டும் யாரும் கொண்டுவர இயலாது. 1962ஆம் ஆண்டில் குடியரசு தலைவரின் தேர்தலை மறைமுகமான தேர்தலிலிருந்து நேரடியான தேர்தலாக மாற்றியது இதுவரை இடம் பெற்றிருக்கும் அரசியலமைப்புத் திருத்தங்களில் மிக முக்கியமானதாகும்.

பிரெஞ்சுச் சமுதாயம்

பிரெஞ்சுக் குடியரசும் அதன் கடல்கடந்த நாடுகளும் (Overseas territories) தோழமைத் தொடர்புகளோடு வாழ, புதிய அரசியலமைப்பு, 'சமுதாயம்' (Community) என்னும் கூட்டமைப்பு நிறுவியிருக்கிறது. சமுதாயத்தில் அங்கம்வகிக்கும் நாடுகள் அனைத்தும் சுயஆட்சி உரிமைபெற்ற நாடுகளாக இருக்கும். சமுதாயத்தின் குடிமக்கள் அனைவரும் அவர்களின் பிறப்பிடம், இனம், சமயம் எதுவாக இருந்தாலும், சட்டத்தின் முன் சமம் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. அயல்நாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, நாணயச் செலாவணி, பொதுவான பொருளாதாரக் கொள்கை, முக்கியமான மூலப் பொருள்கள்பற்றிய கொள்கை ஆகியவை சமுதாயத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட பொருள்களாகும். நீதி நிருவாகக் கண்காணிப்பு, உயர்கல்வி, போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் ஆகிய இனங்கள்மீதும் சமுதாயம் சட்டங்கள் இயற்றலாம்.

பிரெஞ்சுக் குடியரசின் தலைவரே சமுதாய அமைப்பின் தலைவராவார். நிருவாகக் குழு ஒன்றும், செனட் சபை ஒன்றும், நீதிமன்றம் (Court of Aribitration) ஒன்றும் சமுதாயத்தின் நிறுவனங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரான்சின் முதலமைச்சரும், சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின்

அரசாங்கத் தலைவர்களும், சமுதாயத்தின் எல்லா நாடுகளுக்கும் பொதுவான அலுவல்களைக் கவனிக்கும் அமைச்சர்களும் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களாவர். குடியரசு தலைவரே குழுவின் தலைவராவார். சமுதாயத்தில் சேர்ந்து வாழும் நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையே கூட்டுறவை வளர்ப்பது நிருவாகக் குழுவின் தலையாய கடமையாகும். அங்க நாடுகளின் சட்டமன்றங்கள், அவைகளின் உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பே செனட் சபையாகும். ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதன் மக்கள் தொகையையும், அது சமுதாயத்தில் ஏற்கும் பொறுப்புகளையும் பொறுத்திருக்கும். சமுதாயத்திற்குப் பொதுவான பொருளாதார நிதிக்கொள்கைகளை இச் சபை ஆராயும். அங்க நாடுகளிடையே எழும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பது நீதிமன்றத்தின் பொறுப்பாகும்.

பிரெஞ்சுச் சமுதாயத்தைக் காமன்வெல்த்துக் கழகத்தோடு ஒப்பிடலாம். ஆனால், சமுதாயத்திற்கெனச் சில அரசியல் நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருப்பதுபோலக் காமன்வெல்த்துக்கு அமைக்கப்படவில்லை. அரசியலமைப்பு இவ்வளவு விவரமாக விளக்கும் சமுதாயம் இன்று பெயரளவில் மட்டுமே இருப்பதாகக் கூறலாம். பிரான்சின் கடல்கடந்த நாடுகளில் பல, இன்று, சுதந்திர நாடுகளாக இயங்கி வருகின்றன. பிரான்சு, காமன்வெல்த்துப் போன்று ஓர் அமைப்பின் தலைவியாக இருக்க வேண்டும் என டி கால் கண்ட கனவு முற்றுப்பெறாமல் போனது துரதிர்ஷ்டமே.

2. குடியரசு தலைவர்

(The President)

[முன்னுரை—தேர்தல் முறை—பதவி நீக்கம்—அதிகாரங்கள் : (அ) ஆட்சித்துறை—(ஆ) சட்டத் துறை—(இ) நீதித் துறை—(ஈ) நெருக்கடி நிலை—(உ) அரசியலமைப்பைத் திருத்துதல்.]

முன்னுரை

அரசாங்கத்தின் தலைவராய் இராமல் அரசின் தலைவராய் மட்டும் இயங்கவேண்டிய குடியரசு தலைவர் ஒருவர்க்கு அரசியலமைப்பு வகை செய்கிறது. மூன்ருவது நான்காவது குடியரசுகளின் அரசியலமைப்புகளில் குடியரசு தலைவருக்கு எந்த நிலை தரப்பட்டிருந்ததோ, ஏறத்தாழ அதே நிலைதான் ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பிலும் தரப்பட்டிருக்கிறது. புதிய அரசியலமைப்பின்கீழ் முதலாவது தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்ட டி கால் (de Gaulle) பெயருக்கு மாத்திரம் தலைவராய் இருப்பதை விரும்பாமல், நல்ல செல்வாக்குடைய தலைவராய் இருக்க விரும்பி, பிரெஞ்சு அரசியல் பாரம்பரியத்தில் ஒரு புதிய திசைத் திருப்பத்தை ஏற்படுத்திஞர். மூன்ருவது நான்காவது குடியரசுகளில் குடியரசு தலைவர் கேலிக்குரிய நிலையில் இருந்தது டி காலின் முனைப்பான ஆளுமைக்கு உகந்ததாகாது என்பது அனைவரும் அறிந்த செய்தியே. ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பின் சட்ட திட்டங்கள் குடியரசு தலைவருக்கு வலுவுள்ள நிலையை அளிக்காவிட்டாலும், நடைமுறையில் டி கால் சிறப்பான அதிகாரங்களோடு அரசாண்டார் என்பது அரசியலமைப்பின் விதிகளை எவ்வளவு தூரம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்திக்கொண்டு ஆட்சி செய்தார் என்பதை அறிவுறுத்துகிறது. டி கால் குடியரசின் தலைவராய் வீற்றிருந்த நாள்களில் அவர்தான் அரசாங்கத்தின் நடு நாயகமாய் விளங்கிஞர் என்பதில் யாருக்கும்

கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. அவருக்குப் பின் வருகின்றவர்களும் அவரைப்போல ஆட்சி செய்வார்களா என்பது அவரவர் ஆளுமையைப் பொறுத்தது. அரசியலமைப்பின் இரண்டாவது அத்தியாயத்தின் பதினைந்து விதிகளும் குடியரசு தலைவரைப்பற்றி விளக்குகின்றன.

தேர்தல் முறை

*1958*ஆம் ஆண்டின் அரசியலமைப்பு, குடியரசு தலைவர் ஏறத்தாழ *80,000* பேர் அடங்கிய தேர்தல் குழு ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென நிர்ணயம் செய்திருந்ததை, *1962*ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் திருத்தமொன்று மாற்றி அமைத்திருக்கிறது. குடியரசு தலைவர் தேர்தல் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவதைவிட வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் படுவது அவருடைய செல்வாக்கையும் பெருமையையும் அதி கரிக்கும் என எண்ணிய டி கால் விருப்பப்படியே, மறைமுகத் தேர்தலுக்குப் பதிலாக நேர்முகத் தேர்தலுக்கு இன்றைய அரசிய லமைப்பு வழிசெய்கிறது. அரசியலமைப்பின் ஆறாவது விதி, குடியரசு தலைவர் வயதுவந்த வாக்காளர்கள் அனைவராலும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என அறிவிக்கிறது. இப் புதுத் தேர்தல் முறையையொட்டி *1965*ஆம் ஆண்டில் டி காலும், பிறகு அவர் வேண்டாமெனப் பதவியிலிருந்து விலகிக்கொண்ட பின்பு *1969*ஆம் ஆண்டில் பாம்பிடோவும் (Pompidou) குடியரசு தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளில் அதிகப்படியான வாக்குகள் பெறு பவரே (அவ் வாக்குகளின் எண்ணிக்கை, பதிவான வாக்குகளில் பாதிக்குமேலானவையாய் இருக்கவேண்டும்) குடியரசு தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டதாய் அறிவிக்கப்படுவார். தேர்தலில் எந்த வேட்பாளரும் பதிவான வாக்குகளில் பாதிக்குமேலானவற்றைப் பெறாவிட்டால், அந்தத் தேர்தல் நாளை அடுத்துவரும் இரண் டாவது ஞாயிறன்று, மறுமுறையும் தேர்தல் நடைபெறும். அப்பொழுது, முதல் தேர்தலில் மிக அதிகப்படியான வாக்குகள் பெற்ற மேல் இரண்டு வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிட முடியும். தலைவரின் தேர்தல் ஒழுங்காக நடைபெறுகிறதா எனக் கண்காணிக்க வேண்டிய கடமை அரசியலமைப்புக் குழுவைச் சார்ந்தது. தேர்தலைப் பற்றிய குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்தால் அவற்றை விசாரித்துத் தேர்தல் முடிவுகளை அறிவிக்க வேண்டியதும் அதன் பொறுப்பேயாகும்.

எந்தக் காரணம் பற்றியாவது குடியரசு தலைவரின் பதவி காலியானால், அல்லது அரசியலமைப்புக் குழு அவர் தன்னுடைய

பணிகளைச் செய்வதினின்றும் தடை செய்யப்பட்டிருக்கிறார் என அறிவித்தால், அடுத்த தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை செனட் சபையின் தலைவர் தாற்காலிகக் குடியரசு தலைவராகப் பொறுப் பேற்பார். குடியரசு தலைவர் ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந் தெடுக்கப்படுவார். ஒருவரே மீண்டும் பல தடவைகள் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அரசியலமைப்பில் எந்தத் தடையுமில்லை. குடியரசு தலைவர் பதவிக்கெனத் தனியான தகுதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. வாக்குரிமையுடைய எந்தக் குடிமகனும் இந்தப் பெரும் பதவிக்குப் போட்டியிடலாம். நான்காவது குடியரசின் அரசியலமைப்பு பிரான்சின் பழைய அரச குடும்பங்களைச் சேர்ந்தோர் தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தகுதியற்றவர் என அறிவித்திருந்த தடையும் ஐந்தாவது குடியரசால் நீக்கப்பட்டுவிட்டது.

பதவி நீக்கம்

குடியரசு தலைவரை இராசத் துரோகக் குற்றத்திற்காகக் குற்றம்சாட்டிப் பதவியிலிருந்து விலக்க அரசியலமைப்பு இடமளிக் கிறது. இராசத் துரோகம் என்ற குற்றத்தைத் தவிர வேறு எந்தக் குற்றத்திற்காகவும் அவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாது. முதலில் பாராளுமன்றத்தின் சபைகள் இரண்டிலும் குடியரசு தலைவருக்கு எதிராக ஒரே மாதிரியான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒவ்வொரு சபையிலும் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேருக்குமேல் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். சபைகளில் உறுப்பினர்கள் பகிரங்கமாக வாக்களிக்கவேண்டும். இரு சபைகளிலும் குடியரசு தலைவருக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு, அவர் இரு சபைகளின் உறுப்பினர்களும் அடங்கிய உயர் நீதிமன்றத்தால் (High Court of Justice) விசாரிக்கப்படுவார். உயர் நீதிமன்றம் அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் மெய்யெனத் தீர்மானித் தால் அவர் பதவியிலிருந்து விலக்கப்படுவார்.

அதிகாரங்கள்: ஆட்சித்துறை

அரசியலமைப்பை மக்கள் மதித்து நடக்கும்படி செய்வதும், பொது நிறுவனங்கள் ஒழுங்காக இயங்கும்படி பார்த்துக் கொள்வதும், அரசின் தொடர்ச்சிக்குக் காப்பளிப்பதும் குடியரசு தலைவரின் உயர்ந்த பொறுப்புகளாகும். தேசியச் சுதந்திரம், நாட்டின் ஒருமைப்பாடு, சமுதாய ஒப்பந்தங்கள் ஆகியவற்றிற்கு உத்தரவாதமளிப்பதும் அவர் கடமையாகும். குடியரசு தலைவருக்கு முதலமைச்சரை நியமிக்கவும், அவர் பதவியிலிருந்து

விலக விரும்பினுல் அவர் இராசினுமாவை ஏற்கவும் அதிகாரம் உண்டு. முதலமைச்சர் சிபாரிசின்பேரில் அவர் மற்ற அமைச்சர்களை நியமிக்கவும் நீக்கவும் செய்வார். குடியரசின் தலைவர், பிரிட்டிஷ் முறைக்கு நேர்மாருக, அமைச்சரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படும் ஆணைகளுக்கு அவர் கையொப்பமிடுவார். நாட்டிலுள்ள சிவில் இராணுவப் பதவிகளுக்குரிய அதிகாரிகளை அவர் நியமிப்பார். பிரான்சிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் தூதர்களை அனுப்புவதும், வெளி நாடுகளிலிருந்து பிரான்சுக்கு வரும் தூதர்களை வரவேற்பதும் குடியரசு தலைவரின் உரிமையாகும். அரசியலமைப்பு அவரையே படைப் பிரிவுகளின் தளபதி என அறிவிக்கிறது, தேசியத் தற்காப்புப் பற்றிய உயர் குழுக்களுக்கு அவர் தலைமை தாங்குவார். குடியரசு தலைவர் அயல்நாடுகளோடு பேச்சு வார்த்தை நடத்தி உடன்படிக்கைகள் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகிருர். ஆனுல், சமாதானம், வர்த்தகம், பன்னுட்டு நிறுவனங்கள் ஆகியவற்றைப் பற்றிய உடன்படிக்கைகளும், நாட்டின் நிதிநிலையை பாதிப்பதும், சட்டத்துறை சார்புடைய விதிகளை மாற்றுவதும், மனிதர்களின் அந்தஸ்தைப் பற்றியதுமான உடன்படிக்கைகளும், நாட்டின் பிரதேசத்தை விட்டுக் கொடுப்பது, மாற்றிக்கொள்வது, அதோடு புதியவற்றைச் சேர்ப்பது ஆகிய்வற்றிற்கு வகைசெய்யும் உடன் படிக்கைகளும், பாராளுமன்றத்தால் சட்டத்தின் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டால்தான் செல்லுபடியாகும்.

சட்டத் துறை

பாராளுமன்றத்தின் சாதாரணக் கூட்டங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலங்களில் கூடினுலும், அதன் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதைக் கூட்டுவதற்கும் முடிப்பதற்குமுரிய ஆணைகளைக் குடியரசு தலைவரே பிறப்பிப்பார். முதலமைச்சரையும் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் தலைவர்களையும் கலந்தாலோசித்த பிறகு அவர் தேசியச் சபையைக் கலைக்கலாம்; ஆனுல், அதன் இடத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சபையை அது தேர்ந்தெடுக்கப் பட்ட ஓர் ஆண்டு காலத்திற்குள் அவர் கலைக்க முடியாது. பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் அவர் செய்திகள் அனுப்ப லாம். அவை அங்கே படிக்கப்படுமே ஒழிய விவாதிக்கப்பட மாட்டா. பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்களுக்கிடையே குடியரசு தலைவரின் செய்தி அறிவிக்கப்படுவதற்காக அதன் சபைகள் சிறப்புக் கூட்டம் ஒன்றிற்கு வருமாறு அழைக்கப் படலாம். குடியரசு தலைவர் பாராளுமன்றத்தின் மசோதாக்கள்

அவருக்கு அனுப்பப்பட்ட பதினைந்து நாள்களுக்குள் அவற்றைச் சட்டங்களென அறிவிக்க வேண்டும். மசோதாக்களை ஏற்க மறுக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை என்பது அறியத்தக்கது. ஆனால், மசோதா ஒன்று அவரை வந்தடைந்த பதினைந்து நாள்களுக்குள், அதை முழுதுமோ, அதன் விதிகளில் சிலவற்றையோ, பாராளுமன்றம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அதைக் கேட்டுக் கொள்ளலாம்; அவ்வாறு மறு பரிசீலனை செய்யப் பாராளுமன்றம் மறுக்க முடியாது. பாராளுமன்றத்தின் யோசனைப்படியோ, அல்லது இரு சபைகளின் தீர்மானம் ஒன்றின் பேரிலோ, குடியரசு தலைவர் மசோதா ஒன்றைக் குடியொப்பத்திற்குச் சமர்ப்பிக்கலாம். வாக்காளர்களின் ஆதரவு மசோதாவிற்குச் சாதகமாக அமைந்தால் குடியரசு தலைவர் அம்மசோதாவை ஏற்றுக்கொண்டு அதைச் சட்டமாக அறிவிக்கக் கடமைப்பட்டவர். அவர் சர்வதேச உடன்படிக்கைகளை அவை அரசியலமைப்பிற்கு உட்பட்டவையா அப்பாற்பட்டவையா என ஆராயும்படி அரசியலமைப்புக் குழுவைப் பணிக்கலாம். அரசியலமைப்புக் குழு அவற்றை நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பிற்கு முரணானவை என அறிவித்தால், அரசியலமைப்புத் தக்க வழியில் திருத்தி அமைக்கப்பட்ட பிறகே உடன்படிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். சாதாரண மசோதாக்களைக் கூடக் குடியரசு தலைவர் அரசியலமைப்புக் குழுவின் ஆலோசனைக்கு அனுப்பலாம். அவருக்கு அரசியலமைப்புக் குழுவின் அங்கத்தினர்களில் மூன்று பேரை நியமிக்கும் உரிமை உண்டு.

நீதித் துறை

நீதித் துறையின் சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிப்பது குடியரசு தலைவரின் பொறுப்பென்று அரசியலமைப்பு அறிவிக்கிறது. 'நீதித் துறையின் உயர் மன்றம்' (High Council of Judiciary) என்னும் அமைப்பு அவர் நீதி நிர்வாகக் கடமைகளைச் செய்ய உதவி செய்யும். நீதித் துறையின் உயர்மன்றத்தின் ஒன்பது உறுப்பினர்களும் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்; மேலும் அவரே அம்மன்றத்தின் தலைவராகவும் இருக்கிறார். குற்றவாளிகளுக்குக் குற்ற மன்னிப்பு வழங்கக்கூடிய உயர் அதிகாரம் அவருக்கு உண்டு.

நெருக்கடி நிலை

இந்தியக் குடியரசு தலைவருக்கு நெருக்கடி நிலை அறிவிக்கக் கூடிய அதிகாரம் இருப்பதுபோல பிரெஞ்சுக் குடியரசு தலைவருக்கும் இருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

குடியரசின் நிறுவனங்கள், அல்லது நாட்டின் சுதந்திரம், அல்லது அதன் ஒருமைப்பாடு, அல்லது அதன் சர்வதேசப் பொறுப்புகள் (International Commitments) ஆகியவை ஆபத்தான நிலையில் இருந்து, அரசியலமைப்பால் நிறுவப்பட்ட பொது நிறுவனங்கள் ஒழுங்காக இயங்குவதற்குத் தடை ஏற்பட்டால், குடியரசு தலைவரானவர், முதலமைச்சர், இரு சபைகளின் தலைவர்கள், அரசியலமைப்புக் குழுவினர் ஆகியோரை அதிகாரபூர்வமாகக் கலந்தாலோசித்து, சூழ்நிலைக்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அரசியலமைப்பின் பதினாறுவது விதி அறிவிக்கிறது. தான் எடுக்கும் நடவடிக்கைகளை அவர் செய்தி ஒன்றின் மூலமாக நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எவ்வளவு குறுகிய காலத்தில் அரசின் நிறுவனங்களைச் சீர்செய்ய முடியுமோ அவ்வாறு செய்து, அவற்றின் பணிகளை அவை வழக்கம்போலச் செய்ய அவற்றிற்கு உதவும் வகையில், குடியரசு தலைவரின் நெருக்கடிகால நடவடிக்கைகள் அமைய வேண்டும். அவர் தான் செய்யும் செயல்களைப் பற்றி அரசியலமைப்புக் குழுவைக் கலந்தாலோசிக்க வேண்டும். அக்காலத்தில் பாராளுமன்றம் கூடியிருக்க வேண்டுமென்றும் தேசியச் சபை கலைக்கப்படக் கூடாதென்றும் அரசியலமைப்புத் தெரிவிக்கிறது. சர்வாதிகாரப் போக்குள்ள குடியரசு தலைவர்கள் மேற்கண்ட விதியைப் பயன்படுத்தி ஆட்சிப்பீடத்தில் நிலையாக அமர்ந்திருக்க முயல்வார்கள் என்ற கருத்தில் ஓரளவுக்கு உண்மையிருக்கிறது. எப்பொழுது ஆபத்தான சூழ்நிலை தோன்றியிருக்கிறது என்பதை அவர்தான் முடிவு செய்வார். நெருக்கடியைத் தவிர்க்க என்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதையும் அவரே தீர்மானிப்பார். முதலமைச்சர், இரு சபைகளின் தலைவர்கள், அரசியலமைப்புக் குழு ஆகியோரை அவர் கலந்தாலோசித்தல் மட்டுமே போதுமானது; தன் செயல்கள் எதற்கும் அவர் யாருடைய இசைவையும் பெறத் தேவையில்லை; தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அவர் நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டுமே ஒழிய அவர்கள் அவற்றை ஆதரிக்கின்றார்களா என்பதை அறிய வேண்டியதில்லை. நாட்டைப் பேராபத்துகளிலிருந்து காக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இந்த மேலான அதிகாரம் குடியரசு தலைவருக்கு அளிக்கப்பட்டிருப்பதால் இதை எந்தத் தலைவரும் தீய வழியில் பயன்படுத்தினால் நாட்டு மக்கள் அவரை மன்னிக்க மாட்டார்கள் என்பது உறுதி,

அரசியலமைப்பைத் திருத்துதல்

முதலமைச்சரின் ஆலோசனைப்படி குடியரசு தலைவர் அரசியலமைப்பிற்குத் திருத்தங்களை முன்மொழியலாம். பாராளு

மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களைக் குடியொப்பத்திற்கு விடுவதுதான் பொதுவாகப் பின்பற்றப்பட வேண்டிய முறை என்றாலும், குடியரசு தலைவர் விரும்பினால் அவற்றைக் குடியொப்பத்திற்கு விடுவதற்குப் பதிலாக, பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் கொண்ட இணைப்புக் கூட்டமொன்றிலும் சமர்ப்பிக்கலாம். எனவே அரசியலமைப்புத் திருத்தமொன்றை வாக்காளர்களின் முடிவுக்கு விடுவதா, பாராளுமன்றச் சபைகளின் முடிவுக்கு விடுவதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை குடியரசு தலைவருக்கே உரியது என்பது தெளிவாகிறது.

குடியரசு தலைவருக்குத் தரப்பட்டிருக்கும் பல முக்கியமான செயல்களை அவர் செய்யும்பொழுது அவற்றிற்குரிய ஆணைகள் முதலமைச்சராலும், தேவை ஏற்பட்டால் தொடர்புடைய அமைச்சராலும் மேற்கையொப்பமிடப்பட வேண்டுமென அரசியலமைப்பு அறிவிக்கிறது. எனவே, அச்செயல்களுக்கு அமைச்சர்களே பொறுப்பேற்க வேண்டுமென்பது உறுதியாகிறது. முதலாவது குடியரசு தலைவரான டி காலின் காலம் வரை முதலமைச்சரைவிட, குடியரசு தலைவரே நல்ல செல்வாக்கோடு ஆட்சி செய்தார். ஐந்தாவது குடியரசு தோன்றுவதற்கு இருபது ஆண்டுகட்கு முன்பிருந்தே டி கால் நாட்டின் ஒப்பற்ற தலைவராய் விளங்கிவந்த காரணத்தால் பதவிக்கு வரும்பொழுதே அவர் ஈடு இணையற்ற பெயரோடும் புகழோடும் வந்தார். போர்க்களம் பல கண்ட தளபதியாகவும் வெற்றி வீரராகவும் வாழ்ந்து பழக்கப்பட்ட டி காலுக்குப் பெயருக்கு மட்டும் தலைவராக இருப்பது அவர் இயல்புக்கு மாறானது என்பதை பிரெஞ்சு மக்கள் உணர்ந்திருந்தனர். பிரான்சு ஐரோப்பிய நாகரிகத்தின் தலைவியாக இருந்த நாள்களையும், வல்லரசுகளெல்லாம் கண்டு அஞ்சிய நெப்போலியனின் நினைவுகளையும் மக்கள் மனத்தில் தூண்டுகின்ற அளவுக்குப் பெருமையோடு ஆண்ட டி காலைப்போன்று இனி ஒரு குடியரசு தலைவர் பிறப்பார் என்பதை நம்மால் எளிதில் நம்ப முடியாது. இன்றைய குடியரசு தலைவரான பாம்பிடோ, முதலமைச்சராக முன்பு பதவி வகித்திருந்தபோதிலும், அரசியலமைப்பால் வரையறுக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் செயல்பட்டு வருவது அறியத்தக்கது. ஒரு பதவியின் செல்வாக்கு என்பது அதற்குரிய சட்டதிட்டங்களைப் பொறுத்தது என்று கூறுவது ஓரளவுக்கு உண்மையானாலும், அந்தப் பதவியை வகிக்கும் தலைவர்களின் ஆளுமையைப் பொறுத்தது என்பதற்கு டி காலையும் பாம்பிடோவையும் எதிர் மாறான உதாரணங்களாகக் கூறலாம்.

3. கேபினட் அமைச்சரவை

(The Cabinet)

[முன்னுரை — அமைப்பு — முதலமைச்சர் — அதிகாரங்கள் — அமைச்சரவையின் பொறுப்பு.]

முன்னுரை

குடியரசு தலைவர் நாட்டின் மதிப்பிற்குரிய தலைவராய் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், நாட்டை ஆள்கின்ற பொறுப்பு அமைச்சரவையின் பொறுப்பு என்பதை அரசியலமைப்பு ஒளிவு மறைவில்லாமல் தெரிவிக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அமைச்சரவைக்கு எந்தநிலை அளிக்கப்பட்டிருக்கிறதோ, ஏறத்தாழ அது போன்ற நிலையை பிரெஞ்சு அரசாங்கத்தில் அமைச்சரவைக்கு அளிப்பதே ஐந்தாம் குடியரசின் அரசியலமைப்பின் நோக்கமாகும். பாராளுமன்ற அரசாங்க முறை பின்பற்றப்படும் நாடுகளில் அமைச்சரவைதான் அரசாங்கத்தை வழி நடத்திச் செல்வது வழக்கம்; இன்றைய பிரான்சு இதற்கு விதிவிலக்கன்று. அமைதியான காலங்களில் அமைச்சரவையும், ஆபத்தான காலங்களில் குடியரசு தலைவரும் அரசின் அலுவல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே அரசியலமைப்புத் தந்தைகளின் கருத்தென எண்ணுவதற்கு அரசியலமைப்பில் போதுமான ஆதாரமிருக்கிறது.

அமைப்பு

அரசாங்கத்தின் தலைவரான முதலமைச்சர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார். அவர் பதவியிலிருந்து இராசிநாமா செய்தால் அதை ஏற்பதும் குடியரசு தலைவரே. குடியரசு தலைவர் அமைச்சரவையின் மற்ற அங்கத்தினர்களை முதல்வரின் சிபாரிசுப்படியே நியமிக்கவும் நீக்கவும் செய்வார். பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்

பட்ட போதிலும், அவர்கள் அமைச்சர்களான பிறகு சட்ட மன்றங்களில் அங்கம் வகிப்பதை அரசியலமைப்புத் தடை செய்கிறது. அமைச்சர்களாக நியமிக்கப்படும் பாராளுமன்ற அங்கத்தினர்களின் இடங்கள் இடைத் தேர்தல்கள் மூலமாக நிரப்பப்படும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக நீடிக்காவிட்டாலும், அதன் இரு சபைகளிலும் அமர்ந்து பேசக் கூடிய உரிமை அவர்களுக்கு உண்டு. உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையளிப்பது அவர்களின் கடமையாகும். ஒவ்வொரு சபையிலும் வாரத்திற்கு ஒருநாள் கேள்வி பதிலுக்காக ஒதுக்கப்படுகிறது. அமைச்சரவையின் கூட்டங்களுக்குக் குடியரசு தலைவர் தலைமை ஏற்பார். சில சமயங்களில் முதலமைச்சரும் தலைமை தாங்குவதற்கு அரசியலமைப்பு இடமளிக்கிறது.

முதலமைச்சர்

அரசியலமைப்பு முதலமைச்சரின் நிலையைச் சற்று விவரமாக விளக்கி, அவருக்குரிய சிறப்பான இடத்தை உறுதிப்படுத்துகிறது. குடியரசு தலைவரின் ஆணைகளில் பல முதலமைச்சரின் மேல் கையொப்பத்தைப் பெற்ற பிறகே அறிவிக்கப்படவேண்டும். அவற்றின் விளைவுகளுக்கு முதலமைச்சர் பொறுப்பேற்பார். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முதலமைச்சரே இயக்குவார் என அரசியலமைப்பு அறிவிப்பதன்மூலம் எவ்வளவு பெரிய சுமையை அது முதலமைச்சர்மேல் சுமத்துகிறது என்பது தெரிகிறது. தேசியப் பாதுகாப்பு அவர் பொறுப்பு என்றும் சட்டங்களை நிறை வேற்றுவது அவர் கடமை என்றும் கூறப்படுகின்றன. குடியரசு தலைவர் தலைமை தாங்கவேண்டிய தேசியப் பாதுகாப்புக் குழுக் களின் கூட்டங்களுக்குச் சில சமயங்களில் முதலமைச்சர் தலைமை தாங்கலாம். அவருக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை அவர்கீழுள்ள அமைச்சர்களிடம் ஒப்படைதற்கும் அவருக்கு அதிகாரமுண்டு. முதல்வரின் ஆணைகள் அந்தந்தத் துறைக்குரிய அமைச்சரின் மேல் கையொப்பத்தோடு அறிவிக்கப்படும். குடியரசு தலைவர் நெருக்கடி நிலையைத் தீர்க்க முயலும்பொழுதும், தேசியச் சபையைக் கலைக்கும்பொழுதும் முதலமைச்சரைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்றும், அரசியலமைப்புத் திருத்தங்களை அவர் யோசனையின்பேரில் முன்மொழிய வேண்டுமென்றும் அரசிய லமைப்புக் கூறியிருப்பது, அது முதலமைச்சருக்குத் தரும் முக்கியத் துவத்தை உணர்த்துகிறது. பாராளுமன்றத்தின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டும்படி குடியரசு தலைவரைக் கேட்டுக் கொள்ளவும், சில சமயங்களில் அதன் கூட்டம் இரகசியக் கூட்டமாய் நடைபெற வேண்டுமென்று யோசனை கூறவும், மசோதாக்களை முன்மொழியவும், மசோதா குறித்து இரு சபை

களுக்கிடையே கருத்து வேற்றுமை தோன்றுங் காலங்களில் அதைத் தவிர்க்க இரு சபைகளின் இணைப்புக் கூட்டமொன்றைக் கூட்டவும், அயல் நாடுகளோடு செய்துகொள்ளும் உடன்படிக் கைகள் அரசியலமைப்பிற்கு உட்பட்டவையா அப்பாற் பட்டவையா என்பதை அறிய அவற்றை அரசியலமைப்புக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பவும் முதலமைச்சருக்கு அதிகார முண்டு.

அதிகாரங்கள்

அரசாங்கத்தின் கொள்கைகளையும் போக்கையும் அமைச்ச ரவை நிர்ணயிக்கும் என அரசியலமைப்பின் இருபதாவது விதி அறிவிக்கிறது. குடியரசு தலைவரால் செய்யப்படும் அதிகாரிகளின் நியமனங்கள் அமைச்சரவை கூட்டத்தில் செய்யப்படவேண்டும். குடியரசு தலைவர், படைத் தலைவராய் இருக்கும் சிறப்பைப் பெற்றிருந்தாலும், படைப் பிரிவுகளின் நிருவாகம் அமைச்ச ரவையின் ஆட்சிக்கு உட்பட்டது; அது இராணுவச் சட்டத்தையும் பிறப்பிக்கலாம்; ஆனல், அவ்வகையான சட்டம் பன்னிரண்டு நாள் களுக்குமேல் நீடிப்பதென்றால் பாராளுமன்றத்தின் இசைவைப் பெற்றுகவேண்டும். அமைச்சரவை மசோதாக்களைப் பொரு ளாதாரச் சமுதாயக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பி, அவற்றின்மீது அதன் ஆலோசனையைப் பெறலாம். அது பொருளாதாரச் சமுதாயத் தொடர்புடைய எந்தப் பிரச்சினையையும் அக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி அதன் கருத்தைப் பெறலாம்.

பொதுவாகப் பாராளுமன்றமே இயற்றக்கூடிய சட்டங்களை, குறிப்பிட்ட காலத்திற்கு அதனுடைய அனுமதிபெற்று அமைச்ச ரவையும் இயற்ற அரசியலமைப்பு வகைசெய்கிறது. அதுபோன்ற அவரச் சட்டங்கள் அரசியலமைப்புக் குழுவின் ஆலோசனையின் பேரிலும் அமைச்சரவையின் கூட்டத்திலும் இயற்றப்பட வேண்டும். அவசரச் சட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மேலும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றால் பாராளுமன்றத்தின் இசைவு தேவை. அரசாங்க மசோதாக்கள் முதலில் அமைச்ச ரவையில் விவாதிக்கப்பட்ட பிறகே மேல்சபையிலோ கீழ்ச் சபையிலோ தோற்றுவிக்கப்படலாம். பாராளுமன்ற நேரத்தில் அரசாங்க மசோதாக்களை முன்மொழிவதற்கு முதலிடம் தரப் படுகிறது. அரசாங்க மசோதாவல்லாது மற்ற மசோதா வொன்றைப் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகார எல்லைக்குள் அடங்காததாய் அமைச்சரவை கருதினல், அம் மசோதாவைச் சபை பரிசீலிக்க இயலாது என அது அறிவிக்கலாம். அதுபற்றி அரசாங்கத்திற்கும் தேசியச் சபையின் தலைவருக்கும்

கருத்து வேறுபாடு இருக்குமாஞல், அதைப்பற்றிய முடிவு அரசிய லமைப்புக் குழுவின் ஆய்வுக்கு விடப்படும். செனட் சபைக்கும் தேசியச் சபைக்கும் ஏதாவது மசோதா குறித்து உடன்பாடு ஏற்படாதிருக்கும் சமயங்களில், அரசாங்கம் மசோதா பற்றிய இறுதியான முடிவைத்தேசியச் சபையே தீர்மானிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். வருடாந்திர வரவுசெலவுத் திட்டத்தைத் தேசியச் சபையில் சமர்ப்பிப்பது அரசாங்கத்தின் உரிமையாகும். பாராளு மன்றம் எழுபது நாள்களுக்குள் அதை விவாதித்து அதன்மீது முடிவெடுக்க வேண்டும். அவ்வாறு அது செய்யத் தவறிஞல், அரசாங்கம் அவசரச் சட்டம் ஒன்றின் மூலமாக வரவுசெலவுத் திட்டத்தை அறிவித்து நாட்டின் நிதி நிர்வாகத்தை மேற் கொள்ளும். ஆனல், பாராளுமன்றமானது குறிப்பிட்ட காலத் திற்குள் வரவுசெலவுத் திட்டத்தை முடிவுசெய்துவிடுவது வழக்க மாதலால், அமைச்சரவை அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிக்க அவசியம் எழாது.

அமைச்சரவையின் பொறுப்பு

அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளது என்பதை அரசியலமைப்பு மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறது. தாய்ச்சபை, சேய்க்குழுவைப் பொறுப்புள்ள வகையில் நடந்து கொள்ளும்படி செய்ய, மூன்று முறைகளைக் கையாளலாம். (1) அமைச்சரவையால் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கத் திட்டங்களையும் கொள்கைகளையும். முதலமைச்சர் தேசியச் சபையில் சமர்ப்பித்து, அத்திட்டங்களுக்கும் கொள்கை களுக்கும் அமைச்சரவை பொறுப்பேற்கும் என அறிவிப்பார். அமைச்சரவை முதலில் பதவியில் அமரும் காலத்தில் இதுபோன்ற கொள்கை அறிவிப்புச் செய்வது வழக்கம். ஐந்தாவது குடியரசின் முதல் இரண்டு முதலமைச்சர்களும் தங்கள் அரசாங்கத்தின் திட்டங்களை அவ்வாறுதான் அறிவித்தனர். அரசாங்கம் அறிவிக்கும் திட்டங்களையும் கொள்கைகளையும் விவாதிக்கும் தேசியச் சபையின் உறுப்பினர்களில் சபைக்கு வந்திருந்து வாக்களிப்போரில் பெரும்பாலோர் அவற்றை ஏற்க மறுத்தால் அமைச்சரவைக்குப் பதவியிலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை. (2) எந்தச் சமயத்திலும், தேசியச் சபை, அரசாங் கத்திற்கு எதிராகக் கண்டனத் தீர்மானமொன்றை (vote of censure) நிறைவேற்றி, அதைப் பதவி துறக்கும்படி கட்டாயப் படுத்தலாம். கண்டனத் தீர்மானம் சபையின் குறைந்த அளவு பத்தில் ஒருபங்கு உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். தீர்மானம் பதிவு செய்யப்பட்ட நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குப் பிறகு சபையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாக்குகள் மட்டுமே எண்ணப்படும். சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேருக்குமேல் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தால், அரசாங்கம் பதவியிலிருந்து நீங்குவது தவிர்க்க முடியாததாகும். ஆனால், கண்டனத் தீர்மானம் தோற்றுப்போனால் அத் தீர்மானத்தில் கையொப்பமிட்டிருந்த உறுப்பினர்கள் அந்தத் தொடர் கூட்டத்தில் அதுபோன்ற மற்றொரு தீர்மானத்திற்காகக் கையொப்பமிட முடியாது. (3) முதலமைச்சர் ஏதாவது ஒரு பிரச்சினையை அரசாங்கத்தின் கொள்கைப் பிரச்சினை என அறிவிக்கலாம். அதற்குச் சபையில் எந்தவித எதிர்ப்பும் இல்லையென்றால் அரசாங்கத்தின் கொள்கையைச் சபை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும். ஆனால், முதலமைச்சரின் அறிவிப்பு நிகழ்ந்த இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் அதன்மீது கண்டனத் தீர்மானமொன்று கொண்டுவர உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு. மேலே விவரிக்கப்பட்ட கண்டனத் தீர்மானம் எந்த விதிகளையொட்டி நிறைவேற்றப்பட வேண்டுமோ, அதேபோன்றுதான் இந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்படவேண்டும். முதலமைச்சரால் பாராளுமன்றத்தின் விசேஷ அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும் தனிப்பட்ட பிரச்சினைகள்மீது உறுப்பினர்கள் எத்தனைமுறை வேண்டுமென்றாலும் கண்டனத் தீர்மானங்கள் கொண்டுவரலாம் என்பது அறியத்தக்கது.

ஒவ்வொரு அமைச்சர்மீதும், அவர் செய்த குற்றத்திற்காகவோ, அல்லது தவறான நடத்தைக்காகவோ நடவடிக்கை எடுக்கலாம். இரு சபைகளும் அமைச்சர் ஒருவருக்கு எதிராக மேற்கண்ட காரணங்களுக்காக நிறைவேற்றும் தீர்மானங்களை உயர்நீதிமன்றம் ஆராய்ந்து தீர்ப்பளிக்கும். நாட்டின் குற்றச் சட்டங்களில் குற்றம் என்பதற்கும் தவறான நடத்தை என்பதற்கும் என்ன பொருள் கூறப்பட்டிருக்கிறதோ அதையே உயர்நீதிமன்றம் ஏற்று, அச்சட்டங்களில் அக்குற்றங்களுக்கு என்ன தண்டனை அளிக்கப்படலாம் எனக் கூறப்பட்டிருக்கிறதோ அத்தண்டனையை உயர்நீதிமன்றம் குற்றம் புரியும் அமைச்சர்களுக்கு அளிக்கும்.

4. பாராளுமன்றம்

(The Parliament)

[முன்னுரை—செனட் சபை—தேசியச் சபை — இரு சபைகளுக்கும் பொதுவான செய்திகள்—அதிகாரங்கள்.]

முன்னுரை

புரட்சியின்பொழுது 'மனித உரிமைகளை' (Rights of Man) அறிவித்து, அவற்றை உலகெங்கும் எதிரொலிக்கச் செய்த பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் பெருமையும் புகழும் ஐந்தாவது குடியரசில் ஓரளவுக்குக் குறைந்துவிட்டன. இன்றைய அரசியலமைப்பு நிறுவனங்களில் 'மாற்றாள் மகவு' எனக் கருதப்படக்கூடிய அளவுக்கு அதன்நிலை தாழ்ந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. மூன்றாவது நான்காவது குடியரசுகளில் அதற்கிருந்த செல்வாக்கான நிலை ஐந்தாவது குடியரசில் இல்லை என்பது உண்மையென்றாலும், அரசின் முதன்மையான நிறுவனங்களில் அதுவும் ஒன்று என்பதில் ஐயமில்லை. செனட் சபை என அழைக்கப்படும் மேல்சபையும், தேசியச் சபை என அழைக்கப்படும் கீழ்ச்சபையும் கொண்ட அமைப்பே பிரெஞ்சுப் பாராளுமன்றமாகும். மேல்சபை 'ஊராட்சி அமைப்புகளின் பேரவை' (Grand Council of the French Communes) என்றும், கீழ்ச்சபை மக்களின் பேரவை என்றும் கருதப்படுகின்றன.

செனட் சபை

செனட் சபையின் 302 உறுப்பினர்கள் பிரான்சின் தல ஆட்சி நிறுவனங்களின் அங்கத்தினர்கள் அடங்கிய தேர்தல் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மிகச் சிறிய தலஆட்சி அமைப்பின் சார்பாகவும் குறைந்த அளவு ஓர் அங்கத்தினராவது தேர்தல் குழுவில் இடம் பெறுவதால், அதில் நகரங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களைக் காட்டிலும் கிராமங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களே

அதிகமான இடங்களைப் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். பிரெஞ்சு மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் 1500-க்குக் குறைந்த குடிமக்கள் வாழும் பகுதிகளில் வாழ்கின்றனர் என்றும், ஆனால், செனட் சபையின் பாதிக்கு மேலான பிரதிநிதிகள் அவர்களின் பிரதிநிதிகள் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. 10,000-க்கு மேற்பட்ட மக்கள்தொகையுடைய நகரங்களில் நாட்டு மக்களில் நாற்பது சதவிகிதத்தினர் வசித்தபோதிலும், அவர்களின் பிரதிநிதிகளாகச் செனட் சபையின் உறுப்பினர்களில் ஐந்தில் ஒரு பங்கினரே இருக்கின்றனர். பிரான்சில் உள்ள 95 மாவட்டங்களும் (departments) அதனதன் மக்கள்தொகை அடிப்படையில் செனட் சபையில் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. பிரான்சின் எல்லைகளுக்கு அப்பால் வாழும் பிரெஞ்சு மக்களுக்கும் செனட்டில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. செனட் சபை உறுப்பினர்கள், தேசியச் சபை உறுப்பினர்களைப் போன்று, இரட்டைத் தேர்தல் முறைப்படி (கீழே விவரிக்கப்பட்டுள்ளது) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். செனட்டர்களின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை பதவியிலிருந்து விலகுவதால், மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை செனட்டின் மூன்றின் ஒரு பங்கு இடங்களுக்குத் தேர்தல் நடைபெறும். வேட்பாளர்கள் குறைந்த அளவு 35 வயதுடையவர்களாகவாவது இருத்தல் அவசியம். கீழ்ச்சபைக்குப் போட்டியிடுவோர் போன்று மேல்சபைக்குப் போட்டியிடுவோரும் மாற்றுள்கள் நியமிக்கவேண்டும் (கீழே விவரிக்கப்பட்டுள்ளது). செனட் சபைத் தலைவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே நீடிக்கும். சபையின் மூன்றில் ஒரு பங்கு மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும்பொழுது அதன் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தேசியச் சபை

தேசியச் சபையின் 487 உறுப்பினர்கள் பிரெஞ்சு வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பிரான்சில் 21 வயதைத் தாண்டிய ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. நோயாளிகள், வயோதிகர்கள், படைவீரர்கள் போன்றோர் அஞ்சல் மூலமாக வாக்களிக்கவும், வெளி நாடுகளில் தங்கியிருக்கும் பிரெஞ்சு அதிகாரிகள், குடிமக்கள் போன்றோர் பதிலாள் மூலமாக வாக்களிக்கவும் சட்டம் அனுமதிக்கிறது. தேசியச் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குடியரசு தலைவர் இரு சபைகளின் தலைவர்களையும் கலந்தாலோசித்த பிறகு ஐந்து

ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்பாகவே அதைக் கலைக்கலாம் என்பதையும், அதனிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பாராளுமன்றத்தை ஓராண்டிற்குள்ளாகக் கலைக்கக்கூடாது என்பதையும் முன்னர் பார்த்தோம். வேட்பாளர்கள் 23 வயதிற்கு மேற்பட்டவர்களாய் இருத்தல் அவசியம். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஐந்து ஆண்டுகட்கு முன்பாக இறக்க நேர்ந்தாலோ, அல்லது அமைச்சர் பதவிபோன்ற அரசாங்கப் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதாலோ, அவர் இடம் காலியானல் அதை நிரப்ப மாற்றுள் ஒருவரையும் நியமிக்கவேண்டும். உறுப்பினர்களின் தேர்தலுக்கு இரட்டைத் தேர்தல் முறை (two-ballot system) என்ற புதிய முறை பின்பற்றப்படுகின்றது. பதிவான வாக்குகளில் பாதிக்கு மேலான வாக்குகளைப் பெறும் வேட்பாளர்கள் மட்டுமே முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கத் தவறும் தொகுதிகளில் பழைய வேட்பாளர்கள் மீண்டும் போட்டியிடும்பொழுது, ஒவ்வொரு தொகுதியிலும் எந்த வேட்பாளர் அதிகப்படியான வாக்குகளைப் பெறுகிறாரோ (இம்முறை அவை அளிக்கப்பட்ட வாக்குகளில் பாதிக்கு மேலானவையாய் இருந்தாலும் சரி, குறைந்தவையாய் இருந்தாலும் சரி) அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இரண்டாவதாக அறிவிக்கப்படுவார். ஐந்தாவது குடியரசின் முதல் பொதுத் தேர்தலில் (1958), 465 பிரதிநிதிகளில் 39 பிரதிநிதிகளே முதல் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இரண்டாவது பொதுத் தேர்தலில் (1962), 480 பிரதிநிதிகளில் 96 பிரதிநிதிகளே முதல் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேசியச் சபையின் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்; அவரைத் தேர்ந்தெடுத்த சபை பதவியிலிருக்கும் வரை அவரும் பதவியிலிருப்பார்.

இரு சபைகளுக்கும் பொதுவான செய்திகள்

பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் அவர் சபையில் தெரிவித்த கருத்துகளுக்காக விசாரிக்கவோ, கைது செய்யவோ, சிறையிலடைக்கவோ முடியாது. 'படுமோசமான பழிவினைகளைத்' (flagrante delicto) தவிர, தண்டனைக்குரிய குற்றங்கள் செய்யும் உறுப்பினரை, அவருடைய சபையின் சம்மதமில்லாமல் கைது செய்ய முடியாது. உறுப்பினர் ஒருவர்மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கும், அவர் காவலில் வைக்கப்பட்டிருப்பதும், அவரின் சபை கோரினல் தாற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட வேண்டும். உறுப்பினர்கள் தங்கள் சொந்தக் கருத்துப்படி பாராளுமன்றத்தில் வாக்களிக்க வேண்டுமென்றும், பிறர்

போதனையின் பயனுக அளிக்கப்படும் வாக்குகள் செல்லாதென்றும் அரசியலமைப்பு அறிவிக்கிறது. ஆனல், உறுப்பினர்கள் தங்கள் சொந்தக் கருத்துகள்படி வாக்களிக்கவில்லை என மெய்ப்பிப்பது எளிதான காரியமன்று எனக் கூறத் தேவையில்லை. இதற்கு முன்பிருந்த பாராளுமன்றங்களில், வராத உறுப்பினர்களின் சார்பாக வந்திருக்கும் உறுப்பினர்கள் வாக்களித்து வந்த வழக் கத்தை ஐந்தாம் குடியரசு விரும்பவில்லை. நோய், விபத்து, குடும்பச் சூழ்நிலை ஆகிய காரணங்களுக்காகவும் அரசாங்க வேலை அல்லது இராணுவச் சேவை ஆகிய காரணங்களுக்காகவும், சபையின் எதிர்பாராத சிறப்புக் கூட்டங்களின்பொழுதும், சர்வ தேச மாநாடுகளுக்குப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளாகச் செல்லும்பொழுதும் மட்டுமே வராத ஒருவருக்குப் பதிலாக வந்திருக்கும் ஒருவர் வாக்களிக்கலாம். பாராளுமன்ற உறுப்பினர் களின் சம்பளம் அடிப்படைச் சம்பளம் என்றும், வருகை ஊதியம் (Attendance bonus) என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக் கிறது. உறுப்பினர் சபைக்கு வரும் நாள்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவரின் வருகை ஊதியம் அமையும்.

ஆண்டுக்கு இருமுறை பாராளுமன்றத்தின் சாதாரணக் கூட்டங்கள் கூட்டப்படும். முதலாவது கூட்டத்தொடர், அக்டோபர் மாதம் முதல் செவ்வாய்க்கிழமையன்று தொடங்கி டிசம்பர் மாதம் மூன்ரும் வெள்ளிக்கிழமையன்று முடியும் என்றும், இரண்டாவது கூட்டத்தொடர், ஏப்ரல் மாதம் கடைசி செவ்வாய்க்கிழமையன்று தொடங்கி மூன்று மாதத்திற்குள் முடிவடைய வேண்டுமென்றும் அரசியலமைப்புத் தெரிவிக்கிறது. குறிப்பிட்ட நிகழ்ச்சியை விவாதிப்பதற்கென அதன் சிறப்புக் கூட்டமொன்று கூட்டப்படலாம். முதலமைச்சருக்கும், சபையின் உறுப்பினர்களில் பெரும்பாலோர்க்கும் சபையின் சிறப்புக் கூட்டத் தைக் கூட்டும்படி குடியரசு தலைவரைக் கேட்டுக்கொள்ளும் உரிமையை அரசியலமைப்பு வழங்குகிறது. பொதுவாக, சபை களின் கூட்டங்கள் பகிரங்கமாக நடைபெறுவது வழக்கம். முதல் அமைச்சரோ அல்லது உறுப்பினர்களில் பத்தில் ஒரு பங்கினரோ விரும்பினுல் கூட்டங்களை இரகசியக் கூட்டங்களாகவும் நடத் தலாம். பாராளுமன்றத்தின் விவாதங்கள் 'அரசாங்க இதழில்' (Journal official) வெளியிடப்படும். அமெரிக்கக் காங்கிரசில் உள்ள குழுக்களை ஒத்த நிரந்தரக் குழுக்கள் இரு சபைகளிலும் இருக்கின்றன. ஒவ்வொரு சபையிலும் அவற்றின் எண்ணிக்கை ஆறுக்கு அதிகமிருக்கக்கூடாது என அரசியலமைப்புக் கூறுகிறது. ஒவ்வொரு சபையிலும், சபைத் தலைவருக்கு அறிவுரை வழங்க ஆலோசனைக் குழு (Bureau) ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; அதில் சபையின் துணைத்தலைவர்களும் செயலாளர்களும் இடம்

பெறுவார்கள். ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்தும், மசோதாக்களையும் தீர்மானங்களையும் அனுமதிப்பது குறித்தும், சபைத் தலைவருக்கு அறிவுரை வழங்குவது அதன் கடமையாகும். மேலும் ஒவ்வொரு சபையிலும் 'தலைவர்கள் அணி' (Conference des Presidents) என்னும் நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. அதில் சபையின் தலைவர், துணைத்தலைவர்கள், நிரந்தரக் குழுக்களின் தலைவர்கள், சபையிலிருக்கும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள். சபையின் நிகழ்ச்சி நிரல் அதன் தலைவர்கள் அணியால் முடிவு செய்யப்படும். அரசியலமைப்பானது குடியரசு தலைவர் தேசியச் சபையைக் கலைப்பதற்கும், நெருக்கடி அதிகாரங்களை மேற்கொள்வதற்கும் இரு சபைகளின் தலைவர்களையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கூறுவதிலிருந்தும், அரசியலமைப்புக் குழுவின் உறுப்பினர்களில் கீழ்ச் சபைத் தலைவர் மூன்று பேரையும் மேல் சபைத் தலைவர் மூன்று பேரையும் நியமிக்க வேண்டும் என்று கூறுவதிலிருந்தும், சபைத் தலைவர்களின் முக்கியமான நிலை உணரப்படுகிறது. பிரான்சில் இரு சபைகளின் தலைவர்களும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் தலைவரைப் போன்று கட்சிச் சார்புடைய தலைவர்களாகப் பணியாற்றுகின்றனர் என்பது அறியத்தக்கது.

அதிகாரங்கள்

ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பு, பாராளுமன்றத்தின் அதிகார எல்லையை வரையறை செய்து, அதன் இறைமையைக் கடந்தகாலச் செய்தியாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பின் 34ஆவது விதி, சட்டங்கள் அனைத்தும் பாராளுமன்றத்தால் இயற்றப்பட வேண்டும் என அறிவித்த பிறகு, அது எந்த இனங்கள்மீது சட்டமியற்றலாம் என்பதையும் குறிப்பிடுகிறது. (1) குடிமக்களின் அடிப்படை உரிமைகள், கடமைகள். (2) மக்களின் தேசிய இனம், அந்தஸ்து, சட்டத்தில் அவர்களுக்குரிய நிலை, திருமண ஒப்பந்தங்கள், சொத்துகளை மரபுரிமையாகப் பெறுதல், கொடைகள். (3) எவையெவை குற்றங்களெனத் தீர்மானித்து அவற்றிற்குரிய தண்டனைகளை நிர்ணயித்தல், அரசியல் குற்ற மன்னிப்பு, புது நீதித் துறை அமைத்தல். (4) வரி வசூல் முறை, நாணயச் செலாவணி. (5) தேர்தல் முறை. (6) பொது ஆட்சிக் கழகங்கள். (7) அரசு ஊழியர்கள், படை வீரர்கள் ஆகியோரின் உரிமைகள். (8) தொழில்களைத் தேசியமயமாக்குதல் ஆகியவற்றிற்கான விதிகளை நிர்ணயிக்கும் சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றும். மேலும் (1) தேசியப் பாதுகாப்பின் அமைப்பு; (2) தல ஆட்சி அமைப்பு; (3) கல்வி; (4) சொத்துரிமை; (5) வேலை வாய்ப்பு, தொழிற் சங்கங்கள்,

சமூக நலச் சட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளை நிர்ணயிக்கப் பாராளுமன்றமே சட்டமியற்றும். நிதித் துறையில் வரவுசெலவுத் துறைகளைத் தீர்மானிக்கும் சட்டங்களும், தேசியப் பொருளாதாரத் திட்டங்களை வகுக்கும் சட்டங்களும் அதனால் இயற்றப்படும்.

போர் அறிவிப்புகளுக்குப் பாராளுமன்றத்தின் இணக்கம் தேவை. நாட்டில் இராணுவச் சட்டத்தை அறிவிக்கக்கூடிய அதிகாரம் அமைச்சரவைக்குத் தரப்பட்டிருந்தபோதிலும், அது பன்னிரண்டு நாள்களுக்குமேல் நீடிப்பதென்றால் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும். பாராளுமன்றத்திற்கு என அரசியலமைப்பால் ஒதுக்கப்படாத இனங்கள் அனைத்தும் ஆட்சித் துறையின் பொறுப்புக்கு விடப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் தேசியச் சபைக்குப் பொறுப்புள்ளது என அரசியலமைப்பு அறிவிக்கிறது. அமைச்சரவையின் கொள்கைகளைத் தேசியச் சபை ஏற்க மறுத்தால், அது பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். தேசியச் சபை அரசாங்கத்திமீது கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அதைப் பதவியிலிருந்து நீக்கலாம். அரசாங்கம் பதவியில் நீடிக்க கீழ்ச்சபையின் சம்மதம் தேவையே ஒழிய மேல் சபையின் சம்மதம் தேவையில்லை என்பது அறியத்தக்கது.

அரசியலமைப்புத் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் மட்டுமே முன்மொழியப்படவேண்டும். இரு சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் திருத்தமானது குடியொப்பத்திற்கு விடப்பட்டு அதன் முடிவின்படி சட்டமாயிற்றா இல்லையா என அறிவிக்கப்படும். ஆனால், குடியரசு தலைவர் விரும்பினால் அதைக் குடியொப்பத்திற்குச் சமர்ப்பிக்காமல் இரு சபைகளின் இணைப்புக் கூட்டமொன்றின் முடிவிற்கு விடலாம். வாக்களிக்கும் உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பங்கு உறுப்பினர்களால் அரசியலமைப்புத் திருத்தமானது ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது சட்டமாகிவிட்டதாக அறிவிக்கப்படும். எனவே, அரசியலமைப்பைத் திருத்துவதில் பாராளுமன்றத்திற்கு முக்கியமான பங்கு உண்டென்பது குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பு, சர்வதேச உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் அதிகாரத்தைக் குடியரசு தலைவருக்கு அளித்தாலும், சில வகையான உடன்படிக்கைகள் பாராளுமன்றத்தின் இசைவிற்கு அனுப்பப்பட வேண்டும். சமாதான உடன்படிக்கைகள், வர்த்தக உடன்படிக்கைகள், சர்வதேச நிறுவனங்களைப் பற்றிய

உடன்படிக்கைகள், நாட்டின் நிதி நிலையை பாதிப்பதும், சட்டத் துறையைச் சார்ந்ததும், மனிதர்களின் அந்தஸ்தை பாதிப்பது மான உடன்படிக்கைகள், பிரெஞ்சுப் பிரதேசங்களை விட்டுக் கொடுப்பது, மாற்றிக்கொள்வது, அதோடு புதிய பகுதிகளைச் சேர்ப்பது ஆகியவற்றைப் பற்றிய உடன்படிக்கைகள் அனைத்தும் பாராளுமன்றத்தின் சட்டங்கள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டால் தான் நிறைவேற்றப்படலாம்.

ஐந்தாவது குடியரசில் பாராளுமன்றத்தின் நிலை சிறப்பானது எனக் கூறுவதற்கில்லை என்பது முன்னரே கூறப்பட்டது. அதன் கூட்டத்தொடர்கள் அதிக நாள்கள் நீடிப்பதில்லை; அது எந்தெந்த இனத்தின்மீது சட்டமியற்றலாம் என அரசியலமைப்பு எல்லை வகுத்திருக்கிறது. வருடாந்திர வரவுசெலவுத் திட்டத்தைக்கூடப் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசாங்கம் நிறைவேற்றத் தொடங்கலாம்; நிதித் தொடர்புடைய மசோதாக்கள் அனைத்தையும் முன்மொழியும் உரிமை அரசாங்கத்திற்கு மட்டுமே உண்டு. தேசியச் சபைக்கு அரசாங்கத்துக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றும் உரிமை உண்டென்றாலும், அதற்கு இரகசிய வாக்கெடுப்பு முறை இல்லையாதலால், பகிரங்கமாக அரசாங்கத்தைப் பகைத்துக்கொண்டு அதற்கெதிராக வாக் களிக்கப் பலர் முன்வரமாட்டார்கள் என எண்ணத் தோன்று கிறது. ‘குழந்தையைக் குளிப்பாட்டுவதாகக் கூறிக் கொன்று விட்ட கதையாய்’ ஐந்தாவது குடியரசு பாராளுமன்றத்தைச் சீர்திருத்துவதாகக் கூறி அதன் பலத்தை ஒடுக்கிவிட்டது எனக் கூறலாம்.

5. சட்டமியற்றும் முறை

(The Process of Lawmaking)

[முன்னுரை—சாதாரண மசோதா—நிதி மசோதா—சபைகளுக் கிடையே கருத்து வேறுபாடுகள்.]

முன்னுரை

அமெரிக்கக் காங்கிரஸ் சட்டமியற்றுவதற்குப் பின்பற்றும் முறையைத் தழுவியே பிரான்சில் சட்டமியற்றும் முறை அமைந் திருக்கிறது. ஆனால், அமெரிக்கக் காங்கிரசில் அமைச்சர்களின் ஆதிக்கம் இல்லை என்பதும், பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் அமைச்சர்களே ஆட்சி நடத்துகின்றனர் என்பதும் இரு நாடுகளின் முறைகளுக்கிடையே காணப்படும் முக்கியமான வேறுபாடாகும். மசோதாக்களை அமைச்சர்களும் சாதாரண உறுப்பினர்களும் முன்மொழியலாம்; அவற்றைத் தேசியச் சபையிலோ செனட் சபையிலோ தோற்றுவிக்கலாம். நிதி மசோதாக்களைத் தேசியச் சபையில் மட்டுமே தோற்றுவிக்கலாம். நிதி மசோதாக்களைத் தேசியச் சபையில் மட்டுமே தோற்றுவிக்க வேண்டும் என அரசிய லமைப்பு அறிவிக்கிறது. அரசாங்கத்தின் வருமானத்தைக் குறைக்கவோ, செலவைக் கூட்டவோ கோரும் மசோதாக்களைச் சாதாரண உறுப்பினர்கள் முன்மொழிய முடியாது.

சாதாரண மசோதா

சபையில் அறிமுகப்படுத்தப்படும் மசோதா அதில் இருக்கும் ஆறு நிரந்தரக் குழுக்களில் ஒன்றிற்கோ, அல்லது தாற்காலிகக் குழு (adhoc commission) ஒன்றிற்கோ அனுப்பப்படும். குழு, மசோதாவைத் தீர ஆராய்ந்து, அதை ஏற்கும்படியோ, மறுக்கும் படியோ, திருத்தும்படியோ சபைக்கு அறிவிக்கும். சபையை அடையும் மசோதா உறுப்பினர்களால் விவாதிக்கப்படும். முதலில் அதன் பொதுத் தன்மைகளை விவாதித்த பிறகு, சபை

அதன் விதிகளை ஒவ்வொன்ருய் ஆராயும். மசோதா குழுவால் பரிசீலனை செய்யப்பட்டபொழுது அங்கே முன்மொழியப்படாத திருத்தம் எதையும் இப்பொழுது சபையில் கொண்டுவரக் கூடாது என அறிவிக்க அரசாங்கத்திற்கு உரிமையுண்டு. மசோதாவின் விதிகள் ஒவ்வொன்றின்மீதும் வாக்கெடுப்பு நடத்திய பிறகு இறுதியாகத் திருத்தப்பட்ட முழு மசோதாவின்மீது வாக்கெடுப்பு நடத்தி, அது வென்றதா தோற்றதா என்பது அறிவிக்கப்படும்.

முதல் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதா மறு சபையின் இணக்கத்தைப் பெற அதற்கு அனுப்பப்படும். முதல் சபையில் மசோதா எந்தெந்தக் கட்டங்களைக் கடந்து வந்ததோ, அவை ஒத்த கட்டங்களை மறு சபையிலும் கடக்க வேண்டும். இரு சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் மசோதா, குடியரசு தலைவரின் இசைவைப் பெற அவருக்கு அனுப்பப்படும். அவர் பதினைந்து நாள்களுக்குள் அதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். எந்த மசோதாவிற்கும் தன் ஒப்பத்தை மறுக்க அவருக்கு அதிகார மில்லை. ஆனுல் மசோதா அவரை அடைந்த பதினைந்து நாள் களுக்குள் அதைப் பாராளுமன்றம் மறுபரிசீலனை செய்யும்படி கோரி அதைத் திருப்பி அனுப்பலாம்; ஆனுல், மசோதாவைத் திருப்பி அனுப்புவது என்பது எப்பொழுதாவது ஒரு முறை நடைபெறும் அபூர்வமான நிகழ்ச்சியாகும்.

நிதி மசோதா

தேசியச் சபையில் மட்டுமே தோற்றுவிக்கப்படலாம் என அறிவிக்கப்படும் நிதி மசோதாக்களைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் காலதாமதமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என அரசியலமைப்பு எதிர்பார்ப்பதாகத் தோன்றுகிறது. நிதி மசோதா தோற்றுவிக்கப்பட்ட நாற்பது நாள்களுக்குள், தேசியச் சபை அதன்மீது எந்தவிதமான முடிவுக்கும் வராதிருந்தால், அரசாங்கம் அதைச் செனட் சபையின் கவனத்திற்கு அனுப்பும். பதினைந்து நாள்களுக்குள் செனட் அதன்மீது தன் முடிவைத் தெரிவிக்க வேண்டும். பாராளுமன்றம் நிதி மசோதா தோற்றுவிக்கப்பட்ட பதினைந்து நாள்களுக்குள் எந்த முடிவிற்கும் வராத நிலையிலிருந்தால், மசோதாவின் விதிகளை அவசரச் சட்டங்களாக அறிவித்து அவற்றை நிறைவேற்றத் தொடங்கலாம். நிதி மசோதா தோற்றுவிப்பதற்கு மட்டுமே தேசியச் சபைக்கு தனிச் சலுகை உண்டே தவிர, அதைச் சட்டமாக்குவதற்குச் செனட்டின் இணக்கம் தேவை.

சபைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள்

சாதாரணமாக எல்லா மசோதாக்களும் இரு சபைகளின் இசைவைப் பெற்ற பிறகே சட்டங்களாக முடியும். தேசியச்

சபை, செனட் சபை ஆகிய இரண்டிற்கிடையேயும் மசோதா ஒன்றை ஏற்றுக்கொள்வது பற்றி உடன்பாடு ஏற்படவில்லை எனின், கீழ்ச்சபையிலிருந்து ஏழு அங்கத்தினர்களையும் மேல்சபையிலிருந்து ஏழு அங்கத்தினர்களையும் கொண்ட கூட்டுக் குழு ஒன்றை முதலமைச்சர் நியமித்து, கருத்து வேறுபாடுகளைக் களைய முற்படலாம். கூட்டுக் குழுவின் சமரச முயற்சியும் பயனற்றதாய்ப் போனால், அரசாங்கம் இரு சபைகளையும் மீண்டுமொரு முறை மசோதாவை விவாதிக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும் உடன்பாடு ஏற்படவில்லை என்றால் அரசாங்கம் தேசியச் சபையை மசோதாவின்மீது இறுதியாகத் தீர்ப்பளிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்; இப்பொழுது தேசியச் சபை எடுக்கும் முடிவே பாராளுமன்றத்தின் முடிவாகக் கருதப்படும். இரு சபைகளுக்கிடையே கருத்து வேறுபாடு எழும் பொழுது, அரசாங்கம் அதில் தலையிட்டால்தான், தேசியச் சபை கருத்து வேறுபாட்டுக்குரிய மசோதாமீது இறுதியாகத் தீர்ப்பளிக்க முடியும் என்பது அறியத்தக்கது. அரசாங்கம் விரும்பினால் செனட் சபையின் கருத்துகளைப் புறக்கணித்துத் தேசியச் சபையின் கருத்துகளை ஆதரித்து, முடிவான தீர்ப்பைத் தேசியச் சபை அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம் என அரசியலமைப்பு ஏற்பாடு செய்திருப்பதிலிருந்து அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் நன்கு உணரப்படுகிறது. பிரிட்டிஷ் அரசியலமைப்பில் அரசாங்கம் தலையிட்டாலும் தலையிடாவிட்டாலும் பொதுமக்கள் சபையின் விருப்பம் நிறைவேறுவதற்கு 1911, 1949ஆம் ஆண்டுகளின் பாராளுமன்றச் சட்டங்கள் இடமளிப்பது போன்று பிரான்சில் அரசாங்கம் குறுக்கிடாதவரை இரு சபைகளும் ஒத்த முக்கியத்துவமுள்ள சபைகளாகவே விளங்கும்.

6. நீதித்துறை
(The Judiciary)

[முன்னுரை — சாதாரண நீதிமன்றங்கள் — மேல்நிலை நீதிமன்றங்கள்—நீதித்துறையின் உயர் குழு—ஆட்சித்துறை நீதிமன்றங்கள்—ஆட்சித்துறை நீதிமன்றங்களின் சிறப்பியல்புகள்.]

முன்னுரை

பிரிட்டிஷ் நீதித்துறையும் பிரெஞ்சு நீதித்துறையும் வெவ்வேறான அடிப்படைகளில் அமைந்திருக்கின்றன. பிரான்சில் குடிமக்களுக்கிடையே எழும் வழக்குகள் சாதாரண நீதிமன்றங்களாலும், குடிமக்களுக்கும் அரசுக்குமிடையே எழும் வழக்குகள் ஆட்சித்துறை நீதிமன்றங்களாலும் விசாரிக்கப்படுகின்றன. சிறிது காலத்திற்கு முன்வரை பிரெஞ்சு நீதித்துறை நிருவாகத் துறையின் அங்கமாக இயங்கி வந்த நிலை மாறி, ஐந்தாவது குடியரசில் அது சுயேச்சையான நிறுவனமாக வளர்ந்திருப்பது மெச்சத்தகுந்த நிகழ்ச்சியாகும். 1958ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் நாள் அறிவிக்கப்பட்ட சில ஆணைகள்படி இன்றைய நீதித்துறை அமைக்கப்பட்டிருக்கிறது. நீதித்துறையின் முக்கியத்துவத்தை உணர்த்துகிற வகையில் அரசியலமைப்பானது குடியரசு தலைவர் அது சுதந்திரமாக இயங்க உத்தரவாதமளிப்பார் எனத் தெரிவிக்கிறது. சிவில் வழக்குகளையும் குற்ற வழக்குகளையும் விசாரிக்கும் நீதிபதிகள் சட்டப்படிப்பில் பட்டம் வாங்கியோராகவும், நீதி நிர்வாகப் பள்ளியில் பயிற்சி பெற்றோராகவும் இருத்தல் அவசியம். நீதித்துறையில் நீதிபதிகளைத் தவிர வழக்குரைஞர்களும் (Prosecutors) உண்டு. ஒரு வழக்கு, சாதாரண நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டுமா, ஆட்சித்துறை நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டுமா என்ற ஐயப்பாடு எழும்பொழுது 'முரண்பாடு நீக்க நீதிமன்றம்' (Court of Conflicts) என்ற நிறுவனம் அதை முடிவு செய்யும்.

சாதாரண நீதிமன்றங்கள்

சிவில் வழக்குகள் : சாதாரணச் சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் 'முதல்நிலை நீதிமன்றங்கள்' (Tribunaux d'

instance) என அழைக்கப்படுகின்றன. இன்று நாடு முழுவதும் 467 முதல்நிலை நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரி ஏறத்தாழ நான்கு நீதிமன்றங்கள் இருக்கின்றன. இதுபோன்ற நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் ஒற்றை நீதிபதி வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிப்பார். ஐந்தாவது குடியரசிற்கு முன்பு சிறு சிவில் வழக்குகளைத் தீர்த்துவைத்த 3000-க்கு மேற்பட்ட அமைதி காவல் நடுவர்கள் இன்று நீக்கப்பட்டு, அவர்களின் பொறுப்புகள் முதல்நிலை நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டிருப்பது, புதிய நீதித்துறையில் நிகழ்ந்திருக்கும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். முக்கியமான சிவில் வழக்குகள் 'முதல்நிலை உயர் நீதிமன்றங்கள்' (Tribunaux de grande instance) என அழைக்கப்படும் மன்றங்களால் விசாரிக்கப்படுகின்றன. இன்று நாடு முழுவதும் 178 முதல்நிலை உயர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரி இரண்டு நீதிமன்றங்கள் இருக்கின்றன. இதுபோன்ற நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிப்பார்கள். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே தோன்றும் தொழில் தகராறுகளை விசாரிக்க, முதலாளிகளின் பிரதிநிதிகளும் தொழிலாளிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய 'சமரச நீதிமன்றங்கள்' (Conseils de Prud' hommes) அமைக்கப்பட்டிருக்கின்றன. வர்த்தகத் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்க உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் ஆகியோர் அடங்கிய 'வர்த்தக நீதிமன்றங்கள்' (Tribunaux de Commerce) நிறுவப்பட்டிருக்கின்றன.

குற்ற வழக்குகள் : சிறு குற்ற வழக்குகள் 'காவல்துறை நீதிமன்றங்களால்' (Tribunaux de Police) விசாரிக்கப்படுகின்றன. சற்றுப் பெரிய குற்ற வழக்குகள் 'திருத்த நீதிமன்றங்கள்' (Tribunaux Correctionnels) எனப்படும் மன்றங்களால் முடிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு திருத்த நீதிமன்றத்திலும் மூன்று நீதிபதிகள் வழக்கை விசாரிப்பார்கள், குற்ற வழக்குகளால் மிகப் பெரியவை 'அஸைஸு நீதிமன்றங்கள்' (Courts d'assises) என அழைக்கப்படும் மன்றங்களால் விசாரிக்கப்படும். ஒவ்வொரு அஸைஸி நீதிமன்றத்திலும் ஒரு தலைவர், இரண்டு நீதிபதிகள், ஒன்பது அறங்கூறுயத்தார் ஆகியோர் அமர்ந்து வழக்கை விசாரிப்பார்கள். மொத்தமுள்ள பன்னிரண்டுபேரில் எட்டு அல்லது எட்டுப் பேருக்கு மேலானோரால் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்ப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பாக அறிவிக்கப்படும். பொதுவாக, அறங்கூறுயத்தராக அமரும் குடிமக்கள் நீதிபதிகள் கருத்தை ஏற்றுக்கொள்வது வழக்கம். காவல் துறையினர் குற்ற

வழக்குகளைப் பதிவு செய்யும்பொழுது, வழக்குத் தொடரப் போதுமான சான்றுகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு 'ஆராயும் நீதிபதிகள்' (Judge d' instruction) என்போர் அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

மேல்நிலை நீதிமன்றங்கள்

சிவில் வழக்குகளையும் குற்ற வழக்குகளையும், சட்ட நிபந்தனைக்கு உட்பட்டு, மேல் முறையீடாக 'மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு' (Court of Appeal) எடுத்துச் செல்லலாம். இன்று பிரான்சில் 31 மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. எல்லா நீதிமன்றங்களுக்கும் மேலான 'தலைமை நீதிமன்றம்' (Court de Cassation) பாரிஸ் நகரில் அமைக்கப் பட்டிருக்கிறது. வழக்குகளில் சட்டத்தின் பொருள் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை முடிவு செய்வது இந் நீதிமன்றத்தின் பொறுப்பாகும். அதனிடம் முறையிட்டுக் கொள்ளப்படும் வழக்கில் அது கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்யலாம்; அல்லது அதை ரத்து செய்து, கீழ் நீதிமன்றம் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமென்று கட்டளையிடலாம். கீழ் நீதிமன்றம் மறு விசாரணையின்பொழுது. தலைமை நீதிமன்றம் வழக்கில் தொடர்புடைய சட்டத்திற்குக் கூறிய பொருளை ஏற்று, அதன் அடிப்படையில் வழக்கை விசாரித்து முடிவு செய்வது அவசியமாகும். 1963ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்ட மொன்று 'அரசு பாதுகாப்பு நீதிமன்றம்' (State Security Court) ஒன்றை அமைத்திருக்கிறது. அரசாங்க நீதிபதிகளில் மூவரையும், இராணுவத் தளபதிகளில் இருவரையும் தன்னகத்தே கொண்டிருக்கும் இப் பாதுகாப்பு நீதிமன்றம், அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலும் குற்றங்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்.

நீதித்துறையின் உயர்குழு

பிரெஞ்சு நீதித்துறை அமைப்பில் 'நீதித்துறையின் உயர்குழு' (High Council of Judiciary) என்னும் நிறுவனம் முக்கியமான அங்கமாய் விளங்குகிறது. குடியரசு தலைவர், நீதி அமைச்சர், குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட இக்குழுவிற்குக் குடியரசு தலைவர் தலைமை ஏற்கிறார். தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள், மேல் முறையீட்டு நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் ஆகிய அதிகாரிகள் நீதித் துறையின் உயர்குழுவால் நியமிக்கப்படுகிறார்கள். நீதி அமைச்சரால் நியமிக்கப்படும் மற்ற நீதிபதிகளின் நியமனங்களைக் குறித்தும் இக் குழு தன் கருத்தைத் தெரிவிக்கும். குடியரசு தலைவர், குற்ற மன்னிப்பு வழங்கும்பொழுது இக் குழுவைக் கலந்தாலோசிக்க

வேண்டும். மேலும், இக் குழு ஒழுக்கம் தவறிய நீதிபதிகள்மீது நடவடிக்கை எடுக்கும் நீதிமன்றமாகவும் இயங்கிவருகிறது; அவ்வாறு நீதிபதிகளை விசாரிக்கும்பொழுது, தலைமை நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி குழுவிற்குத் தலைமை வகிப்பார்.

ஆட்சித்துறை நீதிமன்றங்கள்

பிரான்சில் நிலவும் ஆட்சித்துறை நீதிமன்றங்கள் அந் நாட்டு அரசியலமைப்பின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகப் பேசப் படுகிறது. நெடுங்காலமாக இயங்கி வரும் இந் நீதிமன்றங்கள் 1872ஆம் ஆண்டில்தான் நீதிமன்றங்களெனச் சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டன. அரசிற்கும் குடிமக்களுக்குமிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்த்துவைக்க இன்று 23 ஆட்சித்துறை நீதிமன்றங்கள் (Tribunaux administratifs) இருக்கின்றன. 'அரசு குழு' (Council of State) என்னும் அமைப்பு ஆட்சித்துறை நீதிமன் றங்களில் தலைமை நீதிமன்றமாக இயங்கி வருகிறது. ஐரோப் பாவில் ஆட்சித்துறை நீதிமன்றங்கள் அமைத்திருக்கும் நாடுகள் அனைத்தும் பிரான்சின் அரசு குழுவைச் சிறந்த ஆட்சித்துறை நீதி மன்றத்திற்கு இலக்கணமாகக் கருதுகின்றன. 150-க்கும் மேற் பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் அரசு குழுவின் நீதி பதிகள் பிரான்சின் புகழ்மிக்க 'ஆட்சித்துறைப் பள்ளி' (School of Administration) மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர் களின் பதவி பெருமைக்குரிய பதவியாகக் கருதப்படுகிறது. முக்கியமான வழக்குகளைப் பத்து அல்லது பதினைந்து நீதிபதிகளும், மற்ற வழக்குகளை மூன்று நீதிபதிகளும் விசாரிப்பது வழக்கம். அரசு குழுவில் பல பிரிவுகள் இருக்கின்றன என்பது அறியத்தக்கது. அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்குவதற்கு நான்கு பிரிவுகளும், வழக்குகளை விசாரிப்பதற்கு ஒரு பிரிவும் அமைக்கப்பட்டிருக் கின்றன.

ஆட்சித்துறை நீதிமன்றங்களின் சிறப்பியல்புகளில் மூன்றை முக்கியமானவை எனக் கூறலாம். முதலாவதாக, ஆட்சித்துறை பற்றிய வழக்குகளை விசாரிப்பதற்கு ஆட்சித்துறை நீதிமன் றங்களே பொருத்தமான அரங்கங்களாகக் கருதப்படுகின்றன. நீதிபதிகளில் பலர் நிருவாகப் பொறுப்பு வகித்தவர்களாக இருப் பதால் நிருவாகத் துறைகள் இயங்கும் முறையிலுள்ள மேடு பள்ளங்கள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீதிமன்றங்களில் குடிமக்களுக்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்ட அரசாங்க அதிகாரிகள் அங்குள்ள நீதிபதிகளை நிருவாகத் துறைகளின் வளைவு நெளிவுகளில் மயங்க வைப்பது என்பது எளிதான காரியமன்று. ஆட்சித்துறை நீதிமன்றங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக

இருக்குமோ என நமக்கு எண்ணத் தோன்றும். ஆனால், உண்மையில் அது குடிமக்களின் உரிமைகளை அரசாங்கத்திற்கு எதிராகப் பாதுகாக்கும் விரும்பத்தக்க நிறுவனமாகக் கருதப் படுகிறது.

இரண்டாவதாக, ஆட்சித்துறை நீதிமன்றங்கள் பின்பற்றும் முறையினின்றும் வேறுனதாகும். சாதாரண நீதிமன்றங்கள் பின்பற்றும் முறையினின்றும் வேறுனதாகும். சாதாரண நீதிமன் றங்கள் சட்டத் தொகுப்புகளின் அடிப்படையில் நீதி வழங்கு கின்றன. ஆனால், ஆட்சித்துறை நீதிமன்றங்கள் தீர்ப்பு வழிச் சட்டம் (Case Law), நியாயம் (Equity) ஆகியவற்றின் அடிப் படையில் தீர்ப்பளிக்கின்றன. பிரான்சில் அரசு குழுவை ஸ்காண் டிநேவிய நாடுகளில் (Scandinavian Countries) காணப்படும் 'ஆம்புட்ஸ்மேன்' (Ombudsman) என்னும் மக்கள் குறை களையும் நிறுவனத்தோடு ஒப்பிடலாம். அரசாங்கத்திற்கு எதிராக வாதிகள் முறையிட்டுக்கொண்டால் அரசாங்க அதிகாரிகளே வழக்கைத் தயார் செய்து வாதிக்கு உதவி செய்வார்களாம். எனவே, ஆட்சித்துறை நீதிமன்றமானது குடிமக்களின் நண்பனாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

மூன்றாவதாக, ஆட்சித்துறை நீதிமன்றங்களுக்கு நிருவாக அதிகாரிகளின் ஆணைகள் செல்லத்தக்கனவா என ஆராய்ந்து அறியக்கூடிய அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அரசாங்க உத்தர வுகள் சட்டத்திற்கு உட்பட்டவையா அப்பாற்பட்டவையா என அறிவிக்கும்படி அரசு குழு கேட்டுக்கொள்ளப்படுவதுண்டு. அவ்வாறு கேட்கும் வாதி அதன் உத்தரவுகளால் பாதிக்கப்படு கிறவனாய் இருக்க வேண்டும். மேலும், உத்தரவுகள் பிறப்பிக் கப்பட இரண்டு மாதத்திற்குள் அவற்றை எதிர்க்க விரும்புவோர் வழக்குத் தொடர வேண்டும். அரசாங்கக் கட்டளைகளை ஆராய்ந்து, அவை முறைப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவா எனக் கண்டறிவது அரசு குழுவின் அதிகாரங்களில் முதன்மை யானதாகக் கருதப்படுகிறது. மக்களிடையே அளவற்ற செல் வாக்கும் ஆதரவும் பெற்றுத் திகழும் அரசு குழு, ஐந்தாவது குடி அரசின் அரசியலமைப்பாலோ அல்லது அதற்கு முன்பிருந்த அரசிய லமைப்புகளாலோ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமன்று என்பது அறியத்தக்கது. புதிய அரசியலமைப்பு எத்தனையோ நிறுவனங் களைப்பற்றி விளக்கமாக விவரித்தபோதிலும் அரசு குழுவைப் பற்றி அது ஒன்றும் கூறுதிருப்பது ஒரு பெருங் குறையே.

7. அரசியல் கட்சிகள்
(Political Parties)

[முன்னுரை—பொதுவுடைமைக் கட்சி—சோஷலிஸ்டு கட்சி—ரேடிகல் சோஷலிஸ்டு கட்சி—கிறித்தவக் குடியரசுவாதிகள் கட்சி—காலிஸ்டுகள்.]

முன்னுரை

எண்ணிக்கையிலும் இயல்பிலும் பிரெஞ்சு அரசியல் கட்சிகளுக்கு நிகரான கட்சிகளை நாம் உலகில் வேறெந்தப் பகுதியிலும் காண்பது அரிது. அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை பிரான்சுக்கு இணையான முறையை ஐரோப்பாவில் இத்தாலியில் (Italy) மட்டுமே நாம் பார்க்கலாம்; ஆனால், அங்கே கூட பிரான்சில் உள்ள அளவுக்குச் சிக்கல்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. எதிர்மாறான கொள்கைகளைக் கொண்ட ஏராளமான கட்சிகள் இருந்த நிலை இன்று ஓரளவுக்கு மாறி அரசியலில் ஒரு திடநிலை உருவாகியிருப்பது போற்றத்தக்க மாற்றமாகும். பழைய கட்சிகள் மறைவதும், புதிய கட்சிகள் தோன்றுவதும், ஒன்றாக இருந்த கட்சி பலவாகப் பிரிவதும், பலவாக இருந்த கட்சிகள் ஒன்றாக இணைவதும், உயர்ந்த நிலையில் இருந்த கட்சிகள் தாழ்ந்த நிலை அடைவதும், தாழ்ந்த நிலையில் இருந்த கட்சிகள் உயர்ந்த நிலை அடைவதும், பிரெஞ்சு அரசியலை விவரிப்பதற்குக் கடினமான தலைப்பாக ஆக்குகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, பிரெஞ்சு மக்கள் மூன்றுவிதமான மனப்பாங்குகளின் அடிப்படையில் பிரிந்திருப்பதாகத் தோன்றுகிறது; அவையாவன: (1) பழமையில் பற்று (Conservatism), (2) தீவிரவாத உணர்ச்சி (Radicalism), (3) சமதருமம் (Socialism). ஆனால், இதில் ஒவ்வொன்றிலும் இடதுசாரி, வலதுசாரி, மிதவாதப் போக்கு என்று பல நிலைகள் இருப்பது அவர்கள் அரசியலைப் புரியாத புதிராக்குகிறது. பிரான்சில் கணக்கற்ற கட்சிகள் இருப்பதற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, பிரெஞ்சு

மக்களின் மனப்போக்கு; பிறர் கருத்துகள்படி நடப்பதைவிடச் சொந்தக் கருத்துப்படி நடப்பதையே பிரெஞ்சுக் குடிமகன் விரும்புகிறான். இரண்டாவதாக, அவர்கள் வரலாற்றில் தொடர்ச்சியின்மை: புரட்சிக்குப் பிறகு அவர்கள் வரலாற்றில் தொடர்ச்சி இல்லாது போனதால், ஓர் அரசியல் பாரம்பரியத்தை அவர்களால் வளர்க்க முடியவில்லை.

பொதுவுடைமைக் கட்சி

மேற்கு ஐரோப்பாவில் பொதுவுடைமைக் கட்சி செல்வாக்கோடு திகழும் நாடுகளில் பிரான்சும் ஒன்றாகும். அரசாங்கத்தின் மீது அதிருப்தி அடைந்திருக்கும் குடியானவர்களும் தொழிலாளிகளும் பொதுவுடைமைக் கட்சியின் கரங்களை வலுப்படுத்துகின்றனர். அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்க விரும்புவோர் பொதுவுடைமைக் கட்சிக்கு வாக்களிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பிரெஞ்சுப் பொதுவுடைமைவாதிகள் பொருள்களின் விலையை உயர்த்தாமல் கூலியை உயர்த்தமுடியும் என நம்புகிறார்கள். அரசியலில் பல துறைகளில் அவர்கள் கருத்துகள், நாட்டிலுள்ள மற்ற மக்களின் கருத்துகளிலிருந்து மாறுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இன்றைய பிரான்சில் ஏறத்தாழ 3,00,000 சந்தா செலுத்தும் பொதுவுடைமைவாதிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. நாட்டில் வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத நல்ல அமைப்பு முறை இக் கட்சிக்கு இருக்கிறது. கட்சியின் பேரவை இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை கூடி, கட்சியின் காரியங்களைக் கண்காணிக்கிறது. மாதத்திற்கு ஒருமுறை கூடும் நூறு அங்கத்தினர்களைக் கொண்ட மத்தியக்குழுவும், வாரத்திற்கு ஒருமுறை கூடும் செயற்குழுவும் கட்சியின் அமைப்புகளில் முக்கியமானவையாய் கருதப்படுகின்றன. செயலாளர் ஒருவர் தலைமையில் இயங்கும் கட்சியின் செயலகம் அதை வளர்ப்பதற்குரிய வழி வகைகளை ஆராய்கிறது. பிரான்சில் பொதுவுடைமைவாதிகளின் சமுதாயம் ஒரு தனி உலகமாய் இயங்கி வருகிறது. அதன் செய்தித்தாள்களும், சிறுவர்கட்கும் மகளிர்க்குமான நிறுவனங்களும், விவசாயக் கழகங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றோடு உள்ள தொடர்புகளும், பொழுதுபோக்கு நடவடிக்கைகளும், அதன் உறுப்பினர்களை எப்பொழுதும் கட்சி சார்ந்த சூழ்நிலையில் வளர்த்து, கடைசி காலம்வரை அவர்களைக் கட்சிக்கு விசுவாசமுள்ளவர்களாக ஆக்குகின்றன.

சோஷலிஸ்டு கட்சி (Socialist Party)

நடுத்தரக் குடிமக்களிடையேயும் நடுத்தர வயதினரிடையேயும் செல்வாக்கடைந்திருக்கும் சோஷலிஸ்டு கட்சி ஒரு மிதமான

குடியாட்சிக் கட்சியாகக் கருப்படுகிறது. 1946ஆம் ஆண்டில் கை மொல்லட் (M. Guy Mollet) என்பவர் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றதிலிருந்து இக் கட்சி நல்ல கட்டுப்பாடுள்ள அமைப்பாய் வளர்ந்திருக்கிறது. சோஷலிஸ்டு கட்சியின் சர்வாதிகாரி எனக் கூறக்கூடிய அளவுக்குக் கட்சியில் அவர் ஆதிக்கம் வளர்ந்திருக்கிறது. அறவழியில் நின்று சமதருமச் சமுதாயத்தை ஏற்படுத்துவதே இக் கட்சியின் முதன்மையான கொள்கையாகும். தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினரும், மேசையடி ஊழியர்களில் ஐந்தில் ஒரு பங்கினரும், குடியானவர்களில் எட்டில் ஒரு பங்கினரும், சோஷலிஸ்டுக் கட்சிக்கு வாக்களிப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. கட்சியின் பேரவை ஆண்டுக்கு ஒரு முறை கூடுகிறது; அதன் தேசியக் குழு தேவையானபொழுதெல்லாம் கூடும். கட்சியின் இயக்கத்தைக் கண்காணிப்பது அதன் செயற்குழுவின் பொறுப்பாகும். கட்சிக் கூட்டங்களில் அதன் உறுப்பினர்கள் ஒளிவு மறைவின்றித் தங்கள் கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவது, சோஷலிஸ்டுக் கட்சியின் விரும்பத்தக்க முறைகளில் ஒன்றாகும். ஒரு காலத்தில் 3,00,000-க்கு மேலான அங்கத்தினர்களைக் கொண்டிருந்த இக் கட்சியில், இன்று 50,000 அங்கத்தினர்களே இருக்கின்றனராம். கட்சி நாளுக்கு நாள் தேய்ந்து வருவதைக் கண்ட தலைவர்கள், சோஷலிஸ்டுக் கட்சியோடு வேறு சில இடதுசாரிக் கட்சிகளையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு 1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டுக் கீழ்ச்சபையின் 486 இடங்களில் 121 இடங்களை வென்றனர்.

ரேடிகல் சோஷலிஸ்டுக் கட்சி (Radical Socialist Party)

பிரான்சின் மிகப் பழைய அரசியல் கட்சியாக இருக்கும் பெருமை ரேடிகல் சோஷலிஸ்டுக் கட்சியைச் சார்ந்ததாகும். 1885ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டுவரை பதவியிலிருந்த முப்பத்தெட்டு முதலமைச்சர்களில் பதினாறு பேர் ரேடிகல் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது அக்காலத்தில் அதன் செல்வாக்கை உணர்த்துகிறது. 1955ஆம் ஆண்டிற்குப் பிறகு மூன்று முறை கட்சியில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக, இன்று அது வலுவற்ற நிலையில் இருக்கிறது. திருச்சபையின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி 1905ஆம் ஆண்டில் அரசையும் திருச்சபையையும் தனித் தனியாகப் பிரித்தது இக் கட்சியின் மாபெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. சமயச் சார்பற்ற கல்வியை வளர்ப்பது, தனியார் சொத்துகளுக்குக் காப்பளிப்பது, ஏழை எளியவர்களுக்கு அரசு உதவி அளிப்பது, திறமையான ஆட்சியை அமைப்பது, மனித உரிமைகளுக்கு உத்தரவாத

மளிப்பது, உலகச் சமாதானத்தை வளர்ப்பது ஆகியவை இக் கட்சியின் கொள்கைகளில் சிலவாகும். அரசாங்கம் மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு குறைவாகத் தலையிட முடியுமோ அவ்வளவு குறைவாகத் தலையிட்டால் போதுமென்று இக் கட்சி விரும்புகிறது. பெண்களைவிட ஆண்களும், இளைஞர்களைவிட முதியவர்களும் இக் கட்சியை அதிகம் விரும்புவதாகத் தோன்றுகிறது. பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளான 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகியவற்றில் ரேடிகல் சோஷலிஸ்டுகளுக்குத் தீவிரமான நம்பிக்கை உண்டு.

கிறித்தவக் குடியரசுவாதிகள் கட்சி (Christian Democrats)

ஐரோப்பாவில் கிறித்தவர்களுக்காகக் கடைசியாகக் கட்சி ஆரம்பித்த நாடு பிரான்சு எனக் கூறப்படுகிறது. அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை இடர்ப்பாடுகளில் சிக்கித் திணறிக்கொண்டிருக்கிறது. பிரெஞ்சுக் கட்சிகள் அனைத்திலும் கிறித்தவக் குடியரசு கட்சியே துரதிருஷ்டம் மிக்க கட்சியாகக் கருதப்படுகிறது. திருச்சபைக்கு எதிரான கருத்துகள் ஆழமாக வேரூன்றி இருக்கும் பிரான்சில் அதன் கருத்துகளைப் பரப்ப முயலும் கட்சியின் முயற்சிகள் அவ்வளவு எளிதாக வெற்றிபெற முடியாது. 1945ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிட்டத்தட்ட 50,000 வாக்குகளைப் பெற்ற இக்கட்சி, 1962ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 16,000 வாக்குகளை மட்டுமே பெற்றது. பிரெஞ்சு அரசியலில் நல்ல கொள்கைகளில் பல கிறித்தவக் குடியரசுவாதிகளால் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய ஒருமைப்பாட்டை அமைக்க வேண்டும் என முதன்முதலில் குரல் எழுப்பியது இக் கட்சியே; பொருளாதாரச், சமுதாயத் துறைகளில் நவீன முறைகளைப் புகுத்த வேண்டுமென முதன்முதலில் கூறியதும் இக் கட்சியேயாகும்; ஆனால், அக் கொள்கைகளை எடுத்துரைத்ததற்கான நற்பெயர் இக் கட்சியை வந்தடையவில்லை. கிறித்தவக் குடியரசு கட்சியின் தோல்விகளைக் கண்டு மனம் நொந்த அதன் பொதுச் செயலாளர் அக் கட்சி தோன்றியே இருக்கக்கூடாதென ஒருமுறை கூறினர். ஆனாலும், அக் கட்சி மறைந்துவிடும் எனக் கூறுவதற்கில்லை. ஏனெனில், பிரிட்டனி (Britanny), அல்ஸேஸ் (Alsace) போன்ற பகுதிகளில் ஏராளமான தீவிரச் சமயப் பற்றுள்ள கிறித்தவர்கள் இக் கட்சிக்குப் பேராதரவு தருகின்றனர். இக் கட்சி, தான் சூழ்ச்சியைக் கையாள்வதில்லை என அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்வதுண்டு; அரசியலில் சூழ்ச்சியைக் கையாளாமல் மேல்நிலை அடைவது என்பது எளிதான காரியமன்று என்பது யாவரும் அறிந்ததே.

காலிஸ்டுகள் (Gaullists)

தலைவர் டி காலின் திட்டங்களை ஏற்று, அவரைத் தலைவராக வைத்துக்கொள்ள விரும்பிய மக்கள், காலிஸ்டுகள் என அழைக்கப் படுகின்றனர். நான்காவது குடியரசின்பொழுது இயங்கிய 'பிரெஞ்சு மக்களின் காலிஸ்டு அணி' (Gaullist Rally of the French People) 1955ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. ஆனால், ஐந்தாவது குடியரசு உதயமான தருணத்தில் டிகாலின் ஆதர வாளர்கள் 'புதிய குடியரசிற்கான கட்சி' (Union for the New Republic) என்ற பெயரில் ஓர் இயக்கத்தை ஆரம்பித்தனர். இக் கட்சி டி கால் காட்டிய வழியில் நடப்பதைத் தவிர, தனியான கொள்கைகள் எதையும் வரையறுத்துக்கொண்டதாகத் தோன்ற வில்லை. 1959ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் காலிஸ்டுகள் தங்கள் கட்சியை ஓர் அரசாங்கக் கட்சி என்றும், எந்தக் கட்சி அரசாங்கம் அமைத்தாலும் அதற்கு அது ஆதரவு தரும் என்றும், மக்களின் உரிமைகளை ஆதரிக்க அது பாடுபடும் என்றும் அறிவித்தனர். கிராமங்களைவிட நகரங்களில் காலிஸ்டு களின் எண்ணிக்கை அதிகமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 1962ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காலிஸ்டு வேட்பாளர்களுக்கு முதல் தேர்தலில் 32 சதவிகித வாக்குகளும் மறு தேர்தலில் 40 சதவிகித வாக்குகளும் கிடைத்தனவாம். பிரான்சில் அதற்கு முன்பு எந்தப் பொதுத் தேர்தலிலும் எந்தக் கட்சிக்கும் 30 சதவிகித வாக்குகள்கூடக் கிடைத்ததில்லை என்பது புதிய காலிஸ்டுக் கட்சியின் செல்வாக்கிற்குச் சான்றாக அமைகிறது.

படிக்கவேண்டிய நூல்கள்

(1) Jean Blondel & E. Drexel Godfrey Jr. — The Government of France (Methuen)

(2) J. A. Laponce — The Government of the Fifth Republic (University of California Press)

(3) D. Pickles — The Fifth French Republic (Methuen)

(4) The French Constitution : English Translation

VI. சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பு

(The Constitution of Switzerland)

1. அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

(Characteristic features of the Constitution)

[முன்னுரை—பன்மையில் ஒருமை—நடுநிலைமைக் கொள்கை—கட்டாய இராணுவச் சேவை—கூட்டாட்சிக் குழு—நேரடிக் குடியரசு—கூட்டாட்சி—அடிப்படை உரிமைகள்.]

முன்னுரை

'பூலோக சுவர்க்கம்' எனப் புகழப்படும் இயற்கை எழில் மிக்க சுவிட்சர்லாந்து, இன்றைய ஜனநாயக அரசுகளுள் ஈடு இணையற்றது எனப் பாராட்டப்படுகிறது. ஐரோப்பாவிலேயே மிகப் பழைய குடியாட்சியைப் பெற்றிருக்கும் பெருமையுடைய சுவிட்சர்லாந்தின் இன்றைய அரசியலமைப்பு 1848ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 1874ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது. நூற்று இருபத்துமூன்று விதிகளைக் கொண்டிருக்கும் இவ்வரசியல் அமைப்பில், அங்கும் இங்கும், அமெரிக்க அரசியலமைப்பின் சாயலைக் காண்கிறோம்.

பன்மையில் ஒருமை

இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நான்கு நாடுகளால் சூழப்பட்டிருக்கும் சுவிட்சர்லாந்தில், அந்த நாடுகளின் இனங்களும், மொழிகளும், சமயங்களும் பரவியது இயற்கையே. வெவ்வேறு இனங்களையும், மொழிகளையும், சமயங்களையும் சார்ந்த மக்கள், தங்களிடையே உள்ள வேறுபாடுகளை மறந்து வாழ்கின்ற சிறப்பு வியக்கத்தக்கதாகும். ஜெர்மன் (74·9%), பிரெஞ்சு (20·6%), இத்தாலியன் (4%), ரோமான்ஷ் (Romanche) (1·1%) ஆகிய நான்கு மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்கப்படும் சுவிட்சர்லாந்தில் மொழிப் போராட்டத்திற்கு இடமில்லை. சமயங்களில் கத்தோலிக்கச் சமயமும் (40·3%), பிராட்டஸ்டண்டு சமயமும் (58·5%) மிகப் பெரும்

பான்மையோரின் சமயங்களாய் விளங்குகின்றன. காடுகளாலும், மலைகளாலும், ஆறுகளாலும் நாடு பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், மக்கள் பிரிவினைச் சக்திகளை வளர்க்காமல், நாட்டின் ஒருமைப் பாட்டினை வளர்த்து, அரசியலமைப்பை அனைவரையும் ஒன்று படுத்தும் பொதுச் சொத்தாக மதிப்பது சுவிஸ் மக்களின் தலை சிறந்த பண்பாகும். நாட்டைப் பிளவுபடுத்தும் சக்திகள் வேறூன்றி இருக்கும் இந்தியா போன்ற நாடுகள், சுவிஸ் மக்களின் அனுபவங்களைக் கற்றுணர்ந்து, அதன்படி நடப்பது நம் நாட்டை மேலும் வலுவாக்கும்.

நடுநிலைமைக் கொள்கை

உலக அரசியலில் பல நூற்றாண்டுகளாக சுவிட்சர்லாந்து கூட்டுச்சேராத நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது. வியன்னா மாநாடு (Congress of Vienna) காலந்தொட்டு உலக நாடுகள் சுவிட்சர்லாந்தின் நடுநிலைமைக் கொள்கையை மதித்து வருகின்றன. உலகின் பெரும் பகுதியை ஆட்டி அசைத்த முதலாம் உலகப் போரிலும், இரண்டாம் உலகப் போரிலும் சுவிட்சர்லாந்து பங்கு பெறாதது குறிப்பிடத்தக்கது. சுவிட்சர் லாந்து வலுவுள்ள நாடுகளால் சூழப்பட்டிருப்பதும், உணவுப் பண்டங்களுக்கு மற்ற நாடுகளை நம்பியிருப்பதும், பொருளாதார வளர்ச்சிக்கு அயல்நாட்டு வர்த்தகத் தொடர்புகளை விரும்புவதும், அது நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றுவதைத் தவிர்க்க முடியாததாக்குகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகித் தால், அச் செயல் அதன் நடுநிலைமைக் கொள்கைக்கு ஊறு பயக்கும் என்று அஞ்சி, சுவிட்சர்லாந்து அப் பன்னாட்டுக் கழகத்தில் இன்றுவரை அங்க நாடாய்ச் சேரவில்லை என்பது அறியத்தக்கது. ஆனால், சுவிட்சர்லாந்து ஐக்கிய நாடுகள் சபையின் நல்ல நோக்கங்களை நிறைவேற்ற முழுமூச்சோடு பாடு படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் ஐரோப்பியத் தலைமை யகமே ஜெனிவாவில் (Geneva) தான் நிறுவப்பட்டிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தை (The Red Cross) நிறுவிக் கோடிக் கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிப்பதும், ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனங்களாக உலக நீதிமன்றம் (International Court of Justice), கல்வி விஞ்ஞான கலாசாரக் கழகம் (United Nations Educational Scientific Cultural Organization), உலகச் சுகாதார நிறுவனம் (World Health Organization), உணவு விவசாயக் கழகம் (Food and Agriculture Organization), ஆகிய அமைப்புகளில் சுவிட்சர்லாந்து அங்கம் வகிப்பது அதன் மனிதாபி மான உணர்வுகளுக்குச் சான்று பகர்கின்றது.

கட்டாய இராணுவச் சேவை

அரசு நிலைப்படை வைத்திருக்கக்கூடாது என அரசிய லமைப்புத் தடை செய்வதால், நாட்டின் பாதுகாப்புச் சாதா ரணக் குடிமக்களின் பொறுப்பாகிவிட்டது. இருபது வயதை அடைந்த ஆடவர் அனைவரும் கட்டாய இராணுவப் பயிற்சி பெறுகின்றனர்; அதற்குப் பிறகு, குறிப்பிட்ட காலங்களில் அவர்களுக்கு மறு பயிற்சியும் (Refresher Course) தரப்படுகிறது. குடிமக்களைக் கொண்ட இராணுவம், வயது அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. (1) தலைப் படை (Elite formations), 20 வயதிலிருந்து 32 வயது வரை; (2) முதற் படை (First Reserve), 33 வயதிலிருந்து 42 வயது வரை; (3) இரண் டாம் படை (Second Reserve); 43 வயதிலிருந்து 50 வயது வரை. பயிற்சியிலிருந்து திரும்பி வரும் ஒவ்வொரு குடிமகனும், தன் னுடைய பயிற்சிப் பொருள்களையும் ஆயுதங்களையும் தன்னிடமே வைத்திருப்பார். இந்த முறை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை. மற்ற நாடுகளைப் போலல்லாமல் சுவிட்சர்லாந்தில் போர்க் காலங்களில் மட்டும் படைத் தலைவர்கள் நியமிக்கப்படு வார்கள். இதுவரை ஐந்து சமயங்களில் (1849, 1856, 1870, 1914, 1939) அதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கட்டாய இராணுவப் பயிற்சியிலிருந்து விலக விரும்புவோர், அதற்கென வரி செலுத்த வேண்டும். பெண்களுக்குக் கட்டாய இராணுவச் சேவை இல்லை என்றாலும் அவர்கள் விரும்பினால் படைத்துறையின் துணைத் துறைகளில் பயிற்சி பெறலாம். 1848-லிருந்து இன்று வரை எந்த நாடும் சுவிட்சர்லாந்தைத் தாக்கியதில்லை என்ற செய்தி, அந்த நாட்டிற்குப் பெரிய இராணுவ அமைப்புத் தேவை யில்லை என்பதை அறிவுறுத்துகிறது. எப்பொழுதும் போருக்குத் தயாராய் இருப்பது அறிவுடைமை என்ற அடிப்படையில் சுவிஸ் அரசாங்கம் இயங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டாட்சிக் குழு

அரசாங்கத்தின் ஆட்சித்துறையாய் அமைந்திருக்கும் கூட்டாட்சிக் குழு என்னும் நிறுவனம் சுவிஸ் அரசியலமைப்பின் தனித்தன்மை மிக்கதொரு நிறுவனமாய்க் கருதப்படுகிறது. தனிப்பட்ட ஒருவருக்கு அளவுகடந்த அதிகாரங்கள் இருப்பதை விரும்பாத சுவிஸ் மக்கள், ஆட்சித்துறை அதிகாரங்களை ஏழு பேரைக் கொண்ட குழு ஒன்றிடம் ஒப்படைத்திருக்கின்றனர். ஆட்சித்துறைகள், பாராளுமன்றம் சார்ந்தவை, பாராளுமன்றம் சாராதவை எனப் பிரிக்கப்படும் இக் காலத்தில், சுவிஸ் ஆட்சித் துறையை எந்தப் பிரிவில் சேர்ப்பது என்பதை நம்மால் முடிவு செய்ய முடியவில்லை; ஏனெனில், பாராளுமன்றம் சார்ந்த ஆட்சித்

துறையின் பண்புகளும், பாராளுமன்றம் சாராத ஆட்சித் துறையின் பண்புகளும் சுவிஸ் ஆட்சித்துறையில் கலந்து காணப் படுகின்றன. கூட்டாட்சிக் குழுவினர் ஆரவாரமில்லாமல் அமைதி யாகத் தங்கள் பணிகளைச் செய்கின்ற வழக்கமுடையவர்கள். மற்ற நாடுகளின் அமைச்சர்களைப் போல அவர்கள் அரசியலில் விளம்பரங்களை விரும்புவதில்லை. அரசியலமைப்புத் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை, அரசாங்கத்தில் ஏழு துறைகளே இருந்து வருகின்றன என்ற செய்தி கூட்டாட்சிக் குழுவினர் நாளுக்குநாள் அதிகப் பொறுப்புகளை ஏற்கின்றனர் என்பதைத் தெளிவுபடுத்து கிறது. சுவிட்சர்லாந்தைவிடச் சிறிய நாடுகளில்கூட ஏராளமான அமைச்சர்கள் இருக்கும் இக் காலத்தில், அங்குமட்டும் ஏழு அமைச்சர்களே இருக்கின்றனர் என்பதிலிருந்து அரசியலில் அந்நாட்டவர் பின்பற்றும் சிக்கனத்தைத் தெரிந்து கொள்கிறோம்.

நேரடிக் குடியரசு

உலகில் இன்று இயங்கும் குடியரசுகளுள், சுவிட்சர்லாந்தை மிகச் சிறந்த குடியரசு என அழைப்பது வழக்கம். மற்ற நாடுகளெல்லாம் பிரதிநிதித்துவ மக்களாட்சிகளாய் (Representative Democracies) இயங்கும் இக் காலத்தில், சுவிட்சர்லாந்து நேர்முக மக்களாட்சியாய் (Direct Democracy) இயங்குவது குறிப் பிடத்தக்கது. சின்னஞ்சிறு நாடான சுவிட்சர்லாந்தில் வாக் காளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால், பண்டைக்கால கிரேக்க நகர நாடுகளைப் (Greek City-States) போன்று இங்கே மக்கள் நேரடியாக அரசாங்கத்தில் பங்குபெற முடிகிறது. குடியொப்பம் (Referendum), தொடக்க உரிமை (Initiative) ஆகிய இரு முறைகளும் சுவிட்சர்லாந்துக்கே உரிய முறைகளாகக் கருதப்படுகின்றன. மக்கள் விரும்பாத சட்டங்களை அவர்கள்மீது திணிப்பதோ, அவர்கள் விரும்பும் சட்டங்களை அவர்களுக்கு மறுப்பதோ சுவிட்சர்லாந்தில் இயலாத காரியங் களாகும். சட்டங்களை ஆக்குவதிலும் நீக்குவதிலும் வாக்கா ளர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்கின்ற முறை சுவிட்சர் லாந்தில் மட்டும் காணப்படும் முறை அன்று என்பதும், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, அமெரிக்க மாநிலங்கள் போன்ற இடங்களிலும், குடியொப்பம், தொடக்க உரிமை ஆகிய முறைகள் காணப் படுகின்றன என்பதும் உண்மையானாலும், இம் முறைகளைத் தோற்றுவித்து, வளர்த்து, செம்மைப்படுத்திய பெருமை சுவிட்சர் லாந்தையே சாரும். ஆனாலும், சுவிஸ் குடியரசை ஒரு குறையற்ற குடியரசு எனக் கூறுவதற்கில்லை; ஏனெனில், அங்கு இன்றும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. ஆண்களும் பெண் களும் சரிநிகர் சமானம் என முழங்கப்படும் இக் காலத்தில்,

வாக்குரிமை ஆண்களின் பிறப்புரிமையாக மட்டும் கருதப்படுவது நியாயமானதன்று என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

கூட்டாட்சி

உலகிலுள்ள முதல் தரமான கூட்டாட்சிகளுள் சுவிஸ் கூட்டாட்சியும் ஒன்று என எண்ணப்படுகிறது. 1291ஆம் ஆண்டில் மூன்று மாநிலங்களைக் கொண்டு தோன்றிய சுவிஸ் கூட்டமைப்பில், இன்று 22 மாநிலங்கள் (19 முழு மாநிலங்களும், 6 அரை மாநிலங்களும்) இருக்கின்றன. மாநிலங்களின் பிரதேசங்கள், அவற்றின் இறைமை, அவற்றின் அரசியலமைப்புகள், அவற்றில் வாழும் மக்களின் உரிமைகள் ஆகியவற்றிற்கு மைய அரசு காப்பளிக்கும் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. மாநிலங்களின் விருப்பப் படியோ அல்லது அவற்றின் விருப்பத்திற்கு மாறாகவோ, மைய அரசு, மாநில அரசுகளின் அலுவல்களில் தலையிட்டுத் தான் காப்பதாக உறுதி கூறியவற்றைக் காக்கும். 1848-க்கும் 1932-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் மைய அரசு ஒன்பதுமுறை மாநில அரசுகளின் அலுவல்களில் தலையிட வேண்டிய அவசியம் எழுந்ததாம்; 1932ஆம் ஆண்டிற்குப் பிறகு அதுபோன்ற சூழ்நிலை தோன்றியதில்லை. மாநிலங்கள் புதிய அரசியலமைப்புகளைத் தோற்றுவித்தாலோ, அல்லது பழைய அரசியலமைப்புகளுக்குத் திருத்தம் கொண்டு வந்தாலோ, அவற்றிற்கு மைய அரசின் இசைவைப் பெறவேண்டும். மாநிலங்களின் அரசியலமைப்பு களில் தேசிய அரசியலமைப்புக்கு மாறான விதிகள் இடம் பெறாமல் இருக்க இம் முறை காப்பளிக்கிறது.

மாநிலங்கள் தங்களுக்கிடையே அரசியல் உடன்படிக்கைகள் செய்து கொள்வதை அரசியலமைப்புத் தடை செய்கிறது. சட்ட மியற்றல், ஆட்சிப் பரிபாலனம், நீதி நிர்வாகம் ஆகியவை பற்றித் தங்களுக்குள் உடன்பாடுகள் செய்துகொள்ள விரும்பும் மாநிலங்கள், மைய அரசின் இணக்கத்தைப் பெற்று அவ்வாறு செய்து கொள்ளலாம். மாநிலங்கள் அயலரசுகளோடு பொதுப் பொருளாதாரம் போன்றவை குறித்து உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம் என்றாலும், அவ்வகை உடன்படிக்கைகளும் மைய அரசின் அனுமதியோடுதான் செய்துகொள்ளப்படவேண்டும். வெளிநாட்டு விவகாரங்களை மத்திய அரசின் முழுக் கவனத்திற்கு விட்டுவிடுவதே தற்கால வழக்கம். மாநிலங்களுக்கிடையே தகராறுகள் எழுமானால் அவற்றை மத்திய அரசின் முடிவுக்கு விடவேண்டுமென்றும், ஒரு மாநிலம் அயல்நாட்டின் தாக்கு தலுக்கு உள்ளானால், கூட்டமைப்பிலுள்ள மற்ற மாநிலங்கள் அனைத்தும் தாக்குதலுக்கு உள்ளான மாநிலத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்றும் அரசியலமைப்பு வற்புறுத்துகிறது.

அமெரிக்க அரசியலமைப்பில் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரங்கள் பங்கிடப்பட்டிருக்கும் முறையைத் தழுவியே சுவிட்சர்லாந்திலும் அதிகாரங்கள் இரு அரசுகளாலும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. மைய அரசின் அதிகாரங்கள் அரசியலமைப்பில் விவரிக்கப்படுகின்றன. இராணுவம், அயல் நாட்டு அலுவல்கள், தபால் தந்தி, இரயில் போக்குவரத்து, நாணயச் செலாவணி, எடையும் அளவும், வெடி மருந்து ஆகிய இனங்கள்மீது மைய அரசே சட்டங்கள் இயற்றலாம். மைய அரசுக்கு ஒதுக்கப்படாமல் எஞ்சியிருக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்கு உரிமையாகின்றன. சட்டம், ஒழுங்கு, கல்வி, சுகாதாரம். நீதி நிர்வாகம், பொதுப்பணிகள் போன்ற இனங்கள்மீது மாநிலங்கள் சட்டங்கள் இயற்றலாம். சிவில் சட்டம், குற்றவியல் சட்டம், மீன் பிடித்தல், வேட்டையாடுதல், தொழில்கள், செய்தித் தாள்கள் ஆகிய இனங்கள்மீது இரு அரசுகளுமே சட்டங்கள் இயற்றலாம். மைய அரசின் சட்டமும், மாநில அரசின் சட்டமும் ஒன்றற்கொன்று முரணானவையாய் இருந்தால், மைய அரசின் சட்டமே உண்மையான சட்டமாய் ஏற்கப்படும். நாட்டின் எல்லா அலுவல்களும் மைய அரசின் மேற்பார்வைக்கு உட்பட்டவையாய் இருப்பது, மைய அரசை வலுவுள்ளதாக்கி மாநில அரசுகளை வலுவற்றதாக்குகிறது என்பதில் ஐயமில்லை. அமெரிக்க அரசியலமைப்பில் இரு அரசுகளும் அதனதன் எல்லைக்குள் இயங்குகின்றனவா என்று தலைமை நீதிமன்றம் கண்காணிப்பது போல, சுவிஸ் தலைமை நீதிமன்றம் செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மைய அரசின் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு மாறானவையாய் இருப்பினும், அவற்றைச் செல்லாதவை என அறிவிக்கக்கூடிய அதிகாரம் சுவிஸ் தலைமை நீதிமன்றத்துக்கு இல்லை என்பது சுவிஸ் கூட்டாட்சியின் தரத்தை ஓரளவுக்குக் குறைத்துக் காட்டுகிறது.

அடிப்படை உரிமைகள்

சுவிஸ் மக்களின் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் எந்த ஒரு பகுதியிலும் முறையாக வரிசைப்படுத்திக் கூறப்படவில்லை; அவை அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகளில் பரந்து காணப்படுகின்றன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும், மாந்தருக்குள் உயர்வு தாழ்வு இல்லை என்றும் அரசியலமைப்பு அறிவிக்கிறது. ஒவ்வொரு மாநிலமும் அதன் குடிமக்களுக்கு எந்த உரிமைகளை வழங்குகிறதோ, அதே உரிமைகளை மற்ற மாநிலங்களின் குடிமக்கள் அதன் எல்லைக்குள் வரும்பொழுது வழங்கும். எந்த மாநிலத்தைச் சேர்ந்த குடிமகனும், வேறு எந்த மாநிலத்திலும் குடியிருக்கலாம். எழுத்துரிமையும்,

அரசியல், பொருளாதார, சமுதாய, சமயச் சங்கங்கள் அமைத்துக் கொள்ளும் உரிமையும், எல்லாக் குடிமக்களுக்கும் உண்டு. சமயத்துறையில் சமயச் சார்பற்ற நாடு என்று கூறக்கூடிய அளவுக்கு அனைவருக்கும் சமயச் சுதந்திரம் வழங்கப்படுகிறது. பிரெஞ்சுப் புரட்சியின் செல்வாக்கின் விளைவாக, சுவிட்சர்லாந்தில் மனித உரிமைகள் பெரிதும் மதிக்கப்படுகின்றன என்று கூறப் படுகிறது.

2. கூட்டாட்சிக் குழு

(The Federal Council)

[முன்னுரை—அமைப்பு—குடியரசு தலைவரும் துணைத்தலைவரும் —குழுவின் அதிகாரங்கள்—குழுவைத் திருத்தி அமைக்க சில யோசனைகள்—குழுவின் சிறப்பியல்புகள்.]

முன்னுரை

சுவிட்சர்லாந்தில் ஆட்சிப்பரிபாலன அதிகாரங்கள் கூட்டாட்சிக் குழு என்னும் தனித்தன்மை பொருந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் அரசில் பிரதம மந்திரியிடமும், அமெரிக்க அரசில் குடியரசு தலைவரிடமும் ஆட்சித்துறை அதிகாரங்கள் குவிந்திருப்பது சர்வாதிகார அரசுகளின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் எனக் கருதும் சுவிஸ் மக்கள், நிருவாகப் பொறுப்பைத் தனி ஒருவரிடம் தராமல் ஏழுபேர் அடங்கிய கூட்டுக் குழு ஒன்றிடம் ஒப்படைத்திருக்கின்றனர். பாராளுமன்றம் சார்புள்ள பிரிட்டிஷ் ஆட்சித்துறை, பாராளுமன்றம் சார்பற்ற அமெரிக்க ஆட்சித்துறை ஆகிய இருமுறைகளின் நல்லியல்புகளை இணைத்து, உலகில் வேறெந்த அரசியலமைப்பிலும் இல்லாத ஒரு புதுமையான ஆட்சித்துறை அமைப்பைத் தோற்றுவித்திருக்கும் சுவிஸ் அரசியலமைப்பை, அரசியல் அறிஞர்கள் பெரிதும் புகழ்ந்து பாராட்டுகின்றனர். 1874ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் 95-லிருந்து 104 வரை உள்ள விதிகள் கூட்டாட்சிக் குழுவின் அமைப்பையும் அதிகாரங்களையும் விவரிக்கின்றன.

அமைப்பு

அரசியலமைப்புத் தோன்றிய காலம்முதல், கூட்டாட்சிக் குழு ஏழு அங்கத்தினர்களைக் கொண்ட அமைச்சரவையாகவே இயங்கி வருகின்றது. இந்த ஏழு அங்கத்தினர்களும் (1) அயல் அரசுகள்,

(2) உள் துறை, (3) நீதியும் காவல் துறையும், (4) நீதியும் சுங்க வரியும், (5) இராணுவம், (6) பொதுப் பொருளாதாரம், (7) தபால் தந்தி, இரயில் போக்குவரத்து ஆகிய ஏழு துறைகளின் தலைவர்களாய் பணியாற்றுகின்றனர். தேசியப் பாராளு மன்றத்தின் இரு சபைகளாலும், அவற்றின் இணைப்புக் கூட்டம் ஒன்றில், நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை கூட்டாட்சிக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கும் எல்லா சுவிஸ் மக்களும் அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தகுதியுடையோர் என அரசியலமைப்பு அறிவித்தா லும், பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களிலிருந்தே அமைச்சர் களைத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தை நெடுங்காலமாகப் பின்பற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அமைச்சர்களாகத் தேர்ந் தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் தொடர்ந்து நீடிக்காமல் அதிலிருந்து விலகிக் கொள்வார்கள்; அவர்கள் விலகுவதால் காலியாகும் இடங்கள் உபதேர்தல்களால் நிரப்பப்படும். ஒருமுறை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படு கிறவர், மீண்டும் மீண்டும் அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுக்கப் படுவது கூட்டாட்சிக் குழுவின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். சிலர் 32 ஆண்டுகள்கூடத் தொடர்ந்தாற்போல் அமைச்சர்களாய் இருந்திருக்கின்றனர் என்ற செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்து கிறது. ஷெங்க் (Schenk) என்பவர் 1863-லிருந்து 1895 வரையும், ஷல்தெஸ் (Schulthess) என்பவர் 1912-லிருந்து 1935 வரையும், மோர்ட்டா (Mortta) என்பவர் 1911-லிருந்து 1940 வரையும், எட்டர் (Etter) என்பவர் 1934-லிருந்து 1959 வரையும் அமைச்சர்களாய் இருந்தனர்.

எந்த ஒரு மாநிலத்திலிருந்தும் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சர் தேர்ந்தெடுக்கப்படக் கூடாதென்றும், பிறப்பாலும் திருமணத் தாலும் நெருங்கிய உறவினர்கள் அமைச்சர்களாக அமரக்கூடா தென்றும் அரசியலப்மைப்புக் கூறுகிறது. கூட்டாட்சிக் குழு அமைக்கப்படும் முறையில் சில மரபுகளும் பின்பற்றப்படுகின்றன. சுவிஸ் மாநிலங்களில் மிகப் பெரியவையான பெர்ன் (Berne), சூரிச் (Zurich), வாட் (Vaud) ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் குழுவில் பிரதிநிதித்தும் வழங்கப்படுவதும், ஜெர்மன் மொழி பேசும் மாநிலங்களிலிருந்து ஐந்து பேருக்கு மேற்படாத உறுப் பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், எல்லாப் பெரும் அரசியல் கட்சிகளுக்கும் குழுவில் பிரதிநிதித்துவம் அளிப்பதும், நீண்ட நாள்களாகக் கடைப்பிடிக்கப்படும் வழக்கங்களாகும். அமைச் சர்கள் அனைவரும் பகட்டில்லாமல் தன்னடக்கத்தோடும், பண்பு நயத்தோடும் பணியாற்றுவது அவர்களைப் பெருமைக்குரியவர்

களாக்குகிறது. பதவி ஏற்கு முன் ஒவ்வோர் அமைச்சரும் 'கூட்டாட்சியின் அரசியலமைப்புக்கும் சட்டங்களுக்கும் விசுவாசத்தோடு இருப்பேன் என்றும், சுவிஸ் நாட்டின் ஒற்றுமையையும், வலிமையையும், கௌரவத்தையும் காப்பேன் என்றும், என் தாய் நாட்டின் சுதந்திரத்தையும் மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பேன் என்றும், என்னால் முடிந்தவரை என் கடமைகள் அனைத்தையும் செய்வேன் என்றும் எல்லாம் வல்ல இறைவன் முன்பாக உறுதி கூறுகிறேன். கடவுள் எனக்குத் துணை நிற்பாராக' என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் உறுதிமொழி பகர்வார். அமைச்சர் ஆண்டொன்றுக்கு 65,000 சுவிஸ் பிராங்குகள் ஊதியம் பெறுகிறார். பதவியிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு ஓய்வு ஊதியமும் உண்டு. வாரத்திற்கு ஒரு முறை குழுவின் கூட்டம் நடைபெறும். குறைந்த அளவு நான்கு உறுப்பினர்களாவது வந்திருந்தால்தான் கூட்டத்தை நடத்த முடியும்.

குடியரசு தலைவரும் துணைத்தலைவரும்

தேசியப் பாராளுமன்றம், ஏழு அமைச்சர்களில் ஒருவரைக் குடியரசின் தலைவராகவும், மேலும் ஒருவரைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கிறது. அவர்கள் ஓராண்டுக் காலமே பதவியிலிருப்பார்கள். ஓர் ஆண்டில் தலைவராயும் துணைத் தலைவராயும் இருப்பவர்கள் மறு ஆண்டில் மீண்டும் தலைவராயும் துணைத் தலைவராயும் தேர்ந்தெடுக்கப்படுவதை அரசியலமைப்புத் தடை செய்கிறது. ஆனால், இந்த ஆண்டின் துணைத் தலைவர் அடுத்த ஆண்டு தலைவராவது குறித்து எந்தத் தடையுமில்லை. முதல் ஆண்டின் துணைத் தலைவர் மறு ஆண்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதே மரபு. கூட்டாட்சிக் குழுவில் இருக்கும் அங்கத்தினர்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து பதவியிலிருப்பதால் அனேகமாக எல்லா அங்கத்தினர்களும் முதலில் துணைத் தலைவராகவும் பிறகு தலைவராகவும் பொறுப்பேற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். குடியரசு தலைவருக்கு கம்பீரமான பட்டப் பெயர் இருந்தபோதிலும், சிறப்பான அதிகாரங்கள் எதுவுமில்லை என்பது அறியத்தக்கது. உள் நாட்டு, வெளி நாட்டு அலுவல்களில் பெயரளவுக்கு நாட்டின் தலைவராய் இருப்பதும், கூட்டாட்சிக் குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் தலைவராய் இருப்பதும், மற்றத் துறைகளின் பணிகளை மேற்பார்வை செய்வதும் அவருடைய பொறுப்புகளில் சிலவாகும். அவர் அமெரிக்கத் தலைவர் போன்று சிறந்த அதிகாரங்கள் உடையவர் என்றோ, பிரிட்டிஷ் அரசி போன்று நல்ல செல்வாக்குடையவர் என்றோ கூறுவதற்கில்லை. ஒத்த அதிகாரங்களுடைய ஏழு உறுப்பினர்களில் அவரை முதலானவராகக் கருதலாமே ஒழிய, வேறெந்தச் சிறப்புடையவராகவும் அவரைக் கருதுவதற்கில்லை.

குழுவின் அதிகாரங்கள்

ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் நிறுவனங்களுள் கூட்டாட்சிக் குழு தலையாயதாய்க் கருதப்படுகிறது. அரசியலமைப்பு அதற்குப் பலவிதமான அதிகாரங்களைத் தருகிறது. தேசிய அரசியலமைப்பு, சட்டங்கள், நீதித் தீர்ப்புகள் ஆகியவை மதிக்கப்படுகின்றனவா என்று கண்காணித்து, அவற்றைச் செயல்படுத்துவது கூட்டாட்சிக் குழுவின் பொறுப்பாகும். நாடெங்கிலும் ஒழுங்கையும் அமைதியையும் காப்பது அதன் கடமையாகும். சுவிட்சர்லாந்தின் அயல்நாட்டு உறவுகளைப் பராமரித்து, அதன் சுதந்திரத்தையும் நடுநிலைமைக் கொள்கையும் பாதுகாப்பது குழுவின் பொறுப்பேயாகும். கூட்டாட்சிக் குழு நாட்டின் இராணுவ அலுவல்களைக் கவனிக்கும்; அவசரக்காலங்களில் அதற்குப் படை திரட்டும் உரிமையும் உண்டு; ஆனல், படை வீரர்களின் எண்ணிக்கை 2,000-க்கு மேற்பட்டாலோ, அல்லது மூன்று வாரங்களுக்குமேல் படைக்கலம் ஏந்தவேண்டி யிருந்தாலோ, உடனடியாகப் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். நாட்டின் நிதி நிர்வாகத்தைக் கண்காணிப்பது, வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்வது, வரவு செலவுக் கணக்கினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பது ஆகியவை குழுவின் நிதித் துறைப் பணிகளாகும். பாராளுமன்றமோ, நீதிமன்றமோ, அல்லது வேறு எந்த நிறுவனமோ நியமிக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்படாத பதவிகளுக்குரிய அதிகாரிகளைக் கூட்டாட்சிக் குழு நியமிக்கும். மேலும் குழுவிற்கு நிருவாகத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களின் வேலையை மேற்பார்வை செய்யும் அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களின் அரசியலமைப்புகள் முறைப்படி செயல்படுகின்றனவா என்று கண்காணிப்பதும், மாநிலங்களுக்கிடையேயும், மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்குமிடையேயும் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகளை ஏற்பதா மறுப்பதா என்று முடிவு செய்வதும், கூட்டாட்சிக் குழுவின் அதிகாரங்களில் அடங்கும்.

கூட்டாட்சிக் குழுவினர் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் அல்லர் எனினும், அதன் இரு சபைகளிலும் அமர்ந்து அவற்றின் நடவடிக்கைகளில் பங்கேற்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. பாராளுமன்றத்தில் தோற்றுவிக்கப்படும் மசோதாக்களில் பெரும்பாலானவை அமைச்சர்களால்தான் தோற்றுவிக்கப்படுகின்றன. சாதாரண உறுப்பினர்களால் முன்மொழியப்படும் மசோதாக்களைக்கூட, கூட்டாட்சிக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பி, அதன் சிபாரிசுப்படி நடப்பதையே பாராளுமன்றம் வழக்கமாய்க் கொண்டிருக்கிறது. பாராளுமன்றம் சட்டங்களைப் பொதுப்படையாக

இயற்றி, அவற்றின் நுணுக்கமான விவரங்களைக் கூட்டாட்சிக் குழுவைப் பிறப்பிக்குமாறு பணிப்பது, அக் குழுவையும் ஓரளவுக்குச் சட்டமன்றமாக்குகிறது. நெருக்கடி காலங்களில் நிலைமையைச் சமாளிக்க, பாராளுமன்றம் கூட்டாட்சிக் குழுவிற்கு எல்லையற்ற அதிகாரங்கள் அளிப்பதுமுண்டு. 1939ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரின்பொழுது பாராளுமன்றமானது, சுவிட்சர்லாந்தின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும், நடுநிலைமைக் கொள்கையையும், பொருளாதார நலன்களையும், உணவுப் பண்டங்கள் வரவழைத்தலையும் காக்க, கூட்டாட்சிக் குழு அவசியமென நினைக்கின்ற செயல்கள் அனைத்தும் செய்யலாம் என குழு அதிகாரத்தை வழங்கியது. பாராளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தொடரின்பொழுதும், கூட்டாட்சிக் குழு அதனுடைய நடவடிக்கைகளைப்பற்றிப் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், நாட்டின் உள், வெளி நிலைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்றை அதற்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும், பொது நலனுக்குத் தேவையென அதற்குத் தோன்றும் கருத்துகளைப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அரசியலமைப்புக் கோருகிறது. ஆட்சித் துறையின் முக்கியமான முடிவுகளெல்லாம் அமைச்சர்களால் தனிப்பட்ட முறையில் எடுக்கப்படவில்லை என்பதும், கூட்டாட்சிக் குழுவால்தான் எடுக்கப்படும் என்பதும் அறியத்தக்கது. 'கூட்டாட்சிப் பதிவேடகம்' (Federal Chancery) என்னும் அலுவலகம் கூட்டாட்சிக் குழுவின் செயலகமாய் இயங்குகிறது.

குழுவைத் திருத்தி அமைக்க சில யோசனைகள்

சுவிஸ் கூட்டாட்சிக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஏழிலிருந்து உயர்த்த வேண்டுமென்ற கருத்து அடிக்கடி தெரிவிக்கப்படுவதுண்டு. 1848ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசின் பணிகள் பல மடங்குப் பெருகியபோதிலும், அமைச்சர்களின் எண்ணிக்கைமட்டும் அந்த நாளிலிருந்து ஏழாகவே இருப்பது சரியன்று என்பதை நாம் மறுப்பதற்கில்லை. வேலையின் சுமை தாங்க முடியாமல் 1959-ல் மூன்று அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகினர் என்ற செய்தி, அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் பொறுப்புகளைக் குறைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாய் அமைகிறது. கூட்டாட்சிக் குழுவினர் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதைவிட, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது சுவிஸ் குடியரசை மேலும் சிறந்ததாக்கும் என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்படுகிறது. இது போன்ற சீர்திருத்தக் கருத்துகளுக்கு நாட்டில் அதிகம் செல்வாக்கில்லை என்பதை அவர்கள் அரசியல் வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

குழுவின் சிறப்பியல்புகள்

கூட்டாட்சிக் குழுவினை ஆராயும் அறிஞர்கள், அதன் அமைப்பில் மூன்று சிறப்பியல்புகளைக் காண்கின்றனர். முதலாவதாக, சுவிஸ் ஆட்சித்துறை ஒருவர் தலைமையில் அமையாமல், எழுவர் தலைமையில் அமைந்திருப்பது உலக அரசியலில் ஒரு புதுமை. குடியரசு தலைவரோ அல்லது முதலமைச்சரோ ஆட்சித் துறைத் தலைவர்களாய் விளங்கும் இக்காலத்தில், சுவிட்சர்லாந்தில் எழுவர் குழு ஆட்சித்துறையில் தலைமை ஏற்கின்றது. ஏழு பேரில் ஒருவர் பெயரளவுக்குக் குடியரசு தலைவராய்க் கருதப்பட்ட போதிலும், அவையின் மற்ற உறுப்பினர்களை நியமிக்கவோ நீக்கவோ அவருக்கு அதிகாரமில்லை என்பது அறியத்தக்கது. இரண்டாவதாக, கூட்டாட்சிக் குழு, பாராளுமன்றம் சார்புடைய ஆட்சித்துறை (Parliamentary Executive), பாராளுமன்றம் சார்பற்ற ஆட்சித்துறை (Non-Parliamentary Executive) ஆகிய இரு வகைகளின் இயல்புகளையும் ஒருங்கிணைத்து இயங்குவது மற்றொரு புதுமை. குழுவின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதாலும், வழக்கப்படி பாராளுமன்றத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவதாலும், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டு அதன் மன்றங்களில் மசோதாக்களைத் தோற்றுவித்துச் சட்டமாக்குவதாலும், அந்தச் சட்டங்களைச் செயல்படுத்துவதாலும், கூட்டாட்சிக் குழுவைப் பாராளுமன்றம் சார்புடைய ஆட்சித்துறை என அழைக்கலாம். குழுவின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாய்த் தொடர்ந்து நீடிப்பதில்லையாதலாலும், அவர்கள் அதன் மன்றங்களில் அமர்ந்திருந்தபோதிலும் அவற்றில் வாக்களிக்க முடிவதில்லையாதலாலும், அவர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பற்றவர்களாய் இருப்பதாலும், கூட்டாட்சிக் குழுவைப் பாராளுமன்றம் சார்பற்ற ஆட்சித்துறை என அழைக்கலாம். அமெரிக்க ஆட்சி முறையின் பண்பான நிலையான தன்மையும் (stability), பிரிட்டிஷ் ஆட்சி முறையின் பண்பான பொறுப்புள்ள தன்மையும் (responsibility) சுவிஸ் கூட்டாட்சியில் காணப்படுவதாய்க் கருதப்படுகிறது. பிரிட்டனில் அமைச்சரவையின் மசோதாக்கள் பாராளுமன்றத்தில் தோற்றால், அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகிக்கொள்வது வழக்கம். ஆனால், சுவிட்சர்லாந்தில் பாராளுமன்றமோ அல்லது மக்களோ அரசாங்கத்தின் கருத்துகளை நிராகரித்தால், அமைச்சரவை பதவியிலிருந்து விலகுவதில்லை. அதற்கு மாறாக அது தன் கருத்தை மாற்றி அமைத்துக்கொண்டு தொடர்ந்து செயல்படும். மூன்றாவதாக, சுவிஸ் அமைச்சரவை கட்சிக் கண்ணோட்டத்தோடு அமைக்கப்படுவதில்லை என்பது மேலுமொரு புதுமை. மற்ற நாடுகளில் பாராளுமன்றத்தில் பெரும்

பான்மை இடங்களைப் பெறும் கட்சியின் உறுப்பினர்களே அமைச்சர்களாய்ப் பொறுப்பேற்பது வழக்கம். ஆனல் சுவிட்சர்லாந்தில் பாராளுமன்றத்திலிருக்கும் பெருங் கட்சிகள் அனைத்திலிருந்தும் அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒருவர் அமைச்சராவதற்கு அவருடைய அரசியல் கட்சி முக்கியமன்று என்பதும், அவருடைய ஆட்சித்துறை அனுபவமும், அமைதியாகவும் திறமையாகவும் செயல்படக்கூடிய பண்புமே முக்கியமானவை என்பதும் சுவிஸ் மக்களின் எண்ணங்களாகும். கட்சி அரசியலின் அடிப்படையில் அமையாத ஒரே ஆட்சித்துறை சுவிஸ் ஆட்சித்துறையாய் இருப்பது அதற்கு ஒரு தனித்தன்மையைத் தருகிறது.

3. கூட்டாட்சிப் பாராளுமன்றம்
(The Federal Assembly)

[முன்னுரை — மாநிலங்கள் சபை — தேசியச் சபை — அதிகாரங்கள்—பாராளுமன்றத்தின் இன்றைய நிலை.]

முன்னுரை

சுவிஸ் அரசியலமைப்பு அமெரிக்கக் காங்கிரசை ஒத்த தேசியப் பாராளுமன்றம் ஒன்றை நிறுவியுள்ளது; அது கூட்டாட்சிப் பேரவை (Federal Assembly) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. பாராளுமன்றத்தின் மேல்சபை 'மாநிலங்கள் சபை' (Council of States) என்றும், கீழ்ச்சபை 'தேசியச் சபை' (National Council) என்றும் அழைக்கப்படுகின்றன. மேல்சபை மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதாகவும், கீழ்ச்சபை மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதாகவும் கருதப்படுகிறது. கூட்டரசின் சார்பில் அதன் அதிகாரங்களைச் செயல்படுத்தும் உரிமையை அரசியலமைப்புப் பாராளுமன்றத்திற்கே வழங்குகிறது. நாட்டின் மிக உயர்ந்த நிறுவனம் என மதிக்கப்படும் பெருமை இப் பாராளுமன்றத்தையே சாரும்.

மாநிலங்கள் சபை

அமெரிக்க செனட் சபையைப் போலத் தோற்றமளிக்கும் சுவிஸ் மாநிலங்கள் சபை, 44 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறு சபையாகும். சுவிட்சர்லாந்தின் 22 மாநிலங்களில் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு உறுப்பினர்கள் மாநிலங்கள் சபைக்கு அனுப்பப்படுகின்றனர். பத்தொன்பது முழு மாநிலங்களில் ஒவ்வொன்றும் இரண்டு உறுப்பினர்களையும், ஆறு அரை மாநிலங்களில் ஒவ்வொன்றும் ஓர் உறுப்பினரையும் அனுப்புகின்றன. 9,25,000 மக்களைக் கொண்ட பெர்ன் மாநிலமும், 32,000 மக்களைக் கொண்ட யூரி (Uri) மாநிலமும், பெரிய மாநிலம் சிறிய

மாநிலம் என்ற வேறுபாடில்லாமல் இரு உறுப்பினர்களை அனுப்புவது, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மேல் சபைகள் அமைக்கப்பட்டிருக்கும் முறையை நினைவூட்டு கிறது. உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை மாநிலங் களால் முடிவு செய்யப்படுவதால், அது மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. பதினெட்டு மாநிலங்களின் உறுப்பினர்கள் வாக் காளர்களால் நேரடியாகவும், நான்கு மாநிலங்களின் உறுப் பினர்கள் அவற்றின் பாராளுமன்றங்களாலும் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். உறுப்பினர்கள் பதவிக்காலமும் மாநிலங்களால் தீர்மானிக்கப்படுவதால், அதுவும் மாநிலத்துக்கு மாநிலம் வேறு படுகிறது. பதினெட்டரை மாநிலங்களில் நான்கு ஆண்டுகட்கும், இரண்டரை மாநிலங்களில் மூன்று ஆண்டுகட்கும், ஒரு மாநிலத் தில் ஓர் ஆண்டிற்குமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். இது போன்று ஒரு சபையின் உறுப்பினர்கள் ஒரே மாதிரியான பதவிக்காலத்திற்கு, ஒரே மாதிரியான தேர்தல் முறைப்படி தேர்ந்தெடுப்பதற்கு வகை செய்யாத அரசிய லமைப்பை, சுவிட்சர்லாந்தைத் தவிர நாம் வேறெங்கும் பார்ப் பதற்கில்லை. உறுப்பினர்களில் பெரும்பாலோர் மீண்டும் மீண்டும் மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது அதற்கு ஒரு நிலையான தன்மையைத் தருகிறது. மாநில அரசியலில் பங்கேற்றுப் பேரும் புகழும் அடைந்தோரே மாநிலங்கள் சபைக்குப் பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், அவர்கள் நல்ல அனுபவமும் ஆற்றலு முள்ளவர்களாய்க் காணப்படுவது இயற்கையே. 1960ஆம் ஆண்டில் மாநிலங்கள் சபையின் உறுப்பினர்களில் ஏறத்தாழப் பாதிப்பேர் டாக்டர் பட்டம் பெற்றோராம். இச் சபையின் உறுப் பினர்களில் பெரும்பாலோர் வயதில் முதிர்ந்தவர்களாய் இருப்ப தால், அவர்கள் பழமையில் பற்றுள்ளவர்களாய் நடந்து, அரசிய லில் ஒரு நிதானமான போக்கை வற்புறுத்துகின்றனர். மேல் சபையில் ஏராளமான வழக்கறிஞர்கள் இடம் பெறுவதால் அதை நாட்டின் 'சட்ட மனச்சான்று' (legal conscience) என அழைப்பது வழக்கம். சுவிஸ் மாநிலங்கள் சபையை அமெரிக்க செனட் சபையோடு ஒப்பிடுவது ஓரளவுக்குப் பொருத்தமாகும். அமெரிக்க செனட் சபைக்கு உரிய அதிகாரிகள் நியமனங்களை அங்கீகரித்தல், உடன்படிக்கைகளை ஏற்றல், குற்றச்சாட்டுகளை விசாரித்தல் போன்ற சிறப்பான அதிகாரங்கள் சுவிஸ் மாநிலங்கள் சபைக்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேசியச் சபை

மாநிலங்கள் சபையைவிட, தேசியச் சபை பெரியதோர் அமைப்பாகும்; அதில் 196 உறுப்பினர்கள் இருக்கின்றனர். மக்கள்

தொகை அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதால் அதில் பெரிய மாநிலங்களிலிருந்து கூடுதலான உறுப்பினர்களும், சிறிய மாநிலங்களிலிருந்து குறைவான உறுப்பினர்களும் இருப்பார்கள். ஒவ்வொரு மாநிலமும் 24,000 மக்களுக்கு ஓர் உறுப்பினர் வீதம் அனுப்புவதால் மிகப் பெரிய மாநிலமான பெர்னிலிருந்து முப்பத்து மூன்று பேரும், மிகச் சிறிய மாநிலமான யூரியிலிருந்து ஒருவரும் தேசியச் சபையில் அங்கம் வகிக்கின்றனர். ஒவ்வொரு மாநிலத்திற்கும், அது முழு மாநில மானாலும் சரி, அரை மாநிலமானாலும் சரி, குறைந்த அளவு ஓர் உறுப்பினரையாவது அனுப்பும் உரிமை உண்டு என அரசிய லமைப்பு அறிவிக்கின்றது. மேல் சபையின் அமைப்பைப் பற்றிய விவரங்களை மாநிலங்கள் முடிவு செய்வது போலல்லாமல், கீழ்ச் சபையின் அமைப்பினைப் பற்றிய விதிகள் நாடு முழுதும் ஒரே மாதிரியாக இருக்கும்வண்ணம் தேசிய அரசியலமைப்பால் நிர்ண யிக்கப்படுகின்றன. எல்லா உறுப்பினர்களும் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பிரிட்டனில் பொது மக்கள் சபை அதன் காலகெடு முடிவதற்கு முன்பாக முதலமைச் சரின் ஆலோசனையின்பேரில் கலைக்கப்படுவதுபோல, சுவிட்சர் லாந்தில் கலைக்க முடியாது. கீழ்ச்சபையின் தேர்தலுக்கு ஒவ்வொரு மாநிலமும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதப்படுகிறது. உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி (proportionate representation) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருபது வயதைத் தாண்டிய ஆண்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டிருக்கிறது. வாட், நியூசேட்டல் (Neuchatel), ஜெனீவா (Geneva) ஆகிய மூன்று மாநிலங்களில் மட்டும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் மற்ற மாநிலங்களும் பெண்களுக்கு, ஆண்களுக்குச் சமமாக வாக்குரிமை வழங்கும் என நம்பப்படுகிறது. மத குருமார்கள் தேசியச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றவர்கள் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. 1848ஆம் ஆண்டின் அரசிய லமைப்புத் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பாக நாட்டில் மத குருமார்கள், குறிப்பாகக் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த வர்கள் கலகங்களுக்குக் காரணமாய் இருந்ததால், அவர்களை அரசியலில் தீவிரமாய் பங்குகொள்வதிலிருந்து அரசியலமைப்பு விலக்கி வைத்திருக்கிறது.

பாராளுமன்றத்தின் இரு சபைகளும் தனித்தனியே ஒவ்வொரு கூட்டத்தொடருக்கும் ஒரு தலைவரையும் ஒரு துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்கும். ஒருவரே அடுத்தடுத்துத் தலைவ ராகவோ, துணைத் தலைவராகவோ தேர்ந்தெடுக்கப்படுவதை அரசியலமைப்புத் தடை செய்கிறது. மேல்சபையின் தலைவர்

ஒவ்வொரு முறையும் ஒரு புதிய மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார். கீழ்ச்சபையின் தலைவர்ப் பதவி, ஜெர்மன் மொழி பேசுவோராலும் பிரெஞ்சு மொழி பேசுவோராலும் மாறி மாறி வகிக்கப்படுவதே மரபு. இரு சபைகளும் சிறு சபைகளாய் இருப்பதும், உறுப்பினர்கள் கடமை உணர்ச்சியோடும் பண்போடும் நடந்துகொள்வதும், சபைத் தலைவர்களின் வேலையை எளிதாக்குகிறது. மசோதாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் சபையில் சமமான வாக்குகள் பதிவாகும் சமயங்களில் மட்டும் தலைவர் தன் வாக்கினை அளித்து, மசோதாவின் வெற்றி தோல்வியை முடிவு செய்வார். பாராளுமன்றம் ஆண்டுக்கு நான்கு முறை (மார்ச்சு, ஜூன், செப்டம்பர், டிசம்பர்) கூடும்பொழுது, ஒவ்வொரு முறையும் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கூட்டம் நடைபெறும். சில சமயங்களில் அவசரக் கூட்டங்கள் கூட்டப் படுவதுமுண்டு. கூட்டாட்சிக் குழுவோ, அல்லது தேசியச் சபையின் கால்பங்கு உறுப்பினர்களோ, அல்லது ஐந்து மாநிலங்களோ கேட்டுக்கொள்வதின்பேரில் அவசரகாலக் கூட்டங்கள் கூட்டப் படும். இதுவரை மாநிலங்கள் அவசரகாலக் கூட்டங்களுக்குக் கோரியதில்லை; தேசியச் சபையும் 1891ஆம் ஆண்டில் ஒரே ஒரு முறைமட்டும் தன் உரிமையைப் பயன்படுத்தியது. இரு சபை களிலும் அதனதன் கூடுதல் எண்ணிக்கையில் பாதிப்பேருக்கு மேலானவர் (மேல் சபையில் 23 பேரும், கீழ்ச்சபையில் 99 பேரும்) வந்திருந்தால்தான் சபையின் நடவடிக்கைகளைத் தொடங்க முடியும். மற்றப் பாராளுமன்றங்களைப் போன்று சுவிஸ் பாராளுமன்றத்திலும் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாநிலங்கள் சபையில் பத்து நிரந்தரக் குழுக்களும், தேசியச் சபையில் பன்னிரண்டு நிரந்தரக் குழுக்களும் இருக்கின்றன. குழுக்கள் அனைத்திலும் எல்லாப் பெரும் அரசியல் கட்சிகளுக்கும், மொழி இனங்களுக்கும் இடமளிக்கப்படும்.

இரு சபைகளின் உறுப்பினர்களுக்கும் பயணப்படி தவிர, தலைக்கு நாளொன்றுக்கு 70 பிராங்குகள் செலவுத் தொகைக் காகத் தரப்படுகிறது. மேல்சபை உறுப்பினர்கள் அவரவர் மாநிலங்களிலிருந்தும், கீழ்ச்சபை உறுப்பினர்கள் தேசிய நிதியிலிருந்தும் தங்களுக்குச் சேர வேண்டிய தொகையைப் பெறுவார்கள். சுவிட்சர்லாந்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற நாடுகளைப்போல மாதச் சம்பளம் அளிக்கப் படுவதில்லை என்பது அறியத்தக்கது. உறுப்பினர்கள் முழு அளவில் பேச்சுரிமை அனுபவிக்கின்றனர். பாராளுமன்றத்தில் பதவி வகிக்கும் காலத்தில் அவர்களுக்கு இராணுவச் சேவையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இரு சபைகளின் உறுப்பினர்களும் பிறர்

போதனைகளை ஏற்காமல் சட்டமன்றத்தில் வாக்களிக்க வேண்டும் என அரசியலமைப்புக் கூறுகிறது; பிரதிநிதிகள் அவர்கள் மனச் சான்றின்படி வாக்களித்தலே முறையாகும் என்ற கருத்து நல்ல கருத்தாகும். சுவிஸ் அரசியலமைப்பு இரு சபைகளுக்குமிடையே எந்தவிதமான ஏற்றதாழ்வும் காட்டவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பாராளுமன்றத்தின் செயல்கள் அனைத்திற்கும் இருசபை களின் இசைவும் இன்றியமையாததாகும். உலகில் மிகச் சில நாடுகளில்மட்டுமே பாராளுமன்றத்தின் இரு மன்றங்களும் ஒத்த வலுவுள்ள மன்றங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதிகாரங்கள்

அரசியலமைப்பு, மக்களுக்கும் மாநிலங்களுக்கும் ஒதுக்கும் உரிமைகளைத் தவிர, நாட்டின் தலைமை அதிகாரங்கள் அனைத் தையும் தேசியப் பாராளுமன்றத்தின் உரிமையாக்குகிறது. பாராளுமன்றத்தின் சட்டங்களையும் தீர்மானங்களையும் செல்லாது எனக் கூறி, அவற்றை நிறைவேற்ற மறுக்கும் அதிகாரம் எந்த நிறுவனத்திற்கும் தரப்படவில்லை. வாக்காளர்களின் விருப்பத் திற்கு ஏற்ற வகையில் பாராளுமன்றம் நடந்துகொள்ளும் வரை அதனுடைய ஆணைகள் நாடு முழுதும் தங்கு தடையின்றி ஏற்றுக் கொள்ளப்படும். அரசியலமைப்பை ஆக்கியோர், மாநிலங்களின் பிரதிநிதிகளும் மக்களின் பிரதிநிதிகளும் அடங்கிய பாராளு மன்றமே அரசாங்கத்தின் அச்சாக இயங்க வேண்டுமென்று விரும்பினார்கள்.

கூட்டாட்சி அலுவல் பற்றிய சட்டங்கள் அனைத்தும் பாராளு மன்றத்தால் இயற்றப்படுகின்றன. பெரும்பாலான வாக்காளர் களின் இசைவோடு பாராளுமன்றம் நாட்டின் அரசியலமைப்பைத் திருத்தி அமைக்கலாம். வருடாந்திர வரவு செலவுத் திட்டப் பட்டியலை ஏற்பதும், அரசின் வரவு செலவுக் கணக்குகளை அங்கீ கரிப்பதும், கடன்கள் வாங்க இசைவளிப்பதும், அதிகாரிகளின் ஊதியங்களை நிர்ணயம் செய்வதும் பாராளுமன்றத்தின் பொறுப்பு களில் அடங்கும். அரசாங்கத்தின் செலவுகளைத் தணிக்கை செய்யப் பாராளுமன்றத்தில் நிதிக் குழு (Financial Delegation) ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழுவில் கீழ்ச்சபையிலிருந்து மூன்று பேரும், மேல் சபையிலிருந்து மூன்று பேரும் இடம் பெறுகின்றனர். சுவிட்சர்லாந்து அயல் நாடுகளோடு செய்துகொள்ளும் உடன் படிக்கைகள் பாராளுமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டால்தான் செல்லத்தக்கதாகும். மாநிலங்கள் அவைகளுக்கிடையே செய்து கொள்ளும் ஒப்பந்தங்களும், அவை அயல் நாடுகளோடு செய்து கொள்ளும் ஒப்பந்தங்களும், கூட்டாட்சிக் குழுவினாலோ அல்லது

ஏதாவதொரு மாநிலத்திலோ ஆட்சேபிக்கப்பட்டால், அவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். பாராளுமன்றமே நாட்டின் பாதுகாப்புக்குத் தகுந்த செயல்களைச் செய்து, அதன் சுதந்திரத்தையும் நடுநிலைமைக் கொள்கையும் காக்க வேண்டும். போர் தொடுப்பதற்கும், சமாதானம் செய்துகொள்வதற்கும் அதன் இணக்கம் தேவையாகும். கூட்டாட்சியின் அரசியலமைப்பும், மாநிலங்களின் அரசியலமைப்புகளும் செம்மையாகச் செயல்படுகின்றனவா என்றும், நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலவுகின்றனவா என்றும் பாராளுமன்றமே பார்த்துக் கொள்ளும். மேலும், அது கூட்டாட்சி நிருவாகத்தைக் கண்காணித்து, படைத்துறையையும் மேற்பார்வை செய்யும். கூட்டாட்சிக் குழு உறுப்பினர்கள், கூட்டாட்சி நீதிபதிகள், ஏடகத் தலைவர் (Chancellor), படைத் தலைவர் ஆகிய அதிகாரிகள் பாராளுமன்றத்தால்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கூட்டாட்சிக் குழுவின் தலைவர், துணைத்தலைவர், கூட்டாட்சி நீதிமன்றத்தின் தலைவர், துணைத்தலைவர், ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதும் பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். பாராளுமன்றத்தின் நீதித்துறை அதிகாரங்கள் தற்காலத்தில் மிகவும் குறைந்துவிட்டனவாகக் கருதப்படுகின்றன. கூட்டாட்சி நிறுவனங்களுக்கிடையே அதிகார வரம்புபற்றித் தகராறுகள் எழுமானால் அவற்றைப் பாராளுமன்றம் தீர்த்துவைக்கும். மாநிலங்களால் தேசியச் சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகியவைகளுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் குற்றச்சாட்டுகளை விசாரித்து முடிவுசெய்யும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு உண்டு. கூட்டாட்சி நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டோரையும் படைச் சட்டத்தின்கீழ் மரண தண்டனை அளிக்கப்பட்டோரையும் மன்னிக்கும் உரிமை பாராளுமன்றத்தின் சிறப்பான உரிமையாகும். மற்ற நாடுகளில் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் நாட்டின் தலைவரின் உரிமையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டாட்சி அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல், குற்ற மன்னிப்பு வழங்குதல், அரசாங்க நிறுவனங்களுக்கிடையே பூசல்களைத் தீர்த்தல் ஆகிய மூன்று செயல்களுக்குமட்டும் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒன்றாகக்கூடும்; மற்றச் செயல்கள் அனைத்திற்கும் இரு சபைகளும் தனித்தனியே அமரும். தேசியச் சபையின் தலைவர் இணைப்புக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். 30,000 வாக்காளர்களோ அல்லது எட்டு மாநிலங்களோ வேண்டினால், பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் குடியொப்பத்திற்கு விடப்படும். அதேபோன்று வெளிநாடுகளோடு பதினைந்து ஆண்டுகட்குமேல் நீடிக்குமாறு அல்லது காலகெடு இன்றிச் செய்து

கொள்ளப்படும் உடன்படிக்கைகளும், மாநிலங்களாலோ அல்லது மக்களாலோ விரும்பப்பட்டால் குடியொப்பத்தின் முடிவிற்கு விடப்படும்.

பாராளுமன்றத்தின் இன்றைய நிலை

சுவிஸ் பாராளுமன்றம் தற்காலத்தில் இயங்குகிற விதத்தைக் குறித்து மக்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக எண்ணுவதற்கு இடமில்லை. மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிப்பதற்கு ஒரு நல்ல கருத்தரங்காகவும், நிதானமாகவும் அமைதியாகவும் செயலாற்றும் நிறுவனமாகவும், நல்ல அனுபவமும் ஆற்றலுமுள்ள பெரியோரைக் கொண்டிருக்கும் மன்றமாகவும் அது மக்களால் போற்றப்படுகிறது என்பதில் ஐயமில்லை. எனினும் அரசிய லமைப்பின் தந்தைகள் எதிர்பார்த்த அளவுக்கு அது நாட்டில் உயர்ந்த இடத்தைப் பெறவில்லை என்ற கருத்தில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. முதலாவதாக, நேரடி மக்களாட்சி முறைகளான குடியொப்பம், தொடக்க உரிமை போன்றவை பாராளுமன்றத்தின் பொறுப்புணர்ச்சியைக் குறைப்ப தாகக் கூறப்படுகிறது. அதன் சட்டங்கள் குடியொப்பத்திற்கு விடப்படலாம் என்பதும், வாக்காளர்களின் தீர்ப்பே இறுதியான தீர்ப்பாய் அமையும் என்பதும், உறுப்பினர்களிடையே ஒரு விதமான தயக்கத்தைத் தோற்றுவிக்கிறதாம். இரண்டா வதாக, பாராளுமன்றம் கூட்டாட்சிக் குழுவின் தலைமையை ஏற்று அதன் சொற்படி நடப்பது, முந்தியதை வலுவற்றதாகவும் பிந்தியதை வலுவுள்ளதாகவும் ஆக்கி இருக்கிறது. பாராளு மன்றம் தான் செய்யவேண்டிய பல காரியங்களைத் தானே சிந்தித்துச் செய்யாமல், அமைச்சர்களின் ஆய்வுக்கு அவற்றை விட்டு அவர்களின் அறிவுரைப்படி நடப்பது, பாராளுமன்றத்தின் மதிப்பை ஓரளவுக்குக் குறைத்துக் காட்டுகிறது. 1848ஆம் ஆண்டில் அரசியலமைப்பு எழுதப்பட்ட சமயத்திலும், அதன் பிறகு 1874ஆம் ஆண்டில் அது திருத்தி அமைக்கப்பட்ட சமயத் திலும் அரசியல் அறிஞர்கள் எந்தவிதமான பாராளுமன்றத்தை எதிர்பார்த்தார்களோ அந்தவிதமான பாராளுமன்றம் தற்சமயம் சுவிட்சர்லாந்தில் இல்லை என்பதே தற்கால ஆசிரியர் களின் கருத்தாகும்.

4. சட்டமியற்றும் முறை
(The Process of Lawmaking)

[மசோதாக்களைத் தோற்றுவித்தல்—சபைகளில் மசோதாக்கள்—கருத்து வேறுபாடுகளை நீக்குதல்.]

மசோதாக்களைத் தோற்றுவித்தல்

சுவிஸ் பாராளுமன்றத்தில் மசோதாக்களைத் தோற்றுவிக்கும் உரிமையை அரசியலமைப்பு, மாநிலங்கள் சபை உறுப்பினர்களுக்கும், தேசியச் சபை உறுப்பினர்களுக்கும், முழு மாநிலங்களுக்கும், அரை மாநிலங்களுக்கும், கூட்டாட்சிக் குழு உறுப்பினர்களுக்கும் அளிக்கிறது. பெரும்பாலான மசோதாக்கள் கூட்டாட்சிக் குழுவால் தோற்றுவிக்கப்படுவதுதான் மரபு. அரசாங்கம் சரிவரச் செயல்பட ஒரு புதிய சட்டம் தேவை என்று அமைச்சரவைக்குத் தோன்றினலோ, அல்லது மக்களால் ஒரு புதிய சட்டம் விரும்பப்படுகிறது என்று அது உணர்ந்தாலோ, அது ஒரு மசோதாவை வரைந்து அதைப் பாராளுமன்றத்தில் முன்மொழியும். சில சமயங்களில் பாராளுமன்றத்தின் சபைகள் தீர்மானங்கள் இயற்றி, சில மசோதாக்களைத் தோற்றுவிக்குமாறு அமைச்சரவையைக் கேட்டுக்கொள்வதுண்டு. அவ்வகையான தீர்மானங்களை அமைச்சரவை கட்டாயமாக ஏற்று, அவற்ருல் வேண்டப்படும் மசோதாக்களைத் தயார் செய்து பாராளுமன்றத்தில் தோற்றுவிப்பது அதன் கடமை அன்று எனினும், பொதுவாகப் பாராளுமன்றத்தின் விருப்பத்தை அமைச்சரவை நிறைவேற்ற முயல்வதே தற்கால வழக்கம். கூட்டாட்சிக் குழு ஒவ்வொரு மசோதாவையும் தோற்றுவிக்கும்பொழுது, அதைப் பற்றிய தன் கருத்துகள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கும்.

சபைகளில் மசோதாக்கள்

கூட்டாட்சிக் குழு அது வரைந்த மசோதாக்களை இரு சபைகளின் தலைவர்களுக்கும் அனுப்பும். இரு சபைகளின் தலைவர்

களும் ஒன்று கூடி எந்தெந்த மசோதாக்கள் எந்தெந்தச் சபையில் தோற்றுவிக்கப்பட்டு விவாதிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்வார்கள். ஒவ்வொரு சபைக்கும் ஒதுக்கப்பட்ட மசோதாக்கள், அதற்குரிய குழுக்களுக்கு அனுப்பப்படும். குழுக்களின் மிகுதியான வேலை பாராளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் நடைபெறும். நீதி, நிருவாகம், சாராயம், விண்ணப்பங்கள், குற்ற மன்னிப்புகள், இரயிலில் பயணச் சலுகைகள், கூட்டாட்சி இரயில் பாதைகள், சுங்க வரிகள், அயல்நாட்டு அலுவல்கள், படைத்துறை ஆகிய பொருள்கள்பற்றி ஆராய மேல்சபையிலும், கீழ்ச்சபையிலும் தனித்தனி நிரந்தரக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குழுக்கள் தலைநகரில் கூடுவதோடு மற்ற நகரங்களிலும் கூடுவதுண்டு; இம் முறையினால் எல்லா நகரங்களும் தேசிய அலுவல்களில் பங்கு கொள்ளும் உணர்வைப் பெறுகின்றன என்று கூறப்படுகின்றது. குழுவிலிருந்து வெளிவரும் மசோதா தாய்ச் சபையால் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்வதா ஏற்றுக்கொள்வதில்லையா என்று முடிவு செய்யப்படுகிறது. சபை மசோதாவை ஏற்றுக்கொண்டால், அடுத்தாற்போல் அது ஒவ்வோர் அங்கமாக விவாதிக்கப்பட்டு உறுப்பினர்களிடையே வாக்களிப்புக்கு விடப்படும். சபையால் இம் முறையும் மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது அடுத்த சபைக்கு அனுப்பப்படும். முதல் சபையில் மசோதா எந்தெந்தக் கட்டங்களைக் கடந்ததோ, அதே போன்று இரண்டாவது சபையிலும் கடந்தாகவேண்டும். சில சமயங்களில் ஒரு மசோதா ஒரே சமயத்தில் இரு சபைகளாலும் விவாதிக்கப் படுவதுண்டு.

கருத்து வேறுபாடுகளை நீக்குதல்

1902ஆம் ஆண்டின் இரு மன்றங்களுக்கிடையேயான தொடர்புகள் சட்டம் (Law on the Relations between Councils) இரு சபைகளுக்கிடையே கருத்து வேறுபாடு எழுமானால் அதை எப்படித் தீர்ப்பது என்பதை விவரிக்கிறது. ஒரு சபையின் மசோதாவை மறு சபை ஏற்க மறுத்தால், மசோதா மீண்டும் முதல் சபைக்கே அனுப்பப்படும். சபைகளுக்கிடையே உடன்பாடு ஏற்படவில்லை எனின், இரு சபைகளின் உறுப்பினர்களில் சிலரைக் கொண்ட சமரசக்குழு அவைகளுக்கிடையே கருத்து வேறுபாட்டை நீக்கிச் சமரசம் செய்துவைக்க முயலும். அதன் முயற்சியும் பயனில்லாமல் போனால் மசோதா கைவிடப்படும். பெரும்பாலும் இரு சபைகளும் ஒத்துப் போவதுதான் இக் கால வழக்கம்; மேலும், கருத்து வேறுபாடு காரணமாக மசோதா கைவிடப்படும்

நிகழ்ச்சி பத்து ஆண்டுகட்கு ஒருமுறை கூட நிகழாது எனக் கூறப் படுகிறது. இரு சபைகளாலும் ஒத்த உருவில் அங்கீகரிக்கப்படும் மசோதாக்கள், இரு சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரின் கையெழுத்துக்களைப் பெற்றுச் சட்டங்களாக வெளியிடப்படும். சட்டம் இயற்றப்பட்ட 90 நாள்களுக்குள், வாக்காளர்கள் அதைக் குடியொப்பத்திற்கு விடவேண்டும் எனக் கேட்கலாம். குடியொப்பத்திற்கு விடப்படும் சட்டங்கள் மக்கள் தீர்ப்புப்படி முடிவு செய்யப்படும்.

5. கூட்டாட்சி நீதிமன்றம்

(The Federal Tribunal)

[முன்னுரை—அமைப்பு—தலைமை நீதிமன்றத்தின் பிரிவுகள்—அதிகாரங்கள்—அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தோடு ஒப்பிடுதல்.]

முன்னுரை

சுவிட்சர்லாந்தில் தேசிய அரசின் சார்பில் இயங்கும் ஒரே நீதிமன்றம் அந்நாட்டின் தலைமை நீதிமன்றமான கூட்டாட்சி நீதிமன்றமாகும். 1848ஆம் ஆண்டின் அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட தலைமை நீதிமன்றம், ஒரு தலைமை நீதிமன்றத்திற் குரிய சிறப்பையும் செல்வாக்கையும் பெறுமல் இயங்கி வந்ததைக் கண்ட தலைவர்கள், 1874ஆம் ஆண்டில் அரசியலமைப்பின் எல்லா அங்கங்களையும் திருத்தி அமைத்தபொழுது, தலைமை நீதிமன்றத்தையும் மாற்றி அமைத்தனர். சட்டத்துறைக்கும் ஆட்சித்துறைக்கும் நீதித்துறை அடங்கிக் கிடந்த நிலையை மாற்றி, முதல் இரண்டு துறைகளுக்குள்ளது போன்ற முக்கியத்துவத்தை மூன்ருவது துறைக்கும் அளித்த பெருமை 1874ஆம் ஆண்டின் அரசியலமைப்பைச் சாரும். 1874ஆம் ஆண்டிற்குப் பிறகும் இத் தலைமை நீதிமன்றத்தின் அதிகாரங்கள் வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றன.

அமைப்பு

இன்றைய கூட்டாட்சி நீதிமன்றம், 26 நீதிபதிகளையும், 12 மாற்ருள் நீதிபதிகளையும் (alternates) கொண்ட ஒரு பெரிய நீதிமன்றமாகக் காட்சியளிக்கிறது. நீதிபதிகளும் மாற்ருள் நீதிபதிகளும் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் அடங்கிய இணைப்புக் கூட்டம் ஒன்ருல் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். அவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். நீதிபதிகளை அவர்கள் பதவியிலிருக்க விரும்புகிற காலம் வரையிலும் மீண்டும் மீண்டும்

தேர்ந்தெடுப்பது சுவிஸ் வழக்கம். நீதிமன்றத்தில் இத்தனை வயதிற்கு மேற்பட்டவர்கள் நீதிபதிகளாக அமரக்கூடாது என்று எந்தச் சட்டமும் கூறுவிட்டாலும், எழுபது வயதை எட்டிய வர்கள் பதவியிலிருந்து விலகிக்கொள்வதே மரபு. நீதிபதிகளா வதற்குரிய தனித் தகுதிகள் எதுவும் அரசியலமைப்பில் குறிப்பிடப் படவில்லை. தேசியச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குரிய தகுதிகளைப் பெற்றிருக்கும் குடிமக்களில் யாரும் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள், கூட்டாட்சிக் குழு உறுப்பினர்கள், இவ்விருவகை உறுப்பினர் களால் நியமிக்கப்படும் கூட்டாட்சி அதிகாரிகள் ஆகியோர் நீதிபதி களாக ஆகமுடியாது. அரசியலமைப்பு நீதிபதிகளுக்குரிய தனித் தகுதிகளைப்பற்றிக் கூறுவிட்டாலும், பாராளுமன்றமானது புகழ் பெற்ற வழக்கறிஞர்கள், மாநில நீதிபதிகள், சட்டப் பேராசிரியர்கள், தலைமை நீதிமன்ற அதிகாரிகள் போன்றோரையே நீதிபதிகளாகத் தேர்ந்தெடுப்பது குறிப்பிடத்தக்கது. தேசிய மொழிகள் அனைத்திற்கும் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமென்று அரசியலமைப்பு வற்புறுத்துகிறது. நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும், சமயப் பிரிவுகளுக்கும் நீதிமன்றத்தில் இடமளிப்பது தலைமை நீதிமன்றத்தை உண்மை யாகவே ஒரு தேசிய அமைப்பாக ஆக்குகிறது. நீதிபதிகள் மத்திய மாநில அரசுகளில் வேறு எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாதென்றும், மற்றத் தொழிலோ வியாபாரமோ செய்யக் கூடாதென்றும், மேலும் நெருங்கிய உறுப்பினர்கள் நீதிபதிகளாய் இருக்கக் கூடாதென்றும், சமீபகாலச் சட்டம் ஒன்று கூறுகிறது. நீதிபதிகள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 50,000 பிராங்குகள் ஊதியம் வழங்கப்படுகிறது. தலைமை நீதிபதி 3,600 பிராங்குகளும், துணைத் தலைமை நீதிபதி 2,400 பிராங்குகளும் அதிகப்படி ஊதியமாய் பெறுகின்றனர். மாற்றுள் நீதிபதிகள் வேலைக்கு அழைக்கப்பட்ட காலத்தில் மட்டும், நாளொன்றுக்கு இவ்வளவு என்ற கணக்கில் ஊதியம் பெறுவார்கள். லாசான் (Laussanne) நகரே நீதிமன்றம் இயங்கும் இடமாதலால், நீதிபதிகள் அனைவரும் அங்கேயே குடியிருக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது.

தலைமை நீதிமன்றத்தின் பிரிவுகள்

கூட்டாட்சி நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும், துணைத் தலைமை நீதிபதியையும் பாராளுமன்றம் இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கிறது. நீதிமன்றத்தின் அலுவல்களைப் பொதுவாகக் கண்காணிப்பதும், அதன் ஊழியர்களின் வேலையை மேற்பார்வை செய்வதும், தலைமை நீதிபதியின் பொறுப்பாகும்.

நீதிமன்றத்தின் செயலாளர்கள், எழுத்தர்கள் ஆகியோரின் எண்ணிக்கையைப் பாராளுமன்றம் நிர்ணயித்தாலும், அவர்களை நியமிப்பதும் அவரவர்க்குரிய பணிகளை ஒதுக்குவதும் நீதிமன்றத்தின் உரிமையாகும். தலைமை நீதிமன்றம் பல பிரிவுகளாகப் பிரிந்து இயங்குகிறது. ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட அரசியலமைப்புச் சட்ட நீதிமன்றமும் (Chamber of Constitutional Law), ஐந்து நீதிபதிகளைக் கொண்ட ஆட்சித்துறைச் சட்ட நீதிமன்றமும் (Chamber of Administrative Law), ஒவ்வொன்றிலும் ஆறு நீதிபதிகளைக் கொண்ட இரு சிவில் சட்ட நீதிமன்றங்களும் (Civil Law Courts), ஐந்து நீதிபதிகளைக் கொண்ட மேல் வழக்குக் குற்றவியல் நீதிமன்றமும் (Court of Criminal Appeals), தலைமை நீதிமன்றத்தின் முக்கியமான பிரிவுகளாகும். தலைமை நீதிமன்றத்தின் 26 நீதிபதிகளும் சில சமயங்களில் ஒன்றாக அமர்வதுண்டு. அதன் பிரிவுகளாக இயங்கும் நீதிமன்றங்களுக்கிடையே அவற்றின் அதிகார எல்லையைப் பற்றி எழும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவைக்கும்பொழுதும், நீதிமன்றம் இயங்க வேண்டிய முறை குறித்து விதிகளை அமைக்கும்பொழுதும், நிருவாகம் பற்றிய தீர்ப்புகளை வழங்கும்பொழுதும், தலைமை நீதிமன்றத்தின் எல்லா நீதிபதிகளும் ஒன்றாக அமர்வார்கள். வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளில் பெரும்பான்மையோரின் கருத்தே நீதிமன்றத்தின் கருத்தாய் அறிவிக்கப்படும். தீர்ப்புகள் நீதிபதிகளால் எழுதப்படுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது. விசாரணை முடிந்த பிறகு வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்தைக் கூற, நீதிமன்றத்தின் எழுத்தர் அக் கருத்துகளை ஒன்று திரட்டி, அவற்றின் அடிப்படையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிப்பார். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 2,000 வழக்குகள் தலைமை நீதிமன்றத்தின் ஆய்வுக்கு வருகின்றன என்றும், அவற்றில் அரசியலமைப்பு வழக்குகளே அதிகமானவை என்றும் கூறப்படுகிறது.

அதிகாரங்கள்

நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றமாக இருக்கும் தலைமை நீதிமன்றத்தின் முன் பலவிதமான வழக்குகள் வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை மாநில நீதிமன்றங்களிலிருந்து முறையீடுகளாகத் தலைமை நீதிமன்றத்திற்கு வருவனவாகும். (1) கூட்டாட்சிக்கும் மாநிலங்களுக்கிடையேயும், (2) ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்குமிடையேயும், (3) 8,000 பிராங்குகளுக்கு மேற்பட்ட தொகையைப் பொறுத்து மாநிலங்களுக்கும் குடிமக்களுக்கிடையேயும், (4) 8,000 பிராங்குகளுக்கு மேற்பட்ட தொகையைப் பொறுத்துக் கூட்டாட்சிக்கும் குடிமக்க

ளுக்குமிடையேயும், (5) 10,000 பிராங்குகளுக்கு மேற்பட்ட தொகையைப் பொறுத்து ஒரு குடிமகனுக்கும் மற்ருெரு குடிமகனுக்குமிடையேயும் (வாதி, பிரதிவாதி இருவரும் விரும்பினுல்) எழும் சிவில் வழக்குகள் எடுத்த எடுப்பிலேயே தலைமை நீதிமன்றத்தில் தொடரப்படலாம். இராசத் துரோகம், புரட்சி, சர்வ தேசச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள், தேசிய அரசு தலையிட வேண்டிவரும் கலகச் செயல்கள், கூட்டாட்சிக்கு எதிரான குற்றங்கள் ஆகிய குற்றவியல் வழக்குகள் தலைமை நீதிமன்றத்தில் மட்டுமே தொடரப்படலாம்.

சுவிட்சர்லாந்தில் நீதி நிருவாகப் பொறுப்புகள் அனைத்தும் நீதிமன்றத்திடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதற்கில்லை. கூட்டாட்சிக் குழுவும், தேசியப் பாராளுமன்றமும் சில துறைகளில் நீதி நிருவாகப் பணிகளை மேற்கொள்ளுகின்றன. நிருவாகத்துறை ஒன்றின் முடிவுக்கு எதிராகவோ, இரயில் பாதை நிறுவனத்தின் முடிவுக்கு எதிராகவோ முறையிட்டுக் கொள்ள விரும்புவோர் கூட்டாட்சிக் குழுவிற்கே முறையிட்டுக் கொள்ள வேண்டும். ஜெசூட்டுகள் (Jesuits) மீதான தடை, தொடக்கக்கல்வி, இடுகாடுகள், போர்ப் பயிற்சிக்கெனத் தரப்படும் இலவசப் பொருள்கள் ஆகியவை பற்றி மாநிலங்களின் செயல்களுக்கு எதிராக முறையிட்டுக்கொள்ள விரும்புவோர் கூட்டாட்சிக் குழுவிற்கே முறையிட்டுக்கொள்ள வேண்டும். பொதுச் சட்டம், ஆட்சித்துறைச் சட்டம் ஆகியவைபற்றிக் கூட்டாட்சிக் குழுவின் தீர்ப்புக்கு எதிராக மனுச் செய்துகொள்ள விழைவோர், தேசியப் பாராளுமன்றத்திற்கு மனுச் செய்து கொள்ள வேண்டுமாம்.

அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தோடு ஒப்பிடுதல்

அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தைப்போல சுவிஸ் தலைமை நீதிமன்றமும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கிறது. தேசிய அரசியலமைப்பும் மாநில அரசியலமைப்புகளும் மக்களுக்கு உறுதி கூறும் உரிமைகள் எந்த அரசாலும் மறுக்கப்படாமல் பார்த்துக்கொள்வது அதன் கடமையாகும். தலைமை நீதிமன்றம் மாநில அரசுகளின் செயல்களிலிருந்து மட்டும் மக்களின் உரிமைகளைக் காக்க முடியுமே ஒழிய, மத்திய அரசின் செயல்களிலிருந்து காக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்புக்கு முரணனவையாய்த் தோன்றும் சட்டங்களை, அவை மத்திய அரசின் சட்டங்களாய் இருந்தாலும் சரி, மாநில அரசுகளின் சட்டங்களாய் இருந்தாலும் சரி, செல்லாதவை என அறிவிக்கும் சிறப்பான அதிகா

ரத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால், சுவிட்சர்லாந்தில் மாநில அரசுகளின் சட்டங்களை மாத்திரமே செல்லாதவை எனத் தலைமை நீதிமன்றம் அறிவிக்க முடியும். மத்திய அரசின் சட்டங்களை அது நெருங்க முடியாது.

1874ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்ட சுவிஸ் தலைமை நீதிமன்றம், கடந்த நூறு ஆண்டுகளில் சிறிது சிறிதாக வளர்ந்து, இன்று நல்ல வலுவும் செல்வாக்குமுள்ள நிலையை அடைந்திருக்கிறது. சிலர் அதை அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தோடு ஒப்பிட்டு, அதுபோன்று சிறந்து விளங்கவில்லை என எண்ணுகின்றனர். சுவிஸ் தலைமை நீதிமன்றம் மற்ற நாடுகளின் தலைமை நீதிமன்றங்களைவிட ஒரு பெரிய அமைப்பாக இருப்பதால், நாட்டின் தலைசிறந்த சட்ட நிபுணர்கள் அதில் இடம் பெற விரும்புவதில்லை என்று சிலர் குறைபட்டுக்கொள்கின்றனர். ஆனால், சுவிஸ் நீதிமன்றத்தின் கடந்த ஐம்பது ஆண்டுகள் வரலாற்றை அறிந்தோர், சுவிஸ் நீதிபதிகள் அமெரிக்க நீதிபதிகளுக்குத் தாழ்ந்தவர்கள் அல்லர் என்று எண்ணுகின்றனர். சுவிஸ் நீதிபதிகள் ஆறு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவதால், வாழ்நாள் முழுதும் பதவியிலிருக்கும் அமெரிக்க நீதிபதிகளின் அனுபவம் அவர்களுக்கு இராது என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் சுவிஸ் நீதிபதிகள் அவர்கள் விரும்புகிறவரை மீண்டும் மீண்டும் நீதிபதிகளாகத் தெர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதை அறிவோர், அமெரிக்க நீதிபதிகளைப்போல் அவர்களும் நெடுங்காலம் பதவியிலிருப்பதை ஒப்புக்கொள்வார்கள். அரசியலமைப்புக்கு மாறான தேசியச் சட்டங்களை அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் செல்லாதவை என அறிவிக்க முடிவதுபோல சுவிஸ் நீதிமன்றம் அறிவிக்க முடிவதில்லை என்ற கருத்துமட்டும் மறுக்க முடியாததாகும். 1939ஆம் ஆண்டில் நடந்த வாக்கெடுப்பு ஒன்றில் பெரும்பாலான வாக்காளர்கள், சுவிஸ் தலைமை நீதிமன்றத்திற்கு அது போன்ற அதிகாரம் தேவையில்லை என்று தீர்ப்பளித்தனர். அரசியலமைப்புக்கு எதிரான சட்டங்களை நிராகரிக்கும் உரிமை மக்களுக்கு இருக்கின்றபொழுது, அது தலைமை நீதிமன்றத்திற்குத் தேவையில்லை என்று அவர்கள் எண்ணுகிறார்கள்போலும்!

6. நேர்முகக் குடியாட்சி நிறுவனங்கள்
(Direct Democratic Institutions)

[முன்னுரை—குடியொப்பம்—தொடக்க உரிமை—குடியொப்பம், தொடக்க உரிமை பற்றிய சில செய்திகள்—சாதாரணச் சட்டங்களை முன்மொழியும் உரிமை மக்களுக்குத் தரப்பட வேண்டுமா? — நேர்முகக் குடியாட்சி முறைகளால் விளையும் நன்மை தீமைகள்.]

முன்னுரை

தற்காலக் குடியாட்சி அரசுகளுள் சுவிட்சர்லாந்து மிகச் சிறந்த குடியாட்சி அரசெனக் கருதப்படுகிறது. சுவிஸ் மக்களைப் போல உலகில் வேறு எந்த நாட்டு மக்களும் அரசாங்கத்தோடு அவ்வளவு நேரடியான நெருங்கிய தொடர்புகொண்டிருப்ப தாகத் தோன்றவில்லை. குடியொப்பம் (Referendum), தொடக்க உரிமை (Initiative) ஆகிய இரு முறைகளும் சுவிஸ் குடியாட்சியை நேர்முகக் குடியாட்சியாய் ஆக்கும் சாதனங்களாய் அமைகின்றன. இதுபோன்ற முறைகள் வேறுசில நாடுகளிலும் பின்பற்றப்பட்ட போதிலும், அவை சுவிட்சர்லாந்தில் வளர்ந்திருப்பதுபோல வளர வில்லை என்பது நினைவில் இருத்தத்தக்கது.

குடியொப்பம்

பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை வாக்களர் களின் முடிவுக்குச் சமர்ப்பித்து, அவர்களின் தீர்ப்பையொட்டி அவற்றை ஏற்பதும் அல்லது மறுப்பதுமே குடியொப்பம் என அழைக்கப்படுகிறது. தேசிய அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் அனைத்தும் கட்டாயமாகக் குடியொப்பத்திற்கு விடப் படும். பாராளுமன்றம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இயற்றியவுடன், அதை வாக்காளர்கள் முன்பு வைக்கும். மக்கள் அதை ஏற்கின்றனரா அல்லது மறுக்கின்றனரா என்பது அறிய வாக்களிப்பு நடைபெறும். பங்குபெறும் வாக்காளர்களில் பெரும் பாலானோரும், மாநிலங்களில் பெரும்பாலானவையும் திருத்தத்தை ஏற்றால் அது சட்டமாகும்; ஏற்க மறுத்தால் அது சட்டமாகாது.

சாதாரணச் சட்டங்களைக் கட்டாயமாகக் குடியொப்பத்திற்கு விடவேண்டிய அவசியமில்லை. 30,000 வாக்காளர்களாவது அல்லது எட்டு மாநிலங்களாவது விண்ணப்பித்துக் கொண்டால் தான் சாதாரணச் சட்டம் வாக்காளர்களின் முடிவுக்குச் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்றம் சட்டத்தை அறிவித்த 90 நாள்களுக்குள் அதை ரத்துசெய்ய விரும்பும் வாக்காளர்களோ அல்லது மாநிலங்களோ அரசாங்கத்திற்கு முறைப்படி விண்ணப் பித்துக் கொள்ள வேண்டும். சட்டத்தின்மீது நடைபெறும் வாக்களிப்பில் பங்குபெறும் வாக்காளர்களில் பெரும்பாலோரால் சட்டம் ஏற்கப்பட்டால், அது தொடர்ந்து சட்டமாக நீடிக்கும்; மறுக்கப்பட்டால் உடனடியாக ரத்து செய்யப்படும். சட்டங்களை இயற்றும்பொழுது பாராளுமன்றம் சிலவற்றை 'அவசரச் சட்டங்கள்' என்றோ 'எல்லோரையும் கட்டுப்படுத்தாதவை' என்றோ அறிவிக்குமானால் அவற்றின்மீது குடியொப்பம் நடத்துவது என்பது இயலாத காரியம். 1949ஆம் ஆண்டிற்குப் பிறகு இவ்வகைச் சட்டங்களும் ஓராண்டு மட்டுமே குடியொப்பக் கோரிக்கைகளிலிருந்து தப்ப முடியும். 1874ஆம் ஆண்டிலிருந்து 67 முறை சாதாரணச் சட்டங்கள்மீது குடியொப்பம் நடைபெற்ற தென்பதும், அவற்றில் 25 முறையே சட்டங்கள் வாக்காளர்களின் இசைவைப் பெற்றன என்பதும் அறியத்தக்கது.

அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள், சாதாரணச் சட்டங்கள் இரண்டுமே குடியொப்பத்திற்கு உட்பட்டவை என்றாலும், இரு சட்டங்களுக்கிடையே வேறுபாடு உண்டு. அரசிய லமைப்புத் திருத்தச் சட்டங்கள் கட்டாயமாக மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும். ஆனால் சாதாரணச் சட்டங்கள் வாக்காளர் களோ மாநிலங்களோ விரும்பிக் கேட்டால்தான் மக்கள் தீர்ப்புக்கு விடப்படும். முந்திய முறையைக் 'கட்டாயக் குடியொப்பம்' (Compulsory Referendum) என்றும், பிந்திய முறையைக் 'கட்டாயமற்ற குடியொப்பம்' (Optional Referendum) என்றும் அழைக்கலாம். காலகெடு இன்றியோ, அல்லது பதினைந்து ஆண்டு கட்குமேல் நீடிக்குமாறோ, அரசு அயல் நாடுகளோடு செய்து கொள்ளும் உடன்படிக்கைகளும், 30,000 வாக்காளர்களோ அல்லது எட்டு மாநிலங்களோ விரும்பிக் கேட்டால் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும். சாதாரணச் சட்டங்களைப் போன்று உடன்படிக்கைகளையும் குடியொப்பத்திற்கு உட்படுத்த வேண்டும் என்ற முடிவு 1921ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது. இம் முடிவின் அடிப்படையில் ஜெனிவாவைச் சுற்றியுள்ள சுங்க வரியற்ற மண்டலங்களை (customs-free zones) நீக்கக் கோரும் பிரெஞ்சு உடன்படிக்கை ஒன்றை 1823ஆம் ஆண்டில் வாக்கா

ளர்கள் ஏற்க மறுத்தனர். ஸ்பாலில் (Spol) உள்ள தேசியப் பூங்காவின் (Swiss National Park) ஒரு பகுதியை நீர்மின்சக்தி அணை கட்டுவதற்காகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கும் இத்தாலிய உடன்படிக்கை ஒன்றை 1958ஆம் ஆண்டில் வாக்காளர்கள் ஏற்றனர்.

தொடக்க உரிமை

குடிமக்களாக முயன்று சில சட்டங்களை அரசாங்கம் அவர்களுக்கு இயற்றித்தர வேண்டும் என்று கேட்கக்கூடிய உரிமை தொடக்க உரிமை என அழைக்கப்படுகிறது. தேசிய அரசியலமைப்பிற்குத் திருத்தங்களை முன்மொழியும் உரிமை பெற்றிருக்கும் வாக்காளர்கள், சாதாரணச் சட்டங்களை முன்மொழியும் உரிமை பெற்றிலர் என்பது அறியத்தக்கது. 50,000 வாக்காளர்கள் அரசியலமைப்பைத் திருத்த வெண்டும் என அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டால், அரசாங்கம் அவர்கள் கோரிக்கையை ஏற்று, அரசியலமைப்பைத் திருத்தி, அத் திருத்தத்தின் மீது வாக்களிப்பு நடத்தும். அரசியலமைப்பை முழுமையாகத் திருத்த வேண்டுமென்றே (total revision), அல்லது சில இடங்களில் மட்டும் திருத்த வேண்டுமென்றே (partial revision) மக்கள் கேட்கலாம். 1874ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசியலமைப்பு முழுமையாகத் திருத்தப்பட்டதில்லை; அதை முழுமையாகத் திருத்த வேண்டுமென்று 1935ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரே முயற்சியும் தோற்றது.

குறைந்த அளவு 50,000 வாக்காளர்கள் அரசியலமைப்பைத் திருத்த விழைந்தால் அவர்கள் கோரிக்கைகளை மசோதா உருவில் வரைந்து (Formulated Initiative) அரசாங்கத்திற்கு அனுப்பலாம். பாராளுமன்றம் மசோதாவை ஆதரித்தால் அதன்மீது வாக்களிப்பு நடத்தும். அது மசோதாவை ஆதரிக்காவிட்டாலும் அதை வாக்களிப்புக்கு விட்டு, மக்கள் அதை ஏற்க வேண்டா எனச் சிபாரிசு செய்யும்; சில சமயங்களில் பாராளுமன்றம் மக்கள் மசோதாவிற்கு மாறான மசோதாவை அது வரைந்து, இரண்டையும் மக்கள் முன் சமர்ப்பித்து, அதனுடைய மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிடுவதுண்டு. வாக்களிப்பில் பங்குபெறுவோரில் பெரும்பாலான வாக்காளர்களும் மாநிலங்களும் மசோதாவை உறுதி செய்தால் அது சட்டமாகும்; உறுதி செய்ய மறுத்தால் அது கைவிடப்படும்,

அரசியலமைப்பிற்குத் திருத்தத்தை முன்மொழிய விரும்பும் வாக்காளர்கள், அவர்கள் கோரிக்கைகளை மசோதா உருவில் அனுப்பாமல் பொதுவான வேண்டுகோள்களாகவும் (Unformula-

ted Initiative) அனுப்பலாம். பாராளுமன்றம் கோரிக்கைகளை ஆதரித்தால் அவற்றை மசோதா உருவில் மாற்றி அமைத்து, அதன்மீது வாக்களிப்பு நடத்த ஏற்பாடு செய்யும். கோரிக்கைகளுக்குப் பாராளுமன்றத்தின் ஆதரவு இல்லை என்றால், கோரிக்கைகளில் வேண்டப்பட்டிருக்கும் திருத்தம் தேவைதானா என்பதுபற்றி முதலில் வாக்களிப்பு நடைபெறும்; தேவைதான் என மக்கள் அவர்கள் கருத்தைத் தெளிவாகத் தெரிவித்தால், பாராளுமன்றம் கோரிக்கைகளின் கருத்தை உள்ளடக்கிய மசோதா ஒன்றை வரைந்து, அதை மக்களின் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கும். பங்கு பெறும் வாக்காளர்களில் பெரும்பாலானோரும், மாநிலங்களில் பெரும் பாலானவையும் மசோதாவை ஏற்றால் அது சட்டமாகும்; மறுத்தால் சட்டமாகாது.

மக்களால் தொடங்கப்பெறும் சட்ட முயற்சிகள் பாராளுமன்றத்தின் ஆதாரவைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும். அரசியலமைப்பு மக்களுக்கு வழங்கும் தொடக்க உரிமையை எந்த அரசாங்க நிறுவனமும் பறிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. மக்களால் தொடங்கப்பெறும் சட்டங்களை ஏற்க வேண்டுமா மறுக்க வேண்டுமா என்பதை மக்களே முடிவுசெய்ய வேண்டும் அரசியலமைப்பைத் திருத்த வேண்டி 50,000 வாக்காளர்களால் அனுப்பப்படும் மனுவிலுள்ள கையொப்பங்கள் மெய்யானவை தானா, அவை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் கையொப்பங்கள்தானா என்பது முதலில் உறுதி செய்துகொள்ளப்படும்; அவை மனு அனுப்பப்பட்ட நாளுக்கு முன்பான ஆறுமாத காலத்திற்குள் திரட்டப்பட்டவையாய் இருக்க வேண்டும். பாராளுமன்றம் தொடக்க உரிமை மனுவைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகட்குள் அதன்மீது வாக்களிப்பு நடத்தியாக வேண்டும். சுவிஸ் வாக்காளர்கள் தங்கள் தொடக்க உரிமையைப் பயன்படுத்தி 1874ஆம் ஆண்டிற்கும் 1960ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் 45 விண்ணப்பங்களை தாக்கல் செய்ததில் ஏழு மட்டுமே இறுதியில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மக்களால் முன்மொழியப்பட்ட மசோதாக்களுக்கு மாறான மசோதாக்களைப் பாராளுமன்றம் ஒன்பது முறை வரைந்து வாக்காளர்களின் தீர்ப்புக்கு வைத்தபொழுது, ஒன்பதில் ஆறு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாம்.

குடியொப்பம், தொடக்க உரிமை பற்றிய சில செய்திகள்

சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சிச் சாதனங்கள் இயங்கும் விதத்தை ஆராயும் காடிங் (G. A. Codding), அவைபற்றிச் சில பொதுவான உண்மைகளைத் தெரிவிக்கிறார். (1) 1848-லிருந்து

இன்றுவரை ஏறத்தாழ 200 தடவைகள் நேர்முக மக்களாட்சிக்கான தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன; இது சராசரியாக ஆண்டொன்றுக்கு 1·7 தடவைகள் என்ற கணக்கில் நடைபெற்றிருக்கிறது. சாரசரியாக ஆண்டொன்றுக்கு 1848-லிருந்து 1874 வரை 0·4 தடவையும், 1874-லிருந்து 1914 வரை 1.5 தடவைகளும், 1914-லிருந்து 1935 வரை 2·4 தடவைகளும், 1935-லிருந்து இன்றுவரை 2·8 தடவைகளும் இம்முறைகள் பின்பற்றப் பட்டிருப்பது, நாளுக்கு நாள் இவை அதிகமாகப் பின்பற்றப் படுகின்றன என்பதை அறிவுறுத்துகிறது. (2) குடியொப்பம், தொடக்க உரிமை ஆகியவற்றிற்கான தேர்தல்களில் மக்கள் எந்த அளவு ஊக்கத்தோடு கலந்து கொள்கின்றனர்? மக்கள் அதிகமான எண்ணிக்கையில் வாக்களிக்கிறார்களா, அல்லது குறைவான எண்ணிக்கையில் வாக்களிக்கிறார்களா என்பது அந்தந்தச் சமயத்தில் அவர்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பொறுத்ததாகும். 1959ஆம் ஆண்டில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டுமா என்பதுபற்றிய குடியொப்ப வாக்கெடுப்பில் 66·7 சதவிகித வாக்காளர்கள் வாக்களித்தனர். 1950-லிருந்து 1960-க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் நடைபெற்ற குடியொப்பத் தொடக்க உரிமைத் தேர்தல்களில் சராசரியாக 50·4 சதவிகிதத்தினர் வாக்களித்திருக்கின்றனர். (3) அரசியலமைப்பைத் திருத்துவதற்கு வாக்காளர்களால் தொடங்கப்படும் சட்டங்களைவிட, பாராளுமன்றத்தால் தொடங்கப்படும் சட்டங்களுக்கே அதிகப் படியான வெற்றி வாய்ப்புகள் இருக்கின்றன. 1848-லிருந்து பாராளுமன்றத்தால் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களில் 67 சதவிகிதம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் தொடக்க உரிமையின் அடிப்படையில் மக்களால் முன்மொழியப்பட்ட திருத்தங்களில் 90 சதவிகிதம் வாக்காளர்களால் தோற்கடிக்கப்பட்டன. (4) அரசியலமைப்புத் திருத்தங்கள், அவை மக்களால் தொடங்கப்பட்டாலும் சரி பாராளுமன்றத்தால் தொடங்கப்பட்டாலும் சரி, எடுத்த எடுப்பில் வாக்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்றும், பல முயற்சிகளுக்குப் பிறகே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. சுவிஸ் மக்கள் அரசியலமைப்புத் திருத்தங்களை எச்சரிக்கையோடு அணுகுகின்றனர் என்பதை இது அறிவுறுத்துகிறது. (5) தீவிரமான முற்போக்குச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் குடியாட்சிச் சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அரசாங்கம் எதையும் அவசரமாகச் செய்துவிடக் கூடாது என்பதையும், அது நிதானமாக நடப்பதையே மக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

சாதாரணச் சட்டங்களை முன்மொழியும் உரிமை மக்களுக்கு தரப்பட வேண்டுமா ?

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான சட்டங்களை முன் மொழியும் உரிமை மட்டும் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதே ஒழிய, சாதாரணச் சட்டங்களைத் தொடங்கும் உரிமை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. சுவிட்சர்லாந்தின் முக்கிய அரசியல் கட்சிகளான ரேடிகல் கட்சியும் சோஷலிஸ்டுக் கட்சியும் வாக்காளர்களுக்குச் சாதாரணச் சட்டங்களைத் தொடங்கும் உரிமையும் தரப்பட வேண்டுமென்று வாதாடுகின்றன. இவ்வுரிமை மக்களுக்கு அளிக்கப்பட்டால்தான் அரசு மக்களை முழுமையாக நம்புகிறது என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும். மக்களுக்கும் தேசிய அலுவல்களில் மேலும் நெருங்கிய தொடர்பு கொள்ள வாய்ப்பிருக்கும். இவ்வுரிமை மக்கள் பெறவேண்டிய நியாயமான உரிமைகளில் ஒன்றாகும். இது மறுக்கப்பட்டால் சாதாரணச் சட்டங்களை அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் என்ற பெயரில் இயற்ற மக்கள் முயல்வார்கள். நாட்டில் எட்டிச் சத்தை (absinthe) உற்பத்தி செய்வது, இறக்குமதி ஏற்றுமதி செய்வது, விற்பது ஆகியவற்றைத் தடைசெய்யும் அரசியலமைப்பின் 32 (3)ஆவது விதி மேற்கூறப்பட்ட செய்திக்கு ஒரு நல்ல உதாரணமாகும். ஆனால் சாதாரணச் சட்டங்களை முன்மொழியும் உரிமை மக்களுக்கு அளிக்கப்படக்கூடாது என்று வாதாடுவோரும் சிலர் உண்டு. மக்களுக்கு இந்த உரிமை வழங்கப்பட்டால், அது பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லர் என்று கருதுவதற்குச் சமமாகும். மேலும் இந்தப் புதுப் பழக்கம் சட்டமியற்றும் முறையைச் சிக்கல்கள் நிறைந்ததாக்கும். சட்டமியற்றும் பொறுப்புப் பாராளுமன்றத்திடம் இருக்கும்வரை மாநிலங்களின் உரிமைகள் குறைக்கப்படமாட்டா என்று உறுதியாக நம்ப இடமுண்டு; ஏனெனில் மாநிலங்கள் சபையான மேல்சபை, மாநிலங்களின் உரிமைகளை பாதிக்கும் சட்டங்களை எளிதில் ஏற்றுக்கொள்ளாது. சட்டத்தைத் தொடங்கும் உரிமை வாக்காளர்களுக்கும் அளிக்கப்பட்டால், பெரிய மாநிலங்களிலுள்ள பெரும்பான்மையான வாக்காளர்கள் ஒன்றுசேர்ந்து சிறிய மாநிலங்களிலுள்ள சிறுபான்மையோரின் நலன்களுக்கு கேடுபயக்கும் சட்டங்களைக் கொண்டு வந்தாலும் வரலாம் என்று அஞ்சுவது இயற்கையே.

நேர்முகக் குடியாட்சி முறைகளால் விளையும் நன்மை தீமைகள்

சுவிட்சர்லாந்தில் நேர்முகக் குடியாட்சி இயங்குவதன் பயனாகச் சில நன்மைகளும் சில தீமைகளும் விளைவதைக் காண்கிறோம். முதலில் நன்மைகளைக் காண்போமாக. (1) மக்களின் குரல்

கடவுளின் குரலுக்குச் சமம் என்று கருதப்படும் இக் காலத்தில், மக்களை இறைமையின் இருப்பிடமாகக் கருதி, அவர்களை அரசியல் அலுவல்களில் நேரடியாகப் பங்கு கொள்ளச் செய்வது, பெயரளவில் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் நாட்டின் அரசைக் குடியரசாய் ஆக்குகிறது. மக்களாட்சி நடைபெறும் பெரும்பாலான நாடுகளில் நான்கைந்து ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் பொதுத் தேர்தல் சமயங்களில்மட்டும் மக்கள் அரசியல் அதிகாரங்களை அனுபவிப்பதைவிட, சுவிட்சர்லாந்தில் ஆண்டு முழுவதும் மக்கள் அரசியல் அலுவல்களில் பங்கேற்பது அவர்களின் குடியாட்சியை உண்மையான முழுமையான குடியாட்யாய் ஆக்குகின்றதல்லவா! சாதாரணப் பாராளுமன்றத்தின் இசைவோடுமட்டும் இயற்றப்படும் சட்டங்களைவிட, குடிமக்களின் இணக்கத்தோடு இயற்றப்படும் சட்டங்கள் நன்கு மதிக்கப்பட்டுப் பின்பற்றப்படும் என்பது உறுதி. (2) மக்களுக்கு விருப்பமில்லாத சட்டங்களை அவர்கள் நீக்குவதற்குக் குடியொப்பம் வகை செய்கிறது. மக்கள் விரும்பும் சட்டங்களை ஆக்குவதற்குத் தொடக்க உரிமை வழி செய்கிறது. மக்கள் வெறுக்கும் சட்டங்களை அவர்கள்மீது திணிக்கவோ, அவர்கள் விரும்பும் சட்டங்களை அவர்களுக்கு மறுக்கவோ நாட்டில் யாருக்கும் அதிகாரமில்லை. மற்ற நாடுகளில் மக்கள் எதற்கெடுத்தாலும் பாராளுமன்றத்தையே நம்பியிருத்தல் போல சுவிட்சர்லாந்தில் நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை. (3) பாராளுமன்றச் சட்டங்களைத் தடுத்து நிறுத்தும் அதிகாரமற்ற ஆட்சித்துறையையும், நீதித்துறையையும் உடைய சுவிஸ் அரசாங்கத்தின், அதன் செயல்களைக் கட்டுப்படுத்த உதவும் ஒரே நிறுவனம் குடியொப்பமாகும். குடியரசு தலைவரும், தலைமை நீதிமன்றமும் பாராளுமன்றச் சட்டங்களைச் செல்லாதவை என அறிவிக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிராவிட்டாலும், வாக்காளர்களுக்கு அந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பது அறியத்தக்கது. (4) குடியொப்பமும் தொடக்க உரிமையும் மக்களுக்கு அரசியல் அறிவு புகட்டும் கருவிகளாய் அமைகின்றன. பொதுத் தேர்தல்களின்பொழுது வேட்பாளர்களே வாக்காளர்களின் கவனத்தைக் கவர்வார்கள். சட்டங்களைப் பற்றிய வாக்கெடுப்புகளில் அவற்றின் நன்மை தீமைகள் இரு தரப்பாலும் விளம்பரப்படுத்தப்படுவதால், மக்கள் அவற்றின் குணங் குறைகளை நன்று அறிந்துகொள்ள முடிகின்றது. (5) நான்கு ஆண்டுகட்கு ஒரே முறை பொதுத் தேர்தல் நடைபெறும் சுவிட்சர்லாந்தில், தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலங்களில் மக்கள் கருத்து அரசாங்கத்தின் போக்கிற்கு ஆதரவாக இருக்கிறதா, எதிராக இருக்கிறதா என்று அறிந்துகொள்ளக் குடியொப்பம், தொடக்க உரிமை ஆகியவை மீதான வாக்

களிப்புகள் துணை செய்கின்றன. எனவே, இவற்றை 'அரசியல் சூழ்நிலைகளின் பாரமானி' (Barometer of the Political atmosphere) என அழைக்கின்றனர்.

அடுத்ததாக, தீமைகளைக் காண்போமாக. (1) குடியொப்பம் பாராளுமன்ற உறுப்பினர்களின் தரத்தையும் பொறுப்புணர்ச்சியையும் பாதிப்பதாகக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள், சட்டங்களாகப்போவது உறுதியில்லையாதலால், அவர்கள் தங்கள் முழு அறிவையும் பயன்படுத்திச் சட்டங்கள் இயற்றுவார்களா என்பது ஐயப்பாட்டிற்குரியதே. (2) குடியொப்பத்திற்கான வாக்கெடுப்புகளில் வாக்காளர்களில் ஐம்பது சதவிகிதத்தினருக்குக் குறைந்தவர்களே அவற்றில் வாக்களிக்க முன் வருகிறார்களாம். அடிக்கடி வாக்களிப்புகள் நடந்து கொண்டே இருப்பதால் வாக்காளர்களுக்குத் 'தேர்தல் களைப்பு' (Electoral Fatigue) ஏற்படுகிற காரணத்தால், பலர் தேர்தல்களை அலட்சியப்படுத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். வாக்கெடுப்புகளில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் பாதிக்குக் குறைவானவரே வாக்களித்து, அவர்களில் பெரும்பாலானோரின் முடிவை நாடு ஏற்கவேண்டியிருப்பது உண்மையான மக்களாட்சியாகாது. எனவேதான் சில சுவிஸ் மாநிலங்கள் வாக்காளர்கள் கட்டாயமாக அவர்களின் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டுமென்றும், தவறினால் அபராதம் செலுத்த வேண்டுமென்றும் சட்டமியற்றி இருக்கின்றன. (3) அரசாங்கத்தை எதிர்நோக்கி இருக்கும் எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வு காணக்கூடிய திறமை வாக்காளர்களுக்கு இருக்கும் என நாம் நம்பமுடியாது. அரசாள்வது என்பது ஒரு நுட்பமான கலை. அதைப் பயிற்சியற்ற பாமர மக்களின் கைகளில் ஒப்படைப்பது அறிவுடைமை ஆகாது. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை வாக்காளர்களின் தீர்ப்புக்கு அனுப்புவது, பொறுப்புணர்ச்சியுள்ள ஒரு நிறுவனத்தின் தீர்ப்பைப் பொறுப்புணர்ச்சி அற்ற ஒரு கூட்டத்தின் தீர்ப்புக்கு விடுவதற்குச் சமம் என்றும், அறிவுடையோரின் முடிவை அறிவற்றோரின் முடிவிற்கு விடுவதற்குச் சமம் என்றும் கருதப்படுகிறது. (4) குடியொப்பமும் தொடக்க உரிமையும் சட்டமியற்றும் முறையில் கால தாமதத்தைத் தோற்றுவித்து அதில் புதிய சிக்கல்களை உண்டாக்கும். அடிக்கடி தேர்தல்கள் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுவதால், அவற்றிற்காக ஏராளமான பொருள் செலவு செய்வதும் தவிர்க்க முடியாததாகும்.

சுவிட்சர்லாந்தில் மக்கள்தொகை சிறியதாக இருப்பதாலும், படித்தவர்கள் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதாலும், மக்களுக்

கிடையே அரசியல் சமுதாயப் பொருளாதார வேறுபாடுகள் அதிகம் இல்லாததாலும், அவர்கள் எதையும் நிதானத்தோடும் எச்சரிக்கையோடும் செய்யும் பண்பு உடையவர்களாய் இருப்பதாலும், நேர்முகக் குடியாட்சிச் சாதனங்கள் அங்கே மற்ற நாடுகளைவிடச் செம்மையாக இயங்குகின்றன என எண்ண இடமுண்டு. குடியொப்பமும் தொடக்க உரிமையும் சுவிஸ் அரசியலமைப்பை மற்ற அரசிலமைப்புகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் தனிப் பண்புகளாய் அமைகின்றன.

7. அரசியல் கட்சிகள்

(The Political Parties)

[முன்னுரை — கத்தோலிக்கக் கன்சர்வேடிவ் கட்சி — ரேடிகல் கட்சி — சோஷலிஸ்டுக் கட்சி — குடியானவர் கட்சி — சுதந்திரக் கட்சி— கட்சி அமைப்பு.]

முன்னுரை

சுவிஸ் அரசியல் கட்சிகள், அவை ஆற்றும் பணியிலும் அமைப்பிலும், அமெரிக்க அரசியல் கட்சிகளை ஒத்திருக்கின்றன. இன்றைய சுவிட்சர்லாந்தில் பல அரசியல் கட்சிகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் கத்தோலிக்கக் கன்சர்வேடிவ் கட்சி (Catholic Conservative Party), ரேடிகல் கட்சி (The Radicals), சோஷலிஸ்டுக் கட்சி (The Socialists) ஆகிய கட்சிகளை நாடு முழுவதும் செல்வாக்குள்ள கட்சிகளாகவும், குடியானவர் கட்சி (Farmer's Party), சுதந்திரக் கட்சி (Independent Party) ஆகிய கட்சிகளை ஓரளவுக்குச் செல்வாக்குள்ள கட்சிகளாகவும் கருதலாம். சுவிஸ் கட்சிகளுள் மிகவும் பழையதான லிபரல் கட்சி (Liberal Party) மிகவும் நலிந்து இப்பொழுது மறைகின்ற தறுவாயில் இருக்கிறது. அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் காணப்படும் இருகட்சி முறைக்கு மாறாகப் பல கட்சி முறை சுவிட்சர்லாந்தில் காணப்படுகிறது என்பதும், பல கட்சிகள் இருக்கின்ற காரணத்தால் எந்தக் கட்சிக்கும் பாராளுமன்றத்தில் முழுமையான பெரும்பான்மை இல்லை என்பதும் அறியத்தக்கது.

கத்தோலிக்கக் கன்சர்வேடிவ் கட்சி

கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகளையும் நிறுவனங்களையும் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே இக் கட்சியாகும். மத்திய அரசு அளவு கடந்த அதிகாரங்களை அதன்பால் ஈர்த்துக்கொள்ளக் கூடாதென்றும், மாநிலங்களின் இறைமை

மதிக்கப்பட வேண்டுமென்றும், சமயச் [செயல்கள்மீதான தடைகள் நீக்கப்பட வேண்டுமென்றும் இது வாதாடுகிறது. தனி மனிதனின் நலனைப் பேணுவதற்கு அரசாங்கத்தைவிடத் திருச்சபையும், தனியார் தொண்டும், கூட்டுறவு நிறுவனங்களுமே தகுந்த சாதனங்கள் என்பது இக் கட்சியின் கொள்கையாகும். தற்காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, இக் கட்சி சமூகச் சீர்திருத்தச் சட்டங்களில் அக்கறை காட்டித் தொழிலாளர்களின் நலன்களுக்காகப் போராடுகிறது. இக் கட்சி அதனுடைய பெயரைக்கூடக் 'கிறித்துவ சோஷல் கன்சர்வேடிவ் கட்சி' (Christian Social Conservatives) என்று இப்பொழுது மாற்றிக்கொண்டுள்ளது.

ரேடிகல் கட்சி

ரேடிகல் கட்சியை முற்போக்குக் கட்சி என்றோ பிற்போக்குக் கட்சி என்றோ கூறாமல் நடுநிலைக் கட்சி என்று கூறுவதே பொருத்தமாகும். தொடக்ககாலத்தில் ரேடிகல் கட்சி வலுவுள்ள மைய அரசாங்கம், சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள், நேரடியான குடியாட்சி ஆகிய குறிக்கோள்களுக்காகப் போராடியது. இதனுடைய குறிக்கோள்கள் அனைத்தும் நிறைவேறிவிட்ட காரணத்தால், இக் கட்சி தன் பழைய செல்வாக்கை இப்பொழுது பெற்றிருக்கவில்லை எனக் கூறப்படுகிறது. அரசு சமயச் சார்பற்ற அரசாய் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பது இக் கட்சியின் தற்காலக் கொள்கைகளில் மிக முக்கியமான கொள்கையாகும். கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ரேடிகல் கட்சி மிகத் தீவிரமாக எதிர்க்கும் என்பது உறுதி. வலதுசாரிக் கட்சி, இடதுசாரிக் கட்சி ஆகிய இரு கட்சிகளிலும் சேர விரும்பாது இரண்டிற்கும் இடைப்பட்ட கட்சியில் சேர விரும்புவோர் ரேடிகல் கட்சியில் சேருவது இயல்பு.

சோஷலிஸ்டுக் கட்சி

சுவிஸ் சோஷலிஸ்டுகள் தீவிர சோஷலிஸ்டுக் கொள்கைகளை வற்புறுத்தும் வழக்கத்தை இக்காலத்தில் கைவிட்டு விட்டார்கள். கூட்டாண்மைச் சமுதாயத்தை (Collectivist Society) நிறுவ வேண்டும், தொழிலாளர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றெல்லாம் முன்புபோல இப்பொழுது அவர்கள் குரல் எழுப்புவதில்லை. பொருளாதாரத் துறையில் தனி மனிதனுக்கு மிகுதியான வாய்ப்புகள் தரப்படவேண்டும் என்பது சோஷலிஸ்டுக் கட்சியின் முக்கியமான கொள்கையாகும். இக் கட்சி முதலாளித்துவத்தை அகற்ற விரும்புகிறது என்று கூறுவிதைவிட, முதலாளித்துவத்தின் மோசடிகளை அகற்ற விரும்பு

கிறது என்று கூறுவதே பொருத்தமாகும். தொழிலாளர்கள் குறைவான வேலை நேரம், முழுநேர வேலை, சமுதாயக் காப்பீடு (Social insurance), கூட்டுப் பேரம் (Collective bargaining) குறைந்த அளவு ஊதிய நிர்ணயம் (minimum wages) ஆகிய நலன்களைப் பெறுவதற்குச் சோஷலிஸ்டுக் கட்சி பெரிதும் பாடுபடுகிறது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என்றும், சுவிட்சர்லாந்து ஐக்கிய நாடுகள் சபையில் சேரவேண்டும் என்றும் இக் கட்சி வாதாடுகிறது. சோஷலிஸ்டுகளில் தீவிர வாதிகள் ஒன்று சேர்ந்து 'புதிய இடதுசாரி சோஷலிஸ்டுக் கட்சி' (New Socialist Left) என்ற ஒரு புதிய கட்சியைச் சில ஆண்டுகட்கு முன்பு ஆரம்பித்திருக்கின்றனர்.

குடியானவர் கட்சி

உழவர்கள், கைவினைஞர்கள் (artisans), நடுத்தரக் குடிமக்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாப்பது குடியானவர் கட்சியின் நோக்கமாகும். மக்களின் பொருளாதார வாழ்வில் அரசாங்கம் தலையிடக்கூடாது என இக் கட்சி விரும்புகிறது. உழவர்களுக்கு உதவித் தொகை, இறக்குமதியாகும் பண்ணைப் பொருள்கள்மீது காப்பு வரி, விவசாயப் பொருள்களுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்தல் ஆகிய செயல்களை அரசாங்கத்தைச் செய்யத் தூண்டுவது இக் கட்சியே.

சுதந்திரக் கட்சி

சுவிட்சர்லாந்தின் முதல் பேரங்காடியின் தலைவரான டட்வெயிலரால் (G. Duttweileer) அமைக்கப்பட்ட சுதந்திரக் கட்சி பொருள்களைப் பயன்படுத்துவோரின் நலனுக்காகப் பாடுபடுகிறது. அரசு உற்பத்தியாளரின் நலன்களை மட்டும் கவனித்தால் போதாது, பயன்படுத்துவோரின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்பதே இக் கட்சியின் முக்கியக் கொள்கையாகும்.

கட்சி அமைப்பு

இன்று சுவிட்சர்லாந்தில் தேசியக் கட்சிகளாக இயங்கும் பெருங் கட்சிகள் அனைத்தும் ஆரம்ப காலத்தில் மாநிலக் கட்சிகளாக இயங்கினவாம். எனவே கட்சிகளின் அமைப்பும் கொள்கைகளும் வட்டாரத் தலைவர்களைப் பொறுத்ததாக அமைந்தன. மேலும் சுவிட்சர்லாந்தில் தேசியத் தேர்தல்கள் என அழைக்கக் கூடிய தேர்தல்கள் எதுவும் நடைபெறுவதில்லை. அமெரிக்கக் குடியரசு தலைவரின் தேர்தலுக்கு ஒத்த தேசியத் தேர்தலுக்கு சுவிஸ் அரசியலமைப்பு வகை செய்யவில்லை. எனவே ஒரு மைய

அமைப்பையும் பல கிளை அமைப்புகளையும் கொண்ட தேசிய அரசியல் கட்சிகள் வளர்வதற்கான சூழ்நிலை தோன்றவில்லை. இன்று தேசியக் கட்சிகள் என அழைக்கப்படும் கட்சிகள் அனைத்தும் மாநிலக் கட்சிகளின் கூட்டமைப்புகளேயாகும். ஒவ்வொரு கட்சியின் அமைப்பும் பெயரும்கூட மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுவதைக் காண்கிறோம். ஒரு கட்சியின் மைய அமைப்பின் முடிவுகளைக்கூட மாநிலக் கிளைகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிற அளவிற்கு மாநிலக் கிளைகள் முக்கியத்துவம் அடைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிட்சர்லாந்தின் பெருங்கட்சிகள் ஒவ்வொன்றும் மூன்று கட்டங்களில் அமைந்திருக்கின்றன. முதலாவதாக, பிரதிநிதிப் பேரவை என்ற அமைப்புக் கட்சியின் அடிப்படை அமைப்பாய் விளங்குகிறது. மாநிலங்களிலிருந்துவரும் கட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட இப் பேரவை, ஆண்டுக்கு ஒருமுறை கூடி, கட்சிக் கொள்கைகளை அறிவித்து, கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுத்து, மேலமைப்புகளின் முடிவுகளை ஏற்கும். இரண்டாவதாக, பேரவையைவிடச் சிறிய அமைப்பான மத்தியக்குழு அடிக்கடி கூடிக் கட்சியின் அலுவல்களைக் கவனிக்கும். மூன்றாவதாக, செயற் குழு என்னும் அமைப்புக் கட்சியின் மேலிடமாக அமைந்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்கின்றது.

கத்தோலிக்கக் கன்சர்வேடிவ் கட்சி அமைந்திருக்கும் முறை, ஒரு நல்ல சுவிஸ் அரசியல் கட்சி அமைந்திருக்கும் முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் கருதப்படுகிறது. பிரதிநிதிகள் பேரவை (Assembly of Delegates) என்ற அடிப்படை அமைப்பில் மாநிலப் பிரதிநிதிகள், மத்தியப் பாராளுமன்றத்திலுள்ள கட்சியின் உறுப்பினர்கள், மையக் குழுவினர் போன்ற முன்னூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள். இது ஆண்டுக்கு ஒருமுறை கூடி, கட்சியின் தலைவரையும், மையக் குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து, குடியொப்பங்களில் கட்சியின் கொள்கை என்ன என்பதைத் தீர்மானித்து, கட்சியின் ஆண்டறிக்கைகளைப் படிக்கக் கேட்டு அவற்றை உறுதிசெய்து, கட்சி கொண்டுவர விரும்பும் சட்ட திட்டங்களை அங்கீகரித்து, கட்சியின் தேசிய மாநாடாகச் செயல்படுகிறது. கட்சியின் அடுத்த அமைப்பான மத்தியக் குழுவில் (Central Committee) மாநிலத் தலைவர்களும், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் களிலிருந்து பதினைந்து பேரும், பிரதிநிதிகள் பேரவையால் தேர்ந் தெடுக்கப்படும் இருபத்தொரு அங்கத்தினர்களும், வேறு சில பிரதிநிதிகளுமாக ஏறத்தாழ நூறு உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

இக் குழு ஆண்டுக்கு இருமுறை கூடும். கட்சியின் துணைத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களைத் தேர்ந் தெடுப்பதும், பேரவையின் இசைவுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செய்திகளைத் தயார் செய்வதும், தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடுவதும், அதன் பொறுப்புகளில் அடங்கும். கட்சியின் மேல் அமைப்புக்குச் செயற்குழு (Executive Committee) என்று பெயர். கட்சியின் தலைவர், துணைத் தலைவர்கள், மையக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் பதினாறு உறுப்பினர்கள் ஆகிய இருபது உறுப்பினர்களைக் கொண்ட இச் செயற்குழு கட்சியின் மேலிடமாய் அமைந்து, பேரவை, மத்தியக் குழு போன்ற நிறுவனங்களின் முடிவுகளை நிறைவேற்றியும், கட்சி நடவடிக் கைகளை மேற்பார்வை செய்தும், அரசாங்க நிறுவனங்களோடு நல்லுறவை வளர்த்தும் பல வகையான பொறுப்புகளை ஏற்கின்றது. கட்சியின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரும் செயற்குழுவால்தான் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மாநிலக் கிளைகள் அனுப்பும் தொகையும், தொண்டர்களின் நன்கொடையும் கட்சி நிதியை உருவாக்கு கின்றன.

8. செல்வாக்குக் குழுக்கள்
(The Pressure Groups)

[முன்னுரை—சட்டங்களும் செல்வாக்குக் குழுக்களும்—செல்வாக்குக் குழுக்களில் சில.]

முன்னுரை

சுவிட்சர்லாந்தில் முழுநேர அரசியல்வாதிகள் என்ற கூட்டத்தாரின் எண்ணிக்கை மிகக் குறைவு. அரசியலைப் பிழைப்பாகக் கொண்டிருப்போரை மக்கள் வெறுப்பதும்,' அரசியலை முழுநேர ஊழியமாய்க் கொண்டிருப்போர் போதுமான பொருள் ஈட்ட வழியில்லாது இருப்பதும், செல்வாக்குக் குழுக்களின் வளர்ச்சிக்குச் சாதகமாய் அமைகின்றன.

சட்டங்களும் செல்வாக்குக் குழுக்களும்

மசோதாக்கள் சட்டங்களாக்கப்படுவதற்கு முன்பு, பல சமயங்களில் செல்வாக்குக் குழுக்கள் அவற்றைப்பற்றித் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படும். கூட்டாட்சிக் குழு மசோதாவை வரையும்பொழுது, அதனால் பாதிக்கப்படும் செல்வாக்குக் குழுவை அழைத்து அதன் கருத்துகளைத் தெரிந்து கொள்ளும். சில சமயங்களில் செல்வாக்குக் குழுக்களின் யோசனைப்படி புது மசோதா வரையப்படுவதுமுண்டு. பாராளுமன்றத்தின் குழுக்கள் மசோதாக்களை ஆராயும்பொழுது செல்வாக்குக் குழுக்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் ஆலோசனையைக் கேட்கும். ஒரு செல்வாக்குக் குழு தடுத்து நிறுத்த விரும்பும் மசோதா சட்டமாகிவிடுமானால், அக் குழு குடியொப்பத்தின் வாயிலாக மசோதாவைத் தோற்கடிக்க முயலும். தொடக்க உரிமை மூலமாகவும் செல்வாக்குக் குழுக்கள் அவை போற்றும் கருத்துகளைச் சட்டங்களாக்க முயற்சி செய்யும். குடியொப்பம், தொடக்க உரிமை ஆகிய இருசாதனங்களும் சுவிஸ் செல்வாக்குக் குழுக்களுக்கே உரிய சாதனங்கள் என்பது நினைவில் இருத்தத்தக்கது.

தன்னலக் குழுக்களில் சில

இன்று சுவிட்சர்லாந்தில் பல செல்வாக்குக் குழுக்கள் இயங்கிய போதிலும் அவற்றில் நான்கு குழுக்களை நல்ல செல்வாக்குள்ள குழுக்கள் எனக் குறிப்பிடலாம். முதலாவதாக, **சுவிஸ் தொழில் வர்த்தகச் சங்கம்** (Swiss Union of Commerce and Industry): இது இயந்திர உற்பத்தியாளர்கள் சங்கம் (Swiss Society of Machinery Manufacturers), கைக்கடிகாரம் தயாரிப்பாளர்கள் சங்கம் (Swiss Watch Chamber) போன்ற சங்கங்களின் கூட்டமைப் பாகும். இரண்டாவதாக, **சுவிஸ் உழவர்கள் சங்கம்** (Swiss Peasants union): இது மேற்கு சுவிட்சர்லாந்துத் திராட்சைப் பயிரிடுவோர் சங்கம் (Winegrowers Association of Western Switzerland), பழுப்பு இன மாடுகள் வளர்ப்போர் சங்கம் (Swiss Browin Cattle Race Association), இறைச்சிக்காக மாடு வளர்ப்போர் சங்கம் (Swiss Association of Producers of Cattle for Slaughter) போன்ற சங்கங்களின் கூட்டமைப்பாகும். மூன்று வதாக, **சுவிஸ் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு** (Swiss Federation of Trade Unions): இது இரயில்பாதைத் தொழிலாளர்கள் சங்கம் (Swiss Railway Employees Union), உலோக, கைக்கடிகார தொழிலாளர்கள் சங்கம் (Swiss Federation of Metal and Watch Workers), வர்த்தகம், போக்குவரத்து, உணவுத் தொழில்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சங்கம் (Swiss Federation of Workers in Commerce, Transportation, and Food Industries) போன்ற சங்கங்களின் கூட்டமைப்பாகும். நான்காவதாக, **சுவிஸ் கலைகள் கைத்தொழில்களுக்கான சங்கம்** (Swiss Association of Arts and Crafts): சிறு தொழில்கள் செய்வோர் இதில் இணைந்திருப்பதால் இதை 'சுவிட்சர்லாந்தின் சிறு தொழில்கள் சங்கம்' என அழைக் கின்றனர்.

பெரும் தன்னலக் குழுக்களின் சார்பில் பாராளுமன்றத்தில் பல உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். 1959ஆம் ஆண்டில் தேசியச் சபையில் தொழிற்சங்கங்களின் சார்பாகப் பதினைந்து உறுப்பினர்களும், உழவர்கள் சங்கத்தின் சார்பாக நான்கு உறுப் பினர்களும், கலை, கைத்தொழில் சங்கத்தின் சார்பாக மூன்று உறுப்பினர்களும் அமர்ந்திருந்தனர். இதுவரை கூறப்பட்ட குழுக் களைப்போல இன்னும் பல குழுக்கள் சுவிட்சர்லாந்தில் இருக் கின்றன. பெண் உரிமைக்காகப் பரிந்து பேசுவோர் இயக்கங்கள் (feminist movements), ஆல்ப்பைன் மலை ஏறுவோர் வழிகாட்டிகள் சங்கங்கள் (Swiss Alpinist Guide Associations), மோட்டார் சங்கங்கள் (Swiss Automobile Associations) போன்றவைகளையும் சிறிய அளவில் அமைந்த தன்னலக் குழுக்களாகக் கருதலாம்.

எல்லாத் துறைகளிலும் அரசாங்கம் செல்வாக்குக் குழுக்களை அனுமதித்து, அவற்றின் கருத்துகளைத் தெரிந்துகொள்வது நல்லது என்று பலர் வாதாடுகின்றனர். ஆனல், வேறு சிலர் இப்பொழுது இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாட்சிக் குழு உறுப்பினர்களும் வாழ்க்கையின் பல துறைகளிலிருந்து தேர்ந் தெடுக்கப்படுவதால், தனிப்பட்ட செல்வாக்குக் குழுக்கள் தேவை யில்லை என்று கருதுகின்றனர். செல்வாக்குக் குழுக்கள் இல்லாவிடில் சில இனத்தாரை பாதிக்கும் சட்டங்களைப் பாராளு மன்றம் இயற்றிவிடும் என்று அஞ்சத் தேவையில்லை; ஏனெனில், குடியொப்பத்தின் மூலமாகவும் மக்களின் நலன்களை பாதிக்கும் சட்டங்கள் நீக்கப்படலாம்.

படிக்கவேண்டிய நூல்கள்

(1) G. A. Codding — The Federal Government of Switzerland (Allen & Unwin)

(2) C. Hughes — The Federal Constitution of Switzerland (Oxford)

(3) H. Huber — How Switzerland is Governed (Zurich)

(4) The Federal Constitution of the Swiss Confederation: English Translation.

(5) Walo Von Greyerz — A Visit to the Swiss Houses of Parliament (Paul Hapt Berne)

VII. இந்திய அரசியலமைப்பு

(The Indian Constitution)

1. அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

(Characteristic features of the Constitution)

[முன்னுரை — பெரியதொரு எழுதப்பெற்ற அரசியலமைப்பு — அரசியலமைப்பின் முகப்பு — கூட்டாட்சி அமைப்பு — அடிப்படை உரிமைகள்—அரசு கொள்கையின் நெறிசெய் நியதிகள் — வயது வந்தோர் வாக்குரிமை — சமயச் சார்பற்ற அரசு — குடியாட்சிக் காப்புகள்—காமன்வெல்த்துக் கழகத்தில் அங்கம் வகித்தல்—அரசியலமைப்பைத் திருத்துதல்.]

முன்னுரை

உலகிலேயே மிகப் பெரிய குடியரசு என்ற பெருமைக்குரிய இந்தியக் குடியரசின் அரசியலமைப்பு 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது. நம் அரசியலமைப்பு ராஜேந்திரபிரசாத் தலைமையில் கூடிய அரசியல் நிர்ணயச் சபையின் (Constituent Assembly) படைப்பாகும். அரசியல் நிர்ணயச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளை, அம்பேத்கார் தலைமையில் கூடிய வரை குழு (Draft Committee) முறையானதோர் அரசியலமைப்பாக எழுதிக் கொடுத்தது. இந்திய அரசியலமைப்பை இயற்றிய அறிஞர்கள் உலக நாடுகள் பலவற்றின் அருமை பெருமைகளை ஆராய்ந்தறிந்து அவற்றின் பண்புகளை நம் அரசியலமைப்பில் இணைத்திருப்பது அறியத்தக்கது. நம் அரசியலமைப்பில் பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, அயர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்புகளின் செல்வாக்கைக் காண்கிறோம். இன்றைய அரசியலமைப்பு 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் (Government of India Act) அடிப்படையில் அமைந்திருப்பது தெளிவு. நடையிலும் பொருளிலும் புதிய அரசியலமைப்பின் பெரும் பகுதிகளில் பழைய அரசியலமைப்பின் சாயலைப் பார்க்கின்றோம். இந்தியக் குடியரசின் கூட்டாட்சித் தத்துவமும், சட்டத்துறை, ஆட்சித் துறை, நீதித்துறை ஆகியவற்றின் அமைப்புகளும், அவற்றிற்

கிடையேயான தொடர்புகளும் 1935ஆம் ஆண்டின் சட்டத்தைத் தழுவியே அமைந்திருக்கின்றன. 1950ஆம் ஆண்டின் புதிய இந்திய அரசியலமைப்பை 1935ஆம் ஆண்டின் .பழைய இந்திய அரசியலமைப்பின் சற்றே மாறிய மறுபிறப்பு எனக் கருதுவது மிகையாகாது.

பெரியதொரு எழுதப்பெற்ற அரசியலமைப்பு

இந்திய அரசியலமைப்பு உலகிலேயே மிக நீண்ட அரசியலமைப்பாய் இருக்கும் சிறப்பைப் பெற்றிருக்கிறது; அது 395 விதிகளையும் 9 அட்டவணைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. நம் அரசியலமைப்பை வெறும் அரசியலமைப்பு எனக் கூறுவதைவிட, விவரமானதொரு சட்டத்தொகுப்பு எனக் கூறுவதே பொருத்தமானதாகும். இந்திய அரசின் அரசியலமைப்பும், மாநில அரசுகளின் அரசியலமைப்பும் அதில் ஒன்ருக இணைந்தே வரையப்பட்டிருக்கின்றன. நம் அரசியலமைப்பு அரசாங்கத்தின் மூன்று துறைகளின் அமைப்பை விளக்குவதோடு, அவற்றின் நடைமுறைகளையும் விளக்குகிறது. அரசின் அதிகாரங்களை மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்வது பற்றி அது தீர்வாய்வான முறையில் விவரிக்கின்றது. மேலும் பொதுப் பணிக் கழகங்கள், தேர்தல்கள், மொழிகள், சிறுபான்மையோர் போன்ற பல பொருள் பற்றிய செய்திகளும் அரசியலமைப்பில் இடம் பெறுகின்றன. நாட்டில் பல்வேறு இனங்களையும், மொழிகளையும், சமயங்களையும், பண்பாடுகளையும் சார்ந்த மக்கள் அருகருகே வாழ்வதால் எல்லோருடைய நலன்களையும் அரசியலமைப்புக் காக்க முயல்கிறது. மேலும், இதுவரை நம் பழம் பெரும் வரலாறே பார்த்திராத ஓர் அகில இந்தியக் குடியரசை நிறுவிய நம் தலைவர்கள், எதையும் தற்செயலாய் நிகழவிட்டுவிட விரும்பாமல் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அரசியலமைப்பிலேயே வகை செய்திருக்கின்றனர். மேற்கண்ட காரணங்களால்தான் நம் அரசியலமைப்பு, 'களிறு போன்ற தோற்றமுடைய' அரசியலமைப்பாய் காட்சியளிக்கிறது. ஆனால், அரசியலமைப்புகள் மிக விரிவானவையாய் இருப்பது விரும்பத்தக்கதன்று என K. C. வியர் போன்ற அரசியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

அரசியலமைப்பின் முகப்பு

இந்திய அரசியலமைப்பின் முகப்பு அதன் இலட்சியங்களை அழகான சொற்களில் எடுத்துரைக்கின்றது. 'இந்திய மக்களாகிய நாங்கள், இந்தியாவை ஓர் இறைமை பொருந்திய ஜனநாயகக் குடியரசாய் உருவாக்க உறுதிபூண்டு, அதன் குடிமக்கள் அனைவர்க்கும் சமுதாய, பொருளாதார, அரசியல் நியாயத்

தையும், எண்ணம், பேச்சு, கருத்து, நம்பிக்கை, வழிபாடு ஆகிய உரிமைகளேயும், அந்தஸ்து, வாய்ப்புகள் ஆகியவைகளில் சமத்துவத்தையும் பெற்றுத் தரவும், தேசிய ஒற்றுமையையும், தனிமனிதன் மதிப்பையும் உறுதி செய்யும் தோழமையை எல்லோரிடையே வளர்க்கவும், எங்கள் அரசியல் நிர்ணயச் சபையில் 1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் இந்த அரசியலமைப்பை ஏற்று, இயற்றி, எங்களுக்கு அளித்துக் கொள்கிறோம்.' இந்தியாவின் இன்றைய அரசியலமைப்பு, ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாக இந்தியாவை அரசாண்ட ஆங்கிலேய அரசால் அளிக்கப்பட்டதன்று என்பதை அறிவிக்கும் எண்ணத்தோடு, அரசியலமைப்பின் முகப்பு அது இந்திய மக்களால் இயற்றப்பட்டதென்பதை அறிவுறுத்துகிறது. 'இந்திய மக்களாகிய நாங்கள்' என்ற தொடக்கச் சொற்கள் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்று வீர முழக்கம் செய்த மகாகவி பாரதியாரின் சொற்களை நினைவுபடுத்துவதோடு, இறைமையின் இருப்பிடம் மக்களென்பதையும் உணர்த்துகிறது. நம் அரசியலமைப்பின் முகப்பு, பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாட்டுச் சொற்களான சட்டம், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் (Law, Liberty, Equality, Fraternity) ஆகியவற்றை எதிரொலிப்பது நம் மக்களின் விடுதலை வேட்கைக்கும் நியாய உணர்ச்சிக்கும் சான்றாக அமைகிறது. இந்திய நாட்டிற்கு 'இறைமை பொருந்திய ஜனநாயகக் குடியரசு' (Sovereign Democratic Republic) எனப் பெயர் சூட்டப்பட்டிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. இந்தியா அந்நியராட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நிலைமாறி விடுதலை அடைந்த நிலையையும், முடியாட்சி மறைந்து குடியாட்சி மலர்ந்த நிலையையும். பொறுப்பற்ற அரசாங்கத்திற்கு மாறாகப் பொறுப்புள்ள அரசாங்கம் தோன்றிய நிலையையும், ஏகாதிபத்திய எதேச்சாதிகார அரசுக்குப் பதிலாக அரசியலமைப்புச் சார்ந்த அரசு நிறுவப்பட்டிருக்கும் நிலையையும், இப் பெயர் நமக்கு நினைவூட்டுகிறது.

கூட்டாட்சி அமைப்பு

இந்தியக் குடியரசு, பதினெட்டு மாநிலங்களைக் கொண்டதொரு பெருங் கூட்டாட்சியாகும். ஒரே ஆட்சியின்கீழ் இருந்த இந்தியப் பெருநிலம், பல மாநில அரசுகளாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக, இன்று ஒரு கூட்டாட்சியாக இயங்குகிறது. இந்தியக் கூட்டாட்சி, அது தோன்றிய வகையில் அமெரிக்கக் கூட்டாட்சியினின்றும் மாறுபட்டு, கனடாவின் கூட்டாட்சியை ஒத்திருப்பது அறியத்தக்கது. மேலும் அது இயங்குகின்ற விதத்திலும் அதில் அமெரிக்க அரசியலமைப்பின் சாயலைவிட, கனடிய அரசிய

லமைப்பின் சாயலே அதிகம் தென்படுகிறது. அரசின் அதிகாரங்களை மத்திய மாநில அரசுகள் அவைகளுக்கிடையே பகிர்ந்து கொள்கின்றன. அரசியலமைப்பு மைய அரசுக்கென 97 இனங்களையும், மாநில அரசுகளுக்கென 66 இனங்களையும், இரு அரசுகளுக்கும் பொதுவாக 47 இனங்களையும் ஒதுக்குகிறது. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையிலிருக்கும் முதலாவது பட்டியலான கூட்டரசு பட்டியலில் (Union List) மைய அரசின் இனங்களும், இரண்டாவது பட்டியலான மாநிலப் பட்டியலில் (State List) மாநில அரசுகளின் இனங்களும். மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலில் (Concurrent List) இரு அரசுகளுக்கும் பொதுவான இனங்களும், வேறு எந்தக் கூட்டாட்சி அரசியலமைப்பிலும் காணப்படாத அளவுக்கு விரிவாக விவரிக்கப் பட்டிருக்கின்றன. தற்காப்பு, முப்படைகள், போரும் சமாதானமும், அயல்நாட்டு அலுவல்கள், அணுசக்தி, நாணயச் செலாவணி, பன்னாட்டு வாணிபம், இருப்புப் பாதைகள், தபால் தந்தி, காப்புரிமை - பதிப்புரிமை (patents and copyrights), எடையும் அளவும், மாநிலங்களுக்கிடையே வர்த்தகம் ஆகிய இனங்கள் மைய அரசிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்களில் முக்கியமானவையாகும். சட்டமும் ஒழுங்கும், கல்வி, விவசாயம், தலஆட்சி, நீதி நிர்வாகம், நிலவரி, பொதுச் சுகாதாரம், காவல் துறை, சிறைச்சாலைகள், காடுகள், மீன்வளம், மது வகைகள் ஆகிய இனங்கள் மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பொருள்களில் முக்கியமானவையாகும். தடுப்புக் காவல் (preventive detention), குற்றவியல் சட்டம், திருமணமும் திருமண விலக்கும், தொழிற் சங்கங்கள், தொழிற்சாலைகள், விலைக் கட்டுப்பாடு, கலப்படம், அறநிலையங்கள், பிறப்பு இறப்பு பதிவு, மின்சக்தி, செய்தித்தாள்கள் ஆகிய இனங்கள் இரு அரசுகளுக்கும் பொதுவாக இருக்கும் பொருள்களில் முக்கியமானவையாகும். மேற்கண்ட மூன்று பட்டியலிலும் சேர்க்கப்படாமல் விடுபட்டுப் போன இனங்கள் மைய அரசிற்குச் சொந்தமென அரசியலமைப்பு அறிவிக்கின்றது. பொதுப்பட்டியலில் இடம்பெறும் பொருளொன்றின்மீது மைய அரசும், மாநில அரசுகளும் முரணான சட்டங்கள் இயற்றினால், மைய அரசின் சட்டமே செல்லத்தக்க தாகும்.

நம் அரசியலமைப்பு, மைய அரசு மாநில அரசுகள் ஆகியவற்றின் அதிகார எல்லைகளை வரையறுத்துவிடுவதால், மைய அரசு மாநில அரசுகளைக் கட்டுப்படுத்துவதோ, மாநில அரசுகள் மைய அரசைக் கட்டுப்படுத்துவதோ இயலாத காரியமாகும். இரு அரசுகளும் அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு

இயங்குவது அவசியமாதலால், இரண்டையும்விட அரசிய லமைப்பே உயர்ந்தது என்ற கொள்கை இந்தியாவில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. மேலும், கூட்டாட்சிகளில் கூட்டரசிற்கும் உறுப்பரசுகளுக்குமிடையே தகராறுகள் எழுவது தவிர்க்க முடியாதது என எண்ணப்படுவதால், அவ்வகையான தகராறு களைத் தீர்த்துவைக்க இரு அரசுகளுக்கும் பொதுவானதொரு தலைமை நீதிமன்றமும் அரசியலமைப்பால் நிறுவப்பட்டிருக்கிறது.

கூட்டாட்சி முறையின் நல்ல பண்புகள் பல இந்திய அரசிய லமைப்பில் காணப்பட்டபோதிலும், இந்தியக் கூட்டாட்சி அமெரிக்கக் கூட்டாட்சி போல ஒரு முழுமையான கூட்டாட்சியாய் விளங்காமல், கனடியக் கூட்டாட்சி போல ஓர் அரைகுறையான கூட்டாட்சியாய் (quasi-federation) விளங்குவது குறிப்பிடத் தக்கது. இந்தியா ஒரு குறையுள்ள கூட்டாட்சியாய் கருதப் படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை இங்கு ஆராய்வோம்.

(1) இந்தியப் பாராளுமன்றத்திற்கு, இருக்கின்ற மாநிலங் களின் பகுதிகளை வெட்டியும் ஒட்டியும் புதிய மாநிலம் ஒன்றை உருவாக்கவும், மாநிலங்களின் நிலப்பரப்பைக் கூட்டவும் குறைக்கவும், அவற்றின் எல்லைகளை மாற்றி அமைக்கவும், அவற்றின் பெயர்களைக்கூட மாற்றவும் சட்டமியற்றும் அதிகார முண்டு. மேற்கண்ட பொருள்களின்மீதான மசோதாக்கள் பாராளுமன்றத்தில் முன்மொழியப்படுவதற்கு முன்பாக அவை குடியரசு தலைவரால் சிபாரிசு செய்யப்படவேண்டும். மேலும், குடியரசு தலைவர் மசோதாவினால் பாதிக்கப்படும் மாநிலங்களின் கருத்துகளை அறிந்து கொள்ளவேண்டும். பாதிக்கப்படும் மாநிலங் களின் கருத்துகளை அவர் அறிந்துகொள்ள வேண்டும் என்று அரசியலமைப்புக் கூறுகிறதே ஒழிய, தெரிவிக்கப்படும் கருத்துகளை அவர் ஏற்றுக்கொண்டு அதன்படியே அவரின் சிபாரிசு அமைய வேண்டும் என அரசியலமைப்புக் கட்டாயப்படுத்தாமல் இருப்பது ஒரு பெருங்குறையே. தற்போதுள்ள முறைப்படி பாதிக்கப்படும் மாநிலங்களின் விருப்பதிற்கு மாறாக அவற்றை மைய அரசு மாற்றி அமைக்கமுடியும்; அமெரிக்காவில் இவை போன்ற செயல்கள் நிகழமுடியாது.

(2) 1789ஆம் ஆண்டின் அமெரிக்க அரசியலமைப்பு, கூட்டரசின் அரசியலமைப்பை மட்டுமே விளக்குகிறது; அதில் மாநிலங்களின் அரசியலமைப்பு இடம் பெறவில்லை; மாநிலங்கள் ஒவ்வொன்றிலும், அதனதன் தேவைக்கேற்பத் தனித்தனி அரசிய லமைப்புகள் இயங்கிவருகின்றன. ஆனால், 1950ஆம் ஆண்டின்

இந்திய அரசியலமைப்பு, கூட்டரசின் அமைப்பை விளக்குவதோடல்லாமல் மாநில அரசுகளின் அமைப்பையும் விளக்குகிறது. மாநிலங்களுக்குத் தனியான அரசியலமைப்புகள் எதுவுமில்லை. கனடிய அரசியலமைப்பிலும் தேசிய அரசு, மாநில அரசுகள் ஆகிய இரண்டின் அரசியலமைப்புகளும் 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தில் (British North Africa Act) இணைந்தே காணப்படுகின்றன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சிகளில் ஒவ்வொரு மாநிலமும், சில நிபந்தனைகட்கு உட்பட்டு, அது விரும்பும் அரசியல் நிறுவனங்களை அமைத்துக்கொள்ளலாம். ஆனால், இந்தியாவிலும் கனடாவிலும் கூட்டாட்சியில் அங்கம் வகிக்கும் மாநிலங்கள் அனைத்தும் ஏறத்தாழ ஒரே வகையான அரசியல் நிறுவனங்களையே ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

(3) இந்தியாவில் கனடாவைப்போல, ஒவ்வொரு குடிமகனும் இந்திய நிலத்தின் குடிமகனாகக் கருதப்படுகிறானே ஒழிய, அவன் குடியிருக்கும் மாநிலத்தின் குடிமகனாகவும் கருதப்படுவதில்லை. அகில இந்திய ரீதியில் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் குடியுரிமையைத் தவிர, மாநில அடிப்படையில் எவரும் கூடுதலான அல்லது குறைவான குடியுரிமையை அனுபவிப்பதற்கு அரசியலமைப்பில் இடமில்லை. ஆனால், அமெரிக்காவில் ஒவ்வொருவரும் அமெரிக்கக் குடிமகனாகக் கருதப்படுவதோடு, அவர் குடியிருக்கும் மாநிலத்தின் குடிமகனாகவும் கருதப்படுகிறார். இதுவே 'இரட்டைக் குடியுரிமை' (double citizenship) என அழைக்கப்படுகிறது. தேசிய அரசியலமைப்பால் வழங்கப்படும் குடியுரிமை, நாடு முழுவதுமுள்ள எல்லாக் குடிமக்களுக்கும் பொருந்தும்; ஆனால், மாநில அரசியலமைப்புகளால் வழங்கப்படும் குடியுரிமை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடலாம். இந்தியாவில் மாநில அரசுகள் அவற்றின் எல்லைகளுக்குள்ளே வாழும் குடிமக்களின் உரிமைகளைக் கூட்டவோ குறைக்கவோ அதிகாரமில்லாமலிருப்பது, இந் நாட்டுக் கூட்டாட்சி முறையின் குறைகளில் ஒன்றெனக் கருதப்படுகிறது.

(4) இந்தியக் குடியரசில் மத்திய அரசின் அலுவல்களைச் செய்யவும், மாநில அரசுகளின் அலுவல்களைச் செய்யவும் வெவ்வேறான அலுவல் துறைகள் இருந்தபோதிலும், அவை திட்டவட்டமாகத் தனித்து நின்று இயங்கவில்லை. மத்திய அரசின் சட்டங்களை மாநில அரசுகளின் ஊழியர்கள் நிறைவேற்றுவதும், மாநில அரசுகளின் சட்டங்களை மத்திய அரசின் ஊழியர்கள் நிறைவேற்றுவதும் சாதாரண நிகழ்ச்சிகளாய் அமைகின்றன. ஆனால், அமெரிக்காவில் இரு அரசுகளின் அலுவல் துறைகளும் கூடுமான

வரை தனித்து நின்று இயங்குகின்றன. நீதி நிருவாகத்தில்கூட இந்தியாவில் கனடாவைப்போல ஒரே வகையான பொதுவான நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மைய அரசின் சட்டங்களுக்கெதிரான வழக்குகளை விசாரிக்கச் சில நீதிமன்றங்களும், மாநில அரசுகளின் சட்டங்களுக்கெதிரான வழக்குகளை விசாரிக்கச் சில நீதிமன்றங்களும் தனித்தனியாக நம் நாட்டில் நிறுவப் படவில்லை.

(5) நம் மாநில கவர்னர்கள், குடியரசு தலைவரால் நியமிக்கப் பட்டு, அவர் தயவு இருக்கின்ற வரையில் பதவியிலிருப்பார்கள் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. கனடாவிலும் மாநில கவர்னர்களை நியமிக்கும் அதிகாரமும் நீக்கும் அதிகாரமும் கவர்னர்-ஜெனரலின் கைகளில் இருக்கின்றன என்பது அறியத் தக்கது. ஆனால், அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திலும் கவர்னர் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்; மாநிலச் சட்ட மன்றங்கள் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம். பன்னிரண்டு மாநிலங்களில் வாக்காளர்களுக்கு அவர்களை வேண்டாமென்று 'திருப்பி அழைக்கும்' (recall) உரிமையும் உண்டு. ஆனால், இந்தியாவிலோ மாநில கவர்னர்களின் நியமனங்களும் நீக்கங்களும் மாநில அரசுகளின் அதிகார எல்லைக்கு அப்பாற் பட்டவையாய் கருதப்படுகின்றன. கவர்னர்கள், மாநில மக்களின் தலைவர்களாய் கருதப்படாமல், மத்திய அரசின் பிரதி நிதிகளாய் கருதப்படுவதற்கு இதுவே காரணம்.

(6) மாநிலச் சட்ட மன்றத்தால் இயற்றப்படும் மசோதா கவர்னரின் இசைவைப் பெற அவருக்கு அனுப்பப்படும்பொழுது, அவர் அதை ஏற்றுக்கொள்ளவும் செய்யாமல், மறுக்கவும் செய்யாமல், குடியரசு தலைவரின் முடிவுக்கு அனுப்பி வைக்கலாம். அவ்வாறு வரும் மசோதாவைக் குடியரசு தலைவருக்கு ஏற்கவும் மறுக்கவும் உரிமை உண்டு. இம்முறை மாநிலங்கள் வழக்கத்துக்கு மாறான வகையில் குடியரசு தலைவரால் கட்டுப்படுத்தப்படுவதை உணர்த்துகிறது. அரசியலமைப்பு மாநிலப் பட்டியலில் 66 இனங்களைக் கூறி, அவற்றின்மீது சட்டமியற்றும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு அளிக்கிறது. மாநிலங்களுக்கு வேண்டிய சட்டங்களை இயற்ற எல்லா மாநிலங்களிலும் சட்டமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாநிலச் சட்டமன்றம் ஒன்றால், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பொருள்மீது இயற்றப்படும் சட்டமொன்று, குடியரசு தலைவரால் மறுக்கப்படுவதற்கு அரசியலமைப்பு இடமளிப்பது, மாநிலங்களின் உரிமைகளை பாதிக்கிறது என்பதில் ஐயமில்லை. கனடாவின் அரசியலமைப்பும் அதன்

கவர்னர்-ஜெனரலுக்கு மாநிலச் சட்டங்களை ஏற்க மறுக்க அதிகாரமளிக்கிறது. அமெரிக்கக் குடியரசு தலைவரால் இது போன்ற அதிகாரத்தைக் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது என்பது கூறத் தேவையில்லை.

(7) மைய அரசின் சட்டங்கள் நாடு முழுவதும் தங்கு தடையின்றிச் செயல்படவும், அதன் ஆட்சித்துறை அதிகாரங்களில் மாநில அரசுகளின் ஆட்சித்துறை அதிகாரங்கள் குறுக்கிடாமல் இருக்கவும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துத் தொடர்பு சாதனங்களை அமைத்துப் பராமரிக்கவும், இருப்புப்பாதைகளைப் பாதுகாக்கவும், மைய அரசு மாநில அரசுகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கலாம். எந்த மாநில அரசாவது மைய அரசின் மேற்கண்ட கட்டளைகளை ஏற்க மறுத்தால், அதன் அரசாங்கம் கலைக்கப்பட்டு, அதன் பொறுப்புகள் குடியரசு தலைவரின் கைகளுக்கு மாற்றப்படலாம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அமெரிக்க அரசியலமைப்பிற்கு முற்றிலும் புறம்பானவையாகும்.

(8) இந்தியப் பாராளுமன்றத்தின் மேல்சபை 'மாநிலங்கள் சபை' என்றழைக்கப்பட்டபோதிலும், எல்லா மாநிலங்களுக்கும் அவற்றில் சமமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படாதது ஒரு பெருங் குறையே. மக்கள்தொகையின் அடிப்படையில் கீழ்ச் சபையிலும் மேல் சபையிலும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவது இரு சபைகளிலும் பெரிய மாநிலங்களுக்கே செல்வாக்கைத் தருகின்றது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் மேல் சபைகளில், எல்லா மாநிலங்களுக்கும், அவற்றிடையே உள்ள வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், ஒத்த பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவது அறியத்தக்கது. நாம் தழுவியிருக்கும் கனடிய அரசியலமைப்பும் அதன் மேல் சபையில் பெரிய மாநிலங்களுக்குக் கூடுதலான உறுப்பினர்களையும், சிறிய மாநிலங்களுக்குக் குறைவான உறுப்பினர்களையும் அளிக்கிறது.

(9) மாநிலங்கள் சபை, மூன்றில் இரு பங்குப் பெரும்பான்மையால், மாநிலப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் ஒரு பொருள்பற்றி, அதன்மீது மத்தியப் பாராளுமன்றம் சட்டமியற்றுவது தேசிய நலனுக்கு நல்லது என்று தீர்மானம் நிறைவேற்றினுல், அப் பொருள்பற்றிச் சட்டமியற்றக்கூடிய அதிகாரம் மாநில அரசுகளிடமிருந்து மைய அரசிற்கு மாறிவிடும். அதிகாரப் பிரிவினை இரு அரசுகளையும் பாதிக்கும் அம்சமாகும். ஒரு பட்டியலிலிருந்து மற்றொரு பட்டியலுக்கு ஓர் இனத்தை மாற்றவேண்டுமென்றால், அவ்வேற்பாடு தாற்காலிகமாக ஓராண்டுக்குத்தான்

நீடிக்கும் என்றாலும், மத்திய அரசு மட்டுமே அம் மாற்றத்தைச் செய்வது என்பது முறையாகாது. அமெரிக்கக் கூட்டாட்சியில் இது போன்ற மாற்றங்களுக்கு இடமில்லை.

(10) இந்திய அரசியலமைப்பு மத்திய அரசு, மாநில அரசுகள் இரண்டிற்குமே பொதுவான அமைப்பாக விளங்குவதால், அதை மாற்றுவதற்கு இரு அரசுகளின் இசைவைப் பெறுவதே முறையாகும். ஆனால், நம் அரசியலமைப்பின் பல பிரிவுகள் மாநிலங்களின் இணக்கத்தைப் பெறாமலேயே மாற்றி அமைக்கப் படலாம். மேலும் நம் நாட்டில் அரசியலமைப்புத் திருத்தங்கள் மத்தியப் பாராளுமன்றத்தால் மட்டுமே தொடங்கப்படலாம்; மாநிலங்கள் அவ்வகையான திருத்தங்களைக் கோர முடியாது. அமெரிக்கக் கூட்டாட்சியில் முக்கால் பங்கு மாநிலங்களின் ஒப்பத்தைப் பெறாமல் அரசியலமைப்பின் எந்த விதியையும் திருத்துவது என்பது இயலாத காரியம்; மேலும், அங்கே மாநிலங்களுக்கும் அரசியலமைப்புத் திருத்தங்களை முன் மொழியும் உரிமை தரப்பட்டிருக்கிறது.

(11) இந்தியக் கூட்டாட்சி, நெருக்கடி காலங்களில் ஒற்றை ஆட்சியாய் மாற்றப்படுவதற்கு அரசியலமைப்பு வகை செய்கிறது. நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாகக் குடியரசு தலைவர் அறிவித்தால், மாநிலப் பட்டியலிலுள்ள பொருள்கள்மீது சட்டமியற்றும் அதிகாரம் மத்தியப் பாராளுமன்றத்தின் உரிமையாகும். கூட்டாட்சியின் அடிப்படையான அதிகாரப் பங்கீடே தாற்காலிகமாகத் தள்ளிவைக்கப்படும் நிலை விரும்பத்தக்கதன்று. நெருக்கடி காலங்களில் மாநில அரசுகளின் ஆட்சித்துறை அதிகாரங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படவேண்டும் என்பது பற்றி, மைய அரசு ஆணைகள் பிறப்பிக்கலாம்; மாநில அரசுகள் அவற்றின்படி நடக்கக் கடமைப்பட்டவை. அமெரிக்காவில் அரசியலமைப்பால் வகுக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பங்கீட்டை யாரும் ஆட்டி அசைக்க முடியாது. மாநில அரசுகளை அரசியலமைப்பின் விதிகள் படி அவை இயங்கவில்லை எனக் காரணம் காட்டி இந்தியாவில் கலைக்க முடிவதுபோல அமெரிக்காவில் கலைக்க முடியாது. நம் அரசியலமைப்பின் நெருக்கடி நிலை விதிகளைக் கருத்திற்கொண்டே நம் நாடு சாதாரணக் காலங்களில் கூட்டாட்சியாகவும், நெருக்கடி காலங்களில் ஒற்றை ஆட்சியாகவும் இயங்க அரசியலமைப்பு வழி வகுத்திருக்கிறது என அரசியல் பண்டிதர்கள் கூறுகின்றனர்.

இதுவரை கூறப்பட்ட செய்திகளிலிருந்து, இந்தியக் கூட்டாட்சி அமெரிக்கக் கூட்டாட்சியைப் போன்றதொரு முழுமையான கூட்டாட்சி அன்று என்பதும், கனடாவைப் போன்றதோர்

அரைகுறையான கூட்டாட்சி என்பதும் தெளிவாகிறது. இந்திய அரசியலமைப்பு உரையாசிரியரான துர்கா தாஸ் பாசு (Durga Das Basu) இந்தியாவைத் தூய கூட்டாட்சி என்றோ தூய ஒற்றை ஆட்சி என்றோ கூறுவதற்கில்லை என்றும், அது இரண்டும் கலந்த ஒரு புதுவகையான கலவை என்றும் கருதுகிறார். கூட்டாட்சி அரசியலமைப்புகளை ஆராயும் நிபுணரான K. C. வியர் நம் அரசிய லமைப்பு, கூட்டாட்சிப் பண்புகளைக் கொண்டிருக்கும் ஒற்றை ஆட்சியைத் தோற்றுவிக்கிறதே ஒழிய, ஒற்றை ஆட்சிப் பண்பு களைக் கொண்டிருக்கும் கூட்டாட்சியைத் தோற்றுவிக்கவில்லை எனக் கூறுகிறார்.

அடிப்படை உரிமைகள்

இந்திய அரசியலமைப்பின் மூன்றாவது பகுதி, இந் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை விவரிக்கிறது. ஆதார உரிமை களைப் பற்றி இந்திய அரசியலமைப்பில் காணப்படுவது போன்ற விரிவான விளக்கத்தை வேறெந்த நாட்டின் அரசியலமைப்பிலும் காண்பது அரிது. அமெரிக்க அரசியலமைப்பைத் தழுவியே இந்திய அரசியலமைப்புத் தரும் அடிப்படை உரிமைகள் அமைந் திருக்கின்றன. அரசியலமைப்பின் 12ஆவது விதியிலிருந்து 35ஆவது விதி முடிய இருபத்துநான்கு விதிகள் நம் நாட்டவரின் மனித உரிமைகளை அறிவிக்கின்றன. சமத்துவ உரிமை (விதிகள் 14, 15, 16, 17, 18), தன்னுரிமை (விதிகள் 19, 20, 21, 22), சுரண்டலுக்கு எதிரான உரிமை (விதிகள் 23, 24), சமயச் சுதந்திர உரிமை (விதிகள் 25, 26, 27, 28), கலாசார, கல்வி உரிமைகள் (விதிகள் 29, 30), சொத்துரிமை (விதி 31), சட்டப்படி பரிகாரங்கள் தேடும் உரிமை (விதி 32) ஆகிய ஏழு வகையான உரிமைகள் நம் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன. இனி அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

(1) **சமத்துவ உரிமை** (Right to Equality): நம் அரசிய லமைப்பு, சட்டத்தின் முன் எல்லாக் குடிமக்களும் சமம் என்ற ஜனநாயகத் தத்துவத்தை வற்புறுத்துகிறது. அரசு, அதன் மக்களுக்கிடையே இனம், சமயம், மொழி, சாதி, பால் ஆகிய வற்றின் அடிப்படையில் வேறுபாடு காணக்கூடாது. அது எல்லோருக்கும் ஒத்த வேலை வாய்ப்புகளைத் தரவேண்டும். கடைகள், உணவு விடுதிகள், பொழுதுபோக்கு இடங்கள், கிணறுகள், குளங்கள், சாலைகள், பொதுமக்கள் கூடுமிடங்கள் ஆகிய இடங்களுக்கு எல்லோருக்கும் தடையின்றிச் செல்ல உரிமை யுண்டு. அரசியலமைப்பு, தீண்டாமையை ஒழித்து அதை மேற் கொள்வதைச் சட்ட விரோதமாக்குகிறது.

(2) **தன்னுரிமை** (Right to Freedom): நம் அடிப்படை உரிமைகளில் மிகவும் போற்றிப் புகழத்தக்கவை தன்னுரிமைகளே. எல்லாக் குடிமக்களுக்கும் (அ) உள்ளக் கருத்தைத் தெரிவிக்கும் உரிமையும் (Freedom of speech and expression), (ஆ) அமைதியாகவும் ஆயுதங்களின்றியும் கூடும் உரிமையும் (Freedom of assembly), (இ) சங்கங்கள் அமைத்துக்கொள்ளும் உரிமையும் (Freedom of association), (ஈ) இந்தியா முழுதும் தடையின்றி நடமாடும் உரிமையும் (Freedom of movement), (உ) இந்திய நாட்டின் எந்தப் பகுதியிலும் தங்கிக் குடியிருக்கும் உரிமையும் (Freedom of residence and settlement), (ஊ) சொத்துகளை ஈட்டி, காத்து, வகுக்கும் உரிமையும் (Freedom of property), (எ) எந்தத் தொழிலோ, வாணிகமோ செய்யும் உரிமையும் (Freedom of profession, trade, occupation or business) உறுதியளிக்கப்படுகின்றன. ஆனால், இந்த உரிமைகளை யாரும் வரம்பற்ற வகையில் அனுபவிக்க முடியாதென்பதும், அவை 'நியாயமான கட்டுப்பாடுகளுக்கு' (reasonable restrictions) உட்பட்டவை என்பதும் அறியத்தக்கது. நம் நாட்டின் பாதுகாப்பு, நாம் அயல்நாடுகளோடு கொண்டிருக்கும் தோழமைத் தொடர்புகள், பொது அமைதி, தகைமை, ஒழுக்கம் ஆகியவைகளை பாதிக்கக்கூடிய வகையிலும், நீதிமன்ற அவமதிப்பு (Contempt of Court), நற்பெயரைக் கெடுக்கும் பழிப்புரை, குற்றம் செய்யத் தூண்டுதல் ஆகிய காரியங்களுக்காகவும் உரிமைகளைப் பயன்படுத்தக்கூடாது. சட்டத்தை மீறும் குற்றத்திற்கு மட்டுமே மக்களின் உயிரோ உரிமைகளோ பறிக்கப்படலாம். கைது செய்யப்படுகிறவர்களுக்கு அதற்குரிய காரணங்கள் உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும். ஒரே குற்றத்திற்காக ஒருவர்மேல் ஒரு முறைக்கு மேலாக வழக்குத் தொடர்வதோ, தண்டனை அளிப்பதோ சாத்தியமன்று.

(3) **சுரண்டலுக்கு எதிரான உரிமை** (Right against exploitation): மனிதர்கள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டுமென்பது இந்திய அரசியலமைப்பின் நோக்கமாகும். இழிவான செயல்களுக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் வைத்து வியாபாரம் செய்வதை அரசியலமைப்புத் தடை செய்கிறது. கட்டாய உழைப்பு (forced labour), கூலியில்லா வேலை (begar) ஆகியவற்றைப் பெறுவது சட்ட விரோதமான செயல்கள் என அறிவிக்கப்படுகின்றன. பதினான்கு வயதிற்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர் தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ ஆபத்தான வேலைகளில் வேலைக்கமர்த்தப்படுவதை அரசியலமைப்புத் தடை செய்கிறது.

(4) சமயச் சுதந்திர உரிமை (Right to freedom of religion): குடிமக்களுக்கு அவரவர் மனச்சான்றுபடி எந்தச் சமயத்தையும் ஏற்கவும், அதன்படி நடக்கவும், அதைப் பரப்பவும் அரசியலமைப்பு உரிமையளிக்கிறது. இந்துக் கோயில்கள், மற்றச் சமய நிறுவனங்கள் அனைத்தும் இந்துக்கள் அனைவர்க்கும் மேல் சாதி, கீழ்ச்சாதி என்ற வேறுபாடில்லாமல் திறந்துவிடப்பட்டன. எல்லாச் சமயப் பிரிவினர்க்கும், சமய நிறுவனங்களையும் அறநிலையங்களையும் நிறுவி, அவற்றைப் பேணும் உரிமையும், சமயத்துறை அலுவல்களை அவர்களே பொறுப்பேற்று நடத்தும் உரிமையும், சொத்துகளைத் தேடிப் பெற்று அவற்றைத் தங்களுக்கே சொந்தமாக்கித் தங்கள் விருப்பம்போல் அவற்றை நிருவகிக்கும் உரிமையும் அளிக்கப்பட்டிருக்கின்றன. பொதுப் பணத்திலிருந்து சமயத்தின் பராமரிப்புக்கெனப் பணம் செலவு செய்யப்படுவதையும், முழுதும் பொதுப் பணத்திலிருந்து நடத்தப்படும் கல்விக் கூடங்களில் சமயக் கல்வி புகட்டப்படுவதையும் அரசியலமைப்புத் தடை செய்கிறது. அரசு உதவிபெறும் கல்விக் கூடங்களில் சமயக் கல்வி அனுமதிக்கப்பட்டபோதிலும், அது எல்லோர்க்குமுரிய கட்டாயக் கல்வியாக இருக்கக்கூடாது என அரசியலமைப்பு அறிவுறுத்துகிறது.

(5) கலாசார, கல்வி உரிமைகள் (Cultural and Educational Rights): தனியானதொரு மொழியும், வரிவடிவமும் (script), பண்பாடும் உடைய மக்கள் அனைவர்க்கும் அவரவர் மொழியையும், வரிவடிவத்தையும், பண்பாட்டையும் பேணி வளர்க்கும் உரிமையை அரசியலமைப்பு வழங்குகிறது. அரசாலோ அல்லது அரசின் உதவி பெற்றோ நடத்தப்படும் கல்வி நிலையங்களில் எந்தக் குடிமகனும் அவனுடைய இனம், சமயம், மொழி, சாதி ஆகியவற்றின் அடிப்படையில் இடம் தர மறுக்கக்கூடாது. எல்லாச் சிறுபான்மையோரும் தங்கள் தனிப் பண்புகளை வளர்த்துக் கொள்ள கல்வி நிலையங்களை நிறுவும் உரிமையைப் பெறுகின்றனர். சிறுபான்மையோரால் நிருவகிக்கப்படும் கல்வி நிலையங்களுக்கும் மற்ற நிறுவனங்களைப் போலவே அரசின் உதவி பெறும் உரிமை உண்டு.

(6) சொத்துரிமை (Right to Property): சொந்த உபயோகத்திற்குச் சொத்துகளைச் சேகரிக்க விரும்புவது மனித இயல்பு; அச் சொத்துகளைத் தனி மனிதர்களுக்குக் காத்தளிப்பது அரசின் கடமையாகும். சட்ட அடிப்படையிலன்றி யாருடைய சொத்துகளும் பறிக்கப்படக்கூடாது என அரசியலமைப்பு அறிவுறுத்துகிறது. பொதுக் காரியங்களுக்குத் தனியாகச் சொத்துகளை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமேற்பட்டால், பாதிக்கப்படுவோர்க்குத் தக்க இழப்பீடு தரப்படவேண்டும்.

(7) **சட்டப்படி பரிகாரங்கள் தேடும் உரிமை** (Right to Constitutional Remedies): அரசியலமைப்பு, மக்களுக்கு அடிப்படை உரிமைகளை அளித்தால்மட்டும் போதாது; அரசு அவ்வுரிமைகளைத் தரத் தயங்கினலோ மறுத்தாலோ, மக்களுக்கு அரசுக்கெதிராக நின்று தங்கள் உரிமைகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் இருக்க வேண்டும். இந் நாட்டின் உயர் நீதிமன்றங்களும், தலைமை நீதிமன்றமும் அடிப்படை உரிமைகளை மக்கள் அனுபவிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய அதிகாரம் பெற்றிருக்கின்றன. நீதிமன்றங்கள் யாருக்கு வேண்டுமென்ருலும் மக்களுக்கு உரிய உரிமைகளைத் தரும்படி கட்டளையிட்டு ஆணைகள் பிறப்பிக்கலாம். அரசு, சாதாரணக் காலங்களில் மக்களின் உரிமைகளில் தலையிட முடியாது என்பது உண்மை என்ருலும், நெருக்கடி காலங்களில் அவற்றை அது தாற்காலிகமாகத் தள்ளிவைக்க முடியும். அரசாங்கம் நாட்டின் நலனைக் குலைக்கும் கேடுகளைத் தீர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் காலத்தில், மக்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதின் விளைவாய் அரசாங்கத்தின் முயற்சிகள் பயனற்றதாய் போகலாம். அரசு இருந்தால்தானே மக்கள் உரிமைகளை அனுபவிக்க முடியும்!

அரசு கொள்கையின் நெறிசெய் நியதிகள் (Directive Principles of State Policy)

இந்தியக் குடியரசை ஒரு நலம் நாடும் அரசாக ஆக்கும் நோக்கத்தோடு நம் அரசியலமைப்பின் தந்தைகள் அயர்லாந்தின் (Ireland) அரசியலமைப்பைத் தழுவி, நெறிசெய் நியதிகள் சிலவற்றைநம் அரசியலமைப்பில் இணைத்திருக்கின்றனர். மத்திய, மாநில அரசுகள் இக் கொள்கைகளைக் கருத்திற்கொண்டு அரசாள வேண்டுமென்று அரசியலமைப்பு விரும்புகின்றது. ‘எவ்வளவு அதிகப்படியான மக்களுக்கு எவ்வளவு அதிகப்படியான நலன்களைப் (greatest happiness of the greatest number) பெற்றுத் தர முடியுமோ அதைச் செய்வதே நம் அரசின் லட்சியமாகும். அரசியலமைப்பின் 36ஆவது விதியிலிருந்து 51ஆவது விதி முடிய பதினறு விதிகள் நெறிசெய் நியதிகளை விளக்குகின்றன; அவற்றில் முக்கியமான சிலவற்றைக் கீழே காண்போம். குடிமக்களில் ஆண் பெண் அனைவரும் போதுமான வாழ்க்கை வசதிகளைப் பெறவும், மூலதனமும் உற்பத்திச் சாதனங்களும் பொதுநலனை பாதிக்கின்ற வகையில் சிலர் கைகளில் குவிந்துவிடாமல் காக்கவும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேவகையான வேலைக்கு ஒரே வகையான ஊதியம் அளிக்கப்படவும், குடிமக்கள் தங்கள் வயதுக்கும் வலுவுக்கும் பொருத்தமற்ற வேலைகளில் ஈடுபட வேண்டிய பொருளாதார நெருக்கடி தோன்ருமலிருக்கவும்,

அரசின் அதிகாரங்கள் பயன்படுத்தபட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளை அமைத்து, அவை சுயஆட்சி நிறுவனங்களாக இயங்கத் தேவையான அதிகாரங்களை அளிப்பதற்கு அரசு முன்வர வேண்டும். வேலை செய்யவும், கல்வி கற்கவும், வேலையின்மை, முதுமை, பிணி போன்றவைகளால் அவதியுறும்பொழுது பொது உதவி பெறவும் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். எல்லாத் தொழிலாளர்களும், வேலை, வாழ்க்கை நடத்தப் போதுமான ஊதியம், நாகரிகமான வாழ்க்கைத்தரத்திற்கு வேண்டிய சூழ்நிலை, ஓய்வு, சமுதாய, காலாசார வாய்ப்புகள் (social and cultural opportunities) ஆகியவற்றைப் பெற அரசு முயலவேண்டும். இந்தியா முழுதும் ஒரே மாதிரியான சிவில் சட்டத் தொகுப்பொன்றைத் தயாரிப்பதும் அரசு செய்ய வேண்டிய செயல்களில் ஒன்றாகும். பதினான்கு வயதுவரை எல்லாச் சிறுவர்கட்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதும், பின்தங்கிய மக்களின் கல்வியையும் பொருளாதார நலன்களையும் வளர்ப்பதும், அவர்களைச் சமூக அநீதியிலிருந்தும் சுரண்டப்படுவதிலிருந்தும் காப்பதும், அரசின் கொள்கைகளாய் அமைய வேண்டும். அரசு மக்களின் ஊட்ட சக்தியை உயர்த்தி, ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்து, மது வகைகளைத் தடை செய்வதை அதன் தலையாய கடமையாகக் கருத வேண்டும். உழவுத் தொழிலையும் கால்நடை வளர்ப்பையும் தற்கால விஞ்ஞான அடிப்படையில் அமைப்பதற்கும், பசுக்களையும் கன்றுகளையும் இறைச்சிக்காகக் கொல்வதைத் தடுப்பதற்கும் அரசு முயல வேண்டும். கலைநயமும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களையும் இடங்களையும் சூறையாடுதல், உருக்குலைத்தல், அழித்தல், அப்புறப்படுத்துதல், ஏற்றுமதி செய்யப்படுதல் ஆகியவைகளிலிருந்து காப்பது அரசின் கடமையாகும். நீதித் துறையை ஆட்சித்துறையிலிருந்து பிரிப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். உலகச் சமாதானத்தை வளர்ப்பதும், நாடுகளிடையே நியாயமானதும் கௌரவமானதுமான உறவுகளைப் பேணுவதும், சர்வதேசச் சட்டத்திற்கும் உடன்படிக்கைகளுக்கும் மதிப்பை வளர்ப்பதும், உலக நாடுகளிடையே எழும் வழக்குகளைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ளும்படி அவற்றை ஊக்குவிப்பதும், உலக அரங்கில் நம்நாடு செய்யவேண்டிய செயல்களாகும்.

நெறிசெய் நியதிகளில் அடங்கியிருக்கும் கருத்துரைகள் அனைத்தும் ஏற்கப்பட்டால் இந்தியா மாசு மறுவற்ற ஒரு ஜனநாயகக் குடியரசாக விளங்குமென்பதில் ஐயமில்லை. அடிப்படை உரிமைகளுக்கும் நெறிசெய் நியதிகளுக்கும் ஒரு பெரிய

வேறுபாடு உண்டு. அடிப்படை உரிமைகளைக் கட்டாயமாக நிறைவேற்ற அரசு கடமைப்பட்டது; ஆனால், நெறிசெய் நியதிகளின்படி அரசு ஒழுகவேண்டுமென்பது அவசியமில்லை. நியதி ஒன்றை அரசு நிறைவேற்றவில்லை என்று நாம் எந்த நீதிமன்றத்திடமும் முறையிட்டுக்கொள்ள முடியாது. அடிப்படை உரிமைகள் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டவையாய் (justiciable) இருப்பது போன்று, நெறிசெய் நியதிகள் இல்லாமல் அதன் விசாரணைக்கு அப்பாற்பட்டவையாய் (non-justiciable) இருப்பது நெறிசெய் நியதிகளை வலுவற்றதாக்குகிறது.

வயதுவந்தோர் வாக்குரிமை (Adult Franchise)

இந்திய அரசியலமைப்பு இருபத்தொரு வயதிற்குக் குறையாத ஆண் பெண் அனைவர்க்கும் வாக்குரிமை வழங்குகிறது. இங்கிலாந்தில் நூறு ஆண்டுகட்குமேல் போராடியதன் விளைவாக மக்கள் பெற்ற வாக்குரிமையை, இந்தியா என்று குடியரசாகியதோ அன்றே நாம் பெற்றுவிட்டோம் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் நாட்டு மக்களில் பதினைன்கு சதவிகிதத்தினருக்கே வாக்குரிமை அளித்தது; ஆனால், புதிய அரசியலமைப்பு ஐம்பது சதவிகிதத்துக்கு மேலானோருக்கு வாக்குரிமை வழங்கியிருக்கிறது. வாக்குரிமை பெறுவதற்கு வயதொன்றே தகுதியாய்க் கருதப்படுகிறது. வாக்காளர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் இருக்கவேண்டுமென்பதோ, சொத்துடையவர்களாய் இருக்கவேண்டுமென்பதோ, வரி செலுத்துகிறவர்களாய் இருக்கவேண்டுமென்பதோ அவசியமில்லை. 1971ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாவது பொதுத் தேர்தலில் இருபத்தேழு கோடிக்கு மேலான இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது; உலகில் வேறெந்த நாட்டிலும் இவ்வளவு அதிகமான வாக்காளர்கள் இல்லை என்பது அறியத்தக்கது. இனம், சமயம், மொழி, பால் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தக் குடிமகனையும் வாக்காளர் பட்டியலிலிருந்து விலக்கிவைக்க முடியாது. தொகுதியில் குடியிராமை, மூளைக் கோளாறு, குற்றம் புரிந்தமை ஆகிய காரணங்களுக்காகச் சிலரை வாக்குரிமை பெற தகுதியற்றவராய் விலக்கிவைக்க அரசியலமைப்பு இடமளிக்கிறது. இந்தியா, பரந்த நிலப் பரப்புள்ள நாடு; அது கோடிக் கணக்கான வாக்காளர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்கள்; வாக்குரிமையின் பொருளைப் புரிந்துகொள்ளும் பகுத்தறிவு அவர்களுக்கு இருக்குமா எனப் பல தலைவர்கள் சந்தேகப்பட்டனர். இதுவரை நடந்த பொதுத் தேர்தல்கள் வெற்றிகரமாக நடந்திருப்பதிலிருந்து அரசியலமைப்பு மக்கள்பால் வைத்த நம்பிக்கை வீணாகவில்லை என்றே கூறவேண்டும்.

சமயச் சார்பற்ற நாடு (Secular State)

இந்திய அரசியலமைப்பு, மனிதனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள தொடர்புகளைக் கருதுகிறதே ஒழிய, மனிதனுக்கும் கடவுளுக்குமிடையேயுள்ள தொடர்புகளைக் கருதவில்லை. கடவுளையும் சமயத்தையும் பற்றிய சிந்தனைகள் அவரவர் மனச் சான்றைப் பொறுத்தது; அரசு அதில் தலையிடுவது பொருந்தாது என்பது நம் அரசியலமைப்பின் கருத்தாகும். இன்று இந்தியாவில் இந்நாட்டிலேயே தோன்றி வளர்ந்த சமயங்களோடு, அன்னியச் சமயங்களும் வேறூன்றி இருக்கின்றன. சில சமயங்கள் கோடிக் கணக்கான சீடர்களையும், சில சமயங்கள் மிகக் குறைவான சீடர்களையும் பெற்றிருக்கின்றன. அரசைப் பொறுத்தவரை எல்லாச் சமயங்களும் சமமானவையே; பெரும்பான்மையோர் சமயம், சிறுபான்மையோர் சமயம் என்று அது வேறுபடுத்த முடியாது; எந்த மதத்திற்கும் தனிப்பட்ட சலுகை என்பது கிடையாது; 'அரசின் மதம்' (State religion) என்ற நிலை எந்த மதத்திற்கும் அளிக்கப்படவில்லை; 'எம்மதமும் சம்மதமே' என்ற கொள்கை நம் அரசியலமைப்பால் முழு அளவிற்கு ஏற்றுக் கொள்ளப் படுகிறது. அயர்லாந்தின் அரசியலமைப்புக் கத்தோலிக்கர்களுக்கும், பர்மாவின் அரசியலமைப்புப் பௌத்தர்களுக்கும் சிறப்பான நிலை உண்டு என அறிவிப்பதுபோல, நம் அரசியலமைப்பு எந்தச் சமயத்தையும் உயர்த்திக் கூறவில்லை. இந்தியாவைச் சமயச் சார்பற்ற (non-religious) நாடு என்றுதான் கூறமுடியுமே ஒழிய, சமயமில்லாத (un-religious) நாடென்றோ, சமயத்திற்கு மாறான (irreligious) நாடென்றோ, சமயத்தை எதிர்க்கும் (anti-religious) நாடென்றோ கூறமுடியாது. குடிமக்கள் அவரவர்க்குரிய சமயப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ள, அரசு தன்னால் இயன்ற உதவிசெய்து வருவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். சமயத்தின் பெயரால் அமைதியையோ, ஒழுக்கத்தையோ, ஆராக்கியத்தையோ கெடுக்கின்ற செயல்களில் யாரும் ஈடுபடக்கூடாது என்றும் அரசியலமைப்புக் கண்டிக்கிறது.

குடியாட்சிக் காப்புகள் (Democratic Safeguards)

மிகப் பழங்காலத்திலிருந்தே முடியாட்சியின்கீழ் வாழ்ந்து பழகிப்போன இந்திய மக்களிடையே குடியாட்சி செம்மையாகச் செயல்படுமா என்று பலர் ஐயுற்றனர். கணக்கற்ற சாதிகளும் சமயப் பிரிவுகளும் நம் சமுதாயத்தை அரித்தழித்துக்கொண்டிருந்தன. எண்பத்தைந்து சதவிகிதத்துக்கு மேலான மக்கள் தற்குறிகளாய் வாழ்ந்தனர். சமுதாயத்தில் கற்பனைக்கெட்டாத அளவுக்கு ஏற்றத்தாழ்வுகள் நலிந்திருந்தன. கட்டுப்பாடுள்ள

அரசியல் கட்சிகள் தேவையான அளவுக்குத் தோன்றவில்லை; தலைவர்களுக்கும் குடியாட்சி நிறுவனங்கள்மூலம் நிருவாகம் செய்து அனுபவமில்லை; இந்தச் சூழ்நிலையில் இந்திய மண்ணில் குடியாட்சி தழைக்குமா எனப் பலர் ஐயுற்றதில் வியப்பில்லை. எப்படியும் அதைத் தழைக்க வைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அரசியலமைப்பில் அதற்குப் பக்கபலமாகச் சில காப்புகள் புகுத்தப்பட்டன. கூட்டாட்சியில் மாநில அரசுகளைவிட மைய அரசை வலுவுள்ளதாக்கியும், தலைமை நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றங்களுக்கும் தனிநிலையை வழங்கியும், சிறுபான்மையோரின் நலன்களைப் பாதுகாத்தும், பொதுப்பணிக் கழகங்களை நிறுவியும், நியாயமான வகையில் தேர்தல்களை நடத்தத் தேர்தல் குழு ஒன்றை அமைத்தும், நெருக்கடி நிலைகளைச் சமாளிக்கக் குடியரசு தலைவருக்கு அதிகாரமளித்தும், குடியாட்சி குற்றங் குறையின்றிச் செயல்பட அரசியலமைப்புத் துணை செய்கிறது. எவ்வளவோ சிக்கல்கள் இன்று நம்நாட்டைச் சூழ்ந்திருந்த போதிலும், குடியாட்சியில் நம் சாதனைகள் மன நிறைவளிக்கின்றவையாய் இருக்கின்றன. இந்தியா, குடியரசாக மாறி இன்னும் இருபத்தைந்து ஆண்டுகள்கூட ஆகவில்லை என்பதையும், ஒரு நாட்டின் வரலாற்றில் இருபத்தைந்து ஆண்டுகள் என்பது கடல் நீரில் ஒரு துளி நீருக்குச் சமம் என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தால், நம் எதிர்காலம் சிறப்பாய் அமையும் என நம்பத் தோன்றுகின்றது.

காமன்வெல்த்துக் கழகத்தில் அங்கம் வகித்தல்

இந்தியா ஒரு குடியரசான பிறகும் காமன்வெல்த்தில் தொடர்ந்து அங்கம் வகிக்க முடிவு செய்தது, காமன்வெல்த்தின் வரலாற்றில் குறிப்பிடத் தக்கதொரு கட்டமாகும். பிரிட்டனோடு இந்தியா கொண்டிருந்த அரசியல் உறவுகள் 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாளோடு முடிவடைந்தன. குடியரசான இந்தியா, காமன்வெல்த்துச் சபையில் தொடர்ந்து நீடிக்க விரும்பியதை மற்றக் காமன்வெல்த்து நாடுகள் மன மகிழ்வோடு வரவேற்று, 'பிரிட்டிஷ் காமன்வெல்த்து' என்ற பெயரை, இந்தியக் குடியரசின் இறைமைக்கு உகந்த வகையில் 'காமன் வெல்த்து' என்று மாற்றியும் அமைத்தன. இன்று நாம் பிரிட்டிஷ் அரசியை நம்முடைய அரசியாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவரைக் காமன்வெல்த்தின் தலைவியாக ஏற்கிறோம். காமன்வெல்த்துச் சபையில் நாமாக விரும்பியே நாம் அங்கம் வகிப்பதனால், அது நம் சுதந்திரத்தையோ இறைமையையோ எந்த விதத்திலும் பாதிப்பதாகாது. நம்முடைய காமன் வெல்த்து உறவுகள் நாம் அரசியல், பொருளாதார, சமுதாயத்

துறைகளில் முன்னேற்றமடைய உதவுகின்றன. பாராளுமன்ற நிறுவனங்கள், வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை, சட்டத்தின் ஆட்சி, நடுநிலை தவறா நீதித்துறை, திறமையுள்ள அரசு அலுவல் துறை போன்ற நிறுவனங்களெல்லாம் நாம் காமன்வெல்த்து நாடுகளோடு கொண்டிருந்த தொடர்புகளால் நம் அரசியலமைப்பில் இடம் பெற்றவையாகும். இந்தியா காமன்வெல்த்துக் கழகத்தில் இருப்பது, ஐக்கிய நாடுகள் சபையில் இருப்பதை ஒத்தது என்ற கருத்தை ஒரு திருத்தத்தோடு நாம் ஏற்கவேண்டும். காமன்வெல்த்தின் உறுப்பு நாடுகளிடையே ஒரு குடும்பப் பாசம் உண்டு; ஒரு காலத்தில் அவை அனைத்தும் பிரிட்டிஷ் பேரரசின் அங்க நாடுகளாய் விளங்கியவை. ஆனால், ஐக்கிய நாடுகள் சபைக்கு அந்தப் பெருமை இல்லை; அச் சபையின் அங்க நாடுகளுக்குப் பொதுவான ஒரு வரலாற்றுப் பின்னணி கிடையாது. இந்தியா பிரிட்டிஷ் அரசியைக் காமன்வெல்த்தின் தலைவியாக ஏற்றுக் கௌரவிப்பது போல, பிரிட்டனும், இந்தியர்கள் பிரிட்டனில் இந்தியா குடியரசாவதற்கு முன்பு என்னென்ன உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்தனரோ, அவற்றை இன்றும் அனுபவிப்பதற்கு அனுமதிக்கிறது.

அரசியலமைப்பைத் திருத்துதல்

இந்திய அரசியலமைப்பின் 398ஆம் விதி அரசியலமைப்பைத் திருத்துகின்ற முறையை விளக்குகிறது. நம் அரசியலமைப்பை மிகவும் நெகிழும் அரசியலமைப்பு என்றோ அல்லது மிகவும் நெகிழாத அரசியலமைப்பு என்றோ கூறுவதற்கில்லை. அரசியலமைப்பின் விதிகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, அம்மூன்று பிரிவுகளிலுள்ள விதிகளைத் திருத்துவதற்கு மூன்று விதமான முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. (1) அரசியலமைப்பின் சாதாரண விதிகள் தேசியப் பாராளுமன்றத்தால் அது எந்த முறையைப் பின்பற்றிச் சாதாரணச் சட்டங்களை இயற்றுகிறதோ அம் முறையைப் பின்பற்றியே திருத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, புதிய மாநிலங்களை உருவாக்குதல், இருக்கின்ற மாநிலங்களை மாற்றியமைத்தல் (விதி 3), மாநிலங்களில் மேல் சபைகளை நிறுவுதல் அல்லது நீக்குதல் (விதி 169), மத்திய அரசால் ஆட்சி செய்யப்படும் பகுதிகளின் (Union Territories) அரசியலமைப்புகளைத் தீர்மானித்தல் (விதி 240) ஆகிய செயல்களைத் தேசியப் பாராளுமன்றம் சாதாரணச் சட்டங்கள் வாயிலாகவே செய்யலாம். (2) அரசியலமைப்பின் கூட்டாட்சி ஏற்பாடுகள் (federal provisions) எனப்படும் விதிகளைத் திருத்த, பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேருக்கு மேலானோரின் இசைவையும், சபைக்கு வந்திருந்து வாக்களிப்பில் பங்கு

பெறுவோரில் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் இசைவையும் பெறுவதோடு, கூட்டாட்சியிலுள்ள மாநிலங்களில் பெரும் பான்மையானவற்றின் இசைவையும் பெறவேண்டும். எடுத்துக் காட்டாக, குடியரசு தலைவரின் தேர்தல் (விதிகள் 54, 55), கூட்டாட்சி, மாநிலங்கள் ஆகியவற்றின் ஆட்சித்துறை அதிகாரத்தின் அளவு (விதிகள் 73, 162), தலைமை நீதிமன்றம் உயர் நீதிமன்றங்கள் (விதிகள் 124—147, 214—232), மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சட்டமியற்றும் அதிகாரப் பங்கீடு (விதிகள் 245—255, அட்டவணை 7), பாராளுமன்றத்தில் மாநிலங் களின் பிரதிநிதித்துவம் (அட்டவணை 4), அரசியலமைப்பைத் திருத்தும் முறையைக் கூறும் விதி (விதி 368) ஆகியவற்றைத் திருத்துவதற்குப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் இரட்டைப் பெரும்பான்மை பெற்றால் மட்டும் போதாது; மாநிலங்களில் பெரும்பாலானவற்றின் இசைவையும் பெற வேண்டும். (3) அரசியலமைப்பின் மற்ற விதிகளைத் திருத்த பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தனித்தனியாக ஒவ்வொரு சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேருக்கு மேலானோரின் இசைவும், சபைக்கு வந்திருந்து வாக்களிப்பில் பங்கு பெறுவோரில் மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் இசைவும் இன்றியமை யாதது.

அரசியலமைப்பின் திருத்தங்கள் அனைத்தும் மத்தியப் பாராளு மன்றத்தினால் மட்டுமே முன்மொழியப்படலாம் என்பது அறியத் தக்கது. அமெரிக்காவில் மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் வேண்டுகோள்படி கூட்டப்படும் பேரவை அரசியலமைப்பிற்குத் திருத்தங்களை முன்மொழிய உரிமை பெற்றிருப்பதுபோல இந்தியாவில் இல்லாதிருப்பது ஒரு குறையே. மாநிலங்களின் இசைவைப்பெற அவற்றின் சட்ட மன்றங்களுக்கு அனுப்பப்படும் அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களை அவை ஏற்கின்றனவா அல்லது மறுக்கின்றனவா என்பதை எவ்வளவு காலத்திற் குள்ளாகத் தெரியப்படுத்த வேண்டும் என்பதை அமெரிக்க அரசியலமைப்பைப் போலவே நம் அரசியலமைப்பும் குறிப்பிட வில்லை. சாதாரண மசோதாக்களை ஏற்க மறுக்கும் அதிகார முடைய குடியரசு தலைவருக்கு, அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களை ஏற்க மறுக்கும் அதிகாரமில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அரசியலமைப்பின் விதிகளை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு விதமான திருத்த முறையை நிர்ணயித் திருப்பது போன்ற ஏற்பாட்டை உலகில் நாம் வேறெந்த அரசிய லமைப்பிலும் பார்ப்பதற்கில்லை.

2. குடியரசு தலைவர்

(The President)

[முன்னுரை—தேர்ந்தெடுக்கும் முறை—பதவிக்காலம், தகுதிகள், ஊதியம் முதலியன—பதவி நீக்கம் செய்தல் — அதிகாரங்கள் : (அ) ஆட்சித்துறை — (ஆ) படைத்துறை — (இ) அயலரசு துறை— (ஈ) சட்டத்துறை—(உ) நீதித்துறை—(ஊ) நெருக்கடி நிலை.]

முன்னுரை

ஐம்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட இந்தியக் குடியரசின் முதற் குடிமகனாய் (First Citizen) விளங்கும் சிறப்பைப் பெறும் நம் குடியரசு தலைவர், அரசியலமைப்பால் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய பெருந் தலைவராய் கருதப்படுகிறார். அமைப்பில் அமெரிக்கக் குடியரசு தலைவரைப் போன்றும், அதிகாரங்களில் ஆங்கில அரசி போன்றும் தோற்றமளிக்கும் நம் நாட்டுத் தலைவரின் நிலை, 'ஐரிஷ் (Irish) குடியரசு' தலைவரின் நிலையை நினைவூட்டுகிறது. குடியரசு தலைவரைப் பற்றிய செய்திகள் நம் அரசியலமைப்பின் பல பகுதிகளில் சிதறிக் கிடக்கின்றன; அவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி, நாட்டின் நிலவும் மரபுகளையும் கருத்திற்கொண்டு நம் குடியரசு தலைவரின் நிலையை மதிப்பிட்டால் அவர் பெயரளவில் மட்டுமே நாட்டின் தலைவராய் விளங்குவது தெளிவாகும். அமெரிக்கக் குடியரசு தலைவரை வடதுருவம் என்று சொன்னால், இந்தியக் குடியரசு தலைவரைத் தென்துருவம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இரு தலைவர்களுக்குமிடையே வேற்றுமையைப் பார்க்கின்றோம்.

தேர்ந்தெடுக்கும் முறை

மத்தியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், மாநிலச் சட்டமன்றங்களின் கீழ்ச் சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அடங்கிய தேர்தல் குழுவினால், 'விகிதப் பிரதிநிதித்துவ முறை'ப்படி இந்தியக்

குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்தல் குழுவில், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் சமமான இடமளிக்க வேண்டுமென்பதற்காக, தேர்தல் குழுவிலுள்ள மொத்த வாக்குகளில் பாதிப்பங்கு மத்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதிப்பங்கு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. உலகில் வேறெந்தக் கூட்டாட்சியிலும் நாட்டின் தலைவர், மத்திய அரசு மாநில அரசுகள் ஆகிய இரண்டின் பிரதிநிதிகளைக் கொண்ட தேர்தல் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இந்தியாவில் மக்களே தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதென்பது நேரத்தையும், சக்தியையும், பொருளையும் வீணாக்கும் என்று எண்ணிய அரசியல் நிர்ணயச் சபை, மறைமுகத் தேர்தலுக்கு வகை செய்திருக்கிறது.

பதவிக்காலம், தகுதிகள், ஊதியம் முதலியன

குடியரசு தலைவர் ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பார். ஒருவரே எத்தனை தடவை வேண்டுமென்றாலும் மீண்டும் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தடை எதுவுமில்லை. அமெரிக்காவிலும் அயர்லாந்திலும் யாரும் இரு தடவைகளுக்கு மேல் குடியரசு தலைவராய் பதவி வகிக்கக்கூடாதென்று அவ்வரசியலமைப்புகள் அறிவிக்கின்றன. முப்பத்தைந்து வயது நிரம்பிய எல்லா இந்தியக் குடிமக்களும், அவர்கள் கீழ்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தகுதியுடையோராய் இருந்தால், குடியரசு தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம். மத்திய, மாநில, தல அரசாங்கங்களின்கீழ் ஊதியம் பெறும் அலுவல் பார்ப்போரை, தலைவராவதற்குத் தகுதியற்றோர் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. நம் குடியரசு தலைவருக்கு மாதம் ஒன்றிற்கு 10,000 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. டெல்லியிலுள்ள ராஷ்டிரபதி பவனில் அவர் இலவசமாய் குடியிருப்பார். பதவியிலிருந்து ஓய்வு பெறும் குடியரசு தலைவருக்கு ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் ஓய்வுத் தொகை வழங்கப்படும். குடியரசு தலைவர் அவருடைய அதிகாரங்களைச் செயல்படுத்திய வகையிலும், பொறுப்புகளை நிறைவேற்றிய வகையிலும் செய்த காரியங்களுக்கு எந்த நீதிமன்றத்திற்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவரல்லர். அவர் பதவியிலிருக்கும் வரை அவருக்கெதிராக எந்தக் குற்ற வழக்குகளும் தொடரவோ அவரைக் கைது செய்யவோ முடியாது. அவர்மீது சொந்த முறையில் சிவில் வழக்குத் தொடர வேண்டுமென்றால், இரண்டு மாதங்களுக்கு முன்பாக அதைப் பற்றி அவருக்கு அறிவித்த பிறகே, வழக்குத் தொடர முடியும்.

பதவி நீக்கம் செய்தல்

குடியரசு தலைவராகப் பதவி ஏற்கும் ஒவ்வொருவரும் அவர் தலைவரின் பொறுப்புகளை உண்மையாகச் செயலாற்றுவதாகவும், அவரால் இயன்றவரை இந்திய அரசியலமைப்பையும் சட்டங்களையும் காத்துப் பேணுவதாகவும், இந்திய மக்களின் நலனுக்காகவும் சேவைக்காகவும் அவரை ஈடுபடுத்திக்கொள்வதாகவும், இந்தியத் தலைமை நீதிபதி முன்பாக உறுதிமொழி கூறுவார். அரசியலமைப்பை மீறும் குற்றத்திற்காக, குடியரசு தலைவர் பாராளுமன்றத்தால் குற்றஞ் சாட்டப்பட்டுப் பதவியிலிருந்து விலக்கப்படலாம். இரு சபைகளில் எந்தச் சபையில் வேண்டுமென்றாலும் குற்றச்சாட்டுகளைத் தொடங்கலாம். குற்றச்சாட்டுகளைத் தொடங்கும் சபையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டால் அவை மறு சபையால் ஆராயப்படும். அச் சபையும் விசாரணைக்குப் பின்னர் குற்றச்சாட்டுகள் மெய்யென, அதன் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இருபங்கு உறுப்பினர்களால் முடிவு செய்தால், குடியரசு தலைவர் பதவியிலிருந்து விலக்கப்படுவார்.

அதிகாரங்கள்

ஆட்சித்துறை : குடியரசு தலைவர் ஆட்சித்துறை அதிகாரங்களின் உறைவிடமாகக் கருதப்படுகிறார். இந்திய அரசாங்கத்தின் ஆட்சித்துறைச் செயல்கள் அனைத்தும் அவர் பெயரால் அறிவிக்கப்பட வேண்டுமென அரசியலமைப்புக் கூறுகிறது. அரசாங்கத்தின் அலுவல்கள் தக்க வழிகளில் தடையின்றி நடைபெறவும், அவை அமைச்சர்களிடம் பகிர்ந்தளிக்கப்படவும் குடியரசு தலைவர் விதிகளைப் பிறப்பிப்பார். இந்தியாவின் நிருவாகத்தைப் பற்றியும், சட்டமியற்றுவதற்கான பொருள்களைப் பற்றியும் அமைச்சரவை எடுக்கும் முடிவுகள், பிரதம மந்திரியால் அவருக்குத் தெரிவிக்கப்படவேண்டும். நிருவாகம், சட்டங்கள் ஆகியவற்றைப் பற்றி எந்தச் செய்தியும் அவர் பிரதம மந்திரியிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அமைச்சரவையால் ஆராயப்படாது தனி ஒரு அமைச்சரால் எடுக்கப்பட்ட முடிவு, அமைச்சரவையின் ஆய்வுக்கு விடப்படவேண்டுமென்றும் குடியரசு தலைவர் கோரலாம். பிரிட்டிஷ் அரசியாருக்கும் அமைச்சரவைக்குமிடையே எந்தவிதமான தொடர்புகள் நிலவுகின்றனவோ அதே போன்ற தொடர்புகள்தான் இந்தியாவில் குடியரசு தலைவருக்கும் அமைச்சரவைக்குமிடையே நிலவுகிறது; பிரிட்டனைப் போலவே இந்தியாவிலும், வழக்காறுகளும் மரபுகளும் இருவருக்குமிடையேயான உறவுகளை ஒழுங்குப்படுத்துகின்றன என்பது அறியத் தக்கது.

அரசின் உயர் அதிகாரிகளான பிரதம மந்திரி, மற்ற அமைச்சர்கள், தலைமை வழக்கறிஞர் (Attorney-General), தலைமைத் தணிக்கையாளர் (Comptroller and Auditor-General) தலைமை நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள், கவர்னர்கள், படைத்துறை அதிகாரிகள், தூதர்கள் ஆகியோரும், பொதுப்பணிக் கழகம், தேர்தல் குழு, பல்கலைக்கழக குழுக்களின் உறுப்பினர்களும் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். இது போன்ற நியமனங்களுக்கு அமெரிக்காவில் செனட் சபையின் இசைவு தேவைப்படுவது போல இந்தியாவில் இல்லை. குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளில் அமைச்சர்களும், தலைமை வழக்கறிஞரும், மாநில கவர்னர்களும் அவராலேயே நீக்கப்படலாம். மைய அரசின் ஊழியர்கள் அனைவரும் தலைவரின் 'கீழ்ப்பணியாளர்களாகவே' (Subordinates) கருதப்படுகின்றனர்.

படைத்துறை : முப்படைகள்மீதும் உயர் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தை அரசியலமைப்பு, குடியரசு தலைவருக்கு உரிமையாக்குகிறது. இந்த அதிகாரம் வெறும் சம்பிரதாயமே; இதில் பொருள் இருப்பதாகத் தோன்றவில்லை. போர், சமாதானம் ஆகிய இனங்கள்மீது சட்டமியற்றும் உரிமை பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், போர் அறிவிக்கும் அதிகாரமோ, சமாதானம் செய்து கொள்ளும் அதிகாரமோ நம் குடியரசு தலைவருக்கு இருப்பதாகக் கூறுவதற்கில்லை. போர், சமாதானம் ஆகிய காரியங்களில் தலைவர் பாராளுமன்றத்தின் விருப்பங்களை ஏற்கக் கடமைப்பட்டவர் என்பதை மறுப்பதற்கில்லை.

அயலரசு துறை : இந்தியாவின் வெளி உறவுகளில் இந்நாட்டின் ஒப்பற்ற பிரதிநிதியாக இயங்கும் பெருமை உடையவர் நம் குடியரசு தலைவர். அயல்நாடுகளுக்குப் பயணம் செய்தும், அந் நாடுகளின் தலைவர்களை நம் நாட்டுக்கு அழைத்தும், அவர்களோடு நட்புடன் பழகி நல்லெண்ணத்தை வளர்த்தும், உலக நாடுகளிடையே இந்தியாவின் நலன்களை வளர்ப்பது நம் குடியரசு தலைவரின் கடமையாகும். இந்தியத் தூதர்களை அயல்நாடுகளுக்கு அனுப்புவதும், அயல்நாட்டுத் தூதர்கள் கொண்டுவரும் அறிமுகச் சான்று கடிதங்களைப் (credentials) பெற்று அவர்களை வரவேற்பதும், நம் தலைவரின் பொறுப்புகளில் அடங்கும். அயல் நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்துகொள்ளும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றிற்கான பேச்சுவார்த்தைகளைக் குடியரசு தலைவரும் அமைச்சர்களுமே நடத்துவார்கள்.

சட்டத்துறை : பிரிட்டிஷ் அரசியார் பாராளுமன்றத்தின் ஓர் அங்கமாக விளங்குவதுபோல இந்தியக் குடியரசு தலைவரும் விளங்குவதால், அவருக்குக் கணிசமான சட்டத் துறை அதிகாரங்கள் இருப்பது இயல்பே. குடியரசு தலைவர் மட்டுமே பாராளுமன்றத்தில் கூடும்படி உறுப்பினர்களுக்கு அழைப்பாணைகளை அனுப்பும் உரிமையுடையவர். குறைந்த அளவு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது தலைவர் பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டுமென அரசியலமைப்பு அறிவிக்கிறது. இரு சபைகளின் கூட்டங்களைத் தள்ளிவைக்கக்கூடிய அதிகாரமும் அவருக்கு உண்டு. மக்கள் சபையை அதன் வரையறுக்கப்பட்ட காலம் முடிவடைவதற்கு முன்பாகக் கலைக்கவும் அரசியலமைப்பு, குடியரசு தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது. 1971ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடந்த ஐந்தாவது பொது தேர்தல், பழைய பாராளுமன்றம் அதன் காலகெடு முடிவடைதற்கு முன்பாகக் கலைக்கப்பட்டதன் விளைவாக நடந்த பொதுத் தேர்தலே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும், ஒவ்வோர் ஆண்டும் கூடும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்திலும், இரு சபைகளின் உறுப்பினர்களையும் ஒன்றாக அமர்த்தி, அவர்களுக்குச் சபைகள் கூட்டப்பட்டதன் காரணங்களை விளக்கிக் குடியரசு தலைவர் உரை நிகழ்த்துவார். பிரிட்டனில் அரசு நிகழ்த்தும் 'அரியணை உரைக்கு'ச் சமமானது நம் தலைவரின் உரை; இருவரின் உரைகளும் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றிய விளக்கங்களாய் அமைவது வழக்கம். முதல் கூட்டத்தொடரில் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவது போன்று, அவர் விரும்பும் வேறு எந்தச் சமயத்திலும் உரை நிகழ்த்தும் உரிமையும் அவருக்கு உண்டு. மேலும், அவர் சபையில் விவாதிக்கப்படும் மசோதா குறித்தோ அல்லது வேறு எந்தப் பொருள் பற்றியோ, இரு சபைகளுக்கும் சேர்ந்தோ, அல்லது ஒரு சபைக்கு மட்டுமோ செய்திகள் (messages) அனுப்பலாம்; செய்திகளைப் பெறும் சபை, அவற்றை உடனடியாகக் கவனிக்கவேண்டும் என அரசியலமைப்பு வற்புறுத்துகிறது.

குடியரசு தலைவர் ஒவ்வோர் ஆண்டும் பாராளுமன்றத்திற்குச் சில அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டுமெனக் கோரப்படுகிறார். வருடாந்திர வரவு செலவுப் பட்டியல் (Annual Financial Statement), இந்திய அரசாங்கத்தின் கணக்குகளைப் பற்றிய தலைமைத் தணிக்கையாளர் அறிக்கை, நிதிக் குழுவின் சிபாரிசுகள், மத்தியப் பொதுப்பணிக் கழகத்தின் ஆண்டறிக்கை, அட்டவணை

சாதியினர், அட்டவணைக் குடிகள் ஆகியோருக்கான தனி அதிகாரியின் அறிக்கை, பின் தங்கிய வகுப்பார் குழுவின் அறிக்கை ஆகியவற்றை ஆண்டுதோறும் பாராளுமன்றத்தின் பரிசீலனைக்கு வைக்க வேண்டியது தலைவரின் கடமையாகும். சிலவிதமான மசோதாக்களைப் பாராளுமன்றத்தில் தோற்றுவிக்கக் குடியரசு தலைவரின் சிபாரிசு தேவை என அரசியலமைப்புத் தெரிவிக்கிறது. இப்பொழுதிருக்கும் மாநிலங்களிலிருந்து புதிய மாநிலங்களை உருவாக்கும் மசோதாக்களும், மாநிலங்களின் பரப்பைக் கூட்டவும் குறைக்கவும், எல்லைகளைத் திருத்தி அமைக்கவும், பெயர்களை மாற்றவும் கோரும் மசோதாக்களும், வர்த்தக உரிமையைக் கட்டுப்படுத்தும் மாநில மசோதாக்களும் குடியரசு தலைவரின் சிபாரிசைப் பெற்ற பிறகே பாராளுமன்றத்தில் முன்மொழியப் படலாம்.

மாநிலங்கள் சபைக்கு இலக்கியம், கலை, சமூக சேவை போன்ற துறைகளில் தனி அறிவு அல்லது அனுபவம் உடைய பன்னிரண்டு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமும், கீழ்ச் சபையில் ஆங்கிலோ-இந்தியர் வகுப்புத் தக்க வகையில் பிரதி நிதித்துவம் பெறவில்லை எனக் குடியரசு தலைவர் கருதினால், அவ்வகுப்பைச் சேர்ந்தோரில் இரண்டு பேருக்கு மிகாமல் கீழ்ச் சபைக்கு நியமிக்கும் அதிகாரமும் குடியரசு தலைவருக்கு உண்டு.

பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் ஏற்கப்படும் மசோதா, குடியரசு தலைவருக்கு அவரின் இசைவைப் பெற அனுப்பப்படும். தலைவர் மசோதாவை ஏற்றுக்கொண்டால் அது சட்டமாகும்; ஏற்க மறுத்தால் அது சட்டமாகாது; அதை ஏற்கவும் செய்யாமல் மறுக்கவும் செய்யாமல் பாராளுமன்றத்தின் மறு பரிசீலனைக்கு அனுப்பலாம்; அவ்வாறு அனுப்பப்படும் மசோதா மீண்டும் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டுக் குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டால், இம்முறை அவர் மசோதாவை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர். இந்தியக் குடியரசு தலைவரின் ரத்து அதிகாரத்தில் பிரிட்டிஷ் அரசியார், அமெரிக்கக் குடியரசு தலைவர் ஆகிய இருவரின் ரத்து அதிகாரங்களின் இயல்புகள் காணப்படுகின்றன. மாநிலச் சட்டமன்றங்கள் அவற்றின் கவர்னர்களுக்கு அனுப்பும் மசோதாக்கள்மீது அவர்கள் எந்த விதமான முடிவும் எடுக்காமல், அவற்றைக் குடியரசு தலைவரின் முடிவுக்கு அனுப்பலாம். அவ்வகையான மசோதாக்களைத் தலைவர் ஏற்றுக்கொண்டால் அவை சட்டங்களாகும்; ஏற்க மறுத்தால் சட்டங்களாக முடியாது. இரண்டில் எதையும் செய்யாமல் அவற்றை மீண்டும் மாநிலச் சட்டமன்றங்களின் ஆய்வுக்கு

அனுப்பலாம். மறு ஆய்விற்குப் பிறகும் மசோதாக்கள் மாநில மன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவை மீண்டும் குடியரசு தலைவருக்கு அவரின் இணக்கத்திற்காக அனுப்பப்படும்.

பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறாத காலங்களில் குடியரசு தலைவர் அவசரச் சட்டங்களை (ordinances) பிறப்பிக்கலாம். பாராளுமன்றம் எந்தெந்த இனங்கள்மீது சட்டங்கள் இயற்ற முடியுமோ, அவை அனைத்தின்மீதும் தலைவர் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கலாம். புதிய சட்டங்களை அறிவிக்கும் அதிகாரத்தோடு, பழைய சட்டங்களை நீக்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு. ஆனால், அவசரச் சட்டங்கள் தாற்காலிக ஏற்பாடாய் அமையுமே ஒழிய, நிரந்தர ஏற்பாடாக அமையாது என்பது அறியத்தக்கது. பாராளுமன்றம் மீண்டும் கூடியவுடன் குடியரசு தலைவரால் அறிவிக்கப்பட்ட அவசரச் சட்டங்கள் அதன் இரு சபைகளிலும் வைக்கப்படவேண்டும். பாராளுமன்றம் கூடிய நாளிலிருந்து அவை ஆறு வாரங்கள் மட்டுமே செல்லத்தக்கவையாய் இருக்கும். அதற்கு முன்பாகவே இரு சபைகளும் அவசரச் சட்டங்களை ஏற்க மறுத்துத் தீர்மானங்கள் இயற்றுமேயானால், அவை உடனடியாக ரத்தாகும். அவசரச் சட்டங்களை இயற்றும் அதிகாரங்கள் இந்தியக் குடியரசு தலைவரைத் தவிர வேறு எந்தத் தலைவருக்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

நீதித்துறை: எல்லாக் குடிமக்களையும்விட உயர்ந்தவராய் கருதப்படும் குடியரசு தலைவருக்கு, அரசியலமைப்பு, குற்றவாளிகளை மன்னிக்கக்கூடிய அதிகாரத்தை வழங்குகிறது. தண்டனையை முழுதும் நீக்கவும், குறைக்கவும், ஒத்திப்போடவும் அவருக்கு அதிகாரமுண்டு. படைத்துறை நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டோருக்குக்கூட அவர் மன்னிப்பு அளிக்கலாம். மத்திய அரசின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பொருள்களைப் பற்றிய குற்றங்களை மட்டுமே அவர் மன்னிக்கலாம் என்றாலும், குற்றவாளிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தண்டனை மரணதண்டனையாய் இருந்தால் (அது மத்திய அரசின் சட்டங்களுக்கெதிரான குற்றங்களுக்காகவோ, அல்லது மாநில அரசுகளின் சட்டங்களுக்கெதிரான குற்றங்களுக்காகவோ வழங்கப்பட்டிருந்தாலும்), அவற்றை மன்னிக்கும் உரிமை அவருக்கு உண்டு. பொது அலுவல்கள் குறித்துக் குடியரசு தலைவர் தலைமை நீதிமன்றத்தின் அறிவுரையைக் கேட்டுப் பெறலாம். குடியரசு தலைவர் கருத்து வேறுபாட்டிற்குரிய செயல்களில் ஈடுபடும் முன்பு தலைமை நீதிமன்றத்தின் அறிவுரையைக் கேட்டு அதன்படி நடப்பாரானால் நாட்டில் பல

சிக்கல்கள் தவிர்க்கப்படும் என்பதில் ஐயமில்லை. அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்களுக்கு இல்லாத இந்தப் புதிய அதிகாரம் நம் தலைவருக்குப் பண்பட்ட நீதிபதிகளின் அறிவுரையைப் பெற வகை செய்கிறது.

நெருக்கடி நிலை

1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் கவர்னர்-ஜெனரலுக்கு நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண அதிகாரம் வழங்கியதுபோல், புதிய இந்திய அரசியலமைப்பும் குடியரசு தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது.

(1) போராலோ, அந்நிய ஆக்கிரமிப்பாலோ, உள்நாட்டுக் குழப்பத்தாலோ இந்தியாவின் அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியின் பாதுகாப்புக்கு ஊறுபயக்கும் நெருக்கடி நிலை நிலவுவதாகக் குடியரசு தலைவர் கருதினால், அவர் நெருக்கடி நிலை அறிவிப்புச் செய்யலாம் (விதி 352). போர் அல்லது ஆக்கிரமிப்பு அல்லது உள்நாட்டுக் குழப்பம் போன்றவை தோன்றுவதற்கு முன்பாகவே அவை தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என அவர் கருதினாலும் நெருக்கடி நிலை நிலவுவதாக அறிவிக்கலாம். நெருக்கடி நிலை நீடிக்கின்ற காலத்தில் மத்திய அரசின் ஆட்சித்துறை, மாநில அரசுகள் தங்கள் ஆட்சித்துறை அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என ஆணைகள் பிறப்பிக்கலாம்; மக்கள் சபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகட்கு மேலாக, ஒரு தடவையில் ஓர் ஆண்டிற்கு மிகாமல் உயர்த்தப்படலாம்; மத்திய அரசும் மாநில அரசுகளும் நாட்டின் வருவாயைப் பகிர்ந்துகொள்வது பற்றிக் கூறும் அரசியலமைப்பின் விதிகள் குடியரசு தலைவரால் மாற்றி அமைக்கப்படலாம்; மேலும், அரசியலமைப்பின் பத்தொன்பதாவது விதியால் அளிக்கப்படும் அடிப்படை உரிமைகள் தாற்காலிகமாக ரத்து செய்யப்படலாம்.

(2) மாநில கவர்னரிடமிருந்துவரும் அறிக்கை மூலமாகவோ, அல்லது வேறு வழிகளிலோ, ஒரு மாநில அரசாங்கம் அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு இயங்க முடியாத சூழ்நிலை தோன்றியிருப்பதாகக் குடியரசு தலைவர் கருதினால், அம் மாநிலத்தில் அரசியலமைப்பு நிறுவனங்கள் பழுதடைந்து விட்டதாக அவர் அறிவிக்கலாம். பழுதான நிலை சீரடைகின்றவரை மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குடியரசு தலைவர் மேற்கொள்ளலாம்; மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள் மத்தியப் பாராளுமன்றத்தால் செயல்படுத்தப்படும் என அறிவிக்கலாம். மாநிலத்தில் உயர் நீதிமன்றத்தைத் தவிர அரசாங்க நிறுவனத்

தையும் தாற்காலிகமாக நீக்கலாம்; அடிப்படை உரிமைகளும் தாற்காலிகமாக ரத்து செய்யப்படலாம். இது போன்ற அறிவிப்புகள் இரண்டு மாதமே நீடிக்கும். அவை பாராளு மன்றத்தின் இசைவைப் பெற்ருல் ஒரு தடவைக்கு ஆறு மாதங் களாக, மொத்தம் மூன்று ஆண்டுகள் வரை அவை நீடிக்கலாம்.

(3) இந்தியாவின் அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியின் நிதி நிலே ஆபத்தான நிலேயில் இருப்பதாகக் குடியரசு தலேவர் கருதினுல், நாட்டில் நிதி நெருக்கடி தோன்றியிருப்பதாக அவர் அறிவிக்கலாம். மத்திய ஆட்சித்துறை, மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய நிதிக் கொள்கைகளேப்பற்றி ஆணைகள் பிறப்பிக்க முடியும். மாநில ஊழியர்களின் சம்பளங்களும் படிகளும் குறைக்கப்பட வேண்டுமென்றும், அரசாங்கங்களின் பண மசோதாக்கள் குடியரசு தலேவருக்கு அனுப்பப்பட வேண்டு மென்றும் கோரப்படலாம். தலேமை நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட மத்திய அரசு பணியாளர்களின் சம்பளங்களேயும் படிகளேயும்கூடக் குடியரசு தலேவர் குறைக் கலாம்.

இதுவரை கூறப்பட்ட செய்திகளிலிருந்து அரசியலமைப்பு, இந்தியக் குடியரசு தலேவரை, ஏராளமான அதிகாரங்களுக்கு உறைவிடமாக்குவது தெளிவாகிறது. அவர் அமைச்சர்களின் அறிவுரையைக் கட்டாயம் ஏற்று நடக்கவேண்டும் என்று அரசிய லமைப்பு எந்த இடத்திலும் வற்புறுத்தாவிட்டாலும், அதன்படி நடப்பதே முறை என்ற மரபு நம்நாட்டில் இதற்குள் வளர்ந்து விட்டது. ஆனுல், அவர், அமைச்சர்கள் ஆட்டிவைக்கும் கைப் பாவையாய் இருக்கவேண்டும் என அரசியலமைப்பை ஆக்கியோர் விரும்பியதாகத் தோன்றவில்லே. அரசாங்கத்தின் வெறும் அலங்கார அங்கமாக மட்டும் இயங்காமல், பயனுள்ள வகையில் அவர் இயங்க அரசியலமைப்பு வகை செய்கிறது.

3. கேபினட் அமைச்சரவை

(The Cabinet)

[முன்னுரை — அமைப்பு — மக்கள் சபைக்குப் பொறுப்புள்ள அமைச்சரவை—அமைச்சரவையும் குடியரசு தலைவரும்—அமைச்சரவையின் பணிகள்.]

முன்னுரை

பிரிட்டிஷ் அரசியலமைப்பைத் தழுவி வரையப்பட்டிருக்கும் இந்திய அரசியலமைப்பில் பிரிட்டிஷ் அமைச்சரவையைப் போன்றதோர் அமைச்சரவை நிறுவப்பட்டிருப்பது இயற்கையே. பிரிட்டிஷ் அமைச்சரவை எழுதப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டதோர் அமைப்பு என்பதும், அது வழக்காறுகளாலும் மரபுகளாலும் வளர்க்கப்பட்ட நிறுவனம் என்பதும் முன்பே கூறப்பட்டது. இந்திய அமைச்சரவையின் அமைப்பும் அதிகாரங்களும் ஓரளவுக்கு அரசியலமைப்பால் நிர்ணயிக்கப் பட்டபோதிலும், இங்கேயும் வழக்காறுகளும் மரபுகளும் அதன் இயக்கத்தை பாதிக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அயர்லாந்தின் அரசியலமைப்பு (1937), இலங்கையின் அரசியலமைப்பு (1946), இத்தாலியின் அரசியலமைப்பு (1947) ஆகியவற்றை நினைவுபடுத்துகின்ற வகையில் இந்திய அரசியலமைப்பில் பல விதிகள் அமைச்சரவைக்குச் சட்டபூர்வமான அடிப்படை அளிக்க முயல்கின்றன. பெயரளவுக்குத்தான் குடியரசு தலைவர் நாட்டின் தலைவராகக் கருதப்படுகிறாரே ஒழிய, நடைமுறையில் அமைச்சரவையே அரசின் தலைமையை ஏற்கின்றது. நம் அரசியலமைப்பு, அமைச்சரவை என்ற சொற்றொடரைத்தான் திரும்பத் திரும்ப பயன்படுத்துகிறதே ஒழிய, கேபினட் என்ற சொல்லை எந்த இடத்திலும் பயன்படுத்தவில்லை. எனினும், பிரிட்டிஷ் கேபினட்டை ஒத்த ஒரு நிறுவனம் இந்தியாவிலும் இயங்குகிறது என்பது உலகறிந்த செய்தியாகும். அமைச்சரவையின் முக்கியமான அங்கத்தினர்கள் கேபினட்டின் உறுப்பினர்களாக அமர்ந்து அரசின் கொள்கைகளை உருவாக்குகின்றனர்.

அமைப்பு

குடியரசு தலைவர் அவர் பணிகளைச் செய்ய அவருக்குத் துணை நின்று ஆலோசனை கூறப் பிரதம மந்திரி தலைமையில் அமைந்த ஓர் அமைச்சரவை இருக்குமென அரசியலமைப்பின் 74ஆம் விதி அறிவிக்கிறது. குடியரசு தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையைக் கட்டாயமாக ஏற்கவேண்டுமென அரசியலமைப்பு வற்புறுத்தவில்லை எனினும், அவர் அதற்கு மாறாக நடப்பது வழக்கமில்லை என்பது நோக்கற்பாலது. அமைச்சர்களால் குடியரசு தலைவருக்கு ஏதாவது ஆலோசனை வழங்கப்பட்டதா, என்ன ஆலோசனை வழங்கப்பட்டது என்பதை எந்த நீதிமன்றமும் விசாரிக்க இயலாது. குடியரசு தலைவருக்கும் அமைச்சரவைக்கும் உள்ள உறவுகளும் தொடர்புகளும் எப்பொழுதும் இரகசியமாக வைக்கப்படும். அமைச்சரவை இருக்க வேண்டுமென அரசியலமைப்புக் குறிப்பிடுகிறதே ஒழிய, அது பெரியதாய் இருக்க வேண்டுமா, சிறியதாய் இருக்க வேண்டுமா, எத்தனை உறுப்பினர்களைக் கொண்டதாய் இருக்கவேண்டும் எனக் குறிப்பிடவில்லை.

குடியரசு தலைவர் பிரதம மந்திரியை நியமிப்பார் என அரசியலமைப்புக் கூறினாலும், எவ்வாறு அவரை நியமிப்பது என்பதுபற்றி அது ஒன்றும் கூறவில்லை. மரபுப்படி பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சித் தலைவரே பிரதம மந்திரியாய் இருக்கும்படி அழைக்கப்படுவார். மற்ற அமைச்சர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவார்கள். அமைச்சரவை பிரதமரின் தலைமையில் ஒத்த கருத்துகளுடைய ஓர் அணியாக இயங்க வேண்டியது அவசியமாதலால், குடியரசு தலைவரின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைச்சரவையை உருவாக்குவதில் அதிகத் தொடர்பிருக்க முடியாது. நாட்டின் தலைவரால் விரும்பப்படும் வரை அமைச்சர்கள் பதவியிலிருக்கலாம் என அரசியலமைப்புத் தெரிவிப்பது வெறும் சம்பிரதாயத்திற்காகக் கூறப்படும் சொற்களெனக் கருதுவதே முறையாகும். அமைச்சர்கள் குடியரசு தலைவருக்குக் கட்டுப்பட்டவர்கள் எனக் கூறுவதைவிடப் பிரதம மந்திரிக்குக் கட்டுப்பட்டவர்கள் எனக் கூறுவதே உண்மை நிலையை உணர்த்துவதாய் அமையும். அமைச்சர்கள் அனைவரும் பாராளுமன்றத்தின் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டியது அவசியம். ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படும்பொழுது அவர் அதன் உறுப்பினராக இல்லாவிட்டாலும், அமைச்சராக நியமனம்பெற்ற ஆறு மாத காலத்திற்குள் அவர் அதன் சபைகளில் ஏதாவது ஒன்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாலோ அல்லது நியமிக்கப்பட்டாலோதான் அவருடைய அமைச்சர் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள

முடியும். அமைச்சராகப் பதவி ஏற்கும் ஒவ்வொருவரும், அவர் இந்திய அரசியலமைப்புக்குப் பற்றுறுதியோடு இருப்பதாகவும், உண்மையாகவும் மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டும் கூட்டரசின் அமைச்சர் பொறுப்புகளைச் செய்வதாகவும், விருப்பு வெறுப்பு இல்லாமல் எல்லா மக்களுக்கும் நல்லதையே செய்வதாகவும் உறுதிமொழி கூறவேண்டும். அமைச்சர்களின் சம்பளம் பாராளு மன்றத்தால் நிர்ணயிக்கப்படும்.

மக்கள் சபைக்குப் பொறுப்புள்ள அமைச்சரவை

அமைச்சரவை மக்கள் சபைக்குப் பொறுப்புள்ளது என அரசியலமைப்புத் தெளிவாகத் தெரிவிக்கிறது. அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ள வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்பது பிரிட்டனைப் பொறுத்தவரை வெறும் மரபாக இருக்கின்றபோதிலும், இந்திய அரசியலமைப்பு, அயர்லாந்து, ஜப்பான், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளின் அரசியலமைப்பைத் தழுவி, அம் மரபைச் சட்டமாக ஆக்கியிருக்கிறது. நம் அரசிய லமைப்பு, அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு மட்டுமே வகை செய்கிறது என்பது அறியத்தக்கது. பிரிட்டனில் ஒவ்வோர் அமைச்சரும் அவரவர் துறையின் செயல்களுக்கு அவரவர் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளவராய் இருப்பது போன்ற தனிப் பொறுப்பு நம் நாட்டில் வற்புறுத்தப்படவில்லை. பாராளு மன்றம் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை அமைச்சரவைமீது மொத்தமாக நிறைவேற்றலாமே ஒழிய தனிப்பட்ட அமைச்சர்கள் மீது நிறைவேற்ற முடியாது. பாராளுமன்றம் அமைச்சரவையின் முடிவுகளை அது ஏற்கவில்லை என்பதை உறுதியாகவும் தெளி வாகவும் தெரிவித்தால், அமைச்சரவை பதவியிலிருந்து நீங்குவது தவிர்க்க முடியாததாகும். ஆனால் எதிர்பாராதவிதமாய் அமைச்ச ரவைக்கு ஏற்படும் தோல்விகள் அதற்கு எந்தத் தீங்கையும் விளைவிக்காது. இரு சபைகளிலும் உறுப்பினர்களால் கேட்கப் படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் விடையளிக்கக் கடமைப் பட்டவர்கள்.

அமைச்சரவையும் குடியரசு தலைவரும்

அரசாங்கத்தின் நிருவாகம் அமைச்சர்களுடைய பொறுப்பு என்பதில் ஐயமில்லை என்றாலும் அதன் செயல்கள் அனைத்தும் குடியரசு தலைவரின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்திய அரசாங்கத்தின் அலுவல்கள் சீராக நடைபெறுவதற்கும் அவை அமைச்சர்களிடையே பகிர்ந்தளிக்கப்படவும் தேவையான விதிகள், குடியரசு தலைவரால் பிறப்பிக்கப்படும். பிரதம மந்திரி அமைச்சரவையின் முடிவுகளை நாட்டின் தலைவருக்கு அவ்வப்

பொழுது அறிவிக்கக் கடமைப்பட்டவர். பிரிட்டிஷ் அரசியாரைப் போன்றே இந்தியக் குடியரசு தலைவரும் கேபினட்டுக் கூட்டங்களில் அமருவதில்லை என்றாலும், அதன் கூட்டங்களில் எந்த விதமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு. அமைச்சரவையில் ஆராயப் படாது, தனிப்பட்ட அமைச்சர்களால் எடுக்கப்படும் முடிவுகளை, குடியரசு தலைவர் அவற்றை அமைச்சரவை ஆராயவேண்டும் என வற்புறுத்தலாம். முக்கியமான கொள்கைகளுக்கு அமைச்சரவை முழுதுமே பொறுப்பேற்பதனால், அவற்றில் எதுவும் தனிப்பட்ட அமைச்சர்களால் முடிவு செய்யப்படுவது முறையாகாது.

அமைச்சரவையின் பணிகள்

ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகு கூடும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும், அதற்குப் பிறகு வருடா வருடம் கூடும் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும் குடியரசு தலைவர் பாராளுமன்றத்திற்கு உரை நிகழ்த்துவார் என்பதை முன்பே கண்டோம். அரசாங்கக் கொள்கைகளை விளக்கும் அவ்வுரை உண்மையில் அமைச்சரவையால் தயாரிக்கப்படுகிறது என்பது அறியத்தக்கது. பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வுரையை ஏற்கும் வகையில் குடியரசு தலைவருக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானமொன்றை நிறைவேற்றுவார்கள். அத் தீர்மானம், பாராளுமன்றம் அமைச்சரவையின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறது என்பதற்கு அடையாளமாய் அமைகிறது. அமைச்சர்கள் அனைவருக்கும் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் விவாதங்களிலும் கலந்துகொள்ளும் உரிமையுண்டு; ஆனால் அவர்கள் எந்தச் சபையின் உறுப்பினர்களாயிருக்கின்றனரோ அந்தச் சபையில் மட்டுமே வாக்களிக்க முடியும். பிரிட்டிஷ் அமைச்சர்களுக்கு, அவர்கள் உறுப்பினர்களாக இருக்கும் சபையில் மட்டுமே பேசும் உரிமையுண்டு.

பாராளுமன்றத்தில் தோற்றுவிக்கப்படும் மசோதாக்களில் பெரும்பாலானவை அமைச்சர்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. மசோதாக்களை வரைந்து அவற்றை முன்மொழிவதற்கு அமைச்சர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் வசதிகளும் வாய்ப்புகளும் அதிகம். தனி உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்படும் மசோதாக்களை அமைச்சரவை ஆதரித்தால்தான் அவை சட்டங்களாக முடியும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்டப் பட்டியலும், அமைச்சரவையால், குறிப்பாக நிதி அமைச்சரால் தீட்டப்படுவதாகும். கீழ்ச் சபையில் முன்மொழியப்படும் பண மசோதாக்கள் குடியரசு தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டவையாய் இருக்க வேண்டுமென அரசியலமைப்பு அறிவிக்கிறது; அவருடைய சிபாரிசு அமைச்சரவையின் ஆலோசனையைத் தழுவியே அமையும் என்பதில் ஐயமில்லை.

4. பாராளுமன்றம்

(The Parliament)

[முன்னுரை—மாநிலங்கள் சபை—மக்கள் சபை—பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றோர் — உறுப்பினர்களின் சலுகைகள் — மக்கள் சபையின் குழுக்கள் — பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்கள் — அதிகாரங்கள் : (அ) சட்டமியற்றுதல்—(ஆ) ஆட்சித்துறை அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதும் கட்டுப்படுத்துவதும்—(இ) நிதி நிர்வாகம்—(ஈ) நெருக்கடி கால அதிகாரங்கள்—(உ) அரசியலமைப்பைத் திருத்துதல்—(ஊ) குற்றங் குறைகளைக் களைதல்—(எ) சட்டமும் ஒழுங்கும் — (ஏ) நீதிபதிகளை நீக்குதல்.]

முன்னுரை

இந்திய அரசியலமைப்பு, குடியரசு தலைவரையும் இரு சபைகளையும் கொண்டதொரு பாராளுமன்றத்தை நிறுவியிருக்கிறது. மேல்சபை மாநிலங்கள் சபை (Council of States) என்றும், கீழ்ச்சபை மக்கள் சபை (House of the People) என்றும் அழைக்கப்படுகின்றன. பாராளுமன்றமே நம் அரசாங்கத்தின் தலைமையான நிறுவனமெனக் கருதப்படுகிறது. மக்களின் இறைமையைப் பிரதிபலிக்கும் இடமாகப் பாராளுமன்றம் இருத்தலால், அது மற்ற நிறுவனங்களைவிட மேலான நிறுவனமாக மதிக்கப்படுவது இயற்கையே. நம் பாராளுமன்றத்தின் அதிகார எல்லை, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அதிகார எல்லையைப் போலல்லாமல், வரையறுக்கப்பட்டதொன்று என்பது அறியத்தக்கது.

மாநிலங்கள் சபை

மாநிலங்கள் சபை 250 உறுப்பினர்களைக் கொண்டதொரு நிறுவனமாகும். அவர்களில் 238 உறுப்பினர்கள், மாநிலங்கள், கூட்டரசு பிரதேசங்கள் (Union Territories) ஆகியவற்றின் பிரதிநிதிகளாவர். அரசியலமைப்பின் நான்காம் அட்டவணை

ஒவ்வொரு மாநிலத்திற்கும், கூட்டாட்சிப் பிரதேசத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு பகுதியிலுள்ள சட்டமன்றத்தின் (Legislative Assembly) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அததற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மாநிலங்களின் மக்கள் தொகையைப் பொறுத்து அவற்றின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அமையும். அதிகமான மக்கள்தொகையுடைய உத்தரப்பிரதேசத்திற்கு 34 இடங்களும், குறைவான மக்கள் தொகையுடைய நாகாலாந்திற்கு 1 இடமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்கச் செனட் சபையில் எல்லா மாநிலங்களுக்கும், அவைகளின் மக்கள்தொகை கூடுதல் குறைவாக இருத்தலைப் பொருள்படுத்தாமல், ஒத்த பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது என்பதை முன்னர் அறிந்தோம். மாநிலங்கள், கூட்டாட்சிப் பிரதேசங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளாக அமரும் 238 உறுப்பினர்கள் போக, எஞ்சியிருக்கும் 12 உறுப்பினர்கள் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறப்பான அறிவு அல்லது நல்ல அனுபவம் உடையவர்களாக இருக்கவேண்டும். இந்திய மாநிலங்கள் சபையின் அமைப்பில் தென் ஆப்பிரிக்க அரசியலமைப்பின் (1909) சாயலும், அயர்லாந்து அரசியலமைப்பின் சாயலும் தென்படுகின்றன. மேல் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கச் செனட் சபையைப்போல உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை பதவியிலிருந்து விலகுவதால், இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை சபையின் மூன்றில் ஒரு பங்கு இடங்களுக்கான தேர்தல் நடைபெறும். எல்லா உறுப்பினர்களின் பதவிக்காலமும் ஒரே சமயத்தில் தொடங்கி ஒரே சமயத்தில் முடிவடைவதில்லையாதலால், எக்காலத்திலும் சபையில் ஒருவிதமான தொடர்ச்சி இருக்கும் என்பது அறியத்தக்கது. மாநிலங்கள் சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்தியக் குடிமக்களாகவும், முப்பது வயதிற்குக் குறையாதவர்களாகவும், அவ்வப்பொழுது பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் மற்றத் தகுதியுடையோர்களாகவும் இருக்கவேண்டும். 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (Representation of the People Act) வேட்பாளர்கள் அவர்கள் போட்டியிடும் மாநிலங்களில் வாக்காளர்களாய் இருக்கவேண்டும் என அறிவிக்கிறது. அமெரிக்காவில் உள்ள முறையைப் போன்றே குடியரசின் துணைத் தலைவர், மாநிலங்கள் சபையின் தலைவராக இருப்பார்; உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை அதன் துணைத் தலைவராகத்

தேர்ந்தெடுப்பார்கள். குடியரசின் துணைத் தலைவர் நாட்டின் தலைவராகப் பணியாற்றுகின்ற காலங்களில், சபையின் துணைத் தலைவர் அதன் தலைவராக அமர்வார்.

மக்கள் சபை

மக்கள் சபை 525 உறுப்பினர்களைக் கொண்டதொரு நிறுவனமாகும். அவர்களில் 500 உறுப்பினர்கள் மாநிலங்களிலிருந்தும், 25 உறுப்பினர்கள் கூட்டரசு பிரதேசங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆங்கிலோ-இந்தியச் சமுதாயத்தினர் (Anglo-Indians) சபையில் தக்க பிரதிநிதித்துவம் பெறவில்லை எனக் குடியரசு தலைவர் கருதினால், அச் சமுதாயத்தினர் இருவரை அவர் சபைக்கு நியமிக்கலாம். மக்கள் சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மாநிலமும் ஒத்த அளவுள்ள பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மேல் சபையைப் போன்று கீழ்ச் சபையிலும் மாநிலங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதால், மக்கள்தொகை அதிகமுள்ள மாநிலங்களிலிருந்து அதிகமான பிரதிநிதிகளும், குறைவாக உள்ள மாநிலங்களிலிருந்து குறைவான பிரதிநிதிகளும் சபைக்கு வருகின்றனர். உத்தரப் பிரதேசத்திற்கு 85 பிரதிநிதிகளும் நாகலாந்திற்கு 1 பிரதிநிதியும் மக்கள் சபையில் அமர்கின்றனர். அரசியலமைப்பு, இருபத்தொரு வயதிற்குக் குறையாத ஆண் பெண் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்குகிறது. தொகுதியில் குடியில்லாமை, மூளைக் கோளாறு, குற்றங்கள் புரிந்தமை ஆகிய காரணங்களுக்காக வாக்குரிமை வழங்க மறுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு. உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்பாகவே குடியரசு தலைவர் மக்கள் சபையைக் கலைக்கலாம். நெருக்கடி நிலை நீடிக்கின்ற காலங்களில் பாராளுமன்றம் ஐந்து ஆண்டுகட்கு மேலும் தன்னுடைய பதவிக்காலத்தை ஒரு தடவைக்கு ஓர் ஆண்டு வீதமாக நீட்டிக்கொள்ளலாம். நெருக்கடி நிலை தீர்ந்த ஆறு மாதத்திற்குமேல் அதனுடைய பதவிக்காலம் அதிகரிக்கப்பட முடியாது. மக்கள் சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்தியக் குடிமக்களாகவும், இருபத்தைந்து வயதிற்குக் குறையாதவர்களாகவும், பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் மற்றத் தகுதியுடைவர்களாகவும் இருக்கவேண்டும்.

மக்கள் சபை அதன் உறுப்பினர்களில் ஒருவரைச் சபாநாயகராகவும் மற்றொருவரைத் துணைச் சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கும். நம் மக்கள் சபையின் சபாநாயகரின் நிலை, பிரிட்டிஷ்

பொது மக்கள் சபையின் சபாநாயகரின் நிலையை ஒத்திருக்கிறது. சபையில் அமைதியையும் ஒழுங்கையும் காப்பதும், அதன் நிகழ்ச்சி களில் எதை எதை எப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்வதும், உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளில் எவற்றை அனுமதிப்பது எவற்றை அனுமதிப்பதில்லை என்று தீர்மானிப்பதும், ஒத்திவைப்புப் பிரேரணைகளுக்கு இசைவு தெரி விப்பதும், ஆய்வுக் குழுக்களின் தலைவர்களை நியமிப்பதும், வரவு செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்திற்கு நேரத்தை ஒதுக்கு வதும், ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றி முடிவு செய்வதும், தேவையான சமயங்களில் வாக்களிப்பு நடத்தி அதன் முடிவைத் தெரிவிப்பதும், ஒழுக்கக் குறைவாக நடந்துகொள்ளும் உறுப் பினர்களைத் தண்டிப்பதும், கண்ணியக் குறைவான பேச்சுகளைச் சபையின் அறிக்கைகளிலிருந்து நீக்குவதும் அவர் அதிகாரங்களில் அடங்கும். சபையின் உறுப்பினர்கள் சரி சமமாகப் பிரிந்து வாக்களிக்கும் காலங்களில் மட்டும் சபாநாயகர் தன் வாக் குரிமையைப் பயன்படுத்தவேண்டும் என அரசியலமைப்புக் குறிப் பிடுகிறது.

பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றோர்

யாரும் இரு சபைகளிலும் ஒரே சமயத்தில் உறுப்பினராக இருப்பதை அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. மத்தியப் பாராளு மன்றத்திலும் மாநிலச் சட்டசபையிலும் ஒருவர் ஒரே சமயத்தில் உறுப்பினராக இருக்கமுடியாது. சபையின் அனுமதி பெறாமல் அறுபது நாள்களுக்குமேல் சபைக்கு வராமலிருக்கும் அங்கத்தினர் களின் இடங்களை அது காலியாகிவிட்டதென அறிவிக்கலாம். இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியவற்றில் ஊதியம் பெறும் உத்தியோகம் பார்ப்போரும், தக்க நீதிமன்றம் ஒன்றால் பித்துப்பிடித்தவர் என அறிவிக்கப்பட்டோரும், அயல்நாட்டுக் குடிமக்களாகிவிட்டோரும், அயலரசுகள்பால் விசுவாசம் பாராட்டுவோரும், பாராளுமன்றத்தின் எந்தச் சபையிலும் உறுப் பினர்களாவதற்குத் தகுதியற்றவர்கள் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. மேலும் 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதி நிதித்துவச் சட்டம், தேர்தல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப் பட்டோரும், தேர்தல் செலவு கணக்குகளைக் குறித்த காலத்திலும் குறித்த வகையிலும் தாக்கல் செய்யத் தவறியோரும், அரசாங்க ஒப்பந்தங்களில் (contracts) தொடர்புடையோரும், அரசாங்க முதலீட்டில் நடைபெறும் தொழில்களில் இயக்குநர்களாகவோ, மேலாளர்களாகவோ, ஊதியம் பெறும் ஊழியர்களாகவோ இருப் போரும்; குற்றங்களுக்காக இரண்டு ஆண்டுகட்குமேல் சிறை தண்டனை அளிக்கப்பட்டோரும், இலஞ்ச ஊழலுக்காகவோ

விசுவாசமின்மைக்காகவோ அரசாங்க ஊழியத்திலிருந்து நீக்கப் பட்டோரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிடத் தகுதி யற்றோர் எனத் தெரிவிக்கிறது. ஒருவர் தான் பாராளுமன்ற உறுப்பினராக அமரத் தகுதியற்றவர் என்பதைத் தெரிந்திருந்தும், அதன் சபையில் அமர்ந்து வாக்களிப்புகளில் பங்குபெறுவாரானல், அந்தக் குற்றத்திற்காக அவ்வாறு செய்த நாள் ஒவ்வொன்றிற்கும் ஐந்நூறு ரூபாய் அபராதம் விதிக்கப்படுவார்.

உறுப்பினர்களின் சலுகைகள்

பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கப்படும் உறுப்பினர்தான் அரசியலமைப்பின்பால் உண்மை யோடும் பற்றுறுதியோடும் இருப்பதாகவும், இந்தியாவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் காப்பதாகவும், தன் னுடைய கடமைகளை உண்மையாகச் செய்வதாகவும் குடியரசு தலைவர் முன்பாக உறுதிமொழி கூறவேண்டும். நம் அரசிய லமைப்புத் தோன்றிய காலத்தில் பிரிட்டிஷ் பொதுமக்கள் சபை உறுப்பினர்களுக்கு என்ன என்ன உரிமைகள் இருந்தனவோ அத்தனை உரிமைகளும் நம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்றன. சபையில் கருத்துகளைத் தெரியப்படுத்தும் உரிமையும், சிவில் குற்றங்களுக்காகக் கூட்டத்தொடர்களுக்கு நாற்பது நாள்களுக்கு முன்பும் நாற்பது நாள்களுக்குப் பின்பும் கைது செய்யப்படுவதிலிருந்து விலக்குரிமையும், ஜூரர்களாக நியமிக்கப்படுவதிலிருந்தும் சாட்சிகளாக அழைக் கப்படுவதிலிருந்தும் விலக்குரிமையும், ஒவ்வோர் உறுப் பினருக்கும் உரிய தனி உரிமைகளாகும். சபையிலிருந்து அந்நியர் களை அப்புறப்படுத்தும் உரிமையும், அங்கு எழும் அலுவல் பிரச்சினைகளை அதுவே தீர்த்துக்கொள்ளும் உரிமையும், ஒழுக்கக் குறைவாக நடந்துகொள்ளும் உறுப்பினர்களைத் தண்டிக்கும் உரிமையும், சபையின் உரிமைகளை மீறும் உறுப்பினர்களையும் மற்றவர்களையும் தண்டிக்கும் உரிமையும் இரு சபைகளுக்கும் உண்டு. ஒவ்வொரு சபையிலும் அதன் மொத்த உறுப்பினர்களில் குறைந்த அளவு பத்தில் ஒரு பங்கு உறுப்பினராவது வந்திருந்தால் தான் அதன் கூட்டத்தை நடத்துவது முறையாகும். இரு சபை களுக்கும் தனித்தனியே ஒரு செயலகம் இருக்குமென்றும் அரசிய லமைப்பு அறிவிக்கின்றது.

மக்கள் சபையின் குழுக்கள்

பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் இருப்பது போன்று நம் மக்கள் சபையிலும் பல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விதிகள் குழு (Rules Committee), உரிமைகள் குழு (Committee

of Privileges), அரசாங்க வாக்குறுதிகள் குழு (Committee on Government Assurances), ஆய்வுக் குழுக்கள் (Select Committee), மனுக்கள் குழு (Committee on Petitions), தனி உறுப்பினர் மசோதாக்கள் குழு (Committee on Private Members' Bills and Resolutions), துணைச் சட்டக் குழு (Committee on Subordinate Legislation), பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee), மதிப்பீட்டுக் குழு (Estimates Committee) ஆகியவை மக்கள் சபைக் குழுக்களில் முக்கியமானவையாகும். அரசாங்க வாக்குறுதிகள் குழு என்பது ஒரு புதுவகையான குழுவாகும். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் அக் குழு அரசாங்கத்தால் அவ்வப்பொழுது தெரிவிக்கப்படும் வாக்குறுதிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன என்பதைக் கண்டறிந்து சபைக்கு அறிவிக்கும். சபையில் தோன்றும் எதிர்ப்புகளிலிருந்து தப்ப பலவிதமான செயல்களைச் செய்வதாக வாக்களிக்கும் அமைச்சர்கள் அவற்றைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டவர்கள். பிரிட்டனில் பொதுமக்கள் சபை அடிக்கடி முழுமன்றக் குழுவாக அமர்வது போன்ற பழக்கம் நம் மக்கள் சபையில் பின்பற்றப்படுவதில்லை.

பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்கள்

இரு சபைகளின் கூட்டத்தொடர்களைக் கூட்டும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத் தரப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டத் தொடருக்கும் அதற்கு அடுத்த கூட்டத்தொடருக்கும் இடையில் ஆறுமாத காலத்திற்கு மேலான இடைவெளி இல்லாத வகையில் சபைகள் கூட்டப்படவேண்டும். பிரிட்டனில் ஆண்டுக்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் கூட்டப்படவேண்டுமென்பது மரபே ஒழியச் சட்டமன்று என்பது அறியத்தக்கது. இந்தியாவில் சபைகளைக் கூட்டுவதென்பது குடியரசுத் தலைவரின் அதிகாரம் மட்டுமன்று, அவருடைய கடமையுங்கூட. ஆறு மாதத்திற்கு ஒரு முறை பாராளுமன்றத்தைக் கூட்டத் தவறும் தலைவர் அரசியலமைப்பை மீறிய குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

அதிகாரங்கள்

அமெரிக்க அரசியலமைப்பைப் போன்று இந்திய அரசியலமைப்பும் வரம்பிற்கு உட்பட்ட அரசாங்கத்தை நிறுவுவதால், நம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் அரசியலமைப்பால் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. பாராளுமன்றம் எதை வேண்டுமென்றாலும் செய்யமுடியாது என்பது உண்மையானாலும், அது நம் அரசாங்கத்தின் அச்சாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

நாட்டில் உள்ள மற்ற எல்லா நிறுவனங்களையும்விடப் பாராளு மன்றம் முதன்மையானதாகக் கருதப்படுவதற்குக் காரணம் அது மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பாக இருப்பதே யாகும்.

சட்டமியற்றுதல்

இந்தியக் கூட்டாட்சி முழுதும் செல்லத்தக்க சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம் நம் பாராளுமன்றத்திற்கு உண்டு. கூட்டாட்சிப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகிய இரண்டிலும் இடம் பெற்றிருக்கும் எல்லா இனங்கள்மீதும் பாராளுமன்றம் சட்டங்கள் இயற்றலாம். நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருக்கும் காலத்தில் மாநிலப் பட்டியலில் உள்ள பொருள்கள்மீதும் அது சட்டமியற்றக் கூடும். ஆனால், பாராளுமன்றச் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு முரணானவையாய் இருப்பின், அவை தலைமை நீதிமன்றத்தால் செல்லத்தக்கன அல்ல என அறிவிக்கப்படலாம். அரசியலமைப்பால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் பாராளு மன்றம் இயங்குகிற வரையில் அதன் ஆணைகளுக்கு அடிபணிந்தே நாட்டு மக்கள் நடக்கவேண்டும். பாராளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு இடைப்பட்ட காலங்களில், அவசரத் தேவை களைப் பூர்த்தி செய்யக் குடியரசு தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளும், பிறகு பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் இரு சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட் டால்தான் அவை சட்டங்களாக நிலைத்து நிற்க முடியும்.

ஆட்சித்துறை அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதும் கட்டுப்படுத்துவதும்

குடியரசு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் குழுவில் பாராளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்; தேர்தல் குழுவிலுள்ள மொத்த வாக்குகளில் ஏறத்தாழப் பாதி வாக்குகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரியனவாகும். இரு சபைகளின் உறுப்பினர்கள் குடியரசின் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்கின்றனர். குடியரசு தலைவர் அரசியலமைப்பை மீறினால் அவரைப் பதவியிலிருந்து குற்றச் சாட்டுமூலம் நீக்கும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு உண்டு. குடியரசின் துணைத் தலைவரையும் பாராளுமன்றம் பதவியிலிருந்து நீக்கலாம். மேல் சபை, கீழ்ச்சபை ஒவ்வொன்றிலும் அதனதன் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேரால் ஆதரிக்கப்படும் தீர்மானங்கள் துணைத் தலைவருக்கு எதிராக நிறைவேற்றப்பட் டால், அவர் உடனடியாகப் பதவியிலிருந்து விலக்கப்படுவார். அமைச்சரவையும் மக்கள் சபைக்குக் கட்டுப்பட்டதே; அமைச்சர்

அவையின் கொள்கையை மக்கள் சபை ஏற்க மறுத்தால், அது பதவியிலிருந்து விலகுவது தவிர்க்க முடியாததாகும். சில சமயங்களில் கீழ்ச்சபை அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை நிறைவேற்றியும் அமைச்சரவையைப் பதவியிலிருந்து விலக்கும்.

நிதி நிர்வாகம்

நிதி வரவிற்கும் செலவிற்கும் பாராளுமன்றம் பொறுப்பேற்பதே பல நாடுகளில் காணப்படும் பொதுவான வழக்கமாகும். இந்தியாவிலும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி நிதித்துறையில் எந்தச் செயலும் செய்ய முடியாது. வரிப் பணத்தை வசூல் செய்வதற்கும், வசூல் செய்த பணத்தைச் செலவு செய்வதற்கும் அதன் இணக்கம் தேவை. வருடாந்திர வரவு செலவு திட்டப் பட்டியல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகே செயல்படுத்தப்படும். வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகாரமும் அதற்கு உண்டு. நிதித்துறையைப் பொறுத்த அதிகாரங்கள் அனைத்தும் மக்கள் சபைக்கு மட்டுமே உரியன என்பதும், அத்துறையில் மாநிலங்கள் சபையின் நிலை பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையின் நிலையை ஒத்தது என்பதும் அறியத் தக்கது. நிதி மசோதாக்கள் மக்கள் சபையில் மட்டுமே தோற்றுவிக்கப் படலாம்; அவற்றை எக் காரணம்பற்றியும் மாநிலங்கள் சபையில் தோற்றுவிக்க முடியாது; அவை சட்டங்களாக, கீழ்ச்சபையின் இசைவு ஒன்றே போதுமானது; மேல்சபைக்கு அவற்றை மறுப்பதற்கு அதிகாரமில்லை. மக்கள் சபை 'பொதுமக்கள் பணத்தின் பாதுகாவலர்' என அழைக்கப்படுவதிலிருந்து அத்துறையில் அதற்குள்ள பொறுப்புத் தெளிவாகிறது.

நெருக்கடி கால அதிகாரங்கள்

நாட்டில் நெருக்கடி நிலைமை தோன்றியிருப்பதாக அறிவிக்கக் கூடிய அதிகாரம் குடியரசு தலைவர் ஒருவருக்கு மட்டுமே உண்டென்றாலும், அவை பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டால்தான் இரண்டு மாதங்களுக்குமேல் நீடிக்க முடியும். நெருக்கடி சமயங்களில், பாராளுமன்றம் அரசியலமைப்பால் மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்கள்மீதும் சட்டமியற்றலாம் என்று முன்பு குறிப்பிட்டோம். சட்டமன்றங்கள் கலைக்கப்பட்ட மாநிலங்களின் நிர்வாகத்திற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்குப் போதுமான நேரமில்லை என்றால், அவற்றைக் குடியரசு தலைவரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டோரரோ மேற்கொள்ளும்படி பாராளுமன்றம் பணிக்கலாம்,

அரசியலமைப்பைத் திருத்துதல்

அரசியலமைப்பிற்குத் திருத்தங்களைத் தோற்றுவிக்கும் உரிமை பாராளுமன்றத்திற்கு மட்டுமே தரப்பட்டிருக்கிறது. மாநிலங்களோ மக்களோ அவ்வகையான திருத்தங்களை முன்மொழிய முடியாது; அரசியலமைப்பின் பெரும்பாலான விதிகளைத் திருத்த பாராளுமன்றத்தின் இசைவு ஒன்றே போதுமானதாகும். கூட்டாட்சி அமைப்பைப்பற்றிய திருத்தங்களுக்கு மட்டும் பெரும்பாலான மாநிலங்களின் இசைவு தேவையாகும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கூட்டாட்சிகளில் தேசியப் பாராளுமன்றத்தால் மட்டும் அரசியலமைப்பின் எந்த விதியையும் திருத்த இயலாது என்பது அறியத்தக்கது.

குற்றங் குறைகளைக் களைதல்

மக்கள் குறைகளும், அரசாங்கத்தின் குற்றங்களும் தெரிவிக்கப்படுவதற்குப் பாராளுமன்றம் சிறந்த அரங்கம் எனக் கருதப்படுகிறது. அதன் நடவடிக்கைகளை நாடு முழுவதும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதால், அங்கே தெரிவிக்கப்படும் குற்றங்களையும் குறைகளையும் அரசாங்கம் உடனடியாகக் களைய முயலும்; அதைச் செய்யத் தவறும் அரசாங்கத்தின் பெயருக்கு மாசு உண்டாகும் என்பதில் ஐயமில்லை. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படாத பொருள்களே இல்லை எனலாம்; உள்நாட்டு, வெளிநாட்டு அலுவல்கள் எல்லாமே அங்கு அலசி ஆராயப்படும். குடியரசு தலைவரின் வருடாந்திரத் தொடக்க உரையின்மீதான விவாதத்தின்பொழுதும், வரவு செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தின்பொழுதும், அரசு கொள்கைகளின் நன்மை தீமைகள், இரு சபைகளிலும், ஆளும் கட்சியினராலும் எதிர்க் கட்சியினராலும் நன்கு விவாதிக்கப்படும். சபைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு உறுப்பினர்கள் எந்த நீதிமன்றத்திற்கும் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்லர் என அரசியலமைப்பு அறிவிப்பதால், உறுப்பினர்கள் தங்கள் உண்மையான கருத்துகளை எந்தவிதமான அச்சமுமின்றித் தெரிவிக்கலாம். பாராளுமன்றத்தின் நேரத்தில் மிகுதியான காலம் ஆளும் கட்சியினருக்கு ஒதுக்கப்படுவதால், அவர்களின் கொள்கைப் பிரசாரத்திற்கு அது மிகச் சிறந்த அரங்காகப் பயன்படுகிறது.

சட்டமும் ஒழுங்கும்

நாடெங்கிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் காத்து, நல்ல அரசாங்கம் ஒன்றை மக்களுக்கு அளிப்பது பாராளுமன்றத்தின் கடமை எனக் கருதப்படுகிறது. போர், ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக்

குழப்பம் ஆகியவைகளிலிருந்து நாட்டைக் காப்பதும், நாடெங்கிலுமுள்ள அரசாங்கங்கள் அரசியலமைப்பின் விதிகளுக்கு ஒத்த வகையில் நடைபெறுமாறு செய்வதும், இந்தியாவின் நிதி நிலைமையைச் செம்மையாக இருக்கும்படி செய்வதும் பாராளுமன்றத்தின் பொறுப்புகளில் அடங்கும். அரசியலமைப்பின் முகப்பில் குறிக்கப்பட்டிருக்கும் உயர்ந்த நோக்கங்களையும், நெறிசெய் நியதிகளில் கூறப்பட்டிருக்கும் மக்கள் நல்வாழ்வுக்குரிய கருத்துகளையும் நிறைவேற்றி, இந்தியாவை ஒரு மாசு மறுவற்ற குடியாட்சியாக ஆக்க வேண்டுவது பாராளுமன்றத்தின் பணி என் நாட்டு மக்கள் நினைக்கின்றனர்.

நீதிபதிகளை நீக்குதல்

பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும், அதனதன் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்குப் பெரும்பான்மையோரால், நீதிபதிகளுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால் குடியரசு தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து விலக்கலாம். அதே போன்று தலைமைத் தணிக்கையாளரையும், தலைமைத் தேர்தல் அதிகாரியையும் பதவியிலிருந்து நீக்க இரு சபைகளின் தீர்மானங்கள் தேவை. மேற்கண்ட அதிகாரிகள் தயவு தாட்சண்யம் இன்றிச் சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்பதற்காக அவர்களைப் பதவியிலிருந்து விலக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

5. சட்டமியற்றும் முறை

(The Process of Lawmaking)

[முன்னுரை—தோற்றுவித்தலும் முதலாம் வாசிப்பும்—இரண்டாம் வாசிப்பு—குழுக் கட்டம்—அறிக்கைக் கட்டம்—மூன்றும் வாசிப்பு—மாநிலங்கள் சபையில் மசோதா—கருத்து வேறுபாட்டுக்குரிய மசோதாக்களும் இணைப்புக் கூட்டங்களும்—குடியரசு தலைவரின் இசைவு—நிதி மசோதாக்கள்—இரு சபைகளும் ஒத்த முக்கியத்துவ முள்ள சபைகளா?]

முன்னுரை

சட்டங்கள் இயற்றுதல் பாராளுமன்றத்தின் பணிகளில் முதன்மையானதும் முக்கியமானதும் என்பதும் பாராளுமன்றம் மட்டுமே சட்டங்கள் இயற்றலாம் என்பதும் முன்பே குறிப்பிடப் பட்டது. சட்டங்களை ஆக்குவதற்கு நம் பாராளுமன்றம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பின்பற்றும் முறைகளையே மேற்கொள்கிறது. நம் அரசியலமைப்பு, மசோதாக்களைச் சாதாரண மசோதாக்கள் என்றும் நிதி மசோதாக்கள் என்றும் வகைப்படுத்தி, அவை சட்டங்களாக்கப்படுவதற்கு வெவ்வேறான முறைகளை வகுத்திருக் கிறது. மற்ற நாடுகளைப்போல நம் நாட்டிலும் பாராளுமன்றத்தில் முன்மொழியப்படும் மசோதாக்களில் பெரும்பாலானவை அமைச் சர்களால் முன்மொழியப்படுகின்றன என்பதும், மேலும் அவற்றில் பெரும்பாலானவை மக்கள் சபையில் தோற்றுவிக்கப் படுகின்றன என்பதும் அறியத்தக்கன. இனி, சாதாரண மசோதா ஒன்று சட்டமாக இயற்றப்படும் விதத்தைக் காண்போம்.

தோற்றுவித்தலும் முதலாம் வாசிப்பும்

மசோதா ஒன்றை முன்மொழிய விரும்பும் உறுப்பினர், சபையின் அனுமதி வேண்டி ஒரு மாதத்திற்கு முன்பாகவே விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். மசோதாவின் வாசகமும், அதற்கான நோக்கங்கள், காரணங்கள் ஆகியவை அடங்கிய

அறிக்கை ஒன்றும் விண்ணப்பத்தோடு சபைக்கு அனுப்ப வேண்டும். மசோதாவை முன்மொழிபவர் அதை அறிமுகப் படுத்தும் வகையில் அதன்மீது சிறு விளக்க உரையும் சில சமயங் களில் நிகழ்த்துவதுண்டு. மசோதாவிற்கு எடுத்த எடுப்பிலேயே எதிர்ப்பு இருக்குமாஞல் அதன்மீது உறுப்பினர்கள் வாக்களிக்கு மாறு அழைக்கப்படுவார்கள். மசோதா பெரும்பாலான உறுப் பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது இந்திய அரசிதழில் (Gazette of India) பிரசுரிக்கப்படும். சபாநாயகரின் அனுமதியைப் பெற்று மசோதாவைச் சபைக்கு அறிமுகப்படுத்தாமலேயே அரசிதழில் வெளியிடுவதற்கும் சபையின் விதி இடமளிக்கிறது.

இரண்டாம் வாசிப்பு

மசோதா மேற்கண்ட முதலாவது கட்டத்தைக் கடந்த பிறகு, அதை முன்மொழிந்த உறுப்பினர் அதை உடனடியாக ஆராயவேண்டுமென்றே, மற்றொரு நாள் ஆராயவேண்டு மென்றே, ஆய்வுக் குழுவின் கவனத்திற்கு அனுப்பலாமென்றே, அதன்மீது பொதுமக்கள் கருத்தைத் திரட்ட வேண்டுமென்றே தெரிவிப்பார். மேற்கண்டவற்றில் எதைச் செய்யவேண்டுமென்று சபை தீர்மானித்த பிறகு, மசோதா உறுப்பினர்களால் பொதுவாக விவாதிக்கப்படும். மசோதா தேவை என்பதற்கும் தேவையில்லை என்பதற்குமான வாதப் பிரதிவாதங்கள் பரிமாறிக் கொள்ளப்படும். விவாதத்திற்குப் பிறகு நடைபெறும் வாக்கெடுப்பில் அதற்கு ஆதாரவாகப் பெரும்பாலான உறுப் பினர்கள் வாக்களித்தால் மசோதா அதன் அடுத்த கட்டத்திற்குத் தயாராகும்.

குழுக் கட்டம்

மசோதா தீர ஆராயப்படுவதெற்கென அது சபையின் ஆய்வுக்குழு ஒன்றிற்கு அனுப்பப்படும். ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் இடம்பெறும் ஆய்வுக்குழுவில் மசோதா எந்தத் துறையைச் சார்ந்ததோ அந்தத் துறையின் அமைச்சரும், சட்ட அமைச்சரும் இடம் பெறுவர். குழுவில் யார் யார் உறுப்பினர் களாக அமர வேண்டுமென்று சபை தீர்மானிக்கும். அவர்களில் ஒருவரைச் சபாநாயகர் குழுவின் தலைவராக நியமிப்பார். சபையின் துணைத்தலைவர் தற்செயலாய் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராய் இருக்க நேர்ந்தால் அவரே அதன் தலைவராய் நியமிக்கப்பட வேண்டும். குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினர் மக்கள் சபையைச் சேர்ந்தவர்களாகவும், மூன்றில் ஒரு பங்கினர் மாநிலங்கள் சபையைச் சேர்ந்தவர்களாகவும் இருப்

பார்கள். குழுவில் மசோதா மிக நுணுக்கமாக ஆராயப்படும். அதன் வரிகளில் ஒவ்வொன்றையும் வார்த்தைகளில் ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்து, அவற்றில் வைத்துக்கொள்ள வேண்டியவற்றை வைத்துக்கொண்டு, நீக்க வேண்டியவற்றை நீக்கி, திருத்த வேண்டியவற்றைத் திருத்தி அது மசோதாவிற்கு மெருகூட்டும். அதன் ஆய்வின்பொழுது சாட்சிகளும், அதனுல் பாதிக்கப்படும் கூட்டத்தாரின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு விசாரிக்கப் படுவார்கள். மசோதா குழுவிற்கு அனுப்பப்பட்ட மூன்று மாதத் திற்குள்ளோ அல்லது சபையால் குறிப்பிடப்படும் காலத்திற் குள்ளோ அதன்மீதான அறிக்கையைக் குழு சபைக்குச் சமர்ப் பிக்க வேண்டும். அறிக்கையைத் தாய்ச் சபைக்குச் சமர்ப்பிப்பது குழுத் தலைவரின் பொறுப்பாகும்.

அறிக்கைக் கட்டம்

குழுவின் அறிக்கையைச் சபையின் உறுப்பினர்கள் ஆராய்வதே மசோதாவின் அடுத்த கட்டமாகும். இரண்டாம் வாசிப்பின் பொழுது மசோதாவைப் பற்றிப் பொதுப்படையாக விவாதித்த சபை, இப்பொழுது அதை மேலும் ஆழமாக ஆராயும். மசோதாவின் விதிகள் ஒவ்வொன்றும் விவாதிக்கப்பட்டுத் தேவை யாஞல் திருத்தி அமைக்கப்படும். உறுப்பினர்கள் கொண்டுவரும் ஏராளமான திருத்தங்களில் எவற்றை மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வது என்பதைச் சபாநாயகரே முடிவு செய்வார். ஒவ்வொரு விதியும் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, அது மசோதாவில் இடம் பெறுகிறதா இல்லையா என்பது முடிவு செய்யப்படும். மசோதாவின் முதலாவது விதி, முகப்புரை, தலைப்பு ஆகியவை அதன் மற்றப் பகுதிகள் ஆராயப்பட்ட பிறகு கடைசியாக ஆராயப்படும்.

மூன்றும் வாசிப்பு

அறிக்கைக் கட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதா சபையில் கடைசிமுறையாக வாசிக்கப்படும். முன்பே தீர விசாரிக் கப்பட்டுவிட்ட மசோதாவை இப்பொழுது ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதைப்பற்றிச் சபை விவாதிக்கும். மசோதாவின் விதிகளை மாற்றக்கோரும் எந்தத் திருத்தத்தையும் இந்தக் கட்டத்தில் பிரேரேபிப்பது முறையாகாது; அவசியமானுல் மசோதாவின் வாசகங்களை மட்டும் திருத்தலாம். இக் கட்டத்தின் வாக்கெடுப்பிலும் மசோதா வெற்றிபெறுமாயின், அது மக்கள் சபையில் முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டு, மாநிலங்கள் சபையின் இசைவைப் பெற அதற்கு அனுப்பப்படும்.

மாநிலங்கள் சபையில் மசோதா

அரசியலமைப்புச் சட்டப்படி, சாதாரண மசோதாக்கள் அனைத்தும் சட்டங்களாவதற்கு இரு சபைகளின் இணக்கமும் இன்றியமையாததாகும். மக்கள் சபையில் ஒரு மசோதா எந்தெந்தக் கட்டங்களைக் கடந்து வந்ததோ, மாநிலங்கள் சபையிலும் அது அவை ஒத்த கட்டங்களைக் கடந்தாக வேண்டும். கீழ்ச் சபையின் மசோதாக்களை மேல்சபை அப்படியே ஏற்றுக் கொள்ளவோ, சில திருத்தங்களோடு ஏற்றுக்கொள்ளவோ; ஏற்றுக்கொள்ள மறுக்கவோ, அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமலிருக்கவோ செய்யலாம். பெரும்பாலான மசோதாக்களை மாற்றமின்றி ஏற்பதே மேல்சபையின் வழக்கம். திருத்தங்கள் கொண்டுவரப்பட்டால் அவை மறுபடியும் கீழ்ச் சபைக்கு அனுப்பப்பட்டு அதன் இசைவைப் பெறுவது அவசியம்.

கருத்து வேறுபாட்டுக்குரிய மசோதாக்களும் இணைப்புக் கூட்டங்களும்

மசோதாபற்றிய திருத்தங்கள் குறித்து இரு சபைகளுக்கிடையே இணக்கம் ஏற்படவில்லை யென்றாலும், அல்லது ஒரு சபையின் மசோதாவை மற்றொரு சபை நிராகரித்துவிட்டாலும், அல்லது ஒரு சபையிலிருந்து அனுப்பப்பட்ட மசோதாவை அடுத்த சபை ஆறு மாத காலம்வரை ஏற்கவும் செய்யாமல் மறுக்கவும் செய்யாமல் காலதாமதம் செய்தாலும் குடியரசு தலைவர் அதுபற்றி முடிவுசெய்ய இரு சபைகளின் இணைப்புக் கூட்டமொன்றைக் கூட்டலாம். மசோதா இணைப்புக் கூட்டத்தில் இரு சபைகளிலிருந்து வந்திருக்கும் உறுப்பினர்களில் பெரும்பாலானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது இரு சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படும். இணைப்புக் கூட்டத்தில் மக்கள் சபையின் 525 பிரதிநிதிகளும் மாநிலங்கள் சபையின் 250 உறுப்பினர்களும் இடம் பெறுவதால், அதில் மக்கள் சபையின் கருத்தே வெல்லும் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற இணைப்புக் கூட்டங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், அது உண்மையில் மக்கள் சபையின் ஆதரவை மட்டுமே பெற்ற மசோதாவாக இருக்கக்கூடும். இரு சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரே அளவினவாக இருக்கும் சூழ்நிலையில்தான் இணைப்புக் கூட்டத்தின் முடிவைப் பாராளுமன்றத்தின் முடிவு என அறிவிப்பது பொருத்தமாகும்.

குடியரசு தலைவரின் இசைவு

மக்கள் சபை, மாநிலங்கள் சபை ஆகிய இரண்டாலும் தனித் தனியாகவோ அல்லது அவற்றின் இணைப்புக் கூட்டமொன்றிலோ

ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண மசோதா குடியரசு தலைவரின் ஒப்பத்தைப் பெற அவருக்கு அனுப்பப்படும். அவர் தன் ஒப்பத்தை அளித்தால் அது சட்டமாகும்; அளிக்க மறுத்தால் அது சட்டமாக இயலாது. அவர் அதைப் பாராளுமன்றத்திற்குத் திருப்பி அனுப்பி அதை மறு பரிசீலனை செய்யும்படியும் கோரலாம். பாராளுமன்றம் மசோதாவை மீண்டும் மறு பரிசீலனை செய்து அதை ஏற்றுக் குடியரசு தலைவருக்கு மறுமுறை அனுப்புமானால், அப்பொழுது குடியரசு தலைவர் அதற்குத் தன் ஒப்பத்தை மறுக்காமல் அளிக்கக் கடமைப்பட்டவர்.

நிதி மசோதாக்கள்

அரசியலமைப்பின் 109ஆம் விதி, நிதி மசோதா மாநிலங்கள் சபையில் தோற்றுவிக்கப்படக் கூடாது எனத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதனால் அது மக்கள் சபையில்தான் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது. கீழ்ச் சபையில் முன் மொழியப்பட்டு இயற்றப்படும் நிதி மசோதா மேல்சபைக்கு அதன் சிபாரிசுக்காக அனுப்பப்படும். மசோதாவானது மேல்சபையை அடைந்த பதினான்கு நாள்களுக்குள் அச் சபை அதைத் தன்னுடைய சிபாரிசோடு கீழ்ச்சபைக்கு அனுப்பிவிடவேண்டும். அதனுடைய சிபாரிசைக் கீழ்ச்சபை வேண்டுமென்றால் ஏற்கவோ, வேண்டா மென்றால் மறுக்கவோ செய்யலாம். எவ்வகையான மசோதாக்கள் நிதி மசோதாக்களெனக் கருதப்படவேண்டுமென்பதை அரசிய லமைப்பு நன்கு விவரிக்கிறது. ஒரு குறிப்பிட்ட மசோதா, சாதாரண மசோதாவா நிதி மசோதாவா என்ற ஐயமெழுந்தால், அதுபற்றிச் சபாநாயகரின் முடிவே இறுதியான முடிவாகும். மக்கள் சபையிலிருந்து மாநிலங்கள் சபைக்கு அனுப்பப்படும் நிதி மசோதா ஒவ்வொன்றிலும் அது நிதி மசோதா என்பதற்கான சான்றிதழ் ஒன்றைச் சபாநாயகர் கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும். மேலும், நிதி மசோதாக்கள் குடியரசு தலைவரின் சிபாரிசோடுதான் மக்கள் சபையில் தோற்றுவிக்கப்படவேண்டும். பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் நிதி மசோதாக்கள் முழுமன்றக் குழுவால் ஆராயப்படுவதுபோல் நம்நாட்டில் ஆராயப்படுவதில்லை என்பது அறியத்தக்கது. சாதாரண மசோதாக்களுக்குக் குடியரசு தலைவர் தன் ஒப்பத்தை மறுக்கலாம்; ஆனால், நிதி மசோதாக்கள் அனைத்தையும் அவர் ஏற்கக் கடமைப்பட்டவராவார்.

இரு சபைகளும் ஒத்த முக்கியத்துவமுள்ள சபைகளா ?

சட்டமியற்றும் துறையில் இரு சபைகளுக்கும் அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரங்களை ஆராய்வோமானால் அவைகளுக் கிடையே உள்ள ஏற்றத்தாழ்வு நன்கு புலப்படும். மக்கள் சபை

மாநிலங்கள் சபையைவிட உயர்ந்தது என்பதில் ஐயமில்லை. மக்கள் சபையால் விரும்பப்படும் நிதி மசோதாக்களைப் பதினன்கு நாள்களும், சாதாரண மசோதாக்களை ஆறு மாதங்களும் மாநிலங்கள் சபை தள்ளிப்போடலாமே ஒழிய அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. இரு சபைகளுக்குமிடையே நிலவும் இவ்வுறவு, பிரிட்டனில் பிரபுக்கள் சபைக்கும் பொதுமக்கள் சபைக்குமிடையே நிலவும் உறவினை நமக்கு நினைவூட்டுகிறது. இந்தியாவில் மக்கள் சபை வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பாக இருப்பதனால் அதற்கு மாநிலங்கள் சபையைவிட அதிகமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றனபோதும்!

6. தலைமை நீதிமன்றம்

(The Supreme Court)

[முன்னுரை—அமைப்பு—அதிகார எல்லை—அரசு வழக்குகள்—அரசியலமைப்புச் சார்ந்த வழக்குகள்—சிவில் வழக்குகள்—குற்ற வழக்குகள்—விசேஷ அனுமதி—அடிப்படை உரிமைகளைக் காத்தல்—குடியரசு தலைவருக்கு ஆலோசனை வழங்குதல்—மன்றத்தின் நடைமுறைபற்றிய செய்திகள்—நீதிப் புனராய்வு.]

முன்னுரை

இந்திய அரசியலமைப்பு, பெருமைக்குரிய நீதித்துறை ஒன்றை நிறுவி அதற்கு மணிமகுடம் சூட்டினாற் போன்று சிறந்ததொரு தலைமை நீதிமன்றத்தையும் அமைத்திருக்கிறது. மைய அரசு, மாநில அரசுகள் ஆகியவற்றிற்கிடையே அவற்றின் அதிகார எல்லையைப்பற்றி எழும் வழக்குகளைத் தீர்ப்பதும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்குத் தக்க காப்பளிப்பதும், அரசியலமைப்பின் சட்ட திட்டங்களை யாரும் அசைத்து அழித்து விடாமல் காத்து நிற்பதும், மக்களிடையே எழும் எல்லாவிதமான வழக்குகளுக்கும் இறுதியான மேல் முறையீட்டு நீதிமன்றமாக இயங்குவதும் இந்தியத் தலைமை நீதிமன்றம் ஆற்றிவரும் அரும் பணிகளாகும். அது மைய அரசின் சட்டங்களுக்கெதிரான வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் பெற்றிருப்பது போல, மாநில அரசுகளுக்கெதிரான வழக்குகளையும் விசாரிப்பதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறது என்பது அறியத்தக்கது. அதன் அமைப்பும் அதிகாரங்களும் அரசியலமைப்பில் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. நல்ல கூட்டாட்சியின் தலைமை நீதிமன்றமானது எவ்வாறு அமையவேண்டுமென்று அறிஞர்கள் விரும்புவார்களோ அவ்வாறே நம் தலைமை நீதிமன்றம் அமைந்து, சிறந்த தலைமை நீதிமன்றத்திற்கு இலக்கணமாய் விளங்குகிறது.

அமைப்பு

நம் தலைமை நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும், பதின் மூன்று நீதிபதிகளையும் தன்னகத்தே கொண்ட ஓர் அமைப்பாகும். மன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பாராளுமன்றமே நிர்ணயிக்கும். தலைமை நீதிமன்றத்தின் நீதிபதி ஒவ்வொருவரும் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவார். குடியரசு தலைவர் தலைமை நீதிபதியை நியமிப்பதற்குத் தலைமை நீதிமன்றம், மாநில உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நீதிபதிகளைத் தேவைக்கேற்ப கலந்தாலோசிக்க வேண்டும். மற்ற நீதிபதிகளை நியமிப்பதற்கு மேற்கண்ட நீதிபதிகளோடு தலைமை நீதிபதியையும் கலந்தாலோசிக்க வேண்டும்; அவ்வாறு கலந்தாலோசிக்க அவர் கடமைப்பட்டவரே ஒழிய, அவர்களின் கருத்தை அவர் ஏற்க வேண்டுமென்பது கட்டாயமன்று. நீதிபதிகள் அறுபத்தைந்து வயது வரையில் பதவியிலிருக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்தியக் குடிமக்கள் மட்டுமே தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்படலாம். நீதிபதியாக நியமிக்கப்படுபவர் மாநில உயர் நீதிமன்றம் ஒன்றில் (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில்) குறைந்த அளவு ஐந்து ஆண்டுகளாவது நீதிபதியாகப் பணியாற்றியவராகவோ, அல்லது மாநில உயர் நீதிமன்றம் ஒன்றில் (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில்) குறைந்த அளவு பத்து ஆண்டுகளாவது வழக்கறிஞராகப் பணியாற்றியவராகவோ, அல்லது குடியரசு தலைவரின் கருத்தில் புகழ்பெற்ற சட்ட நிபுணராகவோ (distinguished jurist) இருக்க வேண்டும். தலைமை நீதிமன்றத்தில் அறிவும் அனுபவமும் மிக்க நீதிபதிகள் அமர வேண்டுமென்பதே அரசியலமைப்பை ஆக்கியோரின் நோக்கமாகும்.

பதவியில் அமரும் நீதிபதி ஒவ்வொருவரும் அவர் 'இந்திய அரசியலமைப்பின்பால் உண்மையாகவும் பற்றுறுதியோடும் இருப்பதாகவும், இந்தியாவின் இறைமையையும் உறுதிப்பாட்டையும் காப்பதாகவும், முறைப்படியும், உண்மையாகவும், தன் திறமைக்கும், அறிவுக்கும், பகுத்தறியும் திறனுக்கும் தக்க வகையிலும், தன் பதவியின் கடமைகளைத் தயவு தாட்சண்யம் இன்றியும், விருப்பு வெறுப்பு இன்றியும் செய்வதாகவும், அரசியலமைப்பையும் சட்டங்களையும் காத்துப் பேணுவதாகவும் உறுதி கூறுகின்றேன்' எனக் குடியரசு தலைவர் முன்பாக உறுதிமொழி கூறவேண்டும். தலைமை நீதிபதிக்கு மாதமொன்றுக்கு 5,000 ரூபாய் சம்பளமும், மற்ற நீதிபதி ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு 4,000 ரூபாய் சம்பளமும் வழங்கப்படுகிறது;

இலவசக் குடியிருப்புகளும் அவர்களுக்குத் தரப்படுகிறது; அவர்களின் சலுகைகள், படிகள், விடுமுறை, ஓய்வுக்கால ஊதியம் ஆகியவற்றைப் பாராளுமன்றம் அதன் சட்டம் மூலமாக நிர்ணயிக்கும். குடியரசு தலைவர் நாட்டில் நிதி நெருக்கடி தோன்றியிருப்பதாக அறிவிக்கும் சமயங்களில், அவருக்கு நீதிபதிகளின் சம்பளங்களைக் குறைக்கும் அதிகாரமுண்டு. 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் மாதமொன்றுக்குத் தலைமை நீதிபதிக்கு 7,000 ரூபாயும், மற்ற நீதிபதி ஒவ்வொருவருக்கும் 5,500 ரூபாயும் சம்பளம் அளித்தது என்பதை நோக்குகிறபொழுது, இன்றைய நீதிபதிகளின் ஊதியங்கள் குறைவாகத் தோன்றுகின்றன. மாநில கவர்னருக்கு 5,500 ரூபாய் ஊதியம் வழங்கும் நம் அரசியலமைப்பு, தலைமை நீதிபதிக்கு 5,000 ரூபாய் மட்டுமே ஊதியம் வழங்குவதைக் குறித்துச் சிலர் அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர். தலைமை நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த எவரும் இந்தியாவில் வேறு எந்த நீதிமன்றம் அல்லது நிறுவனத்தின் முன்பாக வழக்கறிஞராக வழக்காட முடியாது.

நீதிபதி ஒருவர் தவறான நடத்தை அல்லது திறமையின்மைக்காகப் பதவியிலிருந்து விலக்கப்படலாம். நீதிபதிக்கு எதிரான தீர்மானங்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் ஒரே கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படவேண்டும். ஒவ்வொரு சபையிலும் சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேருக்கு மேலானோராலும், சபைக்கு வந்திருந்து வாக்களிப்போரில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையோராலும் அத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். சபைகளின் தீர்மானங்கள் குடியரசு தலைவரை அடைந்ததும், அவர் நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்க உத்தரவிடுவார். நீதிபதியின் தவறான நடத்தை அல்லது திறமையின்மை ஆகியவற்றை அறிவதற்குப் பின்பற்றவேண்டிய முறையையும், தீர்மானங்களைக் குடியரசு தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய முறையையும், பாராளுமன்றம் அதன் சட்டம் மூலமாக நிர்ணயிக்கும்.

தலைமை நீதிபதிப் பதவி காலியானால், அல்லது அவர் தன்னுடைய பதவிக்குரிய பணிகளைச் செய்ய முடியாத நிலையிலிருந்தால், மற்ற நீதிபதிகளில் ஒருவரைக் குடியரசு தலைவர் தலைமை நீதிபதியாக நியமிப்பார். தலைமை நீதிபதியின் இடம் காலியானால் மற்ற நீதிபதிகளில் யார் அங்கு அதிக காலம் நீதிபதியாக இருந்திருக்கிறாரோ அவரே அப் பெரும் பதவிக்கு நியமிக்கப்படுவது மரபு. தலைமை நீதிமன்றத்தில் போதுமான நீதிபதிகள் இல்லாதிருந்தால், தலைமை நீதிபதி குடியரசு தலைவரின் இசைவைப் பெற்று, மாநில உயர் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி ஒருவரை, அம்

மன்றத்தின் தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்த பிறகு, தலைமை நீதிமன்றத்தின் தாற்காலிக நீதிபதியாக (adhoc judge) நியமிக்கலாம்; அவ்வாறு நியமிக்கப்படும் நீதிபதி, தலைமை நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்படுவதற்குரிய தகுதியுடைய வராக இருக்கவேண்டும். மேலும், தலைமை நீதிபதி, குடியரசு தலைவரின் இசைவைப் பெற்று, தலைமை நீதிமன்றம் அல்லது நாடு குடியரசு ஆவதற்கு முன்பிருந்த கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) ஆகியவற்றில் நீதிபதியாக இருந்தவர்களையும் தலைமை நீதிமன்றத்தின் தாற்காலிக நீதிபதிகளாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

அரசியலமைப்பு, தலைமை நீதிமன்றத்தை 'நிலைச்சான்று நீதிமன்றம்' (Court of Record) என அறிவிக்கிறது. அதனுடைய நடவடிக்கைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, மற்ற நீதிமன் றங்களில் மேற்கோள்களாகக் காட்டப்படும் தன்மையுடையவை. மன்றத்தின் கௌரவத்தை பாதிக்கின்ற வகையில் நடந்துகொள் வோரைத் தண்டிப்பதற்கு அதற்கு அதிகாரமுண்டு. டெல்லி மாநகரே தலைமை நீதிமன்றம் அமரும் இடமாகும். தலைமை நீதிபதி, குடியரசு தலைவரின் அனுமதியோடு, வேறு இடங்களிலும் அது அமரும்படி செய்யலாம்.

அதிகார எல்லை

நம் தலைமை நீதிமன்றம் ஈடு இணையற்ற அதிகார எல்லை யுடையதாக விளங்குகிறது. சில வழக்குகளை அதுவே முதல்நிலை மன்றமாக நின்று எடுத்த எடுப்பிலேயே விசாரிக்கலாம் என்றாலும், அங்குவரும் வழக்குகளில் மாநில உயர் நீதிமன்றங்களின் தீர்ப்பு களிலிருந்து மேல் முறையீடாக வருபவையே அதிகமாகும். **(1) அரசு வழக்குகள் :** (அ) இந்திய அரசாங்கத்திற்கும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையே எழும் வழக்குகளையும்; (ஆ) ஒருபக்கம் இந்திய அரசாங்கம் மேலும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் மறு பக்கம் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு மிடையே எழும் வழக்குகளையும்; (இ) இரண்டு அல்லது இரண் டிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையே எழும் வழக்குகளையும் தலைமை நீதிமன்றம் ஒன்றுமட்டுமே விசாரிக்க முடியும். **(2) அரசிய லமைப்புச் சார்ந்த வழக்குகள் :** அரசியலமைப்புச் சார்ந்த வழக்குகளை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளிலிருந்து தலைமை நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அரசிய லமைப்புச் சட்டமொன்றின் விளக்கத்தைப் பொறுத்த வழக்காக அது இருத்தல் அவசியம். வழக்கை முன்பு விசாரித்த உயர் நீதி

மன்றம் அது அரசியலமைப்பைச் சார்ந்த வழக்காய் இருப்ப தற்கான சான்றிதழ் வழங்கவேண்டும். அதுபோன்ற சான்றிதழ் வழங்க உயர் நீதிமன்றம் மறுத்தாலும், தலைமை நீதிமன்றம் அவ் வழக்கு அரசியலமைப்பின் விளக்கத்தை ஒட்டியது எனக் கருதினல் தன்னிடம் முறையிட்டுக்கொள்ள அனுமதி வழங்கலாம். அரசிய லமைப்பிற்குப் பொருள் விளக்கம் காணும்படி தூண்டும் வழக்கு கள் தலைமை நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லப்படலாம் என்பது அரசியலமைப்பிற்கு நாம் அளிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்து கிறது. அரசியலமைப்பின் விதிகளுக்குத் தலைமை நீதிமன்றம் கூறும் பொருளே இறுதியான பொருளாகும். (3) உயர் நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பிலிருந்து சிவில் வழக்குகளையும் சில நிபந்தனைகட்கு உட்பட்டுத் தலைமை நீதிமன்றத்திற்கு மேல் முறையீடாக எடுத்துச் செல்லலாம். வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தின் மதிப்பு 20,000 ரூபாய்க்குக் குறைந்ததன்று என்றோ அல்லது வழக்குத் தலைமை நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவதற்குரிய தகுதியுடையதென்றோ கடைசியாக அதை விசாரித்த உயர் நீதிமன்றம் சான்றிதழ் வழங்கினல் அது தலைமை நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும். (4) குற்ற வழக்குகள் : குற்ற வழக்குகளும் மேல் முறையீடாகத் தலைமை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படலாம். கீழ் நீதி மன்றம் ஒருவனைக் குற்றமற்றவன் எனத் தீர்மானித்திருந்து, அவ்வழக்கின் மேல் முறையீட்டு விசாரணையில் உயர் நீதிமன்றம் அவனைக் குற்றவாளி எனத் தீர்மானித்து மரண தண்டனை வழங்கி ஞலோ, அல்லது உயர் நீதிமன்றம் அதன் அதிகார எல்லைக்கு உட்பட்ட எந்த நீதிமன்றத்திலிருந்தேனும் ஒரு வழக்கைத் தன் னுடைய விசாரணைக்கு மாற்றி, குற்றம் சாட்டப்பட்டவனுக்கு மரணதண்டனை வழங்கினலோ, அல்லது உயர் நீதிமன்றம் அது தலைமை நீதிமன்றத்திற்கு மேல்முறையீடாகச் செல்லத் தகுதி யுடைய வழக்கு என்று சான்றிதழ் வழங்கினலோ, குற்ற வழக்கைத் தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முறையிட்டுக் கொள்ளலாம். அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கும் சிவில், குற்ற வழக்குகளைத் தவிர, பாராளுமன்றம் வேறு வகையான வழக்கு களையும் தலைமை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துகொள்வ தற்கு அனுமதித்துச் சட்டமியற்றலாம்.

விசேஷ அனுமதி

நாட்டிலுள்ள எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பிலிருந்தும் தலைமை நீதிமன்றம் அதனிடம் மேல்முறையீடு செய்துகொள்ள அனுமதி அளிக்கலாம். சட்டப்படி தலைமை நீதிமன்றத்தில் விசாரிக்கப் படுவதற்குரிய தகுதியைப் பெருத வழக்குகளுக்கு, அவற்றின் தனித் தன்மையை அல்லது முக்கியத்துவத்தைப் பொறுத்துத்

தலைமை நீதிமன்றம் 'விசேஷ அனுமதி' (Special Leave) அளித்து அவற்றை அதன் முன்பாக வழக்காட வகை செய்யலாம். கீழ் நீதி மன்றங்களில் நியாயம் மறுக்கப்பட்டதென்று தோன்றினாலோ, அதனால் நீதி நிருவாகத்தில் தவறிழைக்கப்பட்டுவிட்டது என்று தோன்றினாலோ, அவற்றின் முடிவுகளிலிருந்து தனக்கு விண்ணப் பித்துக்கொள்ள வழக்கில் தொடர்புடையோர்க்கு வாய்ப் பளிப்பது மிகச் சிறந்த ஏற்பாடு என்பதில் ஐயமில்லை. இராணுவ நீதிமன்றங்களைத் தவிர, மற்ற எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பி லிருந்தும், வழக்கு எத்தன்மையான வழக்காயிருப்பினும், அரசிய லமைப்பில் அதுபோன்ற வழக்கிற்குப் பெரு நீதிமன்றத்தில் முறையிட்டுக்கொள்ள வழக்காடுவோருக்கு உரிமை இல்லாதிருப் பினும், நீதித்துறை பழி பாவத்திற்கு ஆளாகக்கூடாது என்று கருதி, தலைமை நீதிமன்றம் வழக்கைத் தன்னிடமே வரவேற்க அதிகாரமளிக்கப்பட்டிருப்பது, அரசியலமைப்பு அதன்பால் வைத்திருக்கும் நம்பிக்கைக்குச் சான்றாக விளங்குகிறது. தலைமை நீதிமன்றமே சில சமயங்களில் தவறிழைக்கக்கூடும். அதனுடைய தீர்ப்புகளை அது மறு பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படலாம்; அதற்கான விண்ணப்பம் தீர்ப்பு அளிக்கப்பட்ட முப்பது நாள்களுக்குள் தலைமை நீதிமன்றத்தின் பதிவாளரிடம் பதிவு செய்யப்படவேண்டும். கூட்டரசு பட்டியலில் காணப்படும் எந்தப் பொருள்மீதும் தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கிப் பாராளுமன்றம் சட்டமியற்றலாம்.

அடிப்படை உரிமைகளைக் காத்தல்

நம் அரசியலமைப்பு, மக்களுக்கு அளிக்கும் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு உத்தரவாதமளிப்பது தலைமை நீதி மன்றத்தின் பொறுப்பாகும். மக்களின் உரிமைகளில் தலையிட்டு அவற்றைப் பறிக்க முயலுவோர் யாராக இருப்பினும் தலைமை நீதிமன்றம் அவர்களுக்குக் கட்டளைகள் (writs) அனுப்பி, அடிப் படை உரிமைகளை மக்கள் அனுபவிப்பதற்கு வழிவகுக்கும். ஆட் கொணர் கட்டளை (writ of habeas corpus), செய் என்னும் ஆணைக் கட்டளை (writ of mandamus), விசாரணை தடைக்கட்டளை (writ of prohibition), உரிமை ஆதாரக் கட்டளை (writ of quo warranto), பத்திரத்தைக் கொண்டுவந்து முன்னிலைப்படுத்த கீழ் மன்றங்களுக்கு இடப்படும் கட்டளை (writ of certiorari) ஆகிய கட்டளைகளைப் பிறப்பித்து அவை வாயிலாக அடிப்படை உரிமை களைக் காக்கும்படி அரசியலமைப்புத் தலைமை நீதிமன்றத்தைக் கோருகிறது.

குடியரசு தலைவருக்கு ஆலோசனை வழங்குதல்

1906ஆம் ஆண்டின் கனடியத் தலைமை நீதிமன்றச் சட்டத்தைத் (Canadian Supreme Court Act) தழுவி, நம் அரசியலமைப்பும் குடியரசு தலைவர் தலைமை நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற வகை செய்கிறது. பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சினை அல்லது உண்மைப் பிரச்சினை ஏதாவது எழுந்தாலோ அல்லது எழக்கூடும் எனத் தோன்றினாலோ, குடியரசு தலைவர் அப் பிரச்சினையைத் தலைமை நீதிமன்றத்தின் ஆய்வுக்கு அனுப்பி அதன் கருத்தைக் கேட்கலாம். தலைமை நீதிமன்றம் ஆலோசனை வழங்குவது கட்டாயமென்றோ, அப்படி வழங்கினால் குடியரசு தலைவர் ஏற்கவேண்டியது கட்டாயமென்றோ அரசிய லமைப்புக் குறிப்பிடவில்லை எனினும், இருவரும் ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதே மரபு. சட்ட விரோதமானவையாய் இருக் கலாம் என எண்ணத்தக்க செயல்களைச் செய்து, அதன் பிறகு அவற்றைத் தலைமை நீதிமன்றம் செல்லத் தக்கவையல்ல என அறிவிப்பது அரசாங்கத்தின் நற்பெயருக்கு நல்லதாகாது. முன் கூட்டியே அச் செயல்களுக்குச் சட்டத்தில் அனுமதி உண்டா இல்லையா என்று தெரிந்துகொண்டு, அதற்குத் தக்க வகையில் நடந்துகொள்வதே அரசியல் விவேகம். இத்துறையில் அறிவுரை வழங்கத் தலைமை நீதிமன்ற நீதிபதிகளைவிட மேலான தகுதி யுடையோர் நாட்டில் யாரும் இருக்கமுடியாது. குடியரசு தலைவ ரால் எழுப்பப்படும் வினாவுக்கு விடையளிக்க நீதிமன்றத்தின் நீதிபதிகளில் குறைந்த அளவு ஐந்து பேராவது அதை ஆராய்ந்து அவர்களில் பெரும்பாலோரின் கருத்தை நீதிமன்றத்தின் கருத்தென அவருக்குத் தெரிவிப்பார்கள். அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் உண்மையாக எழும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்குமே ஒழிய, குடியரசு தலைவரால் எழுப்பப்படும் வினாக்களுக்கு விடை யளிக்காது. 1793ஆம் ஆண்டிலேயே தலைவர் வாஷிங்டன் சில பிரச்சினைகள்மீது மன்றத்தின் கருத்துரையைக் கேட்டனுப்பிய வேண்டுகோளுக்கு நீதிமன்றம் இணங்க மறுத்து, வழக்குகளுக்கு மட்டுமேதான் தீர்ப்பளிக்கமுடியும் எனக் கூறியது அறியத் தக்கது.

மன்றத்தின் நடைமுறைகளைப்பற்றிய செய்திகள்

பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு உட்பட்டுக் குடியரசு தலைவரின் அனுமதியோடு தலைமை நீதிமன்றம் அதன் நடைமுறைகளைப்பற்றிய விதிகளை அவ்வப்பொழுது அமைத்துக் கொள்ளும். தலைமை நீதிமன்றம் ஒரு சட்டத்தைப்பற்றிப் பொருள் விளக்கம் கூறினால், அவ் விளக்கத்தை இந்தியாவிலுள்ள

எல்லா நீதிமன்றங்களும் ஏற்கக் கடமைப்பட்டவையாகும். மன்றம் யாரை வேண்டுமென்ருலும் அழைத்து விசாரிக்கவும், எந்தப் பத்திரத்தை வேண்டுமென்ருலும் பார்க்கவும், தன்னை அவமதிப்பவர்களைத் தண்டிக்கவும் எந்தவிதமான ஆணைகளைப் பிறப்பிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தலைமை நீதி மன்றத்தின் தீர்ப்புகள் அனைத்தும் மன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்படவேண்டும். பெரும்பாலான நீதிபதிகளால் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவே மன்றத்தின் முடிவாக அமையும்.

தலைமை நீதிமன்றத்தின் அதிகாரிகள், பணியாள்கள் ஆகியோர் தலைமை நீதிபதியாலோ அல்லது அவரால் நியமிக்கப்படும் நீதிபதி அல்லது அதிகாரி ஒருவராலோ நியமிக்கப்படுவார்கள். ஆனுல், மத்தியப் பொதுப் பணிக் கழகத்தைக் கலந்தாலோசித்த பிறகு அவர்கள் நியமிக்கப்படவேண்டுமெனக் குடியரசு தலைவர் ஆணை பிறப்பிக்கலாம். அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரின் வேலை நிபந்தனைகளும் தலைமை நீதிபதியாலோ அல்லது அவரால் நியமிக்கப்படுபவராலோ நிர்ணயிக்கப்படும். ஆனுல், அவர்களின் சம்பளம், படி, விடுமுறை ஓய்வுக்கால ஊதியம் ஆகியவற்றைப் பற்றிய விதிகளுக்குக் குடியரசு தலைவரின் அனுமதியைப் பெற வேண்டும். தலைமை நீதிமன்றத்தின் நிருவாகச் செலவுகள் அனைத்தும் இந்தியத் திரட்டு நிதியிலிருந்து (Consolidated Fund of India) தரப்படும்.

நீதிப் புனராய்வு

அரசின் நிறுவனங்கள் அனைத்தும் அரசியலமைப்பிலிருந்து தங்கள் அதிகாரங்களைப் பெறுவதால், நம் நாட்டில் அரசியலமைப்புதான் தலையாய சட்டம் என்பதில் ஐயமில்லை. அரசியலமைப்பிற்கு மாருன சட்டங்களிலிருந்தும் செயல்களிலிருந்தும் அதனைக் காப்பது தலைமை நீதிமன்றத்தின் கடமையாகும். நீதி மன்றங்களுக்கு அரசியலமைப்பிற்கு எதிரான சட்டங்களையும் செயல்களையும் செல்லத்தக்கதல்ல என அறிவிக்கக்கூடிய அதிகாரம் உண்டு என்று அரசியலமைப்பு வெளிப்படையாக அறிவிக்கா விட்டாலும், அரசியலமைப்பால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைகள் மீறப்பட்டனவா இல்லையா என முடிவு செய்யக்கூடிய அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உரியனவாதலால், அரசியலமைப்பிற்கு முரணுன சட்டங்களை அவை செல்லாதவை என அறிவிக்கின்றன. மேல்நிலை நீதிமன்றங்களான தலைமை நீதிமன்றமும் உயர் நீதி மன்றங்களுமே சட்டங்களைச் செல்லாதவை என அறிவிக்க முடியுமே ஒழிய, மற்ற எந்த நீதிமன்றமும் அறிவிக்க முடியாது என்பது அறியத்தக்கது. சட்டமொன்று அரசியலமைப்பிற்கு

உட்பட்டதா என்ற ஐயப்பாட்டை அச் சட்டத்தினுல் நேரடியாக பாதிக்கப்படுவோர் மட்டுமே எழுப்ப முடியும். அரசியலமைப் பிற்கு முரணுனதாகக் கருதப்படும் சட்டத்தில் அதன் எப் பகுதி முரணுனதாய் இருக்கின்றதோ அது மட்டுமே செல்லாதது என அறிவிக்கப்படும். அதன் எஞ்சிய பகுதி சட்டமாய் தொடர்ந்து நீடிக்கும்.

இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் அதிகாரங்களுக்கு நிகரான அதிகாரங்கள் உடைய நீதிமன்றம் உலகில் வேறெங்குமில்லை என்பது அரசியல் அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். இந்தியா ஒரு கூட்டாட்சியாக இருப்பதாலும், இந் நாட்டின் நீதித்துறை ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறையாக (integrated judiciary) இருப்பதாலும், தலைமை நீதிமன்றம், பழைய கூட்டாட்சி நீதி மன்றம், பிரிவி கவுன்சிலின் நீதிக் குழு ஆகியவை அனுபவித்த அதிகாரங்களை அவற்றின் இன்றைய வாரிசு என்ற அடிப்படையில் அனுபவிப்பதாலும், அது உலகிலேயே மிக வலுவுள்ள நீதிமன்ற மாகக் கருதப்படுகிறது. கடந்த இருபது ஆண்டுகளாக நம் தலைமை நீதிமன்றம் இயங்கிவரும் விதத்தை அறிந்தோர் அதைப் புகழ்ந்து பாராட்டத் தவறியதில்லை.

7. அரசு பணிகள்

(Public Services)

[முன்னுரை—அகில இந்தியப் பணிகள்—பொதுப்பணிக் கழகங்கள் : அமைப்பு—பொதுப்பணிக் கழகங்கள் : அதிகாரங்கள்—ஆண்டறிக்கை.]

முன்னுரை

ஓர் அரசின் தரம் அதன் ஊழியர்களின் தரத்தைப் பொறுத்தது என்பதை உணரும் நம் அரசியலமைப்பு, அரசின் பணித்துறை செம்மையாகச் செயல்படுவதற்கு வகை செய்கிறது. வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு கட்சிகள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தாலும், அரசின் ஊழியர்கள் ஆளும் கட்சியினருக்குத் தக்க அறிவுரையும் ஆலோசனையும் வழங்கி, அவர்களின் திட்டங்களை நிறைவேற்ற உண்மையாக உழைப்பதே அவர்களின் கடமையாகும். பொதுத்துறை அலுவல்கள்பற்றி அரசியலமைப்புச் சில பொதுவான விதிகளை நிர்ணயித்ததோடு நின்று, மத்தியப் பாராளுமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் அதற்குரிய அரசு பணிக்கு ஆள் எடுத்தல் குறித்தும் அவர்களின் வேலைபற்றிய விதிகளைக் குறித்தும் சட்டமியற்ற அதிகாரமளித்திருக்கிறது. அரசியலமைப்பில் அரசு பணிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, சம்பந்தப்பட்ட பாராளுமன்றங்கள் அவற்றின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பணிகளை ஒழுங்குபடுத்தும்படி எதிர்பார்க்கப்படுகின்றன.

பாதுகாப்புப் பணி (Defence Service), மத்திய அரசு பணி (Civil Service of the Union), அகில இந்தியப் பணிகள் (All-India Services) ஆகியவற்றைச் சேர்ந்தோர் குடியரசு தலைவரின் தயவு இருக்கின்ற வரையிலும், மாநில அரசு பணியைச் சேர்ந்தோர் அதன் கவர்னரின் தயவு இருக்கின்ற வரையிலும், பதவியிலிருப்பார்கள் என அரசியலமைப்பு அறிவிக்கின்றது. அரசு பணியின்

ஊழியராக இருக்கும் ஒருவர் யாரால் வேலைக்கு நியமிக்கப் பட்டாரோ, அவருக்குக் கீழான எவராலும் வேலையிலிருந்து விலக்கப்பட முடியாது. ஒருவர்மீது எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக அவர் காரணம் காட்டுவதற்குப் போதுமான வாய்ப்புகள் தரப்படாதிருக்கும் வரை, அவரைப் பதவியிலிருந்து விலக்குவதோ, மேல் பதவியிலிருந்து கீழ்ப் பதவிக்கு இறக்குவதோ முறையாகாது. ஆனால், ஊழியரானவர் நீதிமன்றமொன்றால் அவர் செய்த குற்றத்திற்காகத் தண்டனை அளிக்கப்பட்டிருந்தால் அவரை உடனடியாக வேலையிலிருந்து நீக்கவோ அல்லது பதவியின் தரத்தைக் குறைக்கவோ செய்யலாம். வேலையிலிருந்து நீக்கும் அல்லது பதவிக் குறைப்புச் செய்யும் அதிகாரி, ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குரிய அல்லது பதவிக் குறைப்புச் செய்யப்படுவதற்குரிய காரணங்களுக்கு எதிர்க் காரணங்கள் காட்ட வாய்ப்பளிப்பது சாத்தியமன்று எனக் கருதினாலோ, அல்லது குடியரசு தலைவரோ அல்லது கவர்னரோ அதுபோன்ற வாய்ப்பளிப்பது நாட்டின் பாதுகாப்பை பாதிக்கும் எனக் கருதினாலோ, அவருக்குத் தன்மீது எடுக்கப்படும் நடவடிக் கைக்குத் தான் சமாதானம் கூற அழைக்கப்படவேண்டும் எனக் கோரும் உரிமை மறுக்கப்படும்.

அகில இந்தியப் பணிகள்

மாநிலங்கள் சபை மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தேசிய நலனை முன்னிட்டு மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் பொதுவான அகில இந்தியப் பணிகளை அமைக்கலாம். இன்றைய அரசியலமைப்பின் தோற்றத் திற்கு முன்பிருந்தே இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதியும் (Indian Administrative Service), இந்தியக் காவல் பணியாளர் தொகுதியும் இயங்கி வருகின்றன என்பது அறியத்தக்கது. அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கும் மேன்மக்கள் அகில இந்தியப் பணிகளைச் சேர்ந்த உயர் பதவிகளில் அமர்ந்து ஆட்சித் துறையின் தரம் மேலான நிலையில் இருக்கும்படி காத்து வருகின் றனர். அகில இந்திய ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் இவ்வுயர் அதிகாரிகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பணியாற்றி வருவதால், நாடெங்கிலும் ஒரே மாதிரியான தரமுடைய நிருவாகம் நிலவ அவர்கள் வகை செய்கிறார்கள். அகில இந்தியப் பணிகளைச் சேர்ந்த இவ்வதிகாரிகள் இந்நாட்டு ஆட்சித்துறையின் உயிர்நாடியாய்க் கருதப்படுவதிலிருந்து அவர்களின் சேவை எவ் வளவு மகத்தானது என்பதை நாம் உணரமுடிகிறது. பிரிவினைச் சக்திகள் நிறைந்த நம் நாட்டில் அவை தலையெடுக்காவண்ணம் செய்து மக்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்ப்பது இவ்வதிகாரி களின் முதன்மையான பணிகளில் ஒன்றாய்க் கருதப்படுகிறது.

பொதுப் பணிக் கழகங்கள் (Puplic Service Commissions)

இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு கூட்டரசு பொதுப் பணிக் கழகமும் (Union Public Service Commission), மாநிலம் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாநிலப் பொதுப் பணிக் கழகமும் (State Public Service Commission) இருக்க வேண்டும் என அரசிய லமைப்பு அறிவிக்கின்றது. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற் பட்ட மாநிலங்கள் தங்களுக்குப் பொதுவாக ஒரு கூட்டுப் பொதுப் பணிக் கழகத்தை (Joint State Public Service Commission) ஏற்படுத்திக் கொள்ளவும் அரசியலமைப்பு அனுமதிக்கிறது. கூட்டுக்கழகம் அமைத்துக்கொள்ள விரும்பும் மாநிலங்களின் சட்ட மன்றங்களில் அதுபற்றிய தீர்மானம் இயற்றப்பட்டால், தேசியப் பாராளுமன்றம் கூட்டுக்கழகத்தை அமைத்துச் சட்டமியற்றும். மாநில கவர்னர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியப் பொதுப் பணிக் கழகமானது, குடியரசு தலைவரின் இசைவைப் பெற்று, அம் மாநிலத்தின் தேவைகள் அனைத்தையுமே அல்லது ஏதாவதொன்றையோதான் நிறைவேற்ற ஒப்புக்கொள்ளலாம்.

இந்தியப் பொதுப் பணிக் கழகம். கூட்டுக்கழகம் ஆகியவற்றின் தலைவரையும் அங்கத்தினர்களையும் குடியரசு தலைவரும், மாநிலப் பொதுப் பணிக் கழகத்தின் தலைவரையும் அங்கத்தினர்களையும் அந்தந்த மாநில கவர்னரும் நியமிக்கின்றனர்கள். கழகத்தின் (அது மத்தியக் கழகமோ, மாநிலக் கழகமோ, எதுவாயிருந்தாலும்) அங்கத்தினர்களில் பாதிப்பேராவது இந்திய அரசாங்கத்திலாவது அல்லது மாநில அரசாங்கம் ஒன்றிலாவது வேலைபார்த்தவர்களாய் இருக்க வேண்டும். அங்கத்தினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டு களாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தியப் பொதுப் பணிக் கழகத்தின் உறுப்பினர்கள் அறுபத்தைந்து வயதிற்கு மேலும், கூட்டுக்கழகம், மாநிலப் பொதுப் பணிக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அறுபது வயதிற்கு மேலும் பதவியிலிருக்க முடியாது. பொதுப் பணிக் கழகத்தின் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகள் பதவியிலிருந்த பிறகு மீண்டும் அதே பதவிக்கு நியமிக் கப்பட முடியாது.

பொதுப் பணிக் கழகங்களின் தலைவர்களையும் உறுப்பினர் களையும் குடியரசு தலைவர் உத்தரவொன்றின் மூலமாக, தவறான நடத்தைக்காகப் பதவிநீக்கம் செய்யலாம்; ஆனால், குடியரசு தலைவர் தவறு செய்தவராகக் கருதுபவரின் நடத்தையைப் பற்றி விசாரிக்கும்படி தலைமை நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும். தலைமை நீதிமன்றம், அதன் விசாரணையின் விளைவாக அவரைத் தவறான நடத்தைக்காகப் பதவியிலிருந்து விலக்க

வேண்டுமென அறிவிக்குமானல், குடியரசு தலைவர் அவரைப் பதவியிலிருந்து நீக்கும் உத்தரவைப் பிறப்பிப்பார். மத்தியக் கழகம், கூட்டுக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்தோரைக் குடியரசு தலைவரும், மாநிலக் கழகத்தைச் சேர்ந்தோரை கவர்னரும், தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்புத் தெரிவிக்கப்படும் வரை, தாற்காலிகமாகக் கழகத்திலிருந்து தள்ளிவைக்கலாம். பொதுப் பணிக் கழகமொன்றின் தலைவர் அல்லது உறுப்பினர்கள் (அ) பட்டகடனைத் தீர்க்க ஆற்றலற்றவர் எனத் தீர்மானிக்கப் பட்டாலோ, (ஆ) பதவியிலிருக்கும்பொழுது அவர்களுடைய பொறுப்புகளோடு தொடர்பில்லாத ஊழியங்களை ஊதியத்திற் காகச் செய்தாலோ, (இ) குடியரசு தலைவரின் கருத்தில் உடல் நலமும் மன வளமும் அற்றவர்களாகிப், பதவியில் தொடர்ந்து நீடிக்க முடியாத நிலையை அடைந்தாலோ, அவர்களைக் குடியரசு தலைவர் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கி உத்தரவு பிறப்பிக் கலாம். மேலும், அவர்கள் அரசாங்க ஒப்பந்தங்களோடு தொடர்புடையவர்களாக இருத்தலும் கூடாது.

இந்தியப் பொதுப் பணிக் கழகத்தின் தலைவராகப் பதவி வகித்தவர், இந்திய அரசாங்கத்திலோ மாநில அரசாங்கம் ஒன்றிலோ மீண்டும் வேலைக்கு அமரமுடியாது. மாநிலப் பொதுப் பணிக் கழகத்தின் தலைவராகப் பதவி வகித்த ஒருவர் இந்தியப் பொதுப் பணிக் கழகத்தின் தலைவராகவோ, உறுப்பினராகவோ, அல்லது, வேறொரு மாநிலப் பொதுப் பணிக் கழகத்தின் தலைவ ராகவோ ஆகமட்டும் தகுதியுடையவராவார். மாநிலப் பொதுப் பணிக் கழகத்தின் உறுப்பினராக வேலைபார்த்த ஒருவர் அந்தக் கழகத்தின், அல்லது மற்றொரு மாநிலக் கழகத்தின் தலைவராகவோ, அல்லது, இந்தியப் பொதுப் பணிக் கழகத்தின் தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ ஆகமட்டும் தகுதியுடையவராவார்.

பொதுப் பணிக் கழகங்களின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை, அவர்களின் வேலைபற்றிய விதிகள், அவற்றின் பணியாள்களின் எண்ணிக்கை, அவர்களின் வேலைபற்றிய விதிகள் ஆகியவை, இந்தியப் பொதுப் பணிக் கழகம், கூட்டுக் கழகம் ஆகியவற்றைப் பொறுத்தவரை குடியரசு தலைவராலும், மாநிலக் கழகங்களைப் பொறுத்தவரை கவர்னர்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. அங்கத்தினர்களின் வேலைபற்றிய விதிகள், அவர்கள் வேலைக்குச் சேர்ந்த பிறகு, அவர்களுக்குப் பாதகமாக மாற்றப்படக் கூடாது. இந்தியப் பொதுப் பணிக் கழகம், மாநிலப் பொதுப் பணிக் கழகங்கள் ஆகியவற்றின் செலவுகள் முறையே இந்தியத் திரட்டு நிதியிலிருந்தும், மாநிலங்களத் திரட்டு நிதிகளிலிருந்தும் செலவு செய்யப்படுகின்றன.

பொதுப் பணிக் கழகங்களின் பணிகள்

நம் அரசியலமைப்பின் 320ஆம் விதி, பொதுப் பணிக் கழகங்களின் பணிகளை விவரிக்கிறது. இந்தியப் பொதுப் பணிக் கழகமும், மாநிலப் பொதுப் பணிக் கழகங்களும் முறையே கூட்டரசு பணிக்கும், மாநிலப் பணிகளுக்கும் தேவையான நியமனங்களைச் செய்ய தேர்வுகள் நடத்தும். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் வேண்டிக்கொள்வதன் பேரில், அவற்றிற்குக் கூட்டாக ஆள் சேர்க்கும் திட்டங்களை வகுத்துக்கொடுத்து, அவற்றைச் செயல்படுத்த துணை செய்வது, இந்தியப் பொதுப் பணிக் கழகத்தின் கடமையாகும். (1) சிவில் பணிகளுக்கும் பதவிகளுக்கும் ஆள்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளைப் பற்றிய எல்லாச் செயல்கள் குறித்தும், (2) (அ) சிவில் பணிகளுக்கும் பதவிகளுக்கும் நியமனங்கள் செய்கின்றபொழுது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் குறித்தும், (ஆ) பதவி உயர்வு, ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றுதல் ஆகியவற்றைச் செய்யும்பொழுது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் குறித்தும், (இ) நியமனங்கள், பதவி உயர்வுகள், மாற்றல்கள் ஆகியவற்றிற்கு வேட்பாளர்களின் தகுதிகள் குறித்தும், (3) இந்திய அரசாங்கத்திலோ மாநில அரசாங்கத்திலோ பணியாற்றும் ஊழியர்கள்மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்தும், (4) அரசாங்க ஊழியர்களுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட வழக்குகளில் அவர்களுக்கு ஏற்பட்ட செலவுகளை அரசாங்கத்தின் திரட்டு நிதியிலிருந்து தரவேண்டும் எனக் கோரும் அவர்கள் கோரிக்கைகள்மீதும், (5) அரசாங்க வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது ஏற்படும் காயங்களுக்கு அது ஒய்வு ஊதியம் அளிக்கவேண்டும் எனக் கேட்கும் ஊழியர்களின் கோரிக்கைகள் மீதும், குடியரசு தலைவர் அல்லது கவர்னர் சம்பந்தப்பட்ட பொதுப் பணிக் கழகத்தைக் கலந்தாலோசிக்கக் கடமைப்பட்டவராவார். பொதுப் பணிக் கழகத்தின் ஆலோசனையை அவர்கள் கட்டாயமாக ஏற்று நடக்கவேண்டியது அவசியமில்லை என்பது அறியத்தக்கது. பொதுப் பணிக் கழகத்தைக் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களை அவ்வாறு செய்யாமலே தீர்மானிக்கலாம் எனக் குடியரசு தலைவரும் கவர்னரும் அறிவிக்கலாம். ஆனால், அவ்விதமான அறிக்கைகள் பதினான்கு நாள்களுக்குக் குறையாமல் சம்பந்தப்பட்ட பாராளுமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும்; அவற்றை அதற்கு ஏற்கவோ, மறுக்கவோ, திருத்தவோ அதிகாரமுண்டு.

ஆண்டறிக்கை

இந்தியப் பொதுப் பணிக் கழகம் குடியரசு தலைவருக்கும், மாநிலப் பொதுப் பணிக் கழகங்கள் அவற்றின் கவர்னர்களுக்கும், வருடா வருடம் தாங்கள் செய்யும் வேலைகளைப் பற்றி ஆண்டறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். குடியரசு தலைவர், இந்தியப் பொதுப் பணிக் கழகத்தின் அறிக்கையைத் தேசியப் பாராளுமன்றத்தின் சபைகளிலும், கவர்னர், மாநிலக் கழகத்தின் அறிக்கையை மாநிலச் சட்டமன்றம், மேல்சபை களிலும் உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கக் கடமைப்பட் டவர்கள். பொதுப் பணிக் கழகத்தின் சிபாரிசினை அரசாங்கம் எப்பொழுதாவது ஏற்றுக்கொள்ளாதிருந்தால், அது ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கான காரணங்கள் அரசாங்கத்தால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். நாட்டிலுள்ள எல்லா மக்களாலும் பொதுப் பணிக் கழகங்கள் நம்பிக்கைக்குரிய நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன; அவற்றின் சிபாரிசுகள் அலட்சியப்படுத்தப்படுவதைப் பாராளுமன்றம் வரவேற்காது.

8. அரசியல் கட்சிகள்

(The Political Parties)

[முன்னுரை—ஆளும் காங்கிரஸ்—நிறுவனக் காங்கிரஸ்—பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி—சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி—பாரதீய ஜன சங்கம்—இந்தியப் பொதுவுடைமைக் கட்சி—இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்டு)—சுதந்திராக் கட்சி—இந்தியக் கூட்டரசின் முஸ்லிம் லீக்—திராவிட முன்னேற்றக் கழகம்.]

முன்னுரை

இந்தியாவின் பெரும் மக்கள்தொகையும், அவர்களுக்கிடையே உள்ள சமுதாயப், பொருளாதார, சமய வேறுபாடுகளும் ஏராளமான அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்திருக்கின்றன. ஏறத்தாழ ஐம்பது அரசியல் கட்சிகள் இயங்கி வரும் இந்தியாவில், சில கட்சிகள் அகில இந்தியக் கட்சிகளாகவும், பல கட்சிகள் மாநிலக் கட்சிகளாகவும் அமைந்திருக்கின்றன. நாடு விடுதலை அடைவதற்காகப் போராடிய 'இந்தியத் தேசியக் காங்கிரஸ்' (Indian National Congress, 1885), அது விடுதலை இயக்கத்தை முன்னின்று நடத்தியதாலும், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களின் தொண்டினைப் பெற்றிருந்ததாலும், சமீப காலம் வரை ஈடு இணையற்ற செல்வாக்கோடு விளங்கியது. சுதந்திர இந்தியாவில் நம்முடைய சுதந்திரத்திற்கு அடையாளமாகவோ என்னவோ, பல கட்சிகள் வளர்ந்து விட்டன. 1971ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற ஐந்தாவது பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளு மன்றத்திலும் பல கட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. மத்திய அரசைப் பொறுத்தவரை, இன்று வரை பல கட்சி முறை அதன் திடநிலையை (stability) பாதித்ததில்லை என்பது அறியத்தக்கது.

ஆளும் காங்கிரஸ் (Ruling Congress)

1969ஆம் ஆண்டில் இந்தியத் தேசியக் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்ததன் பயனாக, ஆளும் காங்கிரஸ் என்ற பிரிவும்,

நிறுவனக் காங்கிரஸ் என்ற பிரிவும் தோன்றின. இன்று நல்ல பெரும்பான்மையோடு மத்திய அரசில் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பது ஆளும் காங்கிரஸ் கட்சியாகும். குடிமக்கள் நியாயமான அளவுக்குமேல் சொத்துகளுக்கு சொந்தம் பாராட்டுவதையும், பொருளாதார வளங்கள் சிலர் கைகளில் மட்டும் குவிதலையும், ஆளும் காங்கிரஸ் தவிர்க்க விரும்புகிறது. ஆனால், தனியார் சொத்துரிமையைப் பறிப்பது அதன் நோக்கமன்று. நகர்ப்புறச் சொத்துகளுக்கு உச்சவரம்பு நிர்ணயிப்பதும், மக்களிடையே வருவாய், வாய்ப்பு, ஆகிய துறைகளில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதும், விரைவாக நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதும், வேலையில்லாக் குறையைப் போக்குவதும், மன்னர் பரம்பரையினரின் மானியங்களையும் சலுகைகளையும் நீக்குவதும், பொருளாதாரத்தில் பொதுத் துறையின் (public sector) ஆதிக்கத்தை வளர்ப்பதும் இக்கட்சியின் கொள்கைகளில் சிலவாகும். தேசிய வருமானம், வேலை வாய்ப்புகள் ஆகியவற்றைத் தனியார் துறை (private sector) அபிவிருத்தி செய்ய அதற்குத் தக்க வாய்ப்பளிக்கவும், அதே சமயத்தில் தனியார் தொழில்கள் சிலரின் ஏகபோக உரிமையாகிவிடாமல் பார்த்துக் கொள்ளவும் இக் கட்சி வாக்குறுதியளிக்கிறது. சிறு குடியானவர்கள், சொந்தத் தொழில் செய்கிறவர்கள், பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்கள் ஆகியோரின் வசதிகளைப் பெருக்கும் வகையில் வங்கிகளை மாற்றி அமைக்கவும், தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தகுந்த 'கூலிக் கோட்பாடு' (wage policy) ஒன்றை வகுக்கவும், தொழிலாளர்களும் செயலாட்சியில் (management) பங்குபெறும் வகையில் நவீன செயலாட்சி முறைகளைத் தோற்றுவிக்கவும் ஆளும் காங்கிரஸ் கட்சி பெரிதும் விரும்புகிறது. வேலையின்மையைப் போக்க ஒரு 'குறைந்தபட்ச பொருளாதார அடிப்படையை' (minimum economic base) உருவாக்குவதும், பொருளாதாரத் திட்டத்தோடு இணைக்கப்பட்ட விஞ்ஞானத் தொழில்நுட்பத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதும், பெருமளவில் வீட்டுவசதி செய்து தருவதும் இக்கட்சியின் நோக்கங்களாகும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே உண்மையான குடியாட்சி என்றும், அரசியலமைப்பு அதற்குத் துணை செய்யவேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால் அது மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் இக்கட்சி கருதுகிறது. பாகிஸ்தானோடும் சீனாவோடும் இந்தியாவின் தொடர்புகளை வளர்ப்பதும், கூட்டுச்சேராக் கொள்கையைப் பின்பற்றுவதும் ஆளும் காங்கிரஸ் கட்சியின் அயல்நாட்டுக் கொள்கைகளில் குறிப்பிடத் தக்கவையாகும்.

நிறுவனக் காங்கிரஸ்

வறுமையை அகற்றி, உற்பத்தியைப் பெருக்கி, அதை நியாய மான வழிகளில் பகிர்ந்தளிப்பதன் பயனாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது நிறுவனக் காங்கிரசின் நோக்கமாகும். மக்களின் உரிமைகள் பறிக்கப்படக் கூடாதென்றும், அவர்களுக்குத் திறமையைப் பயன்படுத்திப் பொருளீட்டவும் சொத்துச் சேகரிக்கவும் சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்றும் இக் கட்சி வாதாடுகிறது. அகில இந்திய வானொலியும், தொலைக் காட்சியும் சுயேச்சை நிறுவனங்களிடம் (Independent Corporations) ஒப் படைக்கப்பட வேண்டுமென்பது இக் கட்சியின் கருத்தாகும். மேலும், நிறுவனக் காங்கிரஸ் எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் இருக்க வேண்டுமென்றும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டுமென்றும், வாக்குரிமைக்கான வயது இருபத்தொன்றிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும், வரி வசூல் முறை எளிதாக்கப்பட வேண்டு மென்றும், உணவுப் பொருள்கள், மற்ற விவசாயப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்றும், சட்ட மன்ற உறுப்பினர்கள் கட்சிவிட்டுக் கட்சி மாறுவதைத் (defection) தடுத்துச் சட்டமியற்ற வேண்டுமென்றும் விரும்புகிறது. வரவுக்கு மீறிய செலவை (deficit financing) நிறுத்துதல், நியாயமான நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல், விவசாயத் தொழிலாளர் களுக்குக் குறைந்த அளவு கூலி நிர்ணயம் செய்தல் ஆகியவை இக் கட்சியின் கொள்கைகளில் சிலவாகும். கலப்புப் பொருளா தாரத்தை (mixed economy) ஆதரிக்கும் இக் கட்சி, பின் தங்கிய பகுதிகளில் தொழில்கள் வளர, தகுந்த ஊக்கமளிக்கப்பட வேண்டும் என விரும்புகிறது. வெளி விவகாரத் துறையில், இந்தியா சோவியத்துக் குடியரசை மிகுதியாகச் சார்ந்திருப்பதை இக் கட்சி வரவேற்கவில்லை.

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி (Praja-Socialist Party)

தீவிரமான வகையில் நிலச் சீர்திருத்தம் செய்யவும், தொழில் துறையில் சிலர் அனுபவிக்கும் ஏக போக உரிமைகளை நீக்கவும், பொருளாதாரத் துறையில் உண்மையான சமதருமத்தை ஏற்படுத்தவும், அரசியலமைப்பில் எந்த விதியையும் திருத்தப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கவும் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி பாடுபடுகிறது. நில வரியை நீக்கவேண்டுமென்றும், நிலத்தி லிருந்து குடியானவர்கள் வெளியேற்றப்படுவதை நிறுத்த வேண்டு மென்றும், எந்தக் குடும்பமும் அதற்குத் தேவையான அளவைப் போன்று மூன்று பங்கிற்குமேல் நிலம் வைத்துக்கொள்ளக் கூடா

தென்றும் இக் கட்சி கூறுகிறது. குடிசைத் தொழில்கள், விவசாயத்தைத் தழுவிய தொழில்கள் (agro-based industries) ஆகியவற்றை ஊக்குவிக்கவேண்டுமென்று இக் கட்சி விரும்புகிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் ஏராளமான வீடுகளைக் கட்டியும் சாலைகளை அமைத்தும் வேலையின்மையைப் போக்கவும், வேலையில்லாதவர்களுக்கும் வயோதிகர்களுக்கும் அரசு உதவி அளிக்கத் திட்டம் தீட்ட வேண்டுமெனவும் இக் கட்சிக் கோருகிறது. பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி தொழிலாளர்கள் நலன்களில் சிறப்பான கவனம் செலுத்துகிறது. அரசாங்கத் தொழில்களின் அமைப்புகள் திருத்தி அமைக்கப்பெற்று, அவற்றின் நிருவாகத்தில் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதை இக் கட்சி வரவேற்கிறது. அமைதியான புரட்சி மூலமாக, ஓர் உண்மையான ஜனநாயகச் சமதருமச் சமுதாயத்தை நிறுவுவதே பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் நோக்கமாகும். இராணுவக் கூட்டுச் சேர்வதை இக் கட்சி எதிர்த்தாலும், ஒவ்வொரு சர்வதேச நிகழ்ச்சியையும் அதன் தன்மைக்கேற்றவாறு நாம் அணுக வேண்டும் எனக் கூறுகிறது. சீனாவின் ஏகாதிபத்தியப் போக்கிற்கு எதிராக இந்தியா ஆசிய நாடுகளோடு நெருக்கமான தொடர்புகள் வைத்துக்கொள்வதையும், அரேபிய நாடுகளோடு நட்புறவுகளை வளர்த்துக்கொள்வதையும் இக் கட்சி விரும்புகிறது. அணு ஆயுதங்கள் உட்பட எல்லாவிதமான படைக்கலங்களும் தேவையான அளவுக்கு நம்மிடம் இருத்தல் அவசியம் என இக் கட்சி கருதுகிறது. இன்று இந்தியாவில் ஏறத்தாழ 1,50,000 பிரஜா சோஷலிஸ்டுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி (Samyukta Socialist Party)

புதிய அரசியல் நிர்ணயச்சபை ஒன்றை நிறுவி அதன் வாயிலாக மக்களின் மொழிகளை வளர்க்கவும், பின் தங்கிய மக்களுக்குத் தனிச் சலுகைகள் அளிக்கவும், பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்தவும் வேண்டுமென்பது சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் குறிக்கோளாகும். சொத்துரிமை என்பது அடிப்படை உரிமைகளிலிருந்து விலக்கப்படவேண்டுமாம். எல்லாக் கன ரகத் தொழில்களும், அந்நிய முதலீடுகளால் நடத்தப்படும் தொழில்களும் சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமென்பது இதன் கொள்கையாகும். கட்டுப்படியாகாத நிலங்களிலிருந்து நில வரியை நீக்குதல், ஒவ்வொருவரும் வைத்திருக்கக்கூடிய நிலத்திற்கு உச்சவரம்பை நிர்ணயித்து, அதற்குமேல் இருக்கும் நிலங்களை ஹரிஜனங்களுக்கும் நிலமற்ற குடியானவர்களுக்கும் அளித்தல், மாதமொன்றிற்கு 1,500 ரூபாய்க்கு மேல் யாரும்

சொந்தச் செலவு செய்யக்கூடாதென்று வற்புறுத்துதல் ஆகியவை சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளில் முக்கியமானவையாகும். ஆங்கிலமொழி மூலமாகப் பாடம் கற்பிக்கும் தொடக்கப் பள்ளிகளை மூட வேண்டுமென்றும், கல்லூரிகளில் ஆங்கிலம் விருப்பப் பாடமாக மட்டும் இருக்க வேண்டுமென்றும் இக் கட்சி கோருகிறது. தேசிய ரீதியில் 'குறைந்த அளவுக் கூலி' நிர்ணயிக்கப்படுதல், பாட்டாளி வர்க்கத்தினர் அனைவரும் 'சமூகப் பாதுகாப்புத் (social security) திட்டத்தின்கீழ் கொண்டு வருதல் ஆகிய இரண்டையும் உழைத்துப் பிழைப்போர் நலனுக்காக இக்கட்சி வற்புறுத்துகிறது. அயல்நாட்டுத் துறையில் இந்தியா காமன்வெல்த்திலிருந்து விலக வேண்டுமென்பது சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் கோரிக்கையாகும்.

பாரதீய ஜன சங்கம் (Bharatiya Jana Sangh)

ஹிந்து மகா சபா (Hindu Mahasabha), ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் (Rashtriya Swayamsevak Sangh) ஆகியவற்றின் குழந்தை எனக் கருதப்படும் பாரதீய ஜன சங்கம் கடந்த இருபது ஆண்டுகளில் வளர்ந்த ஒரு கட்சியாகும். 'ஹிந்து, ஹிந்தி, ஹிந்துஸ்தான்' ஆகியவற்றை அது தன் பொன் மொழிகளாக ஏற்றிருக்கிறது. இந்தியாவை ஓர் ஒற்றை ஆட்சியாக மாற்றி, நாடு முழுவதையும் சிவில் சட்டங்களால் பிணைக்க இக் கட்சி விரும்புகிறது. மத்திய அரசில் ஹிந்தியும், மாநில அரசுகளில் அந்தந்த மாநிலத்திற்குரிய மொழிகளும் அரசு மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என இக் கட்சி கோருகிறது. குடியானவர்களுக்கு நிலத்தை உழுது பயிரிடும் உரிமையைத் தருவதோடல்லாமல், நியாயமான நிலவார ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்றும் இது விரும்புகிறது. பசுக் கொலையைத் தடை செய்தல், சுதேசித் தொழில்களை ஊக்குவித்தல், தனியார் துறையிலிருக்கும் தொழில்களைத் தேசிய மயமாக்காமல் அவர்களிடமே விட்டுவைத்தல், பொதுவுடைமை நாடுகளைத் தவிர மற்ற அயல்நாடுகளோடு வியாபாரம் செய்வதைத் தனியார் துறைக்குத் தருதல், அந்நிய முதலீட்டை எவ்வளவு குறைவாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு குறைவாகப் பயன்படுத்துதல், தனி ஒருவரின் மாதந்திரச் செலவிற்கு 2,000 ரூபாயை உச்சவரம்பாக நிர்ணயித்தல், பாட்டாளிகளுக்கும் குறைந்த அளவுக் கூலியாக 125 ரூபாயாவது தரப்படுவதற்கு வகை செய்தல், மன்னர் மானியங்களையும் சலுகைகளையும் சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலமாக நீக்குதல் ஆகியவை ஜன சங்கத்தின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்கவையாகும். சீனாவாலும் பாகிஸ்

தாளுலும் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருக்கும் நம் பிரதேசங்களை மீட்கவேண்டுமென்றும், நம்முடைய படைபலத்தை அதிகரிக்க வேண்டுமென்றும், அணு ஆயுதங்கள் உட்படப் படைக்கலங்களைத் தயாரித்துப் படைத்துறையில் நாம் தன்னிறைவு பெறவேண்டு மென்றும் இக் கட்சி விரும்புகிறது. அந்நிய உதவியை ஏற்கக் கூடாதென்றும், அந்நிய நிறுவனங்கள் தேசிய உடைமையாக்கப் பட வேண்டுமென்றும் ஜனசங்கம் வற்புறுத்துகிறது. குடும்பக் கட்டுப்பாட்டை இது ஆதரிக்க மறுக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. பிறப்புகளைக் குறைப்பதைவிட, உணவு தானியங்களை உற்பத்தி செய்வது சிக்கனமாக இருக்கும் என்பது இக் கட்சியின் கருத்தாகும். பாகிஸ்தானை இந்தியாவோடு இணைத்தல், தேவைக்கும் சூழ்நிலைக்கும் தக்கவகையில் அயல்நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்து கொள்ளுதல் ஆகியவை ஜனசங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளில் முக்கியமானவையாகும்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (Communist Party of India)

பாராளுமன்றத்தின் கரங்களை வலுப்படுத்த இந்திய அரசிய லமைப்பை மாற்றி அமைக்கவேண்டுமென இந்தியப் பொது வுடைமைக் கட்சி கோருகிறது. நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதும், விளை பொருள்களுக்கு இலாபகரமான விலைகளை நிர்ணயிப்பதும், தொழில்துறையில் ஏக போகத் தனி உரிமைகளைத் தடுப்பதும், வேலையின்மையைத் தீர்ப்பதும், விலை வாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதும், தொழிற்சங்க உரிமைகளைக் காத்து மேலும் வளர்ப்பதும், அரசு சமயச் சார்பற்ற கொள்கையி லிருந்து வழுவாது நடப்பதும், சிறுபான்மையோரின் நலன்களைப் பாதுகாப்பதும் இக் கட்சியின் கொள்கைகளாகும். அந்நியரின் வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் தேசிய மயமாக்க வேண்டு மென்றும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளோடும், சமதருமக் கொள் கையைப் பின்பற்றும் நாடுகளோடும் நம் வர்த்தகத் தொடர்பு களைத் திருப்பவேண்டுமென்றும், ஊக வாணிகச் சந்தையை (speculative market) மூடவேண்டுமென்றும், தொழிலுக்கும் வர்த்தகத்திற்கும் வேண்டிய கடன் வசதி அரசுடைமையாக்கப் பட்ட வங்கிகள்மூலமாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்றும் இக் கட்சி விரும்புகிறது. பொதுவுடைமைக் கட்சி, மக்களின் நலன்களை வளர்க்கும் வகையில் நம் பொருளாதாரத் திட்டங்களைத் திருத்தி அமைக்கவும், ஏழை எளியவர்களுக்கு நிவாரணம் அளிப் பதற்காக வரிக் கொள்கையை மாற்றி அமைக்கவும், தேவைக் கேற்ற வகையில் கூலி கொடுக்கவும். வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை உத்தரவாதமளிக்கவும், நுகர்வோர் பொருள்கள் (consumers goods), ஏற்றுமதிப் பொருள்கள் ஆகியவற்றின்

உற்பத்தி பொதுத்துறையின்கீழ்க் கொண்டு வரப்படவும், குறைந்த வட்டிக்குக் கடன், இராசயன உரம், நீர்ப்பாசனம் போன்ற வசதிகளைக் குடியானவர்களுக்குச் செய்து தரவும் பாடுபடுகிறது. படிப்படியாக ஹிந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவது, அதே சமயத்தில் வட்டார மொழிகளை வளர்ப்பது, மாநிலங்களில் கவர்னர் பதவியையும் மேல்சபையையும் நீக்குவது, எல்லாத் தேர்தல்களுக்கும் விகிதப் பிரதிநிதித்துவ முறையைப் புகுத்துவது, உயர்நிலைக் கல்விவரை எல்லோருக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி கற்பிப்பது, தற்காலத் தேவைகளுக்கு ஏற்றவகையில் கல்வித் திட்டத்தைத் திருத்தி அமைப்பது ஆகியவை இக் கட்சியின் கொள்கைகளில் அடங்கும். பாகிஸ்தானோடு காஷ்மீர் குறித்துச் சமாதானம் செய்துகொள்வதும், சீனுவோடு உள்ள பூசல்களை அமைதியான வழிகளில் தீர்த்துக் கொள்வதும், இந்தியா காமன் வெல்த்திலிருந்து விலகுவதும் அயல்நாட்டுத் துறையில் இக் கட்சி விரும்பும் செயல்களாகும்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்டு) (CPI - Marxist)

இப்பொழுது இருக்கும் அரசியலமைப்பிற்குப் பதிலாக, மக்களின் இறைமையை உண்மையாகப் பிரதிபலிக்கும் ஓர் அரசியலமைப்பை நிறுவுவதையே மார்க்சிஸ்டுப் பொதுவுடைமைக் கட்சி தன் முக்கியமான கொள்கையாகக் கருதுகிறது. குடியரசு தலைவரின் சிறப்பான அதிகாரங்களையும், மாநிலங்களில் கவர்னர் பதவிகளையும் நீக்க வேண்டுமென்றும், நீதிமன்றங்கள் மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் கருவியாக இயங்கவேண்டுமென்றும், முஸ்லீம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்றும், தீண்டாமைக் கெதிராகக் கடுந்தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்றும், ஆதிவாசிகள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன்களை வளர்க்கத் தனி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் இக் கட்சி விரும்புகிறது. மாநிலங்களுக்கு இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகப்படியான சுயஆட்சி உரிமையும் வருவாயும் வழங்குதல், எல்லா மொழிகளையும் சமமாகப் பாவித்தல், நிலமானிய முறையை ஒழித்தல், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல், அரசே உணவு பங்கீட்டை மேற்கொள்ளுதல், நிலவரியையும் அத்தியாவசியப் பொருள்கள்மீதான வரியையும் நீக்குதல், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துதல், அமெரிக்காவிடமிருந்து உதவி பெறுவதைநிறுத்துதல், பெருந் தொழில்களை அரசுடைமையாக்குதல் ஆகியவை இக்கட்சியின் கொள்கைகளில் சிலவாகும். மேலும், மார்க்சிஸ்டுக் கட்சி, தனியார்துறையைக் கட்டுப்படுத்தி, பொதுத்துறையை வளர்க்க வேண்டுமென்றும், பாட்டாளி வர்க்கத்தினர், நடுத்தரக்

குடிமக்கள் ஆகியோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டு மென்றும், தொழில்களில் ஆட்குறைப்புச் செய்வதும், மனிதர்கள் செய்துவரும் வேலைகளில் அவர்களுக்குப் பதிலாக இயந்திரங்களைப் புகுத்துவதும் (automation) கூடாதென்றும் வற்புறுத்துகிறது.

சுதந்திராக் கட்சி (Swatantra Party)

இந்திய அரசியல் கட்சிகளுள் மிக இளைய கட்சியான சுதந்திராக் கட்சி பழம்பெரும் அரசியல் மூதறிஞரான C. ராஜகோபாலாச்சாரியால் 1959ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. அரசியலமைப்பின் புனிதத் தன்மையை மதித்து நம் மக்களாட்சி செயல்பட வேண்டுமென்றும், அரசியலமைப்புச் சிதைந்துவிடாமல் நீதித்துறை அதைக் காப்பதற்குத் தடை இருக்கக்கூடாதென்றும், அரசியலமைப்பால் உத்தரவாதமளிக் கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளை மக்கள் அனுபவிக்க எந்த விதமான இடர்ப்பாடும் இருக்கக்கூடாதென்றும், சட்டமும் ஒழுங்கும் சரியாகக் காக்கப்பட்டு மக்களின் உரிமையும் உடைமை யும் காக்கப்பட வேண்டுமென்றும் இக் கட்சி விரும்புகிறது. இப்பொழுதிருக்கும் பொருளாதாரத் திட்டங்களை அகற்றுவது, தனியார் முயற்சியினால் பொருளாதாரம் வளர வழிசெய்வது, விவசாயம், வர்த்தகம், தொழில் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு உற்பத்தியைப் பெருக்க ஊக்க மளிப்பது, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள்மீது சுங்கவரி நீக்கப்படுவது, நிருவாகச் செலவைக் குறைப்பது, நிலச் சீர்திருத்தங்களை விரைவாக நிறைவேற்றுவது, நிலமற்ற குடியான வர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்திற்கு வகைசெய்வது, சிவில் உரிமைக் குழு ஒன்றை அமைத்துச் சமுதாயத்தில் தாழ்வாக நடத்தப்படும் மக்களின் உரிமைகளைக் காப்பது — இவை சுதந்திராக் கட்சியின் கொள்கைகளில் சிலவாம். இந்தியா கூட்டுச் சேராக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்றும், நம்பத் தகுந்த நாடுகளோடு இராணுவ ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டு மென்றும் இக் கட்சி வற்புறுத்துகிறது.

இந்தியக் கூட்டரசின் முஸ்லீம் லீக் (Indian Union Muslim League)

மூன்றரை கோடிக்கு மேலான முஸ்லீம்கள் வாழும் இந்தி யாவில், அவர்களின் நலன்களைப் பாதுகாக்கக் கட்சிகள் இருப்பது இயற்கையே. இந்திய முஸ்லீம் லீக் தன்னை ஒரு தேசிய மக்க ளாட்சிக் கட்சி என்றும், நாட்டின் கௌரவத்தைக் காப்பதும், பல இனங்களைச் சேர்ந்த இந்திய மக்களிடையே நட்பையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதும், சிறுபான்மையோராய் இருக்கும் முஸ்லீம்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும்

அதனுடைய நோக்கங்கள் என்றும் கூறுகிறது. இந்தியாவின் சுதந்திரத்தைக் காத்து, இந்நாட்டின் வளத்தைப் பெருக்கி, அரசியல், சமுதாய, கலாசார, கல்வித்துறைகளில் முஸ்லீம்கள் உட்பட எல்லாச் சிறுபான்மையோரின், நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருவதும், இந்திய முஸ்லீம்களுக்கிடையேயும் மற்ற இந்தியக் குடிமக்களுக்கிடையேயும் நல்லுறவை வளர்ப்பதும் இக் கட்சியின் கொள்கைகளில் அடங்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம்

1949ஆம் ஆண்டில் அறிஞர் C. N. அண்ணாத்துரையால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், சமதருமச் சமுதாயத்தை நிறுவப் பாடுபடுகிறது. மாநில மொழியாகத் தமிழும், அகில இந்திய மொழியாக ஆங்கிலமும் வேண்டுமென்ற 'இருமொழிக் கொள்கையை' இக் கட்சி வற்புறுத்துகிறது. ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிப்பதற்கு அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு திட்டக்குழு இருக்க வேண்டுமென்றும், தொழில்களைத் தொடங்க அனுமதி வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும் இக் கட்சி கோருகிறது. மாநிலங்களுக்கு அதிகப்படியான சுயஆட்சி உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிக முக்கியமான கோரிக்கைகளில் ஒன்றாகும். இந்தியக் கூட்டாட்சியில் அதிகாரங்கள் மையம் நோக்கிக் குவிந்திருப்பது மாநிலங்களின் சுயஆட்சி உரிமைக்குப் பொருந்தாதாகையால், இந்தியக் கூட்டாட்சியை ஒரு தளர்ந்த கூட்டாட்சியாக மாற்ற இக் கட்சி விரும்புகிறது. உற்பத்தியைப் பெருக்குவதும், அதை நியாயமான முறையில் மக்களிடையே பகிர்ந்தளிப்பதும் இக் கட்சியின் நோக்கங்களில் அடங்கும். 1967ஆம் ஆண்டு முதன் முதலாவதாகத் தமிழ் நாட்டில் அரசாங்கம் அமைத்த திராவிட முன்னேற்றக் கழகம், 1971ஆம் ஆண்டில் மேலும் அதிகப்படியான இடங்களைப் பெற்று மறுமுறையும் அரசாங்கம் அமைத்திருக்கிறது.

9. செல்வாக்குக் குழூக்கள்

(Pressure Groups)

[முன்னுரை — சமுதாயப் பொருளாதாரக் குழுக்கள் — சாதி சமயச் செல்வாக்குக் குழுக்கள்—காந்திய செல்வாக்குக் குழுக்கள்— இதர குழுக்களில் சில.]

முன்னுரை

தற்கால இந்தியாவில் கணக்கற்ற செல்வாக்குக் குழுக்கள் இருந்தபோதிலும், அவை மேற்கத்திய நாடுகளில் இருக்கும் செல்வாக்குக் குழுக்களுக்கு உள்ள நல்ல அமைப்பை இன்னும் பெறவில்லை என்று கருதப்படுகிறது. நம் நாட்டுச் செல்வாக்குக் குழுக்கள் அனைத்தும் அரசியல் கட்சிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. தொழிற் சங்கங்கள், விவசாயிகள் நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், பண்பாட்டுக் கழகங்கள் எல்லாவற்றிலுமே அரசியல் கட்சிகள் தங்கள் செல்வாக்கை வளர்க்க முயன்று வருகின்றன. இந்தியாவில் காணப்படும் செல்வாக்குக் குழுக்களை மூன்று வகையாகப் பிரிக்க லாம். அவையாவன: முதலாவதாக, சமுதாயம் பொருளா தார அடிப்படையில் அமைந்திருக்கும் செல்வாக்குக் குழுக்கள். இரண்டாவதாக, சாதி சமய அடிப்படையில் அமைந்திருக்கும் செல்வாக்குக் குழுக்கள். மூன்றாவதாக, காந்தியக் கொள்கை களின் அடிப்படையில் அமைந்திருக்கும் செல்வாக்குக் குழுக்கள்.

சமுதாயப் பொருளாதாரக் குழுக்கள்

இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தபோதிலும், சமீப காலம்வரை அவர்களின் சக்தியின் வலுவை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் எனக் கூறுவதற் கில்லை. இந்தத் தலைமுறையில்தான் அவர்களிடம் விழிப்புணர்ச்சி தோன்றியிருக்கிறது. 1920ஆம் ஆண்டில் முதன் முதலாக 'அகில

இந்தியத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு' (All-India Trade Union Congress) என்ற அமைப்புத் தோன்றியது. இன்று அதில் பொதுவுடைமைக் கட்சிக்காரர்களின் செல்வாக்குக் கையோங்கி இருப்பதைக் காண்கிறோம். இதற்குப் போட்டி அமைப்பாக, காங்கிரஸ் கட்சியின் முயற்சியினால் 'இந்தியத் தேசியத் தொழிற் சங்கக் கூட்டமைப்பு' (Indian National Trade Union Congress) என்ற நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள பாதித் தொழிற் சங்கங்கள் இப்பொழுது இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றன. சமதர்மவாதிகள் மிகுதியாகக் காணப்படும் 'ஹிந்து மஸ்தூர் சபாவும்' (Hind Mazdoor Sabha), இடதுசாரிக் கட்சிகளின் ஆதிக்கத்திலிருக்கும் 'ஒன்றிணைக்கப்பட்ட தொழிற்சங்க அமைப்பும்' (United Trade Union Congress) குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுள்ள தன்னலக் குழுக்களாகும். மேற்கண்ட நான்கு அமைப்புகளிலும் நாற்பது லட்சத்துக்குமேலான உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

பன்னெடுங்காலமாக உழவுத் தொழிலே இந்தியப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாய் இருந்துவந்த போதிலும், விவசாயிகளுக்குச் சிறப்பான தன்னலக் குழுக்களை நிறுவும் முயற்சி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் மேற்கொள்ளப்பட்டது என்பது அறியத்தக்கது. விவசாயிகளுக்கான குழுக்களில் பொதுவுடைமைவாதிகள் மிகுந்த 'அகில இந்தியக் கிஸான் சபாவும்' (All-India Kisan Sabha), சமதர்மவாதிகள் மிகுந்த 'ஹிந்து கிஸான் பஞ்சாயத்தும்' (Hind Kisan Panchayat), சிறிய இடதுசாரிக் கட்சியினர் மிகுந்த 'ஒன்றிணைக்கப்பட்ட கிஸான் சபாவும்' (United Kisan Sabha) குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்தியாவில் ஏராளமான மாணவர் சங்கங்களும் இருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் அரசியல் கட்சிகள் ஊடுருவிப் பாய்ந்து, மாணவர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்திருப்பது மாணவர் சமுதாயத்தின் நலனுக்கு உகந்ததன்று. 'அகில இந்திய மாணவர்கள் சம்மேளனத்தில்' (All-India Students' Federation) பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கையும், 'மாணவர்கள் தேசியச் சங்கத்தில்' (National Union of Students) காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கையும் பார்க்கின்றோம். மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட 'அகில இந்திய மகளிர் மன்றம்' (All-India Women' Conference) என்னும் அமைப்பு இயங்கி வருகிறது. ஆண்களைப்போலப் பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் தரவேண்டுமென இம் மன்றம் வாதாடி வருகிறது. 'பல்கலைக்கழக மகளிர் சங்கங்களின் கூட்டமைப்பு' (Indian Federa-

tion of University Women's Associations) என்னும் நிறுவனம், பல இனங்களைச் சேர்ந்த படித்த பெண்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதைத் தன் நோக்கமாய்க் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் பெருந்தொழில்கள் அனைத்திற்கும் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை 'இந்தியத் தொழில் வர்த்தகச் சங்கங்களின் கூட்டமைப்பு' (Federation of Indian Chambers of Commerce and Industry) என்ற கழகத்தில் இணைந் திருக்கின்றன. அதன் அங்க அமைப்புகளில் ஒன்றான 'பம்பாய் இந்திய வர்த்தகர்கள் சங்கத்தில்' (Indian Merchants Chamber of Bombay) மட்டும் 3000 கிளை நிறுவனங்கள் இருக்கின்றன. 'அகில இந்திய உற்பத்தியாளர்கள் நிறுவனம்' (All-India Manufacturers Organization) உற்பத்தியாளர்களின் நலன்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்டிருக்கிறது. 'தடையில்லா வர்த்தக அரங்கு' (Forum of Free Enterprise) என்னும் அமைப்புத் தொழில் துறையில் தனியார் சுதந்திரத்துக்காக வாதாடி வருகிறது. வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொறிவலாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்க, முறையே 'இந்திய வழக்கறிஞர்கள் கழகம் (Bar Council of India), 'இந்திய மருத்துவர்கள் கழகம்' (Medical Council of India), 'பொறிவலாளர்கள் நிறுவனம்' (Institution of Engineers) ஆகிய சங்கங்கள் நிறுவப்பட்டிருக் கின்றன.

சாதி சமயச் செல்வாக்குக் குழுக்கள்

கணக்கற்ற சாதி சமயப் பிரிவுகளைக் கொண்டிருக்கும் இந்தியாவில் அவற்றைப் பாதுகாக்கப் பாடுபடும் தன்னலக் குழுக்களுக்குக் குறைவில்லை. பல அரசியல் கட்சிகள்கூட, சாதி சமய அடிப்படையில் இயங்கி வருகின்றன. ஹிந்து சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அரசை அமைக்க விரும்பும் 'அகில பாரத ஹிந்து மகாசபாவும்' (Akhil Bharat Hindu Mahasabha), முஸ்லிம்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க முஸ்லிம் லீகும் (Muslim League), கிறித்தவச் சமயத்தைப் பாதுகாக்க 'இந்தியக் கிறித்தவர்களின் அகில இந்தியக் கூட்டமைப்பு' (All-India Conference of Indian Christians) என்ற அமைப்பும் நம் நாட்டில் இயங்கி வருவது அனைவரும் அறிந்த செய்தியே. சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த 'ஹரிஜன சேவக் சங்கமும்' (Harijan Sewak Sangh), 'பாரதீய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கமும்' (Bharatiya Depressed Classes League) பாடுபடுகின்றன. நாம் நாட்டின் முக்கியமான சாதி ஒவ்வொன்றும் சாதிச் சங்கம்

அமைத்து அதன் தனித்தன்மையை வளர்த்துக்கொள்ள முயல்கின்றது. அதன் பயனாக நாட்டில் சாதிகள் மேலும் வேறூன்றி, இந்தியச் சமுதாயத்தை என்றுமே பிளவுபட்ட சமுதாயமாக நிலைத்து நின்றுவிடுமாறு செய்யுமோ என அஞ்சத் தோன்றுகிறது.

காந்திய செல்வாக்குக் குழுக்கள்

காந்தி கனவுகண்ட சர்வோதயச் சமுதாயத்தை இந்நாட்டில் தோற்றுவிக்கப் பல குழுக்கள் இயங்கிவருகின்றன. இது போன்ற குழுக்கள் இந்திய நாட்டில் மட்டும் காணப்படக்கூடிய குழுக்களாகக் கருதப்படுகின்றன. சாதி மத பேதமில்லாத சமுதாயத்தை நிறுவி, அதில் வாழும் எல்லா மக்களின் நலன்களையும் வளர்த்து, இந்தியாவைத் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் நாடாக ஆக்க விரும்பினார் காந்தியடிகள். 'சர்வோதய சமாஜம்' (Sarvodaya Samajam) என்னும் அமைப்பு, காந்தியடிகளின் லட்சியங்களை நனவாக்கப் பாடுபட்டு வருகிறது. 'அகில இந்திய கிராமத் தொழில்கள் சங்கம்' (All-India Village Industries' Association), 'பசுப் பாதுகாப்புச் சங்கம்' (Go-Seva Sangh), 'அகில இந்திய நூற்பவர்கள் சங்கம்' (All-India Spinners Association), 'ஹிந்துஸ்தானி பிரசார சபா' (Hindusthani Prachar Sabha), 'ஆதாரக் கல்வி வளர்ப்புக் கழகம்' (Talimi Sangh) ஆகியவை சர்வோதய சமாஜத்தின் கிளைகளாகச் செயல்படுகின்றன. காந்தியடிகளுக்குப் பிறகு அவர் தொடங்கிய பணியை, அவர் சீடர் வினோபா பாவே இன்று தொடர்ந்து நடத்துவதால், அவரை 'வாழும் காந்தி' என்றும் 'நடமாடும் காந்தி' என்றும் உலகம் பாராட்டுகிறது. பூமிதான இயக்கம் ஒன்றைத் தொடங்கி, நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கும் வினோபாவின் அறப்பணியை வரலாறு காணாத புரட்சி என அறிஞர்கள் பாராட்டுகின்றனர். சர்வோதயக் கொள்கைகளுள் பல இன்று சமதருமக் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது அவற்றிற்குத் தொடர்பில்லாத எந்த இயக்கமும் இந்த நாட்டில் வெற்றிபெற முடியாதுபோலும்!

இதர குழுக்களில் சில

பொழுதுபோக்கு வசதிகளை அபிவிருத்தி செய்துகொள்ள நம் நாட்டில் சில தன்னலக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இமய மலை ஏறுவோர் 'இமாலயக் கழகம்' (Himalayan Society) ஒன்றையும், அஞ்சல் தலைகள் சேகரிப்போர் 'அஞ்சல் தலைத் திரட்டுவோர் சங்கம்' (Philatelic Society of India) ஒன்றையும் நடத்துவதை உதாரணமாகக் கூறலாம். நடனம், நாடகம்,

இசை போன்ற கவின் கலைகளை வளர்ப்பதற்கும் ஏராளமான குழுக்கள் இயங்கி வருகின்றன. மற்ற நாடுகளைப்போல நம் நாட்டிலும் சமுதாயச் சேவைக்காகப் பல அமைப்புகள் உழைத்து வருகின்றன. தொழு நோயால் பீடிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கவும், கண் பார்வை இழந்தோர்க்கு வாழ்வளிக்கவும், அனாதைகளுக்கு ஆசிரமங்கள் நிறுவவும், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், விலங்குகளைத் துன்புறுத்துவதைத் தடுக்கவும், பல நிறுவனங்கள் நம் நாட்டில் அரும்பணி ஆற்றிவருகின்றன.

படிக்கவேண்டிய நூல்கள்

(1) D. D. Basu	Commentary on the Constitution of India (five volumes) (S. C. Sarkar & Sons, Calcutta)
(2) A. Gledhill	The Republic of India (London)
(3) G. N. Joshi	The Constitution of India (Macmillan)
(4) M. V. Pylee	India's Constitution (Asia)
(5) N. Srinivasan	Democratic Government in India (World Press, Calcutta)

கலைச்சொற்கள்

A

Abdication	—	முடி துறப்பு, ஆட்சித் துறப்பு
Absolute Monarchy	—	வரம்பில்லா முடியாட்சி
Absolute Veto	—	முழு மறுப்பாணை
Act	—	சட்டம்
Act of Settlement	—	அரசுரிமை நிருணயச் சட்டம்
Adjournment	—	ஒத்திவைப்பு
Administration	—	ஆட்சி, நிருவாகம்
Adjudication	—	தீர்ப்பு
Administrative Court	—	ஆட்சித்துறை நீதிமன்றம்
Administrative Law	—	ஆட்சித்துறைச் சட்டம்
Admiralty	—	கடற்படைத்துறை
Adult Franchise	—	வயதுவந்தோர் வாக்குரிமை
All-India Service	—	அகில-இந்தியப் பணி
Amnesty	—	அரசியல் குற்ற மன்னிப்பு
Annual Financial Statement	—	ஆண்டு நிதிநிலை அறிக்கை
Appeal	—	மேல் முறையீடு
Armed Forces	—	போர்ப் படைகள்
Assembly	—	சபை
Attorney-General	—	தலைமை வழக்கறிஞர், சட்டத் துறைத் தலைவர்
Audit	—	தணிக்கை
Auditor-General	—	தலைமைத் தணிக்கையாளர்
Autonomy	—	சுயஆட்சி

B

Backward Class	—	பின்தங்கிய வகுப்பு, பிற்பட்ட வகுப்பு
Balance of power	—	செல்வாக்குச் சமநிலை
Ballot	—	இரகசிய வாக்களிப்பு
Bill	—	மசோதா
Bill of Rights	—	உரிமைகள் மசோதா
Bishop	—	மேற்றிராணியார்
Bribery	—	கைக்கூலி கொடுத்தல்

Budget — வரவுசெலவுத் திட்டம்
Bureau — நிலையம், நிறுவனம்
Bureaucracy — அதிகாரவர்க்கம்
Bye-election — இடைத் தேர்தல்

C

Cabinet — கேபினட் அமைச்சரவை
Case Law — தீர்ப்புவழிச் சட்டம்
Casting Vote — முடிவுசெய் வாக்கு
Censure — கண்டனம்
Central Government — மத்திய அரசாங்கம், மைய அரசாங்கம்
Chairman's Panel — தலைவர் பட்டியல்
Chamber of Commeree — வணிகர் சங்கம், வர்த்தகச் சங்கம்
Chancellor of Exchequer — கருவூலத் தலைவர், நிதி அமைச்சர்
Chief Justice — தலைமை நீதிபதி
Church — திருச்சபை
Citizenship — குடிமை
Civil Service — பொதுத்துறை அலுவல், அரசு பணி
Civil War — உள்நாட்டுப் போர்
Coalition Cabinet — கூட்டு அமைச்சரவை
Collective Responsibility — கூட்டுப் பொறுப்பு
Colony — குடியேற்ற நாடு
Committee — குழு
Common Law — பொதுச் சட்டம் பொது நீதி
Commonwealth — காமன்வெல்த்
Communism — பொதுவுடைமைக் கோட்பாடு
Compensation — இழப்பீடு
Concurrent List — பொதுப் பட்டியல்
Confederation — நாட்டுக் கூட்டம்
Congress — காங்கிரஸ், பேராயம்
Conscription — கட்டாயப் படைச் சேர்ப்பு
Consent — இசைவு, இணக்கம், ஒப்புதல்
Consolidated Fund — திரட்டு நிதி, திரண்ட நிதி
Constituency — தொகுதி
Constituent Assembly — அரசியற்புனை சபை, அரசியல் நிர்ணயச் சபை

Constitution	— அரசியலமைப்பு
Constitutional Amendment	— அரசியலமைப்புத் திருத்தம்
Convention	— பேரவை
Conventions and Usages	— வழக்காறுகளும் மரபுகளும்
Co-ordinate	— ஒத்த தரமுடைய
Court of Conflicts	— முரண்பாடு நீக்க நீதிமன்றம்
Court of Record	— நிலைச்சான்று நீதிமன்றம்
Council of Ministers	— அமைச்சரவை
Council of States	— மாநிலங்கள் சபை, ராஜ்ய சபை
Counter signature	— எதிர் கையொப்பம், மேற் கையொப்பம்
Credentials	— அறிமுகச்சான்று கடிதங்கள்
Crown	— அரசு

D

Declaration	— அறிக்கை
Democracy	— மக்களாட்சி, ஜனநாயகம்
Despotism	— எதேச்சாதிகாரம், கொடுங்கோன்மை
Dictatorship	— வல்லாட்சி, சர்வாதிகாரம்
Diplomacy	— அரசியல் தந்திரம், தூதாண்மை
Directive Principles	— நெறிசெய் நியதிகள்
Direct Democracy	— நேரடி மக்களாட்சி
Direct Election	— நேர்முகத் தேர்தல்
Dissolutions	— கலைவு
Division of powers	— அதிகாரப் பங்கீடு
Doctrine	— கோட்பாடு
Dominion	— டொமினியன்
Double citizenship	— இரட்டைக் குடியுரிமை
Draft Bill	— வரைவு மசோதா
Draft Constitution	— வரைவு அரசியலமைப்பு

E

Ecclesiastical	— திருச்சபைக்குரிய, சமயச் சார்புடைய
Economic Planning	— பொருளாதாரத் திட்டம்
Economic and Social Council	— பொருளாதார, சமூக அவை

Electorate — வாக்காளர் தொகுதி
Electoral College — தேர்தல் குழு
Emergency — நெருக்கடி
Emigration — குடியேற்றம்
Empire — பேரரசு
Equality — சமத்துவம்
Equity — நியாயம்
Executive — ஆட்சித்துறை
External affairs — வெளிநாட்டு விவகாரங்கள்

F

Fascism — பாஸிஸம்
Federal Court — கூட்டாட்சி நீதிமன்றம்
Federalism — கூட்டாட்சித் தத்துவம்
Federation — கூட்டாட்சி
Female Suffrage — பெண்கள் வாக்குரிமை
Flexible Constitution — நெகிழும் அரசியலமைப்பு
Fraternity — சகோதரத்துவம்
Freedom — உரிமை, சுதந்திரம்
Fundamental Rights — அடிப்படை உரிமைகள்

G

Gandhism — காந்தீயம்
Gazette — அரசு இதழ்
Glorious Revolution — புகழ்பெற்ற புரட்சி
Government — அரசாங்கம்
Governor — ஆளுநர், கவர்னர்
Governor-General — தலைமை ஆளுநர், கவர்னர் - ஜெனரல்
Grant — மானியம்

H

Habeas Corpus — ஆளுரிமைக் காப்பு, உடலுரிமைக் காப்பு
Head of the Government — அரசாங்கத்தின் தலைவர்
Head of the State — அரசின் தலைவர்
High Court — உயர் நீதிமன்றம்
House of Commons — பொதுமக்கள் சபை

House of Lords — பிரபுக்கள் சபை
House of Representatives — பிரதிநிதிகள் சபை
House of the People — மக்கள் சபை
Human Rights — மனித உரிமைகள்

I

Immigration — குடியிறக்கம்
Impeachment — குற்ற விசாரணை
Imperialism — ஏகாதிபத்தியம்
Implied power — குறிப்பதிகாரம்
Independence — விடுதலை, சுதந்திரம்
Indirect election — மறைமுகத் தேர்தல்
Individual Responsibility — தனிப் பொறுப்பு
Industrial Revolution — தொழிற் புரட்சி
Initiative — தொடக்க உரிமை
International Treaty — சர்வதேச உடன்படிக்கை
Interpretation — பொருள் விளக்கம்

J

Joint Session — கூட்டுக் கூட்டம், இணைப்புக் கூட்டம்
Judicial Review — நீதிப் புனராய்வு
Judiciary — நீதித்துறை
Jurisdiction — அதிகார எல்லை
Jurisprudence — சட்ட இயல்
Justice — நீதிபதி
Justice — நியாயம், நீதி
Justices of Peace — அமைதிகாண் நீதிபதிகள்

K

King — அரசன்
Kingship — அரச பதவி

L

Law Lords — சட்டப் பிரபுக்கள்
League of Nations — சர்வதேசச் சங்கம்
Legislation — சட்டமியற்றல்

Legislature — சட்டத் துறை, சட்ட சபை
Liberalism — முற்போக்குக் கொள்கை
Liberty — சுதந்திரம்
Life Peers — ஆயுட்கால பிரபுக்கள்
Local Government — தல ஆட்சி, ஊராட்சி
Lord Chancellor — சான்சலர் பிரபு
Lords Spiritual — ஆன்மீகப் பிரபுக்கள்
Lords Temporal — உலகியல் பிரபுக்கள்
Lower House — கீழ்ச் சபை
Loyalty — பற்று, விசுவாசம்

M

Magna Carta — உரிமைப் பட்டயம், மகாசாசனம்
Majority — பெரும்பான்மை
Martial Law — இராணுவச் சட்டம்
Migration — குடிப்பெயர்ச்சி
Ministerial Responsibility — அமைச்சரவைப் பொறுப்பு
Ministry — அமைச்சரவை
Minorities — சிறுபான்மை வகுப்புகள்
Moderates — மிதவாதிகள்
Monarchy — குடியாட்சி
Money Bill — பண மசோதா, நிதி மசோதா
Movement — இயக்கம்
Multi-Party System — பல கட்சி முறை

N

Nationality — நாட்டினம்
National Assembly — தேசிய சபை
Nazism — நாஸிஸம்
No-Confidence motion — நம்பிக்கையில்லாத் தீர்மானம்
Non-Parliamentary Executive — பாராளுமன்றச் சார்பற்ற ஆட்சித்துறை
Non-violence — அகிம்சை

O

Oath of Office — பதவியேற்பு மொழி, பதவிப் பிரமாணம்

Ordinance	—	அவசரச் சட்டம்
Organization	—	நிறுவன அமைப்பு

P

Pardon	—	குற்றமன்னிப்பு
Parliament	—	பாராளுமன்றம், நாடாளுமன்றம்
Parliamentary Executive	—	பாராளுமன்றச் சார்புள்ள ஆட்சித்துறை
Party System	—	கட்சி முறை
Petition of Right	—	உரிமை விண்ணப்பம்
Plural Executive	—	பன்மைச் செயற்குழு
Political Institutions	—	அரசியல் நிறுவனங்கள்
Political Parties	—	அரசியல் கட்சிகள்
Politics	—	அரசியல்
Polity	—	ஆட்சி அமைப்பு
Preamble	—	முகப்பு
President	—	குடியரசு தலைவர்
Presidium	—	பிரிசிடியம்
Prerogative	—	சிறப்புரிமை
Pressure Groups	—	செல்வாக்குக் குழுக்கள்
Prime Minister	—	பிரதம மந்திரி
Primogeniture	—	முதன் மகவு வாரிசு
Private Sector	—	தனியார் துறை
Privileges	—	சிறப்புரிமைகள்
Privy Council	—	பிரிவி கவுன்சில்
Proclamation	—	பேரறிக்கை, பிரகடனம்
Proletariat	—	பாட்டாளிகள்
Proportional Representation	—	விகிதப் பிரதிநிதித்துவம்
Prorogue	—	தள்ளிவைத்தல்
Public opinion	—	பொதுமக்கள் கருத்து
Public Sector	—	பொதுத் துறை
Public Service Commission	—	பொதுப்பணிக் கழகம்

Q

Quasi-Federation	—	அரைக் கூட்டாட்சி
Queen-in-Parliament	—	பாராளுமன்றத்துடன்கூடிய அரசி
Quorum	—	குறைவெண்

R

Recall	—	மீட்புரிமை
Recruitment	—	ஆள் சேர்த்தல்
Referendum	—	குடியொப்பம்
Regency	—	பகர ஆட்சி
Regional Government	—	வட்டார அரசாங்கம்
Repeal	—	சட்ட ரத்து
Representation	—	பிரதிநிதித்துவம்
Republic	—	குடியரசு
Residuary Powers	—	எஞ்சிய அதிகாரங்கள்
Resignation	—	இராசினுமா
Review	—	மறு நோக்கு, மறு ஆய்வு
Rigid Constitution	—	நெகிழா அரசியலமைப்பு
Revolution	—	புரட்சி
Retirement	—	ஓய்வு பெறல்
Royal Charter	—	அரசப் பட்டயம்
Rule of Law	—	சட்டத்தின் ஆட்சி, சட்ட ஆதிக்கம்

S

Secession	—	நாடு பிரிதல்
Second Chamber	—	மேல் சபை, இரண்டாம் சபை
Secretariat	—	செயலகம்
Secular State	—	சமயச் சார்பற்ற அரசு
Senate	—	செனட் சபை
Separation of Powers	—	அதிகாரப் பிரிவினை
Social Security	—	சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு
Socialism	—	சமதருமம்
Sovereignty	—	இறைமை
Speaker	—	சபாநாயகர், அவைத் தலைவர்
State	—	அரசு, அரசாங்கம், மாநிலம்
Summon	—	அழைத்தல்
Supremacy	—	ஆதிக்கம், மேம்பாடு
Supreme Court	—	தலைமை நீதிமன்றம்
Suspensive Veto	—	தாற்காலிக மறுப்பாணை

T

Trade Union	—	தொழிலாளர் சங்கம்
Tradition	—	மரபு

Treason — அரசத் துரோகம், மன் பகை
Treaty — உடன்படிக்கை
Tyranny — கொடுங்கோன்மை

U

Ultra vires — வரம்பு கடந்த
Unitary State — ஒருமுக அரசு, ஒற்றை ஆட்சி
United Nations Organization — ஐக்கிய நாடுகள் சபை
Unwritten Constitution — எழுதப்பெறுத அரசியலமைப்பு, எழுதா அரசியலமைப்பு
Upper House — மேல் சபை

V

Veto — மறுப்பாணை
Vice-President — துணைத் தலைவர்
Vote — வாக்கு
Vote of Censure — கண்டன வாக்கு
Vote of Confidence — நம்பிக்கை வாக்கு

W

Welfare State — பொது நல நாடு, நலம் நாடும் அரசு
World Government — உலக அரசாங்கம்
Written Constitution — எழுதப் பெற்ற அரசியலமைப்பு, எழுதிய அரசியலமைப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

1971 ஜூலை வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

			ரூ.	காசு
*1.	பொருளாதாரம்—I	சி. வேலாயுதம்	6	50
*1-A	,, II	,,	9	00
*2.	சோவியத் பொருளாதார வளர்ச்சி	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ்	4	25
*3.	அமெரிக்கப் பொருளாதாரம்	,,	4	50
*4.	பொருளாதாரச் சிந்தனை வரலாறு	சோணாசலம்	7	00
*5.	பன்னாட்டு வாணிபம்	மு. ஆரோக்கியசாமி	6	00
6.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12	00
7.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I	தி. சி. மோகன்	12	00
8.	,, II	எம்.ஏ. அபூர்வசாமி, பி.வி. ஸ்ரீநிவாசன்	10	75
9.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7	00
*10.	பணவியலும் பாங்கியலும்—I	சி. வேலாயுதம்	6	75
*11.	,, II	,,	11	50
12.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	5	00
*13.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5	50
*14.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4	75

*மூல நூல் **(Original Book)**

பொருளாதாரம்—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
15.	இந்தியப் பொருளியல்—I	எம். பாலசுப்பிரமணியன்	10	00
16.	,, II	எம். லூர்துநாதன்	4	25
17.	நமது பொருளாதாரப் பிரச்சினை—I	சி. சுந்தரராஜன்	10	75
18.	,, II	எஸ். குழந்தைநாதன்	10	50
19.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I	கீ. சீ. இராமசாமி	6	00
20.	,, II	,,	6	00
21.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5	00
22.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I	மு. க. சுப்பிரமணியம்	11	00
23.	,, II	பி. வி. சீநிவாசன்	6	00
24.	,, III	,,	6	50
25.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I	மா. குமாரசாமி	10	00
26.	,, II	அர. சேஷாசலம்	9	50
27.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I	தே. வேலப்பன்	10	00
28.	,, II	ஜி. சிதம்பரம்	8	00
29.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10	00
*30.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடையபிள்ளை	9	50
31.	பத்தொன்பதாம் நூற்றூண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில்-வாணிகப் புரட்சி	சு. ரா. கருப்பண்ணன்	11	00
32.	பென்ஹாம் பொருளாதாரம்—I	ஏ. குழந்தை	11	00
33.	,, II	எஸ். குழந்தைநாதன்	7	00
*34.	வரவு செலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி	6	00
35.	பன்னாட்டுப் பொருளாதாரம்—I	ஏ. குழந்தை	7	50
36.	,, II	கே. எஸ். இராமசாமி	9	00

37.	பொருளாதார ஆய்வு நூல்—I	கோ. இராதாகிருஷ்ணன்	7	75
38.	,, II	,,	7	00
39.	வளர்ச்சியுருத நாடுகளின் அரசாங்க நிதியியல்	க. வெற்றிவேல்	4	25
40.	வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்	மா. குமாரசாமி	5	50
41.	1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	சி. சுந்தரராஜன்	7	50
42.	பொருளாதார வளர்ச்சி பற்றிய கட்டுரைகள்	எம். கே. சுப்பிரமணியம்	7	75
43.	இந்தியப் பொருளாதார வரலாறு (1857—1956)—I	ம. திருநாவுக்கரசு	7	00
44.	பொருளாதாரம்—ஓர் அறிமுகம்	பு. வி. சீனிவாசன்	6	25

வரலாறு

*45.	பிரிட்டன் வரலாறு—I	கி. ர. அனுமந்தன்	4	50
*46.	,, II	,,	3	50
*47.	,, III	,,	7	25
*48.	ஐரோப்பிய வரலாறு—I (கி.பி. 395-1500)	டி. வி. சொக்கப்பா	3	75
*49.	,, II (கி.பி. 1500 முதல்)	என். ஜே. இராஜகோபால்	5	50
50.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்ருண்டு காலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15	00
51.	இங்கிலாந்து வரலாறு—I	இரா. அண்ணுமலை	13	00
52.	,, II	பா. மாணிக்கவேலு	13	00
53.	,, III	என். ஜே. இராஜகோபால்	8	00
54.	,, IV	,,	8	00

*மூல நூல் **(Original Book)**

வரலாறு—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
55.	இங்கிலாந்து வரலாறு—I	க. த. திருநாவுக்கரசு	15	00
56.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8	00
57.	,, III	,,	5	00
58.	இந்தியாவின் சிறப்பு வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	5	00
59.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	6	00
60.	,, III	அ. பாண்டுரங்கன்	7	25
61.	கிரேக்கநாட்டு வரலாறு—I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7	50
62.	,, II	,,	7	00
63.	,, III	பி. இராமாநுஜம் தேவதாஸ்	7	75
64.	ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	8	25
65.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	7	50
66.	,, III	க. த. திருநாவுக்கரசு	10	50
67.	முகலாயப் பேரரசு—I	ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா	7	50
68.	,, II	எம். எக்ஸ் மிராண்டா, பா. மாணிக்கவேலு	7	75
69.	ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு—I	வை. விருத்தகிரீசன்	7	50
70.	,, II	வை. விருத்தகிரீசன், இரா. அண்ணுமலை	6	75
71.	,, III	இரா. அண்ணுமலை, பா. மாணிக்கவேலு	6	50
72.	,, IV	பா. மாணிக்கவேலு	7	00
73.	ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு—I	சி. ஈ. இராமச்சந்திரன்	6	50
74.	,, II	சி. ஈ. இராமச்சந்திரன், இர. ஆலால சுந்தரம்	6	75
75.	,, III	ஆர். ஆலாலசுந்தரம்	6	50

76.	இந்தியாவில் முகலாயரின் ஆட்சி—I	... பா. மாணிக்கவேலு	... 5	00
77.	,, II	... ஏ. உஸ்மான் ஷெரீப்	... 6	00

அரசியல்

*78.	அரசியல் அமைப்புகள்	... ஜே. இராமச்சந்திரன்	... 4	62
*79.	அரசாங்கத்தின் வரலாறு	... மோ. கிளாரன்சு, டி. டி. பெலிக்ஸ்	... 7	50
*80.	இந்திய அரசியலமைப்பு	... வீ. கண்ணையா	... 4	75
81.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	... டி. செல்லப்பா	... 8	50
82.	தற்கால அரசியல் அமைப்புகள்	... மோ. வள்ளுவன் கிளாரன்சு	... 8	50
83.	பன்னாட்டு அரசியல்—I	... திருமதி நூர்ஜஹான் பாவா	... 16	00
84.	,, II	... ,,	... 13	25
85.	பொதுத்துறை ஆட்சி இயல்—I	... வீ. கண்ணையா	... 9	00
86.	,, II	... இ. ஜெகதீசன்	... 7	25
87.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்—I	... வீ. கண்ணையா	... 7	50
88.	,, II	... டி. செல்லப்பா	... 7	50
89.	இந்திய அரசியலமைப்புத் திட்டம்	... தி. வெ. குப்புசாமி, எஸ்.சுப்பிரமணியன்	... 9	25
90.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—I	... வீ. கண்ணையா	... 6	25
91.	,, II	... வீ. கண்ணையா, கி. ர. அனுமந்தன்	... 5	75
92.	,, III	... கி. ர. அனுமந்தன்	... 7	25
*93.	மக்கள் ஆட்சி	... க. சந்தானம்	... 4	25
94.	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்—I	... என். ஜே. இராஜகோபால்	... 7	75

* மூல நூல் **(Original Book)**

அரசியல் (தொடர்ச்சி)

			ரூ.	காசு
95.	சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள்	... மோ. வள்ளுவன் கிளாரன்சு	... 7	00
96.	அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்—I	... பா. சூரியநாராயணன்	... 5	75
97.	,, II	... பா. சூரியநாராயணன், கி.ர.அனுமந்தன்	... 6	00
98.	,, III	... கி. ர. அனுமந்தன்	... 5	75

உளவியல்

99.	குழந்தை உளவியல்—I	... கி. ர. அப்புள்ளாச்சாரி	... 8	00
100.	,, II	... ,,	... 7	00
101.	உட்கவர் மனம்	... சி. ந. வைத்தீஸ்வரன்	... 7	00
102.	இளையோர் உளவியல்—I	... தி. இரா அரங்கராசன்	... 12	00
103.	,, II	... ,,	... 9	00
104.	சமூக உளவியல்	... என். வேதமணி மானுவேல்	... 9	25
105.	பிறழ்நிலை உளவியல்	... அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ்	... 11	00
106.	பித்தரின் உள்ளம்	... ,,	... 3	00
*107.	குமர உள்ளம்	... டாக்டர் மு. அறம்	... 6	25
*108.	உளநலவியல்	... டாக்டர் தா. ஏ. சண்முகம்	... 6	00

தத்துவம்

109.	இந்து சமயத் தத்துவம்	... ஞா. ராஜாபகதூர்	... 5	50
*110.	அறிவு ஆராய்ச்சி இயல்	... ஆர். இராமானுஜாச்சாரி	... 3	50
*111.	மேலைநாட்டுத் தத்துவம்	... ஆர். எஸ். தேசிகன்	... 3	50

112.	அத்துவித தத்துவம்	... கோ. மோ. காந்தி	... 6	50
113.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	... மோ. வள்ளுவன் கிளாரன்சு	... 5	50
114.	இந்தியத் தத்துவம்—I	... வ. ஆ. தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம்	... 3	50
115.	,, II	... ,,	... 6	00
116.	மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம்—I	... சி. இராமலிங்கம்	... 6	00

அறவியல்

117.	அறவியல்—ஓர் அறிமுகம்	... கோ. மோ. காந்தி	... 8	50

அளவையியல்

118.	அளவையியல்—தொடக்க நூல்	... கி. ர. அப்புள்ளாச்சாரி	... 2	50

மானிடவியல்

*119.	மானிடவியல்	... ம. சு. கோபாலகிருஷ்ணன்	... 4	75
120.	பண்பாட்டுக் கோலங்கள்	... கி. பூ. சுப்பிரமணியன்	... 5	50
121.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	... எஸ். இலட்சுமி	... 3	50

சமூகவியல்

122.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	... ஜே. நாராயணன்	... 10	50

*மூல நூல் **(Original Book)**

புவியியல்

			ரூ.	காசு
*123.	ஆசியா—I	கொ. சேஷ. நரசிம்மன்	9	50
*124.	,, II	,,	8	75
*125.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	எ. எஸ். நாராயணன்	8	50
*126.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8	50
*127.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	6	50
*128.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9	00
*129.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	3	00
*130.	,, —ஆஃப்ரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3	25
*131.	புவிப்புறவியல்—II	நா. அனந்தபத்மநாபன்	6	00
*132.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	5	50
*133.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	4	75
*134.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6	50
135.	காலநிலை இயல்—I	கொ. சேஷ. நரசிம்மன்	10	00
136.	,, II	,,	5	00
*137.	காலநிலை இயல்—I	திருமதி இராதா	9	50
*138.	,, II	,,	8	00
139.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	5	50
*140.	புவி அமைப்பு இயல்	சி. விஸ்வநாதன்	4	75
141.	பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	கோ. இராமசுவாமி	6	00
142.	சிஷோமின் வாணிகப் புவியியல்—I	எஸ். மாணிக்கம்	9	50
143.	,, II	ம. கார்த்திகேயன்	12	00
144.	,, III	கொ. சேஷ. நரசிம்மன்	5	75

புள்ளியியல்

*145.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10	75
146.	புள்ளியியல் முறைகள்—I	கோ. சண்முகசுந்தரம்	10	00
147.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14	00
148.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6	50

உயர்கணிதம்

*149.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	4	25
*150.	வகை நுண்கணிதம்	,,	3	00
*151.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	3	25

விலங்கியல்

*152.	விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12	00

பௌதிகவியல்

153.	ஒளி நூல்	ச. சம்பத்து	10	00

விஞ்ஞானம்

*154.	வானவெளி வெற்றி	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	6	00
*155.	ரேடியோ	டாக்டர் பி. திருஞானசம்பந்தம்	4	75
*156.	எக்ஸ்-கதிர்கள்	பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4	50

* மூல நூல் **(Original Book)**

விஞ்ஞானம் (தொடர்ச்சி)

எண்	நூல்		ஆசிரியர்		ரூ.	காசு
*157.	பாம்புகள்	...	பெ. மா. அண்ணுமலை	...	3	50
*158.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	...	டாக்டர் கு. சீனிவாசன்	...	8	00
*159.	கரும்பு	...	,, கு. பெரியசாமி	...	4	00
*160.	தாவரங்களின் வாழ்வியல்	...	எஸ். சுந்தரம்	...	6	50

மருத்துவம்

எண்	நூல்		ஆசிரியர்		ரூ.	காசு
*161.	நீரிழிவு—க்ஷயரோகம்	...	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	...	2	50
162.	மகப்பேறும் மாதர்நோயும்	...	டாக்டர் (குமாரி) ந. மணிமேகலை	...	8	25
*163.	பாக்டீரியா	...	சு. சுந்தரம்	...	2	50
164.	புற்றுநோய்	...	அ. கதிரேசன்	...	3	50
165.	உடலியங்கியல்—I	...	டாக்டர்கள் ஜி. வேங்கடசாமி, டி. சரோஜினி, எஸ். கே. துரைராஜ், ஆர். சேது	...	6	75
166.	,, II	...	,,	...	5	50
167.	என்புருக்கி நோய்	...	டாக்டர் அ. கதிரேசன்	...	7	25

பொறியியல்

எண்	நூல்		ஆசிரியர்		ரூ.	காசு
168.	நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம்	...	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், கே. வேணுகோபால், ஆர். இராமசுவாமி	...	8	50

கூட்டுறவு

எண்	நூல்		ஆசிரியர்		ரூ.	காசு
169.	உலகக் கூட்டுறவு இயக்கம்	...	அ. வேல்மணி	...	5	50

சட்டம்

*170.	குற்றவியல் சட்டம்	மா. சண்முகசுப்பிரமணியம்	10	00

பொது நூல்கள்

171.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3	25
172.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8	00
173.	சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியன்	2	50
*174.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	9	00
*175.	உணவும் ஊட்டமும்	தி. வேங்கடகிருஷ்ண அய்யங்கார்	4	50
*176.	பள்ளி நிருவாக அமைப்பு—அடிப்படைக் கருத்துகள்	எஸ். சந்தானம், எஸ். ஏ. துரைசிங்	6	25

புகுமுக (P.U C) வகுப்புகளுக்குரியவை

*177.	உலக வரலாறு	டி. ஆர். இராமச்சந்திரன்	4	00
*178.	பொருளாதாரம்	ஜி. சிதம்பரம்	2	75
*179.	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்—I	கு. ஆளுடையபிள்ளை	2	50
*180.	,, II	,,	2	25
*181.	பௌதிகம்	டாக்டர் பி. திருஞானசம்பந்தம், ஆர். நாகராஜன்	6	00
*182.	புகுமுக பௌதிகம்	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	5	75
*183.	பௌதிகம்—ஓர் அறிமுகம்	எஸ். சம்பத்	7	00
*184.	புகுமுக வகுப்புக் கணிதம்—I	கே. இராஜகோபலன்	7	00
*185.	,, II	,,	3	00

* மூல நூல் (Original Book)

புகுமுக (P.U.C.) வகுப்புகளுக்குரியவை *(தொடர்ச்சி)*

			ரூ.	காசு
*186.	புகுமுக வகுப்புக் கணித நூல்—I	டி. கோவிந்தராஜன், முத்துசாமி	7	00
*187.	,, II	டி. கோவிந்தராஜன், முத்துசாமி	4	50
*188.	கணிதம்—ஓர் அறிமுகம்—I	ஆர். மகாதேவன்	4	75
*189.	,, II	,,	3	25
*190.	வேதியியல்	பி.டி. முனியப்பா, ஆர். முத்துலட்சுமி	7	00
*191.	புகுமுக வேதியியல்	சி. ஏ. பத்மநாபன்	5	50
*192.	விலங்கியியல்	எஸ். ஆப்ரகாம்	4	00
*193.	புகுமுக விலங்கியியல்	பெ. மா. அண்ணுமலை	7	25
*194.	புகுமுக வகுப்புத் தாவரவியல்	எஸ். சுந்தரம்	4	00

பட்டப்படிப்பிற்குரிய (பி.எஸ்ஸி.) நூல்கள்

(அடக்க விலைப் பதிப்புகள்—கழிவு இல்லை)

பௌதிகம் *(Physics)*

*195.	எந்திரவியல்—சிறப்புப் பாடம்—I	ஆர். நாகராசன்	6	25
*196.	,, II	,,	5	50
*197.	வெப்பவியல்—சிறப்புப் பாடம்	கே. நாச்சிமுத்து	5	25
*198.	செய்முறை பௌதிகம்—சிறப்புப் பாடம்—I	டி. கமலக்கண்ணன், ஆர். கிருட்டிணசாமி	4	50
*199.	,, II	,,	3	25
*200.	பௌதிகம்—துணைப்பாடம்—I	பி. தங்கராஜன்	4	00
*201.	,, II	,,	3	00
*202.	செய்முறை பௌதிகம்—துணைப்பாடம்	கே. பாசுகரன், இரா. செயராம்	4	50

*203.	மின்னியல்-காந்தவியல்-சிறப்புப் பாடம்—I ...	டி. ஏ. கருப்பண்ணன் ...	4	75
*204.	,, II ...	,, ...	4	50
*205.	,, III ...	,, ...	4	25
*206.	ஒளியியல்—சிறப்புப் பாடம் ...	டாக்டர் வி. சண்முகசுந்தரம்,		
*207.	பௌதிகம்—துணைப்பாடம் (பகுதி-II)	,, ஆர். சபேசன் ...	7	75
	(முதல் புத்தகம்) ...	கா. வே. சுப்பிரமணியன் ...	6	00
*208.	,, (இரண்டாம் புத்தகம்) ...	,, ...	4	50
*209.	பொது பௌதிகம்—சிறப்புப் பாடம்	கே. பி. கந்தசாமி, எம். தியாகசுந்தரம் ...	4	50
*210.	இன்றைய பௌதிகம்—சிறப்புப் பாடம் ...	எம். ஏ. தங்காராஜ் ...	6	75
*211.	ஒலி நூல்—சிறப்புப் பாடம் ...	டி. முருகையன் ...	5	00

வேதியியல் (Chemistry)

*212.	செய்முறைக் கனிம வேதியியல்— துணைப் பாடம் ...	டாக்டர் என். முத்துக்குமாரசாமி ...	2	00
*213.	செய்முறைக் கனிம வேதியியல்— சிறப்புப் பாடம் ...	டி. இராமலிங்கம் ...	2	25
*214.	பௌதிக வேதியியல்—சிறப்பும் பாடம்— ...	டி. சக்திவேலு ...	4	00
*215.	,, I ...	,, ...	3	50
*216.	கனிம வேதியியல்—துணைப் பாடம் II ...	சி. ஏ. பத்மநாபன் ...	6	50
*217.	கனிம வேதியியல்—சிறப்புப் பாடம்—I ...	பி. டி. முனியப்பா ...	4	00
*218.	,, II ...	,, ...	4	25

*மூல நூல் (Original Book)

வேதியியல்—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
*219.	பொது பௌதிக வேதியியல்—துணைப்பாடம்	ஆர். துளசிதாஸ்	4	75
*220.	அறிமுறை வேதியியல்—சிறப்புப் பாடம்—I	ஓ. ஆர். சூரியநாராயணன்	4	50
*221.	,, II	,,	3	75
*222.	செய்முறைக் கரிம வேதியியல்-சிறப்புப் பாடம்	என். ஆறுமுகம்	3	50
*223.	அங்கக வேதியியல்—துணைப்பாடம்	பிஎல். இராமசாமி	5	00
*224.	அங்கக வேதியியல்—I	எம். ஆட்கொண்டான்	3	00
*225.	கரிம வேதியியல்—பகுதி—I (இரண்டாம் புத்தகம்)	கி. கண்ணபிரான்	4	75
*226.	,, (மூன்றும் புத்தகம்)	,,	3	25
*227.	கரிம வேதியியல்-பகுதி—II (முதல் புத்தகம்)	,,	5	75
*228.	,, (இரண்டாம் புத்தகம்)	,,	6	00

கணிதம் (Mathematics)

*229.	இயற்கணிதம்—சிறப்புப் பாடம்—I	டி. கோவிந்தராஜன், கே. முத்துசாமி	4	25
*230.	,, II	,,	3	25
*231.	தொகுமுறை வரைகணிதம்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன்	2	00
*232.	எண்சார் கணிதம்—சிறப்புப் பாடம்	எம். எம். இராசாமி	5	50
*233.	திரிகோண கணிதம்—சிறப்புப் பாடம்	வி. அரங்கநாதன்	3	25
*234.	கணிதம்—துணைப்பாடம்	ஆர். அனுமந்தராவ்	6	00
*235.	நிலையியல்—சிறப்புப் பாடம்	கே. இராஜகோபாலன்	5	00
*236.	முப்பரிமாணப் பகுமுறை வடிவகணிதம்—சிறப்புப் பாடம்	கே. சிவசுப்ரமணியன்	2	75

*237.	வெக்டர் கணிதமும் அதன் பயன்பாடுகளும்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன்	2	00
*238.	கணிதம்—துணைப்பாடம்—பகுதி-2	ஆர். அய்யாசாமி	5	75
*239.	வானியல்—சிறப்புப் பாடம்—(முதல் புத்தகம்)	தி. கோவிந்தராசன், கோ. முத்துசாமி	5	50
*240.	,, (இரண்டாம் புத்தகம்)	,,	3	75
*241.	இயக்கவியல்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன், கே. சிவசுப்பிரமணியம், பி. ஆர். சுப்பிரமணியம்	7	00

புள்ளியியல் (Statistics)

*242.	புள்ளியியல்—துணைப்பாடம்	எஸ். கருப்பையா	3	50

விலங்கியல் (Zoology)

*243.	முதுகெலும்பற்றவை-1—சிறப்புப் பாடம்	ஆர். முருகேசன்	6	00
*244.	,, 2 ,,	திருமதி எஸ். கே. வள்ளி	6	00
*245.	முதுகுநாணுள்ளவை-1—சிறப்புப் பாடம்	திருமதி ராணி கந்தசாமி	5	00
*246.	,, 2 ,,	,,	9	75
*247.	முதுகுத் தண்டுள்ளவை-2—சிறப்புப் பாடம்	திருமதி கிருஷ்ணவேணி நாராயணன்	11	75
*248.	முதுகெலும்பிகளது கருவியல்— ,,	எஸ். ஆப்ரகாம்	9	00
*249.	முதுகெலும்பற்றவை—துணைப்பாடம்	என். இராமலிங்கம்	9	00
*250.	முதுகுநாணுள்ளவை—துணைப் பாடம்	வி. சேது.	6	00
*251.	செல்லியல்—சிறப்புப் பாடம்	என். இராமலிங்கம்	5	50
*252.	மரபியல்—சிறப்புப் பாடம்	பெ. மா. அண்ணாமலை	5	25

*மூல நூல் **(Original Book)**

			ரூ.	காசு
விலங்கியல் (தொடர்ச்சி)				
*253.	சூழ்நிலையியல்—உடற் செயலியல் சிறப்புப் பாடம்—I	டி. ஆர். கிருஷ்ணன்	4	75
*254.	,, II	,,	6	50
*255.	பரிணமம்	எஸ். ஆப்ரகாம்	6	25
தாவரவியல் (Botany)				
*256.	தாவர வெளி உள்ளமைப்பியல்களும், வகைப்பாட்டியலும்—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	11	00
*257.	தாவரப் புற அமைப்பியல்—சிறப்புப்பாடம்	கே. பாலச்சந்திரகணேசன்	9	25
*258.	தாவர உள்ளமைப்பியல்—சிறப்புப் பாடம்	டாக்டர் ஏ. கோவிந்தராஜுலு	7	25
*259.	தாவரங்களின் வாழ்க்கை—சிறப்புப்பாடம்	எஸ். சுந்தரம்	9	50
*260.	தாவரவியல்—துணைப் பாடம்	பா. இராசாராம்	4	50
*261.	தாவரச் சூழ்நிலையியல், மரபியல், உயிர்மரூஉ இயல், இயங்கியல்—துணைப் பாடம்	கே. பெரியசாமி	4	00
*262.	சூழ்நிலையியல், பரிணமம், மரபியல்—சிறப்புப் பாடம்	கே. ஆர். பாலச்சந்திர கணேசன்	8	25
*263.	டெரிடோஃபைட்டா, ஜீம்னோஸ்பெர்மே—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	10	25
*264.	தாலோஃபைட்டா (பாசிகளும் பூஞ்சைகளும்) சிறப்புப் பாடம்	டாக்டர் வே. சே. சுந்தரலிங்கம்	9	00
*265.	தாவர வகைப்பாட்டியல்—சிறப்புப் பாடம்	ஆ. சம்பத்குமார்	10	50
*266.	பிரையோஃபைட்டா—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	6	00

*மூல நூல் **(Original Book)**